ஸ்ரீ

ஸ்ரீமத்ராமாயணம்.

அயோத்யாகாண்டம்.

இரண்டாம் பாகம்.

தமிழ் வசனம்.

இஃது

ஸ்ரீவால்மீகி ராமாயணத்திற்கிணங்க

ஸ்ரீ. அ. வி. நரஸிம்ஹாசார்யரால்

இயற்றப்பெற்று,

சென்னை

ஆர். வெங்கடேச்வர் அண்டு கம்பெனியவர்களால்

ஆனந்த அச்சுகூடத்தில் அச்சிட்டு,

வெளியிடப்பட்டது.

1912.

ALL RIGHTS RESERVED.

ALL RIGHTS RESERVED.

காபிரைட். 1912 வரை:—ஆர். வெங்கடேஷ்வர் அண்டு கம்பெனியாரவர்கள் காபிரைட்டுக்குரியவர்கள். இப்புத்தகம் இந்தியன் காபிரைட் ப்ரகாரமாகவும், அன்யதேசீயாது காபிரைட் ப்ரகாரமாகவும் காக்கப்பட்டிருக்கின்றது. எவராயினும் இப்புத்தகத்தை முழுவதுமாவது, அல்லது இதில் ஒரு பாகத்தையாவது தாம் வேறுக அச்சிடவும், மற்றொரு பாஷையில் மொழிபெயர்த்து அச்சிடவும் அதிகாரமில்லை. இதிலுள்ள பதங்களையாவது, பாவங்களையாவது, படங்களையாவது காபி செய்வார்களாயின், அது காபிரைட்டை உல்லங்கனஞ் செய்ததே ஆகும்.

விஷயங்கள்.

ஸர்க்கம்.		பேஜ்.
44	ஸுமித்ரை கௌஸல்யையைத் தேற்றுதல்.	803
45	ராமன் தன்னைப் பின்தொடர்ந்து வந்த ப்ர ஜைகளுக்கு கல்வார்த்தை சொல்லுதல்...	813
46	ராமன் தமஸாதீரத்தினின்றும் பௌரஜன ங்களை ஏமாற்றிப் போதல். ...	819
47	ராமனைப் பின்தொடர்ந்த பௌரஜனங்கள் அயோத்யைக்குத் திரும்பிப் போதல் ...	825
48	பௌர ஜனங்களின் ஸோகநிராகரணம் ...	828
49	ராமன் அரண்யத்திற்குப் போய்க்கொண் டே வேதஸ்ருதி முதலியநதிகளைத்தாண் டி ஸுமந்த்ரனுடன் ஸம்பாஷித்தல் ...	834
50	ராமன் கோஸலதேசம் கடந்து கங்காதீரம் சேருதல்	837
51	குஹ லக்ஷ்மணர்களின் ஸம்பாஷணம் ...	847
52	ராமன் ஓடத்தினமேலேறி ஸுமந்த்ரனிடம் தாய் தந்தைகளுக்கு ஸமாசாரம்சொல்லி குஹனை ஸமாதானப்படுத்தி ஜடைதரித் தூக் கங்ணகளைத் தாண்டி வத்ஸதேசம் கடந்து ம்ருகாதிமாம்ஸங்களை ஆஹாரம் செய்து ஓர்மரத்தின்டியில்தங்கியிருத்தல்.	852
53	ராமன் லக்ஷ்மணனை அயோத்தையைக்குப் போவென்று அனுப்புதலும், லக்ஷ்மணன் ராமனை ஸமாதானப்படுத்துதலும்மூவரும் பர்ணசயனத்தில் படித்துக்கொள்ளுதலும்.	869

ஸர்க்கம்.		பேஜ்.
54	பரத்வாஜாசாரமம் சென்று அம்மஹர்ஷியை க் காணுதலும் பரத்வாஜர் சித்ரகூடபர் வதத்தை வர்ணித்தலும் ...	875
55	சித்ரகூடத்திற்கு ப்ரயாணமாய் ஓடமேறி யமுனாநதியைத் தாண்டி யமுனவனத்தில் வாஸம்செய்தல்	884
56	வால்மீகியின் ஆச்ரமத்திற்குப்போய் அங் குப்·பர்ணசாலை கட்டிக்கொண்டு வாஸஞ் செய்தல்	889
57	ஸுமந்த்ரன் ராமனை விட்டு அயோத்யைக் குப் போதலும், பட்டணத்து ஜனங்களும் தசரதனும் சோகித்தலும்... ..	895
58	ஸுமந்த்ரன் தசரதனுக்கு ராமன்சொல்லி அனுப்பிய ஸமாசாரங்களைக் கூறுதலும், ஸீதையின் துக்கத்தைத் தெரிவித்தலும்.	901
59	ஸுமந்த்ரன் தசரதனுக்கு, ராமனைப்பிரி ந்து அயோத்யையிலுள்ள சராசரங்கள் னைத்தும் மனவருத்தமுற்றிருப்பதைக் கூ றுதலும் தசரதன் அதைக்கேட்டு மூர்ச் சித்தலும்	908
60	ஸுமந்த்ரன் சொன்ன ராமவ்ருத்தாந்தத் தைக்கேட்டுக் கௌஸல்யை சோகித்தலு ம், ஸுமந்த்ரன் ஸமாதானப்படுத்துதலும்.	916
61	தசரதனைப் பார்த்துக் கௌஸல்யை புலம்பு தலும், அரசன் மூர்ச்சித்தலும் ...	924
62	கௌஸல்யை மூர்ச்சை தெளிந்த மன்னவ னை ஸமாதானப்படுத்துவதும் மன்னவன் சோகத்திலுல் நித்ரைபோதலும் ...	93

ஸர்க்கம்.		பேஜ்.
63	தசரதன் கௌஸல்லையயிடம் தான் பூர்வத் தில் ஸாயூகதிக்கரையில் ரிஷி குமாரனை யானை யென்று நினைத்துக் கொன்ற வ்ருத்தாந்தத்தைக் கூறுதல் ...	935
64	தசரதன் துஞ்சுதல்	944
65	தசரதன் மரணமடையவும் ராஜபத்னிகள் புலம்புதல்	956
66	கௌஸல்லை கதறலும் அரசனை யெண் ணைக் கொப்பரையில் இட்டுவைத்தலும், ராஜஸ்த்ரீவிலாபமும், பட்டணக் கலக்கமும்	961
67	மார்க்கண்டேயாதிகள் வஸிஷ்டரிடம் அரா ஜகத்தைச் சொல்லி ப்ரார்த்தித்தல் ...	966
68	வஸிஷ்டர் கேகய தேசத்திற்குத் தூதர் களை அனுப்புதல்	972
69	பரதன் தனக்குண்டான துஸ் ஸ்வப்னங் களைத் தன தருமண்பர்களுக்குச் சொல்லுதல்	976
70	பரதன் அயோத்யைக்குப் புறப்படுதல் ...	979
71	பரதன் அயோத்யைக்கு வந்து தந்தையின் க்ருஹத்திற்குப் போதல் ...	983
72	கைகேயி, பரதனுக்குத் தசரதன் மரணம் அடைந்த வ்ருத்தாந்தத்தையும் ராமன் காட்டுக்குப் போனதையுங் தெரிவித்து ராஜ்யாபிஷேகம் பெறுவாயென்று கூறுதல்.	991
73	பரதன் கைகேயியைத் தூறுதல் ...	998
74	பரதன் கைகேயியைத் தூறுதலும், சோகத்தினல் மூர்ச்சித்தலும் .	1003
75	பரதசத்ருக்னர்கள் கௌஸல்லையயிடம்போ தலும், பரதன் ராமனை அழைத்து வரு வதாக ப்ரதிஜ்ஞை செய்தலும் ...	1008

ஸர்க்கம்.		பேஜ்.
76	பரதன் தசரதனுக்கு ஸம்ஸ்காரஞ் செய்தல்	1018
77	பரதன் பன்னிரண்டாவது தரன் ப்ரார்த்தஞ் செய்தலும், பரதசத்ருக்னர்கள் தம்தையை நிணைத்துச் சோகித்தலும், வஸிஷ்டாதிகள் ஸமாதானப் படித்துதலும்...	1021
78	சத்ருக்னன் மந்தரையைச் நிகூஷித்தலும், கைகேயி மந்தரையை ஸமாதானப் படித்துதலும்	1025
79	பரதன் ராமனைத்திருப்பி யழைத்துக்கொண்டுவரமுயன்று வழியைச் செவ்வைப் படித்தும்படி கட்டளையிதல் ..	1029
80	அயோத்தியை முதல் கங்கைவரையிலுமுள்ள மார்க்கத்தைச் சீர்திருத்தல் ...	1031
81	பரதன் சோகித்தலும், வஸிஷ்டர் ஸுமந்த்ரனைக்கொண்டு பரதசத்ருக்னர்கள் முதலியவர்களை ஸபைக்கு வரவழைத்தலும் ...	1035
82	பரதன் ராஜ்யத்தை அங்கீகரியாமல் பட்டணத்து ஜனங்களோடு ராமனிடம்போகப் புறப்படுதல்	1037
83	பரதன் ஸைன்யங்களோடு புறப்பட்டுக் கங்காதீரத்தில் இளைப்பாறுதல் ...	1044
84	பரதனுக்கு குஹன் அதிதிபூஜை செய்தல்.	1048
85	குஹன் பரதனுக்கு நல்வார்த்தை சொல்லுதல்	1051
86	குஹன், லக்ஷ்மணன் ராமனைக் குறித்துப் புலம்பினதைப் பரதனிடம் கூறுதல் ...	1054
87	ராமன் ஜலாஹாரஞ்செய்து படித்திருந்தது முதலான வ்ருத்தாந்தங்களைக் கூறுதல்...	1059

ஸர்க்கம். பேஜ்.

88 பரதன் இங்குணமரத்தினடியில் ஸீதையின் ஆபரணங்களினின்றும் இறைந்த பொற் பொடிகளையும், அவளது பட்டுவஸ்த்ரங்களின் நூலிழைகளையும் பார்த்துச் சோகித்தலும், ஸ்ரீராமபிரானுக்கு நேர்ந்தது ண்பத்தை நினைத்துப் புலம்புதலும் ... 1063

89 பரதன் கங்காநதியைத்தாண்டிப் பரத்வாஜாஸ்ரமத்திற்குப் போதல் ... 1067

90 பரதன் பரத்வாஜரைக் காணுதலும், ஒருவர்க்கொருவர் குசல ப்ரஸ்னமும் ... 1071

91 பரத்வாஜர் பரதனுக்கும் அவனது ஸைன்யத்திற்கும் ஆதித்யஞ் செய்தல் ... 1075

92 பரதன் பரத்வாஜருக்குக் கௌஸல்யாதிகளை அறிவித்தலும், இடையில் யமுனை வனத்தில் இறங்குதலும் 1086

93 பரதன் சித்ரகூட வனங்களிற் புகுதலும், வனவர்ணனமும், ராமாஸ்ரமத்தைத்தேடியறிந்து ஸைன்யத்தை ஓரிடத்தில் நிறுத்திப் போதலும் 1092

94 ராமன் சித்ரகூடம் புகுந்ததுமுதல் இதுவரையில் நடந்த வ்ருத்தாந்தமும், சித்ரகூடம் அயோத்தியையைக் காட்டிலும் அழகாயிருக்கிறதென்று ராமன் நிரூபித்தலும் ... 1095

95 ராமன் மந்தாகினீநதியின் அழகைக் காட்டி ஸீதையை மகிழ்வித்தல் 1099

96 ராமனும் ஸீதையும் மாம்ஸாஹாரஞ் செய்கையில் வனத்திலுள்ள ம்ருகங்கள் கலக்கமுறுவது கண்டு அதன் காரணத்தை அறிய லக்ஷ்மணனைத் தூண்ட அவன் வ்ரு

சர்க்கம். பேஜ்.

கூஷத்தின் மேலேறிப் பரதன் ஸைன்யத் துடன் வரக் கண்டு சங்கித்தல் ... 1102

97 ராமன்கோபித்த லக்ஷ்மணனை ஸமாதானப் படுத்துதல் 1106

98 பரதன் ராமாஸ்ரமத்தைத் தேடிப் பிடித்து மற்றவரை நிறுத்தித் தான் குஹ சத்ருக் னர்களோடு கடந்து செல்லுதல் ... 1110

99 பரதன் ஸைன யிறங்கின இடத்திலிருக்கும் தாய்மார்களை அழைத்துவர வஸிஷ்டரை அனுப்பித் தானும் குஹனும் மந்திரிகளு டன் சென்று ராமாஸ்ரமஞ் சேருதல் ... 1112

100 ராமன் பரதனைக் குசலப்ரஸ்னம் பண்ணுத லும், அதன்மூலமாக ராஜநீதியை உபதே சித்தலும் 1120

101 பரதன் ராமனுக்குத் தசரத மரணத்தைக கூறுதல் 1134

102 ராமன் தசரத மரணத்தைக் கேட்டுப் புலம் புதலும், மந்தாகினியில் தர்ப்பணஞ்செய்த லும், ஆஸ்ரமம்சென்று வருந்துவதும், அ யோத்யாஜனங்கள் ராமரிடம் சேருதலும். 1135

103 ராமன் தாய்மார்களோடு கலப்பதும் வஸி ஷ்டர் மந்த்ரிகள் முதலானவர்க்கு ராம ரிடம் ஸமாகமமும் 1142

104 பரதன் ராமனை ராஜ்ய்த்தை அங்கீரிக்கும் படி வேண்டுதலும், ராமன் தகதையின் ஆஜ்ஞையைத் தாண்டலாகாதென்று மறு த்துரைத்தலும் 1146

105 பரதன் ம்ளவும் ராமனை ராஜ்யத்தை அங் கீகரிக்கும்படி ப்ரார்த்தித்தலும், ராமன்

ஸர்க்கம்.		பேஜ்.
	தத்வார்த்தங்களைச் சொல்லி ஸமாதானப் படுத்தலும்	II49
106	பரதன் ராமனை மீளவும் ப்ரார்த்திக்கலும், வஸிஷ்டரும் மந்த்ரிமுதலானவர்களும் ராமனை ப்ரார்த்திக்கலும்	II56
107	பரதன் தந்தையது காமமோஹத்தை நிந்திக்கையில், ராமன் அதைமறுத்து அவர் தர்மமே ஆசரித்தா ரென்று வேறொரு யுக்திபைச் சொல்லுதல்	II61
108	ராமன் பாதனை நிருத்தராணயிருக்கச் செய்கையில், ஜாபாலி சார்வாகமதத்தை அவலம்பித்து ராமனை ராஜ்யத்தை அங்கீகரிக்கும்படி ப்ரார்த்திக்கல் ...	II64
109	ராமன் ஜாபாலியின் மதத்தை நிராகரித்து வைதிக மதத்தை ஸ்தாபித்தல் ..	II67
110	வஸிஷ்டர் ஜாபாலி வசனத்தினபிப்ராயத்தைச் சொல்லி ராமனது கோபத்தைத் தீர்த்து மனுமுதலாகத் தசரதன் வரையிலுமுள்ள அரசர்களின் பூர்வசாரத்தைச் சொல்லிப் பெரியவனே ராஜ்யத்திற்குரியவனென்று தெரிவித்து அதன் மூலமாக ராமனைத் திருப்பப் பார்த்தல் ..	II74
111	வஸிஷ்டர் ஆசார்யராகிய தன்வசனத்தைக் கடக்கலாகா தென்றலும், ராமன் தந்தையின் வார்த்தை இதைக் காட்டிலும் மேலென்றலும், பரதனது ஸ்தண்டிலசயனமும், ராமன் ஸமாதானங் கூறுதலும் ...	II78
112	ராமன் பாதனை ஸமாதானப்படுத்தி அயோத்தியைக்குப் புறப்படுத்தி அனுப்புதல் ...	II84

ஸர்க்கம்.		பேஜ்.
II3	பரதன் அயோத்தையுள் ப்ரவேசித்தல் . .	II88
II4	பரதன் அயோத்தை நிராநந்தமாயிருப்பது கண்டு சோகித்தல்	II96
II5	பரதன் கந்திக்ராமஞ் சென்று ராம பாதுகைகளை முன்னிட்டு ராஜ்யபரிபாலனஞ்செய்தல்	II95
II6	ராமன் சித்ராகூடத்தை விட்டு மற்ரோராச்ரமத்திற்குப் போதல் ...	II98
II7	ராமன் அத்ரியின் ஆச்ரமத்தில் ப்ரவேசித்தல்	I202
II8	ஸீதை அனஸூயை உபதேசித்த பாதிவ்ரத்ய தர்மத்தைக் கேட்டு ஆநந்தித்துத் தன் ஸ்வயம்வரத்தை அவளுக்குக் கூறுதல்	I206
II9	ராமன் அத்ரியின் ஆச்ரமத்தினின்றும் தண்டகாரண்யம் போதல் ...	I2I2

படங்களின் விவரம்.

ஸீதா ராமலக்ஷ்மணர்கள் கங்கையைத் தாண்டுதல். 854

ராமன் குஹன கொண்டுவந்த ஓடத்தின்மேலேறிப் போதல். 864

ஸீதா ராமலக்ஷ்மணர்கள் அரண்யத்தில் முதல்ராத் திரியைக் கடத்தல். 869

ஸீதா ராமலக்ஷ்மணர்கள் பாத்வாஜமஹர்ஷியை நமஸ்கரித்தல். 877

பரதன் தன் தாயாகிய கைகேயியை நமஸ்கரித்தல். 991

சத்ருக்ன்ன் மந்தரையை சிக்ஷித்தலும பரதன் கைகேயியை தூறுதலும் கைகேயி மந்தரையை ஸமாதானப் படுத்தலும். 1025

பரத சத்ருக்னர்கள் ஸைபக்கி வந்து ராமலக்ஷ்மணர்களை காட்டுக்கு அனுப்பியதைப்பற்றி வஸிஷ்டர் முதலாேனாரை நிந்தித்தல். 1038

பரதன, இங்குணமாத்தின்கீழ் ஸீதையும் ராமலக்ஷ்மணர்களும் படுத்துக்கொண்டார்கள் என்று குஹன் சொல்லக் கேட்டு மூர்ச்சை அடைதல். 1059

பரதன் வஸிஷ்டர் முதலானவர்களோடு பாத்வாஜாச்ரமத்தை ப்ரவேசித்து பாத்வாஜமஹர்ஷியைக் காணுதல். 1071

ராமனும் ஸீதையும் மாம்ஸாஹாரஞ் செய்கையில் வனத்திலுள்ள ம்ருகங்கள் கலக்கமுறுவ

து கண்டு அதன் காரணம் தெரிவதற்காக
லக்ஷ்மணன் வ்ருக்ஷத்தின் மேலேறிப் பர த
ன் ஸைன்யத்துடன் வரக்கண்டு சங்கித்தல். 1103
பரதசத்ருக்னர்கள் ராமனுடைய பர்ணசாலைக்கு
வந்து ஸீதா ராமலக்ஷ்மணர்களைக் கண்டு
நமஸ்கரித்தல். 1118
ராமலக்ஷ்மணர்களிருவரும் மந்தாகினி நதியில் தக
ப்பனருக்கு ஜலதர்ப்பணமிடுதல். 1138
பரதன் ஸ்ரீராம பாதுகைகளை சிரஸில்தரித்து வசி
ஷ்டாதிகளை முன்னிட்டுக்கொண்டு சித்ரகூ
டத்திலிருந்து அயோத்யைக்குப் போகு
தல். 1188
சுக்திக்ராமத்தில் ஸ்ரீராம பாதுகாபட்டாபிஷேகம். 1196

மஹாபாஹுவும் மஹாவீரனுமாகிய அந்த ராமன், காளை யெருது பசுக்களுடன் கூடி வருவது போல், ஸீதையை முன்னிட்டு ரதத்தின் மேல் ஏறிக்கொண்டு இவ்வயோத்யாபுரத்திற்குள் எப்பொழுது ப்ரவேசிப்பானோ? பகை வரை அடக்கவல்ல பராக்ரமம் பொருந்திய மஹா வீர்களாகிய அக்குமார்கள் இக்கர ப்ரவேசஞ் செய்யும் பொழுது ராஜமார்க்கத்தில் அவர்கள்மேல், ஆயிரமாயிரமாக ஜனங்கள் கும்பற்கூடி எப்பொழுது பொரிகளை இறைக்கப் போகிறார்களோ? அவர்கள் மேலான குண்டலங்கள் பளபளவென்று செவியில் விளங்கப் பெற்று வில்லையும் கத்தியையும் தரித்து, சிகரங்கள் பொருந்திய பர்வதங்கள்போல் ப்ரகாசித்துக்கொண்டு அயோத்தையில் வந்து ப்ரவேசிக்கையில் நான் எப்பொழுது பார்ப்பேனோ?

[1] ராமன் வந்தானென்னும் மங்கலவார்த்தையைக் கேட்டு ஸந்தோஷமடைந்த ப்ராஹ்மணகன்னிகைகள் புஷ்பங்களையும் பழங்களையும் கொடுத்துக்கொண்டு எப்பொழுது இந் நகரத்தை ப்ரதக்ஷிணஞ் செய்யப் போகிறார்களோ? ராமன் ஜ்ஞானத்தில் முதிர்ந்தவன்; வயதில் தேவதைகளைப்போல் இருபத்தைந்து வயதுள்ள பாலகுமாரன்போலவே விளங்குந் தன்மையன்; அப்படிப்பட்ட தார்மிகனை

---

1 இதற்கு மூலம்—'கதா ஸுமநஸ: கந்யா ஈவிஜாதீநாம் மலாநிச। ப்ரதிஷந்த்ய: புரீம் ஹ்ருஷ்டா: காகுத்ஸ்யமநு ப்ரதக்ஷிணம்'. இங்கு—இது உத்தரதேச மங்கலாசாரமென்று கோவிந்தராஜர் கூறுகிறார். மஹேஶ்வர தீர்த்தர் 'ப்ரதிஷந்த:' என்று பாடங் கொண்டு, 'கந்யாஈவிஜாதீநாம்' என்பதை ஒரே பதமாக்கி—(நன்மனமுடைய அந்த ராமலக்ஷ்மணஸீதைகளை மூவரும் மங்கலவதிகளாகிய பெண்டிர்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்கும் புஷ்பங்களையும் பழங்களையும் கொடுத்துக்கொண்டு மனக்களிப்புடன் இந்தப் பட்டணத்தை எப்பொழுது ப்ரதக்ஷிணஞ் செய்யப் போகின்றனர்)—என்று பொருள் சொல்லுகின்றனர்.

கிய ராமன் முன்னறுவயதுள்ள பாலனைபோல் கொஞ்சி, என் மனத்திற்கு ஸகலதாஷத்தை விளைத்துகொண்டு எனனிடத்திற்கு எப்பொழுது வருவானே? மஹாவீரனே! நான் பூர்வஜனமத்தில பெரும பாபிஷ்டையாயிருந்தது, குழந்தைகள் பாலுண்ணவிருமபும் ஸமயத்தில தாய்மார்களின் ஸ்தனங்களை அறுத்துப பொகடடிருபபேன. இதில ஸந்தேஹமு இல்லை. புருஷஸிம்ஹனே! இளங்கனறுயுடைய பசு அக்கன்றின்மேல் மிகவும் ப்ரீதியோடிருப்பதுபோல் நான் என் பிள்ளையிடத்தில் மிகுந்த ப்ரேமமுள்ளவளாயிருக்கையில், ஸிம்ஹமு கனறைகொனறு பசுவைக் கனறற்றதாகச் செயவதுபோல், கைகேயி பலாதகாரஞ்செயது ராமனைக் காட்டுககுத் துரத்தி எனனைப் பிள்ளையில்லாதவளாகச செய்துவிட்டனள். நான வெகுகாலம் வ்ரதோபவாஸங்களிருநது ஒரு பிள்ளையைப பெற்றனன. அவன், உலகத்தில் எவ்வளவு கல்யாணகுணங்கள் உண்டோ அவைகளெலலாம் அமையப் பெற்றவன்; மேலும் ஸமஸ்த சாஸ்த்ரங்களையும் ஓதி யுணர்ந்து பண்டிதனுயிருப்பவன். அப்படிப்பட்ட ஒரு புதல்வனைக் கைவிட்டு நான் பிழைத்திருக்கப் பொறேன. நீண்ட புஜதண்டங்களையுடையவனும் மிகுந்த பலமுள்ளவனுமாகிய அபபடிபபட்ட என்னுடைய குமாரனைக் கண்களாரக் காணுதிருப்பேனுயின, தெய்வங்கூட எனக்கு இங்கு ஜீவித்திருபபதற்குக் கொஞ்சமாயினும் ஸாமர்த்யத்தை விளைவிக்கவல்லதன்று. வெயிற்காலத்தில் க்ரூரமாகப்ரகாசிக்கின்ற மஹானுபாவனுகிய ஸூர்யன் தனது கிரணங்களால் பூமியைத் தபிக்கச் செய்வதுபோல், புத்ரசோகத்தினுல் உண்டாகிய இப்பரிதாபாக்னியானது மேன்மேலும் வளர்கது என்னைப் பரிதபிக்கச் செய்கினறதே' என்று இவ்வாறு புலம்பினள். காற்பத்து மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுமித்ரை கௌஸல்யைக்குத் தேறக் கூறுதல்.

அங்ஙனம் புலம்பிக்கொண்டிருக்கும் மடந்தையர் மணியாகிய கௌஸல்யையைப் பார்த்து [1] ஸுமித்ரை தார்மிகையாகையால் தர்மம் பொருந்தியிருக்குமாறு 'மேனமைப்படுத்துகைக் குரிய மஹாதபஸ்வியே! உன் புதல்வன ஸகலஸத்குணங்களு முடையவன்; புருஷர்களனைவரிலும் மேலானவன். ஆகையால் அவனைப்பற்றி இங்ஙனம் புலம்புவதால் பயன்யாது? இப்படி தீனமாகக் கதறினபொழுதிலும் ப்ரயோஜனம் என்? பூஜிக்கத் தகுந்தவளே! மஹாபலனாகிய உன் குமாரன ராமன சிஷ்டர்கள் எப்

---

1 இதற்கு மூலம்—'இஷ யர்மே ஸ்யிதா யர்ம்யம ஸுமிதரா வாக்யமவ்ரவீத்' என்று. தாரைபோலவும் மண்டோதரிபோலவும், ஸுமித்ரையும் பரத்வஜ்ஞானமுடையவளென்று ஸம்ப்ரதாயமாகையால இங்கு ஸுமித்ரைமூலமாக ராமனது பரத்வத்தை வெளிப்படுத்துகின்றார—(யர்மேஸ்யிதா) தாமத்தில் நிலைநின்றிருப்பவள. இங்கு தாமமென்றால்—ஸித்ததாமஸுபலாகிய ராமனைச சொலலுகிறதாகையால, ராமனிடததில பற்றிய மனமுடையவள். அல்லது — (யர்மே) ஜன்மாந்தர ஸுக்ருதத்தில நிலைநின்றிருப்பவள் அப்படிப்பட்ட ஸுக்ருதயரிபாக வசத்திலலென்றபடி. (யர்மயம்) விசிஷ்ட கர்மத்தினின்று நழுவாததாகிய, ராமனது பரத்வதனைப்பற்றிய, (வாக்யம்) வாகயத்தை, (அவ்ரவீத்) சொன்னாள. 'தவார்யே ஸஜீ ஹுஷணர்யுக்தஃ புத்ரஸ்ஸ புருஷோத்தமஃ'—(தவபுத்ரஃ) உன் பிள்ளை, (ஸஃ) அப்படி பரஸித்தரகிய, வேதாந்தங்களில் ப்ரஸித்தி பெற்றிருக்கிற, (புருஷோத்தமஃ) நாராயணன். எப்படியென்னில்— (ஸஜீ ஹுஷணர்யுக்தஃ) அநிதரஸாதாரணங்களும் (பிறாக்குப் பொதுவாயிராதவைகளும்), அநவதிகாதிசயங்களும், (எல்லையிலலாத மேன்மை யுடையவைகளும்) அஸங்க்யேயங்களுமாகி (கணக்கற்றவைகளுமாகி) விளங்குகின்ற கல்யாணகுணங்களை யுடையவன்; ஆகையால் இவனே பூர்ணமந் நாராயணனென்றபடி. இங்கு (புருஷோத்தமஃ) என்கிறவிதுக்குப் புத்ரனென்கிற புதநியால் புருஷாகளில தலைவனென்னும் பொருள் ஸித்திக்குமென்று நினைதது

பொழுதும் ஸ்ரத்தையோடு ஆசரித்துக்கொண்டு வரத் தக்கதும் பரலோகத்தில் பெரும்பயனைக் கொடுக்கத் தக்கதுமாகிய தர்மத்தைச்செய்ய முயன்று மஹாபா வனாகிய தந்தையை அஸத்ய தோஷமுண்டாகாதபடி ஸத்யஸந்தனாகச் செயயவேண்டு மென்று ராஜ்யத்தைத் துறந்து அரண்யஞ் சென்றனனி மற்றொன்றும் இல்லை. ராமன் அப்படிப்பட்ட தர்மத்தில் நிலைனறு அவ்

அபபடியன்றென்பதற்காக (ஸஃ) என்கிற விசேஷணம சோக்கப் பட்டது. (ஸஃ) வேதாந்தஙகளில ப்ரதிபாதிக்கப்படுகிற புருஷோதத மனையன்றிக் கேவலமான புருஷோத்தம னன்றுகையால், புத்ர னென்னும் புத்தியால அவனைகுறிததுச சோகிக்கவேண்டியதிலை யென்றபடி வேதாநதஙகளில ஓதப்படும் புருஷோத்தம லவானை யின், கர்மபாதந்த்ரலபிருப்பதேலை என்னில், சொலலுகிறுள— 'ஸிஷ்டைராசரிதே ஸம்யக ஸுவதப்ரேத்யஹலோஹயே । ராமோ யாமே ஸ்யிதஸி ஸ்ரீரேஷ்டோ ந ஸ மோசயஃ கஹாசந'. (ஸிஷ்டைஃ) சிஷ்டர்களால. (ஸம்யக்) நன்கு. (ஆசரிதே) ஆசரிக்கப்பட்டதும், (ப்ரேத்யஹலோஹயே) பாரலௌகிக பலதிற்குக காரணமாயிருப் பதுமாகிய, (யர்மே) தாமத்தில, (ஸயிதஃ) நிலைன்றிருப்பவன். (ஸ்ரீ ஷ்டை ராசரிதே) எனறவிதலல்—சிஷ்டர்கள ஆசரிப்பதெல்லாம லோகாநுக்ரஹத்தின்பொருட்டேயாகையால, புருஷோத்தமனையிரு ந்தும், லோகாநுக்ரஹத்திற்காக சிஷ்டாகள ஆசரிகுங காமங்களில மனஹாகமுற்றிருககிறுனென்று விசித்தம். (ப்ரேத்யஹலோஹயே) என் றவிதலல்—தசரதனுக்குப் பரலோகத்தில் ஹிதம் உண்டாவதற்காக இஙஙனம் முயனறுனென்பதும் விசித்தம. இவன் செய்வதெலலாம் லோகாநுகரஹததின் பொருட்டே யென்பதைத் தெரிவிக்கிறுள— (ஸ்ரீரேஷ்ஃ) 'யதீயஹாசாதி ஸ்ரீரேஷ்ம ஸ்ததத்தஹவேதரோஜநஃ'என் னுங் கீதாவசனத்தின்படி ஸ்ரீரேஷ்டர்கள ஆசரிப்பனவெலலாம் மற் றவர்களை அனுக்ரஹிப்பதற்காகவே. தனது ஆசாரத்தைப் பார்த்துப் பிறரும் அஙஙனம் செய்து உஜ்ஜீவிக்க வேண்டுமென்னும் புததியு டன் காமங்களைச செய்ய முயன்றுனென்று கருத்து. மேலும், 'காம வ்யதஸ்த்வயம் லோகஃ க்ருத்ஸ்நஸ் ஸமநுவாதததே। யதீவ்யத்தாஸ்ஸ ந்தி ராஜாநஸ்ததீவ்யத்தாஸ்ஸநதிஹிப்ரஜாஃ' (இவ்வுலகம் முழுவதும்

விதமான லக்கார்யத்தைச் செய்ய அரண்யம் போயிருக்கையில், அப்படிப்பட்டவனைக் குறித்து மனவருத்தப்படலாகாது. ராமனைக்குறித்து மாத்ரமே அன்று, லக்ஷ்மணனைப்பற்றியும விசாரப்படவேண்டிய அவச்யம் இல்லை. பாபத்தினின்று விலகிச் சென்றவனிடம் லகல ப்ராணிகளிடத்திலும் தயையுடையவனுமாகிய லக்ஷ்மணன் அந்த ராமனுக்கு யிகவும் சுச்ருஷை நடத்திக்கொண்டிருப்பவன்; இது மறாத்மாவாகிய லக்ஷ்மணனுக்குப் பெருத்த லாபமாகையால் அவனைப்பற்றியும மனவருத்தப் படவேண்டா

தன் மனம் போனபடி வாத்திக்கின்றது. (நடக்கின்றது). (அரசாகள் எப்படி நடப்பார்களோ, அப்படியே ப்ரஜைகளும நடக்கும்) என்று மேலிற் சொலலுகிறபடியே, ராஜாவாய் அவதரித்து, ப்ரஜைகளும் தனைனப் பாத்து ஆசாரங்களை அறிந்துகொளவதற்காக ஆசாரங்களை அனுஷ்டிகிறானென்று கருத்து. தன் சேஷத்வ ஸ்வரூபத்திறகு அனுகுணமாகிய கைங்கர்யத்தைக் கெட்டியாகக் கைப்பற்றி லக்ஷ்மணன் கூடவே சென்றான்; ஆகையால அவனைப்பற்றியும் துககிக்கவேணடியதிலலை யென்கிறாள—'வர்த்தமே சாத்தமாம் வ்ரதத்திம் லக்ஷ்மணோஸ்மிந்ஸுகாநவம்। யாவாந் ஸாவஹ மேதஸ்ய லாஹஸ் தஸ்ய மஹாத்மநஃ'. (அநவம்) பாபமிலலாதிருப்பவன்; ப்ரமாதமற்றிருப்பவன். (ஸாவஹ மேதஸ்ய யாவாந்) ஸமஸ்தப்ராணிகளிடத்திலும தயையுடையவன். ஸகலாத்மாக்களும் ஜ்ஞானைகாகாரர்க ளென்று (ஜ்ஞானமென்னும் ஆகாரம் ஒத்திருக்கப்பெற்றவர்களென்று) தெரியுமாகையால எலலாவற்றிலும் ஸமபுத்தியுடையவனாகையால் ஸ்னேஹமுடையவன். இப்படிப்பட்ட லக்ஷ்மணன், (உத்தமாம்) நிரதிசய புருஷார்த்தமாகையால (புருஷார்த்தமாக எலலாவற்றிலும் சிறந்திருப்பதாகையால) உத்தமமாகிய, (வ்ரதத்திம்) கைங்கர்யவ்ருத்தியை, கைங்கர்ய காஷ்டையை. (கைங்கர்யம்-அடிமைசெய்தல்.) (ஸுஹ்ருத்தமே) எப்பொழுதும் அனுஷ்டித்துக்கொண்டிருக்கின்றான். (தஸ்ய மஹாத்மநஃ) அந்த மஹானுபாவனுக்கு, (லாஹஃ) கைங்காயமே புருஷார்த்தம். இந்த ஸ்லோகத்தில் (வர்த்தமே) என்னும் சப்தத்திலுளள (வ) என்னும் அக்ஷரம் காயத்ரியில். ஐந்தாவது அக்ஷரமா

ண்டிய அவஸ்யம் இல்லை. [1]ஸீதையும் ஸுகத்தை அனுபவிப்பதற்கே தகுந்தவள்; அவளுக்கு அரண்யவாஸத்திலுள்ள துக்கங்கள் தெரியுமாயினும, பதிவ்ரதையாகையால் ஸ்த்ரீகளுக்குப் பதியே தெய்வமென்று நினைத்து, அவனுக்கு அரண்யவாஸத்தில் துயரங்களைப் போக்க முன்று தார்மிகனுகிய உன் குமாரனைப் பின்தொடர்ந்து அரண்யத்திற்குப் போகின்றனள். ஆகையால் தர்மத்தின்படி நடந்த ஸீதையைப்பற்றியும் மனவருத்தப் படவேண்டியதில்லை. உனது புதல்வனுகிய ராமன் [2]கீர்த்தியென்னும் த்வஜத்தை உலகத்தில் எங்கும் பரவசமுழற்றிக்கொண்டு திரிகின்றனன். அவன் ஸகல லோகங்களுக்கும் ப்ரபு. ஆகையால் ரக்ஷ்யகோடிகளைப் பார்த்து ரக்ஷிப்பதற்காகச் செல்லுகின்றனன. ஒருவன் தனது ஸொத்து வீணுய் அழிந்துகிடக்க வெறுமனே பொறுத்துக் கொண்டிருப்பானே? ராமனுக்கு உலகம் முழுவதும் குடும்பச் சரக்கு. ஆகையால் அவன் அவை வருத்தப்பட்டுக் கொண்டிருக்கப் பொறுத்திருக்கலாகுமோ? மேலும், இதனல் அவனது கீர்த்தி உலகத்திலெங்கும் பரவுகின்றது. ஆகையால் அவனது புகழ் எங்கும் பரவி அவனுக்கு மேன்மையைக் கொடுக்கவற்றுகிய

கையால் க்ரந்த ஸங்க்யை நாலாயிரம் முடிந்து ஐந்தாவது க்ரந்த ஸஹஸ்ரம் ஆரம்பிக்கப்பட்டதென்று தெரியவருகின்றது.

1 இதில்—அவனுக்கு ஸஹதர்மசாரிணியா யிருக்கும் ஸீதையைப்பற்றியும் துக்கிக்க வேண்டியதில்லை யென்கிறுள். அவளோடு கூடி தர்மங்களை ஆசரித்துக் கொண்டு போவதுபற்றி அவளைக் குறித்து மனவருத்தப்படவேண்டாமென்று கருத்து.

2 இதில்—வேதாந்த ப்ரதிபாத்யமான அவனது லக்ஷணங்களைச் சொல்ல முயன்று 'தஸ்ய நாம மஹதீ யஶஃ' என்னும் ஸ்ருதியின் அர்த்தத்தை ப்ரதிபாதித்தாள்.

இந்த வனவாஸத்தைப் பற்றி நாம் துக்கிப்பது கூடாது. பின்னும், அவன் ஜிதேந்த்ரியன். ஆஸ்ரிதர்களைக் கைவிடலாகாதென்னும் ஸத்யவ்ரதத்தையே அவன் தனமாகக் கொண்டவன். இப்படிப்பட்ட ப்ரபுவாகிய உன் புதல்வனுக்கு எந்த மேன்மைதான் உண்டாகாது? ஸமஸ்த கல்யாணகுணங்களும் அவனுக்கு ஸம்பவிக்குமாகையால் அவனைப்பற்றி வருந்துதலாகாது. [1]ராமனுடைய த்ரிகரணசுத்தியையும், ஒப்பின்றிய மஹிமையையும் ஸ்பஷ்டமாக அறிந்து ஸௌர்யன் அவனது திருமேனியைத் தன் உஷ்ணகிரணங்களால் எள்ளளவும் தபிக்கச் செய்யமாட்டான். [2]காற்றும் ஸமஸ்த காலங்களிலும் அந்தந்தக் காலத்திற்குத் தகுந்தபடி சீதோஷ்ணங்களைச் செய்துகொண்டு வேகமின்றி மெதுவாயிருக்கையால் மங்கலகரமாகி அரண்யங்களிலுள்ள பூஞ்செடிகளிலும் குளிர்ந்த ஜலப்ர

---

1 இதுமுதலாக—தேவதைகள அனைவரும அவனது ஆஜ்ஞையின்படி நடப்பவர்களே யாகையால, அவனுககு அனுகூலாகனாயிருப்பாகளென்று தெரிவிக்கிறுள. (ராமனுடைய தரிகரணசுதியையும்) என்று தடஙகி. இதலல் 'ஹேஷாஹேதி ஸௌர்யஃ' என்னும் ஸிருத்யர்த்தம் சொல்லப்பட்டது. இதறகு மூலம்—'வ்யக்தம் ராமஸ்ய விஜ்ஞாய லௌகசம் மாஹாத்ம்யமுத்தமம் । நமாத்ரமஸ்ய ஹிஸ்ஸௌர்யஸ் ஸந்தாபயிது மர்ஹதி'. (மாஹாத்ம்ய முத்தமம்) மேலான மஹிமை—தனக்கு ஸமானமாவது மேற்பட்டதாவது இல்லாதிருக்கும்படியான மாஹாத்ம்யம.

2 இதற்கு மூலம்—'ஸிவஸ்ஸர்வேஷு காலேஷு காநநேஹ் யோ விநிஸ்ஸ்ருதஃ । ராஹவம யுக்தஸீதாஷ்ணஸ் ஸேவிஷ்யதி ஸௌவோஉநிலஃ'. இதலல்·'ஹேஷாஸ்மாஜ் வாதஃ பவதே' என்னும் ஸிருத்யர்த்தம் கூறப்பட்டது. (ஸிவஃ) என்றதலல் வேகமில்லாமல் மந்தமாயிருக்குமென்பதும், (காநநேஹ்யஃ) என்கையால் அங்குள்ள புஷ்பங்களின் பரிமளங்களைக் கொண்டு வீசுகையும், (விநிஸ்ஸ்ருதஃ) என்கையால்—ஸைத்யமும் காற்றுக்கு சொல்லப்பட்டது. தனிஸ்லோகி.

வாதங்களினாலும் காட்டுத் தீக்களினாலும் பட்டு வருவதனால் உஷ்ண காலங்களில் பரிமளமும் குளிர்ச்சியும் பொருந்தியும் மழைக்காலங்களில் உஷ்ணம் பொருந்தியும் லோகமாயிருக்கும்படி ராமன்மேல் வீசுமேயன்றி அவனுக்குக் கொஞ்சமும் உபத்ரவஞ் செய்யாது. [1]சதக்ரதுவும் பாபதூரனுகிய அந்த ராமனை ராத்திரிகளில் தந்தை ஆலிங்கனஞ் செய்துகொள்வதுபோல், குளிர்ந்த கிரணங்களால் பரிசித்துக்கொண்டு அவனுக்கு இனிப்பைக் கொடுத்துக் கொண்டிருப்பான். முன்பு ராமன் சம்பராஸுரனுடைய பிள்ளையாகிய தானவேந்த்ரனை ஸம்ஹரிக்கையில், அது கண்டு ப்ரஹ்மதேவன் மிகுந்த ஸந்தோஷம் அடைந்து அவனுக்குத் திவ்யாஸ்த்ரங்களைக் கொடுத்தானல்லவா? ஆகையால அந்த ராமன மிகுந்த சூரன்; புருஷர்களிற் சிறந்தவன். அவனுக்குத் தன் ரக்ஷணத்திற்காக ஒருவனை ஆச்ரயிக்க வேண்டிய அவச்யம் இல்லை. அவனது பாஹுபலமே அவனுக்குப்போதுமானது. அதுவே அவனுக்குப் பெரிய அவலம்பம். அப்படிப்பட்ட ராமன அரண்யஞ் சென்றிருந்தபோதிலும் பயப்படாமல் வீட்டிலிருப்பதுபோலவே லோகமாயிருப்பான். ராமனுக்கு அரண்யத்தில் க்ஷேமம் உண்டாகுமாக. 'இங்குப் பரதன் வேருன்றப் பெறுவானுயின், ராமனுககு ராஜ்யம் கிடைக்குமா? என்பாயோ, அதற்கும் சொல்லுகிறேன், கேள். ராமனது பாணங்களுக்குக் குறிப் படுவாராயின, எப்படிப்பட்ட சத்ருக்களாயினும் நசித்துப்போவார்கள். அப்படிப்பட்ட

---

1 இதற்கு மூலம்—'ஸயாநமாஸ்யம் ராத்ரௌ பிதேவாஹிபரிஷ்வஜந் । ரஶ்மிபிஸ் ஸம்ஸ்பரஶந் ஶீதைஶ் சந்த்ரமா ஹ்லாதயந்நிவ' யதி'. இதில் 'ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே மார்தி ஸூர்யாசந்த்ரமஸௌ விதரணே திஷ்஠தஃ' என்கிற ஶ்ருதியின் பொருளை உட்கொண்டு இவ்வனங் கூறப்பட்டது.

மஹாவீரஞகிய ராமனது ஆஜ்ஞையில் பூமி நிற்காமல் எப்படி தவறிப் போகும்? அவச்யம் இதுப் பூமி அவனுக்கே உட்பட்டிருக்கும். ஸமஸ்த லக்ஷணங்களும் பொருந்திய ராமனது சரீர காந்தியையும், சூரத்தனத்தையும், ப்ரசஸ்தமான பலதையும் கண்டால, அவன அரண்ய வாஸத்திலிருந்து திர்த்துக்கொண்டு சீக்ரமாகவே ராஜ்யம்பெறுவானென்று எனக்குத் தோற்றுகின்றது. தேவீ! ராமன [1] ஸூர்யனுகும் ஸூர்யன்; அக்னிக்கும் அக்னி;

---

1 இதற்கு மூலம்—'ஸோயஸ்யாபி ஹவேத ஸோயோ ஹ்யஸ்ய நேதா நிஃ ப்ரஹோஃப்ரஜ்ஞஃ ஸ்ரீயே ஸ்ரீஸ்ச ஹவேஹ்ரீயா கீர்திஃகீர்த்யாஃ க்ஷமாக்ஷமா' இதுகு'தமேவஹாதமநுஹாதி ஸாவம்'என்னுமஸ்ருத்யர்தமசாலலப்பட்டது.(ஸூர்யஸ்ய)ஸகலலோகங்களுகும் ப்ரகாசத்தைக கொடுப்பவனுகிய ஸூர்யனுகுங்கூட, (ஸோயஃ) ப்ரகாசங கொடுப்பவன். ஸோயமண்டலத்தினிடையில இருந்துகொண்டு கண்ணுடியின் உளளேயிருக்கும் தீபம் போல அவனை ப்ரகாசிகசசெய்பவனென்றபடி. (அஸ்ரீநேரஸ்ரீநிஃ) அகனிகும் அக்னியாயிருப்பவன். எலலாவஸ்துக்களையும் பசனஞ செயவது தஹறிப்பது முதலிய அக்னிகாரியங்கள் அவனது ஸங்கல்பதத்திற்குட்பட்டனவை யென்றபடி. 'அஹ்னைவஸ்ரீவாநரோஹ்ரித்வா' என்கிற கீதாவசனத்தைகண்டு கொளக. (ப்ரஹோஃ ப்ரஜ்ஞஃ) ப்ரபுவுக்கும் ப்ரபு. ப்ரஹ்மருத்ராதிகளுக்கு ஸ்ருஷ்டி.முதலியவற்றைச செயயும் ஸாமாத்யத்தைக் கொடுத்து நிவஹிப்பவனுமதானே யென்றபடி. (ஸ்ரீர்யஃ ஸ்ரீஃ) ஸ்ரீக்கும் ஸ்ரீயாயிருப்பவன். ப்ரஹ்மாதிகளுக்குளள ஐஸ்வர்யம் எவளுடைய கடாக்ஷலேசத்திற்கு அதீனமாயிருகின்றதோ, நாராயணனுடைய பரப்ரஹ்மத்வமும் எவளுடைய கடைக்கண்பார்வையின் மிகுதி யின்றியில் வ்ருத்திக்காதோ, அப்படிப்பட்ட ஸ்ரீதேவிக்கும் அவனை ஆஸ்ரயிததது பற்றியே ஸ்ரீயென்னும் இப்போ வ்ருத்திக்கின்றது. அவனுடைய ஈஸ்வரத்வம் பூர்ணமாக நிறைவேறுவதற்குக காரணமாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் ஸ்வரூபமும் அவளுலேயே நிர்வஹிக்கப்படுகிறதென்றபடி.(கீர்த்யாஃகீர்த்திஃ) கீர்த்திக்கும் கீர்த்தியை விளைவிப்பவன் 'தஸ்யநாம மஹத்யஸ்ஃ' என்று கீர்த்திக்குச் சொன்ன மஹிமை பகவத்ஸம்பந

தேவதைகளுக்கும் தேவதை; பூதங்களுக்கும் முதலாகிய பூதம். அப்படிப்பட்ட மஹாப்ரபுவும் யாவராலும் மேன்மை பெற்றவனுமாகிய ராமனுக்குத் தேசத்திலாயினும் பட்டணத்திலாயினும் ப்ரதிபந்தகங்கள் எவைதான் உண்டாகக் கூடும்? இப்பட்டணத்தைத் துறந்து எவ்வனத்திற்குப் போகக் கண்டு அந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்கள் துக்கத்தின் மிகுதியால் தடுமாறி அவனைப பிரிந்திருக்கப் பொறுமல் கண்ணீர்களைப் பெருக்குகின்றார்களோ, அப்படிப்பட்ட புருஷ சிகாமணியாகிய ராமனை சீக்

தைப் பற்றியன்றோ? அவனுடைய கீர்த்தியன்றோ அசீதா ஸாதாரணமாயிருப்பது (பிறர்க்குப் பொதுவாயிராதிருப்பது.) மற்றவர்களின் கீர்த்தி அளவிடக்கூடியதல்லவா? ஆகையால் அவன் தன் ஸம்பந்தத்திலை கீர்த்திக்கும் 'அளவற்றது, மஹிமையுளளது, பிறாகுப் பொதுவன்றியிருப்பது' என்னும்படியான கீர்த்தியைக கொடுப்பவனென்றபடி. (கூமாகூமா) ஸர்வத்திற்கும் ஆதாரமாகிய பூமிகும் ஆதாரமாயிருப்பவன். இதற்கு 'யஸ்மிந்ஜீயெளஃ பரயிவீ சாந்தரிக்ஷம்' என்கிற ஸ்ருதி ப்ரமாணம். (ஸைவதாநாஞ்ச ஸைவதம்) தேவர்க்கும் தேவனையிருப்பவன். இங்கு 'தஂஸைவதாநாம் பரமஞ்ச ஸைவதம்'என்று ஸ்ருதி.(ஸுதாநாம் ஸுதஸத்தமஃ) பூதமாவது ஸத்தையுள்ளது. ஸத்தையுளள பதார்த்தங்களுக்கெல்லாம் அவைகளின் ஸத்தையை நிர்வஹித்துக்கொண்டு போருமவனென்றபடி. இங்ஙனம் கலயாணகுணங்களுக்கு இவனே விளைநிலமென்று சொல்லி இனி ஹேயகுணவிரோதியாயிருக்குந் தன்மையை ஸூசிப்பிக்கிறார—'தஸ்ய கேஹ்யஸுணுதேவி ராஷ்ட்ரே வாப்யயிவாபுரே' என்று.(தஸ்ய கேஹி அஸுணஃ) அவனுக்கு ஹேயகுணங்கள் ஒன்றும் இலலையென்க. (ராஷ்ட்ரேவாப்யயிவாபுரே) தேசத்திலாயினும் பட்டணத்திலாயினும், அதாவது—உபயவிபூதியிலும் அவன் தன் தன்மை தவறுதிருப்பவன். அதாவது—தன்ஸ்வரூபத்தை விடாதிருப்பவனென்றபடி. (ஹி)என்றவிது ப்ரஸித்தியைச சொல்லுகிறது.அவனுடைய தோஷவிரோதித்வம் 'அபஹதபாப்மா' என்று இது முதலிய ஸ்ருதிகளின் ப்ரஸித்தமென்றபடி.

ரமாகவே ஸீதையோடும் பூதேவியோடும் ராஜ்யலக்ஷ்மி யோடுமே ஆகிய மூவரோடுங்கூடிப் பட்டாபிஷேகம் பெறப் போகின்றனன். ராமனுக்குப் பராஜயமென்பதே தெரியாது. அப்படிப்பட்ட அவ்வீரன் தர்ப்பாணத்தையும் மராவுரிகளையும் தரித்து அரண்யத்திற்குப் போய்க்கொண் டிருக்கையில், ஸீதையைப்போல், ராஜ்யலக்ஷ்மியும் அவனைப் பின்தொடர்ந்து சென்றது. அப்படிப்பட்ட ராமனுக்குத் துர்லபமாயிருப்பதும் ஒன்றுண்டோ? மேலான வில்லாளியாகிய லக்ஷ்மணன் பாணங்களையும் கத்திகளையும் மற்றை ஆயுதங்களையும் தரித்து ராமனைப் பின்தொடர்ந்து தானே போகின்றனன். அப்படிப்பட்ட ராமனுக்கு எதுதான துர்லபம். தேவீ! ராமன் விதிப்படி வனவாஸத்தைத் தீர்த்துத் திரும்பிவருகையில் நீ பார்க்கப்போகின்றனை. இவ்வஜ்ஞானமும் துக்கமும் வேண்டாம். உனக்கு நான் ஸத்யத்தையே சொல்லுகின்றேனன்றி வேறில்லை. மங்கல ஸ்வபாவமுடையவளே! உனது அவயவங்களில்ஒவ்வொன்றும் லக்ஷணங்கள் பொருந்தி அழகாயிருக்கின்றன; ஒன்றுவது லக்ஷணந்தவறி நிற்கைக்கிடமாயிருக்கவில்லை. குணங்களாலும் நீ அனைவரும் புகழப் பெற்றிருப்பவளேயன்றி, உன்னை ஒருவரும் நிந்திக்கப்பெறார். இப்படி ஸமஸ்த லக்ஷணங்களும் பொருந்தி ஸகலகுணங்களும் அமைந்து விளங்குகின்ற உனக்கு இவ்வருத்தம் நீடித்து நிற்காது. ராமன் வனத்தினின்றும் திரும்பி வந்து ஸர்வ லக்ஷணங்களும் பொருந்திய உன் பாதங்களில் தலை சாய்த்து வந்தனஞ் செய்து அப்பொழுதே உதித்த சந்த்ரன் போல் மிகவும் இனியழகைப் புலப்படக் கண்டு களிக்கப் போகின்றனை. திரும்பி இந்தப் பட்டணத்திற்கு வந்து பட்டாபிஷேகங் கொண்டு மிகுந்த காந்தியுடன் விளங்குகின்ற ராமனைப் பார்த்து நீ சீக்ரமாகவே ஆநந்தபாஷ்

பங்கள் பெருகப் பெறுவாய். தேவீ! ராமனுக்கு அசுபம் எதாயினும் உண்டாகுமென்று எனக்குத் தோற்றவில்லை. ஆகையால இங்ஙனம் புலம்புவதும், மனத்தில் வருத்துவதும் செய்யலாகாது. ராமன ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் கூடி வருகையில் சித்ரத்திலேயே நீ பார்க்கப போகின்றனை. நீ பாபமென்பது சிறிதும் இல்லாதிருப்பவளன்றோ? உனக்கும் இவ்வருத்தம் கூடுமோ? நீ உனனை ஸமாதானப்படுத்திக் கொள்வதையன்றி, மற்றவர்களையும் கூட ஸமாதானப்படுத்த வேண்டுங் காலம் அன்றோ இது. இப்படிப்பட்ட ஸமயத்தில நீயே இப்படி மனங் கலங்கப் பெறுவாயாயின், இனி மற்றவர்கள் எப்படி ஸமாதானம் அடைவார்கள். நிமித்தமின்றியே நீ இங்ஙனம் மனங் கலங்கப் பெறுவதேனோ? தேவீ! மஹானுபாவனாகிய ராமனைப் புதல்வனைப் பெறும்படியான பாக்யம் செய்தவளுக்கு மனவருத்தங் கூடுமோ? உலகத்தில் ராமனைக்காட்டிலும் ஸகலமார்க்க வர்த்திகளில் சிறந்தவன் ஒருவனும் இலலையன்றோ? ராமன் தனது நண்பர்களுடன்கூடி வருது உனக்கு வந்தனஞ் செய்கையில், அது கண்டு நீ வர்ஷாகாலத்தில் மேகக் கூட்டம் ஜலத்தைப் பெய்வதுபோல, த்வரையிலேயே ஆநந்தபாஷ்பங்களைப் பெருக்கபபோகின்றனை. விரும்பின விருப்பங்களை யெல்லாம் சேடற்ற வல்லவனாகிய உன் குமாரன ராமன் திரும்பி அயோத்தையகுவது மேன்மை மிகுந்து மஹாபலிஷ்டங்களாகி விளங்குந் தனது ஹஸ்தங்களால் உன் பாதங்களைப் பீடித்துக் கொண்டு நமஸ்கரிகக்கப் போகினறனன. சூரனாகிய ராமன் தனது ஸ்னேஹிதர்களோடு கூடி உன்னிடம் வந்து தன் ப்ரவரத்தைதச் சொல்லி உனக்கு நமஸ்காரஞ் செய்கையில், மேகங்களின் வரிசை பர்வதத்தை வர்ஷங்களால் நனைப்பது போல், ஆநந்தபாஷ்பங்களால் நனைக்கப் போகின்

ரூப்' என்றனள். தோஷங்களொன்றுமின்றி விளங்கும் ஸுமித்ராதேவி வார்த்தைகளைச் சொல்லி மனவருத்தத்தைப் போக்குவதில் ஸமர்த்தையாகையால், அந்த ராமன் தாயாகிய கௌஸல்யையைப் பல்விதவசனங்களால் ஸுமாதானப்படுத்தி வாயை மூடிக்கொண்டிருந்தனள். இங்ஙனம் லக்ஷ்மணனது மாதாவாகிய ஸுமித்ரை சொல்லிய வார்த்தைகளைக் கேட்டவுடனே, சரத்காலத்தில் அற்ப ஜலமுள்ள மேகம் வேகமாக நசித்துப் போவதுபோல், ராமனுக்குத் தாயும் தசரதமஹாராஜனது மஹிஷியுமாகிய கௌஸல்யையின் சரீரத்தி லெங்கும்வ்யாபித்திருந்த சோகம் முழுவதும் நசித்துப் போய்விட்டது. நாற்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் தன்னைப் பின்தொடர்ந்து வந்த ப்ரஜைகளுக்கு நல்வார்த்தை சொல்லுதல்.

ராமன் உண்மையான பராக்ரமமுடையவன்; மேலும் மஹானுபாவன். ஆகையால் ஜனங்களெல்லோரும் அவனிடத்தில் மிகுந்த அனுராகமுடையவர்களாகையால், வனவாஸத்திற்காகப் போகின்ற ராமனை அவர்கள் பின் தொடர்ந்து போயினர். ராமனது ஸ்னேஹிதர்களும் ராஜாவின் அந்தப்புரஸ்த்ரீகளும் ராஜாவும் ராமனது நிர்ப்பந்தத்துக்குட்பட்டுத் திரும்பினர்களே யன்றி, ராமனது ரதத்தைப் பின் சென்ற ப்ரஜைகள் மாத்ரம் எவ்வளவு சொல்லினும் திரும்பாமலே பின்தொடர்ந்தனர். அந்த ராமன் மிகுந்த கீர்த்தியுடையவனும் நற்குணங்கள் அமையப் பெற்றவனுமாகையால், அயோத்யையில் வாஸஞ் செய்யும் புருஷர்கள் அனைவர்க்கும் பூர்ணசந்த்ரன் போல் ப்ரியனாயிருந்தனன். ராமனது ப்ரஜைகள் அவனை அரண்

யத்திற்குப் போகவேண்டாமென்று எவ்வளவு வேண்டிக் கொண்டபோதிலும், அவன் தந்தையை ஸத்யஸந்தனாகச் செய்ய முயன்று அவர்களது வார்த்தையைச் செவியிற் பதித்தாமல் அரண்யத்திற்கே போயினன். ராமனை மிகுந்த ஸ்னேஹம் துலங்கும்படி கண்களால் பானஞ் செய்பவன் போல, அந்த ப்ரஜைகளைத் தன் புதல்வர்களோடொக்கப்பார்த்து ஸ்னேஹத்திலே' அயோத்யாபுரத்தில் வாஸஞ் செய்யும் ப்ரஜைகளே! உங்களுக்கு என்னிடத்தில் எவ்வளவு ப்ரீதியும் கௌரவ புத்தியும் உளவோ, அவை யெல்லாவற்றையும், எனக்கு பரியஞ்செய்ய வேண்டுமென்று வீர்களாயின், பரதனிடத்தில் விசேஷித்து நடத்தவேண்டும். கைகேயியின கண்களைக் களிக்கச செய்பவனாகிய அந்தப் பரதன் நல்ல நடவடிக்கை யுடையவன். ஆகையால் பரிபங்களையும் ஹிதங்களையும் செய்யவேண்டிய வழியிப்படி உங்களுக்குச் செய்வான். அவன் வயதில் சிறியவனாயினும் ஜ்ஞானத்தில முதிர்ந்தவன்; ம்ருதுஸ்வபாவனாயினும் பராக்ரமத்தில் புலியைப்போல் வீர்ய குணம் பொருந்தியவன். ஆகையால் உங்கள் பயங்களைப் போகடி உங்களைத் தகுந்தபடி காப்பாற்றிக்கொண்டு வருவான். மேலும், அவன் அரசாகஹக்குரிய குணங்கள் பொருந்தி விளங்குந் தன்மையன். ஆனதுபற்றியே அரசனால் அவன் யுவராஜனாக ஏற்படுத்தபட்டனன். மேலும், உங்களுக்கும் எனக்கும் மற்றை லக்ஷ்மண சத்ருக்னர்களுக்கும் ராஜாஜ்ஞையின்படி நடக்கவேண்டியது அவஸ்யமாகையால், நாமெல்லோரும் பரதனை அரசனாக அங்கீகரிக்கவேண்டும். நான் வனத்தில் வஸித்துக் கொண்டிருக்கையில், நீங்கள் எல்லோரும் எனக்கு ப்ரியஞ்செய்ய விரும்பி என்னை நினைத்து அம்மஹாராஜர் மனவருத்தப்படாதிருக்கும்படி பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்' என்றனன்.

ராமன் இவ்வாறு மென்மேலும் பித்ருவசனபரிபாலனமென்னுந் தர்மத்திலேயே நின்றிருக்கக் கண்டு, அந்த ப்ரஜைகளும் 'உன்னையே அரசன் முதலில் எங்களுக்கு யுவராஜனாகச் செய்தனன். ஆகையால் அந்த ராஜாஜ்ஞையை நீயும் நாங்களுமாக நிறைவேற்றவேண்டும்' என்று மொழிந்துகொண்டு ராமனே ராஜாவாகவேண்டுமென்று மேன்மேலும் விருப்பங் கொண்டனர். ராமன் தர்மந் தவறலாகாதெனறு எவ்வளவு பிடிவாதங் கொண்டிருந்தாலும், அவ்வளவும் அவனே ராஜாவாகவேண்டுமென்று ப்ரஜைகளும் பிடிவாதங் கொண்டனர். பட்டணத்து ஜனங்கள் முகத்தில முழுவதுங் கண்ணீர் நிரம்பப் பெற்றுத் தீனக்களாகி, அந்த ராமலக்ஷ்மணர்கள் எவ்வளவு கல்வார்த்தை சொல்லினும் கேட்காமல் பின்தொடர்ந்து போகும்பொழுது, அவ்விருவரும் தமது குணங்களென்னும் பாசங்களால அவர்களைக் கட்டி இழுத்துக்கொண்டு போவது போல் புலப்பட்டது. ஜ்ஞானத்திலும் வயதிலும் ப்ரஹ்மவர்ச்சஸத்திலும்(தபோபலத்திலும்) இப்படி மூன்று விதங்களிலும் வருத்தர்களாகிய அங்குள்ள ப்ராஹ்மணர்கள் கிழத்தனத்தினால் தலை வணங்கப் பெற்று ராமனுக்கு தூரத்தில் நின்றுகொண்டு மிகுந்த வேகத்துடன் கூடி உயர்ந்த ஜாதியிற் பிறந்து ராமனை வஹித்துக்கொண்டு போகின்ற ஓ அஸ்வங்களே! திரும்புங்கள்; போகவேண்டாம். உங்கள் ப்ரபுவாகிய ராமனுக்கு ஹிதஞ் செய்வீர்களாக. ஜந்துக்களில் குதிரைகளுக்குக் காதுகள் விசேஷித்துச் சிறந்தவை. அவைகள் எவ்வளவு தூரத்தில் உண்டான சப்தங்களையும் கேட்கவல்லவை. காமும் எங்கள் ப்ரார்த்தனையைத் தெரிவித்தோமாகையால், உங்களுக்கு அது நன்றாகச் செவியில் பட்டிருக்கும். ஆகையால், நீங்கள் எங்களுக்குக் காது கேட்கவில்லை' யென்று சொல்லாமல்

உடனே திரும்பவேண்டும். உங்கள் ப்ரபுவாகிய ராமன் தார்மிகனுகையால் பரிசுத்தமான மனமுடையவன்; வீர்யம் அமைந்தவன்; சுபங்களாகிய வரதங்களைத் திடமாகப் பற்றி நடத்துந தன்மையன். ஆகையால் அவன் பட்டணத்திற்குத் திருப்பிக் கொண்டு வரத் தகுந்தவனையன்றி, பட்டணத்தினின்றும் அரண்யத்திற்குக் கொண்டு போகத் தகுந்தவனன்று'என்றனர். இங்ஙனம் துக்க வார்த்தைகளைச் சொல்லிப் புலம்புகின்ற அந்த வ்ருத்த ப்ராஹ்மணர்களைக் கண்டு ராமன் சீக்ரமாக ரதத்தினினறும் கீழே இழிந்தனன். ப்ராஹ்மணர்களது வாக்யத்தைக் கேட்டும் ரதத்தில் போவது தோஷமென்றும், அவர்களை ஸமாதானப் படுத்துவதற்காகத் திரும்பிணலும் வ்ரதபங்க மாகுமேயென்றும் நினைத்து ராமன ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் கால்நடையாகவே நடந்துகொண்டு அந்த வ்ருத்தப்ராஹ்மணர்கள் தன்னை ஸமீபத்தில் வந்து பிடிக்கும்படி மெல்ல மெல்ல அடிகளை இட்டுக்கொண்டு சென்றனன். ராமன தயாரஸம் வழிந்துவரப்பெற்ற கண்களையுடையவன்; மேலும், ஸதாசாரத்தில் ப்ரீதியுடையவன. ஆகையால் கால்நடையாகவே நடந்து வருகின்ற அந்த ப்ராஹ்மணர்களைத் தான் ரதத்திலிருந்தே ஸமாதானப் படுத்துவதற்கும் அவன் மனம் பொறுக்கவில்லை. அந்த ப்ராஹ்மணர்கள், ராமன் நிற்காமல் போய்க்கொண்டேயிருப்பதைக் கண்டு மனம் பரபரக்கத் துக்கத்தினல் மிகவும் பரிதபித்து அவனைப் பார்த்து 'ஓ ப்ராஹ்மணர்களிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவன்; ஆகையால் இந்த ப்ராஹ்மணர்கள் அனைவரும் உன்னைப் பின்தொடர்ந்து வருகின்றனர். அரணிகளில் ஏறிடப்பட்டிருக்கிற இவ்வக்னிகளும் இந்த ப்ராஹ்மணர்களது தோள்களில் ஏறிக்கொண்டு உன்னைப் பின்தொடர்ந்து வருகின்றன;

காண்பாய். வாஜபேய யாகத்தில் சேர்ந்தவைகளும் சரத் காலத்திலுள்ள மேகம்போல் வெளுத்தவைகளுமாகிய எமது சத்ரங்களும் (குடைகளும்) உன் பின்னே புறப்பட்டு இதோ வந்துகொண்டிருக்கின்றன. உனக்குக் குடையில் லையாகையால், வெயில் வலிவு பெற்று உன்னைத் தபிக்கச் செய்யும் பொழுது காங்கள் வாஜபேய யாகத்தில் ஸம்பாதித்த எங்கள் குடைகளைக் கொண்டு உனக்கு வெயிலைப் போக்கி நிழல் படச் செய்கின்றனம். எமதப்பனே! இதுவரையில் கிச்சிக்தையாக எப்பொழுதும் வேதமந்த்ரங்களில் சென்றிருந்த எங்கள் புத்தி இப்பொழுது உன்னைப் பற்றி வனவாஸத்தைப் பின் சென்றிருக்கின்றது. 'உங்கள் தனமாகிய வேதங்களையும், கூடவே தொடர்ந்து தர்மங்களை அனுஷ்டிக்கின்ற பார்யைகளையும் துறந்து வரக்கூடுமா?" என்பாயோ, அது வேண்டாம். எங்களுக்குப் பெருந்தனமாகிய வேதங்கள் எமது ஹ்ருதயங்களிலேயே இருக்கின்றன. எங்கள் பார்யைகளையும் அவர்களது பாதிவ்ரத்யமே ரக்ஷிக்கின்றது. காங்கள் ரக்ஷிக்கவேண்டிய அவஸ்யம் இல்லை. ஆகையால் அவர்கள் க்ருஹங்களிலேயே இருப்பார்கள். 'என் வேண்டுகோளுக்காக நீங்கள் திரும்பவேண்டும்' என்பாயோ, அதில்லை. உன்னைத் திருப்பி அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று காங்கள் மனத்தில் திடமாக நிச்சயஞ் செய்துகொண்டிருக்கின்றனம். நீ வனத்திற்கே போவேனென்று மீளவும் பிடிவாதஞ் செய்வது யுக்தம் அன்று. நீ தந்தையின் வார்த்தையைப் பரிபாலனஞ் செய்வதென்னும் தர்மத்தையே நிறைவேற்ற விரும்புவாயாயின், இனி காங்கள் தர்மத்தை அனுஷ்டிப்பதற்கு நிமித்தம் யாதிருக்கின்றது? உன்னைப் போன்ற தார்மிகன் அரண்யத்திற்குப் போவானுயின், காங்கள் தர்மத்தையே துறக்கவேண்டுமேயன்றி வேறி

ல்லை. நாங்கள் தர்மத்தை அனுஷ்டிக்கலாமென்று பார்த்தாலும், நீ அரண்யஞ் சென்ற பின்பு, எங்கள் தர்மானுஷ்டானத்திற்குப் பிடிப்பு யாதிருக்கின்றது? தர்ம பாயணனாகிய நீயே ப்ராஹ்மணர்களின் ப்ரார்த்தனையைச் செய்யவேண்டுமென்னும் தர்மத்தை உபேக்ஷித்துக் கானகஞ் செல்வாயாயின், இனி எந்தப்ராணிதான் தர்மத்தை அனுஷ்டிக்க வல்லது? நீ தர்மானுஷ்டானத்தில் நிலனின்றிருப்பவன்; அப்படிப்பட்ட உன்னை மயிர்கள் கரைக்கப் பெற்று ஹம்ஸங்கள்போல் வெளுத்த எமது சிரங்களைப் புழுதி படியும்படி நிலத்தில் படித்தி நமஸ்காரஞ் செய்து வேண்டுகின்றனம். அதைப் பார்த்தாயினும் திரும்புவாயாக. குழந்தாய்! உன்னைப் பின்தொடர்ந்து இவ்விடம் வந்திருக்கிற ப்ராஹ்மணர்கள் பலரும் யாகங்களைச் செய்வதற்காக வேண்டிய ஸம்பாரங்களைச் சேர்த்து வைத்து விட்டு வந்திருக்கின்றனர். நீ திரும்பினால்தான் அந்த யாகங்கள் நிறைவேறும். திரும்பாவிடின், அந்த யாகங்களுக்கு விக்னஞ் யெய்தவனுவாய். ராமா! நாங்கள் மாத்ரமே அன்று. ஜங்கமங்களாகிய திர்யக் ஜந்துக்களும் ஸ்தாவரங்களாகிய வ்ருக்ஷாதிகளும் உன்னிடத்தில் பக்தி உண்டாகப் பெற்றிருக்கையால் உன் வரவை வேண்டுகின்றன. அங்ஙனம் வேண்டுகின்ற பக்தியுள்ள அவைகளிடத்தில் ஸ்னேஹத்தைக் காட்டி அவைகளின் பக்தியை ஸபலப்படுத்துவாயாக. வ்ருக்ஷங்கள் நீ வனத்திற்குப் போவது கண்டு தாமும் பின்தொடர்ந்து வர முயன்று, தமது வேர்கள் நாற்புறங்களிலும் சென்று படிந்து போராமல் நின்று போகவொட்டாமல் தடுப்பதாகவும், வாயுவேகத்தினால் நிரம்பவும் உயர்ந்திருப்பதுபற்றிக் கைகளை உயரவெழுப்பினாற்போலவும், காற்றினால் அசைந்து சப்திப்பது பற்றி உன்னைப் பின்தொடர்ந்து செல்லும் பாக்யம் தம

க்கு இல்லையே யென்று முறை யிடுகின்றவை போலவும் புலப்படுகின்றன. பக்ஷிகளுங்கூடச்சேஷ்டையின்றி ஆஹாரங்களைத் துறந்து ஸஞ்சாரத்தையும் இழந்து செடிகளில் ஓவ்வோரிடத்திலிருந்து ஸகல ப்ராணிகளிடத்திலும் தயாளுவாகிய உன்னைத் திரும்பும்படி மிகவும் வேண்டுகின்றன' என்றனர். இங்ஙனம் ராமனைத் திருப்பி அழைத்துக்கொண்டு போவதற்காகக் கதறி முறையிடுகின்ற அந்த ப்ராஹ்மணர்களைக் கண்டு தானும் ராமனைப் போக வொட்டாமல் தடுப்பது போல் தமஸாநதி ராமனுக்குக் குறுக்கே வந்து நின்றது. பிறகு வழி நடந்து வந்தமையால் ஓய்ந்திருக்கிற குதிரைகளை அவிழ்த்து ச்ரமந் தீருவதற்காகச் சீக்ரத்தில் தரையில் புரளச்செய்து தண்ணீர் குடிப்பித்து ஜலத்தில் நன்கு அக்குதிரைகளின் சரீரத்தைக் கழுவி அந்தத் தமஸாநதியின் கரையில் மேயும் படிக்கு விடுத்தனன். நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் தமஸாதீரத்தில் ராத்ரி இளைப்பாறியிருந்து, அன்றிரவே பின் வந்த பௌரஜனங்களை யேமாற்றி விட்டுப் போதல்.

பின்பு ராமன் அழகாயிருக்கின்ற அந்தத் தமஸாநதியின் கரையில் சேர்ந்து [1] ஸீதையைப் பார்த்துக்கொண்டே லக்ஷ்மணனை நோக்கி 'லக்ஷ்மண! நமது வனவாஸ காலத்தில் முதல் இரவு இதுவே அரண்யத்தில் நேர்ந்திருக்கின்றது. இதற்காக நீ க்ருஹம் முதலியவற்றை நினை

I (ஸீதையைப் பார்த்துகொண்டே லக்ஷ்மணனை நோக்கிச் சொல்லினன்)என்றதனால் லக்ஷ்மணனைப்போல் ஸீதையும் மனங்கலங்காதிருக்கவேண்டுமென்று தெரிவதற்காக வென்றுணர்க.

த்துக் கொண்டாலது, 'ஸீதை ஸுகுமாரமாயிருக்கப்பட்டவள், இதை எப்படி ஸஹிப்பாள்' என்றுவது மனத்தில் வருத்தப்படாதிருக்கவேண்டும் லக்ஷ்மண! இதோ அரண்யங்களைக் காண்பாயாக. ராத்ரி வரவே இங்குள்ள ம்ருகங்களும் பக்ஷிகளும் காற்புறத்தினின்றும் வந்து தந்தமது இருப்பிடங்களில் சேர்ந்து முழுவதும் நிறைந்திருக்கின்றன. இங்ஙனம் ம்ருகங்களும் பக்ஷிகளும் தந்தமது இருப்பிடங்களில் சென்று மறைந்திருப்பதனல், இவ்வரண்யங்கள் சூன்யங்களாகி ப்ரகாசமில்லாதவைகளாகப் புலப்பட்டுக்கொண்டு அந்த ம்ருகபக்ஷிகளின் சப்தங்களால் அழுவன போலிருக்கின்றன; பார். இப்பொழுது [1]என் தந்தையின் ராஜதானியாகிய அயோத்யா நகரத்திலுள்ள ஸ்த்ரீகளும் புருஷர்களும் ஆகிய அனைவரும் தம்மை விட்டுப் போன நம்மைக் குறித்து மனவருத்தப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இதற்கு ஸந்தேஹம் இல்லை. புருஷதிலகனே! ப்ரஜைகளெல்லோரும் பல குணங்களைப் பற்றி ராஜாவினிடத்திலும், உன்னிடத்திலும், என்னிடத்திலும், பரதசத்ருக்னர்களிடத்திலும், மிகுந்த அனுராகம் உண்டாகப்பெற்றிருக்கின்றனர். எனக்கு என் தந்தையையும் மிகுந்த புகழ் அமைந்தவளாகிய என் தாயாரையும் நினைக்கும் பொழுது மனவருத்தம் உண்டாகின்றது. அவர்கள் பலவாறு கதறிக் கதறிக் கண்கள் பாழாகப் பெற்றுக் குருடராய் விடுவார்களோ! ஆனல் ஓர் ஆஸ்வாஸம் உண்டு. பரதன் தர்மஸ்வபாவனல்லவா? ஆகையால் அவன் தர்மார்த்த காமங்கள் பொருந்திய வாக்யங்களைச் சொல்லி என் தந்தை தாய்களை ஸமாதானப்படுத்துவான். பரதன் க்ரூரஸ்வபாவ

---

1 அவ்வரண்யத்தின் ஸ்திதியைக் காணவே ராமனுக்கு அயோத்யை நினைவுக்கு வந்ததென்று தெரிகின்றது.

னல்ல வென்று அடிக்கடி நினைக்கும் பொழுதெல்லாம் எனக்குத் தந்தையைப்பற்றியும் தாயைப்பற்றியும் மனவருத்தம் உண்டாகிறதில்லை. புருஷஸிம்ஹனே! நீ என்னைப் பின் சென்று வருவதுபற்றி நல்ல கார்யம் செய்தனை. நீ வாராதபக்ஷத்தில் ஸீதையை ரக்ஷிப்பதற்காக ஸஹாயந் தேடவேண்டியதாயிருக்கு மல்லவா? நீ இருப்பதனல் அந்தக் கஷ்டம் இல்லாமற் போயிற்று லக்ஷ்மண! இன்றைத் தினந்தான் வனவாஸம் ஆரம்பித்த தாள்; மேலும், இது புண்யக்ஷேத்ரமாகிய தமஸாநதியின் கரை. ஆகையால் உபவாஸம் இருக்கத்தகும். ஆனதுபற்றி இன்றிரவு ஜலம் மாத்ரமே உட்கொண்டிருக்கின்றனன். பலவகை [1]வன்யாஹாரங்கள் இருந்தபோதிலும், என்னிடத்தில் ப்ரீதியுள்ளவர்களின் துக்கங்களை நினைத்துக் கொண்டால் அவையெல்லாம் எனக்கு ருசிக்கவேயில்லை. எனக்கு இப்பொழுது ஜலம் மாத்ரமே இஷ்டமாயிருக்கின்றது' என்றனன். ராமன் இங்ஙனம் லக்ஷ்மணனைப் பார்த்துச் சொல்லிமுடித்துப் பின்பு ஸுமந்த்ரனை நோக்கி 'அழகிய ஸ்வபாவமுடையவனே! குதிரைகளின்மேல் மனஞக்கத் தவறுதிருப்பாயாக' என்றனன். அந்த ஸுமந்த்ரன், ஸூர்யன் அஸ்தமித்தவுடனே குதிரைகளைக் கட்டி அவைகளுக்கு எதிரே புல்லுகளை நிரம்பப் பொகட்டு மேற்செய்யவேண்டிய கார்யங்களை அறிந்தவனுகையால் ராமனது பார்ஶ்வத்தில் வந்து நின்றனன். ஸுமந்த்ரன் மங்கலகரமாகிய ஸாயங்காலஸந்தியை உபாஸித்து ராத்ரி வரக்கண்டு லக்ஷ்மணனுடன் கூடி ராமனுக்குப் படுக்கை ஏற்படுத்தினன். ராமன் தமஸாநதிக்கரையில் செடியின் இலைகளால் ஏற்படுத்தப்பட்ட அந்தப் படுக்கையைக் கண்டு, லக்ஷ்மணன் பாதுகாத்திருக்கப்பெற்று ஸீதையுடன் படுத்துக்

---

1 காட்டிலுள்ள காய்கிழங்கு முதலிய ஆஹாரங்கள்.

கொண்டனன். இப்படி அண்ணனும் அவனது பத்னியும் நன்கு நித்ரைபோகக்கண்டு, லக்ஷ்மணன் ஸுமந்த்ரனைப் பார்த்து ராமனுக்குள்ள பலகுணங்களை வர்ணித்துச்சொல்லினன். லக்ஷ்மணன் ஸுமந்த்ரனுக்குத் தமஸாநதிக்கரையில் ராமனது குணங்களைச் சொல்லி விழித்துக்கொண்டேயிருக்கையில், ஸூர்யன் உதயமாயினன். ராமனும் தன்னைப பின்தொடர்ந்து வந்த பட்டணத்து ஜனங்களோடு கூட, பசுக்கள் குவியல் குவியலாக நிரம்பப் பெற்றிருக்கிற அந்தத் தமஸாநதிக் கரையின் அருகில் அன்றிரவெல்லாம் இருந்தனன். மஹாதேஜஸ்வியாகிய ராமன் படுக்கையை விட்டெழுந்திருந்து அந்தப்ரஜைகளைப் பார்த்துப் புண்ய லக்ஷணங்கள் பொருந்திய லக்ஷ்மணனுடன 'லக்ஷ்மண! நம்மிடத்திலுள்ள மிகுந்த ப்ரீதியால் தந்தமது க்ருஹங்களில் சிறிதும் அபேக்ஷையில்லாமல் நம்மைத் தொடர்ந்து வந்து இந்தச் செடிகளின் கீழ் இப்பொழுது படுத்துநித்ரைசெய்துகொண்டிருக்கின்ற ஜனங்களைக் காண்பாயாக. இந்தப் பட்டணத்து ஜனங்கள் நம்மைத் திருப்பி அழைத்துக்கொண்டு போவதற்காகக் கொண்டிருக்கும் பிடிவாதத்தைக் கண்டால், ப்ராணன் களையாயினும் விடுவார்களே யன்றித் தமது பிடிவாதத்தை மாத்ரம் விடமாட்டார்களென்றே தோற்றுகின்றது. இவர்கள் நித்ரைபோய்க்கொண்டிருக்கும்பொழுதே நாம் சுருக்கென ரதத்தின் மேல் ஏறிக்கொண்டு பயமில்லாத வழியில் போவோம். அப்படி செய்தோமாயின், இவ்வயோத்யாபுர வாஸிகள் என்மேல் உள்ள ப்ரீதியால் இப்பொழுதைப்போல் இனிமேலாவது செடிகளின் கீழ் படுத்து நித்ரைபோகாதிருப்பார்கள். ராஜகுமாரர்களாயிருப்பவர் தம்மால் பட்டணத்து ஜனங்களுக்கு மனவருத்தம் உண்டாகும்பொழுது, அதைத் தாம் போக்கடிக்க வே

ண்டுமேயன்றித் தமது துக்கங்களைப் பட்டணத்து ஜனங்களுக்கும் விளைவிக்க லாகாதல்லவா?' என்றனன். லக்ஷ்மணனும் ஸாக்ஷாத் தர்மஸ்வரூபனுகிய ராமனைப் பார்த்து 'நீ எல்லாந் தெரிந்தவன். நீ சொல்வது எனக்கு ஸம்மதமாயிருக்கின்றது. சீக்ரத்தில் தேரின்மேல் ஏறுவாயாக' என்றனன். பிறகு ஸ்ரீமானுகிய ராமன் ஸுமந்த்ரனைப் பார்த்து 'நீ ஸாமர்த்ய முள்ளவன்; ஆகையால் ஒருவர்க்குந் தெரியாதபடி ரதத்தை ஸித்தப்படுத்து வாயாக. நான் அதில் ஏறிக்கொண்டு அரண்யத்திற்குப் போகவேண்டும். சீக்ரம் போய் ரதத்தைக் கொண்டுவரு வாயாக' என்றனன். பின்பு அந்த ஸுதன் சீக்ரமாக அந்தரகத்தில் உத்தமங்களாகிய அவ்வஸ்வங்களைப் பூட்டிக் கொண்டுவந்து கைகளைக் கூப்பிக்கொண்டு ராமனை நோக்கி 'ரதிகர்களிற் றலைவனே! நீண்டழகிய புஜதண்டங்களையுடையவனே! இதோ குதிரைகளைப் பூட்டிரதத்தை ஸித்தப்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றனன். நீ ஸீதையோடும் லக்ஷ்மணனுங் கூடி ஏறுவாயாக. உனக்கு மங்கலம் உண்டாக வேண்டும்' என்றனன். ராமன் தனுஸ்ஸு கவசம் முதலிய பரிகரங்களுடன் அந்த ரதத்தின் மேல் ஏறிக்கொண்டு, வேகத்துடன் பெருகி வருகின்றதும் பல நீர்ச்சுழிகள் நிரம்பப் பெற்றதுமாகிய தமஸாநதியைத் தாண்டிச் சென்றனன். பித்ருவசனபரிபாலனஞ்செய்ய நேரப் பெற்றமையால் மிகுந்த ஓளியுடன் கூடி மஹாபாஹுவாகிய ராமன் அந்நதியைத் தாண்டி ரதத்தின் மேல் இருந்துகொண்டே அக்கரையைச் சேர்ந்து, முள்கல்லில்லாமல் மங்கலகரமாகிய பெரிய வழியைப் பிடித்துக் கொண்டு சென்றனன். ராமன் தன்னைப் பின்தொட

ர்ந்து வந்த பட்டணத்து ஜனங்களை [1] மோசஞ் செய்ய நினைத்து ஸுமந்த்ரனைப் பார்த்து 'ஸாரதியே! நீ ஒருவன் மாத்ரம் ரதத்தின் மேல் ஏறிக்கொண்டு வடதிசைப் புறம் பற்றிச் செல்வாயாக. அப்பொழுது பட்டணத்து ஜனங்கள், நான் அயோத்யைக்கே போனேனென்று நினைத்துக்கொள்வார்கள். நீ ஒரு முஹூர்த்த காலம் அங்ஙனம் வேகமாகச்சென்று மீளவும் ரதத்தைத் திருப்பிக்கொண்டு வேறுவழியாகத் திரும்பி வருவாயாக. நான் அரண்யம் போவது பட்டணத்து ஜனங்களுக்குத் தெரியாதிருக்கும்படி நீ இதை மனவுக்கம் மிகப் பெற்று நடத்தவேண்டும்' என்றனன். ஸுமந்த்ரனும் ராமனது வார்த்தையின்படிசெய்து வேறுவழியாகத் திரும்பி வந்து ராமனுக்கு ரதத்தை ஒப்புவித்தனன். அனந்தரம் ரகு குலத்திற்கு வ்ருத்தியைச் செய்கின்ற அதத ராமலக்ஷ்மணர்களும் ஸீதையும், ஸுமந்த்ரன் நன்றாகக் கொண்டி

---

1 ராமன் தயாநிதியாயிருந்தும் தன்னைப் பிரியப்பொறாமல் தன்னிடத்தில் மிருந்த ப்ரீதியுடையவர்களை இங்ஙனம் வஞ்சித்துப போவது அனுசிதமன்றே வென்னில்—இது வஞ்சனம் அன்று. பட்டணத்து ஜனங்களுக்குத் தன்னுடன் ஸர்வகாலமும் ஸஹவாஸம நேருவதால் ஆநந்தம் தலைக்கு மேலிட்டு வருமாகையால் அவர்களது ஸத்தையே இல்லாமற் போய்விடும். ஆகையால் அவர்களை ஸாத்மிக்கப் பண்ணிப் பிறகு அனுபவத்தை நன்றாகக் கொடுக்கும் பொருட்டு வ்யாதிசிகித்ஸை செய்பவன்போல் வனவாஸத்தினால் விரஹலேஷத்தை ஸங்கல்பித்தனன். ஆனதுபற்றி இது அவர்களுக்கு ஹிதமான வ்யாபாரமேயன்றி வஞ்சனமாக நேராது. ராமனுக்கு அப்படிப்பட்ட ஸங்கல்பம் இல்லையாயின் ஜனங்கள் எல்லோரும் நித்ரைபோவது நேராது. ஸுமந்த்ரனைப் போலவும் லக்ஷ்மணனைப் போலவும் இவர்களில் ஒருவனாவது விழித்துக்கொண்டிருப்பான். அப்படியில்லாமையால் ராமனுடைய ஸங்கல்பமேயென்று தெரிய வருகின்றது.

வந்த ரதத்தின் மேல் ஏறிக்கொண்டனர். பின்பு அந்த ஸாரதியும் தபோவனத்திற்குப் போகும் வழியைப் பிடித்துக் குதிரைகளை அதட்டி ஓட்டினன். பின்பு அந்த ஸாரதி ப்ரயாண காலத்தில் மங்கல ஸூசகங்களாகிய சகுனங்களைப் பார்க்க விரும்பி ரதத்தை வடதிசையாகக் கொஞ்சம் போகும்படி ஓட்டினன். அனந்தரம் மஹாரதனுகிய அந்தத் தசரத குமாரன் ஸாரதியோடுகூட ரதத்தின் மேல் ஏறிக்கொண்டு அரண்யத்திற்குச் சென்றனன். காற்பத்தாரூவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமனைப் பின்தொடர்ந்து வந்த பட்டணத்து ஜனங்கள், அவன் தம்மை ஏமாற்றிப் போனது கண்டு சிந்தித்து அயோத்யைக்குத் திரும்பிப் போதல.

பிறகு ஸந்தோஷமானவுடன் அந்தப்பட்டணத்து ஜனங்கள் அங்கு ராமனைக் காணுமல் சோகத்தினுல் பரிதபித்துச் சேஷ்டைகளின்றி மனக்களிப்பு கழியப் பெற்றிருந்தனர். அவர்கள் சோகத்தினுல் கண்களில் நீர் தளும்பப்பெற்று நாற்புறமும் கண்களை விட்டுப் பார்த்துக் கொண்டே ஆங்காங்கு ராமனது வழியைக் காட்டவல்ல ரதரேணுவையுங் கூடப் பார்க்க நேராமல் மேன்மேலும் மனவருத்தம் மேலெழப்பெற்றிருந்தனர். புத்திமானுகிய அந்த ராமன் தம்மைத் துறந்து விட்டுப் போனதுபற்றி, அவர்கள் ராமனிடத்தில் மிகுந்த மனப்ரீதியுடையவர்களாகையால் மிகவும் வருந்தி முகம் வாடி விலவிலத்துப் போகத் தீனர்களாகிக் கேட்போர்களுக்குக் கருணை உண்டாகும்படியான வார்த்தைகளை ஒருவர்க்கொருவர் சொல்லத் தொடங்கி 'சீ! பாழான நித்ரை! இதனுலன்றே ராமன் மனம் மயங்கப்பெற்று ஏமாறி அகனற மார்பையுடை

யவனும் நீண்டழகிய புஜதண்டங்களை யுடையவனுமாகிய ராமனைப்பார்க்க நேராதிருக்கின்றனம். அம்மஹாபாஹுதன்னை அனுஸரிப்பவர்களை வீண் செய்பவன் அல்லன். அப்படிப்பட்டவன் இப்பொழுது பக்தர்களாகிய நம்மைப் பரித்யாகஞ்செய்து அரண்யத்திற்கு எப்படி போயினன்? தந்தை, தனது ஔரஸ புத்ரர்களைக் காப்பாற்றுவது போல், நம்மை எப்பொழுதுங் காப்பாற்றுந் தனமையனும் ரகுகுலதிலகனுமாகிய ராமன், இப்பொழுது நம்மைத் துறக்க மனம் வந்து அரண்யத்திற்கு எப்படி போயினன்? நாம் இங்கேயே ப்ராயோபவேசஞ் செய்து ப்ராணன்களை விட்டு விடுவோம். அல்லது மரணதீக்ஷையைக் கைப்பற்றி வடதிசை வழியாகப் போவோம். இப்படி செய்யலாமன்றி ராமனைப் பிரிந்து இனி நமக்குப் பிழைப்பு ஏதுக்காக? இங்கு உலர்ந்த காஷ்டங்கள் மிகப் பெரியனவாகப் பலவும் இதோ இருக்கின்றன. அவைகளைக் கொண்டு சிதை ஏற்படுத்தி அதில் அக்னியை வளர்த்தி நாம் எல்லோரும் அக்னிப்ரவேசத்தையாயினும் செய்வோம். இனி அயோத்தியைக்குப் போவோமாயின், அங்குக் கேட்பவர்களுக்கு என்னவென்று பதிலுரைப்போம்? பெருத்தழகிய புஜங்கள் அமையப் பெற்றுப் பொறுமை யென்பது சிறிதும் இல்லாமல் இனியமொழிகளை மொழியுந் தன்மையனுகிய ராமனை அரண்யத்தில் கொண்டுபோய் விட்டு வந்தோம்" என்று சொல்வது தகாதே. ராமனில்லாமல் நாம் மாத்ரம் வருவது கண்டு அயோத்தையி லுள்ள ஸ்த்ரீ பாலவ்ருத்தர் முதலிய ஜனங்கள் எல்லோரும் தீனர்களாகி மனக்களிப்பின்றி மனம் வருந்துவது ஸத்யமே. ராமன் எப்பொழுதும் மனத்தை அடக்கிக் கொண்டிருப்பவன்; அப்படிப்பட்ட மஹனீயனோடு கூடவே அயோத்தையினின்றும் புறப்பட்டனம். இப்பொழுது அப்படிப்பட்டவனை

விட்டு நாம் எப்படி திரும்பி அந்தப் பட்டணத்திற்குப் போகலாகும்?" என்று சொல்லிக்கொண்டு கன்றுகளை விட்டுப் பிரிந்த பசுக்களைப் போல், கைகளை உயர எழுப்பிக் கொண்டு துக்கத்தினல் பரிதபித்து இங்ஙனம் பல வித வார்த்தைகளைச் சொல்லிப் புலம்பினர் பிறகு அவர்கள் தேர் போனவழியைக் கண்டு பிடிக்க முயன்று திரும்பிக் கொஞ்சதூரம் சென்று, அனந்தரம் வழி அகப்படாமையால் அளவில்லாத துக்க ஸாகரத்தில் மூழ்கிக் கிடந்தனர். நல்ல மனமுடைய அந்நகரத்து ஜனங்கள் ரதம் போனவழி தெரியப் பெறுமல் 'இதுவென்! இனி என் செய்வோம்? தெய்வமும் பகையாயிற்றே?" என்று புலம்பிக் கொண்டே திரும்பினர். பின்பு அவர்களெல்லோரும் மனத்தில் சிறிதும் உத்ஸாஹமின்றித் தாம் வந்தவழியே பிடித்துக்கொண்டு அயோத்யாபுரத்திற்குப் போயினர். அப்பொழுது அந்நகரத்திலுள்ள ஸத்புருஷர்களெல்லோரும் ராமவியோக துக்கத்தினல் பீடிக்கப்பட்டிருந்தனர். திரும்பி வந்த ஜனங்களெல்லோரும் அந்தப் பட்டணம் ஜலந் தெளித்து விளக்கிப் புஷ்பங்கள் தூவுதல் முதலிய ஸம்ஸ்காரங்கள் ஒன்றுமில்லாமல் பாழாயிருக்கக்கண்டு மிக்க மனவருத்தம் உற்றவர்களாகி 'ஓர் நதியைச் சார்ந்த ஓடையில் ஸர்ப்பம் ஒன்று வஸித்துக்கொண்டிருக்க, அந்த ஸர்ப்பத்தைக் கருடன் கொண்டுபோகையில் அந்நதி சூன்யமாகி விளங்காதிருப்பதுபோல், இப்பட்டணம் ராமன் இல்லாமையால் சூனயமாகி மிகவும் மனக்களிப்பற்றிருக்கின்றதே' என்று புலம்பிக்கொண்டு சோகத்தினல் வருந்திய கண்களினின்றும் நீர்களைப் பெருக்கினர். ராமன் இல்லாமற் போனதுபற்றி ஆநந்தமென்பது சிறிதும் இல்லாமல் பாழாயிருக்கின்ற அந்தப் பட்டணம், துக்கத்தினல் மனம் பரிதபிக்கப் பெற்றிருக்கிற அப்பொழு

ஜனங்களுக்கு, ராத்ரியில் சந்த்ரனில்லாத ஆகாயம் போலவும், ஜலமில்லாத ஸமுத்ரம் போலவும், புலப்பட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் துக்கத்தினால் வருந்தி உத்ஸாஹமென்பது சிறிதும் இல்லாமல் மிகவும் தன ஸம்ருத்தியுள்ள தமது க்ருஹங்களுக்குள் எவ்வளவோ மனவருத்தத்துடன் சென்று சோகத்தில் ஆழ்ந்திருப்பதனால், தம்மெதிரில் இருப்பவர்களைக் கண்ணாரக் காணப் பெற்றும், அவர்கள் ஸ்வஜனங்களா இதர ஜனங்களாவென்று சிறிதும் அறியப் பெறாதிருந்தனர். காற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

பௌர ஜனங்களின் மனவருத்தம்.

அப்பட்டணத்து ஜனங்கள் அங்ஙனம் ராமனைப் பின்சென்று நடுவழியில் அவனைத் துறந்து, காணுமல் அவன் போனவழியும் தெரியப் பெறுமல் திரும்பினவர்களாகி, அவனைக் காணுத மனவருத்தத்தினால் மிகவும் பீடிக்கப்பட்டுக் கண்களிரண்டிலும் நீர் தளும்பப் பெற்று வருந்திச் சிறிதாயினும் ஸுகப்படலாமேயென்று மரணத்தை ஆசைப்பட்டுத் திடந் தப்பி ப்ராணன்கள் தொலைந்து போனற்போல் மூர்ச்சித்திருந்தனர். பின்னும், அவர்கள் தந்தமது க்ருஹங்களுக்குச் சென்று புத்ரர்களோடும் பத்னிகளோடுங் கூடி முகத்தில் கண்ணீர் நிரம்பப் பெற்று எல்லோருமாகத் துக்கித்தனர். அவர்கள் ஸ்னேஹிதர் முதலானோர்களைக் கண்டும் மனக்களிப்பின்றி யிருந்தனர்; முன்பு எப்பொழுதும் தாம் பெற்றனுபவியாத சிறந்த பதார்த்தங்களை லபித்தும் ஸந்தோஷியாமலே இருந்தனர். கெட்டுப்போய் வெகுகாலம் அகப்படாத ரத்னநிதிகள் திரும்பி அகப்படினும், நிதிமுதலிய

வற்றால் ஏராளமாகப் பணங்களைப் பெறினும் அவர்கள் மனக்களிப்பின்றி யிருந்தனர். தாய், வெகுநாள் வ்ரதோபவாஸங்களைச் செய்து முதலில் பெற்ற பிள்ளையைக் கண்டும் களிப்பில்லாதிருந்தனள். வீடுகள்தோறும் மடந்தையர் துக்கத்தினால் பீடிக்கப்பட்டுப் புலம்பிக்கொண்டிருந்து வீட்டிற்கு வந்த கணவர்களை, யாஜனப்பாகர் மாவெட்டிகளால் யானைகளைக் குத்தித் துன்புறச் செய்வதுபோல், க்ரூரங்களான சொற்களைச் சொல்லி வருந்தச் செய்தனர். அந்தஸ்த்ரீகள் அவர்களைக் கண்டு 'ராமனைக் கண்ணாரக் காணப் பெறாதவர்களுக்கு வீடுகள் எதுக்காக? பார்யைகளால் என்ன ப்ரயோஜனம்? அப்படிப்பட்டவர்களுக்குத் தனங்களாலாவது பிள்ளைகளாலாவது ப்ரயோஜனம் என்? அவர்களுக்கு ஸுகந்தானும் எதுக்கு? அரண்யத்தில் ஸீதையுடன் கூடிக் ககுத்ஸ்தகுலாலங்காரனாகிய ராமனுக்குப் பரிசர்யை செய்யும்பொருட்டுப் பின்தொடர்ந்து சென்ற லக்ஷ்மணன் ஒருவனே உலகம் அனைத்திலும் ஸத்புருஷனென்று கூறத் தகுந்தவன். ராமன் அரண்யத்தில் எந்த நதிகளிலும் எந்தத் தாமரை யோடைகளிலும் எந்தத் தாமரைக் குளங்களிலும் இழிந்து தெளிந்த ஜலங்களில் ஸ்நானஞ் செய்யப் போகிறானே, அவை யெல்லாம் மிகுந்த புண்யஞ் செய்தவை. அழகிய வ்ருக்ஷங்களின் கூட்டங்கள் நிரம்பப் பெற்ற அரண்யங்களும், அகன்றழகிய ஜலக்கரைகளுடைய நதிகளும், அழகான தாழ்வரைகளுடைய பர்வதங்களும் ராமனுக்கு மனக்களிப்பை விளைக்கப் போகின்றன. ராமன் அரண்யத்திற்காவது மலைகளுக்காவது எவ்விடம் போயினும், அவை தம்மிடத்திற்கு வந்தப்ரிய அதிதியைப்போல் ராமனைப் பூஜிக்காமலிருக்கமாட்டாது. [1] வ்ருக்ஷங்கள் தமது சிகரங்களில் சிரோபூஷ

---

1 வ்ருக்ஷங்கள ராமனைப் பரமாத்மாவாக நினைத்துத் தம்மீது

ணம்போல் அழகாய் விளங்குகின்ற புஷ்பங்களோடு கூடிக்கனைகள்தோறும் பூங்கொத்துக்கள் நிரம்பப் பெற்று இனிய ஒலியுடன் கூடிய வண்டுகள் சூழ ப்ரகாசித்துக் கொண்டிருந்து ராமனுக்குப் புலப்படப போகின்றன. பர்வதங்களும் ராமன் வரக் கண்டு அவனிடத்திலுள்ள ஆதராதிசயத்தினால் அகாலத்திலும் மேலான பூக்களையும் பழங்களையும் அப்பொழுது உண்டாகச் செய்து புலப்படுத்தி லக்ஷ்மணனை விளக்கப் போகின்றன. பர்வதங்கள் வேண்டிய பொழுதெல்லாம் ராமனுக்குத் தம்மிடத்திலுள்ள அற்புதங்களாகிய பலவித மலையருவிகளைப் பலவாறுகப் புலப்படுத்தித் தெளிந்து அழகாயிருக்கும் ஜலங்களைக் கொடுக்கப் போகின்றன. பர்வதசிகரங்களிலுள்ள வ்ருக்ஷங்களும் ராமனுக்கு மனக்களிப்பை மிகவும் விளக்கப் போகின்றன. ராமன் மஹாசூரன்; மேலும், நீண்டழகிய பாஹுதண்டங்களை யுடையவன்; சூரர்களில் தலைவனாகிய தசரதனது குமாரனல்லவா? அப்படிப்பட்ட ராமன் இருக்குமிடத்தில் நமக்குப் பயமென்பது சிறிதும் கேரிடாது; அவமானமும் எள்ளளவும் உண்டாகாது. நாம் தாமஸப்படுத்தினோமாயின், ராமன் மேன்மேலும் வெகுதூரம் நடந்து போய்விடுவான். ஆகையால் இப்பொழுதே புறப்பட்டு ராமனிருக்குமிடந் தேடிச் செல்வோம். அப்படிப்பட்ட மஹானுபாவனாகிய ப்ரபுவின் பாதஸேவையே நமக்கு ஸுகத்தைக் கொடுக்க வல்லது. அவனே நமக்கு நாதன். அவனே கதி. அவனே நமக்குப் பரம ஆதாரமும். நாங்கள் ஸீதைக்குப் பரிசர்யை செய்கின்றோம். நீங்

ருக்கிற வண்டுகளின் ஜங்காரங்களாகிற மந்த்ரங்களைச் சொல்லிக் கொண்டு தம்கைகளாகிற கைகளில் பூங்கொத்துக்களாகிற புஷ்பாஞ்ஜலிகளைக் கொண்டு ராமனை அர்ச்சிக்கப் போகின்றன வென்று கருத்து. இப்படிக்கு மஹேஸ்வர தீர்த்தர்.

கள் ராமனுக்குப் பரிசர்யை செய்யலாம்' என்றனர். இங்ஙணம் அம்மடந்தையர் துக்காதிசயத்தினல் வருந்திப் பர்த்தாக்களைப் பார்த்து அந்தந்தச் சொற்களைச் சொல்லி, மீளவும் அவர்களை நோக்கி 'அரண்யத்திலும் ராமன் உமது யோகக்ஷேமங்களை நிறைவேற்ற வல்லவன். ஸீதையும் இந்த ஸ்த்ரீ ஜனங்களுக்கு வேண்டிய யோகக்ஷேமங்களை நடத்துவாள். ராமனில்லாமையால் ஸஜ்ஜனங்கள் வாஸஞ் செய்யத் தகாததும் ஆனதுபற்றியே மன்மை குன்றப் பெற்றதும் ராமனை நினைத்து மனவருத்தமுற்றுப் பரிதபிக்கின்ற ஜனங்களுடன் கூடியதும் மனக்களிப்பைத் தொலைத்து புத்தியைக் கெடுக்கவல்லதுமாகிய இவ்வயோத்யையில் வஸிப்பது எவனுக்குத் தான் ப்ரீதிக்கிடமாயிருக்கும்? இந்த ராஜ்யம் கைகேயியைச் சேருமாயின், தர்மத்தினின்றும் கழுவி நாதனையும் துறந்து பாழாய்விடும். இதற்கு ஸந்தேஹம் உண்டோ? அப்பொழுது நமக்குப் பிழைத்திருப்பதில் பயனில்லை. பிழைத்திருப்பதிலும் பயனில்லையாயின், அனந்தரம் பிள்ளைகளால் ப்ரயோஜனம் யாது? அன்றியே தனங்கள் தானும் எதுக்கு? ஐஸ்வர்யத்திற்காகப் புதல்வனையும் பர்த்தாவையும் கூடப் பரித்யாகஞ் செய்த குலத்தைக் கெடுப்பவளான கைகேயி மற்றவனைத் தான் பரித்யாகஞ் செய்யாதிருப்பாள்? கைகேயியின் ராஜ்யத்தில் அவள் பிழைத்திருக்கையில், நாம் ப்ராணன்கள் இருக்கும் வரையிலும் ப்ருத்யர்களைப்போல் ஒருக்காலும் வஸித்திருக்கலாகாது. இவ்விதமாக எங்கள் புதல்வர்மேலும் ஆணையிட்டுச் சொல்லுகின்றனம். நமது ராஜசிரோமணியாகிய தசரதனுடைய குமாரனை ராமனைத் தையின்றி அரண்யத்திற்கு அனுப்புகின்றீளே! அப்படிப்பட்ட அதர்மிஷ்டையாகிய அந்தத் துராசாரையினிடஞ் சேர்ந்து எவர் தாம் ஸுகமாகப் பிழைத்திருக்

கப் போகிறீர்கள்? இந்த ராஜ்யம் முழுவதும் ஆதாரமி
ன்றி காயகணுமில்லாமல் உபத்ரவப்பட்டுக்கொண்டிருக்கி
ன்றது. ஒரு கைகேயியைப்பற்றி இதெல்லாம் நாசம் அ
டையப் போகின்றது. ராமன் அரண்யத்திற்குப் போன
பின்பும் தசரதமன்னவன் பிழைத்திருக்கப் போகின்
றனே? பிழைத்திருக்கமாட்டானல்லவா? தசரதன காலை
ஞ் சென்று போகையில், பிறகு எல்லாவற்றிற்கும் நாசம்
உண்டாய்விடுமென்பது யாவர்க்கும் வெளிச்சமேயல்லவா?
எமக்கும் புண்யம் குறைந்து போய்விட்டது. மேலும்,
பெரும் எழுகளாய்விட்டனம். இவ்விஷயத்தை நன்கு
ஆலோசித்து விஷத்தையாவது சாப்பிடுவீர்களாக. இ
ல்லையாயின், ராமனையாவது பின்தொடர்ந்து நடக்க
வேண்டும். அதுவும் இல்லையாயின், உங்கள் பேரன்
கூடச் செவியில் படக்கூடாத தூரதேசத்திற்காவது
போக வேண்டும். 'பித்ருவசன பரிபாலனத்திற்காகவும்
கைகேயிக்கு ப்ரியஞ் செய்வதற்காகவும் ராமன் அர
ண்யத்திற்குச் சென்றானாயின், அதற்கு நாம் என் செ
ய்யக்கூடும்' என்கிறீர்களோ? அப்படி இல்லை. அர
சன் நபடம் வைத்துக்கொண்டு ராமனை ஸீதையோடும்
லக்ஷ்மணனோடும் அரண்யம் போகத் தூரத்தி விட்ட
னன். பசுக்களைக் கொலை செய்பவனிடம் ஒப்புவிப்பது
போல், நம்மையும் பாதனிடம் ஒப்புவித்தனன். மன்னவன்
இந்தக் கார்யத்தைச் செய்துவிட்டனன்; ஆயினும் நாம்
ராமனைப் பின்தொடர்ந்து செல்வோமாயின் ஸுகித்திருக்
கலாம்; லக்ஷ்மணனுக்குத் தமையனாகிய ராமன் பூர்ண
சந்த்ரன் போன்ற முகமுடையவன்; மேலும், நல்ல ஸ்வ
பாவமுடையவன்; மறைந்தழகிய தோளெலும்புகளையுடை
யவன்; பின்னும், பகைவரைப் பறந்தோடச் செய்ய வல்ல
வன்; முழந்தாள் வரையிலும் நீண்டழகிய பாஹுதண்

டங்களை யுடையவன்; தாமரை யிதழ் போன்ற கண்களு டையவன்; அவன் எவரேனுடாயினும் தானே முற்பட்டுப் பேசுந் தன்மையுடையவன்; யாவர்க்கும் இனியனு யிருப் பவன்; ஸத்யத்தையே மொழியும் ஸ்வபாவமுடையவன்; மிகுந்த பலம் அமைந்தவன்; அவன் ஸமஸ்த லோகங்களு க்கும் சந்த்ரன்போல் பார்க்கப் பதினயிரங் கண்கள் வே ண்டும்படி அழகிய காட்சியுடையவன். மத்தகஜம்போல் கர்வம் பிடித்த நடைமிடுக்குடைய அம் மஹாராதிகன், அப்புருஷஸிம்ஹன், ஸஞ்சாரஞ் செய்வதனல் அரண்யங் கள் முழுவதும் ப்ரகாசிக்கப் போகின்றன. இது நீஜம்' என்றனர். அந்தப் பட்டணத்து மடந்தையர் இங்ஙனம் புலம்பிப் பரிதபித்து மரணம் நேர்ந்தாற்போல் கூக்குரலி ட்டழுதனர். இவ்விதமாக அந்த ஸ்த்ரீகள் க்ருஹங்க ளில் ராமனைக் குறித்துப் புலம்பிக்கொண்டிருக்கும்பொ ழுதே ஸூர்யன் அஸ்தமித்தனன். அனந்தரம் ராத்ரியும் வந்துவிட்டது. அப்பொழுது ஹோமம் முதலியவற்றிற் காக வளர்த்தப்பட்ட அக்னிகள் ப்ரகாசிக்காமலே யிருந் தன. வேதாத்யயனங்களாவது புராணபடனங்களாவது நடக்கவில்லை. அந்தப் பட்டணம் முழுவதும் இருள்மூடப் பெற்றதுபோல் இருந்தது. மேலும், அப்பட்டணத்தில் வர்த்தகர்களும் கடைகளைப் பரப்பவில்லை. ஸந்தோஷ மென்கிற வார்த்தையே அங்கெங்கும் புலப்படவில்லை. திக் கே இல்லாதிருந்தது. ஆகையால் அவ்வயோத்யா நகரம் நக்ஷத்ரமில்லாத ஆகாயம்போல் புலப்பட்டது. ஸ்த்ரீகள் தமது புதல்வர்களாவது, தமதுடன்பிறந்தவர்களாவது அரண்யத்திற்குத் துரத்தப்படுவார்களாயின் எப்படி மன வருத்தமுறுவார்களோ, அப்படியே ராமனைக்குறித்து மிகுந்த மனவருத்தமுற்றுத் தீனர்களாகி மனத்திடங் தவறிப் பன்னிப்பன்னிப்புலம்பினர். ஏனென்னில்—ராமன்

அவர்களுக்குப் புதல்வர்களைக்காட்டிலும் உடன்பிறந்தவர்களைக்காட்டிலும் மேலாகவே இருந்தனன். அப்பொழுது அவ்வயோத்யாநகரத்தில் ஆட்டங்களும் பாட்டுக்களும் உத்ஸவங்களும் வாத்யகோஷங்களும் நின்றுபோயின. ஸந்தோஷம் அவ்விடம் விட்டு வெகுதூரம் கடந்து சென்றது. கடைகளும் ஸம்ருத்திகளைனறுமில்லாமல் மூடப்பட்டிருந்தன. ஆகையால் அந்தப்பட்டணம் ஜலம் வற்றிய மஹாஸமுத்ரம்போல் பாழாயிருந்தது. நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் அரண்யத்திற்குப் போய்க்கொண்டே வேதஸ்ருதி, கோமதியென்னும் நதிகளைத் தாண்டுதலும், ஸுமந்த்ரனோடு கலந்து ஸம்பாஷணஞ் செய்தலும்.

புருஷஸிம்ஹனாகிய ராமன் தந்தையின் ஆஜ்ஞையை ஸ்மரித்துக்கொண்டே பட்டணத்து ஜனங்களை நடுவழியில் துறந்து சென்று ராத்ரியின் மிகுதிமுழுமையும் ப்ரயாணஞ்செய்து பொழுது விடிவதற்குள்ளாக வெகுதூரம் போயினன். அவன் அங்ஙனம் போய்க்கொண்டிருக்கும் பொழுதே ராத்ரியும் சுபமாகக் கடந்து சென்றது. ராமன் மங்கலகரமாகிய விடியற்காலஸந்தியை உபாஸித்து உத்தர கோஸலதேசத்தின தக்ஷிணபாகத்தைச் சேர்ந்தனன். வழியிலுள்ள க்ராமங்களெல்லாவற்றிலும் விதைவிதைக்கும்பொருட்டு அவைகளைச்சுற்றி எல்லைக்கடைசி வரையிலுமுள்ள நிலங்கள் நன்கு உழப்பெற்றிருந்தன. வனங்கள் முழுமையும் புஷ்பித்திருந்தன. ராமன் அவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு பெரிய ஊர்களிலும் சிறிய பள்ளிப்பட்டுக்களிலும் வஸிக்கும் ஜனங்கள் மொழியும் வார்த்தைகளைச் செவியிற் படுத்திக்கொண்டே,

குதிரைகள் வேகமாக கடந்து சென்றபோதிலும் அவை களின் [1]கதிலாகவத்திறலும் ஆங்காங்குள்ள விசேஷங்க ளில் மனஞ்செலுத்திச் செல்வதிறலும் மெதுவாகப்போ வதுபோலவே வெகுதூரங் கடந்து சென்றனன். பெரிய ஊர்களிலும் சிறுச் சேரிகளிலும் வாஸஞ்செய்பவர் அந்த ராமனைக் கண்டு 'சீ! தசரதமஹாராஜன் எவ்வளவு மனு ஷ்யன்! கேவல காமத்திற்குட்பட்டு இங்ஙனஞ் செய்த னன். ஐயோ! அந்த க்ரூரஸ்வபாவை; அந்தக் கைகேயி, எவ்வளவு பாபிஷ்டையோ! இடைவிடாமல் பாபங்களையே செய்யுந்தன்மையள். இல்லாமலென்? ராமன் தர்மஸ்வபா வன். எல்லாவற்றிலும் மிகுந்த அறிவுடையவன். அவ னை தலைக்குப் பிறப்பிடம்; இந்த்ரியங்களையெல்லாந் தன்வழி செல்லாதபடி அடக்கிக்கொண்டிருப்பவன். அப் படிப்பட்ட புதல்வனை வனவாஸஞ்செய்யுமபடி ஊரைவிட் டுத் துரத்தினளே! அவள் க்ரூரஸ்வபாவமுடையவள் அல்லளோ? அவள் ஸ்த்ரீகளின மர்யாதையை அதிக்ரமி த்தவள்; மேலும், க்ரூரகார்யங்களிலேயே வர்த்திப்ப வள்; இப்படிப்பட்டவளல்லவாயின், மஹாபாக்யமுடை யவளும் எப்பொழுதும் ஸுகத்திலேயே மூழ்கிக்கிடப்பவ ளும் ஜனகராஜன் திருமகளுமாகிய ஸீதை துக்கத்தை எப்படி அனுபவிப்பாள்? ஐயோ! தசரதமஹாராஜன் ஸ்நேஹமே அறியாதவன். ஆனதுபற்றியே பாஷைகளு க்கெல்லாம் ப்ரியமுகி எந்தப் பாபத்தையும் செய்தலறி யாத தன குமாரனுகிய ராமனை இப்பொழுது கைவிடலா யினன்' என்று ஒருவர்க்கொருவர் சொலலிக்கொண்ட னர். மிகுந்த வீர்யமுடையவனும் கோஸலாதீச்வரனு மாகிய ராமன் அவர்கள் சொல்லும் வார்த்தையைச் செ வியிற் படுத்திக்கொண்டே கோஸலதேசங்களைத் தாண் டிச்சென்றனன். அனந்தரம் அவன் அழகிய ஜலப்ரவா

---

1 நடையின் விரைவு. அதாவது—விரைவாக நடத்தல.

ஹம்பொருந்திய வேதஸ்ருதியென்னும் நதியைத்தாண்டி அகஸ்த்யமஹர்ஷியின் வாஸஸ்தானமாகிய தென்திசை முகமாகச் சென்றனன். ராமன் வெகுதூரம் ப்ரயாணமாய்ச் சென்று பிறகு கோமதியென்னும் நதியைத் தாண்டினன். அந்நதி குளிர்ந்தழகிய ஜலமுள்ளது. அதன் ஜலக் கரைகளில் பசுக்கள் மந்தை மந்தையாக மேய்ந்துகொண்டிருக்கும். அந்நதி கங்கைமூலமாக ஸமுத்ரத்தில் போய் விழுந்தன்மையுள்ளது. ராமன், குதிரைகள் வேகமாகப் போவதுபற்றிக் கோமதியையும் தாண்டி மயில்களும் ஹம்ஸங்களும் நாற்புறங்களிலும் கூவப்பெற்று அழகியதாகிய ஸ்யந்திகையென்னும் நதியையுங்கடந்து சென்றனன். முன்பு மனு இக்ஷ்வாகுவுக்குக் கொடுத்ததும் மிகுந்த பரப்புள்ளதும் அவாகதர தேசங்களோடு கூடியதுமாகிய [1] கோஸலதேசங்களை ராமன் ஸீதைக்குக்காண்பித்தனன். புருஷாகளிற் சிறந்தவனும் மிகுந்த சோபையைபொருந்தியவனுமாகிய அந்த ராகவன் மதித்த ஹம்ஸத்தின் கண்டத்வனிபோன்ற கண்டஸ்வரத்துடன் 'ஸுமந்த்ர' என்று ஸாரதியை அழைத்து, 'இனி எப்பொழுதுகான் திரும்பி வந்து என் தாயோடும் தகப்பனோடுங் கூடிப் புஷ்பித்திருக்கின்ற ஸரயூநதிக்கரையிலுள்ள வனங்களில் வேட்டையாடி விளையாடப்போகிறேன்? 'வேட்டை சிஷ்டாசாரம் அன்று' என்பாயோ? வனத்தில் வே

---

1 'இக்ஷ்வாகூணாமியம் பூமிர்ஸ்மின் ஸைலவநகாநநா' என்று பூமி முழுவதும் இக்ஷ்வாகுவம்சத்தரசர்களுடையதாகவே இருக்கக் கோஸலதேசத்தை இக்ஷ்வாகுவினுடையதாகச் சொல்லுகை எப்படி? என்னில்—இது அவனுடைய ஜன்மபூமியாகச் சொல்லப்பட்டது. மற்றைத் தேசங்களிலுள்ளவர்கள் யாவரும் அவனுக்குக் கப்பங்கட்டுகிறவர்களெனத் தெரியவருகின்றது. ஆகையால் 'இக்ஷ்வாகூணாமியம் பூமிஃ' என்கிறதற்கு விரோதமில்லையென்று கண்டுகொள்வது.

ட்டையாடுதல் பரலோக ஸுகத்தை விளைவிக்காதாயி னும், இவ்வரசர்களுக்கு இவ்வுலகத்தில் மனக்களிப்பின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதன்றோ? மேலும் ஸதாசாரபரர்களாகிய மனிதர்கள் ப்ரார்த்தாதி காலங்க ளில் மாம்ஸத்திற்காக வேட்டையை அபேக்ஷிக்கின்றார்க ளல்லவா? வில்லாளிகளும் சலிக்கின்ற லக்ஷ்யங்களைக் குறி தவறுமல் அடிக்கத் தெரிந்துகொள்ளும் பொருட்டு இதை ஆசைப்படுகின்றனர். ஆயினும், நான் இதை அதி கமாக விரும்புவதில்லை. ஸரயூவனத்தில் கொஞ்சமாகவே வேட்டையாட விரும்புகின்றனன். நிரந்தரமாக அதைச் செய்தால் தோஷமேயன்றிக் கொஞ்சமாகச் செய்தால் அது தோஷம் ஆகமாட்டாது. இப்படி கொஞ்சமாகவே தகுந்த காலங்களில் செய்யும்படியான வேட்டை ராஜர்ஷி கள் பலர்க்கும் ஸம்மதமல்லவா? அவர்களுக்கு இத் தோடொத்த விநோத க்ரீடை மற்றொன்றும் இல்லை' என்று மொழிந்தனன். இங்ஙனம் ராமன் அந்தந்த வி ஷயங்களைக் குறித்து ஸுதனுடன் இனிய உரைகளை ஸம்பாஷித்துக்கொண்டே மார்க்கத்தைக் கடந்து சென் றனன். நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் கோஸலதேசத்தைக் கடந்து கங்காதீரத்திற்குச் சேருதல்.

புத்திஸம்பன்னரகிய அந்த லக்ஷ்மணனுக்குத் த மையனை ராமன் மிகுந்த பரப்புள்ளதும் மிகவும் அழகுள் ளதுமாகிய கோஸலதேசத்தையெல்லாம் சீக்ரத்தில் கட க்து சென்று[1] அயோத்யைமுகமாகத் திரும்பிக் கைகளைக்

---

1 ராமன், தான் ஆரம்பித்த வனவாஸவ்ரதம் நிர்விக்னமாக நிறைவேறும்பொருட்டு, சிஷ்டர்கள் செய்யும்ஆசாரத்தின்படி நகரே தவதைக்குப் புறப்படும்பொழுது செய்யவேண்டிய நமஸ்காரத்தை

குவித்துக் ககுத்ஸ்த வம்சத்தரசர்களால் பரிபாலிக்கப் படும் பட்டணப்ரேஷ்டமாகிய அயோத்தியையே! உன்னிடம் அனுமதி பெற்றுக்கொள்கின்றனன். மேலும், உன்னிடத்தில் எவர் வாஸஞ் செய்கின்றார்களோ, உன்னை யாவர் பரிபாலித்து வருகின்றார்களோ, அந்தத் தேவதைகளையுங் கூட அனுமதிகொடுக்கும்படி வேண்டுகின்றனன். நான் வனவாஸம் பதிநான்கு ஸம்வத்ஸரங்கள் கடத்தி ராஜாவாகிய என் தந்தையின் ருணத்தைத் தீர்த்துக்கொண்டு, என் தாயோடுந் தந்தையோடுங்கூடித் திரும்பியும் உன்னைப் பார்க்கின்றேன' என்று ப்ரார்த்தித்தனன். பிறகு ராகவன் கண்களிரண்டும் ரக்தத்தை உள்ளி வைத்தாற்போல் சிவக்கப் பெற்றவனாகித் தன்னைப் பார்க்க வந்த பள்ளிப்பட்டு ஜனங்களை ரதவேகத்திலில் மிகவுங் கடந்து வருவதுபற்றி அவர்கள் தனக்கு தூரஸ்தர்களாகையால் கூப்பிட்டுச் சொல்வதற்காக வலக்கையை உயர எடுத்துக்கொண்டு, அவர்கள் கண்ணீர் தளும்பப் பெற்றிருப்பதைக் கண்டு தானும் முகம் முழுவதும் கண்ணீர் வழியப்பெற்றுத் தினகி அவர்களை நோக்கி 'நீங்கள் என்னிடத்தில், நான் ப்ரபுவாயிருப்பதற்குத் தகுந்தபடியாகவே ஆதரத்தையும் தயையையும் காட்டினீர்கள். என்னைப் பார்த்துக்கொண்டிருப்பதனல் உங்களுக்கு மேன்மேலும் மனவருத்தம் பெருகி வந்துகொண்டேயிருக்கும். வெகுதூரம் மனவருத்தப்படுவது நல்லதன்று. ஆகையால் உங்கள் க்ருஹகார்யங்களை நடத்தப் போவீர்களாக' என்றனன். அந்த நாட்டு ஜனங்களும் அம்ம

அப்பொழுது கார்யஸங்கடத்தில் செய்ய முடியாமையால் இப்பொழுது கோஸலதேசத்தின் எல்லையிற் சேர்ந்து நின்று அந்த நகரதேவதைக்கு நமஸ்காரஞ் செய்து அனுமதியை வேண்டிக் கொள்கிறனென்று தெரிகின்றது.

ஹானுபாவனுக்கு ப்ரதக்ஷிணமாக வந்து நமஸ்காரஞ்செய்து பயங்காமாகக் கதறி மேன்மேலும் ராமனைப்பார்க்கவேண்டுமென்கிற விருப்பத்தினல் வேகமாக நடந்துபோகமுடியாமல் ஆங்காங்கு நின்று நின்று ராமனைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றனர். அவர்கள் ராமனை எவ்வளவு பார்த்தபோதிலும் த்ருப்தி உண்டாகப்பெறுமல் அங்ஙனம் புலம்பிக்கொண்டிருக்கையிற்றானே, ராத்ரி வருகையில் சூர்யன் அஸ்தமித்துப் போவதுபோல் ராமன் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாதபடி மறைந்து வெகுதூரம் போயினன். இங்ஙனம் கோஸலதேசங்களின் இடைவழியாகவே அத்தேசங்களைத் தாண்டிச் சென்றனன். அந்தக் கோஸலதேசங்களிலுள்ள க்ராமங்களெல்லாம் தனதான்ய ஸம்ருத்தியுடன் விளங்கலுற்றிருந்தன. அந்த ஸம்ருத்திக்குத் தகுந்தபடி அங்குள்ள ஜனங்களும் தானதர்மஸ்வபாவர்களாயிருந்தார்கள். அக் கோஸலதேசம் முழுவதும் ஒருவிதத்திலும் பயமின்றி ஸுரக்ஷிதமாகி ரமணீயமாயிருக்கும். அத்தேசங்களில் தேவாலயங்களும் யாகபசுக்கள் கட்டுகிற யூபஸ்தம்பங்களும் நாற்புறங்களிலும் புலப்பட்டுக்கொண்டிருக்கும். மேலும், அதில் அழகிய உத்யானங்களும் மாந தோப்புகளும் உண்டு. கிணறு குளம் ஏரி மடு ஓடை ஆறு முதலியன தண்ணீர் நிரம்பப்பெற்றிருக்கும். ஜனங்களும் ஸந்தோஷம் மிகுந்திருக்கப்பெற்றுப் புஷ்டியுடன்கூடி நிறைந்திருப்பார்கள். எங்குப் பார்த்தபோதிலும் பசுக்கூட்டங்களே புலப்பட்டுக்கொண்டிருக்கும். அத்தேசங்களிலுள்ள க்ராமங்களும் நகரங்களைப்போல் மிகவும் அழகாகி அரசர்களும் ஆசையுடன் பார்க்கத்தக்கவைகளாயிருக்கும். அங்கெப்பொழுதும் வேதபாராயணத்வனி ஓயாமல் செவிப்பட்டுக்கொண்டிருக்கும். இப்படிப்பட்ட கோ

ஸலதேசக்ராமங்களைப் புருஷஸ்ரேஷ்டனாகிய ராமன் ரதத்தில் ஏறிக்கொண்டே தாண்டிச் சென்றனன். ராமன், இங்ஙனம் ஸகலஸம்ருத்தியோடுங்கூடி மனக்களிப்புற்றுச் செழித்து அழகிய உத்யானங்களும் அடர்ந்திருக்கப் பெற்று அரசர்களும் அனுபவிக்க ஆசைப்படும்படி விளங்குகின்ற கோஸலராஜ்யத்தின் மத்யமார்க்கத்தைப்பிடித்து, அங்குள்ள அழகிய விசேஷங்கள் புலப்படினும், தீர்க்கனில் தலைவணைகையால் அவைகளில் மனத்தைச் செலுத்தாமலே போயினன். அனந்தரம் அக் கோஸலதேசங்களின் தென்பாகத்தில், பாசியில்லாமையால் தெளிந்து குளிர்ச்சியுமுடைய ஜலப்ரவாஹத்துடனகூடி மிகவும் அழகாகப் புலப்படுவதும் பரிசுத்தியுடையது மாகையால் ரிஷிஜனங்களால் மிகவும் ஆதரிக்கத்தக்கதும் ஸ்வர்க்க பாதாலபூமிகளாகிற மூன்று லோகங்களிலும் ஸஞ்சரிப்பதுமாகிய கங்காநதியை ராமன் கண்டனன். அக்கங்கா நதியின் பார்ஸ்வத்தில் தர்மம பொருந்திய ஆஸ்ரமங்கள் பலவும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும. விளையாடவேண்டுங் காலங்களில் அப்ஸரஸ்திரீகள் வந்து அக்கங்கையைச்சார்ந்த ஓடைகளின் ஜலங்களில் ஜலக்ரீடை செய்துகொண்டிருப்பார்கள். அது, விநோதத்தின்பொருட்டு வந்து விளையாடினபோதிலும் சுபத்தைக் கொடுக்கவற்றாகவே யிருக்கும். தேவதானவர்களும் கந்தர்வர்களும் கின்னரர்களும் அங்கு ஸஞ்சரித்துக் களித்திருப்பார்கள். பலவகையினராகிய கந்தர்வபத்னிகளும் எப்பொழுதும் அவ்விடம்வந்து ஜலக்ரீடை செய்துகொண்டிருப்பார்கள். எவ்வகையர் வந்து ஜலக்ரீடை செய்யினும், அது ஜலங்கலங்கப்பெறாமல் சுபகரமாகவேயிருக்கும். தேவதைகளுக்குரிய க்ரீடாபர்வதங்கள் நாறுநாறாக அங்கு நிறைந்திருக்கும். தேவதைகள் வந்து விளையாடத்தகுந்த லீலோத்

யானங்களும் பற்பல பதிணயிரங்கணக்கில் அங்கு ப்ரகாசித்துக்கொண்டிருக்கும். அது தேவதைகளைப் பூஜிப்பதற்காக ஆகாயத்திலும் ப்ரவாஹங்கொண்டு ஆகாசகங்கையென்று பேர் பெற்றிருக்கும். பின்னும் அது தேவர்களுக்குரிய ஸ்வர்ணதாமரஸ புஷ்பங்களோடுகூடி உலகமெங்கும் புகழ்பெற்றிருக்கும். அங்குச் சிற்சில விடங்களில் கற்களின்மேல் ஜலப்ரவாஹங்கள் வந்து சடேலென்று விழுவதனாலுண்டாகும் ஜல கோஷங்களாலும் வெளுத்த நுரைகளாலும் அட்டஹாஸஞ் செய்வதுபோல் பயங்கரமாகப் புலப்பட்டுக்கொண்டிருக்கும். சிலவிடங்களில் வெளுத்த நுரைகள்மாத்ர முண்டாகப்பெற்றுச் சிரிப்பதுபோல் தோற்றும். மற்றோரிடத்தில் மேகளினின்றும் பள்ளங்களில் விழுவதனால் அதன் ப்ரவாஹம் தலைப்பின்னல்போல் விளங்கும். மற்றுஞ் சிலவிடங்களில் நீர்ச்சுழிகள் பலவும் உண்டாகப்பெற்று அழகாய் விளங்கும். மற்றையோரிடத்தில் ஜலப்ரவாஹஞ் செல்வதுந் தோற்றுமல் கம்பீரமாகப் புலப்பட்டுக்கொண்டிருக்கும். பற்பல விடங்களில் ஜலங்கள் அதிவேகமாகப் பொருகிக்கொண்டிருக்கும். இன்னுஞ் சிலவிடங்களில் அழகிய மத்தலங்கள்போல் கம்பீரமாக ஒலித்துக்கொண்டிருக்கும். சில விடங்களில் பயங்கரமாகச் சப்தித்துக்கொண்டிருக்கும். தேவதைகள் அதன் ஜலப்ரவாஹங்களில் ஸ்னானஞ்செய்துகொண்டிருப்பர். அங்கு அழகிய கருநெய்தற்புஷ்பங்கள் நிரம்பியிருக்கும். சிலவிடங்களில் அகன்ற மணற்குன்றுகள் அமையப்பெற்றிருக்கும். மற்றுஞ் சிலவிடங்கள் பளபளவென்று விளங்குகின்ற மணற்குன்றுகளோடுகூடியிருக்கும். பின்னும் அதன் ப்ரவாஹங்களில் ஹம்ஸங்களும் ஸாரஸப் பறவைகளும் அழகாய் ஒலித்துக்கொண்டிருக்கும். சக்ரவாகங்களும் கலகலவென்று குலா

விக்கொண்டிருக்கும். மேலும், இடையிடையில் எப்பொழுதும் மதித்திருக்கிற இதரபக்ஷிகளும் அழகாய்க் கூவிக்கொண்டிருக்கும். அந்த கரையோரங்களில் வ்ருக்ஷங்கள் வரிசையாக முளைத்திருபபதனல் பூமாலை சூட்டியிருப்பதுபோல் புலப்பட்டுக்கொண்டிருக்கும். சிலவிடங்களில் ஜலப்ரவாஹமெனபதே தோற்றுமல் இடைவிடாமல் கருகெய்தல்கள் நிரம்பப் பூத்திருக்கும். சிலவிடங்களில் தாமரைக் காடுகள் நிரம்பப்பெற்று மிகவும் அழகாகி விளங்கும். சிலவிடங்களில் ஆம்பலபூகளும் மற்றுஞ் செங்கழுநீர் முதலியவற்றின் மொக்குகளும் நிறைந்து அழகாயிருக்கும். பலவகைப் புஷ்பங்களின [1]பராகங்கள் பரவப் பெற்றிருப்பதனல் அது வர்ணம் மாறிச் சிவப்பு மேலெழப்பெற்று மத்யபானத்திலல் சரீரம் முழுவதும் சிவக்கப் பெற்றாற்போல் புலப்பட்டுக் கொண்டிருக்கும். அழுக்கெனபது சிறிதும் இலலாமையால அது வைடூர்ய ரத்னம்போல் நிர்மலமாய் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும். அதன் கரையி லுள்ள வனாந்தரங்களில திக்கஜங்களும் வனகஜங்களும் ராஜகஜங்களும் தேவகஜங்களும் மதித்துக் கீங்காரஞ் செய்யப் பெற்றிருக்கும் மேலும், அது தளிர்களும் புஷ்பங்களும் பழங்களும காய்களும் நிறைந்திருப்பதனல் ப்ரயத்னத்துடன் ஆபரணங்களால் அலங்காரஞ் செய்துகொண்ட ஓர் அழகிய மடந்தைபோல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும். மேலும், அதில் சிறுபுதர்களும் பக்ஷிகளும் நிரம்பி யிருக்கும். அதில் சிறிய முதலைகளும் நீர்க்குரங்குகளும் யானைகளைப் பிடித்து ஹிம்ஸிக்க வல்ல பெரிய முதலைகளும் நீர் நாகங்களும் வாஸஞ் செய்துகொண்டிருக்கும். அது ஸ்ரீவிஷ்ணுபாதாரவிந்தத்தினின்றும் பெருகின மஹாநதி யாகையால் திவ்ய ஸ்வரூபமுடையதாகித் தான் பாபங்களற்றுத் தன்னை

---

1. தூள.

அடைந்தவர்களது பாபங்களைத் தொலைக்கவல்லதுமாகிப் பகீரதனுடைய தவமஹிமையால் சிவனது ஜடாமண்டல வழியாகப் பூமியில் வந்து விழுந்து க்ரௌஞ்சம் முதலிய பறவைகளின் த்வனிகள் விளங்கப் பெற்று ஸமுத்ராஜனுக்குப் பார்யையாகி ப்ரகாசித்துக் கொண்டிருக்கும். ராமன் ப்ருங்கிபேரபுரத்திற்குப் போய் அவ்வழியாகவே அதற்கு ஸமீபத்திலிருக்கிற அந்தக் கங்காநதிக்குப் போய்ச் சேர்ந்தனன். அந்த மஹாநதன் அலைகளுடன் கூடிய சுழிகளால் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற அக் கங்கையைக் கண்டு ஸாரதியாகிய ஸுமந்த்ரனுடன் 'நாம் இப்பொழுது இங்கேயே வஸித்திருப்போம். இந்நதியின் அருகில் புஷ்பங்களும் தளிர்களும் நிரம்பப் பெற்றுப் பெரியதுமாகிய ஓர் இங்குணமரம் இருக்கின்றது. ஆகையால், ஸாரதியே! இங்கேயே இன்று இருந்துவிடலாம். தேவதானவ கந்தர்வர்களும் மனுஷ்யர்களும் ம்ருகங்களும் பக்ஷிகளும் இந்நதியின் ஜலத்தை மிகவும் கௌரவித்துப் போருகின்றனர். மேலும், இந்நதி மங்கலகரமாயிருப்பது. ஆகையால் நதிகளிற் சிறந்த இந்நதியைப் பார்ப்போம்' என்றனன். லக்ஷ்மணனும் ஸுமந்த்ரனும் ராமனைப் பார்த்து 'அப்படியே ஆகட்டும்' என்று மொழிந்து, குதிரைகளை ஓட்டி ரதத்தை அவ்விங்குணமரத்தின் அருகிற் கொண்டுவந்து சேர்த்தனர். இக்ஷ்வாகுவம்சத்தரசர்களுக்கு மஹாநந்தத்தைக் கொடுக்குந் தனமையுள்ளவனாகிய அந்த ராமன் அழகிய அம்மரத்தின் அடியிற் சென்றவுடனே பார்யையும் லக்ஷ்மணனும் தானுமாகக் கீழே இழிந்தனன். ஸுமந்த்ர ரதத்தினின்றும் இழிந்து உத்தமங்களாகிய அந்தக் குதிரைகளை அவிழ்த்துவிட்டு மரத்தின் கீழ் இருக்கிற ஸ்ரீராமபிரானிடம் சென்று கைகளைக் குவித்துக்கொண்டு நின்றிருந்தனன். அத்தேசத்

தில் குஹனென்னும் ஒருவன் அரசாண்டு வந்தனன். அவன் வேடர் ஜாதியில் பிறந்தவன்; வேடர்களில் மேன்மைபெற்றிருப்பவன்; மிகுந்த பலமுடையவன்; ராமனுக்கு ப்ராணன்களைப் போல் ப்ரியமாயிருக்கும் ஸ்னேஹிதன். அவன், புருஷர்களிற் சிறந்தவனாகிய ராமன் தன் தேசத்திற்கு வந்திருப்பதைக் கேட்டுக் குலவ்ருத்தர்களாகிய மந்த்ரிகளையும் பந்துக்களையும் அழைத்துக்கொண்டு ராமனிடம் வந்தனன். பிறகு அந்த வேடர்தலைவன் தூரத்தில் வருவதுகண்டு, ராமன் லக்ஷ்மணனுடன் கூடி அந்தக் குஹனை எதிர்கொண்டு சென்று அக்குஹனுடன் [1]ஸந்தித்தனன். அந்தக் குஹனும் மரவுரிகளை உடுத்துக்கொண்டிருக்கிற அந்த ராமனைக்கண்டு [2]மனவருத்தமுற்றவனாகி ஆலிங்கனஞ் செய்துகொண்டு 'ராமா! அயோத்தியை எப்படியோ, அப்படியே எனது பட்டணமும்

---

1 'ஹீநப்ரேஷ்யம் ஹீநஸேவம் ஹீநகோத்ர நிஷேவணம்' என்று ஹீனரோடு ஸ்னேஹஞ் செய்தல் உபபாதகங்களில் ஒன்றாகச் சொலலப்பட்டிருக்கையில் மஹாகுல ப்ரஸூதனாகிய ராமனுக்கு அது எப்படி கூடுமென்னில்—'நஷூத்ரா ஜுஹவுர்லக்தா விப்ரா ஜாஹவதாஸ்ஸ்மிருதாஃ, ஸர்வவர்ணேஷு தே ஷூத்ரா யேஹயஜ்ஞக்தா ஜநார்தநே' (பகவானிடத்தில அகபடமான பகதியுடையவர்கள் சூத்ரஜாதியில் பிறந்தார்களாயினும் சூத்ராகளாகமாட்டார்கள. பகவத்பக்தியுடையவர்களை பராஹ்மணர்களென்றே கொள்ளவேண்டும். யாவா பகவானிடத்தில் பக்தியின்றி யிருப்பாகளோ, அவர்கள் எப்படிப்பட்ட உயர்ந்த வர்ணத்தில் பிறந்தார்களாயினும், அவர்களைச் சூத்ராகளென்றே கொள்ளவேண்டும்) என்கிறபடியே குஹன் ராமபக்தனாகையால் அவன் உத்தமனேயன்றி ஹீனனாகமாட்டானென்று தெரியவருகின்றது.

2 இதனால் ராமனுக்கு வேட்டை முதலிய வ்யாபாரங்களின் மூலமாகக் குஹனோடு ஸ்னேஹம் முன்பே உண்டாயிருந்ததென்று தெரியவருகின்றது.

உனக்கு ஸொந்தமே. உனக்கு நான் எந்தக்கார்யம் செய்யவேண்டும்? சொல்வாய். மஹாபாஹுவே! ப்ரிய ணுகிய இப்படிப்பட்ட அதிதி எவனுக்கு கேரிடுவான்? நீ இவ்விடம் வந்தது நான் செய்த பூர்வபுண்யங்களின் பல மேயன்றி வேறன்று' என்று மொழிந்து, உடனே மேலா ன பலவித ஆஹாரங்களைக் கொண்டுவந்து சீக்ரமாக அர் க்யத்தையும் வரவழைத்து ராமனைப் பார்த்து 'மஹாபா ஹுவே! உனக்கு நல்வரவு. இந்த எனது அரண்யபூமியெ ல்லாம் உன்னுடையதே. நாங்களெல்லோரும் உனது பரி சாரகர்களே. நீ எங்களுக்கு ப்ரபு. இனி எங்கள் ராஜ்யத் தை நீ உன்னிஷ்டப்படி நன்கு பரிபாலித்துக்கொள்வா யாக. இதோ அப்பம் முதலிய பக்ஷணங்களும் போஜ்யங் களாகிய அன்னங்களும் பானகம் முதலிய ப்ரியபதார்த் தங்களும் ரஸாயனம் முதலிய லேஹ்யத்ரவ்யங்களும் ஸித் தமாயிருக்கின்றன. இவைகளை அமுதுசெய்வாயாக. உய ர்ந்த படுக்கைகள் இதோ இருக்கின்றன. மேலும், உன் குதிரைகளுக்குப் புல் முதலியனவும். இதோ ஆயத்தமா யிருக்கின்றன' என்றனன். இவ்வாறு குஹன சொல்லிக் கொண்டிருக்கையில் ராமன் அவனைப் பார்த்து 'நீ அடி யிட்டு நடந்து எம்மை எதிர்கொண்டனை 'என் ராஜ்ய த்தை அங்கீகரிப்பாயாக' என்று என்னிடத்தில் ஸ்னே ஹத்தையுங் காட்டினை. இவ்வளவிலேயே எனக்கு ஸம ஸ்தவித பூஜைகளும் செய்யப்பட்டன. எனக்கு மிகவும் ஸ ந்தோஷமாயிருக்கின்றது' என்றுரைத்து, லக்ஷணங்களு க்கு ஒத்தபடி நன்கு பருத் தழகிய புஜங்களால் அவனைக் கெட்டியாகக் கட்டி அணைத்து 'குஹனே! அத்ருஷ்டவச த்தினால் நீ உன் பந்துக்களோடு சேர்ந்து ரோகங்கள் ஒன்றுமின்றி ஸுகமாயிருக்க நான் காணப்பெற்றனன். உன் ராஜ்யம் உபத்ரவமொன்றும் இல்லாமல் க்ஷேமமாயிருக்கின்றதா?

ஸ்னேஹிதர்கள் குசலமா? உன்னுடைய தனங்கள் பாழா காமல் நான்தோறும் வளர்த்து வருகின்றனவா? நீ என் னிடத்திலுள்ள ப்ரீதியால் எனக்காக ஏதேது ஸித்தப்ப டுத்திக்கொண்டு வந்தனையோ, அவை யெல்லாவற்றையும் எனக்கு எல்லாம் செவ்வையாகச் செய்தாயென்று ஒப்புக் கொண்டு உனக்கே திருப்பிக் கொடுக்கின்றனன். ஏனென்னில்—நான் இப்பொழுது [1]பரதிக்ரஹத்தைத் துறந்திருக்கின்றனன். இதற்கும் காரணஞ் சொல்லுகிறேன் கேட்பாயாக. நான் பித்ருவாக்யபரிபாலனமென்னுந தர்மத்தில் மனவூக்கங் கொண்டிருப்பவனாகையால் தந்தை யின் ஆஜ்ஞைப்படி தர்ப்பங்களையும் மரவுரிகளையும் உடுத்துப் பழங்களைச் சாப்பிட்டு அரண்யங்களில் ஸஞ்சாரஞ் செய்து தவம் நடத்திக்கொண்டிருப்பவனென்று தெரிந்துகொள்வாயாக. குதிரைகளுக்குப் புல் ஒன்று மாத்ரமே இப்பொழுது நான விரும்புகின்றனன். மற்றொன் றும் எனக்கு வேண்டியதில்லை. இவ்வளவு மாத்ரஞ் செய் தாயாயின, இவ்வளவிலேயே நீ என்னை நன்கு பூஜித்த வனவாய். இந்தக் குதிரைகள் என தந்தையாகிய தசரத மஹாராஜருக்கு மிகவும் ப்ரியமா யிருப்பவை. இவைகளை நன்கு போஷிப்பாயாயின், அது என்னைப் பூஜித்ததே ஆகும். மற்றை யெவ்விதத்திலும் நீ என்னைப் பூஜிக்க வேண்டிய அவச்யம் இல்லை' என்றனன.

பிறகு அந்தக் குஹன் அப்பொழுதே தன் மனுஷ்யர் களை வரவழைத்து, பால் ஜலம் முதலியவற்றைக் குடிக்கச் செய்து புல் போடும்படிக்கு ஆஜ்ஞாபித்தனன். பிறகு ராமன் மரவுரியைத் தானே உத்தரீயமாகப் பொகட்டுக்கொண்டு ஸாயங்கால ஸந்தியை உபாஸனஞ் செய்து, லக்ஷ்மணன் தானுகவே சென்று கொண்டுவந்த கங்காஜலத்தையே ஆஹாரமாக உட்கொண்டனன். ராமன் கைகால்களை

---

1 வாங்கிக்கொளளுதல.

அலம்பிக்கொண்டு ஆசமனீயமுஞ் செய்து பார்யையுடன் கூடத் தரையிற்றூனே படித்துக் கொள்கையில், லக்ஷ்மணன் அவ்விடம் விட்டு வெளியே வந்து குஹனிருக்கிற அவ்விங்குணமரத்தினருகில் வந்து சேர்ந்தனன். குஹன் ஸுதனுந் தானுமாக ராமகுணங்களை ப்ரஸ்தாவித்து லக்ஷ்மணனிடஞ் சொல்லிக்கொண்டே வில்லைக் கையில் பிடித்துப் பாகக்கின்றி ராமனைப் பாதுகாக்கும்பொருட்டு ராத்ரிமுழுவதும் கண்விழித்துக்கொண்டே இருந்தனன். பிறகு மிகுந்த புகழ் பொருந்தியவனும் சிறந்த மதியுடையவனும் மஹானுபாவனுமாகிய ராமன் என்றும் துயரங்களை அறியாமல் ஸுகங்களை அனுபவிப்பதற்கே தகுந்த ஸுகுமாரனையிருப்பதுபற்றி அங்ஙனம் தரையின்மேல் படுத்திருப்பதனால் ஸுகமாக நித்ரை கோரப்பெறுமல் வருந்துகின்ற அந்த ராஜகுமாரனுக்கு அன்றிரவு வெகுகாலம் வளர்ந்திருந்தது கடந்தாற்போலாயிற்று. ஜம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

குஹ லக்ஷ்மணர்களின் ஸம்பாஷணம்.

லக்ஷ்மணன் தனது அண்ணனைக் காக்கும்பொருட்டு மனப்பூர்வமாகவே விழித்துக்கொண்டிருப்பதுகண்டு குஹன் மிகுந்த மனவருத்தத்துடன் அவனைப் பார்த்து 'அப்பா! நீ ராஜகுமாரன; இங்ஙனம் கண்விழித்திருக்கலாகாது. இதோ ஸுகமாக உனக்குப் படுக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதன்மேல் ஸுகமாகப் படுத்துக்கொண்டு நன்கு ப்ரமங்களைத் தீர்த்துக்கொள்வாயாக. இதோ உள்ள நாங்கள் எல்லோரும் அரண்யத்தில் வஸிப்பவர்களாகையால் கஷ்டங்களை அனுபவிக்க உரியவர்களா யிருக்கின்றனம். நீயோ அப்படி அன்று. ஸுகுமாரனாகையால் ஸுகத்திற்கே தகுந்தவன். ககுத்

ஸ்த வம்சத்திற் பிறந்த மஹாநுபாவனே! லக்ஷ்மண! ராமனைக் காக்கும்பொருட்டு நாங்கள் ராத்ரி முழுவதும் விழித்துக்கொண்டிருக்கின்றனம். நீ படித்துக்கொண்டு நித்ரைபோவாயாக. இப்படி நான் ஏன் சொல்லுகிறேனென்னில் — ராமனைக்காட்டிலும் ப்ரியனு யிருப்பவன் இப் பூலோகத்தில் எனக்கு யாவனும் இல்லை. இதை நான் ஸத்யமாகச் சொல்லுகின்றனன். இப்படியன்று நான் ஸத்யத்தின்மேல் ஆணையிட்டுக் கூறுகின்றனன். நான், ராமனுடைய அனுக்ரஹம ஒன்றைக்கொண்டே இவ்வுலகத்தில் மிகுந்த கீர்த்தியையும் விஸ்தாரமான தர்மத்தையும் அர்த்தத்தையும் பெற விரும்புகின்றனன். நான் இப்படி ராமனது அனுக்ரஹத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவனாகையால் எனது அருமைத் தோழனாகிய ராமன் ஸீதையுடன கூடிப் படுத்துக்கொண்டிருக்கையில் நான் என் பந்துக்களோடு கூடி வில்லைத் தரித்து எல்லாத் திசைகளிலும் அவனைப் பாதுகாத்து வருவேன். நான் எப்பொழுதும் இவனைத்திலேயே திரியுமவனாகையால் இதில் எனக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. ஆகையால் எவனுவது விரோதி இதில் வருவானுயின் எனக்குத் தெரியாதிருக்க முடியாது. மேலும், இங்குள்ள பயஸ்தானங்களெல்லாம் எனக்குத் தெரிந்தவையேயாகையால் சதுரங்க ஸைன்யங்கள் மேன்மேலென விஸ்தரித்து வந்தாலும், நாங்கள் பொறுக்க வல்லோம்' என்று மொழிந்தனன். பிறகு லக்ஷ்மணன் குஹனைப்பார்த்து 'பாபமற்றவனே! நீ தர்மத்திலேயே கண்ணைவைத்திருப்பவன்; இப்படிப்பட்ட நீ ரக்ஷித்துக்கொண்டிருக்கையில், எங்களுக்குள் ஒருவர்க்கும் இவ்விடத்தில் எள்ளளவும் பயம் இல்லை. 'பயமில்லையென்று தூங்காதிருப்பதேன்' என்பாயோ, தசரதமஹாராஜாது வயிற்றில் பிற

ந்த இவன் ஸீதையோடு இங்ஙனம் தரையின்மேல் படுத் துக்கொண்டிருக்கையில், எனக்கு எப்படி நித்ரை நேரக் கூடும்? மேலும், இந்த ப்ராணன்கள் தாம் நற்கிடையாக எங்ஙனே நிற்கும்? இனி ஸுகம் எப்படி உண்டாகும்? தேவாஸுரர்கள் எல்லோரும் ஒன்றுகூடி வரினும் எவ னுடன் யுத்தத்தில் எதிரிட்டுச் சண்டைசெய்ய முடியா தோ, அப்படிப்பட்ட மஹாபராக்ரமசாலியாகிய ராமன் ஸீதையுடன்கூடிப் புற்படுக்கையில் ஸுகமாகப் படுத்திரு க்கின்றனன்' பாராய். தசரதன் பல மந்த்ரஜபங்களைச் செய்தும் பலவகைத் தவங்கள் புரிந்தும் அனேக யாகங் களை நடத்தியும் பற்பல பரிஸ்ரமங்கள் பட்டு யாதொரு புதல்வனைப் பெற்றானே, மேலும், யாதொருவன் தச ரதனை நிகர்த்த லக்ஷணங்கள் பொருந்தி ப்ரியனுகிய புத்ர ரத்னமாயிருப்பானே, அப்படிப்பட்ட இந்த ராமன் அர ண்யத்திற்குப் போகையில், அம்மன்னவர் இனி வெகுகா லம் ப்ராணன்களோடிருக்கமாட்டார். இனி இந்தப் பூமியும் சீக்ரத்திலேயே விதவையாகப் போகின்றது. இது நிஜம். ராஜக்ருஹத்திலுள்ள ஸ்த்ரீகள் பெருங் கோஷத்துடன் கதறிக்கதறி அலைந்து ஓய்ந்து வெறுமை னே இருந்துவிடுவார்கள். ஆகையால் அந்த க்ருஹம் முழுவதும் கோஷந் தீரப்பெற்று நிஸ்ஸப்தமா யிருக்கு மென்று நினைக்கின்றனன். கௌஸல்யையும் மன்னவரும் னன்தாயாகிய ஸுமித்ரையும் பிழைத்திருப்பார்களென் று எனக்குத் தோற்றவில்லை. ஒருக்கால் பிழைத்திருப் பார்களாயின், இன்றிரவுமாத்ரமே பிழைத்திருக்கக் கூடு மன்றிப் பிறகு பிழைத்திருக்கப் பொறார்கள். என் தாயா கிய ஸுமித்ரை மற்றொரு புதல்வன் சத்ருக்னன் இருக்கி றானையால், அவனிடத்திலுள்ள ஸ்னேஹத்தினால் அ வனை அடிக்கடி பார்த்துக்கொண்டு ஒருக்கால் ஜீவித்தி

ருக்கவுங் கூடும். அவ்விஷயத்தில் எனக்கு மனவருத்தம் இல்லை. ஆயினும், இப்படிப்பட்ட வீரனுகிய குமாரனைப் பெற்ற கௌஸல்யை மாத்ரம் ஸந்தோஷித்துப் போய்விடுவாள். இந்தத் துக்கமே எனக்கு ஸஹிக்கக்கூடாததாயிருக்கின்றது. அயோத்யாபுரம், அரசனிடத்தில் மிகுந்த ப்ரீதியுடைய ப்ரஜைகளால் நிறைந்திருப்பது; மிகவும் ஸுகமாயிருக்கும்; மேலும், உலகத்துக்கெல்லாம் மிகவும் இனிப்பைக் கொடுக்கவல்லது. அப்படிப்பட்ட அயோத்யாபுரம் ராஜனது மரணத்தினுல் விபத்தை அடைந்து மற்றை மனக்களிப்பை யெல்லாந் துறந்திருக்கப் போகின்றது. மஹாநுபாவராகிய மன்னவர், கம்பீரஸ்வபாவமுடையவனும் தனக்கு அன்பனுமாகிய மூத்த குமாரனைப் பார்க்க நோதிருக்கும் பொழுது அவரது ப்ராணனகள் சரீரத்தில் எப்படி நிற்கப் பொறுத்திருக்கும்? மன்னவர் மரணம் அடைகையில், கௌஸல்யையும் மரணம் அடைவது நிச்சயம். அவளுக்குப் பின்பு எனது அன்னையும் ஸந்தோஷித்துப் போய்விடுவாள். ஆ! விஞ்சிப் போயிற்று; விஞ்சிப்போயிற்று. என் தந்தை ராஜ்யத்தில் ராமனுக்குப் பட்டங் கட்டித் தம் கருத்து நிறைவேறப் பெறுதது பற்றியே ஸந்தோஷிப்போவார். ஆகையால் ப்ரயோஜனங்களெலலாம் விஞ்சிப் போயின; விஞ்சிப்போயின. இனி அவைகளை நினைத்துக் கார்யம் இல்லை. என் தந்தை, ராமன் பிறந்து வளர்ந்து மணம் புரிந்து யௌவராஜ்ய பட்டாபிஷேகம் பெறப்போகிறுனென்று மேன்மேலும் வளர்த்து வருகின்ற இம்மனோரதம் நிறைவேறப் பெறுமலே மரணம் அடையப் போகின்றனர். தந்தையாகிய மன்னவருக்கு மரணகாலம் வந்தபின்பு ஸமஸ்த ப்ரேத கார்யங்களையும் நடத்தவேண்டிய ஸமயத்தில், மரணம் அடைந்த அந்தத் தந்தைக்கு ஸம்ஸ்காரங்களைச் செய்யப்பெற்ற ராஜகுமா

ர்களே க்ருதார்த்தர்கள். நாங்கள் அப்படிப்பட்ட பாக்யசாலிகளல்லோம். என் தந்தையின் ராஜதானியாகிய அயோத்யாநகரத்தில் நாற்சந்தி வீதிகளின் ஸந்திவேசங்கள் மிகவும் அழகாயிருக்கும். ராஜமார்க்கங்களில் இரண்டு பக்கங்களிலும் வீடுகள் நன்கு வரிசைதீர்க்கப் பெற்றிருப்பதனால் அவை சிறிதுங்கோணலின்றி நன்றுகப் பரந்து இருபக்கத்திலும் பிரிக்கப்பட்டிருக்கும். தனவான்களின் உப்பரிகைகளும் அரசர்களின் உப்பரிகைகளும் அங்கு அழகாய் விளங்கும். அந்நகரத்தில் வாரஸ்த்ரீகளும் மின்னற்கொடிபோல் பளபளவென்று விளங்குவார்கள். தேர்களும் குதிரைகளும் யானைகளும் அங்கு நெக்கரித்துக்கொண்டிருக்கும். வாத்ய கோஷங்களும் அங்கு என்றும் ஓயாதிருக்கும். புத்ரஜன்மோத்ஸவம் முதலிய ஸமஸ்தமங்களங்களும் ஓயாமல் அங்கு நடந்துகொண்டேயிருக்கும். ஜனங்களெல்லோரும் துஷ்டியும் புஷ்டியும் பெற்று அங்கு ஸஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள் அதில் உத்யானவனங்களும் அரசர்களுடைய க்ரீடாவனங்களும் மிகவும அழகாய் விளங்கும். அந்நகரத்தில் ஜனங்கள் கும்பல்கூடித் திருவிழாக்களை அடிக்கடி நடத்துவார்கள். அப்படிப்பட்ட என் தந்தையின் ராஜதானியில் பாக்யசாலிகள் ஸுகமாக விஹரிக்கப் போகின்றனர். தசரதர் பிழைத்திருப்பாரா? அவர் பிழைத்திருக்க நாங்கள் வனவாஸத்தைக் கடத்தித் திரும்பி இவ்விடம்வந்து வ்ரதத்தவறு திருக்குந் தன்மையராகிய அம்மஹானுபாவரைக் காண்போமா? இந்த ராமன் வனவாஸத்தைக் கடத்தினபின்பு, ப்ரதிஜ்ஞை தவறுதவராகிய என் தந்தை க்ஷேமமாயிருக்கையில், அவருடன்கூடி நாங்கள் இவ்வயோத்யா புரத்திற்குள் ப்ரவேசிக்க நேருமா?' என்றனன். மஹானுபாவனாகிய அந்த ராஜகுமாரன் இங்ஙனம் மிக்க மனவருத்த

முற்றுப் புலம்பி விழித்துக்கொண்டிருக்கையிற்ருனே அன்றிரவு கடந்து சென்றது. ப்ரஜைகளுக்கு ஹிதனுகிய அந்த ராஜகுமாரன், தனக்குப் பெரியோனுகிய ராமனிடத்திலும், மற்றுமுள்ள தசரதாதிகளிடத்திலும் தனக்குள்ள ஸ்னேஹத்தின் மிகுதியால் அங்ஙனஞ் சொன்ன வாஸ்தவத்தைக் கேட்டு, குஹன் ராமனிடத்தில் மிகுந்த ஸ்னேஹமுடையவனுகையால் அந்த விபத்தை நினைத்துப் பீடிக்கப்பட்டு மனங் கொதிக்கப்பெற்று ஜ்வரத்தினல் வருந்துகின்ற யானைபோல் கண்ணீர் பெருக்கினன். ஐம்பத்தொன்ருவது ஸர்க்கம் முற்றிற்று.

உதயமானவுடன் ராமன், குஹன் கொண்டுவந்த ஓடத்தின் மேல் ஏறும்பொழுது ஸுமந்த்ரனிடம் தன் தாய் தந்தைகளுக்கு வேண்டிய ஸமாசாரங்களைச் சொல்லுதலும், தன்னைப் பிரியப்பொருத குஹனுக்கு ஸமாதானஞ் சொல்லுதலும், ஜடைதரிப்பதும், கங்கையைத் தாண்டுவதும், மூவரும் வத்ஸதேசங்கடந்து ம்ருகாதி மாம்ஸங்களை ஆஹாரஞ்செய்து ஓர் வ்ருக்ஷத்தினடியில தங்கியிருத்தலும்.

அன்றிரவு கடந்து ஸூர்யோதயமானவுடன், அகன்ற மார்புடையவனும் மிகுந்த புகழ் அமைந்தவனுமாகிய ராமன் சுபலக்ஷணங்கள் பொருந்திய ஸுமித்ரா புத்ரனுகிய லக்ஷ்மணனைப் பார்த்து 'அப்பா ! ஸூர்யோதய ஸமயம் இதோ ஸமீபித்திருக்கின்றது. மஹானுபாவையாகிய ராத்ரியும் கடந்தது. இதோ பரத்வாஜரும் கோகிலமும் கூவுகின்றன. அடவிகளில் கேகாவென்று சப்திக்கின்ற மயில்களின் கண்டத்வனிகளும் செவிக்குப் புலப்படுகின்றன. நல்லியற்கையுடையவனே ! இந்தக் கங்கா நதி ஸாதாரணமான நதிகளைப் போன்றதல்ல. ஸமுத்ரத்தில் தேரே போய்ச்சேரும்படியான மஹாநதியாகையால்

மிகுந்த வேகத்துடன் ப்ரவஹித்துச் செல்லுகின்றது. இதை எப்படியாவது கடக்கவேண்டும்' என்றனன். நண்பர்களுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்க வல்லவனாகிய லக்ஷ்மணன் ராமனுடைய வார்த்தையைக்கேட்டு 'அந்நதி வெறுமனே தாண்டக்கூடியதல்ல. ஆகையால் ஏதாவது ஒரு ஸாதனம் வேண்டும்' என்று அதன் தாத்பர்யத்தையும் தெரிந்துகொண்டு குஹனையும் ஸுமந்த்ரனையும் அழைத்து 'இந்தக்கருத்து உங்களுக்குத் தெரிந்ததா' என்று விணவி, அவர்களுக்கு அதன் கருத்தை அறிவித்துத் தமையனெதிரில் நின்றுகொண்டிருந்தனன். அனந்தரம் அந்தக் குஹனும் ராமனது வார்த்தையைக் கேட்டுச் சிரஸாவஹித்துத் தன் மந்த்ரிகளை வேகமாகக் கூப்பிட்டு 'இந்த ராஜகுமாரன் ஸுகமாக இந்நதியைத் தாண்டும்படிக்குத் தகுந்த கெட்டியோடம் ஒன்றை அதன் கடிவில் தள்ளுகோல் முதலிய கருவிகளையும் ஏற்படுத்தி நல்ல ஓடக்காரனையும் அமைத்துத் துறையினருகில் கொண்டு வாருங்கள்' என்றனன். பெருந்தன்மை யுடையவர்களாகிய அந்தக் குஹனுடைய மந்த்ரிகள் அவன் சொன்ன வார்த்தையின்படி அழகிய ஓடம் ஒன்றைத் துறையிற் கொண்டு வந்து சேர்த்து அவனிடம் தெரிவித்தனர். பிறகு அந்தக் குஹனும் கைகளைக் கூப்பிக்கொண்டு ராமனைப் பார்த்து 'தேவா! உனது ஆஜ்ஞையின்படி ஓடம் இதோ ஸித்தமாயிருக்கின்றது. இன்னும் என்னசெய்யவேண்டும்'சொல்வாயாக. தேவகுமாரன்போல் புலப்படுகின்ற புருஷ சிரோமணியே! வரதங்களில் மனந் திடமாயிருக்கப் பெற்றவனே! ஸமுத்ரத்தில் நேரே போய்விழும்படியான இந்தக் கங்காநதியை நீ நாண்டும் பொருட்டு இதோ ஓடம் வந்திருக்கின்றது. நீ இதன்மேல் ஏறிக்கொண்டு போகலாம்' என்றனன். அனந்தரம் மஹாதேஜஸ்வியாகிய ராமன் கு

ஹனைப் பார்த்து 'நீ என் கருத்தை ஈடேற்றினை. இனி மண்வெட்டி புட்டிற்கூடை ஸீதையின் வஸ்த்ராபரணங்கள் முதலியவற்றை ஓடத்தில் ஏற்றுவாயாக' என்றனன். பின்பு அந்த ராமலக்ஷ்மணர்கள் கவசங்களைத் தரித்து அம்பறாத்தூணிகளையும் கத்திகளையும் வில் லுகளையும் கையில் ஏந்திக்கொண்டு ஸீதையுடன் கூடி, கங்காநதிக்குப் போகும் வழியைப் பிடித்துச் சென்றனர். ராமன் ப்ருத்யர்களின் தர்மங்களையெல்லாம் அறிந்தவனுகையால் ஸுமந்த்ரன் அவனிடம் வந்து விநயத்துடன் கைகளைக் கூப்பிக்கொண்டு 'நான் என்செய்யவேண்டும்' என்று விண்ணப்பஞ் செய்தனன். பிறகு ராமன் உத்தமமாகிய தன் வலது ஹஸ்தத்தினுல் ஸுமந்த்ரனை ஸ்பர்சித்து 'ஸுமந்த்ரனே! நீ திரும்பிச் சீக்ரமாக அரசனிடம் செல்வாயாக. அவரிடத்தில் ஏமாறுமல் இருப்பாயாக. நீ எனனை இவ்வளவு தூரம் ரதத்தில் ஏற்றிக்கொண்டு வந்து விட்டாயல்லவா? இனி நான் ரதத்தை விட்டுக் கால்நடையாகவே மஹாரண்யத்திற்குச் செல்லுகின்றனன். ஆகையால் நீபட்டணத்திற்குத் திரும்பிச் செல்வாயாக' என்றனன். ஸாரதியாகிய ஸுமந்த்ரன் அரசனிடம் போகும்படி தனக்கு ஆஜ்ஞை கொடுப்பதைத் தெரிந்து தன்னையும் அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்லவில்லையே யென்று மிகுந்த மனவருத்தங்கொண்டு அந்தப் புருஷஸிம்ஹனுகிய ராமனைப் பார்த்து' உன்னைப் போன்றவன் தம்பிபோடும் பார்யையோடுங்கூடி க்ஷத்ரன்போல் அரண்யத்தில்வாஸஞ் செய்வதென்பது உலகத்தில் ஒருவனுக்கும் ஸம்மதமன்று. இனி என்னைப் போன்றவனுக்குச் சொல்லவேண்டுமோ? தெய்வம் இப்படி உனக்கு ஏற்படுத்திய இந்தக் கஷ்டத்தைக் கடத்துவது உலகத்தில் ஒருவனுக்கும் தாமல்லாதிருக்கின்றது. ப்ரஹ்மசர்ய வ்ரதத்தைச் செலுத்தி

வேதாத்யயனஞ் செய்து தயையுடன் கூடி ஆர்ஜவத்துட
ன் விளங்குகின்ற உனக்கும் வ்யஸனம் வருமாயின், அந்த
ப்ரஹ்மசர்யத்திலாவது வேதாத்யயனத்திலாவது த
யை அமைந்திருப்பதலாவது கபடமற்றிருக்கையாகிற
ஆர்ஜவத்திலாவது பயன் ஸித்திக்குமென்று எள்ளள
வும் எனக்குத் தோற்றவில்லை. வீரர்களில் தலைவனே! நீ
ஸீதையோடும் தம்பியாகிய லக்ஷ்மணனோடுங்கூடி, பித்ரு
வசன பரிபாலனஞ் செய்வதற்காக வனத்தில் வாஸஞ்செ
ய்துகொண்டு மூவுலகங்களையும் அதிக்ரமித்த விஷ்ணு
தேவன்போல் பெருங்கீர்த்தியைப் பெறப்போகின்றனை.
மூன்று லோகங்களையும் வென்றே தக்கதியையும் பெறப்
போகின்றனை. உனது அபிஷேகத்தைக் கெடுத்து எங்
களை வஞ்சித்தது கைகேயிமாத்ரமே அன்று. உன்னைப்
பின்தொடர்ந்து வந்த நகர ஜனங்கள் ராத்ரி நித்ரை போ
கும்பொழுது சொல்லாமலே விட்டுவந்த நீயும் வஞ்சித்
தனை. கூடவே அரண்யத்திற்கு அழைத்துக்கொ
ண்டு போகுமவன்போலவே நடனஞ்செய்து கடைசியில்
வஞ்சித்துவிட்டனை. இனி மனவருத்தத்திற் குட்பட்டுப்
பாபிஷ்டையாகிய கைகேயியின் கையில் அகப்பட்டிருக்க
வேண்டியவர்களாகையால் பாழாய்விட்டோம்' என்ற
னன். இங்ஙனம் ஸுமந்த்ரன் தனக்கு ப்ராணதுல்ய
னாகிய ராமன் அப்பொழுது வெகுதூரம் போவதா யிரு
ப்பதை அறிந்து மனவருத்தங்கொண்டு பரிதபித்து
வெகுநேரம் ரோதனஞ்செய்தனன். அனந்தரம் கண்
ணீர் பெருக்கினதுபற்றி ஸுமந்த்ரன் ஆசமனஞ்செய்து
பரிசுத்தனாயிருக்கையில், அவனைப்பார்த்து ராமன் அடி
க்கடி இனிய உரைகளைக்கொண்டு 'இக்ஷ்வாகுவம்சத்திற்
பிறந்தவர்களுக்கு உன்னைப்போன்ற ஸ்னேஹிதன் ஒரு
வனையும் நான் பார்க்கவில்லை. நீ, தசரதமஹாராஜன்

என்னை நினைத்துக்கொண்டு மனவருத்தப்படாதிருக்கும் படி ஸமாதானப்படுத்திக்கொண்டிருப்பாயாக. அரசன் சோகத்தினல் ஹ்ருதயந் தபித்திருக்கப்பெற்றவன்; வ்ருத்தன்; மேலும், மிகுந்த காமத்தினல் மோஹித்திருப்பவன்; ஆனதுபற்றியே கான் இத்தவார்த்தையை உனக்குச் சொல்லுகின்றனன். மஹாநுபாவனுகிய மன்னவன் கைகேயிக்கு ப்ரியம் உண்டாகவேண்டுமென்று விரும்பி அதற்காக எதேது ஆஜ்ஞாபிப்பானுயினும், அவையெல்லாவற்றையும் எள்ளளவும் சங்கைசெய்யாமல் நிறைவேற்றவேண்டும். அரசர்கள் காமத்தினலாவது கோபத்தினலாவது எந்தெந்தக் கார்யங்களில் தமது மனம் செல்லினும், அவை யெல்லாம தங்கருத்துத் தடைபடாதபடி நிறைவேறுவதற்காகவன்ரோ ராஜ்யத்தைப் பரிபாலனஞ் செய்துவருகின்றனர். ஸுமந்த்ரனே! எந்தக்கார்யத்தை எப்படி செய்தால் அம்மஹாராஜன் சிறிதும் மனங்கோணப்பெருதிருப்பானே, அப்படியே அவை யெல்லாவற்றையும் நடத்தி நிறைவேற்றவேண்டும். அரசன இதுவரையிலும் துக்கம் அறியாதவன்; வயது முதிர்ந்தவன்; யாவரும் அனுஸரித்து மேன்மைப்படுத்தத்தகுந்தவன்; இந்த்ரியங்களையெல்லாம் வென்று வசப்படுத்திக்கொண்டவன்; அப்படிப்பட்ட அம்மன்னவன் இப்பொழுது இங்ஙனம் இந்த்ரியங்கள் கலங்கி மனவருத்தமுற்றனன். ஆகையால் நீ எனக்குப் பதிலாயிருந்து அம்மன்னவனுக்கு நமஸ்காரஞ்செய்து ‘அயோத்தையினின்றும் அப்புறப்பட்டு வந்தோமென்றும், இனி அரண்யத்தில் வாஸஞ்செய்யவேண்டுமேமென்றும் எனக்குச் சிறிதும் மனவருத்தம் இல்லை, லக்ஷ்மணனுக்கும் ஸீதைக்கும் இம்மனவருத்தம் இல்லை. இந்தப் பதினன்கு ஸம்வத்ஸரங்களும் கடந்து போகையில் உடனே லக்ஷ்மணனும் நானும் ஸீதையும்

அரண்யத்தினின்றும் திரும்பி வந்து உங்களை ஆதரவுடன் அடிக்கடி பார்த்துகொண்டிருப்போம்' என்று இவ்வார்த்தையைச் சொல்வாயாக. ஸுமத்ரனே! இங்ஙனம் மன்னவனுக்கும் என் தாய்க்கும் மற்றை ராஜபத்னிகளுக்கும் கைகேயிக்கும் அடிக்கடி உரைத்து, பிறகு ஸீதையும் நானும் பூஜ்யகுரிய லக்ஷ்மணனும் சொன்னதாகக் கௌஸல்யைக்கு எமது ஆரோக்யத்தையும் பாதங்களில் தலைசாய்த்துச் செய்த நமஸ்காரத்தையும் சொல்வாயாக. மஹாராஜனிடம் 'பரதனைச் சீக்ரத்தில் அழைதத்துக்கொண்டு வருவீராக. பரதன் வந்தவுடனே ராஜ்யாவாகிய உமது இஷ்டத்தின்படி யௌவராஜ்யத்தில் அவனை ஏற்படுத்துவீராக. பரதனுக்கு யௌவராஜ்யத்தில் பட்டாபிஷேகஞ்செய்து அவனை அனைத்து ஆலிங்கனஞ்செய்வீராக. அந்த ஸுகத்திலல் நாங்கள் அரண்யஞ்சென்று வருந்துகிறோமென்கிற துக்கம் உம்மைப்பாதியாதிருக்கும்' என்று மொழிந்தோமென்பாயாக. பரதனிடத்திலும் 'நீ அரசனிடத்தில் எப்படி வர்த்திப்பாயோ அப்படியே தாய்மார்க ளெல்லாரிடத்திலும் பேதமின்றி வர்த்திப்பாயாக. உனக்குக் கைகேயியும், சத்ருக்னனிடத்திலுள்ள ப்ரீதியைப்பற்றி விசேஷித்து ஸுமித்ரையும் எப்படி ஆதரவுடன் பாதுகாக்கத் தகுந்தவர்களோ, அப்படியே எனக்குத் தாயென்பதுபற்றிக் கௌஸல்யையிடத்திலும் நீ விசேஷ கௌரவத்துடன் நடக்கவேண்டும். நீ தந்தையின் ப்ரியத்தை விரும்பி யௌவராஜ்யத்தை அங்கீகரிப்பாயாகையால் இஹபரலோகங்கள் இரண்டிலும் உண்டாகும் ஸுகங்களை ஜனங்களுக்கும் அரசனுக்கும் வளர்த்தி நிறைவேற்றிக்கொடுக்க வல்லனுவாய்' என்று சொன்னேனென்பாய்' என்றனன. ராமன் இவ்வாறு தன்னை அயோத்யைக்குத் திரும்பச்செய்கையில், ஸும

க்தன் துக்கத்திலல் பரிதபித்துக்கொண்டே அவ்வார்த்தைகளையெல்லாங் கேட்டு ஸ்னேஹம் மிகப் பெற்று ராமனைப் பார்த்து 'நான் இப்பொழுது சங்கையில்லாமல் ஏது சொல்வேனே, அது ஸ்னேஹத்திலனறி அபசாரத்திற்காக வன்று. ஆகையால் என வார்த்தைகளை, உன்னிடத்திலுள்ள மேலான ஸ்னேஹத்திலல் பயம் மாறப் பெற்று லௌகாதர்மத் தவறி யாது மொழிவேனே, அவ்வார்த்தைகளை யெல்லாம் என்னைப் பக்தனென்று நினைத்துப் பொறுத்தருளவேண்டும். உன்னை விட்டு நான் எப்படி பட்டணத்திற்குப் போவேன்? உனனை விட்டுப் போக நேர்ந்த போதிலும், உன்னைவிட்டுப் பிரிகதத னல் புத்ரனை விட்டுப் பிரிந்து மனவருத்தப் படுவதுபோல் புலப்படுகின்ற அவவயோத்யைக்கு உன்னை விட்டுப்பிரிந்து நான் தனியாக எங்ஙனம் போகமுடியும்? அப்பட்டணத்தில் பசுபக்ஷியாதிகள் அனைத்தும், அப்பொழுது ராமனேடுகூடிய இந்த ரதத்தைப்பார்த்த கண்களால், இப்பொழுது ராமனில்லாத ரதத்தைப் பார்த்தவுடனே மனவருத்தம் பொறுக்கமுடியாமல் இருபிளவாகப் பிளந்துவிடுமல்லவா? பட்டணத்திலுள்ளவர் யாவரும், ஸைனபதியாயிருப்பவன் அடிபட்டிருப்பதுபற்றிப் பாழாகிய தமது ஸைன்யத்தைக்கண்டு துக்கப்படுவதுபோல், நீதியில்லாமல் ஸாரதியாகிய நான்மாத்ரம் மிகுந்திருக்கப் பெற்ற இந்த ரதத்தைக் கண்டு மிகுந்த மனவருத்தம் அடைவார்களல்லவா? இப்பொழுது அயோத்யையிலுள்ள ஜனங்கள் நீ தூரத்திலிருந்தபோதிலும் உன்னையே மனத்தில் இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டிருப்பதனல் எதிரிலிருப்பவனுகவே வைத்து நினைத்துக்கொண்டு ஆஹாரத்தையுங்கூடப் பாராட்டாம லிருப்பார்களென்பது நிச்சயம். இது அபத்தம் அன்று. ராமா! நீ அரண்யத்தி

ற்கு ப்ரயாணமாய்ப் போகும்பொழுது நீ போகிறுயென் கிற வருத்தத்தினல் மனம் வாடப்பெற்றிருக்கிற ப்ரஜைக ளுக்கு அப்பொழுது எப்படிப்பட்ட கலக்கம் உண்டாயி ற்றோ, அதையெல்லாம் நீயே நேரில் கண்ணுரக் கண்டா யல்லவா? நீ அரண்யத்திற்குப் புறபடும்பொழுது பட்ட ணத்து ஜனங்களின் துக்கத்வனிகள் எவ்வளவு செவிக் குப் புலப்பட்டனவோ; இப்பொழுது நீ யில்லாத ரதத்து டன் கூடப் போயிருக்கிற என்னைப் பார்த்த வுடனே அதைவிட நூறுமடங்கதிகமாக அழுகுரல்கள் உண்டா குமே! நான போய் உன் தாயாகிய கௌஸல்யாதேவிக்கு என்னவென்று ஸமாதானஞ் சொல்லுவேன்? 'உன் புத ல்வனை உனது உடன் பிறந்தவனகத்திற் கொண்டுபோய் விட்டுவந்தேன்; ஆகையால் நீ வருத்தப்படவேண்டாம்' என்பேனு? இப்படிப்பட்ட அபத்தத்தையாவது சொல்ல லாமென்னில், அது நான் சொல்லமாட்டேன். அல்லது 'அரண்யத்தில் விட்டு வந்தேன்' என்று ஸத்யஞ் சொல்ல லாமென்பாயோ, இது அப்ரியமல்லவா? ஸத்யமென்று இப்படிப்பட்ட அப்ரியத்தை எப்படி சொல்லலாகும்? அம்மஹிஷி ப்ராணன்களையே விட்டுவிடுவாளே. உன் னையும் உன் பந்துக்களாகிய ஸீதையையும் லக்ஷ்மண னையும ஏற்றிக்கொணடு, நான் ஓட்டிஞற்போல் சிறி தும் தப்பாமல் நடக்கின்ற உனது மேலான குதிரை கள், நீ இல்லாத இந்த ரத்தத்தை நான் வகையுடன் ஓட்டி னேனுயினும் எப்படி இழுத்துக்கொண்டு செல்லும்? ஆ னதுபற்றி நிர்த்தோஷ ஸ்வபாவனே! நான் உன்னைவிட்டு அயோத்யைக்குப் போகப் பொறேன். உன்னைப் பின் சென்று அரண்யத்திற்கு வரும்படி அனுஜ்ஞை கொடுப் பாயாக. நான் இப்படி பலவாறுக வேண்டிக்கொண்ட போதிலும், நீ அழைத்துக்கொண்டு போகாமலே விட்டுப்

போனவுடன் ரதத்தோடுகூடவே அக்னியில் விழுந்து பட்டுத் தீருவேன். ராமா! உன் தவத்திற்கு விக்னஞ் செய்யுங் க்ரூரஜந்துக்களை யெல்லாம் நான் ரதத்தில் ஏறி அடித்துக்கொண்டிருப்பேன். [1] நீ ராஜ்யாபிஷேகம் பெற்று ராஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டிருக்கையில், உனக்காக ரதம் கடத்துவதா லுண்டாகும் ஸுகம் பாக்யமற்ற எனக்கு லபிக்காமற் போயிற்று. அது இல்லாமற் போயினும் உன்னோடு வனத்தில் வாஸஞ் செய்யும்பொழுது உனக்கு ஸாரதியாயிருந்து பரிசர்யை செய்வதலுண்டான ஸுகத்தையாயினும் பெறலாமென்று ஆசைப் படுகின்றனன். அரண்யத்தில உனது அருகில் வர்த்திக்க வேண்டுமென்று விரும்புகின்றனன். வீரர்களிற் றலைவனே! இக்கக் குதிரைகளுங்கூட நீ அரண்யவாஸஞ் செய்யும்பொழுது உனக்கு ஸேவை செய்யுமாயின் பரமகதியைப் பெறும். நான் உன்னுடன்கூட வனத்தில் வாஸஞ் செய்துகொண்டிருந்து உனது சுச்ரூஷையைச் சிரஸாவஹித்து நடத்

---

1 இதற்கு—'த்வத்க்ருதேநமயாவாப்தம் ரயிசாயாக்ருதம் ஸுவம், ஆஸ்மாஸைத்வத்க்ருதேநாஹம் வநவாஸக்ருதம் ஸுவம்' என்று மூலம். (உனது அனுக்ரஹத்தினல் நான் உனக்கு ரதத்தை நடத்தி அதனலை உண்டாகும ஸுகத்தை அனுபவித்தனன். இனி உனது அனுக்ரஹத்தினல் உன்னோடு வனவாஸஞ் செய்துகொண்டு உனகுப் பரிசர்யை செயவதனலுண்டாகும் ஸுகத்தை அனுபவிகக ஆசைப்படுகின்றேன்) என்று மற்றொரு பொருளுங கூறுகின்றனர். இதற்கு—'நான் மந்த்ரிகளில் தலைவனலையிருந்தும் நீ இந்த வமசத்தில் அவதரிக்கப் போகிறாயென்று தெரிந்தே உனக்கு ரதத்தை நடத்தும் பாக்யம் எனக்கு நேருமென்று ஸாதர்யக்ருத்யம் நிற்தைக்கிடமாயினும் இதைக் கைப்பற்றினன். அதனல் எனது பாக்ய மஹிமையால உனக்கு ஊழியஞ் செய்யும் ஸுகம் எனக்குக் கிடைத்தது. இனி வனவாஸத்தில் உனக்கு ஊழியஞ் செய்து ஸுகத்தை அனுபவிக்க விரும்புகின்றேன்' என்று கருத்து. மஹேஸ்வரதீர்த்தர்.

திவருவேன். எனக்கு அயோத்தியையைத் துறக்கவேண்டு மே யென்கிற மனவருத்தம் எள்ளளவுங்கூட இல்லை. அ யோத்தியைமாத்ரமே அன்று, தேவலோகமாயினும்எனக்கு ஒருவிஷயமேயன்று. எல்லாவிதத்திலும் மனவிருப்பமின் றித் துறந்துவிடுவேன். உன் ஸேவையே எனக்கு வேண் டியது. பாபிஷ்டனையிருப்பவன் தேவேந்த்ரனது சகரத் திற்குப் போக முடியாததுபோல், நான் உன்னைவிட்டுப் பிரிந்து அயோத்யா புரத்திற்குப்போக வல்லனல்லேன். வனவாஸந தீர்ந்துபோகையில், திரும்பி இதத் தேரின் மேலேயே உன்னை ஏற்றிக்கொண்டு அயோத்யைக்குக் கொண்டுபோக வேண்டுமென்று எண்ணுகிறது. அப்பனே! அரண்யத்திலேயாயினும், உன்னோடுகூட இருப்பேனி பின், எனக்கு இந்தப் பதிநான்கு ஸம்வத்ஸரங்களும் கொ டிப்பொழுது போலவே கடந்து செல்லும். உன்னை விட் டுப் பிரிந்திருப்பேனையின், அபபதினான்கு ஸம்வத்ஸ ரங்களே நூறுண்டுகள்போல் வளர்ந்துவரும். நீ அடிமை களிடத்தில் மிகுந்த வாத்ஸல்ய முடையவனல்லவோ? மே லும், நான் உனக்கு பக்தனும் ப்ருத்யனுமாயிருக்கின்ற னன். ஆகையால் இங்ஙனம் ப்ருத்யனிருக்கவேண்டிய மர்யாதைகளைச் சிறிதுந்தவறாமல் அதின்படியே எனப்பு வுக்குப் பதிலாகிய உன்னைப் பின்தொடர்ந்து வர விரும்பு கின்றனன். இதில் யாது பிழையையுங் காணேன். இப் படிப்பட்ட என்னை நீ விடுவது யுக்தமன்றே' என்றனன். ராமன் ப்ருதயர்களிடத்தில மிகுந்த தயையுடையவனை யால், இங்ஙனம் தீனனாகிப் பலவிதமாக ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கிற ஸுமந்த்ரனைப் பார்த்து 'ஸுமந்த்ர னே! நீ ஸ்வாமியினிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவன். ஆகையால் ஸ்வாமியாகிய என்னிடத்தில் உனக்கு மிகுந்த பக்தி உண்டென்பதை அறிவேன். ஆயினும் உன்னை

இப்பொழுது அயோத்யைக்கு அனுப்புவதற்குக் காரணஞ் சொலலுகிறேன் கேள். நீ பட்டணத்திற்குப் போகக் கண்டு என் சிறிய தாயாகிய கைகேயி 'ராமன் அரண்யத்திற்குப் போனன்' என்று நம்பிக்கை உண்டாகப் பெறுவாள். தான வனவாஸஞ் செய்யப்போகையில், அதை உன்மூலமாகத் தெரிந்துகொண்டு அதக் கைகேயி மிகுந்த மனக்களிப்புடையவளாகிப் பிறகன்றே தர்மாத்மாவாகிய தசரதரைக்குறித்துப பொய் சொல்பவனென்று ஸந்தேஹப்படாதிருப்பாள். எனது சிறிய தாயார் தன் புதல்வனகிய பரதனகனகு பரிபாலனஞ்செய்து வருகையில் வ்ருத்தியடைகது வருகிற அத ராஜ்யத்தைப் பெற்றுக் களிக்கையே எனக்கு முக்யம் இந்த முக்யப்ரயோஜனத்தைப் பற்றியே உன்னை அயோத்யைக்குப் போகும்படி அனுப்புகினறனன். மற்றுஞ் சில ப்ரயோஜனங்களும் உண்டு. எனக்கும் அரசனுக்கும் ப்ரியம் உண்டாவதற்காகவும் நீ இப்பொழுது ரதத்துடன கூடவே அயோத்யைக்குப் போவாயாக. உன்னிடம எந்தெந்த விஷயங்களை எப்படியெப்படி சொல்லவேண்டுமென்றேனை, அவை யெல்லாவற்றையும் அந்தந்தப்படியாகவே எற்றல் குறைச்சலின்றி அவரவர்களுக்குச் சொலவாயாக' என்றனன். தீரனகிய ராமன ஸுமந்த்ரனுக்கு இங்ஙனஞ் சொலலி அவனை அடிக்கடி ஸமாதானப்படுத்திவிட்டுக் குஹனைப் பார்த்து யுக்திகள் அமைந் திருக்கும்படி 'குஹனே! என்னை இங்கேயே இருக்கவேண்டு மென்றனை. இப்பொழுது கான் ஜனஸஞ்சாரத்துடன் கூடிய இவ்வனப்ரதேசத்தில் இருப்பது ஸரியன்று. அவச்ய மாக ஆச்ரமங்களிற் சென்றே இருக்கவேண்டும். ஆச்ரமங்களிலிருக்கவேண்டுமென்றே தந்தையின் ஆஜ்ஞை. இவ்விதமாக என் தந்தையினிடம் ஆஜ்ஞை பெற்றிருப்

கங்காதத்திக்கு நமஸ்காரஞ் செய்தனன். அளவில்லாத காதத்தியுடன் விளங்குகின்ற லக்ஷ்மணனும் அப்படியே அந்தக் கங்காதத்தியை நமஸ்கரித்தனன். ராமன் ஸுமந்த்ரனுக்கும், ஸைன்யத்துடன் கூடிய குஹனுக்கும் அனுமதி கொடுத்துவிட்டு ஓடத்திலேறிக்கொண்டு ஓடத்தை கடத்தும்படி ஓடக்காரர்களுக்கு ஆஜ்ஞை யிட்டனன். பிறகு மனஞ்சுழ்ள ஓடக்காரர்களோடுகூடிய அந்த ஓடமானது அந்த ஓடக்காரர்களால் தூண்டப்பட்டு நீண்டும் உயர்ந்தும் பெருத்தும் வெளுத்தும் அழகாயுமிருக்கிற தள்ளு கோலால் வேகமாய்த் தள்ளுண்டு சீக்ரத்தில் அந்ததீப்ரவாஹத்தைக் கடந்து சென்றது. நற்குணங்களைப்பற்றியும் ஸர்வயவத்திலும் பிசகின்றி லக்ஷணங்களுக்கொத்த அழகைப்பற்றியும் ஒருவராலும் நிந்திக்கப்படாதவளாகிய ஸீதாதேவி அந்தக் கங்காநதி ப்ரவாஹத்தின மத்தியில் வரும்போது கைகளைக் குவித்துக் கொண்டு அநதியைப் பார்த்து 'கங்கையே! மிகுந்த மதி பொருந்திய தசரதமன்னவரின் குமாரனுகிய இம்மஹாநுபாவன உன்னல் பாதுகாக்கப்பட்டுப் பதினன்கு ஸம்வத்ஸரங்கள் நிரம்ப அரண்யத்திலிருந்து தந்தையின் ஆஜ்ஞையை நிர்விக்னமாக நிறைவேற்றித் தம்பியோடும் எனதேடும் கூடத் திரும்பி இவ்விடம் வரும்பொழுது நான் க்ஷேமத்துடன கூடி ஸமஸ்த அபீஷ்டங்களும் நிரம்பப் பெற்று மிக்க மனக்களிப்புற்று, அழகிய புகழ் அமைந்த கங்காதேவியே! உனக்குப் பூசையிடுவேன். கங்காதேவியே! நீ ஊர்த்வலோகம் அதோலோகம் மத்யலோகம் என்கிற மூன்று லோகங்களிலும் ஸஞ்சாரமுடையவள். ஆகையால் ப்ரஹ்மலோகத்தையும் நீ பார்த்திருக்கின்றனை. நீ ப்ரஹ்மலோகத்தில் வெகுகாலமாக வஸித்திருக்கும்பொழுது ஒரு காலத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு த்ரிவிக்ரமாவதா

ரஞ் செய்து தன் திருவடியை ப்ரஹ்மலோகத்தளவும் நீட்டினகையில் ப்ரஹ்மதேவன் மிகுந்த ஸந்தோஷத்துடன் அம்மஹாவிஷ்ணுவின் ஸ்ரீபாதத்தைத் தனது கமண்டலு ஜலங்கொண்டு விளக்கத் தொடங்குகையில் நீ அந்தக் கமண்டலு வழிபாக அவ்விஷ்ணுவின் ஸ்ரீபாதத்தில் வீழ்ந்து அதினின்றும் நதீரூபமாக ஆவிர்பவித்தனை. ஆனதுபற்றியே உனக்கு த்ரிபதகையென்றும் விஷ்ணுபதியென்றும் பேர்கள்வழங்கி வருகின்றன. மேலும், இவ்வுலகத்தில நீ ஸமுத்ராராஜனுக்குப் பார்யையாகப் புலப்பட்டுக் கொண்டிருக்கின்றனை. ஆகையால நீ இவ்வுலகத்திலும் மிகவும் புகழ் பெற்றவள். மங்களத்தைக் கொடுக்குந தனமையுள்ள கங்காதேவியே! உனக்கு நான் நமஸ்காரஞ் செய்கிறேன். மேலும், உன்னைப் புகழ்கின்றேன். புருஷர்களிற் சிறந்த இம்மஹாநுபாவன் க்ஷேமமாகத் திரும்பி இவ்விடம் வந்து ராஜ்யத்தைப்பெற்று வாழ்ந்திருக்கையில், நான உனக்குப்ரியஞ்செய்வதற்காக லக்ஷம் பசுக்களையும் உயர்ந்த வஸ்த்ரங்களையும் அறுசுவையுள்ள அனனத்தையும் ப்ராஹ்மணர்களுகக்குக் கொடுக்கின்றனன். தேவீ! நான் பட்டணத்திற்குத் திரும்பிவந்தவுடன பரிசுத்தமாகிய மனத்துடன் உனக்கு ஆயிரங் குடங்களில் மத்பத்தையும் அன்னத்திற்குப் பதிலாக மாம்ஸத்தையுங் கொடுத்துப் பூஜிக்கின்றனன். உன கரையில் எந்தெந்தத் தேவதைகள் இருக்கினறார்களோ அவர்கள் எல்லோரையும் பூஜிக்கின்றனன். மேலும், உன்கரையி லுள்ள மணிகர்ணிகை ப்ரயாகம்முதலிய தீர்த்தங்களி லும் காசி முதலிய தேவாலயங்களி லும் ஆகிய எல்லாவற்றி லும் பூசையிடுகின்றனன். பாபமற்றவளே! பாபத்தை அறியாதவனுகிய இம்மஹாபுஜன் வனவாஸத்தை நடத்தி அவ்வனத்தை விட்டு என்னோடும் தம்பியோடுங் கூடித் திரும்பி க்ஷேம

மாக அயோத்யைக்கு உனது அனுக்ரஹத்தினல் வந்து சேருவாளாக'என்று ப்ரார்த்தித்தனள். எவ்விதசிக்தையும் பெரு தவளும் செய்யவேண்டிய கார்யங்களில் மிகுந்த ஸாமர்த்யமுடையவளுமாகிய அந்த ஸீதாதேவி இங்ஙனங்கங்காதடத்தினைக்குறித்துச் சொல்லிக்கொண்டே சீக்ரத்தில் அந்ததியின தென்கரைக்குப் போய்ச்சேர்ந்தனள். பகைவரைப் பறந்தோடச் செய்யவல்ல பராக்ரமசாலியாகிய அந்தப் புருஷஸிம்ஹன், அக்கரைக்குப்போய்ச் சேர்ந்தவுடன் ஓடத்தை விட்டிழிந்து தம்பியோடும் ஸீதையோடுங்கூடி அப்புறம் ப்ரயாணமாய்ப் புறப்பட்டுச் சென்றனன். பிறகு நீண்டழகிய புஜதண்டங்களையுடைய அந்த ராஜகுமாரன் ஸுமித்ரைக்கு ஸந்தோஷத்தை விளைக்குந தனமையனுகிய லக்ஷ்மணனைப் பார்த்து 'இனிமேல் நீ ஜனஸஞ்சாரமுள்ள இடத்திலாயினும் ஜனஸஞ்சாரமில்லாத இடத்திலாயினும் எல்லாவிடத்திலும் பாதுகாக்கையில் மிகுந்த மனவூக்கமுடையனு யிருக்கவேண்டும் நாம் இதுவரையிலும் பார்த்தறியாத நிர்மானுஷ்யமாகிய வனத்திற்குப் போகிறோமாகையால் அவச்யமாய் நமக்கு நாம் பாதுகாத்தல செய்துகொள்ளாமல் தீராது. லக்ஷ்மண! நீ முன்பு நடந்து செல்வாயாக. ஸீதை உன்னைப் பினெரு டர்ந்துவரட்டும் உன்னையும ஸீதையையும் பாதுகாத்துக் கொண்டு உங்கள் இருவரையும் பின்தொடர்ந்து நான் வருகின்றனன். புருஷதிலகனே! இப்படிப்பட்ட இடத்தில் நாம் ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொண்டிருக்க வேண்டும. எதற்காரியமாயினும்; அதற்குத் தகுந்த ஸமயங்கடந்து செல்லுமாயின், திரும்பி அதை நிறைவேற்றிக்கொள்வது ஸுலபமன்று. ஆகையால் தகுந்த காலங்களில் மனவூக்கத்தோடிருக்கவேண்டும். ஸீதை, இப்பொழுது ஜனஸஞ்சாரமின்றிப் பயிர்க்கழனிகளையாவது தோ

ட்டங்களையாவது காணப்பெறுமல். மிக்க மேடும் மிகப் பள்ளமுமாயிருப்பதால ஒருவகையாயிராத வனப்பிதேசத்தில் நுழையப் போகின்றனள். ஆகையால் இப்பொழுது வனவாஸத்திறு லுண்டாகுக் துக்கம் இப்படிப்பட்டதென்று தெரியப்போகின்றது' எனறனன் லக்ஷ்மணன்; ராமன் சொன்ன வார்த்தையைக் கேட்டு முன்னேநடந்து சென்றனன். ஸீதையும் அவன் பின்னேபோயினள். ரகுகுலதிலகனுகிய ராமன ஸீதையைப் பின்சென்று போயினன். இவர்கள் இங்ஙனம் போகையில், ராமனைவிட்டுப் பிரிந்து காண்போர்களுக்குக் கருணையை விளைவிக்குந் தசையிலிருக்கின்ற லக்ஷ்மணன், ராமன் கங்காநதியின் அக்கரைக்குப் போய்ச் சேரும்வரையில் கண்ணிமை கொட்டாமல் அவனைப் பார்த்துக்கொண்டேயிருந்து, அனந்தரம் அவன் லெகுதூரம் போனபடியால் கண்ணுக்குத் தோற்றுமற் போகையில், கண்பார்வையைத் திருப்பிக்கொண்டு மனம் பரிதபிக்கப்பெற்றுக் கண்ணீர்களைப் பெருகிகின்றனன். பரபாவத்திறுல் ஸமஸ்த லோகபாலர்களையும் நிகர்த்த மேன்மையுடையவனும் விரும்பிய வரங்களைக் கொடுக்கும் மஹானுபாவனுமாகிய அந்த ராமபிரான் அம்மஹாநதியைத் தாண்டிப்பிரயாணமாய்ச்சென்று அழகிய பயிர்க் கழனிகளுடன்கூடி மனக்களிப்பைக் கொடுப்பதும் ஆனதுபற்றியே ஜனங்கள் ஸந்தோஷித்திருக்கப் பெற்றதுமாகிய வத்ஸ தேசத்திற்குச் சீக்ரமாகப் போய்ச் சேர்ந்தனன். அவர்கள் அவ்விடத்தில் பசித்தவர்களாகி ஸீதையை ஓரிடத்தில விட்டு இருவருமாக வேட்டையாடிக்கொண்டு சென்று அங்குப் பன்றியையும் எருமையைப் போன்ற மானையும் கலைமானையும் கறுப்புச் சாரலையுடைய உயர்ந்த கலைமானையும் ஆகிய இந்நான்கு பெரிய ம்ருகங்களையும் கொன்று பரிசுத்தமாகிய

அவைகளின் மாம்ஸத்தை எடுத்துக்கொண்டு ஸீதையி டம் வந்து ஸாயங்காலமானது பற்றியும் பசியின் மிகுதி யைப் பற்றியும் த்வரைப்பட்டு வாஸத்தின் பொருட்டு ஓர் வ்ருக்ஷத்தின் அடியில் வந்து சேர்ந்தனர். ஐம்பத்திரண் டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் லக்ஷ்மணனை அயோதயைக்குப் போவென்றனுப்பினதிலும், லக்ஷ்மணன் ராமனை ஸமாதானப்படுத்துதலும், மூவரும் பாணசயனத்தில் படுத்துக கொள்ளலும்.

மனத்திற்கு ஸந்தோஷத்தை விளைப்பதில் நிகரில் லாத ஸாமர்த்யமுடையோனகிய அந்த ராகுகுலதிலகன் அம்மரத்தின் அருகிற் சென்று ஸாயங்காலத்து ஸந்தியை உபாஸித்து லக்ஷ்மணனைப் பார்த்து 'நாம் தேசங்களைத் தாண்டி ஸுமந்த்ரனை விட்டுத் தனியராக இருந்துகட த்தும் ராத்ரிகளில முதலாகிய ராத்ரி இதோ வந்தது. இதற்கு மனவருத்தங்கொண்டு பரிதபிக்கலாகாது. நமது யோகக்ஷேமங்களை நாமாகவே பார்த்து நடத்திக் கொ ள்ள முடியும். ஆனல் ஸீதை தன யோகக்ஷேமங்களை அங்ஙனம் தானகவே நடத்திக்கொள்ள மாட்டாது. அவ ளுடைய யோக க்ஷேமங்களும் நாம் பார்த்துக்கொள்வ தற்குட்பட்டே யிருக்கின்றன. ஆகையால் இன்று முத லாக ராத்ரிகளில் நாம் ஏமாறுதலின்றி விழித்துக்கொ ண்டிருக்கவேண்டும். லக்ஷ்மண! இது தனியாக இருப்பது நடக்கிற முதல் ராத்ரி யாகையால் நிரம்பவும் கஷ்டமா யிருக்குமே. ஆயினும் எப்படியோ ஒருவிதமாக இதைக் கடத்தி விடுகிறோம். மேலும், இது இப்பொழுதே நன் றாக வந்துவிட்டதாகையால் குடிசை ஏற்படுத்திக் கொ

ண்டு ஸுகமாகப் படுத்துக்கொள்ள அவகாசம் இல்லை. ஆகையால் நாமே கொஞ்சம் புற்களையும் தழைகளையும் கொண்டு வந்து பரப்பிப் படுத்துக்கொண்டிருந்து இன்றிரவைக் கடத்துவோம்' என்றனன. மேலான மஞ்சத்தில் படுக்கத் தகுந்தவனாகிய அந்த ராமன் தரையில் படுத்துக கொண்டு லக்ஷ்மணனைப பார்த்து இங்ஙனம் மேல் வரு மாறு அழகிய கதைகளைச் சொல்லத் தொடங்கி 'லக்ஷ்மண! இப்பொழுது மஹாராஜன் துக்கத்தினால் வருந்தி ஆயாஸப்பட்டுத் தூங்கிக்கொண்டிருப்பாராகையால் அவருக்கு கலல தித்தரை பிடிக்காது. இது நிச்சயம். கைகேயி மாத்ரம் தன் கருத்து நிறைவேறப பெற்றவளாகையால் ஸந்தோஷம் அடைந்திருக்ககூடும். அவள் பாதனவாக் கண்டு அவனுக்கு ராஜ்யத்தில் பட்டங் கட்டுவதற்காகவும், மேலும், அவனுககு ராஜ்யம நிலையாயிருப்பதற்காகவும் விருபபமுற்று மஹாராஜர் ப்ராணன்களைப் போகக்காதிருபபாளா?[1] தசரதர் அநாதர்; மேலும், வருத்தராயிருப்பவர். நாணும் அவரைவிட்டு வந்தனன. காமத்திறகாட்பட்டவராகையால் கைகேயியினிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். இன்னும் என் செய்யப போகிறாரோ? நமக்கு இப்பொழுது வந்திருக்கிற இக்கஷ்டத்தையும் ராஜாவின புத்திக்கு சரிட்ட மாறுபாட்டையும் கண்டால்

---

1 ஸமஸ்த புருஷாாததகளிலும் அபிலாஷமிலலாமலிருக கின்ற ஸ்ரீராமன், தனக்கு ராஜ்யம கிடைகக வில்லை யென்கிற வ்யாஜத்தை மனதிலை வைத்துககொண்டு கைகேயியின நிந்தையை முகயமாகக கருதி இங்ஙனம் கூறுவது யுக்தமோ? என்னில—லக்ஷ்மணனை உதயமானவுடன் அயோத்யைக்குப் போவென்று சொலலப் போகிறாளாகையாலும், அந்த லக்ஷ்மணன் கைகேயியை த்வேஷித்தவளாகையாலும் அவனை ஸமாதானப்படுத்தி இங்ஙனம் அனுப்புவதற்காக நிந்தித்தானன்றி வேறிலலையென்று தெரியவருகின்றது.

அத்த தர்மங்களைக் காட்டிலும் காமமே அதிகமென்று எனக்குத் தோற்றுகினறது. லக்ஷ்மண! எவனையினும் ஒருவன் அபண்டிதனையிருப்பானையினும், தனதை என்னைத் துரத்திறற்போல், தன்னிஷ்டப்படி நடந்து வரும் புதல்வனை, ஒருஸ்த்ரீ நிமித்தமாகக் கைவிடுவானை? விடமாட்டான. கைகேயியின் புதல்வனகிய பரதன் தானே ருவனை மஹாராஜனகிக் கோஸல தேசம் முழுமையும ஸந தோஷித்திருககும்படி ஆளப்போகினறனன். அவனன் ரே பார்யையுடன கூடி ஸுகமாயிருபபவன்? தந்தை வயது கடந்து காலஞ் செலலுகையில், நானும் அரண்யம் வந்து சேருகையில, அயினருவனை ஸடஸ்தராஜ்யத்தி ற்கும் ஒரு முகமாயிருகக போகிறனல்லவா? என் தச ரதனைப்போல அத்தத்தையும் தர்மத்தையும் பரித்யா கஞ செய்து காமத்தை மாத்ரம் அனுஸரிபபாரே, அவ னுககு இபபொழுது நமமரசனுககு வருதாற்போல் சிகர த்தில் தானே இபபடிப்பட்ட ஆபத்து நேரிடும். இனிய ஸ்வபாவமுடையவனே! தசரதன் முடிந்து போவதற்கும் நான் அரண்யவாஸஞ் செய்வதற்கும் பரதனுக்கு ராஜ்யம் வருவதற்குமே கைகேயி நம் வீட்டிற் குடி புகுந்தானென் று எனக்குத் தோற்றுகினறது. கைகேயி, இப்பொழுது தனக்கு உண்டாயிருக்கிற ஸௌபாக்யத்திறல் மதித்து மெப்மமறந்து என்னைச் சேர்ந்தவர்களாகையால் கௌ ஸல்யையையும் ஸுமித்ரையையும் பீடியாதிருப்பாளா? பீடியாதிருக்கமாட்டாள். லக்ஷ்மண! என் நிமித்தமாக ஸுமித்ராதேவி துக்கத்தில அகபபடாதிருப்பாளாக. நாம் இனனும் தூரம போய் விடுவோமாயின் கஷ்டம். இவ்விடமே அயோத்யைக்கு ஸமீபமாயிருக்கினறது. ஆ கையால் இங்கிருந்தே நீ விடியற்காலத்தில் எழுந்திருந்து அயோத்யைக்குப் போவாயாக. நானொருவனே ஸீதையு

டன் கூடித் தண்டகாரண்யத்திற்குப் போகின்றனன். கௌஸல்யை அங்குத் திக்கற்றிருக்கின்றனள். நீ புறப் பட்டுப் போவாயாயின் அவளைப் பாதுகாத்து வருவாய். கைகேயி அல்ப கார்யங்களுகுமபின் வாங்காதவள். ஆகையால் ஒரு காலத்தில் தன் த்வேஷத்திற்குத் தகுந்த படி கௌஸல்யைக்கு ஏதாயினும் ஒரு அவமானத்தைச் செய்ய நேரிடும்.[1] பரதன் தர்மங்களை அறிந்தவனாகை யால் நீ அவ்விடஞ் சென்று என் தாயைப் பாதுகாத்து வரும்படி சொல்லி அவனிடம் ஒப்புவித்து விடுவாயாக. என் தாய் ஒரு பூர்வஜனமத்தில் யாரோ சில ஸ்த்ரீகளை அவர்கள் தமது பிள்ளைகளுடன சேரவொட்டாமல் பிரித் துவிட்டிருப்பாள். இது நிஜம். ஆனதுபற்றியே இங்ஙனம் ஸம்பவித்தது. கௌஸல்யை என்னை வெகுகாலமாகப் போஷித்து மிக்க வருத்தப்பட்டு வளர்த்தனள். இனி என்னல் சுப்ரஜை முதலிய பலத்தை அடையவேண்டிய ஸமயத்திலேயே அவளை விட்டுப பிரிந்து வந்தனன. சீ! என் பிழைபடும் ஒரு பிழைபபா! லக்ஷ்மண! நான் பெ ற்ற தாயாருக்கு அளவில்லாத மனவருத்தத்தை விளைத் துக்கொண்டிருக்கிறேனே, என்னைப் போன்ற புதல்வன் ஒரு பெண்பிள்ளைக்கும் பிறக்காதிருப்பானாக. லக்ஷ்மண! எனதாயாகிய கௌஸல்யை வளர்த்துவருகின்ற சாரிகைப் பறவை அருகிலிருக்கிற கிளியைப் பார்த்து 'கிளியே! நம க்குச் சத்ருவாகிய பூனையின் காலைக் கடிப்பாய' என்று

---

1 'பரிஹீயாஹ்ரி யாமஜ்ஞே ஹாதே மம மாதரம்' என்று கோ விந்தராஜா முதலியவர்களின் பாடம். திலகவ்யாக்யானகாரர் 'பரி ஹீயாஹீயி யர்மஜ்ஞ ஹரந்தே மாதரம் மம' என்று பாடங்கொண்டு (தேமம சமாதரம்) உன் தாய்க்கும் என்தாய்க்கும், (ஹரம்) விஷத் தை, (பரிஹீயாத்ஹரி) கொடுப்பாளன்ரு? என்று அர்த்தஞ் செய் திருக்கிறார்.

சொல்லும் வார்த்தைதனைக் கேட்டு அவள் ஸந்தோஷித் திருப்பாளாகையால் தீர்யக்ஜாதியாகிய அந்தச் சாரிகை, தன்னை வளர்த்த கௌஸல்யைக்குச் செய்த அவ்வளவு ப்ரியத்தையுங் கூட, அவள் வயிற்றிற் பிறந்தும் மநுஷ்ய ஜாதியாயிருந்தும் தான் செய்யப் பெற்றிலன். ஆகையால் அந்தச் சாரிகைப் பறவையே கௌஸல்யைக்கு ப்ரீதியை விளைப்பதில என்னைக் காட்டிலும் மேற்பட்டதென்று யான்நினைக்கின றனன். பகைவரைப் பரிதபிக்கச் செய்யும் பராக்ரமசாலியே! பாக்யங் குறைந திருக்கப் பெற்றவனும் பிள்ளைப்பெற்றும் ப்ரயோஜனமற்றிருப்பவனுமாகி மனம்வருந்திப் பரிதபிக்கின ற எனது அன்னைக்குக் கொஞ்சமாயினும் உபகாரஞ செயயாத என்னைப் போன்ற புதல்வனல் பரயோஜனமென்?ப்ரயோஜனம் இலலாமற் போனாலும் போகட்டும். என் தாய பாக்யமற்றிருப்பவளாகையால் என்னைப் பிரிந்து மிகுந்த மனவருத்தங்கொண்டு பரிதபித்துச் சோகஸாகரத்தில் விழுந்து விட்டனள். இதுவே எனகுப பெருந துயரமாயிருக்கின்றது. லக்ஷ்மண! நான கோபித்துக் கொள்வேனையின, ஒருவனுகவே, அயோத்தியையை மாத்ரமேயன்றி, இந்தப் பூமண்டலம் முழுமையும் பாணங்களால் ஆக்ரமிக்கவல்லேன். ஆயினும காரணமின்றி வீர்யத்தை உபயோகப்படுத்தலாகாதன்ரு? மேலும. அதர்மத்தை ஆசரித்தோமாயின், லோகாபவாதம் உண்டாகுமென்றும், பரலோகத்தில் கெடுதி சேரிமென்றும் பயப்பட்டேன். பாபமற்றவனே! லக்ஷ்மண! அதனக் காரணத்தினல் நான அபிஷேகஞ் செய்துகொள்ளாதிருக்கினறேன' என்றனன. ராமன ஜனலஞ் சாரமில்லாத வனத்தில் முகம் முழுவதும் கண்ணீர் கூரும்பப்பெற்று இங்ஙனம் இவ்வுரைகளையும் சொல்லத்தரமில்லாத இன்னும் இதரவிஷயங்களையும் கேட்போர் மனம்

கரைகதுருகும்படி உரைத்து அனறிரவெல்லாம் புலம்பிக் கொண்டிருந்து பிறகு கடைசியில் ஆயாஸத்தினாலும் மனவருத்தத்தின் மிகுதியாலும் மேல் வார்த்தை சொல லமுடியாமல் வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தனன். இங்ஙனம் புலம்பித் தானே ஓய்ந்து எரிந்து தணிந்த அக்னிபோலவும், அலைவேகமடங்கிய ஸமுத்ரம் போலவும் வாயை மூடிக்கொண்டிருக்கிற ஸ்ரீராமபிராஜனைப் பார்த்து லக்ஷ்மணன் ஸமாதானப் படுத்திக்கொண்டே 'ராமா! நீ ஆயுதந தரித்தவர்களில் மேலாயிருப்பவன்; பினனும், அரசன். இப்படிப்பட்ட நீ புறப்பட்டு வந்தவுடன, இப்பொழுது அயோத்யா நகரம் சந்த்ரனில்லாத ராத்ரி போல் காந்தியற்றிருக்கு மென்பது நிஜம். ராமா! புருஷஸிம்ஹனகிய உனனைப் போன்றவன இப்படி பரிதபிப்பது யுக்தமன்று. இதலை எனக்கும் ஸீதைக்குங்கூட மனவருத்தம் விளைக்கின்றனை. ஸுர்யோதயமானவுடன் என்னை அயோத்யைக்குப் போகச் சொல்லினை. ராமா! ஸீதை உன்னை விடடுப் பிரிந்திருக்கப் பொருள். ஸீதை யைப் போலவே நானும் உன்னை விட்டுப் பிரிந்து ஒரு கொடிடப் பொழுதும் ஜீவித்திருக்கமாட்டேன. ஜலத்தினினறும் வெளியில் எடுத்தெறியப்பட்ட மீனகளைப்போல், உனனைப் பிரிந்து நாங்களிருவரும் ஒரு முஹுர்த்த காலமும் ஜீவித்திருக்கமாட்டோ மென்பதில ஸந்தேஹமேயிலலவ. இந்த வனத்தில வாஸஞ் செய்ய நோந்தது பற்றிப் பரிதபிக்கவேண்டா மென்றனை. சத்ருக்களை அடக்க வல்லவனே! இப்பொழுது உன்னை விட்டு நான தாயையாவது, சத்ருக்னனையாவது, ஸுமித்ரையையாவது, ஸ்வர்க்கத்தையாவது பார்க்கவும் பொறேன்' என்றனன. பிறகு தார்மிகர்களாகிய அந்த ஸீதா ராமர்களிருவரும் ஆஹாரஞ் செய்த அந்த மரத்தினடியிலேயே ஸுகமாக

உட்கார்ந்திருந்து அருகிலிருக்கும் ஆலமரத்தின் கீழ் லக்ஷ்மணன் தன்முக னற்பதித்தின படிக்கையைக் கண்டு அஃதில் படுத்துக் கொண்டனர். [1] பகைவரைப் பரிதபிக்கச்செய்யுந திறமுடையோனகிய அந்தராகவன், இவ்வாறு லக்ஷ்மணனைதெளிவாகவும் னேனேஹத்திலல் மிக்க மேலாகவும் சொன்ன வார்த்தையைக் கேட்டு மிகவும் ஸந்தோஷித்து வெகுகாலம் பூமியின மேல் படுத்திருப்பது முதலிய வானப்ரஸ்த தர்மத்தைச் செய்ய விரும்பி லக்ஷ்மணனுடனகூடிப் பதிணன்கு ஸம்வத்ஸரங்கள வனவாஸஞ் செயயுமபடி மனத்திடங் கொண்டனன். பிறகு அநத ஸமயத்தில ரகுவம்சத்தை வளர்த்து வருந் தன்மையர்களாகிய அநத ராம லக்ஷ்மணர்களிருவரும் நிமானுஷ்யமாகிய அரண்யத்தில மிகுநத பலமுடையவர்களாகையால் மலைச்சாரலகளில திரியும் ஸிஹஙங்கள் போல் பயமாவது பரபரபபாவது உண்டாகப் பெறுமல் ஸுகமாயிருநதனர்.

ஐமபத்து மூனறுவது ஸர்க்கம முற்றிற்று

{ பரத்வாஜாஸ்ரமதிற்குப போதலும், அஙகு பரத்வாஜரைக காணுதலும், பரதவாஜர் சித்ரகூட பாவதததை வர்ணிததலும. }

அம்முவருமு சுபமாகிய ராத்ரி முழுவதுமு அநதப் பெரிய வருக்ஷத்தின் அடியில இநத ஸர்யன தன்முக

---

1 இதற்கு மூலம்—'ஸலக்ஷ்மணஸயோத்தமபுஷகலம் வசோ ஹ்ருத்ய தைவம் வநவாஸமரூராத। ஸமரஸ்ஸமஸத। விஜயே பரந்தபஃ ப்ரபேதிய யாமம் ஸுசிராய ராகவஃ'. இதற்கு 'பகைவரைப் பரிதபிக்கச செயயுந திறமுடையோனகிய ராமன் தனககு லக்ஷ்மணன் வனவாஸதததைக குறிதது ஆதரவுடன் சொன்ன மிகச மேலான வாததைகளைக கேடடுத் தான் வெகுகாலம தாமதத்தில் நிலநின்று லக்ஷ்மணனுககு எலலா வர்ஷஙகளும் தன்னுடு வனவாஸஞ் செய்யுமபடி அனுமதி கொடுத்தான்' என்று மஹேஸ்வர தீர்த்தர் பொருள் கூறுகின்றனர்.

உதயமானவுடனே அங்கிருந்து ப்ரயாணமாய்ச் சென்ற னர். பெரும் புகழ் பொருந்திய அந்த ராமாதிகள் மிகவும் பெரிதாகிய அரண்யத்திற்குள் நுழைந்து ஆங்காங்கு இதுவரையில் என்றும் பாராத காணுஷித ப்ரதேசங்களைப் பார்த்துக்கொண்டே சென்று யமுனை கங்காநதியுடன் கலக்குமிடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அந்த ராமன் கஷ்டம் உண்டாகாதிருக்கும்படி கல்ல வழியைப் பிடித் துப் பலவகை வ்ருக்ஷங்களைப் பார்த்துக்கொண்டே நட க்து சென்று பொழுது திரும்புகையில, லக்ஷ்மணனைப் பார்த்து 'லக்ஷ்மண! ப்ரயாக க்ஷேத்ரத்திற்கு காற்புறத் திலும் பகவானுகிய அக்னிதேவனுக்கு த்வஜம் போன்ற புகையானது உயர எழும்பி வருகின்றது, பார். ஆகை யால் பரத்வாஜமஹர்ஷி அருகிற்றுனே இருக்கிறுரென்று தோற்றுகின்றது. காம் நிச்சயமாக இப்பொழுது கங்கா யமுனைகளின ஸங்கமஸ்தானமாகிய ப்ரயாக க்ஷேத்ர த் திற்கு வந்துவிட்டனம். ஜலங்கள் ஒன்றுடொன்று மோ தித்கொள்வதலை உண்டாகும் ஒலியும் காதுக்குப் புலப் படுகின்றது; கேள். காட்டிலுண்டாகிற காய் கிழங்குகள் காஷ்டங்கள் முதலியவற்றால் ஜீவித்துக் கொண்டிருப் பவர் வெட்டி உலர்த்தியிருக்கும் காஷ்டங்கள் எங்கும் புலப்படுகின்றன. இதோ பரத்வாஜாச்ரமத்திலுள்ள கா ணுவித வ்ருக்ஷங்களும் காணப்படுகின்றன' என்றனன. அனந்தரம அவனில்லாளிகள் இருவருமலுகமாக வழிந டந்து ஸூர்யனஸ்தமிப்பதற்குள்ளாகவேகங்காயமுனை ஸங்கமமாகிய ப்ரயாக க்ஷேத்ரத்திலிருக்கும் பரத்வாஜா ச்ரமத்திற்கு அருகிலுளள வனப்ரதேசங்களுக்குப் போ ய்ச் சேர்ந்தனர். பிறகு ராமன் ஆச்ரமத்திற்குள் நுழை ந்து தனது அபூர்வாகாரத்தைக கண்டு ம்ருகங்களும் பக்ஷிகளும் பயந்து நிற்கும்படி ஒரு முஹூர்த்தகாலம்

நடந்து சென்று பரத்வாஜமாமுனியின் ஸமீபத்திற்குப் போய்ச் சேர்ந்தனன். அனந்தரம் வீரர்களாகிய அவ்விரு வரும் ஸீதை பின்தொடர்ந்து வரப்பெற்று ஆச்ரமத்திற் குப்போய்ச் சேர்ந்து பரத்வாஜமாமுனியைப் பார்க்க விரும்பி ஸாயங்காலமாகையால் நிஷி அக்னிஹோத்ரம் முத லிய கார்யங்களை முடித்துக்கொண்டு வெளி வருவதை எதிர் பார்த்துக்கொண்டு தூரத்தில் இருந்தனர். அம் மாமுனிவர், உக்ரமான தபோநியமமுடையவர்; த்யானத் தில் மிகுந்த மனஒக்கமுடையவர்; தபோபலத்தினால் ஞா னக்கண் உண்டாகப் பெற்றவர். அம்மஹாநுபாவர் ஹோ மத்தை முடித்து சிஷ்யர்கள் கும்பல் கும்பலாய் கற்புற மும் சூழ்ந்திருக்கப் பெற்று, வெளியே வருகையில், ரா மனை கண்டு கைகளைக் குவித்துகொண்டு ஸீதையும் லக்ஷ் மணனும் தானுமாக நமஸ்காரஞ் செய்தனன். ராமன அம்முனிவரைப் பார்த்து மஹாநுபாவரே! நாங்கள் தச ரதசக்ரவர்த்தியின் புதல்வர்கள். ராமலக்ஷ்மணர்களெ னும பேருடையவர்கள். மங்கல நடத்தையுள்ள இம்மட ந்தை என் பார்யை. இவள் ஸீதையென்னும் பேர்பூண்ட வள். விதேஹனெனனும் ஜனகராஜன் புதல்வி. இவள் நிகரைதகிடமில்லாத குணங்கள் அமையப் பெற்றவளும் அழகிய சீலம் பொருந்தியவளுமா யிருப்பவளாகையால் ஜனஸஞ்சாரமில்லாத வனத்திற்கு என்னைப் பின் தொடர் ந்து வந்தனள். வ்ரதங்களில்மிக்க மனஒக்க முடையவனு ம் எனது அருமைத் தம்பியுமாகிய இந்த லக்ஷ்மனனும், நான் தந்தையின் ஆஜ்ஞைப்படி வனத்திற்குப் புறப்பட்டு வருகையில், தானும் அவ்வனத்திற்கே என்னைப் பின்தொ டர்ந்து வந்தனன். மஹாநுபாவனே! நாங்கள் தந்தை யின் கட்டளைப்படி தபோவனத்திற்குப் போகின்றனம். அந்தத் தபோவனத்தில் காய் கிழங்குகளைத் தின்று பித்

ருவசனபரிபாலனஞ் செய்துகொண்டு தர்மத்தையே ஆசரிக்கப் போகின்றனம்' எனறு இங்ஙனம் உரைத்துத் தமது வருத்தாந்தத்தை அறிவித்தனன். தார்மிகராகிய அம்முனிவர், புத்திமாணகிய அந்த ராஜகுமாரன் சொன்ன வார்த்தையைக கேட்டு, பிறகு மதுபர்க்கத்திற்காக [1] எருதையும் பூஜாவிதிக்காக அர்க்யஜலத்தையும் கொண்டு வந்தனன். மேலும், அம்முனிவர் வனத்தில விளகினறகாய்கிழங்குகளால் செய்யப்பட்டவைகளும் காணவிதாரலம் அமைந்தவைகளுமாகிய அனன விசேஷங்களைக் கொடுத்து அவர்கள் படுக்கும் பொருட்டு வாஸஸ்தானத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். அம்முனிவரும் தன்னைச் சுற்றிப் பக்ஷிகளும் [2] ம்ருகங்களும் சூழ்ந்திருக்கப் பெற்று முனிவாகளுடன்கூடி, ராமனவரக்காண்டு அவனைப் பூஜித்து ஸ்வாகதம் விசாரித்தனன். ராமனும் அம்முனிவர் செய்த பூஜனையைப் பரிக்ரஹித்து உட்கார்ந்து கொண்டிருக்கையில, அப்பொழுது பரத்வாஜர் தர்மம் நிறைந்திருக்கும்படி 'ராமா! வெகு காலங் கழித்து நீ இவ்விடம் வருகையில், நான் உனனைப் பார்க்கப பெற்றனன். உன்னை நிஷ்காரணமாக அரண்யத்திற்கு அனுப்பின விஷயத்தையுங் கேள்விப்பட்டேன். மஹாந்திகளாகிய

---

1 'மோமயாபர்க்காஹோ வேஷாயியாயீ ஆசாய ருதவிக ஸ்ஸாததோகோ ராஜாவா யர்மயுக்தஸ' என்று எருது மதுபாக்கத்திற்கு அங்கமென்று ஸ்ம்ருதியிற் சொலலப்பட்டது.

2 இதற்கு 'மயூபக்ஷிஹிராவஸீநோ முநிஹிஸி சபரந்தபஸ' என்று மூலம் 'முனிவருடைய வைபவத்தைப் பற்றித் திர்யகஜாதிகளுங்கூட ரிஷிகளோடு ஸமானமாக அம்முனிவரிடத்தில் விஸ்வாஸமுண்டாகப் பெற்று அவரை ஸேவித்துக் கொண்டிருந்தன' என்று கோவிந்தராஜர். 'முனியின் ப்ரபாவத்திலல் திர்யக்ஜாதிகளாயிருந்தும் ராமனை ஈஸ்வரனென்று நினைத்து முனிவர்களோடு ஸமானமாக அவனை ஸேவித்துக் கொண்டிருந்தன' என்று மஹேஸ்வர தீர்த்தர்.

இக் கங்கா யமுனைகள் ஒன்று சேரும் ப்ரதேசம் ஏகாக்ர மாயிருக்கின்றது; மேலும், புண்யத்தைக் கொடுப்பதும் அழகியதுமாயிருக்கின்றது ஆகையால் நீ இங்கு ஸுக மாயிருப்பாயாக' என்றனன். ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஹிதஞ் செய்வதில் மிகுந்த மனஒக்க முடையவராகிய ப்ரத்வாஜமஹர்ஷி சொல்லிய வார்த்தைகளைக் கேட்டிரா மன் அழகிய சொற்களுடன் அம்முனியைப் பார்த்து 1'மஹானுபாவரே! இவ்விடம் பட்டணத்து ஜனங்களுக்

I இதற்கு மூலம்—'ஹவந்தித ஆஸந்ந பௌரஜாநபதோ ஜந:, ஸ்ரோதுமிஹ மாம் ப்ராப்ய மத்யேஹமிமமாஸ்ரமம். ஆகமி ஷ்யதி வைதேஹீம் மாஞ்சாபி ப்ரேக்ஷகோ ஜந:, அதோ காரணமாஹ மிஹ வாஸந்ரோசயே. ஏகாந்தே பஸ்யஹவந்நாஸ்ரமஸ்யாநமுத் தமம், ரமேதயதராவைதேஹீ ஸ்ரோவார்ஹா ஜநகாத்மஜா' இதற்கு ரஹஸ்யார்த்தம்—(ஹவந்) ஸர்வஜ்ஞராகிய பரத்வாஜரே! ராவண வதத்தின் பொருட்டு ரஹஸ்யமாக அவதரித்திருக்கிற என்னை இப்படி வெளிப்படுத்துவீராயின், அப்பொழுது (பௌரஜாநபதோ ஜந:) பட்ட ணத்திலுள்ள ஜனங்களும் நாட்டுப்புரத்து ஜனங்களும் (மாம்) என் னை. (ஸ்ரோதும்) 'விஷ்ணுஞ்ச தூரீயதே த்வதீர்யயா' என்று ஸ்ருதியால பார்க்கத்தக்க விஷ்ணுவாகவும், (வைதேஹீம்) ஸீதையை, (மாம் ச) லக்ஷ்மியாகவும், தெரிந்துகொண்டு, (ப்ரேக்ஷக:) பார்க்க விரும்பினவர்களாக, (இஹ ஆகமிஷ்யதி) இவ்விடம் வருவார்கள். (அதோ காரணம்) இந்தக் காரணத்தைப்பற்றி, (வாஸம்) இங்கு வெளிப்பட வாஸஞ் செய்வதை, (ந ரோசயே) விரும்பப் பொறேன். ஆகையால் (யத்ர) எதில், பரமானந்தஸ்வரூபியாகிய எந்த என்னிட த்திலென்றபடி. (வைதேஹீ) ஸீதை, (ரமதே) 'யோ மரீயதே ஹர ஸ்தரூஹீத பதிமயா ஸ்ரியேதரைரபி விமரீயமாணயா' (ஓய்! பிறர் தேடும்படியான வைபவம் அமைந்தவளும் ஹஸ்தத்தில் தா மரைபுஷ்பத்தைத் தரித்திருப்பவளுமாகிய ஸ்ரீதேவியால யாவன் தேடப்படுகின்றாளே) என்று ஸர்வஜனங்களுக்கும் ஆஸ்ரயிக்கத் தக்க வளாகிய ஸ்ரீமஹாலக்ஷ்மியுங்கூட என்னை இரவும் பகலும் ஒழிவின்றி அனுபவித்துக கொண்டிருந்த போதிலும், அப்பொழுதே புதிதாக

கும் பள்ளிப்பட்டு ஜனங்களுக்கும் ஸமீபமாயிருக்கின்றது. ஆகையால் ஸீதையையும் எனையும் பார்க்க விரும்புகிற ஜனங்கள் இங்கு என்னை ஸுகமாகப்பார்க்க முடியுமென்றுநிதரிசனங்கொண்டு எங்களைப்பார்க்கிறதற்காக இவ்வாச்ரமத்திற்கு வருவார்களென்று நினைக்கின்றனன். இதற்காரணத்தைப் பற்றி எனக்கு இங்கிருப்பது இஷ்டப்படவில்லை. ஆகையால் ஜனங்களில் ஒருவாக்கும் தெரியக்கூடாத ஏகாந்தஸ்தலத்தில் எங்காயினும், ஜனகராஜனுதல்வியாகிய ஸீதை ஸுகத்தையே அனுபவிக்கத் தகுந்தவளாகையால் அவள் ஸுகமாக விளையாடிக்கொண்டிருக்கும்படிக்கு உத்தமமாகிய ஓராச்ரம ப்ரதேசத்தை ஆலோசித்துச் சொல்லவேண்டும்' என்றனன். அந்தபரத்வாஜ முனிவரும் ராமன் மொழிந்த சுபவசனங்களைக் கேட்டு, உடனே அவனைப் பார்த்து மிகுந்த பொருளடக்கமுள்ள உரைகளை உரைக்கத் தொடங்கி 'அபயனே! இவ்வாச்ரமத்திற்குப் பத்து கூப்பிடு தூரத்தில் மஹர்ஷிகள் வாஸஞ் செய்யப் பெற்றதும் பரிசுத்தமுமாகிய சித்ரகூட மென்னும் ஓர் பர்வதம் இருக்கின்றது. அதுகாற்

அனுபவிக்க ஆரம்பித்தாற்போல இடைவிடாத அனுராகம் உண்டாயிருக்கப் பெற்றிருப்பாளோ; அப்படிப்பட்டவனும, (ஆஸ்ரமஸ்யாகம்) 'ஆஸ்ரீயதே இத்யாஸ்ரமம' என்கிற வ்யுத்பத்தியால் 'ஆஸ்ரமம்' என்றால ஜகத்தைச சொல்லுகிறது; ஜகதுக்கு (ஸ்யாகம்) ஆதாரமாயிருப்பவனும், (உத்தமம்) ஸ்வரூபகுணவிபூதிகளில் ப்ரஹ்மருத்ராதிகளிற் காட்டிலும் மிக்க மேலாயிருப்பவனுமாகிய என்னை, அதிப்ரியராயிருக்கிற நீரொருவரே, (ஏகாந்தே பஸ்ய) ஏகாந்தத்தில கண்டு களிப்பீராக. 'ஸ்வயாஜீ ஸ்வயதமம்' என்கிறபடியே மிகவும் ரஹஸ்யமாகிய என் ஸ்வரூபத்தை வெளிப்படுத்த வேண்டாம். என்று ரஹஸ்யோபதேசமென்று மஹரிஷி வசிஷ்டர்.

புறத்திலும பார்க்க அற்புதமா யிருக்கும். [1] அதில் கொர் ண்டை முயல்களும் குரங்குகளும் காடிகளும் வெகுவா யிருக்கும். அது கதமாதன பர்வதத்தைத் நிகர்த்திருக் கும். அதப் பர்வதத்தில் நீ வாஸஞ் செய்யலாகும். மனு ஷ்யன் எப்பொழுது சித்ரகூட பாவத சிகரங்களைப் பார்ப் பாேனை. அப்பொழுதே அவனுக்குப் பாபத்தில் மனஞ் செல்லாது. மங்கள கார்யங்களிலேயே புதி சென்று கொண்டிருக்கும். [2] அந்தச சித்ரகூட பர்வதத்தில் பல நிஷிகளும பல நூறுஸம்வத்ஸரங்கள் விளையாடுவதுபோல்

---

1 இதற்கு—'மாலாஸு மலாநுசரிதோ வாராஹ நிஷேத விதம1 சிதரகூட இதி வியாதோ ரம்யமாஶ்ரஸ்தம்' என்று மூலம். வருங்காலம் நிகழ்காலம கழிகாலமாகிய மூனறு காலங்களையும் அறி ந்த மஹர்ஷி 'மாலாஸு மலாநுசரிதோ வாராஹ நிஷேதவிதம' என்று கொண்டை முயலகளும், குரங்குகளும காடிகளும் ஆகிய மூன்றையுஞ் சொனனதலால அவவிதமானவாகளை ராமனுக்கு ஸஹாயமாவாகளென்று ஸூசிப்பித்தாரென்று தெரிகின்றது.

2 இதற்கு மூலம—'ருஷயஸ்தத்ர ஸஹவோ விஹ்ருதய ஸரஶாம ஸதம1 தபஸா ஜ்வலமாநாஸ கபாலஶிரஸா ஸஹ' இங்கு 'கபால ஶிரஸா என்னும் இநதப பதத்திற்குப் பலவிதமாகப் பொருள கூறுகி ன்றனா. அதில ஒரு விதம் மூலததில் சொலலப்பட்டது. மற்றை விதங்களாவன—(கபாலஶிரஸா) என்பது சரீரம் முழுவதையுங காட் டுகிறது சரீரததோடு கூடவே ஸ்வாகசஞ் சென்றார்களென்றபடி. அல்லது—(கபாலஶிரஸா) கபாலசிரஸ்ஸென்னும் ஒரு நிஷி உளர், அவருடன் கூட மற்றவரும் ஸவர்ககஞ் சென்றார்களென் று பொருள. அல்லது (ஶரீரேண) என்னுமபதத்தைக் கூட்டிகொண்டு (கபால ஶிரஸா ஶரீரேண) கபாலசிரஸ்ஸுடன் கூடிய சரீரததோடு கூடவே யென்று பொருள. கபாலஶிரஸ்ஸாவது கபாலம திடமாயிருக்கப் பெ ற்ற சிரஸ்ஸு. கபாலம்—மண்டையோடு. அலலது—(கபாலஶிரஸா) என்று (தபஸா) எனபதறகு விசேஷணமாக்கி, சரகபாலம் மிகுந்தி ருக்கும்படி சரீரத்தை உலாத்திக் கடுமையாக நடத்தின தவசரின் மஹிமையால ஸ்வாக்க லோகஞ் சென்றார்களென் று பொருள.

ஸுகமாகத் தவஞ் செலுத்தி. அதுகத காலத்தின் ஈறுமி
மையாலும் இடைவிடாமல கபாலனெனு செயவதனு
லும் தலை மயிர்களுரும் சரீரத்தின தோலகளுரும விடாபிறற்
றுக் கபால மாத்ரம் மிகுந திருகக பெறறு அதுச சரீரத்
துடனே ஸவர்க்கலோகம் போயச் சேரநதனர். ராமர!
அது மிகவும ஏகாகதமாயிருகக்கும். நீ அஙகு ஸுகமாக
வாஸஞ் செய்யலாகுமென்று தோற்றுகின்றது. இபபடி
இல்லையாயின, இங்காவது எனதேனுகூட வஸித்திருகது
உனது வனவாஸ நியமத்தைதத் தீர்த்துக கொள்வாயாக'
எனறனர். அந்தப பரத்வாஜ மஹர்ஷி தர்மங்களை அறிந்
தவராகையால, ராமனுக்குமம ஸீதைக்கும் லக்ஷ்மணனுக்
கும் அதிதிகளுக்குச் செய்யவேண்டிய ஸத்காரங்களை நட
த்தி உபசரித்தனர். இங்ஙனம், பரயாக க்ஷேத்ரத்திலவா
ஸஞ் செய்கின்ற அததப பரத்வாஜமஹர்ஷியிடனு சென்று
பணிந்து அவர் செய்த ஸத்காரங்களையும் பெற்று அம்
மஹர்ஷியின அருகில உட்கார்ந்து அற்புதங்களாகிய
கதைகளைச சொல்லிக்கொண்டிருக்கையில, பரிசுத்த
மாகிய ராத்ரி வந்தது. ஸுகானுபவத்திற்கே உரியவர்க
ளாகிய ஸீதா ராம லக்ஷ்மணர்கள் மூவருமம ப்ரமச தீரப்
படுத்துக்கொண்டு அனறிரவெலலாம் அழகியதாகிய அத
தப பரதவாஜமஹரஷியின ஆச்ரமத்திலேயே ஸுகமாக
வஸித்திருநதனர். உதயமானவுடன புருஷ சிகாமணியா
கிய ராமன, ப்ராஹ்மீ தஜஸ்ஸுடன ப்ரகாசித்துகொ
ண்டிருக்கின்ற பரத்வாஜ முனிவரிடம் வந்து அம்முனி
யைப் பார்த்து 'ஸத்ய சீலரே! மஹானுபாவ! நாஙகள்
இனறிரவெலலாம இவவாச்ரமத்தில வஸித்திருந்தோ
மன்றோ? இனி நீர் அருளிச செயத வாஸஸ்தான தத்திற்குப்
போகினறனம். அனுஜ்ஞை கொடுபபீராக' எனறனன்.
அந்தப் பரத்வாஜரும் உதயமானது கண்டு ராமனைப் பார்

த்து 'தேனும் காய் கிழங்குகளும் சித்ரகூடபர்வதத்தில் வெகுவாயிருக்கின்றன. ஆகையால் நீ அவ்விடம் போவாயாக. மிகுந்த பலமுடையவனே! அது உனக்கு யுக்தமான வாஸஸ்தானமென்று நினைக்கிறேன். அதில் காணவித வருக்ஷங்கள் நிறைந்திருக்கின்றன. கின்னரர்களும் உரகர்களும் அவ்விடத்திற்கு வருவார்கள். மயில்களின் கேகா சப்தங்கள் அங்கு காற்புறத்திலும் செவிப்பட்டுக்கொண்டிருக்கும். மேலான யானைகளும் அங்கு அழகாய்ப் புலப்பட்டுகொண்டிருக்கும். அங்ஙனம் பரிசுத்தியுள்ளதும் ரமணீயமாயிருப்பதும் பழங்களும் கிழங்குகளும் காய்களும் ஏராளமாயிருக்கப் பெற்றதுமாகி எங்கும் புகழ் பெற்று விளங்குகின்ற அந்தச் சித்ரகூடபர்வதத்திற்குப் போகலாம்; ராமா! அழகாயிருக்கின்ற அப்பர்வதத்தினவனமத்யபரதேசங்களில யானைகளும் மானகளும் குவியல்குவியலாக ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும. நீ அவைகளைப் பார்த்து ஸுகமாகப் பொழுது போக்கலாம். அங்கு ஆறுகளும் மலையருவிகளும் மலைச்சாரல்களும் கற்கள் ஒன்றோடொன்று சேர்ந்து நெருக்கமான அழகிய ஸந்துகளும், குஹைகளும் கற்கள் வெடித்து விசாலமான ப்ரதேசங்களும் ஸீதையுடன் கூடிப் பார்த்துக்கொண்டே ஸஞ்சரிக்கிற உனக்கு மிகக மனக்களிப்பைக கொடுக்கும். அங்கு சிறு குருவிகளும் குயில்களும் களித்துக் கலகலவென்று குலாவிகொண்டிருகுகும. பற்பல மான்களும் யானைகளுமதித்து அழகாய உலாவிக கொண்டிருக்கும். இங்ஙனம் மங்கலகரமாகிய அதச் சித்ரகூடபர்வதத்திற்குச் சென்று அங்கு ஓராச்ரமம் ஏற்படுத்திக் கொண்டு ஸுகமாயிருபபாயாக' எனறனர். ஐம்பத்து நானகாவது ஸர்க்கம முற்றிறறு.

சிதரகூடதிற்கு ப்ரயாணமாதலும், ஓட மேறி யமுனைநதியைத தாண்டி அனறு ஸாயங்காலம யமுன வனதில வஸிதிருததலும,

பகைவரை அடக்கும் பராக்ரமசாலிகளாகிய அநத ராஜகுமாரர்கள் அன்றிரவு அம்முனிவரின ஆஶ்ரமத்தில இருநது உதயமானவுடன் அம்மஹர்ஷிகக நமஸ்காரஞ செய்து சித்ரகூடத்தைதக் குறித்துப் போயினர். அமமஹர்ஷியும் அவர்களுக்கு மங்களாசீர் வசனங்களை கட்டத்தினர். அங்ஙனம் அவர்கள் பரயாணமாயப போவதைதக கண்டு, நகரை பிள்ளைகளை பின்தொடர்வது போல், தாணும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றனர. பிறகு மஹராஜ்ஞியாகிய அம்முனிமன்னவர் பயங்கரமான பராக்ரமம் பொருந்திய ராமலக்ஷ்மணர்களை பார்த்து "புருஷஶ்ரேஷ்டர்களே! நீங்கள் கங்காயமுனைகள் கலகுமிடமாகிய ப்ரயாக க்ஷேத்ரத்திற்குச்சென்று, அங்கு கங்கா ஜலம மோதுவதலை திரும்பிக் கொஞ்சம மேற்கு முகமாகப் பாய்கின்ற யமுனையை அணுஸரித்துப் போவீர்களாக. ராகுவம்சத்திற் பிறநத மஹானுபாவர்களே! யமுனைநதி வேகமாகப் பாயந்துகொண்டிருகக்கும் ஸ்தலத்திற்குச் சென்று, அங்கு அணுதியாக ஜனங்கள் எப்பொழுதும தாண்டிப் போகுந் துறைக்குப் போய, தெப்பங் கட்டிக் கொண்டு அநநதியைத் தாண்டவேண்டும். பிறகு அந்நதியின் அக்கரையில் பச்சை வர்ணம் பொருநதிய இலைகளுடையதும், தனனைச் சுறறிய பல வருக்ஷங்களோடு வளர்நது வருவதும், ஸீத்தர்கள வந்திருக்கப் பெற்றதுமாகிய ப்ரயாமமெனனும ஓர் பெரிய ஆலமரம் இருக்கின்றது. ஸீதை அநத ஆலமரத்திறகுக் கைகுவித்துத் தன விருப்பங்களெலலாம ஈடேறும்படி பராரத்திக்கவேண்டும். அந்த மரத்தினருகே சென்று ஸீதை அலுத்திருப்பாளா

யின், அங்கேயே கொஞ்சகோரம் இளைப்பாறியிருக்கலாம். இல்லையாயின் மேல் கடந்து செல்லலாம். அங்கிருந்து ஓரு கூப்பிடு தூரம் போவீர்களாயின். அங்கு கறுப்பாகப் புலப்படுகின்ற ஓர் அரண்யத் தெரியும். அதில் பல வ்ருக்ஷங்களும் இலதை மரங்களும் யமுனாதீரத்திலுண்டான மூங்கிற் புதர்களும் மிகவும் அழகாயிருக்கும். அது சித்ரகூடத்திற்குப் போகும் வழி. நான் பலதடவைகளில் அவ்வழியாகச் சித்ரகூடத்திற்குப் போயிருக்கின்றேன். அது அழகான மார்க்கம். கடந்து போவதற்கு மெதுவாயிருக்கும். அங்கு காட்டுத் தீயும் உண்டாகாது. ஆகையால் அவ்வழியில் ஓர் அபாயமும் கஷ்டமும் ஸம்பவிக்காது' என்றனன். அம்மஹர்ஷி இங்ஙனம் ராமனுக்குச் சித்ரகூடம் போகும் வழியைத் தெரிவித்துப் பிறகு தனது ஆச்ரமத்திற்குத் திரும்பிச் சென்றனர். ராமனும் அம்மஹர்ஷிக்கு நமஸ்காரஞ் செய்து 'அப்படியே ஆகட்டும். நீர் நிற்கலாம்' என்று அவரைத் திருப்பி அனுப்பிவிட்டனன். அம்முனிவர் திரும்பிச் சென்ற பின்பு ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து 'லக்ஷ்மண! முனிவர் நம்மிடத்தில் கருணை கூர்ந்திருக்கின்றனர். ஆகையால் நாம் புண்யாச்ரமாக்களென்று தோற்றுகின்றது' என்று மொழிந்தனன். இங்ஙனம் தீரர்களாகிய அந்தப் புருஷ சிகாமணிகள் இருவரும் ஆலோசித்துக்கொண்டு ஸீதையைத் தானே முன்னிட்டு நடந்து யமுனாநதிக்குப் போயினர். அனந்தரம் யமுனா நதியின ஸமீபத்திற்குப் போகவும்; அந்நதி வேகமாக பரவஹித்துப் போகின்றதாகையால், 'இதை எப்படி தாண்டுவோம்' என்று அவர்களெல்லோர்க்கும் சிந்தை உண்டாயிற்று பினபு ராமலக்ஷ்மணர்கள் இருவரும் பற்பல காஷ்டங்களைக் கொண்டு வந்து அவைகளோடு உலர்ந்த மூங்கில்களைப் பரப்பிக் கயிற்றுக்குப்

பதிலாக வெட்டிவேர்களைக் கொண்டு கட்டி அழகாயிருக்கும்படி பெரியதாரு தெப்பஞ் செய்தனர். பிறகு வல்லவனுகிய லக்ஷ்மணன் வஞ்சிக்கிளைகளையும் காவற்கிளைகளையும் வெட்டி அவைகளைத் தெப்பத்தின்மேல் பரபபி லீதை ஸுகமாக உட்காரும்படிகு ஓராலவணங் கற்பித்தனன். தசரதகுமாரனுகிய ராமன், அங்கு லக்ஷ்மீ தேவிபோல இவ்வளவ்வளவென்று அளவிடமுடியாத ஸௌந்தர்யத்துடன் ப்ரகாசிக்கின்றவளும் தன் கையைப் பிடிப்பதற்குச் சிறிது வெட்கித்திருப்பவளும் தன பரீதிகிருபபிடமுமாகிய ஸீதாதேவியைத் தெபபத்தின் மேல ஏற்றினன. ராமன் அதத தெப்பத்தில் ஸீதையின பக்கதில அவளது வஸ்த்ரங்களையும் பூஷணங்களையும மண் வெட்டியையும் ஆட்டுத் தோலால் செய்த புட்டிற்கூடையையும் தமது ஆயுதங்களையும் வைத்தனன. பிறகு வீரர்களாகிய தசாத குமாரர்கள் இருவரும் முதலில் தெப்பத்தைத் தள்ளிக் கொண்டு ஸீதையை ஏற்றிவிட்டுப் பிறகு தாம் ஏறிக்கொண்டு பரயத்னபபட்டு அதை கடத்தி அகரதியைத் தாண்டினர். ஸீதை அங்கதியின் மத்தியில் வருமபொழுது அதை நோக்கி 'யழுனை தேவியே! நான உனனை இப்பொழுது தாண்டுகினறேன. என் பர்த்தா வனவாஸ வரதத்தைத் தீர்த்துக்கொண்டு சுபமாக இக்ஷ்வாகுவம்சத்தரசர்கள் பரிபாலித்து வரும் அயோத்யா புரத்திற்கு க்ஷேமத்துடன் திரும்பி வரதவுடனே உனக்காக ஆயிரம பசுக்களைத் தானஞ் செய்து நூறுகுடங்கள் நிரம்ப மதயத்தையும் நிவேதனஞ செய்து பூஜிக்கினறேன்' என்று வேண்டிகொண்டு வரதனஞ செயதனள. உத்தமஸ்த்ரீயாகிய அதத ஸீதை இங்ஙனம் ககூப்பி யழுனைதியை பரார்த்தித்துக்கொண்டே அங்கதியின தெனகரையைச் சேர்ந்தனள். பிறகு வேகமாக ப்ரவஹித்துச் செல்வதும் அலை

கள் வரிசை வரிசையாக மேலழப்பெற்று விளங்குவதும் கரையில் பல வருக்ஷங்கள நிறைந்திருப்பதும் ஸுர்யன் புதலவியுமாகிய அநத யமுனை நதியை அவர்கள் நதப்பங் கொண்டு தாண்டினர் அவர்கள் நதியைத் தாண்டி நதப் பத்தை விட்டு யமுனக கரையி லுள்ள வனத்தினின்றும் புறபபட்டுப் போகையில், குளிர்ந்து பச்சென்று விளங்கு கின்ற இலகளுடனகூடி ப்யாமமென்னும் பேர்பெற்ற ஆ லமரத்தின் அருகிற் சென்றனர் ஸீதை அந்த ஆலமரத் தின அருகில வநது 'மஹா வருக்ஷமே! உனக்கு நமஸ் காரம் என பாத்தா வனவாஸ வரதத்தை நடத்தி யீடே ற்றுவாராக. நான திரும்பி வநது கௌஸல்யையையும், யிகுந்த புகழபொருநதிய ஸுமித்ரா தேவியையும், காண் பேனக' என்று பரார்த்தித்துக கைகளைக் கூபபிகொ ண்டு அநத வ்ருக்ஷத்திறகு பரதக்ஷிணஞ செயதனள். பிறகு நிலைதக்கிடமாகாதவளும் தனக்குடபடடு கடநது கொளபவளும தன மனத்திற்கு மிகவும ஸநதோஷத் தைக கொடுபபவளுமாகிய ஸீதாதேவி இங்ஙனம் தன் மநோரதத்தை வெண்டிக்கொண்டிருக்கையில்; ராமன் கண்டு, அவள இளைபபுற்றிருககிறாளா இல்லையாவென்று பரிசீலித்து லக்ஷ்மணனைப் பார்த்து 'புருஷப்ரேஷ்ட னே! ஸீதையைப பினனே அழைத்துக் கொண்டு நீ முன்னே நடப்பாயாக. நான் ஆயுதம தரித்து உங்களிருவர் க்கும பின்னே வருகினறனன. ஸீத, பழத்தையாவது புஷ்பத்தையாவது ஏதேதை விரும்புகினறாளோ, ஏதேது அவள மனத்திற்கு இனிப்பைக் கொடுகக்குமோ, அவை யெல்லாவற்றையுங் கொண்டு அவளுக்குக கொடுப்பாயாக' எனறனன். ராமலக்ஷ்மணர்களிருவரும் இங்ஙனம் போய்க்கொண்டிருக்கையில், ஸீதை அவர்களுககு இடையில், இரண்டு ஆண் பாணகளின மத்தியில் ஓர் பெண் யானை

போல் அழகாயிருந்தனள். ஸீதை மூன்று எப்பொழுதும் பாராத வ்ருக்ஷங்களையாவது செடிகளையாவது புதரையாவது நிறையப் புஷ்பித்திருக்கிற கொடியையாவது பார்க்கும்பொழுது 'அது என்ன? அது என்ன?' என்று ராமனை விஸ்வஸித்துக் கொண்டிருந்தனள் ஸீதை விஸ்வாஸம் பொழுதே லக்ஷ்மணன் த்வரையுடன் சென்று புஷ்பங்கள் நிரம்பி அழகாயிருக்கின்ற பற்பல கிளைகளை ஒடித்துக் கொண்டு வந்து ஸீதைக்குக் கொடுத்துக்கொண்டிருந்தனன் அவர்கள் வெகு தூரம் யமுனை நதிக்கரை வழியாகவே போய்க்கொண்டிருந்தார்களாகையால் ஸீதை, அப்பொழுது மேலான மணற் குன்றுகளும் அழகிய ஜல ப்ரவாஹமும் விளங்கப்பெற்றும், ஹம்ஸங்களும் ஸாரஸப்பறவைகளும் கலகலவென்று கூவிக்கொண்டிருக்கப் பெற்றும அழகாய்ப்புலப்படுகின்ற யமுனா நதியைக் கண்டு ஸந்தோஷித்திருந்தனள். அனந்தரம் அண்ணன் தம்பிகளாகிய ராகவ லக்ஷ்மணர்களிருவரும் யமுனா நதிக்கரையிலுள்ள வனத்தின் வழியாகவே ஒரு கூப்பிடு தூரஞ் சென்று சாபபிடத் தகுந்த சுத்தங்களாகிய மருக்ங்கள் பலவற்றையுங் கொன்று பக்ஷித்தனர். அவர்கள் அங்ஙனங் கஷ்டப்பட்டபோதிலும் வருத்தமுற்றவர்கள் போல் சிறிதும் புலப்படாமல முகத்தில் ஸந்தோஷம் நிரம்பப் பெற்று மயில்கள் குஷியல் குஷியலாகக் கூவுதலால் ஒலி உண்டாகப் பெற்றுக் குரங்குகளும் பாஷாகளும் எங்குந் திரிந்துகொண்டிருக்கிற மேலான அந்தக் கரையிலுள்ள அரண்யத்தில் ஸந்தோஷத்துடன க்ரீடித்து அவ்வாற்றின் கரையில மேடுபள்ளமில்லாமல ஸமமாயிருக்கிற ப்ரதேசத்திற்குச் சென்று ஸீதைக்கு ஸமமதமான இடத்தில ஓர் வாஸஸ்தானம் ஏற்படுத்திக் கொண்டனர். ஸம்பத்தைகதாவது ஸர்க்கம் முற்றிற்று.

சித்ரகூடபாவதத்திற்கருகிலிருக்கிற வால
மீகியின் ஆஸ்ரமத்திற்குப் போதலும்,
வால்மீகியைப் பாத்தலும, அங
குப் பர்ணசாலை கட்டிக்கொ
ண்டு வெகுகாலம் வாஸஞ்
செய்தலும்

பிறகு ராதரி கடந்தவுடன ராமன், தான் தூங்கியெ
ழுந்திருந்த பின்பு கொஞ்சம் கித்ரை போகின்ற லக்ஷ்ம
ணனை மெதுவாக எழுபபி 'லக்ஷ்மண! பகைவரைப பறக்
தோடச் செய்பவனே! அரண்யத்திலுள்ள கிளிகளும்
குயில்களும் சாரிகை முதலிய மற்றைப் பறவைகளும் செ
விக்கினிதாகக கூவுகினறன. கேட்பாயாக. ப்ரயாணத்தி
ற்குக் காலம் ஆயிற்று. காம புறபபட்டுப் போவோம' என்
றனன. கித்ரை போய்க்கொண்டிருந்த லக்ஷ்மணன்.
தமையனுகிய ராமன தகுந்த காலம் பார்த்து எழுபபுகை
யில, அது முதலாக கித்ரையையும் சோம்பலையும் வழி
கடந்து வந்த ப்ரமதத்தையும் துறந்துவிட்டனன். பிறகு
அவர்கள் எலலோரும் எழுந்திருந்து பரிசுத்தமாகிய அக
நதீ ஜலத்தில விடியற் காலத்திற் செய்யவேண்டிய ஸ்நா
னம் முதலிய வியாபாரங்களை கிறைவேற்றிக்கொண்டு
சித்ரகூடத்திற்குப பரத்வாஜ முனிவர் சொன்ன மார்க்
கத்தைப பிடித்துகொண்டு கடந்து சென்றனர். பிறகு
ராமன தகுந்த காலத்தில் ப்ரயாணமாய்ப புறப்பட்டு,
லக்ஷ்மணனையும தாமரையிதழ் போன்ற கண்களையுடைய
ஸீதையையும், பார்த்து 'ஸீதே! வஸந்த ருதுவில் பலாச
வ்ருக்ஷங்கள் நாற்புறத்திலும் நிரம்பப் புஷ்பித்து கொழுப்
புப்பற்றி எரிகின்றவை போல் புலப்படுகின்றன, பார். மே
லும், புஷ்பங்கள் கிறைந்திருப்பதனல் தாமே புஷ்பமாலை
களைத் தரித்திருப்பன போலும விளங்குகின்றன. (பலலா
தக) சோர மரங்கள் நன்றாகப் பூத்திருக்கின்றன, பார்.

இவை புதர் போல் அடர்ந்திருக்கைபால், மணி தர்களால் கிட்டி காடமுடியாதவைகளாயிருக்கின்றன. மேலும், இவை இலைகளும் காய்களும் இடைவிடாமல் நிறைந்திருப்பதால் அந்தப் பாரம் தாங்கமுடியாமல் வளைந்திருக்கின்றன. இவ்வரண்யம் இப்படி அழகாயிருபபதலை இங்கு நான் ஸுகமாக ஜீவித்திருபபேன். இதற்கு ஸந்தேஹமும் இல்லை. லக்ஷ்மண! இதோ தேனீக்கள் கட்டின தேன கூண்டுகள் பதக்களவு தேனகள் நிரம்பி ஓவவொரு மரத்திலும் தொங்குகின்றன, பார். மான்கள் தெரியாமல் பாய்பந்தாற்போல புஷ்பங்கள நிறைந்திருகிற இவ்வரண்ய பரதேசத்தில், இதோ! கச்சுக்குருவி கூப்பிடுகின்றது; இதை கேட்டு, மயில் அதோ இதற்குப்ரதியாகக் கூவுகின்றது பார. இதோ சித்ரகூடம். இங்கு யானைக்கூட்டங்கள் கற்புறமும் திரிந்துகொண்டிருக்கின்றன. பக்ஷி ஸமூஹங்களும் கலகலவென்று கூவுகின்றன. கேள். இப்பர்வதத்தின சிகரங்கள் மிகவும் உயர்ந்திருகின்றன. அப்பா! சித்ரகூட பர்வதத்தின வனப்ரதேசத்தில பூமி மேடுபள்ளமில்லாமல ஸமமாயிருக்கின்றதாகையால் அது அழகாயிருகக்கும் மேலும், அதில் பல மரங்கள் நெக்கரித்துக் கொண்டிருக்கும். அது பரிசுத்தமுமாயிருகக்குமாகையால் நாம் அதில் க்ரீடித்துக் கொண்டிருப்போம்' என்றனன். அனந்தரம் அந்த ராமலக்ஷ்மணர்கள் ஸீதையோடு கூட கால் நடையாகவே சென்று கண்கொண்டு பார்க்கில் மிகவும் இனியதும மனத்திற்கு மிக்க ஸந்தோஷத்தைத் கொடுபபதுமாகிய சித்ரகூட பர்வதத்திற்குப போயச் சேர்ந்தனர. அந்தப் பர்வதம நாணவித பக்ஷிஸமூஹம் நிறைந்து மிருந்த பலவர்க்கங்களும நிரம்பி அழகாகி ஸமஸ்த வஸ்துக்களும் ஸம்ருத்தமாயிருக்கப் பெற்றிருக்கும். அங்கு நல்ல நீரியுள்ள ஜலங்களும் விளங்கிக்கொண்டிருக்

கும். ராமலக்ஷ்மணர்களும் ஸீதையும் இப்படிப்பட்ட அம் மலைக்குச் சென்று 'இனிய ஸ்வபாவமுடையவனே! இந் தப் பர்வதம் மனோஹரமாயிருக்கின்றது. இதில் பலவித வருக்ஷங்களும் கொடிகளும் இருக்கின்றன. காய் கிழங் குகளும் இங்கு ஏராளமாயிருக்கின்றன. இங்ஙனம் எல்லா ஸம்ருத்தியும் பொருந்தி அழகாயிருப்பதலை இதிலேயே ஸுகமாக ஜீவித்திருக்கலாமென்று எனக்குத் தோற்று கின்றது. மேலும், இப்பர்வதத்தில் மஹானுபாவர்களா கிய முனிவர்களும் வாஸஞ் செய்வார்கள். ஆகையால் இது கமகும் [1] வஸதியாகக்கூடும். நலியற்கை யுடை யவனே! இதில் நாம் கரீடிததுக கொண்டிருபபோம்' என்று ஒருவாக்கொருவர் சொலலிகொண்டு நிச்சயித்து மூவரும் [2] வாலமீகி முனிவனின் ஆஸ்ரமத்திறகுப போய், கைகளைக் குவித்து அமமுனிவரகு நமஸ்காரஞ் செயத னர் தாமஜ்ஞராகிய அம்மஹர்ஷியும் அவர்கள் வரக் கண்டு மிகவும ஸந்தோஷித்து, அவர்களைப் பூஜித்து, ஸ்வாகதம விசாரித்து, உட்காருங்களென்று மொழிந்த னர். பிறகு நீண்டழகிய பாஹுதண்டங்களையுடையவனும் மிகுந்த ஸாமர்த்யமுடையவனுமாகிய ராமன தன் வருத் தாந்தங்களை யெல்லாம் க்ரமப்படி அம்முனிவாக்குச் சொ ல்லி, லக்ஷ்மணனைப பார்த்து 'லக்ஷ்மண! அழகிய ஸ்வ பாவமுடையவனே! உரத்துச் சிறந்த கடடைகளைக் கொ ண்டு வருவாயாக. இங்கு ஓர் வாஸஸ்தானம ஏற்படுத் திக்கொண்டு வஸிக்கவேண்டுமென்று என மனது ஆசைப

---

1 இருப்பிடமாக.

2 ராமன் சிதரகூடதிற்குப் போகுங காலதில வாலமீகி மஹர் ஷி சித்ரகூடத்தில வஸிததிருந்தனர். பரதன அநதச சிதரகூடத் திறகு வநதபினபு ரிஷி அனைவிட்டுப் போலரென்னையால அதுமு தலாகத் தமஸாநதி தீரதில வஸிததிருநதாரென்று தெரிகின்றது.

பதினைறது. ஆகையால அதற்குரிய கடமைகளைக் கொண்டு வந்து காம் இருக்கும்படி ஓர் இடம் பார்ப்பதுவாயாக' என்றனன. பகைவரை அடக்குந் திறமுடையோனுகிய அந்த லக்ஷ்மணனும். ராமன சொன்னதைக கேட்டுப் பலவித காஷ்டங்களை வெட்டிக் கொண்டு வந்து பர்ணசாலையான்று அமைத்தினன். ராமன், காற்று மழை முதலியவைகளாலும் அணைக்கக்கூடாதபடி நிலைனறி ருபபதும் மேற்கூரையுள்ளதும் பார்க்க அழகாயிருபபது மாகிய அந்தப் பர்ணசாலையைக் கண்டு, தனகுப் பரிசர் னைய செய்துகொண்டு, 'இன்னும், என்ன ஒருஞ்ஞையிடு வாரோ' என்று மனவுக்கத்துடன் இருக்கிற லக்ஷ்மணனை நோக்கி 'லக்ஷ்மண! கறுத்த மான மாம்ஸத்தைக கொ ண்டு வருது, இநதப் பர்ணசாலையில் அநதநதத் திசை களில அதிஷ்டானம் பெற்றிருக்கிற தேவதைகளைப் பூஜிப்போம். அங்ஙனம் பூஜிப்பதற்கு முனனம், வெகு காலம் பிழைத்து சுகுமமாயிருகக வேண்டுமென்று விரும்புகிறவர்கள் க்ருஹப்ரவேசத்திற்குச் செய்யும் வா ஸ்து சாநதியை நடத்தவேண்டும். அழகிய கண்களை யுடையவனே! லக்ஷ்மண! நீ சீக்ரமாகக் கறுத்த மானை அடித்துக்கொண்டு வருவாயாக. பூஜிப்பதற்காகப் பசு வதஞ் செயவது தோஷமே யென்று சங்கிக்க வேண் டாம். சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட கார்யத்தைச் செ ய்தே தீரவேண்டும். அது தர்மமென்றே நினைப்பா யாக. அவ்விதிக்கு அனுகூலமாகிய தர்மசாஸ்த்ரத்தை யும் அவதானித்துப் பார்ப்பாயாக' என்றனன் வைரிக ளாயிருப்பவர்களை உருக்கொலையச் செய்பவனுகிய லக்ஷ்ம ணன். இப்படி தமையன் சொன்ன வார்த்தையைக் கே ட்டு அவ்வாறே கறுப்புமானை அடித்துக்கொண்டு வந் தனன். ராமன் மீளவும் அவனைப் பார்த்து 'இந்தக் கரு

மான் மாம்ஸத்தைத பசனரு செய்வாயாக. இதனல் க்ரு ஹாதிஷ்டானர தேவதைகளை ாம பூஜிப்போம். இதத ஸமயம் ஸ்திரமான சுபமுஹூர்த்தமா யிருகின்றது. இதத் தினமும் மிக ஸ்திரமானது' என்று மொழிந்த னன். ப்ரதாபசாலியாகிய அதத ஸுமித்ராபுத்ரனும் பக்ஷியம்ருகவாக்கியங்களிற் சேர்ந்த ஓர் கறுபபு மானைக் கொனறு அதனை மாம்ஸத்தை எரிகிற அக்னியில் வைத் துப் பசனரு செய்தனன். லக்ஷ்மணன், அம்மாமஸம் தன ரூகக காய்ந்து ரக்தமெல்லாம் சுண்டிப்போய பகவமான து கண்டு புருஷப்ரேஷ்டனாகிய ராமனை நோகக்கி 'தே வாகளை நிகர்த்தவனே! இந்தக கறுபபும்ருகத்தை ஸம ஸ்த அவயவங்களோடும் பசனரு செய்தனன. ஸமஸ்த அவயவங்களோடுங கூடி பாகத்தினல கறுத்திருபபது பற்றி இது கறுபபு ம்ருகம் போலவே புலபபடுகினறது. நீ இனி வாஸ்து தேவதைகளை இமமாமஸத்தைக கொ ண்டு பூஜிக்கலாம். அதறகு நீயே - ஸாமர்த்யமுடைய வன' என்றனன. குணங்கள பொருநதிய ஸ்ரீராமபிரா னும் ஜபிக்கவேண்டிய மந்த்ரங்கள் எல்லாவற்றினும் பண்டிதனுகையால, அவன ஸனனரு செய்து நியமத்து டனிருநது வாஸ்துசாந்திக்கு வேண்டிய கர்மம நிறவே றுமளவும் உள்ள மந்த்ரங்களை யெல்லாம் சுருக்கமாக ஜபித்துக்கொண்டே வாஸ்துகர்மங்களை கடத்தினன. அங்ஙனம ராமன வாஸ்து தேவதாஸமூஹத்தை யெல் லாம பூஜித்து, பரிசுத்தனாகி க்ருஹத்தில் ப்ரவேசித்த னன அளவில்லாத தேஜஸ்ஸுடன பிரகாசிகினற ஸ்ரீ ராமபிராணுக்கு அதனல் மனத்தில் மிகுந்த ஆநந்தம உண்டாயிறறு ராமன வைச்ரவதேவபலியையும் ருத்ர பலியையும் விஷ்ணுபலியையும கடத்தி வாஸ்து சாந்தியின பொருட்டு க்ருஹத்திலுள்ள பீடைகளெல்லாம் ஒழியும்

படிக்கும் மிகுந்தமங்களங்களை உண்டாகும்படிக்கும் அதற்குரிய புண்யாஹவாசன சாந்திஹோமங்களைச் செய்துக்ரமம் தவறுமல் அந்தந்த மந்த்ரங்களையும் ஜபித்து, விதியின்படி மீளவும் நெய்யில் ஸ்ருவனஞ் செய்து ஸமஸ்த பாபங்களும் சாந்தமாகும்படி ஸமஸ்த பூதங்களையும் த்ருப்தி செய்து மறுபடியும் உத்தமமான பலியை கடத்தினன். அனந்தரம் ராமன் பலியிடுவதற்காக ஏற்படுத்திய வேதிகளையும் தேவதா ஸ்தானங்களையும் அக்னிஹோத்ர க்ருஹங்களையும் ஆச்ரமத்திற்குத் தகுந்தபடி சிறியனவாக நிருமித்துக் கொண்டனன். சுபலக்ஷணங்கள் பொருந்திய ராமலக்ஷ்மணர்கள் இருவரும் வனத்திலுள்ள புஷ்ப மாலைகளாலும் பக்வஞ் செய்த மாம்ஸங்களாலும் ஜலதர்ப்பணங்களாலும் வேதங்களிற் சொல்லிய மந்த்ரஜபங்களாலும்ஸமித்துக்களாலும் தாணற்புல்லுகளாலும் தர்ப்பங்களாலும் விதி தவறுமல் பூதங்களுக்குத்ருப்தி செய்வித்து ஸீதையுடன்கூட அழகாயிருக்கின்ற அந்தப் பர்ணசாலையில் ப்ரவேசித்தனர். செடிகளின் இலைகளால செய்யப்பட்ட மேற்கூரையுடையதும் அழகாயிருப்பதும் சாஸ்த்ரங்களிற் சொல்லபபட்ட அதந்த இடங்களில் மடைப்பள்ளி முதலியவை நன்றாக ஏற்படுத்தப் பெற்றதும் அதிகமாகக் காற்று வீசப் பெறுததுமாகிய அதபபாணசாலையில ராமன் முதலிய மூவரும், தேவதைகள் ஸுதர்மஸபையில் ப்ரவேசிப்பதுபோல தாம் வாஸஞ் செயவதற்காக ப்ரவேசித்தனர். அபபொழுது ஜிதேந்த்ரியர்களாகிய அம்மூவரும் பலவகைபபட்ட பல ம்ருகங்களும் பக்ஷிகளும் நிரம்பி, சித்ரவிசித்ரங்களாகிய பூங்கொத்துக்கள் விளங்கப் பெற்ற செடிகளுடன கூடி, பாஷாணகளின கீங்காரங்களாலும் மற்ற ம்ருகங்களின் கண்ட தவனிகளாலும் கலகலவெனவொலித்துக்கொண்டிருக்கிற அந்

தச் சித்ரகூடபர்வதத்தின் வனப்பதேசத்தில் ஸுகமாக விளையாடிக் கொண்டிருந்தனர். ராமன் மிகவும் அழகாயிருக்கிற அச்சித்ரகூட பர்வதத்தையும், ம்ருகங்களும் பக்ஷிகளும் ஸஞ்சரிக்கப்பெற்று அழகான துறையமைந்துமால்யவதி யெனனும் பெருடைய அப்பர்வதத்திலுள்ள நதியையும் சோகதவுடனே ஸகதோஷத்திலுல் சரீரம் முழுவதும் பளபளவென்று விளங்கப பெற்றுப் பட்டணத்தை விடடு வகதத்னுலுண்டான மனவருத்தஞ் சிறிதுகதானுமவிருந்தனன். ஐம்பத்தாருவது ஸர்க்கம்முற்றிற்று.

{ஸுமந்தரன் ராமனை விட்டு அயோத்யைக்குப் போதலும், பட்டணத்து ஜனங்கள மனவருத்தமுறுதலும், தசரதன சோகப்படுதலும.

இங்ஙனம் ராமன் புறப்பட்டுக் கங்கையின் தெனகரைக்கு வந்தவுடனே குஹன் மிக்க மனவருத்தமுற்று அந்த ரகுகுலசிகாமணி கண்பார்வையைக் கடந்து செல்லும் வரையிலும், அங்கேயே இருந்து ஸுமந்த்ரனுடன் கூட ராமனது குணங்களைப் பேசிக்கொண்டிருந்து அவனை அழைத்துகொண்டு தன் வீட்டிற்குப போயினன. அந்த ப்ருங்கிபோபுரத்திலுள்ள சாரர்கள், ராமாதிகள் பரத்வாஜமுனிவரிடம் போவது, பாயாகக்ஷேத்ரத்தில அம்முனிவருடன கூடியிருப்பது முதலாகச் சித்ரகூடபர்வதத்திற்குப் போகும் வரையிலும நடநத வருத்தாகதங்களெல்லாவற்றையும் ஸுமந்த்ரனுக்குத் தெரிவித்தனர். பிறகு ஸுமந்த்ரன குஹனிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு மேலான குதிரைகளைத் தேரில் பூட்டிக்கொண்டு மிக்கமனவருத்தத்துடன அயோத்யாபுரத்திற்குப்போயின்ன். அவன், மார்க்கத்தில் புஷ்பங்கள் நிறைந்து குழுகுழு

வென்று மணங் கமழ்ந்துகொண்டிருக்கிற வனபாகதசங் களையும், கதிகளையும், ஸரஸ்ஸுக்களையும், க்ராமங்களை யும், பட்டணங்களையும் பார்த்துக்கொண்டே தாண்டிச் சென்றனன். [1] அனந்தரம் லக்ஷ்மணத்ரன் ப்ருங்கிபோபுரத் தினின்றும் புறப்பட்ட மூன்றுவது நாள் ஸாயங்காலத் தில் அயோத்தியைக்குப் போயச் சேர்ந்து, அந்நகரம ஆந க்தங் குனறி அழுதாலெழுப பெற்றிருக்கக் கண்டனன். ஐயோ! லக்ஷ்மணத்ரன ராமனை விட்டுப் பிரிந்ததற்கு முத லே மனத்தில் பரிதபித்துக் கொண்டிருந்தனன் மேலும், பாழடைந்தாறபோலாகிநிச்சயப்தமாயிருக்கினற அந்நகர த்தைக் கண்டவுடனே மனவருத்தங்கரைபுரண்டு மேலெ ழுப் பெற்றுத தனகுள் தான ‘இப் பட்டணமும் இதி லுள்ள யானைகளும் குதிரைகளும ஜனங்களும ஜனதிப தியும கூட ராமனுக்கு சேர்ந்த மனஸ்தாபத்தினல் மன வருத்தம் உண்டாகப பெற்று அதனல் நன்கு பீடிக்கப்ப ட்டு அதச் சோகாக்னியில் ஆழ்ந்து அவ்வகனியால த ஹிக்கபபடாதிருப்பார்களா’ எனறு சிந்தித்தனன, லக்ஷ் மந்த்ரன இங்ஙனஞ சிநதித்துக்கொண்டே ‘பட்டணம் நிச்சயப்தமாயிருக்கினறது. மனனவனது கதி யாதாயிருக் கின்றதோ’ என்று வேகமாகக் குதிரைகளை ஓட்டிக்கொ ண்டு பட்டணத்துத்வாரதநிற சேர்ந்து அதில் த்வரை யுடன ப்ரவேசித்தனன. லக்ஷ்மந்த்ரன வருதுகொண்டிரு க்கையில், படடணத்து ஜனங்கள் கண்டு நூறுநூறுக வும் ஆயிரமாயிரமாகவும கும்பல்கூடி ‘எங்கே ராமன்’

---

1 முதலநாள கங்கைகரையெத தாண்டி ஒரு வ்ருக்ஷத்தின் கீழ் வா ஸஞ செயதல, இரண்டாவது நாள பாதவாஜாஸ்ரமத்தில வஸித் தல், மூன்றுவது நாள யமுனைக கரையில இருத்தல, நான்காவது நாள சித்ரகூடத்திற்குப் போதல, ஐந்தாவது நாள் ராமரைக திரு ம்பி வருது வ்ருத்தாந்தத்தைத தெரிவிததல—என்று தெரிகின்றது.

என்று விளவிக்கொண்டு அவனை எதிர்கொண்டு ஓடிவந்தனர். ஸுமந்த்ரனும் அவர்களுக்கு 'நான கங்காநதிக்கரையில் மஹாநுபாவனாகிய ராமனை விட்டு விடைபெற்றுக்கொண்டு அதன்தார்மிகனது கட்டளைப்படிக்குத் திரும்பி வந்தேன்' என்றனன். ஜனங்கள், ராமரதிகள் கங்கையைத் தாண்டிச் சென்றார்களென்று தெரிந்து முகத்தில் கண்ணீர் தளும்பப பெற்று, 'ஐயோ! ராமனை இழந்தோமே! ரீ! எனை பிழைப்பு' என்று பெருமூச்செறிந்து 'ஹா! ராமா!' என்று கூபபிட்டுக் கதறினர். அந்த ஜனங்கள் கும்பல்கும்பலாக நின்றுகொண்டு 'இந்த ரதத்தில ராமனைப் பார்க்க கேரப் பெறுதிருக்கின்றோமே. அவனை பார்க்கப் பெறுமல் பாழாய்விட்டோமே [1] நாம் தானஞ் செய்யும்பொழுதும் யாகம் நடத்தும்பொழுதும் விவாஹம் முதலிய மங்கலகார்யங்களிலும் பெரிய லபைகள் சேரும்பொழுதும் அந்தந்தக் கார்யங்களை நமக்கு நடத்துமபொருட்டு நமக்கு நடுவில் வந்திருந்து நிறைவேற்றுந தாமிகணகிய ராமனை இனி நாம் ஒருக்காலும் அங்ஙனமே நங்கூட்டத்து நடுவில் வந்திருக்கப பார்க்கப் போகிறதில்லை. ராமன் 'ஜனங்களுக்கு எது ஹிதம்? எது ப்ரியம்? எதனல் லாகம் உண்டாகும்?' என்று நன்கு ஆலோசித்துப் பார்த்து, தனது தன பிளைக

I ஒருவன் தானஞ் செயயுமபொழுது தேசகாலங்களை தெரிவித்து ஸத்பாதரமா யிருப்பவனுக்குக கொடுப்பிக்கிறதற்காகவும, யஜ்ஞங்கள செய்யுமபொழுது ந்யாயத்தின்படி ஸமபாதித்த தரவ்யங்களைக் கொண்டு அந்த யஜ்ஞங்களை செயவித்துக காமங்களில் வரும் ஸந்தேஹங்களை தீர்த்து மறந்தவைகளை ஜ்ஞாபனஞ் செயகைக்காகவும விவாஹத்தில உபயவாகத்தில்ளளவாகளுக்கும பொதுவாக நினறு ஸமமதிக்காதவாகளுக்கு வேண்டிய தரவ்யங்களைக் கொடுத்துக் கர்மங்களைத் தவறுமல நடப்பிகிறதற்காகவும, ராமன் அருகில வந்திருப்பானென்று கருத்து.

ஸுப பாதுகாப்பதுபோல இபபடடணம முழுமையும பாதுகாத்து வருதாேன' எனறு ஒருவரோடொருவர சொல்லிகொண்டிருக்கையில், ஸுமந்தன் ரெயிலுற்றனன. ஸுமந்தன கடைத்தெருவில போகுமபொழுது இருபுறத்திலும ஸ்த்ரீகள் ராமதுக்கத்திணை பரிதபித்துரரளரங்களினினறுந் தன்னைப் பார்த்துச் செய்யுங் கதறல்களைக் கேடடுக்கொண்டே சென்றனன. அந்த ஸுமந்தன பரமதுக்கத்திணை பீடிக்கப்பட்டு மனமயங்கின ஜனங்களைப் பார்க்கப் பொறுமல முடடாகதிட்டி முகத்தை மூடிக்கொண்டு ராஜமார்கததின மத்தியில் சென்று. தசரதமஹாராஜன் வாஸஞ செயயும் க்ருஹத்திற்குப் போயச் சேர்ந்தனன. அவன சீக்ரமாக ரதத்தினினறும கீழே இழிந்து ராஜக்ருஹத்தில ப்ரவேசித்து, அரசன வெளிகிளமபி வராதிருப்பதுபற்றி வெகு ஜனங்கள் திறந்திருக்கிற ஏழு கட்டுகளைத் தாண்டிச் சென்றனன. அபபொழுது அங்குள்ள ஸ்த்ரீகள் மேடைகள் மேலிருநதும் ஏழு நிலையுள்ள விமானங்களினினறும உப்பரிகைகளினின்றும ஸுமந்த்ரன வருதலைக கண்டு ராமனைக்காணுமையால் துககத்தில் ஆழ்நது பரிதபித்து ஹாஹாகாரஞ் செய்தனர். அநத ஸ்த்ரீகள் மேனமேலும் துக்கத்திணை வருநதி மைதிலநகரத்தில நிரமலங்களாகிய கண்களினில நீர் தளும்பப் பெற்றுக் கலக்கமுற்றிருக்கையால ஒருவரை யொருவர் ஸபஷ்டமாகப் பாராக ராமனை பாராதுகொண்டிருநதனர. அனநதரம ஆங்காங்கு உபபரிகைகளிலிருநது தசரதனுடைய பெண்டிகள ராமனை காட்டுகுப போன மனவருத்ததை பரிதபிதது மெதுவாகத் தமகளுள் 'ஸுமநத்ரன இங்கிருநது ராமனை கூடடப் போயினன். இவவிடத்திற்கு ராமனில்லாமல் வந்தானே! துக்கித்துக் கொணடிருகிற கௌஸல்யையைக்

குத்தான் என்னவென்று சொல்லப்போகின்றனன்? [1] ராமனில்லாமல எனக்குப் பிழைத்திருப்பதே கஷ்டமாயிருக்கின்றது. அபபடியே பிள்ளை புறபபட்டுப் போகையில கௌஸல்லையை பலாத்காரமாக பாணன்களைப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பாளெனபதும் நிஜமாக ஸாத்யமன்றனறே எனக்குத் தோற்றுகின்றது' எனறு சொல்லிக் கொண்டனர். அந்த ஸுமந்த்ரன் இங்ஙனம் அப் பெண் நிகரை சொல்லிக் கொள்ளும் ஸத்யமான பேச்சுகளைச் செவியுற்றுக் கொண்டே, அவரது சோகாக்னியால் எரிவது போல் புலப்படுகின்ற ராஜக்ருஹத்திற்குள் வேகமாக ப்ரவேசித்தனன். அவன எட்டாவது கட்டில் நுழைந்து அங்கு வெளுத்துப புலபபடுகினற மந்திரத்தில் புத்ர சோகத்திலை வருந்தி மனமயங்கி முகம் வாடி உட்கார்ந்திருக்கிற மன்னவனைக் கண்டனன். ஸுமந்த்ரன அங்கு உட்கார்ந்திருக்கிற அம் மன்னவனிடஞ் சென்று நமஸ்காரஞ் செய்து. ராமன் சொன்னவற்றில் சிறிதாயினும் தப்பாமல் ஸரியாகச் சொல்லிவிட்டனன். அரசனும் மனங் கலங்கப் பெற்றிருபபதனால் அவவுரைகளைக் கேட்டுப் பதிலொன்றுஞ் சொலல முடியாமல் ராமன் காட்டுக்குச் சென்ற மனவருத்தத்திலை பரிதபித்து மூர்ச்சித்துப் பூமியில் வீழ்ந்தனன். இபபடி மன்னவன மூர்சசித்தவுடனே அந்தப்புர மடந்தையர்கள எல்லோரும் சோகத்திலை ஆழ்ந்து வருந்தி, அவன தரையில விழும் பொழுதே கைகளை உயரத்

I இதறகு மூலம—'யயாச மயே வாஜீவமேவ நஸுகாம நிருவம। ஆசஹிஷே புதஸ்தே ந்யாயாதே கௌஸலையாயதாஜீவதி' 'கௌஸலையை பலவந்தமாகப் பிழைத்திருக்கிறுளென்பது மிகவும கஷ்டமாயிருப்பது. இப்படி துக்கபபிழைப்பாகப் பிழைத்திருபபது மற்றொருவாக்குந தரமனறனை நிஜமாக எனகுத தோற்றுகினறது' எனறு மஹேஶ்வரதீர்தரா.

தூக்கிக்கொண்டு 'ஹா' என்று கதறினிட்டனர். அப்பொழுது கைலஸ்யை, ஸுமித்ரையுந் தானுமாகத் தரையில் விழுந்த பர்த்தாவை எழுப்பி எடுத்து 'மஹாபாகயழுடையவனே! எவர்க்குஞ் செய்யத் தாமலலாத கார்யத்தைச் செய்யுந் திறமையுள்ளவனுகிய உமது புதல்வன் ராமன் அனுப்புகையில், அவன வாஸஞ செய்கிற வனத்திலிருந்து வந்திருக்கிற தூதனுகிய இந்த ஸுமந்த்ரனைப் பார்த்து என பேசாதிருக்கின்றீர்? ரகுகுலதிலகனே! ராமனைக் காட்டுக்கு அனுபபி நீதியினின்றும் தவறினீர். இபபொழுது அதற்கு லஜ்ஜைப் படுகின்றீர். அது யுக்தமன்று. எழுந்திரும், உமக்குச் 'சொல்லித் தவறுதிருக்கும வரத்தைப்பற்றி புண்யம் உண்டாகுமாக, சோகிப்பதனல ப்ரயோஜனம் இல்லை. தேவா! எவனிடத்தில் பயப்பட்டு ஸுதனைப் பார்த்து ராமவருத்தாந்தம் வினவாதிருக்கின்றீரோ. அந்தக் கைகேயி இவ்விடம் இல்லை. ஆகையால பயமினறி மனக்கவலையற்றுப பேசலாகும்' எனறனள். இங்ஙனம் அந்தக் கௌஸல்யை சோகத்தில்ல் வருந்திக் கண்ணீர் தளும்பப் பெற்றுத் தழுதழுத்த கண்டத்துடன் மஹாராஜனைப் பாரத்து மொழிந்துவிட்டு உடனே சோகாதிசயத்தில்ல் தானும் கீழே விழுந்தனள். இவ்விதம் புலம்பித் தரையில் விழுந்த கௌஸல்யையையும் மூர்ச்சித்துக் கீழே விழுந்திருக்கிற பர்த்தாவையும் பார்த்து ராஜபத்னிக ளெல்லோரும் பெருங்குரலிட்டழுதனர். அனந்தரம் அவ்வருதப்புரத்தில இங்ஙனம் அழுகுரல் உண்டாவதைக் கேட்டுப் பட்டணத்திலுளள வயது சென்றவர்களும் பருவம் நிரமபியவாகளுமாகிய புருஷர்களும் ஸ்த்ரீகளுமு ஆகிய அனைவரும் நாற்புறத்திலும் சோதனஞ் செய்தனர. அங்ஙனம் அந்தப் பட்டணம் முழுவதும் ராமன வனத்திற்குப் போன ஸமயத்திற் போல மீளவும் பெ

ருங் கலக்கம் பெற்றிருந்தது. ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுமந்த்ரன் தசரதனிடத்தில ராமன்
சொலலியனுப்பிய ஸமாசாரங
களைக் கூறுதலும் ஸீதை
யின் துககத்தைத் தெரி
வித்தலும.

பிறகு ஸீதாபசாரங்கள் செய்யப் பெற்று ஸுமந்த்ரனிருக்குந திசைக்கு முகந் திருப்பிக் கொண்டு ராமனதுவ்ருத்தாந்தங்களை விசாரிக்கும் பொருட்டு அவனை அருகில் அழைத்தனன. அனந்தரம் ராமனையே நினைத்துக் கொண்டு மிக்க மனவருத்தம் உண்டாகப் பெற்றுப் புதிதாய பிடிபட்ட யானைபோல் பரிதபித்துப பெருமூச்செறிந்து தியானஞ் செய்வதுபோல் ஏதுந் தோற்றப் பெறுமல் வாயை மூடிக கொண்டிருந்து வயாதிக்ரஸ்தமாகிய தஞ்ஜரம்போல சிந்தையுற்றிருக்கின்ற வ்ருத்தனுகிய அம்மஹாராஜனிடம் வந்து ஸுமந்த்ரன் கைகளைக் கூப்பிக் கொண்டு நின்றிருந்தனன். அரசனும், தன்னருகில் புழுதி படிந்த அவயவங்களோடு முகத்தில மிகுந்த கண்ணீர் பெருக ஓளி மழுங்கி நிற்கிற ஸுமந்த்ரனைப் பார்த்து மிகவும் பரிதாபம் அடைந்து 'ஸுதனே! மேலானஸுகங்களை அனுபவித்த தர்மஸ்வபாவனுகிய அந்த ராமன் எந்த வருக்ஷத்தின கீழ் வஸித்திருக்கின்றனன்? எதைச் சாப்பிடுகின்றனன். ஸுமந்த்ரா! அவன் துக்கத்தை அனுபவிப்பதற்கு உரியவனன்றே! மேலான பதிக்கையில் படுத்துகொள்ளவேண்டியவனுயிற்றே! அப்படிப்பட்ட ராஜகுமாரன் கஷ்டப்பட்டு வெறுந தரையில் அநாதன்போல் எப்படி படுத்துக்கொள்கின்றனன். எவன் போகும்பொழுது காலாட்க

ளும் தேர்களும் யானைகளும் பின்தொடர்ந்து செல்லு
மோ, அப்படிப்பட்ட ராமன இப்பொழுது ஜனஸஞ்சா
ரமில்லாத அரண்யத்தில் எபபடி இருக்கினறனன கருநாங்
களாகிய ஸிம்ஹாதி ம்ருகங்களும மலைப்பாம்புகளும் க்ரு
ஷ்ணஸர்ப்பங்களும் நிறையத் திரிகதுகொண்டிருக்கிற
வனத்திற்கு என் குமாரர்களாகிய ராமலக்ஷ்மணர்களும்
ஸீதையும் எப்படி போயிருக்கினறனர். ஸுமகத்ரனே!
ஸீதை மிகவும் ஸுகுமாரமாயிருப்பவள். அவள் கநிமையக்
கண்டால் எவர்க்குத்தான் மனவருத்தம உண்டாகாது.
அப்படிப்பட்ட ஸீதையை அழைத்துகொண்டு அநத
ராஜகுமாரர்கள் இருவரும் ரதத்தினினறும் கீழே இறி
ங்கு எபபடி கால்நடையாய்ப் போயினர்? ஸுதனே! அப்ப
வினீதவனைதகள் மநதரபர்வதத்தில் பரவேசிபபதுபோல
வனஞ்சாரத்தில் ப்ரவேசிக்கினறனர் புதல்வர்களை கண்
ணாரக் காண தேரபபெற்றாயாகைபால நீ ப்ரயாஜனங்க
ளெலலாம் நிறைவேறப் பெறறனை. அரண்யத்திற்குப் போ
னபினபு ராமன் யாது மொழிகதனன்? லக்ஷ்மணன் யா
து கூறினன்? ஸீதையும் என்ன சொல்லினள்? ராமன எங்
கெங்கு உட்காரநதிருகதாரோ, எங்கெங்குப் படுத்திருக
தாரோ, அவை யெல்லாவற்றையும எனக்கு விஸ்தாரமாக
வர்ணித்துச் சொல்லவேண்டும். யயாதி ஸ்வாக்கத்தினி
ன்றும் கீழே விழும்பொழுது, தனக்கு ஸஜ்ஜனஸஹவா
ஸம் நேரிடும்படி இநத்ரனை வேண்டிக்கொண்டு அதனால்
ஸ்வர்க்கத்தினினறும் கழுவிக் கீழே விழுந்த துகக்ம் சிறி
தும் நெஞ்சில தோறறப் பெறாதிருகதனன. அபபடியே
காணும் ராமனை விட்டுப் பிரிநத மஹாதுககத்தில் ஆழ்ந்
திருப்பினும், அவனது சரித்ரத்தைக் கேட்பதனலாவது
அநத வருத்தந் தீரப் பெற்றுப் பிழைத்திருப்பேன்' என
றனன். மன்னவன் இங்ஙனம் விலுவுகையில், ஸுமந்த்ரன்

கண்டத்தில் கண்ணீர் வந்தடைக்கப் பெற்று அதனால் தழுதழுத்த வார்த்தையுடன் அம்மஹாராஜனைப் பார்த்து 'மன்னவர் தலைவனே! ராமன தர்மத்தையே பரிபாலிக்க முயன்று உன்னை நினைத்துக் கைகளைக் குவித்துத் தலை வணங்கி நமஸ்காரஞ் செய்து எனனைப் பார்த்து 'லாதீ! என தந்தை ஆத்மஸ்வரூப முணர்ந்தவன்; ஆகையால் தலை வணங்கி நமஸ்காரஞ் செயயத் தகுந்தவன்; ஆகை யால நான அவனை நமஸ்கரித்தேதனென்று மொழிந்து எனகருப பதிலாக அம்மஹானுபாவரது பாதங்களிரண் டிலும தலை வணக்கி நமஸ்காரஞ் செயயவேண்டும். ஸகி தனே! அந்தபபுரத்தில 'இவர் அவர்' என்று பாராமல் எல்லோரகளும் நான சொன்னேனென்று சொலலி எனது ஆரோக்யத்தை அறிவித்து அவரவர பருவத்துகுத் த குந்தபடி. எனது நமஸ்காரத்தையுந தெரிவிக்கவேண்டும். என தாபாகிய கௌஸலலையக்கும் நீ பாஸ்மாரூமல் என் க்ஷேமத்தையும் எனது நமஸ்காரத்தையும் சொலலவேண் டும அவளுக்கு, தர்மத்திலாவது பர்த்தாவினிடத்திலா வது எமாரூமல் மனஸுகுகழுற்றிருகுகும்படி நான சொன் னதாகச் சொலலவேண்டும். மேலும, இவர்த்தையை யுங் கூட அவளிடம் கூறுவாயாக 'தேவீ! நீ எப்பொழு தும தாமத்தைக் கைவிடாமல் அந்தந்தக் காலங்களில் தவறாமல அக்னிஹோத்ர கருஹங்களுக்கு உபசாரஞ் செ ய்துகொண்டிருபபாயாக. அரசரது பாதங்களில் தெய்வ த்திற்குப்போல பரிசர்யை நடத்திக்கொண்டிருபபாயாக. உனக்குச் சக்களத்திகளாகிய கைகேயி முதலிய என தா ய்மாரகளெலலோரிடத்திலும் நீ மேற்பட்டவளென்கிற கர் வமாவது, 'நான ஜ்யேஷ்டபத்னியாகையால ஒருவர்க்குக் கீழ்ப்படிந்திருக்கலாகாது'எனகிற மனப் பெருமையாவது உண்டாகப் பெறாமல் அவை யிரண்டையும் தூரத்தில்

துறந்திருப்பாயாக. அம்மா! அரசனையும், அரசனைப் போல கௌரவிக்கத் தகுந்தவளாகிய கைகேயியையும் அனுஸரித்திருப்பாயாக. அரசனுக்குப் பின்பு கைகேயியே மேன்மைப் படுத்துகைக குரியவளெனபது முன்னடாயிருபபினும் ராஜாவினிடதிற்போல அவளிடத்தில் கடந்துகொள்ள வேண்டும். அரசர்கள் தனத்தினால் பெரியோராகளேயனறி வயஸ்ஸைப பற்றி அனறு. தனத்தினால் பெரியோராயிருப்பவர்களே ராஜாகளாவார்கள். ஆகையால பரதன் சிறியவனுயினும் அவனை ராஜாவாகையால அவனை நீ பெரியவனென்றே பாவிக்க வேண்டும. ராஜ தர்மத்தை மனத்தில் படித்திக்கொள்வாயாக. இது உனக்கே தெரிந்திருக்கும்' எனறனன. பரதனிடஞ சொலலும்படிக்கும் எனனைப் பாரத்து "லக்ஷ்மண! நீ நான சொன்னேனென்று பரதனுக்கு என் க்ஷேமத்தைச் சொல்லவேண்டும். மேலும், தாயமார்கள் அனைவரிடத்திலும் பேதமினறி நயாயத்தினபடி நடகக வேண்டுமெனறு நான சொன்னதாக அவனுககுச் சொல்ல வேண்டும். இக்ஷ்வாகு வம்சத்தை மனக் களிப்புறச் செய்யும் மஹாபுஜனுகிய அநதப் பரதனேனு இனனும், 'நீ யுவராஜனுயிருநது, ராஜ்யத்தில் ப்ரதானமாகத் தகப்பனாரையே வைத்து அவரது ஆஜ்ஞையின்படி பரிபாலித்து வரவேண்டுமேயனறி அவரை உல்லங்கனஞ் செய்யலாகாது. எனனில், அவர் மிகவும வயது சென்றவர்; ஆகையால் அவர் சொனன வார்த்தைகுத் தடை செய்யலாகாது. யௌவராஜ்யத்தைக கைப்பற்றி அவரது ஆஜ்ஞையை நடத்தி இஷ்டங்களான போகங்களை அனுபவித்து ஜீவித்திருப்பாயாக' என்றும் சொலலுவாயாக என்றனன. ராமன் மீளவும் என்னைப் பார்த்துக் கண்ணீர் மிகவும் தளும்பப் பெற்றுப் பரதனை உத்தேசி

த்து 'பரதா! என் தாய் பிள்ளைகளிடத்தில் மிகுந்த ப்ரே
ம முடையவள். அதற்குத் தகுந்தபடி நான் அவ்வளரு
கில் இல்லாமற் போயினும் நீ எனக்குப் பதிலாக இருந்து
உன் தாயைப போலவே என தாயாரையும் பார்த்துக்
கொள்ள வேண்டும்' எனறு இங்ஙனம் எனனுடன சொ
லலிக்கொண்டே மனவருத்தத்திறல் கண்களிரண்டும்
செந்தாமரை மலர்போல் விளங்கப் பெற்று மிகவும் க
ண்ணீர் பெருகினன. லக்ஷ்மணன மாத்ரம மிகுந்த
கோபாவேசத்துடன் பெருமூச்சுவிட்டுகொண்டு இந்த
ராஜகுமாரனுகிய ராமன் எந்த அபராதஞ்செய்தானென்
றுநகரத்தினின்றும் துறத்தப்பட்டனன, ராமனை அரண்
யத்திற்கு அனுப்பியதைப்பற்றி நாங்களெலலோரும மி
குந்த மனவருத்தம் அடைகினறனம். இங்ஙனம மமமைப்
போனறவர்களுக்கு இந்த மனவருத்தம் கொடுபபதறல்
அம்மனனவன செய்தது மிகவும் அகார்யமே என்பதில்
ஸந்தேஹமேயில்லை. அவனரசன துச்சமாகிய கைகேயி
யின் ஆஜ்ஞைகு உடபட்டு இப்படிபபட்ட துஷ்டகார்ய
த்தைக் காரயமெனறு நினைததுச் செயதனன. அரசன
தான் செயத ப்ரதிஜ்ஞையை நிறவேற்றினனையின,
அது எபபடி அகாரயமாகும்?' எனபாயோ, கைகேயி
ராஜ்ய லோபத்திறல ராஜாவினிடத்தில் ராமனைக் காட்
டுக்கு அனுபபும்படிக்குச் சொலலிச் செய்வித்தேதயன்றி
வேறில்லை. -ஆகையால் இது தோஷமெனபது பற்றிச்
சொல்லவேண்டிய அவச்யமே யிலலை. அன்றியே கை
கேயிக்கு வரங் கொடுத்திருநதாலுகையால் அதுபற்றி
இங்ஙனஞ் செய்ய கூடாடதென்றூலும், எவ்வித த்திலும்
துஷ்கார்யஞ் செய்தேதயாகுமன்றி அழகாகவே செயதா
னெனறு சொல்ல முடியாது. அவ்வரங்களுககு ராமனை
அரண்யம் போகத் துறத்துவதும் பரதனுக்கு ராஜ்யத்

தில் பட்டாபிஷேகஞ் செய்வதுமே பலநாகளாக வேண்டு மென்று நிர்பந்தமில்லை யன்றோ? ஆகையால் இது எப்படி பார்த்த போதிலும் துஷ்காரியமே யென்பதற்கு லகதே ஹமே யில்லை. இப்படி எங்களை பீடிப்பது, தெயவமே தன் மனம் போனபடி மன்னவனைத் தூண்டிவிட அதற்குவசப் பட்டு மனனவன் செயதானன றிஸ்வபுத்தியைக் கொண்டு செய்யஷில்லை யெனனிலும், தெயவம பரேரித்த பொழு திலும் எதாவதொரு தோஷத்தை முனனிட்டுக கொண் டே பரித்யாகஞ செய்யவேண்டும். ராமனை பரித்யாகஞ் செயவதற்கு அப்படிபபட்ட காரணமு ஒனறும் புலப்பட வில்லை. ராமனை அரண்யத்திற்கு அனுப்புவதே நிரம்ப வும நயாய விருத்தமாயிருக்கின்றது. ஆயினும புத்திக் குறைவினால ஆலோசியாமல் மனனவன செயது விட்ட னன் ஆகையால் அது இப்பொழுது அவனுக்கே அனு தாபத்தை விளைக்கப போகினறது. தகதையை நிருதிகத லாகா தென்பாயோ? எனக்கு மஹாராஜனிடத்தில் தக் ஷதியனனும புத்தி உண்டாகவில்லை. எனக்கு உடனபி றந்தவனும ஸ்வாமியும் பநதுவும் தகதையும் ராகவனே. ஸமஸ்த லோகப்ரியனும ஸர்வலோக ஹிதனுமாகிய ரா மனைக் கைவிட்டனை. இப்படிபபட்ட க்ரூரகர்மத்தைச் செயததனால் உலகங்களுக்கெல்லாம் அப்ரியனும ஸர்வ லோகஹிதத்தில ஆஸக்தியற்றிருப்பவனுமாகிய உன்னி டத்தில் பரதனை போனறவனுகுத தவிர மற்றை எவ ர்க்காயினும பரீதி எபபடி உண்டாகும் ஸகல பராஜ்ஜி னை மனத்திற்கும இனிபபைக் கொடுகக்குந தனமைய னும் தர்ம ஸ்வபாவனுமாகிய ராமனை அரண்யதிற்கு அனுப்பி உலகத்திலுளளவர் அனைவரோடும் விரோதித் துக்கொண்டு நீ எபபடி அரசனையிருக்கலாகும்? என்று அரசனிடம சொல்லுவாயாக' எனறனன். மஹாராஜ

னே! ஸீதையோ வெனறூல், லக்ஷ்மணஸனப்போல் ஒன் றுங் கூறமாட்டாளே யன்றி மனத்திலுள்ள சோகாதிச யத்திறலை பெருமூச்செறிந்துகொண்டு கம்பீரமான மண முடையவளாகையால் உள்ளே பூதம் ஆவேசிக்கப் பெற் றவளைபோல அபபடியும் இபபடியும அசையாமல் திகைத் து நின்று கண்விழிகள் இரண்டும ஆணியிட்டாற்போல ஒரே நிலையாக விளங்கப பெற்று எல்லாவற்றையும் மறந் து புன்சிரிபபுடன பரகாசிக்கும நிலையும தொலையப பெ ற்று வெறுமனே இருநதனள். அவள ராஜகுமாரத்தி யாகையால் அதுவரையில் எநநாளும வியஸனத்தை அனுபவித்தறிநதவளனறு. அப்படிபபட்ட ஸமயத்தி லும் கைகேயியைப பறறி ஒரு சொல சொலலியும நிந்தி யாதிருந்த அப பெண்பிளளையை எவவண்ணம புகழ லாகும்? அநத ஸீதை பர்த்தாவின துயரதைதப பார்த் து அதனல் தனக்கு மனவருததம உண்டாகப பெற்று அழுதுகொணடிருநதனள். அதுவேயனறி எனனிடம் ஒன்றுஞ சொல்லவிலலை. அவள் தன பர்த்தாவை வெறு மனே பார்த்துக்கொண்டிருநது மனவருததத்தினல் மு கமவாடி வதஙகப பெற்று, நான பரயாணமாய்ப் புறப் பட்டுப்போவது கண்டவுடனே 'ரதம போயிற்று; இனி ராகவன எபபடி கடக்கப் போகினறூன' எனறு துககத் தைப் பொறுக்க முடியாமல் கண்ணீர் பெருக்கினள். லக்ஷ் மணன் சுப்ரூவைஷகள செய்து காத்துக்கொண்டிருக்கப் பெற்ற ஸ்ரீராமன் அநுநயனம் மொழிந்து முகததில் கண் ணீர் தளும்பக கைகளினால் குவித்துக் கொண்டிருநதனன. அபபடியே ஸீதையும் பாரபபவர்களுக்கும் கேட்பவர்க ளுக்கும் மிகுந்த மன இரக்க முண்டாகும்படி அழுது துகொண்டு ரதத்தையும் ரதத்தைப் போலவே எனனை யும் பார்த்துக்கொண்டிருநதனள். ஐமபதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸுமந்த்ரன் தசரதலுககு, ராமனைப் பிரிந்து அயோத்யையிலுள்ள சராசரங்களனைத்தும மனவருத்தமுற்றிருப்பதைக கூறுதலும, தசரதன் அதைக கேட்டுப பாசாதகாபத்திலை லுபாசரித்தலும்.

இபபடி மந்த்ரி ப்ரேஷ்டனும் ஸாரதியுமாகிய ஸுமந்த்ரன சொல்லிக்கொண்டிருக்கையில் அரசன கேட்டு மற்றை வருத்தாந்தங்களையும் சொல்லுவாயாக எனறனன. ஸுமந்த்ரனும் அரசனது வார்த்தையைக் கேட்டுக் கண்ணீர் வருது கண்டத்தில நின்றடைக்கையில் மிகவும் ஆயாஸம் அடைந்து மீளவும் ராமவருத்தாந்தத்தை விஸ்தாரமாக இங்ஙனஞ் சொலலத் தொடங்கி 'மஹாராஜனே! வீரர்களாகிய அவ்விருவரும் ஜடைகளைத் தரித்து மரவுரிகளை உடுத்து கங்காநதியைக கடநது ப்ரயாக க்ஷேத்ரத்தைக் குறித்துப் போயினர். லக்ஷ்மணனை ராமனுகக காத்துககொண்டு எலலோர்க்கும் முனனே சென்றனன. அங்ஙனம் அவர்கள் போய்க்கொண்டிருக்கையில், அப்பொழுது பார்த்திருநத பராதீனமையால் அவர்களைப் பின்றொடர்ந்து போக கூடாமல் தான திரும்பி வந்தனன். ராமன வனத்திற்கு ப்ரயாணமாயப் புறப்பட்டுப் போனவுடனே நான் திரும்பிவிட்டனன. திரும்பினபோதிலும எனை குதிரைகள் ராமவியோக துக்கத்திலை யிகவும் உஷ்ணமாக மூச்சுவிட்டுக்கொண்டு வழியில் ஸரியாய் கடந்து செல்லாமல் இடகை பண்ணிக்கொண்டிருந்தன. பிறகு தான ராஜகுமாரர்கள் இருவர்க்கும் அஞ்ஜலி செய்து ரதத்தில் ஏறிக்கொண்டு அடக்க முடியாத அநத மனவருத்தம் முழுவதையும் அடக்கிக்கொண்டு பரயாணமாயப புறப்பட்டனன. தான அநத ப்ரதேசத்திலேயே 'திரும்பியும எனனை ராமன சாரர்கள் மூலமாக வரவழைப்பானே' எனனும் ஆசையினால் சூஷனுடன்

கூடப் [1] பலதினங்கள் வஸித்திருகதனன. மஹாராஜனே!

---

1 இஙகு (பலதினஙகள) என்ற விடததில பலதினஙகளென் ரூல—மூன்று தினஙகளென்று சிலா கருதது. வாஸ்தவமாகப் பாக கில—செடியின் கீழ் ஒரு நாள, பாதவாஜாஸ்ரமத்தில இரண்டாவது நாள, யமுனைக் கரையில மூன்ரூவது நாள, நான்காவது நாள சித்ர கூட ப்ரவேசம, ஐநதாவது நாள குஹனுடைய சாராகள ராமவ்ருத் தாநதம் தெரிவித்தல, ஆரூவது நாள ஸுமித்ரன் அயோதயைககுப் புறப்படுதல. ஆகையால ஆறு தினஙகள ஆயின. அலலது—இரண்டா வது நாள பாத்வாஜாஸ்ரமத்தில ராமன் சித்ரகூடத்திற்குப போவ தாக நிசசயிக்கையால, அது தெரிநது சாராகள மூனரூவது நாள வந்து ஸுமநதரனுககுத தெரிவிகக, நான்காவது நாள ஸுமந்ரன் புறபபட்டானென்று கூனகலாமாயின, நடுகாதிரததில மூன்று தினஙகள இருநததாகத தெரிய வருகினறது, ஆகையால 'பலதினங கள' என்ரூல மூன்று தினஙகளெனறு கொளளவேணடும. ராமவி யோகததிலுல ஒவவொரு தினமும ஒரு கலபம போல தோறறுகை யால அம மூன்று தினஙகளையே பல தினஙகளாகச சொலலினன. இஙஙனம கோவிநதராஜா

வீதாராமலகூமணாகள கஙகையைச சேரநது குஹனுடனி ருநத தினம ஒன்று, கஙகையைத தாண்டி ஆலமாதத்தினடியில இரு ந்த தினம் ஒன்று, ராமன் பரதவாஜாஸ்ரமஞ் சேரநதவனறைத் தினம் அஙகிருந்து சாராகள வநத தினம ஒன்று, ஆக மூன் று தினஙகள ஆகின்றன. இவையே பலவென்று சொலலபபட்டன. ராமன் பாதவாஜாஸ்ரமததிற்குப போயச சேரந்த இரண்டாவது நாள சாராகள அங்கிருந்து வநது ஸுமந்ரனுககு வருதாநதந் தெரிவிகையில, அவனும அன்றைத்தினமே ப்ரயாணமாயப் புறப் பட்டு மூன்ரூவது நாள ஸாயஙகாலம-அதாவது—புறபபட்ட தின தோடுகூட மூன்ரூவது நாள ஸாயஙகாலம அயோதயையைச சேரந தனன். ஆகையால 'ததஸ ஸாயாஹந ஸமய தஸ்யேஹாபி ஸா யிக அயோத்யாம ஸமநுப்ராப்ய நிராநநதாம ஹ்ருஷ்டவாஹந' என்று அவன் மூன்ரூவது நாள் அயோதயையைச சேரநதானென்று சொ ல்லப்பட்டிருககின்றது. ஆகையால (தஸ்யேஹாபி) எனபதற்கு ஸ்ருஙகபேர புரத்தினின்று புறப்பட்ட தினதோடு கூட மூன்ரூ

1 உன தேசத்திலுள்ள வருக்ஷங்களும் கூட ராமையலை னம் பொறுக்க முடியாமல இலைத்துப புஷ்பங்களோடும் தளிர்களோடும மொக்குகளோடும் வாடியிருக்கின்றன. இனி மனிதர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமோ? 2 நதி களிலும் குளங்களிலும குட்டைகளிலும ஜலங்கள் கொ வது நாள அயோதையைக்குப் போயச் சோகதாவென்று தெரிகின் றது. இவ்வண்ண மதேஹஸ்திவா தீததா.

1 இதற்கு—'விக்ஷயே தே மஹாராஜ ராமவ்யஸநகர்ஶிதா। அபி வ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுக்ஷபாங்குரகோரகா:'என்ப மூலம். (மஹா ராஜ) மஹாராஜனே! (விக்ஷயே தே) உன் தேசத்தில், (ராமவ்யஸந கர்ஶிதா:) ராம துக்கம் பொறுக்கமாட்டாமல இளைத்திருக்கிற, (வ்ரு க்ஷா அபி) வ்ருக்ஷங்களும், அபி ஶப்தத்திலை கொழுகள முதலிய வற்றையுங் கொளளவேண்டும். பருப்பருத்த வ்ருக்ஷங்களுக்கே இவ் தக்கதியாயின் சிறிய கொழுகளுக்குச் சொலலவேண்டுமோவென்று கருத்து.(ஸபுஷ்பாங்குரகோரகா:) புஷ்பங்களோடும தளிர்களோடும மொக்குகளோடுங் கூடவே. இதலைல வ்யாதிமுதலியவற்றால வ்ருக்ஷ ங்களில ஏதோ ஒருபாகமே கெட்டுப்போயிற்றென்பது தடுக்கப்பட்ட து. முழுவதும் கெட்டுப் போயிற்றென்றபடி. இதலைல வ்ருக்ஷாவயவ ங்களில 'இளையது முற்றினது' என்னும பேதமில்லாமல எலலா அவ யவங்களும் ஒரேகாலத்தில கெடுதியை அடைந்தனவென்று கருதது.

2 இதற்கு 'உபதப்தோதகாந்ஈய: பலவலாநிலஸாம்ஶிச। பரிஶு ஷ்கபலாஶாநி வாநயுபவாந்ஶ'என்ற மூலம். (நத்ய:)நதிகள, (உபத ப்தோதகா:)கொதித்த ஜலமுடையவை.நதிகளெல்லாந்தானென வென்ற மல அதிலுளள ஜலம் கொதிக்கினறதென்னையால ஜலத்தில ஏதோ ஒரு பாகமன்றியே முழுவதும அடிவரையில கொதித்ததென்று பொருள. இதலைல—வெயிலடித்தல கொதித்துப்போனதன்றென் று ஏற்படுகின்றது. (பலவலாநி ஸாம்ஶிச) குட்டைகளும குளங்களு ம. இதலைல சிறியதெனறும் பெரியதெனறும வாசியிலலாமல ஜலமு ளள இடங்களெலலாம கொதித்தனவென்று கருத்து. (வநாந்) இ டைவிடாமல ஜலந்தேங்கி வளர்ப்பாரிலலாமல வருமழை போமழை களில வளராதவையாகையால கழலைகாரங்களாயிருபபவை யென்ற படி.வெயில முதலியவற்றிற்கு வாடாதவலிவையுடையவை யென்று

தித்துக் கொண்டிருக்கின்றன. அரண்யங்களிலும் உத்யானவனங்களிலும் வ்ருக்ஷங்களின் இலைகள் எல்லாம் உலர்ந்திருக்கின்றன. அரண்யங்களில் ஜந்துக்கள சலியாதிருக்கின்றன. க்ரூரம்ருகங்கள் இறைக்காகத் திரிவதையும் இழந்துவிட்டன. ராமவியோக துக்கத்தினால் அரண்யங்கள் முழுவதும நிஸ்ஸப்தமாயிருக்கின்றன. மனனவனே! கொடிகள் உலர்ந்தழிவதலை இலைகள் ஜலத்தில் மறையப் பெற்று, அந்த இலைகள் அழுகிப் பாழாய விடுகையால கலங்கிய ஜலமுடையவைகளாகித் தாமரைப் பூக்களும வாடி வதங்கவும் மீனகளும் ஜலபக்ஷிகளும் மழுங்கி மறையவும் பெற்றுத் தாமரையோடைகள் அனைத்தும் கலக்கமுற்றிருக்கின்றன. ஜலத்திலுண்டாகும புஷ்பங்களும் பூமியில் விளையும் பூக்களும், பினனும் பழங்களும் காய்களும் முன்போல் உண்டாகாமல் வாஸனையும் ருசியும் சிறிதாயினும் விளங்கப்பெறுதிருக்கின்றன. இதப் பட்டணத்திலுள்ள உத்யான வனங்களெல்லாம பக்ஷிகளின் இனிய நடைகளும் ஓவிகளும் ஓயப் பெற்றுப பாழாயிருக்கின்றன. புருஷர்களிற் சிறநதவனே! உத்யானங்களில் ஒன்றுவது என் மனத்திற்கு இனிதாகப் புலப்படவில்லை. நான அயோத்யைகுட் புகுநதலருகையில அதில் ஒருவனையினும ஸநதோஷத்தைத்தடுருபபவனைத்தேதற்றவில்லை. ஜனங்களை எல்லோரும் எனறேனுங்கூட ராமன் வரக காணுமையால மனவருத்தம் மிகப் பெற்று அடிக்கடி பெருமூச்செறிநதுகொண்டிருக்கின்றனர். தேவனே! ராமனிலலாமல இவ்விடம திரும்பி வநத ராஜரதத்தைதக் கண்டு ராஜமார்க்கத்திலுளள ஜனங்கள எல்லோர்க்கும துயரத்தி

கருதது (உபவநாநி)ப்ரதிதினமும ஜலம்வற்றுதிருகுமாறு ஜலந்தேக்கி வளர்த்தவையாகையால மெதுவாயிருப்பவை யென்றபடி. இவ்விரண்டும(பரிஸ்ரவஷ்கபலாஸாநி)ஒரோரீதியாகஇலைகள உலர்நதுபோயின.

ஞல் கண்ணீர் ஆறுகப் பெருகி வருகதது. ஸ்த்ரீகள் மேல் மெத்தைகளி லும் விமானங்களி லும் உப்பரிகைகளி லும் ஏறிக்கொண்டு ராமனில்லாமல ரதம் மாத்ரம் வருவதைக் கண்டு ராமனைக் காணப் பெறுமைக்கு வருந்தி ஹாஹாகாரஞ் செய்தனர். ஸ்த்ரீகள் மிகவும பரிதபித்து மேன்மேலும் வேகமாகக கண்ணீர் பெருகி வருவதஞல் மிகவும் அகன்ற மை கரைகது குலையப் பெறுகைபால் நிர்மலமாய் விளங்குகின்ற நீண்ட கண்களுடனை ஒருவரையொருவர் ஸ்பஷ்டமாகப் பாக்க தேராமலே பாரதத்துக் கொண்டிருந்தனர்.ராமனைப பற்றி மனவருத்தபபடும விஷயத்தில் சதருகளுக்காயி னும் மித்ரர்களுக்காயி னும உதாஸீனர்களுக்காயி னும பேதமெனபது சிறிதாயி னும் புலபபடவிலலை. எலலோரும ஒருவிதமாகவேவருத்தப்பட்டுகொண்டிருந்தனர்.மஹாராஜனே! இவ்வயோத்யையி லுள்ள ஜனங்களெல்லோரும மனக்களிப்பினறி வருந்துகின்றனர். கஜங்களும் அஸ்வங்களும் வருத்தபபடுகினறன. மற்றை யெவ்விடத்தி லும் ஜனங்களின் அழுகுரலினுல் ஸகேதாஷமென்பது சிறிதும் புலப்படாதிருககினறது. நீண்ட பெருமூச்சுகளின சப்தம்போல் ஹாஹாகாரங்கள் எழும்புகின்றன. எங்குப்பார்த்தபோதி லும் ஆகதமஉண்டாகாதிருக்கின்றது. ராமனைக் காட்டுக்கு அனுப்பினதலை எங்குப் பார்த்தபோதி லும மனவருத்தமே. ஆகையால் இவ்வயோத்யையை புத்ரனைப் பிரிந்த கைலஸலையைபோல எனகுட: புலபடுகின்றது' [1] என்றனன. இங்ஙனம ஸாரதியாகிய ஸுமந்த்ரன் சொனன வார்த்தையைக கேட்டு மனனனை கண்

I இது வரையில ராமனது ஸாவாதமனதையை நிலநி அனுஸந்தித்தாரென்று ப்ரபந்தகத வஸ்து தவனி ஏற்படுகினறது. ப்ரபந்தத்த வஸ்து த்வனியாவது—ஓர ப்ரபந்தததில ஒரு கதை சொலலிகொண்டு வர, அதில மற்றோர தாதபாயம் ஏற்படுவதே.

ணீர் கண்டத்தில் வந்தடைக்கையால் தழுதழுத்து மிகவுங் தீனமாகிய உரைகளை உரைத்துக் கொண்டே அதனாரா தியைப் பார்த்து, [1] 'கைகேயியின் கருத்தெல்லாம் பாபத் திற்குப் பிறப்பிடம்; மேலும், அவள் பாபிஷ்ட வம்சத் திற் பிறந்தவளாகையால் அதற்குத் தகுந்தப்டி பாபிஷ் டஸ்வபாவ முடையவளாயிருக்கின்றனள். அபபடிப்பட்ட கைகேயி 'ராமனைக் காட்டுக்கு அனுப்புவா'யெனறு தூ ண்டுகையில், நான கார்யாலோசனையில் ஸமர்த்தர்களா கிய பெரியோர்களோடு கலந்து விசாரஞ் செய்யாமற் போ யினன். நான ஸ்னேஹிதர்களோடாவது மந்திகளோ டாவது நகரத்து ஜனங்களோடாவது இத ராமனை அ னுப்பும் விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்யாமற் போய் விட்டனன. அதுவுமனறி ஓர் பெண்பிள்ளையினிடத் திலுள்ள மோஹத்தினல் முன்பின பாராமல திடீரெனறு இந்தக் கார்யத்தைச் செய்துவிட்டனன். ஸுதனே! அப் படி இல்லையாயின், நான் ஜன்மாந்தரத்திற் செய்த பாப வசத்தினல் இப்படி நடக்க வேண்டியதா யிருப்பதுபற்றி இந்த வ்யஸனம் மற்றையொரு ஹேதுவுமினறி தெய்வாதீ னமாக இக்குலம் பாழாகும்படிக்கு எமக்கு நேர்ந்திருக்க லாம். ஸுதா! உனக்கு எப்பொழுதாயினும் ஏதாயினும் உபகாரஞ் செய்திருப்பேனையின், அதைப்பற்றி, நீ சீக்ர மாக எனனை ராமனிடங் கொண்டு போய்ச் சேர்ப்பிக்க

I ஸுமந்த்ரன், தசரதன் கேட்டவற்றிற்கு உத்தரஞ் சொலலி அத்தோடு நிலலாமல ராஜ்யத்திலுளள மனுஷ்யாதிகள மனக் கலக்க முற்றிருப்பதைச சொலலிக் கொண்டிருக்கையில, அரசன் தான் செய்தது அக்ருத்யமென்று தெரிவிக்கைக்காக ஸுமந்த்ரன் அங்ஙனம் சொலலுகிறனென்று தெரிந்து தான் செயதது அக்ருத்ய மே யென்று அங்கீகரித்து உத்தரஞ் சொலலுகின்றன்—(கைகேயி யின் கருத்தெல்லாம் பாபத்திறகுப் பிறப்பிடம்) என்றது முதலாக.

வேண்டும். என் ப்ராணன்கள் கிளம்பிப் போகின்றவை போலிருக்கின்றன வ்ராகையால் அவைமே என்னை அவஸ்ரப்படுத்துகின்றன. இப்பொழுதும் எனது ஆஜ்ஞையே செல்லுமாயின், ராமனைத் திருப்பி அழைத்துக் கொண்டு வருவாயாக. ராமனைப் பிரிந்து நான் ஒரு முஹூர்த்தகாலமாயினும் ஜீவித்திருக்கப் பொறேன். இல்லையாயின், ஒருக்கால் அம் மஹாபாஹு-வெகுதூரம் போயிருக்கக் கூடும்; ஆகையால் அவனைத் திருப்பி அழைத்துக் கொண்டு வருவதைக் காட்டிலும் என்னையே ரதத்தில் ஏற்றி அழைத்துக்கொண்டு போய்ச் சீக்ரத்தில் ராமனுக்குக் காட்டுவாயாக. குறுக்கத்தியின் மொக்குபோல் குண்டுகுண்டாய் விளங்கும் பல் வரிசைகள் பொருந்தியவனும் பெருவில்லாளியுமாகிய லக்ஷ்மணனுக்குத் தமையன் ராமன் எங்கே இருக்கின்றனன்? அவன் எங்கே? சாகப் போகிற நான் எங்கே? இப்படிப்பட்ட மஹானுபாவனாகிய இந்த ராமனை ஸீதையுடன்கூடப் பார்க்கப்பெறுவேனாயின் பிழைத்திருப்பேன். இல்லையென்றால் என் ப்ராணன்கள் நில்லா. சிவந்த கடைக்கண்கள் அமையப் பெற்று நீண்ட புஜதண்டங்களுடையவனாகி ரத்னங்களிழைத்த அழகிய குண்டலங்கள் அணிந்து விளங்குகின்ற ஸ்ரீராமபிரானைக் காணப் பெறேனாயின், யமலோகத்திற்குப் போவேனன்றி வேறில்லை. இப்படிப்பட்ட நான் இவ்வளவு துக்கஸந்தி அடைந்திருக்கும் பொழுதும் இக்ஷ்வாகுகுலகுமாரனாகிய ராமனைக் கண்களாரக் காண கோராதிருக்கின்றேனே! எனக்கு இதைக்காட்டிலும் துக்கம் வேறு யாதிருக்கின்றது? ஐயோ! ராமா! ஐயோ! லக்ஷ்மண! ஆ! ஸீதே! உன்னைப்பற்றி நிரம்பவும் சோகிக்க வேண்டியதாயிருக்கின்றது. நான் இவ்விடத்தில் அநாதன்போல் மனவருத்தமுற்றுச் செத்துப் போகின்றனன். இது உங்களுக்குத்

தெரியாது' என்று இங்ஙனம் புலம்பினன். அரசன் அந்த மனவருத்தத்தினல் மனத்தை நிலைநிறுத்தி ஸ்வஸ்தனு யிருக்க முடியாமல் சோகஸமுத்ரத்தில் ஆழ்ந்து கௌஸல்யையைப் பார்த்து 'தேவீ! எனக்குச் சோகம் இவ்வளவு அவ்வளவென்ன முடியாமல் ஸமுத்ரம்போல் பொங்கி வருகின்றது. இந்தச் சோகஸாகரத்திற்கு ராமதுக்கமே ப்ரவாஹத்தின் பரப்பு. ஸீதையை விட்டுப் பிரிவதே இதற்குக் கரை. பெரிய நெடுமூச்செறிகையே இதற்கு அலைகளும் சுழிகளும். கண்ணீரே இதில் நுரைகளுடன் கூடிய கலக்கமுள்ள ஜலம். கைகளை உதறுதலே மீன்களின் துள்ளல்களாகும். [1]ரோதனத்வனியே இந்த ஸமுத்ரத்தின் பெருங் கோஷம். அவிழ்ந்தலைகிற தலைமயிர்களே இதிலுள்ள வேலம் பாசிகள். கைகேயியே இதற்கு [2]வடவாக்னி. ஸமுத்ரம் மழைக்கு ஹேதுவாயிருப்பதுபோல் இதுவும் என் கண்ணீராகிற [3]மஹாவர்ஷத்திற்கு ஹேதுவாயிருக்கின்றது. கூனியின் துர்ப்போதனை வாக்யங்களே இதற்குப் பெரு முதலைகள். அந்தப் பாபிஷ்டையின் வரமே இதற்கு ஜலப்ரவாஹம் பொங்கி வருதலாகும். ராமனைத் தூரத்துகையே இதற்கு வைசால்யம். இப்படிப்பட்ட சோக ஸமுத்ரத்தில் ஐயோ! கௌஸல்யே! மூழ்கிவிட்டனன். ராமன் இல்லாமல் நான் இதைத் தாண்ட வல்லனல்லேன்! நான் இப்பொழுது இவ்விடத்தில் ராமனையும் லக்ஷ்மணனையும் பார்க்க வேண்டுமென்று ஓயாமல் ஆசைப்பட்ட போதிலும் பார்க்க நேரப்பெறுதிருக்கின்றேனே! இதைக் காட்டிலும் அமங்கலம் மற்றொன்று யாதிருக்கின்றது?" என்றனன். இங்ஙனம் மஹாகீர்த்திசாலியாகிய அம்மஹீபாலன் புலம்பிக் கொண்டே மூர்ச்சை அடைந்து மஞ்சத்தின்மேல் வீழ்ந்தனன். இவ்வண்ணம் ராமனை நினைத்துக்

---

1. அழுகுரல். 2. ஸமுத்ரத்திடையிலிருக்கும் ஓர் அக்னி. 3. பெருமழை.

கொண்டு மனை
க்கழுனைடோ(நு)ம்
கீழே வீழ்ந்தாள்
கௌஸல்யை தூ
மனுக்கு அநன்
று பயந்திருந்து
மோ வென்று பீ
வது லக்ஷ்யம் பூ

...போர்களுக்கு மிகவும் மன இர
...நமஸ்காரம் பண்ணி மூர்ச்சித்துக்
...ன பத்னியாகிய ராமன் தாய்
...த்தைகளைக் கேட்டு, முன்பு ரா
...ன்ன விபத்து நேருமோ வென்
...பொழுது பர்த்தாவுக்கு எதாகு
...ழற்றனள். ஐம்பத்தொன்பதா
...

அனந்தரம் ராமவ்ருத்தாந்தம் கௌஸல்யை மிகவும் ஸுமித்ரன் ஸமாதானப்படுதலும்.

அனந்தரம்

போல் தரை-தரை
ணன்கள் வெளி
உடனே தெளி
னும் எனைநாடு
னோ, அவனி
ரான அவர்களை
பிழைத்திருக்க.
ப்பி எனை நீ
மாட்டாயாயின்
லப் பெறுவையி
ன்றி வேறில்லை
கூடபிக் கன்னி
தழுதழுக்கப் பே
ல்லையை யெமர்
யும், ராமனுக்கு
கலவரத்தையு

...யை பூதாவேசம் பிடித்தவள்
...ழுந்து புலம்பிக்கொண்டு ப்ரா
...பித் சென்றாற்போல் மூர்ச்சித்து
...ஸுமித்ரனைப் பார்த்து 'ராம
...னும் எங்கே இருக்கின்றார்க
...ன்னைக் கொண்டு போவாயாக.
...ணகாலமாயினும் இங்குப்
...ன். சீக்ரமாகத் தேரைத் திரு
...ஸ்யத்திற்குக் கொண்டு போக
...வர்களைப் பின்தொடர்ந்து செல
...றத்திற்குப் போய்ச் சேருவே
...ன். அந்த ஸுமித்ரன் கை
...தடுக்கையால் வார்த்தைகள்
...த மனவருத்தத்துடன கௌஸல
...த்திக்கொண்டு 'நீ சோகத்தை
...மோ வென்று மோஹத்தையும்,
...நில் உண்டாகுமவற்றையு மெல்

லாக் துறப்பாயாக. மேலும், இந்த மானஸ்தாபத்தையும் மாற்றிக கொள்வாயாக. ஏனெனில் --ராமன கொஞ்சமாயினும் மனஸ்தாபமின்றி வனத்தி யாகமாயிருக்கின்றனன், லக்ஷ்மணனும் தர்மர்களை யறிந்தவனாகையால் இந்திரியஸுகங்களில் கால் தாழ்ந்திருக்கின்றனன். மனது பாதாரவிந்தங்களுக்குப் பரிசர்யை செய்துகொண்டு பரலோகத்தை லாதிக்கின்றபடியும் ஜனஸஞ்சாரமில்லாத வனத்திலிருந்தும், க்ருஷ்ணதிரிபாகேவ பயமின்றி மிகுந்த ஸந்தோஷம் உளவாகப் பெற்றபடியாலும் தாடன ராமனிடத்திலேயே மனஸ்ஸை நிலைநிறுத்தி மனக்களிப்புற்றிருக்கின்றனள். வனவாஸதுக்கமானது எனக்கும் எள்ளளவுமாயினும் ஸீதைக்கு நேரிடவில்லை. அதனால் ஸீதையும் வனவாஸத்தினால் நான்றே யென்கிறதாகத் தோற்றுகின்றது. லக்ஷ்மணன் ருகரத்திலுள்ள உத்யானவனங்களில் சீக்ரத்துரகன் டிருப்பதுபோலவே இப்பொழுது ஜனஸஞ்சாரமில்லாத அரண்யப்ரதேசங்களிலும் க்ரீடித்துக்கொண்டிருக்கின்றனள். பூர்ணசந்த்ரனை நிகர்த்த அழகிய முகத்துடன் கூடிய பதிவ்ரதையும் ஸுகதாயகமான புருஷகார அந்த ஸீதை ராமனிடத்தில் மனம் பொருந்தப் பெற்று ஜனஸஞ்சாரமில்லாத வனப்ரதேசத்தில் குழந்தை போல் நடுங்கமே மறந்து துக்கத்தைப் பாராட்டாமல் விளையாடிக்கொண்டிருக்கின்றனள். மேலும், ராமனே அனைந்து லோகத்துமானம். அவள் வனவாஸஞ் செய்தபோதிலும் ராமனது அருகில் இருப்பதுபற்றி அவளுக்கு மனவருத்தம் தோன்றாதிருக்கின்றது. ஸீதையினுடைய ஸ்நேஹபரிபூர்ண ப்ராணனாதனும் ராமனுக்கு அதீனங்களாயிருக்கின்றன. ஆனபடியால் ராமன் இல்லையாயின இவ்வையோத்யை படிப்பு அரண்யம் போன்றதேயாகும் மார்க்கத்தில் போகும்பொழுது

ஸீதை அயோத்யைக்குக் கூப்பிடுதூரத்தில் விளையாடிக் கொண்டிருப்பதுபோல் ஸந்தோஷம் பெருகப் பெற்று க்ராமங்களையும் பட்டணங்களையும் நதிகளின் ப்ரவாஹங்களையும் நாணுவித வருக்ஷங்களையும் பார்த்து ராமனையோ அல்லது லக்ஷ்மணனையோ விறுவுவாள்; இங்ஙனம் விறுவி அவைகளின் பேர்களைத் தெரிந்துகொள்வாள். [1] ஸீதையைப் பற்றி நான் இப்பொழுது எவ்வளவு சொன்னேன்

---

1 இதற்கு மூலம்—'இஹமேவ ஸ்மராம்யஸ்யாஸ் ஸஹஸைவோபஜல்பிதம் । கைகேயீஸம்ஸ்ரிதம் வாக்யம் நேஹாநீ ப்ரதிஹாதிமா ॥ யிவம்ஸயித்வா து தஜ்வாக்யம் ப்ரமாஹாத்பர்யுபஸ்யிதம்। ஹ்லாஹநம் வசநஸ்ரிதோ ஹேவ்யா மயாரமவிரவீத்' அயோத்தியையை விட்டு வரும்பொழுது கைகேயியைக் குறித்து ஸீதை பருஷமாகச சொன்ன ஒரு வார்த்தையை, கௌஸல்யைக்கு ப்ரியமாயிருக்குமென்று சொல்ல முயன்று, மீளவும், அதைக் கேட்பார்களாயின் அந்த வ்ருத்தர்களை ப்ராணன்களில் ஆசையை விட்டு விடுவார்களாகையால் அதைச சொல்லத் தகாதென்று நினைத்து அதை மறந்தாற் போல் வ்யாஜங காட்டிச சொலலாமல் மறைத்துவிடுகின்றாள். (இஹமேவ ஸ்மராமி) இதை மாத்ரமே ஸ்மரிக்கின்றேன் ஸீதை சொன்ன வார்த்தைகள் இது வரையிலுமே எனக்கு ஜ்ஞாபகத்திற்கு வருகின்றனவேயன்றி, (கைகேயீ ஸம்ஸ்ரிதம்) கைகேயியைக் குறித்து, (ஸஹஸா ஏவ உபஜல்பிதம்) திடீரென்று ஸீதை மொழிந்த (வாக்யம்) வார்த்தை, (மாப்ரதி) எனக்கு (ந இஹாநீம் ஹாதி) இப்பொழுது தோற்றவில்லை. என்று மொழிந்து (ப்ரமாஹாத்பர்யுபஸ்யிதம்) மனஹ்க்கந் தவறுதலால் வாய்க்கு வந்திருக்கிற, (தஜ்வாக்யம்) அந்த ஸீதையின் வார்த்தையை, (யிவம்ஸயித்வா) மறைத்து விட்டு, (ஹேவ்யா 8) கௌஸல்யைக்கு (ஹ்லாஹநம்) மனக்களிப்பை விளைப்பதும், (மயாரம்) இனியதுமாகிய, (வசநம்) வார்த்தையை, (அவிரவீத்) சொன்னாளன். இதில் ஸீதையின் வார்த்தையை ஸ்மரித்தன் (கைகேயீஸம்ஸ்ரிதம் = கைகேயியைக் குறித்து) என்று சொல்ல ஆரம்பித்தனன். (ஸஹஸைவோபஜல்பிதம்) திடீரென்று க்ரமந் தவறி அவள் சொல்லியதே அது நினைவுக்கு வாராமைக்குக் காரணமென்று தெரிவித்தனன். மறுபடியும் நினைவு மூட்டிக்கொண்டு சொல்லென்பார்களோ என்னவோ

னே, அவ்வளவே எனக்கு நினைவுக்கு வருகின்றது. அ

என்று நினைத்து (இதமேவ ஸ்மராமி) இதுவரையிற் சொன்னவள வே எனக்கு ஜ்ஞாபகத்திற்கு வருகின்றதன்றி மற்றையது நினைவுக்கு வாவிலலையென்று அவர்கள விலுவுவதற்கு இடமிலலாமல செய்து விட்டனன். (இதாநீம்) நீஙகள இப்படி மனவருத்தப்படும் ஸமயத்தில் எனக்கு அது புத்திக்கு வாவில்லை யென்றனன். அது (ப்ரமாதாத்பர் யுபஸ்யிதம்) மனஷ்க்கந் தவறுதலால் வாய்க்கு வந்தது பற்றியே (யிவஂஸயித்வா) அதை மறைத்துவிட்டனன். வாய்க்கு வந்த அந்த வார்த்தை மனஸ்தாபத்திற்கிடமாயிருக்கு மென்பது பற்றியே அதை விட்டு (ஹ்றலாதநம்) மனத்திற்கு ஸந்தோஷத்தை விளைக்கும்படியா ன வார்த்தையைச் சொல்ல முயன்றனென்று கருத்து. இங்கு ஓர் ஸம்சயம் உண்டாகின்றது. ஸீதை திடீரென்று சொன்ன வார்த்தை கைகேயியைக் குறித்து நிந்தையாயிருப்பினும் கௌஸலையைக்கு மன ஸ்தாபத்தை விளைக்குமாயின், அதை அவஸ்யமாக மறைத்தே ஆக வேண்டும். ஆனல் அவ் வார்த்தை எப்படிப்பட்டது? அது இன்னதெ ன்று சொலலுவதற்கு ப்ரமாணம் யாது உளது? என்று வினவ வேண் டி வரும். ஆம். இது யுக்தமே. சொல்லுகிறேன். கேள. இப்படிப்பட்ட வாக்யததைக் கார்ய வசத்தினல் மறைத்துவிட்ட போதிலும் அதை யேதாவதோரிடத்தில விவரித்துச சொல்லாராயின் ஸர்வஜ்ஞராயிரு ந்தும அவர் அதை இன்னதென்று எப்படி அறிந்திருக்கக்கூடும்? ஆகையால் அவர் அதை ஓரிடத்தில் சொல்லியே யிருக்கவேண்டும். இஙகு மனஷ்க்கக் குறைவினல் சொல்ல ஆரம்பித்துக் கை கேயியைப் பற்றிய நிந்தையாயிருப்பினும் வ்ருத்தர்களாகிய அந்தக் கௌஸல்யா தசரதர்களுக்கு மனஸ்தாபகரமாயிருக்குமென்று மறை த்ததாகச சொன்ன ஸீதா வசனத்தைக் கவி மேல் ஓரிடத்தில் ஸ்ப ஷ்டமாகச சொல்லப் போகின்றனர். ஆனதுபற்றியே இங்கு ஸ்பஷ்ட மாகச சொலலி மறைத்து விட்டதாகச சொலலினர். ஆனல மே லிற் சொனன விடந்தான் யாதெனில்—யுத்த காண்டத்தில் ஸீதை யைக் குறித்து 'விஜ்ஞாய்ஹ்றதுத்ர கைகேயீம் க்ரோஸஹதீ குரீ யயா' (அழுகுரல் பக்ஷிபோல அழுதுகொண்டு இவ் விஷயத்தில் கைகேயி யை நிந்தித்தனள்) என்று சொலலி அந்தக் கைகேயியைக் குறித்து ஸீதை சொல்லிய வார்த்தையையே 'ஸகாமா ஹவ கைகேயி ஹதோ

வள் ளைகேயியைக் குறித்துத் திடீரென்று ஓரு வார்த்

உயம் குலைந்ஹந8' (குலத்திற்கு ஆநந்தத்தைத கொடுக்கும் தன்மை யுடைய இம மஹாநுபாவனைப் பாழாகஹிவிட்டனை. கைகேயியே! நீ இனி உன் கருத்தெலலாமீடேறப் பெறுவாயாக) என்று மொழிந் தனா அநதக கைகேயிக்குக் கருத்து யாது ? கைகேயிக்கு ராஜ்யங கிடைத்த மாதரததிலேயே அவளபிப்ராயம் லித்திதது விட்டது. ஆ கையால ராமனை அரண்யத்திற்கு அனுபபவேண்டிய அவஸியமில்லை. ஆயினும் ராமனைத துரதது அனுப்பிஸ்ளாகையால அதற்கு அவளது அபிபராயம என்னவெனில்—ராமனை ஊரைவிட்டுத் துரதநிவிட் டோமாயின் அவனை க்ஷணகாலமாயினும பிரிநதிருக்கப் பொறுளா கையால் லீதையுங கூட அவனைப் பின் சென்று போய் விடுவாள். அவள லோகோத்தர ஸௌந்தரியாகையால் அரண்யத்தில எவரையி னும் இவளை அபஹரித்துகொண்டு போய்விடுவான். அவள இங் ஙனம் அபஹரிக்கப்படுகையில, ராமனும் அவளை விட்டுப் பிரிந்திரு க்கப் பொறுமைகையால தானுகவே நகரித்துப் போய்விடுவான் அப் பொழுது ராஜ்யம் எனககு நிரமபவும் ஸ்திரமாகக குதிர்ந்துவிடும். அப்படி ராமன் நகரித்துப் போகாதிருப்பானையின், ஜனங்களெலலோ ரும் ராம குணங்களில கால தாழ்ந்தவாகளாகையால அவனுக்கே விதேயர்களாய் விடுவார்கள. அப்பொழுது ராஜ்யம் கிடைத்ததாயி னும் ப்ரயோஜனம இலலை. ஆகையால் ராமன் பாழாய்விடவேண்டு மென்று கைகேயியின் கருத்தாக லீதை அபிப்ராயப்பட்டனள். ஆ னதுபற்றியே—'ஸகாமா ஹவ கைகேயி ஹதேதாயம் குலநந்ஹந8' என்றனள. லீதை சொல்லிய அவ்வபிப்ராயத்தையே ராமனும் அர ண்ய காண்டத்தில 'கசசித் ஸகாமா கைகேயீ ஸாவிதா ஸா ஹவிஷ் யதி, யாநதுஷ்யதி ராஜ்யேந புத்ராார்தே தீர்கதர்ஸிநீ'(தன் புதலவன் விஷயமான தீர்க்காலோசனையுடையவ ளாகையால் ராஜ்யம் பெற்ற மாத்ரத்தில திருப்தி அடையாத கைகேயி இப்பொழுது தன் கருத் தெலலாம் ஈடேறப் பெற்று ஸுகித்திருப்பாளலலவா?) என்று ராஜ் யம பெற்ற மாத்ரத்தில திருப்தி அடையாமல் தான் பாழாய்விடவே ண்டுமென்று கைகேயி வேண்டினளென்று ஸுசிப்பித்தனன். மற் றோரிடத்தில்—'யதஹிப்ரேதமஸ்மாஸு ப்ரியம் வரவர்ணிநம் ச யத், கை கேய்யாஸ்ததத் ஸுஸம்வ்ருத்தம் கூஷிப்ரமஹ்யைவ லக்ஷ்மண' (கைகேயி

தை சொல்லினள். அது எனக்கு இப்பொழுது ஜ்ஞாபகத்

நம் விஷயததில் அபிப்ராயப் பட்டதும் அவளுக்கு ப்ரியமாயிருப்பது ம் அவள் வரத்திற்குப் பலமாக.வேண்டினதும் யாதோ, அது அவளுக் கு இப்பொழுது சீகரமாகவே நிறைவேறி விட்டது.) என்று தம விநா சத்தை மனத்தில் வைத்துக் கொண்டே தம்மை அரண்யத்திற்குத் தரத்தும்படி வரம் வேண்டிளெனன்று ஸூசிப்பித்தனன. இவ்வபிப் ராயமே ஸீதைக்கும் உண்டாயிருக்கிறதென்று ஸுமந்தரன் பூர்வ ஸர்க்கததில் ஸூசிப்பிததிருக்கின்றனன். எப்படி யென்னில்—'ஜா நகீது மஹாராஜ நிஸ்ரீவஸநதீ தபஸவிநீ। ஸுதோதாபஹறதசித்தேவ விஷ்ரிதா விஸ்மிதா ஸ்யிதா।। அதூரஷ்டபூர்வவ்யஸநா ராஜபுதரீ யஸ்ய விநீ। தேந தூஃவேநருதீ நைவ மாம் கிஞ்சிதவிரவீத।। உதீவீக்ஷ மாணே ஹர்த்தாரம் முவேந பரிஸுஷ்யதா। முமோச ஸஹஸா வா ஷ்பம் மாம் ப்ரயாந்த முதீக்ஷ்ய ஸா' (மஹாராஜனே! சோகிக்க வேண்டியவளா யிருக்கின்ற ஸீதை நெடுமூசசுகள எறிந்துகொண்டு பூதாவேசங் கொண்டவளபோல் இருந்து முகத்தில இயறகையாக வே புலப்படும் புன்சிரிப்புமின்றி அசையாமல திகைதது நின்றனள. மிகவும் புகழ் பொருந்திய அந்த ஜனகமஹாராஜன்மகள இது வரையில எந்நாளும் துககத்தை அனுபவிக்காதவள; ஆகையால அங் ஙனம் மன வருததததில் ஆழ்ந்து கதறிக்கொண்டே ஒன்றுந தோற் றப் பெறுமல என்னைப் பார்த்து ஒன்றுஞ் சொலலவில்லை. முகம் வாடப்பெற்று பர்த்தாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டே ப்ரயா ணமாய்ப் புறப்படுகின்ற என்னையும் பார்த்து அவள் திடீரென்று கண்ணீர் விட்டனள்.) இதில்—ரோதனஞ் செய்தல், பேசாதிருத் தல், முகம் வாடப் பெற்று பர்த்தாவின் முகத்தைப் பார்த்தல், மீள வும் ஸுமந்த்ரனைப் பார்த்தல், கண்ணீர் விடுதல், ஆகிய இவைகளை ஸீதை செய்வதற்குக் காரணம் முன் சொல்லிய அபிப்ராயம் அவள் நினைவுக்கு வருவதே. ஆனதுபற்றியே அவள (விஷ்ரிதா) ஸ்தம் பித்து நின்றனள. அதாவது—பர்த்தாவின் முகத்தைப் பார்க்கை யால 'இதைச சொல்ல வாயவடாதே' என்னுங கருத்தும், கண்ணீர் பெருக்குதலாலும் ஸுமதனைப் பார்ப்பதனாலும்'மாமியாருக்கு இதைச் சொல்லி அனுப்பலாகாதே' என்னும் அபிப்ராயமும் தோற்றுவிக்கப் படுகின்றன. அந்த ஸர்க்கத்தில் ஸீதை பாராக்கில சொன்னதென்று

திற்கு வரவில்லை' என்று மனவுக்கந் தவறிச் சொல்ல ஆரம்பித்த அந்த ஸீதையின் வார்த்தையை மறந்தாற் போல் மறைத்துவிட்டுக் கௌஸல்யாதேவிக்கு முன்பு சொன்னவற்றைப் போலவே மனத்திற்கு இனிப்பைக் கொடுத்து மதுரமாயிருக்கும்படி 'அதிகமாகவழி நடந்த போதிலும், காற்று வேகமாக வீசினபோதிலும் புலி முதலியவற்றைப் பார்த்து, கலக்கமுற்றிருந்தபோதிலும் வெயிற்பட்டு வதங்கினபோதிலும் சந்த்ரகிரணம் போல் விளங்குகின்ற அந்த ஸீதையின் சரீரகாந்தி மாறுதிருக்கின்றது. தாமரைப் பூவைநிகர்த்துப் பூர்ணசந்த்ரன்போல் காந்தி விளங்கப்பெறாது அழகாய்ப் பேசுந் தன்மையளாகிய அந்த வைதேஹியின் முகம் வழிநடப்பது முதலியவற்றால் கன் வர்ணம் மாறப் பெறுதிருக்கின்றது. அந்த ஸீதையின் பாதங்கள் இயற்கையாகவே செம்பஞ்சிக் குழம்பிடப் பெற்றுற்போல் சிவந்த காந்தியுடன் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும். அவை இப்பொழுது செம்பஞ்சிக்குழம் பிடுவது மாறப் பெற்றிருந்தபோதிலும் அரண்யத்தில் திரிந்து கொண்டிருந்தபோதிலும் தாமரைமொக்குபோல் ப்ரகாசிக்கின்றன. [1] அரண்யத்தில் ஸஞ்சரிக்கும் பொழுதும் அப் பெண்மணி பூஷணங்களிலுள்ள ஆசையால் சிலம்புத் தண்டை முதலியவற்றைத் தரித்து அத்துடன் நடக்

அதை மறைத்துவிட்டனன். இந்த ஸாககத்திலை தானே மனவுககந் தவறிச சொல்ல வநது ஓர் வ்யாஜத்திலுலை அதைச சொல்லாமலை மறைத்துவிட்டானென்று தெரிகின்றது.

1 இதற்கு மூலம்—' நூபுரோத்ஷடஹேலேவ வேலங் மசமதி ஹாமி நீ! இதாநீமபி வைதெஹி தத்ராமாந ந்யஸ்தஹரி. ஷணை' வீதை ராமலேடு கூடப் போவதிலுள்ள ஆஸக்தியிலுலை வழி நடப்பதற்குத் தடையாயிருக்கும் பூஷணஙகளைக் கழற்றிவைத்து இப் பொழுதும் சிலம்புத் தண்டைகளின் கலகலதவனி உண்டாகும்படி நடக்கும் பொழுதுளள விலாஸத்தோடு கூடவே இனிய நடையுடன் போய்க்கொண்டிருக்கிறுள்' என்று மற்றொரு பொருள.

கும் பொழுதுண்டான கலகலத்வனியைக் கேட்டு வேடிக்கையாக கடப்பவள்; மிகவும் அழகாக கடந்து போகின்றனள். ஸீதை ராமனது பாஹுமத்யத்தை அடைந்திருப்பவளாகையால், பார்த்தவுடனே பயத்தைத் விளைக்கும்படியான பேருருவம் பொருந்திய யாஜனையையாவது புலியையாவது ஸிம்ஹத்தையாவது பார்த்தபோதிலும், அந்த யாஜன புலி ஸிம்ஹம் முதலியவை இல்லாதபோதிலும் பயத்தை விளைவிக்கும்படியான அரண்யத்திலிருந்தபோதிலும் பயமென்பது சிறிதும் உண்டாகப் பெறுதிருக்கின்றனள். பித்ருவசன பரிபாலனமென்கிற இச்சரித்ரம் உலகத்திலெங்கும் ஸாஸ்வதமாக விளங்கிவரப் போகின்றது. ஆகையால் அந்த ஸீதாராம லக்ஷ்மணர்களைக் குறித்தாவது நம்மைக்குறித்தாவது ராஜஜனக் குறித்தாவது மனவருத்தப்படவேண்டிய அவஸ்யமில்லை. அவர்கள் சோகத்தைத் துறந்துவிட்டு மனத்தில ஸந்தோஷம் மிகப்பெற்று மஹர்ஷிகள் ஆசரிக்கும் மார்க்கத்தைத் திடமாகக் கைக்கொண்டு வனத்திலுண்டாகும் பழம் கிழங்குகளைத் தின்று வனங்களில் திரிந்து தந்தை சொல்லிய ஸத்யப்ரதிஜ்ஞையைப் பரிபாலித்துக் கொண்டிருக்கின்றார்கள்' என்றனன். கௌஸல்யாதேவி புத்ரசோகத்தினால் மிகவும் பரிதபித்துக் கொண்டிருப்பதனால், ஸுமந்த்ரன் அங்ஙனம் மிகவும் உத்தமங்களாகிய வசனங்களைச் சொல்லி எவ்வளவு ஸமாதானப் படுத்தினபோதிலும், 'என்னன்பனே! என் குழந்தாய்! ராமா!' என்று ஓயாமல் புலம்பிக்கொண்டே இருந்தனள். அறுபதாவது ஸர்க்கம். முற்றிற்று.

தசரதனைப் பார்த்துக் கௌஸல்யை ராமனைக் காட்டுக்கு அனுப்பியதைச் சொலலிப் புலம்புதலும், அரசன் அது கேட்டு மூர்ச்சித்தலும்.

தர்மங்களை உணர்ந்தவனும் பிறரை மனக்களிப்புறச் செய்பவர்களில் மேன்மைபெற்றவனுமாகிய ராமன் இங்ஙனம் வனத்திற்குப் போகையில், கௌஸல்யை மிகவும் பரிதபித்துக்கொண்டு பர்த்தாவைப பார்த்து 'ரகுவம்சத்திற் பிறந்தவனுகிய தசரதன் மிகுந்த மன இரக்கமுடையவன், மஹா தானசீலன், இனிய உரைகளையே உரைக்குந் தன்மையன்' என்று உன் பெருங்கீர்த்தி மூன்றுலோகங்களிலும் ப்ரஸித்தி பெற்றிருப்பினும், என்ன ப்ரயோஜனம்? அதப் பெருங்கீர்த்தியெல்லாம் ஒரு கொடிப்பொழுதில் பாழாகும்படி மிகுந்த அபகீர்த்தியை விளைக்கவல்லதாகிய இந்தக் கார்யத்தைச் செய்தனை. அரசர்களிலதலைவனே! உனக்குப் பெருங்கீர்த்தி மூன்றுலோகங்களிலும் பரம்பி ப்ரகாசிக்கின்றதேயாயினும, இளம்பிராயமே பிடித்து ஸுகமாக வளர்ந்துவந்த உன் புதல்வர்களும் ஸீதையும் இப்பொழுது மனவருத்தத்தில் ஆழ்ந்து வனத்திலுண்டாகும் வருத்தங்களை எப்படி ஸஹிகப் போகின்றனர்? மன்னவனே! 'முதுமையில் பலவித வ்ரதோபவாஸங்களைச் செய்து மிகவும் ப்ரயாஸப்பட்டுப்பெற்ற மூத்தகுமாரனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து கொடுக்கவேண்டிய ஸமயத்தில் துரத்தியாயினும் ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றினை' என்று உனக்கு உலகம் எங்கும் பெருங்கீர்த்தி பெருகிவருகின்றது; வாஸ்தவம். ராகவனும் தான் மஹா தானசீலனைகையாலும் மிகுந்த மன இரக்கமுடையவனைகையாலும் இனிய உரைகளையே உரைக்குந் தன்மையனைகையாலும் 'எனக்கு முதலில் வாயால் தானஞ்செய்த

ராஜ்யத்தை நான் விடமாட்டேன்' என்று சொல்லப் பொ
ருமையால் ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டனன். அதனல்
அவனுக்கும் பெருங்கீர்த்தியே. ஆயினும் பால்யமே பிடித்
து ஸுகமாக வளர்ந்துவந்த அப்புதல்வர்கள் இருவரும்
'வனம்போக நேர்ந்ததே'யென்று மனவருத்தமுற்று வன
வாஸதுக்கத்தை எப்படி ஸஹிக்கப்போகின்றனர்? எறக்கு
றைய யெளவனப்பருவத்தின இடையில் ப்ரகாசிக்கின்ற
வளும் மிகுந்த ஸௌகுமார்யமுடையவளும் ஸுகானுப
வத்திற்கே உரியவளுமாகிய அந்த ஸீதை இங்கு இது
வரையில் மிகுந்த ருசியுள்ள வ்யஞ்ஜனங்களோடு கூடி
ய மேலான ஆஹாரத்தை புஜித்துக்கொண்டிருந்து,
இனி அடவியில் விளைகின்ற செங்நெலரிசியிற் செய்த
ஆஹாரத்தை எப்படி புஜிக்கப் போகின்றனள்? எவ்வித
திலும் நிகைதக்கிடமாகாத அந்த ஸீதை மங்கலகரமான
கீதவாத்யத்வனிகளைக் கேட்டுக்கொண்டிருந்து இனி
அரண்யத்திலுள்ள க்ரூரங்களாகிய ஸிம்ஹாதி ம்ருகங்க
ளின் பயங்கரமான கர்ஜனையை எவ்வண்ணங் கேட்கப்
போகின்றனள்? இந்த்ரத்வஜம்போல் மிகுந்த ஸுகமங்க
ளைக் கொடுக்க வல்லவையாகி விளங்குகின்ற நீண்ட புஜ
தண்டங்களையுடையவனும் மஹாபலனுமாகிய ராமன் உழ
ல்தடியை நிகர்த்ததாகிய தனது புஜத்தையே தலையணை
யாக வைத்துக்கொண்டு அடவியில் எங்கே படுத்துக்கொ
ண்டிருக்கிறனே? தாமரையிதழ் போன்ற ஒளி விளங்கப்
பெற்றதும் அழகிய முன்னெற்றி மயிர்களோடு கூடியதும்
தாமரைப்புஷ்பத்தின் வாஸனை அமைந்த மூச்சுக்காற்று
டையதும் தாமரையிதழ் போன்ற கண்கள் பொருந்தி
யதும் தனக்கு நிகரொன்று நேரப் பெறுமல் மேன்மை
யுற்றிருப்பதுமாகிய ராமனது முகத்தை எப்போது பார்
க்கப் போகின்றேனை? ராமனைக் கண்ணாரக் காண நேரப்

பெரு திருப்பினும் என் மனது ஆயிரஞ் சுக்கலாய் வெடித்துப் போகாதிருக்கின்றதே! ஆகையால் இது வஜ்ராயுதத்தின் ஸாரத்தை எடுத்துச் செய்யப்பட்டதென்பதற்கு ஸந்தேஹம் இல்லை. ஸுகத்திற்கு உரியவர்களும் எனது ஆப்த பந்துக்களுமாகிய அந்த ஸீதா ராமலக்ஷ்மணர்கள் நீ துரத்திவிடுகையால் பட்டணத்தைவிட்டு, தீனர்களாகி அடவியில் திரிகின்றார்களே! இது மிகவும் மன இரக்கமில்லாத கார்யம் அன்றோ?[1] ராமன் பதினைந்தாவது ஸம்வத்ஸரத்தில் திரும்பி இவ்விடத்திற்கு வருவானெயினும், பரதன் தன் கையிலுள்ள ராஜ்யத்தையும் பொக்கசத்தையும் விடுவானென்று எனக்குத் தோற்றவில்லை. ப்ராஹ்மணர்களிற் சிலர் ஸ்ராத்த கர்மஞ் செய்யும்பொழுது, மிகவும் உயர்வுள்ள ப்ராஹ்மணச்ரேஷ்டமர்கள் இருப்பினும், தாம் கொடுக்குந் தக்ஷிணைகள் தம்முடையவர்க்கே சேரவேண்டுமென்று நினைத்து, அப்பொழுது அந்த உத்தம ப்ராஹ்மணர்களை விட்டுத் தமக்கு பந்துக்களாயிருப்பவர்களையே புஜிப்பிக்கின்றார்களல்லவா? அங்ஙனம் ஸ்ராத்தகர்மம் முடிந்த பின்பு கீழ் உபேக்ஷித்த ப்ராஹ்மணச்ரேஷ்டமர்களை இஷ்டபங்க்தியில் புஜிப்பிக்க வேண்டுவார்கள். அவர்களில் குணங்கள் அமையப் பெற்றவர்களும் வித்வான்களும் தேவதைகளுக் கொப்பானவர்களுமாகிய ப்ராஹ்மணச்ரேஷ்டமர்களாயிருப்பவர், அங்ஙனம் தம்மை விட்டு

---

1. இதற்கு—ராமன் ஒருக்கால் பதினைந்தாவது ஸம்வத்ஸரத்தில் திரும்பி இவ்விடம் வருவானெயினும், இந்த ராஜ்யமும் இந்தப் பொக்கசமும், பரதனால அனுபவிக்கப்பட்டவை யாகையால் அப்படிப்பட்டவைகளைத் தான் துறப்பானே யன்றிக் கைப்பற்றமாட்டான்' என்று மற்றொரு பொருள்..

குணஹீனர்களுக்கு ஸ்ராத்தத்தில் போஜனமிட்டதுபற்றி, இஷ்டபங்க்தியில் தமக்கு அம்ருதங் கொடுப்பார்களாயினும், அதற்கு எள்ளளவும் ஸம்மதிக்கமாட்டார்கள். முதலில் புஜித்தவர்கள் ப்ராஹ்மணர்களேயாயினும் பின்னிட்ட ப்ராஹ்மணேதமர்கள், வ்ருஷபங்கள் தமது கொம்புகளை ஒடிப்பதற்குப் பொருதிருப்பதுபோல், குணஹீனர்களாகிய அவர்கள் புஜித்த பின்பு தாம் போஜனஞ் செய்ய ஸம்மதிக்கப் பொரூர்கள். அரசனே! இங்ஙனம் பின் பிறந்தவனாகிய தம்பி அனுபவித்த ராஜ்யத்தைப் பெறியவனும் குணங்களில் சிறப்புற்றவனுமாகிய ராமன் ஏன் நிராகரிக்கமாட்டான்? பெரும் புலி மற்றொரு ம்ருகந் தின்று மிகுந்த பக்ஷயத்தைத் தின்னுது. அவனும் புருஷர்களில் பெரும்புலிபோல் மேன்மையுற்றிருப்பவனுகை யால் பிறர் அனுபவித்த ஓர் வஸ்துவைப் பெரிதாக கினைக்கமாட்டான். சருமுதலிய ஹவிஸ்ஸும் ஹோமத்திற்கு வேண்டிய நெய்யும் புரோடாசமென்று சொல்லப்பட்ட மாவிற்செய்த பதார்த்தங்களும் தர்ப்பங்களும் கருங்காலி பலாசு முதலியவற்றுற் செய்யப்பட்ட யூபஸ்தம்பங்களும் ஒரு யாகத்தில் உபயோகப்பட்டிருக்குமாயின், மீளவும் அவைகளை மற்றொரு யாகத்தில் உபயோகப் படுத்தார்கள். அப்படியே ராமனும் திரும்பி இந்த ராஜ்யம் தனக்கு வருமாயினும், ஸாராம்சம் எடுக்கப் பெற்ற மத்யம் போலவும் மற்றொருவர் ஸோமபானஞ் செய்யப் பெற்ற யாகம் போலவும் நிஸ்ஸாரமாகிய இந்த ராஜ்யத்தைச் சிறிதும் விரும்பமாட்டான். (ராமன் மிகவும் கோபித்துக் கொண்டிருப்பானுயின், இப்படிப்பட்ட அவமானத்தை அவன் அடைந்தே யிருக்கமாட்டான். அவன் கோபித்துக் கொள்வானுயின், தீக்ஷணங்களாகிய தனது பாணங்களால் மந்தரபர்வதத்தையும் இருபிளவாகப் பிளந்துவிடுவான்.

தான் இப்படிப்பட்ட மஹாஸுபாவனுயினும், அவன் உன் ஸமாத்ரம் தம்தை யெனகிற கௌரவத்தைப்பற்றி அடிக்க முயலான். ராமன் கோபமுறுவானுயின, சத்ர ஸுர்யர்களோடும் நக்ஷத்ரங்களோடுங் கூடிய ஆகாயத்தையாயினும் ஸ்வர்க்கத்தையாயினும் அறுத்துத் தள்ளிவிடுவான். நூறு நூறுகப் பர்வதங்கள் நிரம்பிய பூமண்டலம் முழுவதையும் கலக்கடித்து வெல்லவும் வல்லமையுள்ளவன். அபபடிப்பட்ட ஸமர்த்தனுயினும் அவன் உன்னை மாத்ரம் உல்லங்கனஞ் செயயாதிருக்கின்றனன்.) மிகுந்த பலமுள்ள பெரும்புலி தன வாலைபபிடித்திழுக்கப் பொறுக்கமாட்டாததுபோல, பலவானுகிய ராமனும் இப்படிப்பட்ட அவமானத்தைக் கொஞ்சமாயினும் ஸஹிக்கமாட்டான். உலகங்களெல்லாம் ஒன்று கூடி மஹாயுத்தத்தில் எதிர்த்து வந்தாலும், ராமனுக்குப் பயமெனபது சிறிதும் உண்டாகாது. ஆகையால அவன் பௌருஷந் கையிழந்து போகப் பெற்றவனன்று. மேலும், தர்மஸ்வபாவனுகையால், தர்ம மார்க்கத்தில நடந்து செலகின்ற உலகத்தை தர்மத்தில் நடக்கச் செய்கின்றவன். ஆனதுபற்றியே தான் தர்மந தவறலாகாதென்று அரண்யம் போயினன். ஓ மஹாராஜனே! மிகுந்த பராக்ரமமுடையவனும் அதற்கேற்ற நீண்டபுஜதண்டங்களையுடையவனுமாகிய ராமன், ப்ரலய காலாக்னியானது பூமி ஆகாயம் முதலிய பஞ்சபூதங்களைத் தஹிப்பதுபோல, ஸுவர்ணமயங்களாகிய பாணங்களைக்கொண்டு ஸமூத்ரத்தையாயினும் தஹித்துவிடுவான. அங்ஙனம வாயாலும் மனத்தாலும் அளவிடவொண்ணுத பராக்ரமம் பொருந்தி ஸிம்ஹம்போல் மிகுந்த பலமுடையவனும் வ்ருஷபம் போல் நீண்டகன்ற கண்களுடன் ப்ரகாசிக்கின்றவனுமாகிய அப்புருஷ சிகாமணியை, மீன் தன் குட்டியைக் கொல்வதுபோல், தம்தையே

தாணுகக் கொன்றுவிட்டனன். தர்மத்தில் நிலைனின்றிருக் குந தன்மையணுகிய உன் புதல்வனை அரண்யத்திற்கு ஓடு ம்படி அனுப்பிவிட்டனை. இப்படிப்பட்ட உனக்கு ப்ராஹ்ம மணர்கள் ஆசரிப்பதும் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டது மாகிய ஸனாதனதர்மம் உண்டா? உன்னைப்போன்றவனு க்கு அது எப்படி உண்டாகும்? மன்னவனே! ஸ்த்ரீக்கு முக்யமான முதல் கதி பர்த்தா ஒருவனே; இரண்டாவது புதல்வன்; மூன்றுவது பந்துக்கள்; இனி நான்காங் கதி யாகிய ஸ்வாதந்த்ர்யம் இவ்வுலகத்திலேயே இல்லை. அம் மூன்று கதிகளிலும் முதலாவதாகிய நீ என் சக்களத்தி க்கு உட்பட்டவனுகையால் எனக்கு இல்லாதவன்போன்றா ய். இரண்டாங் கதியாகிய ராமனே வென்றால் அரண்யம் போய்ச் சேர்ந்தனன். பர்த்தாவை யுடையவளாகையால் உன்னை விட்டு ராமனைப் பின் சென்று அரண்யம் போக நினைக்கலாகாது. அன்றியே எனக்குப் பந்துக்கள் தூர தேசத்திலிருக்கிறார்களாகையால் அவர்களும் இல்லையென் றே சொல்லவேண்டும். எல்லாவிதத்திலும் நீ என்னைப் பாழாக்கி விட்டனை. உன் மந்த்ரிகளையும் பாழாகச் செய் தனை. உன்னையும் பாழாக்கிக் கொண்டனை. என் புதல்வ னையும் என்னையும் நாசஞ் செய்தனை. பட்டணத்து ஜன ங்களையும நாசமாக்கிவிட்டனை. எவர் எப்படி ஆனலென்? உனது அருமைப் புதல்வனுகிய பரதனும் உனது ஆசை நாயகியாகிய கைகேயியும் மிக்க மனக்களிபபுற்றிருகிறா ர்கள் அல்லவா?' எனறனள். இங்ஙனம் பயங்கரமாகச் செவியிற் படுகின்ற அந்த வார்த்தைகளைக் கேட்டு மஹா ராஜன் மனவருத்தமுற்று மூர்ச்சை யடைந்தனன. பிறகு கொஞ்சநேரங் கழிந்தது மூர்ச்சை தெளியப்பெற்று, அந்த துக்கத்திற்குக் காரணமாகிய தன் பூர்வஜனம துஷ்க்ரு தத்தை நினைத்துக்கொண்டு, மீளவும் சோகமுற்றனன். அறுபத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

மூர்ச்சை தெளிந்த மன்னவனைக் கௌஸல்யை ஸமாதானப்படுத்துவதும், கௌஸல்யை தான் பருஷவாக்யங்களை சொன்னதற்கு ராஜாவிடம் மன்னிக்கும்படி வேண்டிக்கொள்வதும், சோகத்தினால் மன்னவன் நிதனை போதலும்.

இங்ஙனம் கௌஸல்யை மிகுந்த மனவருத்தமுற்றுக் கோபித்துச் சொன்ன பருஷவாக்யங்கள் முழுவதும் செவியிற் படப்பெற்ற மன்னவன் மனவருத்தத்திலாழ்ந்து 'தப்புக்கார்யஞ் செய்துவிட்டோமே' என்று சிந்தித்துக் கொண்டிருந்தனன். பகைவரைப் பறந்தோடச் செய்யவல்ல பராக்ரமசாலியாகிய அம்மன்னவன் அங்ஙனஞ் சிந்தித்துக் கொண்டிருந்து இந்த்ரியங்கள் கலங்கப் பெற்றுப் பிறகு வெகு நேரங் கழித்து மூர்ச்சை தெளியப்பெற்றனன். அவன் மூர்ச்சை தெளிந்தவுடனே அத்யுஷ்ணமாகப் பெருமூச்செறிந்துகொண்டு தன் பக்கத்திலிருக்கிற கௌஸல்யையைப் பார்த்து மீளவும் 'இப்படிப்பட்ட துக்கத்தை அனுபவிக்கும்படி நான் பூர்வஜன்மத்தில் எது பாபஞ் செய்தேனே' என்று சிந்திக்கத் தொடங்கினன். அங்ஙனம் அவன் சிந்தித்துக் கொண்டிருக்கையில், லக்ஷ்யம் தன் கண்ணுக்குப் புலப்படாதிருப்பினும் அதன் சப்தத்தைப் பிடித்துக் குறி வைத்து அடிக்கும் வல்லமையுடையவனுகையால், அந்த ஸாமர்த்யத்தினால் முன்பு தெரியாமல் என்ன பாபகார்யஞ் செய்தானே, அது இப்பொழுது அம்மன்னனுக்கு புத்தியிற் பட்டது. அந்தப்ரபு முன்பு தான் செய்த பாபத்தினுலுண்டான சோகமும் ராமனைப் பற்றிய சோகமும் ஆக இரண்டும் மேலெழப் பெற்று மனங் கலங்கி மிகவும் பஸ்சாத்தாபமுற்றனன். அரசன் இரண்டு சோகங்களாலும் தஹிக்கப்பட்டுக் கடு

கிடுவென்று நடுக்கமுற்றுத் தலை வணங்கப் பெற்றுக் கை கூளைக் குவித்துக்கொண்டு கௌஸல்யையை மனந் தெளி வுறச் செய்யும்பொருட்டு அவளைப் பார்த்து 'கௌஸல்யே! நீ என்னிடத்தில் அருள் புரியும்படி வேண்டுகின்றனன். இதோ உனக்கு அஞ்ஜலி செய்கின்றனன். நீ பகைவரிட த்திலுங்கூட மிகுந்த மன இரக்கமுடையவள். தேவீ! தர்மத்தைப் பராமர்சிக்குந் தன்மையராகிய உன்னைப் போன்ற ஸ்த்ரீகளுக்குக் குணமுடையவனையினும்குணமற் றவனையினும பர்த்தாவே ப்ரத்யக்ஷ தெய்வமன்றே? அங்ங னம் பதிதேவதையாகிய (பர்த்தாவையே தெய்வமாக நினைத்திருக்கிற) நீ எப்பொழுதும் தர்மத்திலேயே ஆஸ க்தியுடையவள். உலகத்திலுள்ள ஏற்றக்குறைவுகளை அறி யுந் திறமுடையவள். இப்படிப்பட்ட உனக்கு எப்படிப் பட்ட மனவருத்தம் உண்டாயிருப்பினும் என்னை மிகவும் துயரமுறும்படி இப்படிப்பட்ட அப்ரியங்களை உரைப்பது யுக்தமன்று' என்றனன். அரசன் தீனனெ மன இரக்கமு ண்டாகும்படிக்குச் சொன்ன அந்த வார்த்தைகளைக் கே ட்டுக் கௌஸல்யை, மேடைகளின் மீதிருந்து மழை ஜலம் கீழே விழும்பொருட்டு மரம் முதலியவற்றால் ஏற்படுத்தப் பட்ட ஜலதாரையானது புதிய மழை ஜலத்தைநச் சலசல வென்று பெருக்குவதுபோல் கண்ணீர் பெருக்கினள். அ ந்தக் கௌஸல்யை 'பர்த்தாவை இங்ஙனம் மொழிக்தே மே' என்று தர்மலோபத்திற்குப் பயப்பட்டுக் கதறிக்கொ ண்டே அரசனது அஞ்ஜலியைத் தாமரஸ புஷ்பத்தைப் போன்ற தன் கைகளால் எடுத்துத் தன் சிரத்திலிட்டுக் கொண்டு பரபரப்பினால் தழுதழுத்த உரைகளுடன் 'தே வ! என்மீது அருள் புரிய வேண்டும். தலைப்படத் தரை யில் வீழ்ந்து உனக்கு நமஸ்காரஞ் செய்து வேண்டுகின்ற னன். பர்த்தாவாகிய நீ என்னை யாசிக்கும்படி செய்து

கொண்டனன். ஆகையால் பாபிஷ்டையாயினேன். ஆனதுபற்றி நான் உமக்குத் தாஸிபோல் நன்கு புடைக்கத்தகுந்தவளாயிருக்கின்றேன். வீரர்களில் தலைவனே! கொண்டாடத் தகுந்த புத்தியுடையோனாகிய பர்த்தாவானவன் தன்னை மிகவும் வேண்டிக்கொண்டு கலக்கந்தெளிவிக்குமபடி எவள் செய்வித்துக் கொள்வாளோ, அந்தஸ்த்ரீ இரண்டு லோகத்திற்கும் ஆகமாட்டாள். அவளை இவ்வுலகத்திலுள்ளவர்களும் நிந்திப்பார்கள். பரலோகத்திலும் அவள் தண்டனைக்கிடமாவாள். தர்மங்களை உணர்ந்தவனே! நான் தர்மங்களை அறிவேன். நீ ஸத்யவாதியென்பதும் தெரியும். ஆயினும் புத்ரசோகத்தினால் பீடிக்கப்பட்டு முன் பின் பாராமல் ஏதோ உன்னைத் தகாத வார்த்தைகள் சொல்லினன். இவ்வளவே யாகையால் என்னை மன்னிக்கவேண்டும். சோகத்தினால் தைர்யம் நசித்துப் போகும். சோகத்தினால் கல்வியும் பாழாய்விடும். சோகம் எல்லாவற்றையுந் தொலைத்து விடுமாகையால் சோகத்தைப் போன்ற சத்ரு மற்றொருவனும் கிடையான். பகைவனது ஹஸ்தத்தினின்றும் திடீரென்று விழுந்த உதையையாயினும் பொறுக்கலாகும். அப்படியே திடீரென்று சோகம் மேலெழுமாயின், அது எவ்வளவு சிறியதாயினும், அதைப் பொறுத்திருக்க முடியாது. (வீரனே! தர்மஜ்ஞர்களும் வேதமோதினவர்களும் தர்மத்தைக் குறித்து எள்ளளவாயினும் ஸந்தேஹமின்றித் தெரிந்தவர்களுமாகிய மஹர்ஷிகளுங்கூட, 'சோகம் வந்து மனத்தை நன்றாகக் கலக்குகையில், மதி கெட்டு எமாறிப் போவார்கள்.) ராமன் வனவாஸஞ் செய்ய ஆரம்பித்து இப்போதைக்கு [1] ஐந்து ராத்ரிகள் ஆயின. அவ்வைந்து ராத்ரிகளும் துக்

---

1 தமஸாதீரத்தில முதல ராத்ரி; கங்காதீரத்தில இரண்டாவது ராத்ரி; ப்ரயாக க்ஷேத்ரத்தில் நாலாவது ராத்ரி; யமுனாதீரத்தில்

கத்திரல் மனக்களிப்பைத் துறந்திருக்கிறனக்கு ஐந்து

ஐந்தாவது ராத்ரி; ஆறுவது நாள ஸுமந்த்ரன், ராமன் சித்ரகூடத்திற்குப் போய்ச சேரப் போகிறுனென்று தெரிந்து கொண்டு அன்றைத் தினம் ஸாயங்காலம் அயோத்யைக்கு வந்து சேர்ந்தனன். ஆகையால் இதுவரையில் ஐந்து ராத்ரிகள கணக்கிடப்பட்டனவென்று சிலர் கருத்து. மற்றைச சிலர்—கங்கையைத தாண்டும் வரையில் வன வாஸமாகக் கொளள நேராதாகையால அதைத் தாண்டின பின்பு ஆலமரத்தினடியிலும் பரத்வாஜாஸ்ரமத்திலும் யமுனாதீரத்திலும் சித்ரகூடத்திலும் வரிசையாக நான்கு ராத்ரிகள கடந்தன. அந்த நான்காவது ராத்ரியினன்றே ஸுமந்த்ரன் புறப்பட்டனன். ஐந்தாவது ராத்ரி கௌஸல்யை அந்த வாத்தை சொன்னளாகையால, 'பஞ்சராத்ரோஷிய முண்யதே' என்றவிடத்தில் (அஷிய) (இப்போதைக்கு) என்றஇதற்கு இப்படி சொலலவதே ஸரஸமாயிருக்குமென்று கூறுகின்றனர். இதன் வ்யவஸ்தை எப்படியெனில்—ஐம்பத்தேழாவது ஸர்க்கத்தில் 'ஸராஜ்ஞாஹிமமந° ப்ரயாகேச ஸஹாஸநம், ஆஸிரோ முமந° தேஷாம° தத்ரஸ்யைரஹிலக்ஷிதம்' (அந்த ஸீதாராமலக்ஷ்மணர்கள் பரத்வாஜாஸ்ரமத்திற்குப் போதல, ப்ரயாக க்ஷேத்ரத்தில் அம்முனிவரோடு கூட இருத்தல, சித்ரகூட பர்வதம் வரையில் போதல ஆகிய இவையெலலாம் அந்தக் குஹனது பட்டணத்திலுளள சாரர்களால் தெரியவந்தது) என்றிருக்கின்றது. ராமன் அயோத்யையை விட்டுப் புறப்பட்ட ஆறுவது நாள் சித்ரகூடம் போய்ச சேர்ந்தனன். அங்கிருந்து சாரர்கள் ஏழாவது நாளோ எட்டாவது நாளோ ஸிருங்கிபேர புரத்திலிருக்கும் ஸுமந்த்ரனிடம் வந்து ராமவ்ருத்தாந்தத்தைத் தெரிவித்தனர். ஸுமந்த்ரனும் அங்கிருந்து புறப்பட்டு 'ததஃ ஸாயாஹ்ந ஸமயே தரூதீயேऽஹனி ஸாரயிஃ, அயோத்யாம° ஸமநுப்ராப்ய' என்று மூன்றுவது நாள் ஸாயங்காலம் அயோத்யைக்கு வந்து சேர்ந்தனன். அப்போதைக்கு ஏறக்குறையப் பத்துத் தினங்கள் ஆகின்றன. இப்படி யிருக்க, ஐந்து ராத்ரிகள் ஆயினவென்பது எப்படி? என்னில்—'ஆஸிரோ முமந°' என்பதற்கு (சித்ரகூட பர்வதத்திற்குப் போகும் வரையில்) என்றுல் (சித்ரகூட பர்வதத்திற்குப் போகத் தொடங்கின வரையிலும்) என்று பொருள கொள்ள வேண்டும். அப்பொழுது சாரர்கள பரத்வாஜாஸ்ரமத்திலேயே ராமன் சித்ரகூடத்திற்குப் போகத் தொடங்கினது அறிந்து அவ்விடத்தி

ஸம்வத்ஸராங்கள் போல் இருக்கின்றன. அவைகளை நினை

விருந்தே ஸுமந்தரனிருக்கு மிடத்திற்கு வரப் புறப்பட்டு நேர்வழி யாக இரவும் பகலும் நடந்து வந்தார்களென்று தெரிகின்றது. 'ததஃ ஸாயாஹ்நஸமயே தஶரதியேऽஹனி' என்றதிதற்கு (மூன்றுவது நாள ஸாயங்காலம்) என்று பொருளலல; ஆதல் எப்படியெனில்—(அந்த தினத்தின் மூன்றுவது பாகமாகிய ஸாயங்காலத்தில்) என்று பொ ருள கொள்ள வேணும். ஸுமந்த்ரன் ஸ்ருங்கபேரபுரத்தில் 'ஸ்வ ஸாந் வஹமிங்' (வெகு நாள இருந்தான்) என்பதையும் மூன்று தின ங்களிருந்தா னென்பதாகக் கொள்ள வேண்டும். இந்த மூன்று தின ங்களோடு தமஸாநதிக் கரையில தங்கியிருந்த தினத்தையுங கூட்டிக் கொண்டால் அயோத்தியையை விட்டு நான்கு தினங்கள ஆகின்றன. நான்காவது நாள ராமன் பரத்வாஜாஸ்ரமஞ் சென்று சேருகையால் சாராகள அங்கு ராமனது வ்ருத்தாந்தத்தைத் தெரிந்துகொண்டு நேர் வழியாகவே இரவும் பகலும் நடந்து மற்றை நாள ஸுமந்தர னுக்கு அந்த வ்ருத்தாந்தத்தைத் தெரிவிக்கையில், அவனும் அந்த ஐந்தாவது நாளே புறப்பட்டு அன்று ஸாயங்காலம் வேகமாக அயோ த்தியைக்கு வந்து சேர்ந்தனன். அந்த ஐந்தாவது நாள ராத்ரியே கௌ ஸல்யை 'பஞ்ச ராத்ரோஷிய முண்யதே' என்று 'அஜீய' என்னும் சப்தத்தைச சோத்துச சொன்னலென்று தெரிகின்றது—என்று கோவிந்தராஜர்.

ராமன் ஆறுவது நாள் சித்ரகூடஞ் சேர்ந்தானல்லவா? ஸுமந் த்ரனும் ஆறுவது நாளே அயோத்தியைக்கு வந்து சேர்ந்தனன். எப்படி யென்னில்—ராமன் அயோத்தியையை விட்டுப் புறப்பட்ட நான்கா வது நாள பரத்வாஜாஸ்ரமத்திற்குப்போய்ச சேர்ந்தனன். அன்றைத் தினமே சாரர்கள் ராமவ்ருத்தாந்தத்தைத் தெரிந்துகொண்டு வந்து ஸுமந்த்ரனுக்குத் தெரிவிக்கையில, ஸுமந்த்ரனும் அந்த நான்கா வது நாளே புறப்பட்டு 'ததஃ ஸாயாஹ்நஸமயே தஶரதியேऽஹனி' என்கிறபடியே அந்தத் தினத்தோடுகூட மூன்றுவது நாள ஸாயங்கா லம், அதாவது—ஆறுவது நாள் ஸாயங்காலம் அயோத்தியைக்குச் சேர் ந்தனன். இதற்கு முன்பே ஐந்து ராத்ரிகள் ஆயினவாகையால் கௌ ஸல்யை பஞ்சராத்ரமென்றுளென்று தெரிகின்றது. இவ்வனம் மஹேஶ்வர தீர்த்தர்.

இதில் 'ததஃ ஸாயாஹ்ந ஸமயே தஶரதியேऽஹனி' என்கிற வித

த்தமாத்ரத்தில் தானே, நதீ வேகத்திலுல் ஸமுத்ராஜலம் வளர்ந்து வருவது போல், என் மனத்தில் அந்தத் துயரம் பெருகி வருகின்றது' என்றனள். இங்ஙனம் கௌஸல்யை ஸமாதானம் உண்டாகும்படி நல்வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே ஸூர்யன் அஸ்தமித்தனன். ராத்ரியும் வந்து விட்டது. அரசன் அங்ஙனம் மொழிந்த கௌஸல்யையின் சுபவாக்யங்களால் மனக்கலக்கந் தீர்ந்து மிகவும் துக்காக்ராந்தையிருந்த போதிலும் நித்ரைக்கு வசமாயினன். அறுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் கௌஸல்யையோடு தான் பூர்வத்
திலை ஸாயூநதிக்கருகில் ஒருரிஷி குமா
ரனை யானை யென்று நினைத்துக்
கொன்ற வ்ருத்தாந்தத்
தைக கூறுதல்.

பிறகு தசரதமஹாராஜன் ஓரு முஹூர்த்தகாலங் கழிந்தவுடனே விழித்துக்கொண்டு சோகத்திலுல் மதி மயங்கப் பெற்றுச் சிந்தையுற்றனன். தேவேந்த்ரனை நிகர்த்த அந்தத் தசரத மன்னவன் ராமலக்ஷ்மணர்களை வனத்திற்கு அனுப்பினதால், ராஹுவிலுல் பீடிக்கப்பட்ட ஸூர்யன்போல் மிகவும் உபத்ரவம் அடைந்தனன். ராமன் பார்யையோடுகூட வனத்திற்குப் போகையில், அந்தக் கோஸலாதிபதியாகிய தசரதன் தான் முன்பு கடத்தின பாபகார்யத்தை நினைத்துக்கொண்டு கறுத்தழகிய கடை

ற்கு கோவிந்தராஜர்—அன்றைத் தினத்து மூன்றுவது பாகமாகிய ஸாயங்கால மென்றும், மஹேஶ்வர தீர்த்தர்—மூன்றுவது நாள் ஸாயங்கால மென்றும் பொருள் கூறுவதாகத் தெரிய வருகின்றது.

க்கண்கஎளயுடைய கௌஸல்யையைப் பார்த்துச் சொல்ல விருப்பமுற்றனன். ராமனை அரண்யத்திற்கு அனுப்பிய பின்பு அந்தத் தசரதமஹாராஜன் ஆறுவது ராத்ரியின் அர்த்தராத்ரியில் முன்பு தான் செய்த பாப கார்யத்தை நினைத்துக்கொண்டிருந்தனன். அங்ஙனம் புத்ரசோகத்தினல் பரிதபிக்கின்ற அம்மன்னவன் தான் பூர்வத்தில் செய்த துஷ்க்ருத்யத்தை நினைத்துக் கொண்டு தன்னைப் போலவே புத்ரசோகத்தினல் புலம்பிக் கொண்டிருக்கிற கௌஸல்யையைப் பார்த்து 'மங்கல ஸ்வபாவ முடையவளே! க்ஷமத்தை விளவிப்பவளே! ஒருவன் பிறருக்கு நல்லதாவது கெட்டதாவது எதாவதொரு கார்யத்தைச் செய்வானுயின், அதனல் பிறர்க்கு விளயும் பலத்தைப் போன்ற பலத்தையே தானும் அனுபவிப்பான். எவன் கார்யத்தைச் செய்ய ஆரம்பிக்கும் பொழுது அதன் பலத்தினுடைய ஏற்றக்குறைவுகளையாவது அந்தப் பலத்தாலுண்டாகும் ஸுகத்தையும் துக்கத்தையுமாவது தெரிந்து கொள்ளானே, அவனை மூடனென்று சொல்லப் படுவான். எவனுவொருவன், புஷ்பம் எவ்வளவோ, அவ்வளவே பலமும் விளயுமென்று புஷ்பத்தைப் பார்த்து பலத்தில் போராசையுடையவனுகி, மாம்பூ சிறியதும் வர்ணமில்லாதிருப்பதுமாகையால் அந்த வ்ருக்ஷத்தின் பலம் சிறியதாகவே யிருக்குமென்றும், பெரியதும் அழகிய வர்ணம் பொருந்தியதுமாகிய பலாசின் புஷ்பங்களைப் பார்த்து அந்த வ்ருக்ஷத்தின் பலம் பெரிதாயிருக்குமென்றும் ஆலோசித்துக் கொண்டு மாந்தோப்புகளையெல்லாம் வெட்டி வேரைக்களைந்து பலாச வ்ருக்ஷங்களை வைத்து ஜலம் பாய்ச்சி வளர்ப்பானுயின், அவன் பலமுண்டாகுங் காலத்தில் பலாசவ்ருக்ஷத்தில் தான் எதிர்பார்த்திருந்த மஹாபலத்தைக் காணுமல் மனவருத்தமுறுவான். எவன் வரப்

போகிற பலந் தெரியாமல் மனத்திற்குத் தோன்றியபடி கார்யங்களைச் செய்துகொண்டிருப்பாரே, அவன் மாமரங்களை வெட்டிப் பலாசமரங்களை நீர் வார்த்து வளர்ப்பவன்போல் பலகாலத்தில் மனவருத்தப் படுவான். ராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவேண்டியிருக்க, அது செய்யாமல் அவனை அரண்யத்திற்கு அனுப்பிக் கைகேயிக்கு ப்ரியஞ் செய்தவனுகிய நான் மாந் தோப்புகளை வெட்டிப் பலாச வ்ருக்ஷங்களை ஜலம் வார்த்து வளர்ப்பவனுய் விட்டனன். ஆனதுபற்றி நான் இங்ஙனம் புத்தி கெட்டுப் பலம் பெறவேண்டிய காலத்தில் அப்படிப்பட்ட அசுபகார்யத்தைச் செய்ததற்குப் பலமாக ராமனைப் பிரிந்து, பிறகு அவனை விட்டுப் பிரிந்த பலத்தை அனுபவித்துக்கொண்டு துக்கிக்கின்றனன். கௌஸல்யே! நான் குமாரனுயிருக்குந் தசையில் கல்ல வில்லாளியாகி 'இந்தப் பயல் சப்தத்தையே குறியாகக் கொண்டு அடிக்க வல்லவன்' என்று ப்ரஸித்தி பெற்றிருந்தனன். அந்த இளமைப் பருவத்தில் இந்தப் பாபத்தைச் செய்தனன். கர்மபலம் லோகாந்தரத்திலேயோ, அல்லது—இதர ஜன்மத்திலேயோ விளையுமென்பது உண்டு. எனக்கோ வென்றால்—உலகத்தில் வாலிபனுயிருப்பவன் அஜ்ஞானத்தினால் விஷத்தைத் தின்பானுயின், உடனே அவனுக்கு அது துக்கத்தை விளைப்பது போல், எனக்குள் தெரியாமையால் செய்த பாபத்தின் பலமாக இந்த மனவருத்தம் இதோ உடனே ஸம்பவித்தது. ஸாமான்யனுயிருப்பானொருவன் புஷ்பத்தைப் போலவே பலமும் இருக்குமென்று நினைத்துப் பலாசின் புஷ்பங்கள் அழகாயிருப்பது கண்டு அதனுடைய பலங்களும் நன்றுயிருக்குமென்று ப்ரமிப்பதுபோல் நானும் மற்ற மங்களின் சப்தத்தையே குறியாகப் பிடித்துப் பாணங்களால் அவைகளை அடித்து அதனல் எனக்கு உலகமெங்

கும் பரக்து விளைந்த ப்ரஸித்திமையக் கண்டு, அதன் பல
மும் அப்படியே உலகம் முழுவதிலும் புகழத்தக்கதாயிரு
க்கு மென்று ப்ரமித்து, அதனுலுண்டாகக் கூடிய அனர்
த்த பலத்தை அறியாமற் போயினன். தேவீ! உனக்கு
அப்பொழுது விவாஹம் ஆகவில்லை. என் தந்தையும் இரு
தனர். நான் அப்பொழுது யுவராஜனுயிருந்தனன். பிற
கு மதத்தையும் காமத்தையும் வளரச் செய்வதாகிய வர்
ஷாகாலம் வந்தது. ஸூர்யன் தனது கிரணங்களால் பூமி
யிலுள்ள ரஸத்தை இழுத்து உலகத்தைத் தபிக்கச் செ
ய்து ப்ரேதங்கள் திரியப்பெற்று பயங்கரமாகிய தென் தி
சைக்குப் போய்ச் சேர்ந்தனன். அப்பொழுது வெயில் கு
றைந்து மறைந்தது. மேகங்கள் நீர் கொண்டு நிகுநிகெ
னறு கறுத்துக் குளிர்ந்தவைகளாய்க் காணப்பட்டன. பி
றகு தவளைகளும் சாதகப் பறவைகளும் மயில்களும் ஆ
கிய இவை யெல்லாம் ஸந்தோஷித்தன. பக்ஷிகள் சிறகு
களின் மேல்பாகங்களெல்லாம் கனையப்பெற்று ஸ்னானஞ்
செய்தாற்போல் புலப்பட்டு மழையினுலும் காற்றினுலும்
அசைகின்ற நுனிகளையுடைய வ்ருக்ஷங்களின் மீது கனை
ந்த ரக்தைகளுடன் எப்படியோ கஷ்டப்பட்டுப் போய்ச்
சேர்ந்தன. யானையானது தாரைதாரையாகத் தன் மேல்
விழுந்தும் விழுந்துகொண்டு மிருக்கிற மழை ஜலத்தினுல்
(அதாவது விடாமழையினுல்) மறைக்கப்பட்டு ஜலம் சுற்
றிலும் சூழ்ந்த மலைபோலவும், அலைகளின்றி அசையாமலி
ருக்கின்ற ஸமுத்ரம் போலவும் ப்ரகாசித்துக் கொண்டிரு
ந்தது. ஜலப்ரவாஹங்கள் தாம் இயற்கையாகவே அழுக
கின்றி நிர்மலமா யிருப்பவைகளாயினும் வெளுத்தும் சிவ
ந்தும் விளங்குகின்ற கைரிகதாதுக்கள் காவிக் கல்கள்
வந்து சேருகையால்நானுவர்ணங்களுடையவையாகிப் பல
வர்ணங்களுள்ள ஸர்ப்பம் போல் கோணல் கோணலாக

மலைகளினின்றும் பெருகி வந்தன. (ஜலப்ரவாஹங்கள் தாம் இயற்கையாகவே நிர்மலமாயிருப்பவையாயினும் மழை பெய்வதனால் கலங்கிச் சிவந்த ஜலமுண்டையவைகளாகித் தமது வழியைக் கடந்து மேட்டுப் புறங்களிலும் பாய்ந்துகொண்டிருந்தன.) மிகவும் ஸுகத்தை விளைப்பதாகிய அக் காலத்தில் நான் வேட்டையாட வேண்டுமென்று நிச்சயித்து வில்லையும் பாணத்தையும் தரித்து ரதத்தின் மீதேறிக்கொண்டு ஸரயூநதியைக் குறித்துப் போயினன். நான, இந்த்ரியங்களை வெல்லப் பெறுத மூடனுகையால் அந்நதியில் இழிந்து ராத்ரியில் ஜலங் குடிக்குந் துறையில் காத்திருந்து ஜலங் குடிப்பதற்காகக் காட்டுக் கடாவாயினும் யானையாயினும் மற்றை க்ரூரம்ருகம் ஏதாயினும் வருமாயின் அவைகளை அடிக்கலாமென்று விருப்பமுற்றிருந்தனன். அந்த ஸரயூநதிக் கரையில் அதன துறையில் நான் ராத்ரியில் ஒருவனேயாக, வில்லை நாணேற்றிப் பிடித்துக்கொண்டு மிக்க மனவூக்கத்துடன் ஜன ஸஞ்சாரமில்லாமையாலும் ராத்ரியாகையால் ஏகாந்தமாயுமிருக்கிற அவ்விடத்தில் நானொருவனேயாக இருக்கிறனெனக்குச் செவியிற்பட்ட சப்தத்தைக் குறிசெய்து அந்நதிக்கரையில் வந்த ஓர் அரண்ய ம்ருகத்தை அடித்தனன். அதன் பிறகு மற்றொரு க்ரூரம்ருகத்தையுங் கொன்றனன்; அனந்தரம் காடாந்தகாரத்தில் கண்ணுக்குப் புலப்படாத இடத்தில் ஆற்றில் குடத்தில் ஜலம் மொள்ளுகிற த்வனியொன்று யானை கர்ஜிக்கிற சப்தம்போல் என் செவிக்குப் புலப்பட்டது. பிறகு ஸர்ப்பம்போல் ப்ரகாசிக்கின்ற பாணத்தை எடுத்து அந்த யானையைக் கொல்லவிரும்பி அந்த சப்தம் வந்த வழியைப்பிடித்து இன்ன இடத்தில் யானை இருக்குமென்று குறிவைத்து பாணத்தை யெய்தனன். நான கூரான பாணத்தைப் பொகட்ட இடத்தினின்றுமே, நான பொக

ட்ட பாணம் மர்மத்தில் கன்கு படப்பெற்று வருந்தி ஜலத்தில் வீழ்கின்ற ஓர் முனிகுமாரன 'ஐயோ! ஐயோ!' என்று கத்தும் வார்த்தை விடியற்காலத்தில் ஸ்பஷ்டமாகச் செவிக்குப் புலப்பட்டது. அந்தப் பாணம் பொகட்டவுடனே அதுவிழுந்தஇடத்தினின்றும் 'நான் ரிஷியாயிற்றே! ஆகையால் எனக்குப் பகைவன் ஒருவனும் இல்லையே! இப்படிப்பட்ட எனமேல் பாணம் எப்படி விழுந்ததோ! நான் அர்த்தராத்ரிகாலத்தில், ஒருவனும் இல்லாதபொழுது ஆற்றினின்று ஜலம் கொண்டுபோவதற்காக வந்தனன். என்னை எவன் பாணம் பொகட்டு அடித்தனன்? நான் எவனுக்கு யாது அபகாரஞ் செய்தனன்? வாக்கு மனது சரீரம் ஆகிய இம்மூன்றினாலும் பிறர்க்குளள்ளளவாயினும் ஹிம்ஸை செய்யாமல் அரண்யத்தில் அகப்படுமவற்றைத்தின்று காலங்கழிக்கின்ற என்னைப் போன்ற ரிஷியை ஆயுதங்கொண்டு அடிப்பது எப்படி ஸம்பவித்தது? ஜடாபாரத்தைத் தரித்து மரவுரியையும் க்ருஷ்ணஜினத்தையும் உடுத்துத் திரிகின்ற எனனைக்கொன்று எவன் என்ன ப்ரயோஜனத்தைப் பெற விரும்பினனோ? அப்படிப்பட்டவனுக்கு நான் என்ன அபகாரஞ்செய்தனன்? இப்படிப்பட்ட கார்யம நடத்தினதால் கேவலம் அனர்த்தம் மாத்ரம் விளைந்ததேயன்றி மற்றை யாது பலமும் உண்டாகாது. இப்படி என்னைச் செய்தவன் எவனையினும் அவனை நல்லவனாகினைப்பார்களா? குருபார்யை யிடம் சென்ற மஹாபாதகனைப்போல் நினைப்பார்களேயன்றி வேறில்லை. என் ப்ராணன்கள் போவதுபற்றி நான அவ்வளவு துக்கப்படமாட்டேன், நான் செத்துப்போவேனயின், என்னுடைய தாய் தந்தைகள் திக்கற்றவர்களாவார்களேயென்று நினைத்து வருத்தப்படுகிறேனன்றி வேறில்லை. வெகுகாலமாக நான் வ்ருத்தர்களாகிய இந்தத் தம்பதிகளைப் போஷித்துக்கொ

ண்டு வந்தனன். நான் மரணம் அடைகையில் இனி இவர்கள் எவ்விதமாக ஜீவிக்கப் போகின்றனர்? எவன் மிகவும் மூடனுகிச் சிறிதுந் தெளிவின்றி ஒரு பாணத்தினுல் என்னையும் கிழவர்களாகிய என தாய்தந்தைகளையும் ஆக மூவரையும் கொன்றுவிட்டனன் ?" என்று மனுஷ்யவாக்யஞ் செவியிற்பட்டது. மிகவும் மன இரக்கத்தை விளைவிக்கும்படியான அவ்வார்த்தையைக்கேட்டு நான் தர்மத்தில் ஆஸக்தியுடையவனுகையால் அதர்மஞ் செய்தோமேயென்று மனத்தில் பீடிக்கப்பட்டிருக்கையில் என் கைகளினின்றும் வில்லும் பாணமும் கீழே விழுந்துவிட்டன. ராத்ரி காலத்தில் அங்ஙனம் தீனமாகப் புலம்புகின்ற அந்த முனிகுமாரனது பல தீனவாக்யங்கள் செவிப்பட்டவுடனே தடுமாறி மிகுந்த சோகம் மேலெழப்பெற்று மதிமயங்கி இருந்தனன். இப்படி மிகவும் மனங்கலங்கப்பெற்றுச் சரீரத்திலும் பலம் குறைந்திருக்கிற நான் அவ்விடஞ்சென்று ஸரயூநதிக்கரையில் பாணத்தால் அடிக்கப்பட்டுக் கீழே விழுந்திருக்கிற முனியைக் கண்டனன். அவன் ஜடைமுடி அவிழ்ந்து ஜலக்குடம் உடைந்து புழுதியும் ரக்தமும் சரீரத்தில் படிந்து பாணத்தின் நுனியால் அடியுண்டு பீடிக்கப்பட்டுக் கீழே விழுந்திருந்தனன். அம்முனிகுமாரன் திகில்பட்டு மனங்கலங்கியிருக்கிற என்னைத் தனது தேஜஸ்ஸினல் தஹிப்பவன்போல் இரண்டுகண்களாலும் க்ரூரமாக உற்றுப்பார்த்துப் பிறகு இங்ஙனம் பருஷமாகச் சொல்லத்தொடங்கினன். "அரசனே! தாய்தந்தைகளுக்கு ஜலங்கொண்டுபோவதற்காகவந்த என்னை நீ பாணத்தினுல் அடித்தாயே. வனத்தில் வாஸஞ்செய்துகொண்டு காலத்தைக்கழிக்கின்றவனுகிய நான் உனக்கு யாது அபகாரஞ்செய்தனன்? எனது மர்மஸ்தானங்களில் ஒரு பாணத்தினுல அடிக்கையில் நான் செத்துப்போவது மாத்ரமேயன்றி வ

யது சென்றவர்களும் கண் தெரியாதவர்களுமாகிய என் தாய்தந்தைகளுங்கூடச் செத்துப்போய்விடுவார்களே! அவ்விருவரும் மிகவும் துர்ப்பலர்களாகி எழுந்திருக்கவும் முடியாதிருக்கின்றனர். மேலுங் குருடர்கள். அவர்கள் தபித்துக்கொண்டுதான் எப்பொழுது வருவேனென்று என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். வெகுநேரம்வரையில் 'பாலகன் ஜலங்கொண்டுவருவான்' என்னும் ஆசையால் ஸஹிக்கமுடியாத தாஹத்தை அடக்கிக் கொண்டிருக்கப்போகிறார்கள். நான் இங்ஙனம் தரையில் விழுந்து பரிதபித்துக் கொண்டிருப்பது என் தந்தைக்குத் தெரியாதல்லவா? மிகத் தவஞ்செய்தும் கல்வியைக்கற்றும் தந்தைக்குங்கூடத் தெரியாமல் தரையில்விழுந்து படுத்திருக்கின்றேனே! ஆகையால் எவ்வளவு தவஞ்செய்தபோதிலும் எவ்வளவு கல்வியைக்கற்றபோதிலும் யாதும் பயன் இல்லை. நடக்கவுங்கூட முடியாத என் தந்தைக்கு நான் இங்ஙனம் விழுந்திருப்பது தெரிகதபோதிலும் தாம் என் செய்யப்போகின்றனர்? காற்று முதலியவற்றால் ஒருவ்ருக்ஷம் முறிக்கப்பட்டுக் கீழேவிழும்போது மற்றொருவ்ருக்ஷம் பக்கத்தில் பார்த்துக் கொண்டிருந்தபோதிலும் அதைக் காப்பாற்றமுடியுமா? முடியாது. ராகவனே! என் தந்தையிடம் நீயே சீக்ரமாகச்சென்று என் சங்கதியைச் சொல்வாயாக. அவர் அது கேட்டுக் காட்டுத்தீ வளர்ந்து அரண்யத்தைக் கொளுத்துவதுபோல், கோபித்துக் கொண்டு எனதை தஹித்துவிடுவாரோ என்று நீ கினைக்கவேண்டாம். அவர் அங்ஙனஞ்செய்யார். நீ சொலலாத பக்ஷத்தில், அவர் வெகுநேரம எதிர்பார்த்தும் என்னை வரக்காணுமல் கோபித்துத் தனது தேஜஸ்ஸிலல் ஒருக்கால் தஹிக்கவுங்கூடும். இதாபோகினற ஒற்றைக்கால்வழியே நடந்து போவாயாயின், எனது தந்தையின் ஆப்ர

மத்திற்குப் போய்ச்சேருவாய். நீ அங்ஙனஞ்சென்று அவ ரைக் கலக்கந்தீரச் செய்வாயாக. அப்பொழுது கோபித் துக்கொண்டு உன்னைச் சபியாதிருப்பார். இல்லையாயின் தப்பாமல் சபித்துவிடுவார். மன்னவனே! என் சரீரத்தி லுள்ள பாணத்தைப் பிடுங்கி விடுவாயாக. ஜலப்ரவாஹம் உயர்ந்து மணற்குன்றுயிருப்பதுபற்றி மெதுவாயிருக்கிற கரையைக் கரைப்பதுபோல் இக்கூரான பாணமானது என் மர்மஸ்தானத்தைப் பீடிக்கின்றது' என்றனன். அது கேட்டவுடன் 'இம்முனிகுமாரன் பொத்தின பாணத் துடனே யிருப்பானுயின் பாதைப்படுவான், பாணத்தைப் பிடுங்கிவிடுவேனுயின் ப்ராணன்களைவிட்டுச் சாவான். ஆ கையால் இந்தப் பாணத்தைப் பிடுங்கலாமோ, கூடாதோ என்று அந்தப்பாணத்தைப் பிடுங்கும் விஷயத்தில் எனக் குள் சிந்தை உண்டாய்விட்டது. 'இப்படிப்பட்ட அகார் யஞ்செய்தேனே' என்று துக்கித்தவனுகி 'ப்ரஹ்மஹத் யை உண்டாகுமோ என்னவோ' என்று சோகத்தினுல் பரிதபித்து மனத்தில் நான் சிந்தித்துக் கொண்டிருப்ப தை அம்முனிகுமாரன் தெரிந்துகொண்டனன். அவன் மிகவும் இளைப்புற்றுத் துடித்துப் பரிதபித்து உடம்பைத் திருப்பித் திருப்பித் தரையில்புரண்டு மரணகாலம் ஸமீ பிக்கப்பெற்று என்னைப்பார்த்து 'நான் தைர்யத்தினுல் துக்கத்தை அடக்கி மனத்தை உறுதியாக நிலை நிறுத் திக் கொண்டிருக்கின்றனன். ஆகையால் நீயும் அப்படியே மனவருத்தப் படாதிருப்பாயாக. என்னை அடித்ததனுல் ப்ரஹ்மஹத்யை ஸம்பவித்ததேயென்னும் ஸம்சயத்தை மனத்தினின்றும் துரத்திவிடுவாயாக. அரசனே! நான் ப்ராஹ்மணனல்லேன். அதற்காக நீ மனம் பரிதபிக்க வேண்டாம். நான் வைச்யனுக்குச் சூத்ராஸ்த்ரீயிடத்தில் பிறந்தவன்' என்றனன். அங்ஙனம் அவன் பாணத்தினுல்

மர்மஸ்தானத்தில் அடிக்கப்பட்டு வருந்துவதனால் வார்த்தைசொல்ல முடியாமலிருந்து மிகவும் வருந்தப்பட்டு எனக்கு இவ்வார்த்தையைச் சொல்லி ஒருக்கால் தரையில் கடகடவென்று சுழன்றும் ஒருக்கால் கைகாலசையாமல் சேஷ்டையின்றி யிருந்தும் ஒருக்கால் நோயினால் உடம்பைச் சுருட்டிக்கொண்டிருந்தும் வருந்த முற்றிருக்கையில், அவனது சரீரத்தினினறும் பாணத்தைப் பிடுங்கிப் பொகட்டனன. அந்தத் தபோதனன் மிகவும் ஆயாஸப்பட்டு என்னைப் பார்த்துக்கொண்டே ப்ராணன்களை விட்டனன். நல்ல ஸ்வபாவமுடையவளே! மர்மத்தில் துடிக்கப்பட்டு மிகவும் வருந்திப் புலம்பி அனந்தரம் புலம்பவும் முடியாமல் ஓயாமல் பெருமூச்செறிந்துகொண்டு ஜலத்தினால் சரீரம் முழுவதும் நனையப்பெற்று ஸரயூநதியின் கரையில் தரையில் படுத்திருக்கிற அம்முனி குமாரனைப் பார்த்து மிக்க மனவருத்தமுற்றேன்' என்றனன். அறுபத்துமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் மரணமடைதல்.

தர்மஸ்வபாவனுகிய அந்தத் தசரதன் அம்மஹர்ஷியை எவனும் செய்யாத வண்ணம் தான் அடித்ததுபற்றியே புலம்பிக்கொண்டு நடுநடுவில் ராமனை நினைத்துப் பிதற்றி மீளவும் கௌஸல்யையைப் பார்த்து அம்முனிகுமாரவதத்தையே சொல்லத் தொடங்கி அங்ஙனம் தான் தெரியாமல் அம் மஹா பாபத்தை நடத்தி அனந்தரம் மனக்கலக்கமுற்று, 'இனி எப்படி செய்தால் நன்மை உண்டாகும்?" என்று நானுருவனே புத்தியில் ஆலோசித்தனன். பிறகு அம்முனி குமாரன் சொல்லியபடி செய்வதே தலமென்று நிச்சயித்து கலக்கமில்லாத நல்ல ஜலம் நிரம்பிய அந்தக் குடத்தை எடுத்துக்கொண்டு அவன் சொன்ன வழி

யாகவே நடந்து சென்று அவ்வாஶ்ரமத்திற் சேர்ந்தனன். அங்கு துர்ப்பலர்களாகிக் கண்கள் தெரியாதவர்களும் தம்மைக் கைபிடித்து அழைத்துக்கொண்டு போவான் எவனுமில்லாமல் இறகொடிந்த பறவைகள் போன்றவர்களும் வயது முதிர்ந்தவர்களுமாகிய அவனது தாய் தந்தைகளைக் கண்டனன். அவர்கள் நடக்க முடியாதவர்களாகையால் ஒன்றுஞ் செய்ய முடியாமல் வெறுமனே பிள்ளையைப் பற்றிய அவ்வோ கதைகளைச் சொல்லிக்கொண்டு உட்கார்ந்து மற்றொரு ப்ரயத்னமும் செய்யமுடியாமல் திக்கற்றவர்கள்போல் இருந்தனர். என் நிமித்தமாக அவர்களுக்குப் புதல்வன் வருவானென்றுவது ஜலங் கொண்டு வருவானென்றுவது ஆசையும் இல்லாமற் போயிற்று. முதலில் அந்த ரிஷிகுமாரனை அடித்ததற்கே என் மனது சோகத்தினல் மிகவும் பரிதபித்துக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட எனக்கு அவ்வாஶ்ரமஞ் சென்று அந்த வ்ருத்தர்களைப் பார்த்தவுடனே மேலும் சோகம் அதிகமாயிற்று. அம்முனிவர் என் காலடியைக் கேட்டவுடனே [1] 'என் குழந்தாய்! ஏன் இவ்வளவு தாமஸம்? சீக்ரமாய் ஜலங் கொண்டு வருவாயாக. என்னப்பா! நீ எதுக்காக இவ்வளவு நேரம் ஜலத்தில் விளையாடிக் கொண்டிருந்தாய்? சொல். இதோ உனது அன்னை உன்னை நினைத்துக்கொண்டு நீ வராததைப் பற்றிப் பரிதபிக்கின்றனள். ஆஶ்ரமத்திற்குள் வேகமாய்நுழைந்து வருவாயாக. பிள்ளாய்! உன் தாயாவது காலுவது உனக்கு ஏதேனும்

---

1 இதற்கு— 'யந்நிமித்தமிஶ்ம தாத ஸலிலே க்ரீடிதம் த்வயா' என்று மூலம். இதற்கு 'யந்ந உத்தமிஶ்ம தாத' என்னும் பாடத்தில்— 'என்னப்பா! நீ இது வரையில் ஜலங் கொண்டு வந்து கொடாமையால் நீ ஜலத்தில் விளையாடிக்கொண்டிருந்தா யென்பது நிசசயம்' என்று பொருள்.

அப்ரியமோ அபராதமோ செய்திருப்போமாயின், நீ தபஸ்வியாகையால் அதை எள்ளளவும் மனத்திற் கொள்ளலாகாது. திக்கில்லாத எங்களுக்கு நீயே யன்றோ கதி. நடக்கக் கால்களில்லாத எங்களுக்கு நீயே கடை கொடுப்பவன். கண்களில்லாத எங்களுக்குக் கண்களும் நீயே. எங்கள் ப்ராணன்களும் உன்னிடத்திலேயே நிலை பெற்றிருக்கின்றன. நீ எங்களிடம் பேசாதிருப்பதேனே?" என்றனன். நான் அம்முனியைப் பார்த்து மிகவும் பயந்து வார்த்தைகள் தழதழக்கவும் எழுத்துக்கள் மறையவும் பெற்று அஸ்பஷ்டமான வார்த்தையுடன் பேசத் தொடங்கி மனஸ்ஸை எங்கும் சலிக்கவொட்டாமல் நிலைப்படுத்திக் கைகால் முதலியவற்றின் சேஷ்டைகளையும் நிறுத்திவிட்டுத் தழதழத்த வார்த்தையையும் கஷ்டப்பட்டு ஸரிப்படுத்திக் கொண்டு அவர்க்குப் பயத்தை விளக்கும்படியான புத்ரமரண விபத்தைச் சொல்ல முயன்று 'நான் க்ஷத்ரியன். எனக்குத் தசரதனென்று பேர். நான் மஹாநுபாவராகிய உமது புதல்வனல்லேன். பூர்வத்தில் நான் செய்த கர்ம வசத்தினால் ஸத்புருஷர்கள் நிந்திக்கும்படியான இந்த வ்யஸனம் இப்போது சேர்ந்தது. மஹாநுபாவரே! நான் நதியில் ஜலங் குடிக்குந் துறையில் வந்த ஏதாவது க்ரூர ஜந்துவையாவது யானையையாவது அடிக்கவிரும்பி வில்லுங் கையுமாக ஸரயூநதிக் கரைக்கு வந்தனன். பிறகு நான் உமது குமாரன் குடத்தில் ஜலம் மொள்ளும் சப்தத்தைச் செவியுற்றனன். அவனை, நான், 'அது யானையாயிருக்கும்' என்று நினைத்து அதைக் குறி வைத்து அடித்தனன். பிறகு நான் அந்தத் துறைக்குச் சென்று அங்கு என் பாணத்தினால் மார்பில் அடியுண்டு ப்ராணன் போனற் போல் பூமியில் விழுந்திருக்கிற ஒரு தாபஸனைக் கண்டனன். மஹாநுபாவரே! நான் சப்தத்தைக்

குறி செய்து யானையைக் கொல்ல முயன்று ஜலத்தில் பாணப்ரயோகஞ் செய்கையில், அந்தப் பாணத்தால் உமது புதல்வன் அடியுண்டனன். உடனே அவனருகிற் சென்று பாணவேதனையைப் பொறுக்க முடியாமல் பரிதபிக்கின்ற அந்தத் தாபஸகுமாரன் 'இந்தப் பாணத்தைப் பிடுங்கி விடுவாய்' என்றுரைக்கையில், அந்த வார்த்தையின்படியே அப்பொழுது உடனே அவனது மர்மஸ்தானத்தினின்றும் அந்தப் பாணத்தைப் பிடுங்கி விட்டனன். பாணத்தை எடுத்தவுடனே அம்முனி குமாரன் 'என் தாய் தந்தைகள் கண்ணில்லாதவர்களா யிருக்கின்றார்களே! இனி அவர்களை யாவர் போஷிப்பார்களோ!' என்று உங்களைக் குறித்துச் சோகித்துப் புலம்பிக்கொண்டே ஸ்வர்க்கஞ் சேர்ந்தனன். நான் அஜ்ஞானத்தினால் உமது புதல்வனைத் திடீரென்று கொன்றுவிட்டேன். இந்நனம் நடந்து போயிற்று. இதற்கு மேல் சாபமோ, அனுக்ரஹமோ, எது செய்யவேண்டுமோ, அதை எனக்கு முனிவர் அருள் புரியவேண்டும்' என்றேன். மஹிமை பொருந்திய அந்த ரிஷி, நான் இந்நனம் அந்தத் துக்கத்தைத் தெரிவிக்கையில், க்ரூரமாகிய அந்த வார்த்தையைக் கேட்டு மேலழுந்த மிகவும் தீவ்ரமாகிய வயஸனத்தை அடக்க வல்லராக வில்லை. மஹாதேஜஸ்வியாகிய அந்த மஹர்ஷி முகத்தில் கண்ணீர் வழியப் பெற்றுப் பெருமூச் செறிந்து சோகத்தினால் பரிதபித்துக் கைகளைக் கூப்பிக்கொண்டு எதிரில் நின்றுகொண்டிருக்கிற என்னைப் பார்த்து 'மன்னவனே! இவ்வசுபகார்யத்தை நீயே எனக்குச் சொல்லாமல் மற்றொருவிதமாக எனக்குத் தெரியுமாயின், உன் தலை இந்த க்ஷணத்திலேயே லக்ஷந் சுக்கலாகப் பிளந்து போயிருக்கும். அரசனே! பரிபாலனஞ் செய்பவனாகிய மன்னவன் தெரியாமல் வானப்ரஸ்தனை எவனையாயினும் அடிப்பானாயி'

ன், அவனை தேவேந்த்ரனுயினும் தன் பதவியினின்றும் ப்ரஷ்டனுவான். இனி, தெரிந்து அங்ஙனம் அடிப்பாரையின் விசேஷித்து உடனே அவனுக்குப்[1] பதப்ரம்சம் உண்டாகு மென்பது சொல்லவேண்டுமோ? தவரு செலுத்தும் ப்ரஹ்மஜ்ஞானியாகிய முனிவன்மேல் தெரிந்து ஆயுதம் இடுவாரையின, அவனது சிரஸ்ஸு பல சுக்கலாய் விடும். நீ தெரியாமையால் இந்தக் கார்யஞ் செய்தனை. ஆனதுபற்றியே பிழைத்திருக்கின்றனை. தெரிந்தே செய்திருப்பாயாயின, உனது இக்ஷ்வாகு வம்சம் முழுவதும் இப்பொழுது இல்லாமற் போய் விடுமே! இனி, நீ ஒருவன் எவ்வளவு மாத்ரம்? ராஜனே! இதுவே என் புதல்வனை நான் கடைசியாகப் பார்ப்பது. இனிமேல் அவனைப் பார்க்கப் போகிறதில்லை. ஆகையால் இப்பொழுது அவயவங்களில் ரக்தமே தாயப் பெற்று க்ருஷ்ணஜின வஸ்த்ரத் தரித்துக் கீழே விழுந்து ப்ரஜ்ஞையின்றி யமன் வசத்தில் இருக்கின்ற அந்தப் புத்ரனைப் பார்க்க விரும்புகினறேரும். எங்களை அவ்விடங் கொண்டு போவாயாக' என்றனர். அனந்தரம் ராவணரு வன் மிகவும் துக்கிதர்களாயிருக்கின்ற அவ்விருவரையும் அவ்விடங் கொண்டு சென்று, அவர்களுக்குக் கண்கள் தெரியாதாகையால் தானே அம்முனிவர்க்கும் அவரது பார்யைக்கும் அவர்களது புதல்வனைத் தொடுக்காட்டினன். அம்முனி தம்பதிகள் இருவரும் தமது புதல்வனைத் தடவிப் பார்த்து அவனது அருகிற் சென்று துக்கத்தினுல் அவனது சரீரத்தின் மேல் விழுந்தனர். அவர்களில் தந்தை புதல்வனைப் பார்த்து 'என்னப்பா! என்னைப்பார்த்து இப்பொழுது ஏன்? வணங்காதிருக்கின்றாய். மேலும், என்னைப் பார்த்து ஒன்றும் பேசாதிருக்கின்ற

---

[1] பதப்ரம்சம்-பதவியினின்றும் நழுவுதல்.

ஸன. என் மேல் கோபமா. என்ன? தர்மஸ்வபாவனே! உனக்கு என்னிடத்தில் ப்ரீதி இல்லையாயின், என்னைப் பார்க்க வேண்டாம். இதோ உனது அன்னை வந்திருக்கின்றனள், பார். எங்களை ஏன் எழுந்திருந்து கட்டிய ணைக்க மாட்டாய்? மெதுவாக எங்களுடன் பேசுவாயாக. செவியாரக் கேட்கின்றனம். இனி எவன் அர்த்தராத்ரத்தில் எழுந்திருந்து வேத சாஸ்த்ரங்களையாவது மற்றைப் புராணேதிகளையாவது வாசித்துக் கொண்டிருக்கையில், மனத்திற்கு மிகவும் இனிதாயிருக்கின்ற அம்மதுரத்வனியைக்கேட்கப் போகின்றேன்? இனி எவன் ஸ்னானஞ்செய்து ஸந்த்யாவந்தனம் முடித்து அக்னியில் ஹோமத்தை நிறைவேற்றி எனது அருகில் உட்கார்ந்திருந்து புத்ரசோகத்தினால் வருந்திப் பரிதபிக்கின்ற எனக்குப் பரிசர்யை செய்வான்? இனி எவன், கர்மங்களை அனுஷ்டிக்கச் சக்தியின்றி, செந்நெல் முதலியவற்றைச் சேர்த்து வைத்துக் கொள்ள வல்லமையற்றுத் தடியைப்பிடித்து நடப்பித்துக்கொண்டு போவானிருவனும் கோப் பெறுமல் வருந்துகின்ற எனக்கு, ஜலத்தில் உண்டாகுந் தாமரைக் கிழங்கு முதலிய கிழங்குகளையும் நிலத்தில் விளையும் சேம்பு முதலிய கிழங்குகளையும் கொண்டுவந்து, ப்ரியமுடியிருக்கும் ஓர் அதிதிக்கு இடுவதுபோல், போஜனம் இடப் போகின்றனன்? என்னப்பா! கண்கள் தெரியாதவளும் கிழத்தனம் மேலெழப் பெற்றவளும் உன்னிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவளும் உன்னைப் பிரிந்து மிகவும் தீனையுமாகிக் கண்போர்களுக்கு மனமிரக்கமுண்டாகும் நிலையில் இருக்கின்ற உனது அன்னையை, நீ போயினபிறகு நான் எப்படி போஷிக்கப்போகிறேன்? பிள்ளாய்! என்னைப் பற்றிக் கொஞ்சகோரம் நிற்பாயாக. போகவேண்டாம். காலத்தினம் நானும் உன்து அன்னையும் கூட வர அழைத்துக்

கொண்டு யமனது க்ருஹத்திற்குப் போகலாகும். அரண்யத்தில் உன்னைப் பிரிந்து அநாதர்களாகித் துயரத்தினால் பரிதபித்து மிகவுந் தீனர்களாகிய நாங்கள் இருவரும் ஒரு நிமிஷமாயினும் இருக்கமாட்டோம். இதோ சீக்ரமாக உன்னுடன் கூடவே யமனது லோகத்திற்கு வருகின்றனம். அனந்தரம் நான் யமனைப் பார்த்து 'என்னுடைய குமாரனாகிய இப்பாலகன் தாய் தந்தைகளுக்குக் கன்கு பரிசர்யை செய்யுந் தன்மையன்' என்னும் இவ்வார்த்தையைச் சொல்லுகின்றனன். தர்மராஜனும் தன் ஸபீபத்திற்கு 'எனது புதல்வன் தாமதித்து வருவதைப் பொறுப்பாரைக. அந்த யமன் மிகவும் தார்மிகன்; மிகுந்த புகழுடையவன்; ஆகையால் இப்படிப்பட்ட அநாதரைகிய எனக்கு, நாசமில்லாததாகிய ஓர் அபயதானந் தக்ஷிணையாகக் கொடுக்கத் தகும். புத்ரனே! இந்தப் பாபிஷ்டன் உன்னை அடித்ததனால் பூர்வத்தில் நீ செய்த பாபங்களெல்லாந் தொலைந்து போயின. ஆனதுபற்றி அந்த ஸத்யத்தின் மஹிமையால், ஆயுதமெடுத்து யுத்தஞ் செய்யும வீரர்களுக்கு எந்த லோகங்கள் நேருமோ, அந்த லோகங்களுக்கு நீ வேகத்துடன் போய்ச் சேருவாயாக. புதல்வனே! சூரர்கள் யுத்தத்தில் பின் வாங்காமல் எதிர் கொண்டு போர் செய்து அடியுண்டு எந்தக் கதியைப் பெறுவார்களோ, அந்தப் பரம கதியை நீயும் பெறுவாயாக. குழந்தாய்! ஸகரனும் சைப்யனும் திலீபனும் ஜனமேஜயனும் கஹுஷனும் துந்துமாரனும் எந்தக் கதியைப் பெற்றார்களோ, அந்தக் கதியை நீயும் பெறுவாயாக. எனது அருமைப் புதல்வனே! ஸத்புருஷரா யிருப்பவர்களெல்லோர்க்கும் வேதாத்யன சீலர்களாயிருப்பவர்களுக்கும் தப்ஸ்விகளாயிருப்போர்க்கும் எந்தக் கதி உண்டாகுமோ, பூதானஞ் செய்பவனுக்கும் ஆஹிதாக்னியா யிருப்பவனுக்கும்

ஏகபத்னீ வ்ரதமுடையவனுக்கும் எந்தக் கதிகள் ஸித்திக்குமோ, ஆயிரம் பசுக்களைத் தானஞ் செய்தவர்களுக்கு எந்தக் கதி விளையுமோ, குருசுஸ்ரூஷை செய்தவர்களுக்கு எந்தக் கதியோ, மஹாப்ரஸ்தானம் முதலியவற்றிலாவது கங்காயமுனை ஸங்கமம் முதலிய புண்யஸ்தானங்களிலாவது அக்னியிலாவது ஸங்கல்பஞ் செய்துகொண்டு தேஹத்யாகஞ் செய்தவர்களுக்கு எந்தக் கதி உண்டாகுமோ, அந்தக் கதிகளை நீ அடைவாயாக. தபோநிஷ்டர்களாகிய நமது இக்குலத்தில் பிறந்தவன் எவனுயினும் துர்க்கதியைப் பெறமாட்டானல்லவா! என் புதல்வனுகிய உன்னைச் சாக அடித்தவன் மாத்ரம் துர்க்கதியைப் பெறுவான்' என்று இங்ஙனம் அம்முனி அவவிடத்தில் அடிக்கடி மிகவுந் தீனமாகப் புலம்பலுற்றனன். அனந்தரம் அம்முனி பார்யையுடன் கூடி அக்குமாரனுக்கு ஸம்ஸ்காரத்தைச் செய்து ஜலதர்ப்பணாதிகளைச் செய்ய முயன்றனன். தர்மங்களை அறிந்தவனுகிய அம்முனி குமாரன் தனது புண்யகர்மங்களால், திவ்யரூபம் பெற்று இந்த்ரனுடு கூட ரதத்தின்மேல் ஏறிக்கொண்டு ஸ்வர்க்கலோகம் போய்ச் சேர்ந்தனன. அம்முனிகுமாரன் தேவேந்த்ரனுடு கூடவே வ்ருத்தர்களாகிய அந்தத் தாய் தந்தைகளைக் கொஞ்சம் ஸமாதானப் படுத்தி அனந்தரம் அவர்களைப் பார்த்து 'நான் உங்களுக்குச் சுஸ்ரூஷை செய்ததலால் ஓரழிவுமில்லாத பதவியைப் பெற்றனன். நீங்கள் இனிச் சீக்ரமாகவே நான் இருக்கும் இடத்திற்கு வரப் போகிறீர்கள்' என்றனன். ஜிதேந்த்ரியனுகிய அம்முனி குமாரன் இங்ஙனம் அவர்களுக்கு ஸமாதானஞ் சொல்லி ப்ரசஸ்தமாகிய திவ்ய விமானத்தின் மேல் ஏறிக்கொண்டு சீக்ரமாகவே ஸ்வர்க்கலோகம் போய்ச் சேர்ந்தனன். மஹாப்ரபாவமுடையராகிய அம்முனிவர் பார்யையோடு கூடப் புத்

ரனுக்கு ஜலதர்ப்பணம் கடத்தி அருகில் கையைக் கூப்பிக் கொண்டு நிற்கிற என்னைப் பார்த்து 'அரசனே! என்னை இப்பொழுதே கொன்றுவிடுவாயாக. செத்துப் போவேனு யின் எனக்குப் பாதை இல்லாதிருக்கும். 'சாவது பாதை யன்றோ' என்பாயாயின், சொல்லுகிறேன் கேள். போ யும் வந்தும் எனக்குப் புதல்வன் ஒருவனே. அந்தப் புத்ர னையும் நீ பாணத்தை எய்து முடித்து என்னைப் பிள்ளை யில்லாதவனாகச் செய்துவிட்டனை. இதைக் காட்டிலும் வேறொரு பாதையும் உளதோ! இதைப் பார்க்கிலும் என க்கு மரணமே மேலாயிருக்கின்றது. நீ நிர்மலனாகிய என் புதல்வனைத் தெரியாமல் அடித்துவிட்டனை. ஆனதுபற் றியே கான் இப்பொழுது உன்னைப் பஸ்மஞ் செய்யாமல் மிகவும் துயரத்தை விளைப்பதாகிய ஓர் கொடுஞ்சாபத்தை இடுகின்றனன். மன்னவனே! எனக்கு இப்பொழுது அந் த்யகாலத்தில் புத்ர காசத்தினால் மரணத்தில் வந்து முடி யும்படியான துக்கத்தை விளைவித்தனை. ஆகையால் நீயும் இவ்வண்ணமாகவே புத்ர சோகத்தினால் மரணம் அடை வாயாக. அரசனே! க்ஷத்ரியனாகிய நீ முனிவனைத் தெரி யாமல் அடித்தாயாகையால் உனக்கு அதனால் ப்ரஹ்மஹ த்தியைப் போன்ற மஹாபாதகம் உண்டாகாது. தெரி ந்து செய்திருப்பாயாயின் அது உனக்கு ஸித்தமே. ஆயி னும், நீ எனக்கு ப்ராணன்களைத் தொலைக்கும்படியான இப்படிப்பட்ட கொடு நிலைமையை விளைத்தாயாகையால், தக்ஷிணை கொடுத்தவன் அதற்குத் தகுந்த புண்யத்தைப் பெறுவது போல், என்னைப் போன்ற நிலைமையை நீயும் சீக்ரத்தில் இந்த ஜன்மத்திலேயே பெறப் போகின்றாய்' என்றனன். இங்ஙனம் எனக்குச் சாபத்தைக் கொடுத்து அந்தத் தம்பதிகள் இருவரும் கேட்போர் மனங் கரையும் படி பலவாறுகப் புலம்பி இருவர் சரீரத்தையும் ஒன்றாகக்

கட்டிக் கொண்டு சிதையில் ஏற்றுவித்து ஸ்வர்க்கஞ் சேர்ந்தனர். தேவீ! மரணத்தில் வந்து முடியும்படியான இந்தப் புத்ரசோகத்திற்குக் காரணம் யாதென்று சிந்தித்துக் கொண்டிருக்கையில், முன்பு பால்யத்தில் சப்தத்தைக்குறிவைத்து பாணப்ரயோகஞ் செய்யும்விளையாடலே கடத்திக் கொண்டிருந்த பொழுது கான் முனி குமாரனை அடித்த பாதகம் தானுகவே எனக்கு தினைவுக்கு வந்தது. தேவீ! பத்யங்களல்லாத பதார்த்தங்களோடு அன்னத்தைப் புசிக்கையில் வ்யாதி வளர்ந்து வருவது போல், கான் செய்த அந்தப் பாபகர்மத்திற்குப் பலமாக இப்படிப்பட்ட துக்கம் விளைந்தது. மங்கலஸ்வபாவமுடையவளே! என் கண்களுக்குப் பார்வை தொலைந்துவிட்டது. ஆகையால் உன்னை என் கண்களால் பார்க்க நேராதிருக்கின்றனன். என்னை கண்ருகப்பரிசிப்பாயாக' என்று மொழிந்து மீளவுங் கதறிக்கொண்டு பயந்து மீளவும் பார்யையைப் பார்த்து 'தேவீ! ராமனிடத்தில் நான் செய்த க்ரூர கார்யம் பாபிஷ்டனுகிய எனக்குத் தகுந்தேயிருக்கின்றது. ராமன் எனது கட்டளைக்கு மறுமொழி கூறுமல் உடனே அரண்யத்திற்குச் சென்றானே; அது மாத்ரம் மிகவும் தர்மஸ்வபாவனுகிய அந்த ராமனுக்கே தகுமன்றி, மற்றை எவனுக்கும் தகாது. பிள்ளாய, அவன் எவ்வளவு துர்மார்க்கனயிருப்பினும் பண்டிதனயிருப்பவன் எவன் தான் கைவிடுவான்? தகப்பன் தன்னைத் துரத்தி யனுப்புகையில், பிள்ளையாயிருப்பவன் எவன்தான் அவனிடத்தில் அஸூயையைப் பாராட்டாதிருப்பான்? ராமன் இப்பொழுது என்னைப் பரிசிப்பானுயின், அல்லது—என் கண்களுக்குப் புலப்படுவானுயின், பிழைப்பேன். யமலோகத்திற்குப் போன பின்பு மனுஷ்யர்கள் தமது பந்துக்களைப் பார்க்க முடியாதல்லவா? ஆகையால் ப்ராணன்கள்

இருக்கும்பொழுதே ராமனைப் பார்க்க விரும்புகின்றனன். கௌஸல்யே! உன்னைக் கண்ணாரப் பார்க்க நேராதிருக்கின்றனன். எனக்கு நினைவுங்கூட க்ஷீணித்துக் கொண்டிருக்கின்றது. இதோ யமதூதர்கள் என்னை வேகமாக வருவாரென்று தெரந்தரவு செய்கின்றனர். மரண காலத்தில், தர்மங்களை அறிந்தவனும் உண்மையான பராக்ரமமுடையவனுமாகிய ராமனைப் பார்க்க நேராதிருக்கின்றேனே! இதைக் காட்டிலும் வேறுதுக்கம் என்னிருக்கின்றது? ராமன் செய்ய முயன்ற கார்யத்திற்குத் தடை செய்ய ஒருவரும் வல்லரல்லர். இப்படிப்பட்ட ராமனுடைய தர்சனமில்லாமையால் எனக்கு நேரிட்ட இந்தத் துயரமானது, கொஞ்சமாகிய ஜலத்தை வெயில் இழுத்துக் கொள்வது போல், இப்பொழுது என் ப்ராணன்களை இழுக்கின்றது. பதினைந்தாவது ஸம்வத்ஸரம் பிறக்கையில், அழகிய மேலான குண்டலங்கள் விளங்கப் பெற்ற ராமனது முகாரவிந்தத்தை மீளவும் எவர் பார்க்கப் பெறுவார்களோ, அவர்கள் [1]தேவதைகளே ஆவார்களன்றி மனுஷ்யர்கள் அல்லர். தாமரையிதழ்போன்ற கண்களையுடையதும் அழகிய புருவங்கள் விளங்கப் பெற்றதும் அந்தம் பொருந்திய பற்களோடு கூடியதும் அழகான மூக்குடன்

---

1 'அஹம் புநர் தேவகுமாரரூப மலங்க்ருதம் தம்ஸுத மாவ்ரஜந்தம், நந்தாமி பஶ்யந்தபி தர்ஶநேந ஸுவாமி தூஷ்டவாச புநாயுவேவ' (தேவகுமாரன் போல் விளங்குகின்ற எனது ராமனைக் கண்டு மீளவும் யௌவனம் திரும்பி வரப் பெற்றவன் போல் ஆவேன்) என்று தசரதன் சொன்னதுபற்றி இங்கு மீளவும் ராமனது முகத்தைப் பார்க்க நேரப் பெற்றவர்கள மனுஷ்யர்களன்றென்றால்—மனிதர்களைப் போல கிழத்தனம் பெறாதவராலவர், தேவதைகளைப் போல் நித்ய யௌவனமுடையராயிருப்பார்களென்று பொருள. இதனால ராமனது முகஸௌந்தர்யாதிசயத்தின் மஹிமை தோற்றுவிக்கப் பட்டது.

ப்ரகாசிப்பதும் சந்த்ரமண்டலம் போன்றதுமாகிய ராமனது முகத்தைப் புண்யபுருஷர்களாயிருப்பவர்களன்றே பார்க்கப் போகின்றனர். சரத்காலத்து சந்த்ரன் போலவும் அப்போதலர்ந்த தாமரஸ புஷ்பம் போலவும் ப்ரகாசித்துக் கமகமவென்று மணங் கமழுந் தன்மையதாயிருக்கும் எனது நாதனுகிய ராமனது அவ்வழகிய முகமண்டலத்தைப் புண்யபுருஷர்கள் பார்க்கப் போகின்றனர். வனவாஸத்தைத் தீர்த்துத் திரும்பி அயோத்யைக்கு வந்த ராமனை, மூடத்தை விட்டுத் தான் இருக்க வேண்டிய ஸ்தானத்திற்குச் சேர்ந்திருக்கிற சுக்ரனைப் போல் மிகுந்த ஸந்தோஷத்துடன் புண்யசாலிகள் பார்க்கப் போகின்றனர். கௌஸல்யே! என் மனது இருள் மூடப் பெற்றிருக்கின்றது. ஆகையால் அதற்கு இடமாகிய ஹ்ருதயமும் விரிவதுபோல் வருந்துகின்றது. மேலும், எனது இந்த்ரியங்களோடு சப்த ஸ்பர்ச ரஸங்கள் ஸம்பந்தித்த போதிலும், அவ்விந்த்ரியங்கள் நசித்தமையால் அந்தச் சப்தாதிகள் எனக்குத் தெரிய வாராதிருக்கின்றன. எனது இந்த்ரியங்கள் நசிப்பதற்குக் காரணம் சொல்லுகிறேன், கேள். எண்ணெய் வற்றிப் போகையில், தீபத்துடன் இடைவிடாமல் கூடியிருக்குங் கிரணங்களும் நசித்துப் போவதுபோல், என் சரீரம் கட்டித் தளருகையில், மனதும் நசித்து அதுடன் ஸம்பந்தித்த எனது இந்த்ரியங்களும் எல்லாம் நாசம் அடைகின்றன. ஆற்றின் ப்ரவாஹம் அந்தன் கரையைக் கரைப்பதுபோல், இந்தப் புத்ரசோகமானது, காதனற்றவனும் ப்ரஜ்ஞை தப்பியிருப்பவனுமாகிய என்னைப் பீடிக்கின்றது. ஐயோ! ராமா! மஹாபாஹுவே! ஆ! என் துயரத்தைப் போக்குமவனே! ஆ! தந்தைக்கு ப்ரியனுயிருப்பவனே! எனது காதனே! ஆ! புதல்வனே! இப்பொழுது எங்குப் போயினை? ஐயோ!

கௌஸல்யே! ஆ! நன்னடத்தை யுடையவளே! சோகிக்க வேண்டிய நிலைமையிலிருப்பவளே! ஸௌமித்ரே! ஆ! கொடியவளே! எனக்குச் சத்ருவாயிருப்பவளே! அடி என் குலத்தைப் பாழாக்கவந்தவளே! கைகேயீ!' என்று ராமனது தாயாகிய கௌஸல்யையையும் ஸௌமித்ரையையும் எதிரில் பார்த்துத் துக்கித்துக் கொண்டே அந்தத்தசரத மஹாராஜன் மரணம் அடைந்தனன். பெருங் கார்யத்தில் கண் செலுத்துந் தன்மையுடைய அம்மன்னவன் தனது ப்ரியபுத்ரனெகிய ராமனை அரண்யத்திற்கு அனுப்பி அதை நினைத்து மிகவும் பரிதபித்துத் தீனலாபங்களை இங்ஙனம் புலம்பிக் கொண்டிருந்து அர்த்தராத்ரங் கடக்கையில், அப்பொழுது மனவருத்தத்தினல் மிகவும் பீடிக்கப்பட்டு அதைப் பொறுக்க முடியாமல் ப்ராணன்களைத் துறந்தனன். அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

தசரதன் மரணமடையவும் ராஜபத்னிகள் புலம்புதல்.

அனந்தரம் அன்றிரவு கடந்து செல்ல, மற்றை காளபின் மாலையில் வந்திஜனங்களும், வம்சாவலி படிக்கும் ஸூதர்களும், மங்கல பாடகர்களாகிக் கந்தர்வ வித்தையில் ஆறித் தேர்ந்த காயகர்களும் ஆகிய அனைவரும் இலக்கணம் முதலிய சிறந்த ஸம்ஸ்காரத்துடன் கூடி ஸ்துதிசீலர்களாகி முகத்தை நன்கு அலங்காரஞ் செய்துகொண்டு வந்து வேறுவேறுகத் தக்கமது கார்யங்களை நிறைவேற்றுபவர்களாகி அம்மன்னவனிருக்கும் மாளிகையைச் சேர்ந்தனர். அப்பொழுது மன்னவனைத் துதி செய்ய ஆரம்பித்துப் பெருங் குரலுடன் ஆசீர்வாதங்களை கடத்துகின்ற அவர்களது ஸ்தோத்ரத்வனியானது அந்தராஜக்ருஹத்தின் விஸ்தாரம் முழுமையும் பரம்பி வளர்ந்து

வந்தது. பிறகு வம்சாவலி படிக்கும் ஸூதர்கள் ராஜாவைப் புகழ்ந்துகொண்டிருக்கையில், கைத்தாளமிடும் பாடகர்கள், பூர்வராஜாக்களும் தசரதமஹாராஜனும் கடத்திய அற்புத கார்யங்களை எடுத்து வர்ணித்துக் கைத்தாளமிட்டுக் கொண்டிருந்தனர். அந்த ராஜக்ருஹத்தின் உத்யானங்களிலுள்ள வ்ருக்ஷங்களின் கிளைகளிலும் கூண்டுகளிலும் இருக்கும் பக்ஷிகள் அனைத்தும் அந்தச் சப்தத்தைக் கேட்டு விழித்துக்கொண்டு பலவாறு த்வனிகளைச் செய்தன. ஹரிஹராயணுதி புண்ய சப்தங்களும், ப்ராஹ்மணர்கள் புண்ய புருஷர்களையும் புண்ய க்ஷேத்ரங்களையுங் குறித்துச் செய்யுங் கீர்த்தனங்களும், வீணகளின நாதங்களும், ராஜசரித்ரங்களைக் கூறும் ப்ரபந்தங்களைக்கொண்டு ஆசீர்வாத ரூபமாகச் செய்யுங் கானமும் அந்த ராஜக்ருஹம் முழுமையும் நிரம்பி யிருந்தன. அனந்தரம் பரிசுத்தாசாரமுடையவர்களும் ராஜ ஸேவையில் ஸமர்த்தர்களுமாகிய பரிசாரகர்கள், பெரும்பாலும் அந்தப் புரத்துத் தலைவர்களாகிய ஸ்த்ரீகளும் பேடிகளும் தம்மில் வந்து கலக்கப்பெற்று முன்போலவே மன்னவனைப் பணிய வந்தனர். ஸ்நானஞ் செய்விக்க வேண்டிய விதிகளெல்லாம் உணர்ந்த வேலைக்காரர்கள், ஸ்நானஞ் செய்யவேண்டிய காலத்தில் விதியின்படி மஞ்சளும் சந்தனமுங் கலந்த ஜலத்தைப் பொற்குடங்களிற் கொண்டு வந்தனர். பெரும்பாலும் இளமைப்பருவம் நிரம்பிய கன்னிகைகள் சூழப்பெற்ற பெண்டுகள்பலர் எண்ணெய் நலங்கு முதலிய மங்கலப்பூச்சுகளையும், பல் தேய்த்த பிறகு வாயைக் கொப்பளிப்பதற்கு வேண்டிய ஜலம் முதலியவற்றையும் கண்ணாடி வஸ்த்ரம் ஆபரணம் முதலிய அலங்காரஸாமான்களையும் கொண்டுவந்தனர். விடியற்காலத்தில் மன்னவனுக்கு மங்கலத்தின் பொருட்டு வழக்கமாகக்

கொண்டுவரும் அந்தப் பதார்த்தங்களெல்லாம் விதிப்படி சீர்திருத்தப்பெற்றுக் குணங்கள் பொருந்திப் பளபளவென்று ஒளியும் பொருந்தி இருந்தன. அந்தப் பரிஜனங்களெல்லாம் அரசனைப் பணிய மிக்க ஆவலுடன் ஸமர்போதயம் வரையில காத்துக்கொண்டிருந்து அதன் பிறகும் மன்னவன் வெளிப்பட்டு வாராதிருந்தமைபற்றி 'அரசனுக்கு என் வந்ததோ' என்று சங்கித்திருந்தனர்.

அனந்தரம் கோஸலாதிபதியாகிய தசரதனது படுக்கைக்கு அருகிலிருந்த அந்தப்புர ஸ்த்ரீகள் வந்து தமது பர்த்தாவாகிய அம்மன்னவனை வணக்கத்துடன் மெதுவான வாக்யங்களைச் சொல்லி எழுப்பினர். அங்ஙனம் எழுப்பினபோதிலும் எழுந்திராமையால் அந்த மடந்தையர் அப்பொழுதைக்குத் தகுந்த வயாபாரங்களால் விகயத்தோடும் யுக்தியோடும் அம்மன்னவன் படுத்துக் கொண்டிருக்கும் இடத்தைப் பரிசித்துக்கொண்டு நின்று நிதானித்துப் பார்த்தும் மூச்சு முதலிய நித்தையின் அடையாளங்கள் ஒன்றையுங் காணப்பெறாதிருந்தனர். அந்த ஸ்த்ரீகள் நித்ராஸவபாவத்தின் லக்ஷணங்களை நன்கறிந்தவர்களாகையால் அம் மன்னவனிடத்தில் கைகால்களை ஆட்டுதல் ஹ்ருதயம் முதலியவற்றை அசக்குதல் மூச்சுவிடுதல் முதலிய நித்தையின் அடையாளங்களில் ஏதுமில்லாதிருப்பதைக் கண்டனர். அம்மடந்தையர் 'அரசனுக்கு ப்ராணன்கள் இருக்கின்றனவோ இல்லையோ' என்று ஸந்தேஹம் உண்டாகப பெற்றுக் கிடுகிடுவென்று நடுக்கமுற்று, ப்ரவாஹத்திற்கு எதிர்ப்பட்ட நீர் வஞ்சிமுதலிய புற்களின நுனிகள்போல் புலப்பட்டனர். அனந்தரம் கிடுகிடுவென்று நடுங்குகின்ற அந்தஸ்த்ரீகள் எல்லோரும் மன்னவன் இருக்குமிருப்பைக்கண்டு முன்பு மரணம் அடைந்தாலே என்னவோவென்று தங்களுக்கு உண்டா

ன ஸந்தாபத்தைப்போக்கி மரணம் அடைந்தானென் றே நிச்சயித்துக்கொண்டனர். கௌஸல்யையும் ஸுமித்ரையும் புத்ரசோகம் மிகவும் மேலிடப்பெற்றுப் பரா தீனர்களாகி மெய்ம்மறந்திருந்தமையால் மரணம் அடைந்தவர்கள்போல் கண்விழித்துக் கொள்ளாமலே யிருந்தனர். கௌஸல்யை, காந்தி குறைந்து நிறம் மாறப்பெற்றுச் சோகத்தில் அகப்பட்டு, உத்பாதத்தில் பிறக்கும் புகையால் உண்டாகிய இருள் மூடப்பெற்று ஒளி மழுங்கிய நக்ஷத்ரம்போல் ப்ரகாசியாதிருந்தனள். முதல்முதலாக மன்னவன், மரணம் அடைந்தது பற்றிக் காந்தியற்றிருந்தனன். அவனுக்குப் பின்பு கௌஸல்யை, ஓயாமல் கண்ணீர்களைப் பெருக்கி முகத்தில் அழகு மழுங்கப் பெற்றிருப்பதனல் காந்தியற்றிருந்தனள். அவளுக்குப் பிறகு ஸுமித்ரையும் அப்படியே காந்தி குறையப் பெற்றிருந்தனள். அந்த ஸ்த்ரீகள் அங்ஙனம் நித்ரைக்குட்பட்டுக் கிடக்கும் மங்கலஸ்வபாவைகளாகிய அந்தக் கௌஸல்யா ஸுமித்ரைகளைப் பார்த்து, அப்படியே நித்ரித்துக் கொண்டேயிருந்து ப்ராணன்கள் போகப்பெற்ற மன்னவனையும் பார்த்தனர். அனந்தரம் மடந்தையர்மணிகளாகிய அந்த ராஜபத்னிகள் முகம் வாடப்பெற்று அரண்யத்தில் இருக்கவேண்டிய இடத்தினின்றும் கூட்டத்திற்குத் தலைவனுகிய ஆண்யானை தவறிப்போகப்பெற்ற யானைப்பேடுகள் கதறுவதுபோல் பெருங்குரலுடன் கதறினர். அவர்களது அழுகுரலைக்கேட்டுக் கௌஸல்யையும் ஸுமித்ரையும் திடீரென்று விழித்துக்கொண்டு தூக்கத்தை விட்டெழுந்தனர். கௌஸல்யையும் ஸுமித்ரையும் அரசனை உற்றுப்பார்த்தும் பரிசித்தும் மரணம் அடைந்தானென்று தெரிந்துகொண்டு 'ஆ! நாதா' என்று கதறிக் கொண்டு கீழே வீழ்ந்தனர். கோஸலராஜன் புதல்வியாகி

ய கௌஸல்யை, இங்ஙனம் தரையில்விழுந்து புலம்பிக் கொண்டே, மேனிமுழுவதும் புழுதி நிரம்பப்பெற்று, ஆகாயத்தினின்றும் கீழேவிழுந்த நக்ஷத்ரம்போல் ஒளியற்றிருந்தனள். தேஹத்திலுள்ள உஷ்ணம்முதலிய குணங்கள் நசிக்கப்பெற்று மன்னவன் மரணம் அடைந்தபின்பு தரையில் விழுந்திருக்கிற கௌஸல்யை, அடியுண்டு பூமியில் விழுந்த யாஅனப்பேடுபோல், அவ்வந்தப்புரத்திலுள்ள மடந்தையர் அனைவர்க்கும் புலப்பட்டனள். அனந்தரம் கைகேயிமுதலிய ராஜபத்னிகள் யாவரும், ராஜனது மரணம் தெரிந்துகொண்டு அவ்விடம் வந்து சோகத்தினால் பரிதபித்துப் புலம்பிக்கொண்டு ப்ரஜ்ஞைதப்பிக் கீழேவிழுந்தனர். கௌஸல்யை முதலியவர்களின் அழுகுரலானது, அவர்களுக்குப் பின்புவந்த கைகேயி முதலியவர்களின் அழுகுரலோடு கலந்து வலிவுற்று நிலைநின்று அம்மாளிகை முழுவதும் நிரம்பி மிகுந்த ப்ரதித்வனியை விளைத்தது. முன்பு உத்ஸாஹத்துடன் ஜனங்கள் நிரம்பியிருந்த அந்த ராஜக்ருஹமானது, அரசன் மரணமடைந்தவுடனே, அந்த ஜனங்களெல்லோரும் ஸந்தோஷமற்று நடுநடுங்கி அலைந்து சிதறப் பெற்றிருந்தது. அம்மாளிகையில் எங்குப் பார்க்கிலும் அழுகுரலே நிரம்பியிருந்தது. பந்துக்கள் அனைவரும் பரிதாபத்தால் நொந்திருந்தனர். ஆனந்தமென்னும் வார்த்தை உடனே அடியோடு இல்லாமற்போய்விட்டது. எவரைப்பார்த்தபோதிலும் முகவொளி மழுங்கி மனக்களிப்பின்றிக் கண்கொண்டு காணக்கூடாதிருந்தனர். மிகுந்த புகழுடையவனாகிய அம்மஹாராஜன் மரணம் அடைந்த வ்ருத்தாந்தந் தெரிந்தவுடனே அவனது பத்னிகள் அவனைச்சுற்றிச் சூழ்ந்துகொண்டு மிக்க மனவருத்தமுற்றுக் கேட்போர்களுக்குக் கருணை உண்டாகும்படி அளவின்றிய ரோதனஞ் செய்துகொண்டு

ஒருவர்க்கொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு அநாதைகளாகிப் புலம்பினர். அறுபத்தைதந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

கௌஸல்யையின் கதறலும், அரசனை எண்ணெய்க் கொப்பரையில் இட்டுவைத்தலும், ராஜஸ்த்ரீ விலாபமும், பட்டணக் கலகமும்.

அரசன் மரணம் அடைந்து, அணைந்த அக்னிபோலவும், ஜலம் வெற்றின ஸமுத்ரம்போலவும், ஒளியற்ற ஸூர்யன்போலவும் இருப்பது கண்டு, கௌஸல்யை சோகத்திலில் பரிதாபமுற்றுக கண்களில் நீர் நிரம்பப் பெற்று, மன்னவனது சிரஸ்ஸைத் தனது துடைமேல் இட்டுக்கொண்டு கைகேயியைப் பார்த்துப் பலவாறுக, 'கைகேயீ! உன் கருத்து நிறைவேறிவிட்டது. க்ரூரஸ்வபாவமுடையவளே! ஓரேபிடிவாதமாயிருந்து உன் முயற்சியை நிறைவேற்றிக் கொண்டனையல்லவா! மன்னவனைக் கைவிட்டனை. மற்றை ராமனும் இல்லை. ஆகையால் இனி அகண்டகமாக ராஜ்யம் முழுவதையும் உன் தலையிற்றானே கட்டிக்கொண்டு அனுபவிப்பாயாக. என்னை விட்டுத் துறந்து ராமன் அரண்யம் போயினன. என் பர்த்தாவும் ஸ்வர்க்கம் அடைந்தனன். கெட்ட மார்க்கத்தை அடைந்து, தன்னுடன் துணையாக வந்த கூட்டத்தை விட்டுப் பிரிந்த பெண்பிள்ளை போல், உன்னைப் போன்ற துஷ்டர்களிருக்கப் பெற்ற இந்த ப்ரதேசத்தில் எனக்குத் துணையாகிய பர்த்தாவையும் புதல்வனையும் துறந்து நான் பிழைத்திருக்கப் பொறேன். தர்மத்தைக் கைவிட்ட கைகேயி தவிர மற்றை யெவள்தான் தனக்கு ப்ரத்யக்ஷ தெய்வமாகிய பர்த்தாவை விட்டுப் பிழைத்திருக்க விரும்புவாள்?

எட்டிக் கொட்டையைச் சாப்பிட விருப்பமுற்றவன் அதனலுண்டாகுங் கெடுதியைப் பாராட்டாததுபோல், பேராசையுடையவன் தனது லோபத்தினல் வருந தோஷங்களை ஆராய்ச்சி செய்யமாட்டான். ஒரு கூனியினல் மிகித்தமாகக் கைகேயி. ராஜ்பத்தில் பேராசை கொண்டு அதனலுண்டாகுந தோஷங்களைச் சிறிதுந தெரிந்துகொள்ளாமல் தனது லோபத்தினல் ரகுகுலத்து மன்னவர்களின் ஸந்ததியைப் பாழாகி விட்டனள். முன்பு வரங் கொடுக்குமபொழுது இனன வர மென்று ஏற்பாடு இலலாமற் போயினுமம, அவைகளுகாகராமனை அரண்யத்திறகுத துரத்திப பரதனுக்குப பட்டங் கட்ட வேணுமென்று கைகேயி தூண்டுகையில், அரசன செயலது தோற்றுமல ராமனை அவனது பார்யையோடு கூட அனுப்பினென்று ஜனகமனனவர் கேடபாராயின், எனனைப் போலவே பரிதபிப்பர்.[1] ராமன் பிழைத்திருந்த போதிலும் இவ்விடம் இராமையால நாசம் அடைந்தாற்போலவே ஆய்விட்டனன. ஆகையால தாமரையிதழ் போனற கண்களையுடைய அந்தத் தார்மிகன், நான் இப்பொழுது அநாதையாயிருப்பது மாத்ரமே யன்றி விதவையுமாயிருப்பதை அறியானலலவா! துக்கங்களை அனுபவிக்கத் தகாதவளாயினும் துகததில ஆழ்ந்து கண்போர்களுக்கும் கேட்போர்களுககும் மன இரக்கத்தை விளைவிக்கின்றவளும் நனனடத்தையுடையவளும் ஜனகராஜன புதல்வியுமே பரிதபிப்பர்.

---

1 இதற்கு—'ஸ மாமநாயாம் வியவாம நாஜீய ஜாநாதி யாமிகஸ், ராமஸ கமல பத்ராக்ஷா ஜீவநநாஸமிதோ-மதஸ்' என்று மூலம். இதில் 'ஜீவந்நாஸம்' என்றஇதற்கு 'ஜீவநாஸம்' என்று பாடாந்தரமான போது—(தாமரையிதழ் போன்ற கண்களையுடையவனும் தார்மிகனுமாகிய ராமன் தான் இவ்விடம் இலலையாகையால், அரசன் மரணம் அடைந்ததையும், அதலல் நான் அநாதையும் விதவையுமாயிருப்பதையும் அறியான்) என்று மஹேஸ்வர தீர்த்தர்.

மாகிய அந்த ஸீதையும் அங்ஙனம் அரண்யத்தில் மனவருத்தம் மிகப் பெற்று பயந்திருக்கப் போகின்றனள். அவள், ராத்ரிகளில் பயங்கரமான கோஷத்தையுடையம்ருகங்களும பக்ஷிகளும் சப்திக்கையில், அந்த சப்தத்தைநன் கேட்டு நடுக்கமுற்று ராடீனைக் கட்டியணைப்பது நிஜம். வயது சென்றவரும் புதல்வர்களில்லாதவருமாகிய அந்த ஜனகமஹாராஜரும் தன் புதல்வியாகிய ஸீதையை நினைத்துககொண்டு துக்கம் மேலிடப் பெற்றுப் பொறுக்கமுடியாமல் ப்ராணன்களை விட்டிவிடுவார் நான் பதிவ்ரதையாயிருப்பவள்; ஆகையால இபபொழுதே பர்த்தாவோடு கூட ப்ராணன்களை விடப போகின்றனள. இந்தப் பர்த்தாவின் சரீரத்தை தஹிங்கனஞ் செய்துகொண்டு அக்னியில் குதித்துவிடப் போகின்றேன்' என்று சொல்லிக்கொண்டே கதறவிட்டனள். அனந்தரம் [1] ராஜ்யவ்யவஹாரங்களெல்லாவற்றிலும் ஏவப்பட்டவர்களாகிய மந்த்ரிகள் வந்து, மிகுந்த மனவருத்தத்தினால் எல்லோர்க்கும் மன இரக்கம் உண்டாகும்படி பரிதபிக்கின்றவளும் அரசனை ஆலிங்கனஞ செய்துகொண்டு புலம்புகின்றவளுமாகிய கௌஸல்யையை மனனவனிடத்தினின்றும் விடுவித்து அப்புறங் கொண்டு போயினர் பிறகு மந்த்ரிகள் வஸிஷ்டாதிகளின் ஆஜ்ஞையினபடி மன்னவனது சரீரத்தை எண்ணெய்க் கொப்பரையில இட்டு வைத்துப் பிறகு மேல் ராஜகார்யங்களை நடத்திக் கொண்டிருந்தனர். அம்மந்த்ரிகள் ஸமஸ்த தர்மங்களையும் அறிந்தவர்களாகையால், புத்ரனில்லாமல் அரசனுக்கு ஸம்ஸ்காரஞ் செய்ய ஸம்மதப்படவில்லை. ஆகையால் அவனது சரீரத்தைக்

இதற்கு— 'க்யாவஹாரிகாஃ' என்று மூலம். (அந்தப்புரத்துத் தலைவர்களாகிய ஸ்த்ரீகள்) என்று இதற்கு மஹேஶ்வர தீர்த்தா கூறும் பொருள்.

கெடவொட்டாமல் பத்ரமாக வைதிருந்தனர். மந்த்ரிகள் மரணம் அடைந்த அம்மன்னவனை எண்ணெய்க் கொப்பரையில இட்டு வைப்பதைக் கண்டு, அந்த ஸ்த்ரீகள் எல்லோரும் 'ஐயோ! இவன் மரணம் அடைந்தானே!' என்று மிகவுங் கதறலிட்டனர். அவர்களை முகத்தில் சிறிதும் ஒளி விளங்காதிருக்கப் பெற்றுக் கைகளை உயர எழுப்பிக் கொண்டு கண்களில் நீர் தளும்ப 'ஐயோ! மஹாராஜா! ப்ரியவாதியும் ஸத்யஸந்தனுமாகிய ராமன் முதலை எங்களைக் கைவிட்டனன. அப்படிப்பட்ட எங்களை நீயும் என துறந்துவிட்டனை? ராமன் எங்களை விட்டுப போகையில், பர்த்தாவாகிய நீயும் மரணம் அடைகையில், இனி துஷ்டஸ்வபாவையும் பதி காதுகையுமாகிய கைகேயியினிடத்தில் எப்படி இருப்போம்? ராமன் எங்களுக்கும் உனக்கும் எப்பொழுதும் ப்ரபுவாயிருப்பவன, அழகிய மனமுடையவன், ஸமஸ்த ஸம்பத்துக்களும் நிறைந்திருக்கப் பெற்றவன், அப்படிப்பட்ட ராமனும் ராஜ்யலக்ஷ்மியைப் பரித்யாகஞ் செய்து அரண்யத்திற்குப் போயினனல்லவா! உனனையும் அவ்வீரனையுமே விட்டுப் பிரிந்து அந்த வ்யஸனத்திலல் மெய்மறந்திருக்கின்றனம். இத்தோடு கூட ராஜ்யங் கைபுகுந்த கர்வத்திலல் கைகேயி பலவாறுகத் திரஸ்காரஞ் செய்கையில, அதையுங் கூடப் பொறுத்துக் கொண்டு எப்படி இருக்கப் போகிறோம்? பர்த்தாவாகிய மஹாராஜனையும் ராமனையும் மிகுந்த பலமுள்ள லக்ஷ்மணனையும் ஸுகுமாரையாகிய ஸீதையையும் எவள் பரித்யஜித்தனளோ, அப்படிப்பட்டவள் மற்றை எவரைத்தான் பரித்யஜிக்கமாட்டாள்?' என்று இங்ஙனம் புலம்பினர். மடந்தையர்களில் மேன்மையுற்றவராகிய அந்தத் தசரத மஹாராஜனது பார்யைகள் கண்ணீர் திரம்பப் பெற்று மிகுந்த சோகஸாகரத்தில் மூழ்கி மனக்களிப்

பின்றித் தரையில் வீற்ந்து புரண்டனர். அப்பொழுது சந்ரனில்லாத ராத்ரி போலவும், பர்த்தாவை யிழந்த மடந்தை போலவும், மஹாநுபாவனாகிய அம்மன்னவன் இல்லாமையால் அவ்வயோத்யா புரம் விளக்கமுறுதிருந்தது. அதில் ஜனங்களெல்லோரும் மனவருத்த முற்றுக் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தனர். ராஜகுல ஸ்த்ரீகளெல்லோரும் ஹாஹாகாரஞ் செய்துகொண்டிருந்தனர் ராற்சந்தி வீதிகளும் வீட்டு கதிகைகட்டுகளும் மெழுகுவது விளக்குவது முதலிய ஸம்ஸ்காரங்களொன்றுமின்றிப் பாழடைந்திருப்பதனல் அத்தப் பட்டணம் முன்போல் ப்ரகாசிக்கவில்லை. அரசன புத்ரசோகத்தைப் பொறுக்க முடியாமல் ஸ்வர்க்கத்திற்குப் போகையில், ராஜபார்யைகள் அனைவரும் தரையில் விழுந்து புரண்டு புலம்பிக் கொண்டிருக்கும் பொழுதே ஸுமித்ரன் கரணங்களை இழுத்துக் கொண்டு அஸ்தமய பர்வதம் போய்ச் சேர்ந்தனன். பிறகு ராத்ரியும் திசைகளில் இருட்டைப் பரப்பிக் கொண்டு நெருங்கிவந்தது. அப்பொழுது அங்கிருந்தவர்களிற் சிலர் 'அரசனுக்கு பல பராக்ரமங்கள் பொருந்திய ஸத்புத்ரர்கள இருந்தும் தெய்வாதீனமாக இப்பொழுது அவர்களில் ஒருவனுங் கூட அருகில் இல்லாமற் போயினன. காம வெறுமனே யிருப்பது யுக்தமன்று. ஆகையால் ஏதோ ஒருவிதமாக மன்னவனுக்கு ஸம்ஸ்காரஞ் செய்வோம்' என்று யத்னிக்கையில, அங்கிருந்த பந்துக்களுக்குப புதல்வனில்லாமல் அரசனுக்கு தஹனம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்வது எவ்வளவும் ஸம்மதமாயிருக்கவில்லை. ஆகையால் பிள்ளை இல்லாமல் ஸம்ஸ்காரஞ் செய்யக் கூடாதென்று நிச்சயித்துக கண்ணுக்குப் புலப்படாத காட்சியையுடைய மன்னவனது சரீரத்தை எண்ணெய்க் கடாரத்தில் இட்டு வைத்தனர். அப்

பொழுது மஹாஜபாவஹிய அம்மன்னவனைப் பிரிந்த அவ்வயோத்திமாநகரமானது மார்க்கங்களிலும் நாற்சந்திவீதிகளிலும் ஜனங்கள் நெருங்கிக் கண்ணீர்கலைப் பெருக்கி மனக்களிப்பற்று ஸாருத்த மூற்றிருக்கப் பெற்று, ஸெர்யன் அஸ்தமிக்கையில் வெளிச்சமிலலாத ஆகாயம் போலவும் நக்ஷத்ரங்கள் விளங்கப்பெறுத ராத்ரிபோலவும் விளக்கமற்றிருந்தது. இங்ஙனம் அரசன மரணம் அடைகையில் அப்பொழுது அந்தப்பட்டணத்திலுள்ள புருஷர்களும் ஸ்த்ரீகளும் ஆங்காங்குக் குவியல் குவியலாகக்கூடி பரதனது தாயாகிய கைகேயியை வைது வயிறெரிந்து கொண்டிருந்தார்களேயன்றிச் சிறிதாயினும் ஸுகம் பெறவில்லை. அறுபத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

மார்க்கண்டேயாதிகள வஸிஷ்டரிடம்
அராஜகத்தைச சொல்லி ப்ரார்தித்தல.

அயோத்தையிலுள்ள ஜனங்களெல்லோரும் 'ஓ'யோ' என்று கதறிக்கொண்டு மனக்களிப்பற்றுக் கண்டத்தில் கண்ணீர் தடுக்கப்பெற்று, துக்கித்துக் கொண்டிருக்கையில், அந்த ராத்ரியானது வெகுதேரம் வளர்ந்தது போல் புலப்பட்டுக் கொண்டிருந்து எப்படியோ கடந்துசென்றது. அன்றிரவு கடக்கையில் பிறகு ஸூர்யோதயம் ஆயிற்று. அனந்தரம் ராஜனை அபிஷேகஞ்செயயும் ப்ராஹ்மணர்கள் வந்து ஸபை கூடினர். மார்கண்டேயர், மௌத்கல்யர், வாமதேவர், காஸ்யபர், காத்யாயனர், கௌதமர், மிகுந்த புகழுடைய ஜாபாலி ஆகிய ராஜாவை வற்புறுத்துகிற இந்த பராஹ்மணோத்தமர்களும் மந்த்ரிகளும் வந்து, ராஜபுரோஹிதராகிய வஸிஷ்டரிருக்குந் திசையில் முகத்தைத் திருப்பிக்கொண்டு அவரைப்பார்த்து

வேறுவேறுக 'இந்த நமது அரசன் புத்ரசோகத்தினல் மரணம் அடைகையில், அதனல் இன்றிரவு நமக்கு நூறு ஸம்வத்ஸரங்கள்போல் கடத்தயேண்டியதாகப் புலப்பட்டு அதி கஷ்டமாகக் கடந்தது. அரசன் ஸ்வர்க்கம் அடைந்தனன். ராமன் அரண்யத்திற்குப் போயினன். தேஜஸ்வியாகிய லக்ஷ்மணன்கூட நிற்கமல் ராமனைப் பின்தொடர்ந்தே சென்றனன். பகைவரைப் பரிதபிக்குந நிறமுடையவர்களாகிய பரதசத்ருக்னாகளிருவரும் கேகயதேசத்தில் ரமணீயமாகிய ராஜக்ருஹமென்னும பட்டணத்தில் பாட்டனாரகத்தில் இருகின்றனர். இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்தவாகளில் எவரையாவது ஒருவரை இப்பொழுதே இவ்விடத்தில் ராஜாவாக ஏற்படுத்தவேண்டும். அரசனில்லாதபக்ஷத்தில் ராஜ்யம் நாசம் அடையாமலிருக்கமாட்டாதல்லவா? அராஜகமாகிய தேசத்தில் மேகமானது பளபளவென்று மின்னல் விளங்கப்பெற்றுப் பெருங் கர்ஜனையுடன் திவ்யமான ஜலத்தைப் பூமியின்மீது வர்ஷிக்காது. அராஜகமான தேசத்தில மழைபெய்யாமையாலும் ஒருக்கால் மழைபெய்து விளையுமாயினும் திருடுபோகுமென்னும் பயத்தினுலும் காலங்களில் விதை விதைக்கமாட்டார்கள. அராஜகதேசத்தில் தப்புச்செயவோரைச் சிக்ஷிப்பவன் இல்லையாகையால் தந்தைக்குப் பிள்ளையாவது பர்த்தாவுக்குப் பார்யையாவது உட்பட்டு நடக்கமாட்டார்கள். ராஜா இல்லாத ராஜ்யத்தில் திருடர் பறிப்பார்களாகையால் தனமுங் கைப்படாது. இன்னவள் இன்னவனுக்கு மனையாளென்னும்நிலைமையும் உண்டாகாது. இதுவேயன்றி மற்றொரு மஹாபயமும் உண்டு. அரசன இலலையாயின், க்ரயவிக்ரயம் முதலிய ஸத்யம் எங்கிருந்து ஸம்பவிக்கும்? இதைக்காட்டிலும் பயம் வேறு யாது? ராஜா இல்லாத ராஜ்யத்தில் ஜனங்கள் ஸுகித்திருக்கமாட்டார்கள ளாகை

யால் ஸந்தோஷத்துடன் ஸபைகூட்டார்கள். எவராவது வெட்டிப போடுவார்களெனனும் பயத்தினால் அழகிய உத்யானவனங்களையும் ஏறபடுத்தமாட்டார்கள. துஷ்டர்கள் மறைத்திருக்க மறைவிடமாகுமென்று தேவாலயாதி புண்யஸ்தலங்களைக் கட்டார்கள். ராஜா இலலாத தேசத்தில் இடைவிடாமல யாகஞ் செய்பவர்களும் வேதாத்யயனசீலர்களும் தீக்ஷணமான வரதங்களை ஆசரிபபவர்களும் ஜிதேந்திரியர்களுமாகிய ப்ராஹ்மணர்கள் மஹாயஜ்ஞங்களை விக்னபயத்தைதப் பற்றி அனுஷ்டிக்கமாட்டார்கள். அராஜகமான தேசத்தில யாகங்களைச் செய்யும் ப்ராஹ்மணர்கள் தனலம்பன்னராகளாயினும் யாகஞ்செய்யும் பொழுது தாமதனிகர்களென்று தெரியுமாயின, துஷ்டர்கள் தம்மைதண்டித்துக் கொள்ளையடிப்பார்களெனனும் பயத்தினால பூரிதக்ஷிணைகளைக் கொடுக்கமாட்டார்கள. அராஜகமான தேசத்தில உத்ஸாஹப்படுத்துகிறவர்களும் வைதுமதிகொம்பவர்களும் இல்லாமையால கடாக்ஷமும கர்ந்தகர்களும் நிறைந்த உதஸவங்களும் தேசத்தைச் செழிக்கச் செயயும ஸபைகளும் கடந்தீடறு. அராஜக தேசத்தில் நயாயம்வேண்டுவார் கிடைப்பது அரிதாகையால் வயவஹாரம் பேசுகிறவர்களுக்கு ப்ரயோஜனம் நேராது பின்னும, இதிஹாஸபுராணதிகளைச் சொல்பவர்களும, கதைகளைக் கேட்க ஆசையுடையவர்களுக்குக் கதைகளைச் சொல்லுவித்துப் பாரிதோஷிகங்கொடுப்பிக்கும் ப்ரபுக்களில்லாமையால் ஸந்தோஷம்பெறமாட்டார். அராஜகமான தேசத்தில் திருடர்களுக்குப் பயந்து கனனிகைகள் ஸ்வர்ணபரணங்களை அணிகது குவியல்குவியலாகத் தோழிகளுடனகூடி ஸாயங்காலத்தில் விளையாடுவதற்காக உத்யானங்களுக்குப் போகார். ராஜா இல்லாத தேசத்தில் துஷ்டர்கள் பரிபவிப்பார்களென்னும் பயத்தினல், காதலுற்ற புருஷர்கள்

தமதுகாதலர்களோடுகூடி லேகமாகப்போகும் வாஹனங்களின்மேல் ஏறிக்கொண்டு விஹாரத்தின்பொருட்டு க்ரீடாவனங்களுக்குப்போக வெளிப்படார். அராஜகமானதேசத்தில் க்ருஷியிலுலும் மாடுகளாலும் ஜீவிக்குந்தனிகர்களாகிய வைப்யர்கள் திருடரிடம் பயத்தினல் காற்றுவீசும் பொருட்டுக கதவுகளைத் திறந்துகொண்டு ஸுரக்ஷிதமாக ராத்ரிகளில படுக்க நேரப்பெறார். அராஜகமானதேசததில், கணகணவெனறு சபதிக்கின்ற மணிகள கட்டப்பெற்று அழகிய தந்தங்களோடு விளங்குகின்ற அறுபதுவயதுள்ள யாஹனகளும் ராஜமார்க்கங்களில் அழகாய உலாவிக்கொண்டிருக்க நேராது. ராஜா இல்லாததேசத்தில மந்த்ரமில்லாத பாணங்களும் மந்தரங்களோடுகூடிய பாணங்களும் ப்ரயோகஞ்செய்ய அப்யஸிக்கும் பொழுது, இடைவிடாமல அநதப் பாணங்களை பரயோகஞ்செய்பவாகளின நாணிழுகும் ஓசையானது ஒருபொழுதும் செவிபபடாது. அராஜகமான தேசத்தில், சாக்குகளைப்பலவாக ஏற்றிக்கொண்டு விக்ரயிப்பதற்காகத் தேசாந்தரம்போகும வர்த்தகாகள் க்ஷேமமாக வழிநடந்து செல்லபபெறார்கள். அராஜகமான தேசத்தில, இந்த்ரியங்களை வெனறு தணியஞகத் திரிதுகொண்டு, எவவிடத்தில் பொழுதுபோகுமோ அதையே வாஸஸ்தானமாகக் கொள்ளும் பதி, அன்னமிடுவாரில்லாமையால் மனத்தில் பரமாத்ம த்யானஞ் செய்துகொண்டு ஸஞ்சரிக்கநேராது. அராஜகமான தேசத்தில் யோகக்ஷேமங்கள் ஸம்பவிக்கா. அராஜகதேசத்தில் ஸஜனையும் பஹுகவரைவெலலுந திறமை நேரப் பெறாது. அராஜகதேசத்தில், சோரபயத்தினல் ஜனங்கள் ஆபரணங்களை அணிந்து சிறந்த குதிரைகளின்மேலும் தேர்களின்மேலும் ஏறிக்கொண்டு விஹாரத்தின்பொருட்டு நினைத்தபடி நிர்ப்பயமாக வெளிப்புறப்ப

டார். அராஜகதேசத்தில் துஷ்டர்களுக்குப் பயந்து சாஸ்த்ரங்களை யறிந்த பண்டிதர்கள் ரிஷ்யாச்ரமங்களிருக்கும் வனங்களில் சாஸ்த்ரங்களை யெடுத்து உபாயாஸனு செய்துகொண்டிருக்க மோராது. அராஜகதேசத்தில் விக்னம் நேருமென்கிற பயத்தினால ஜனங்கள் நியமதுடனிருகது தேவதார்ச்சனத்தின பொருடபடி மாலைகளையும் மோதகங்களையும் தக்ஷிணைகளையும் ஸித்தப்படித்தமாட்டார்கள். அராஜகமான தேசத்தில், ராஜபுத்ரர்களை, சந்தனம் அகில் முதலிய பரிமளங்களைப் பூசிகொண்டு, வஸந்த காலத்து வருக்ஷங்கள் போல ப்ரகாசிக்கமாட்டார்கள் ஜலமில்லாத நதிகள் போலும், புற்களிலலாத வனம்போலும், பசு காபபவனில்லாத பசுமாதை போலும் ராஜா இல்லாத ராஜ்யமானது ப்ரகாசிக்காது. ரதத்திற்குக் கொடி அடையாளம். அக்னிகுப் புகை அடையாளம். அப்படியே நம எல்லோர்க்கும் அரசன் த்வஜம் போலும் புகை போலும் ப்ரகாசகனாயிருகதனன். அபபடிப்பட்ட மன்னவன நம்மை இங்ஙனம் விட்டு ஸ்வர்க்கம் போயினன். அரசனில்லாத ராஜ்யத்தில் ஒருவனுக்கும் ஒன்றும் ஸொந்தமாயிருக்க மோராது. மத்ஸ்யங்கள் ஒன்றை ஒன்று பக்ஷிபபதுபோல் மனிதாகளும் ஒருவரை ஒருவர பக்ஷித்துவிடுவார்கள். [1] வர்ணப்ரமாசாரமர்யாதைகளை உலலங்கனஞ்செய்து தெய்வமேயில்லை

---

1 இதற்கு—'யேஹ்ய ஸஹிந்நமர்யாஹ்ய நாஸ்திகாஸ் ஹிந்ஸம் ஸ்யாஃ. தேSபி ஹாவாய கலபந்தே ராஜஹுண்டங்நிபீடிதாஃ' என்று மூலம். இதற்கு (சாஸ்தர மாயாதைகளை அதிகரமித்துப் பூர்வம் ராஜதண்டனையில அகப்பட்டு வருந்திய நாஸ்திகர்கள இப்பொழுது ராஜதண்டனை உண்டாகுமென்கிற சங்கை சிறிதுமினறித் தலை காட்டிகொண்டு ஸமஸ்த ஆஸ்திகர்களுக்கும் மனவ்ருத்தம் விளைகவலை ராவாகள) என்று கோவிந்தராஜர் கூறும் பொருள.

யென்று வாதித்துச் சங்கையின்றித் திரியும் நாஸ்திகர்க
ள், அரசன் உளனுயின், அவனது சிக்ஷையால் ஸாதுக்க
ளாவார்கள். எப்படியானல் கண் சரீரத்திற்கு ஹிதத்தைச்
செய்து அஹிதத்தைப் போக்குகின்றதோ, அப்படியே அ
ரசனும் ராஜ்யத்திற்கு நன்மைகளை கடத்தித் தீமைகளைப்
போக்கி ஸத்யத்தையும் தர்மத்தையும் விளையச் செய்கின்
றனன. அரசனே ஸத்குலத்தில் பிறந்தவர்களின் குலாசா
ரங்களை கடத்துகின்றனன. அரசனே ஜனங்களுக்குத் தா
யும் தந்தையுமா யிருக்கின்றனன். அரசன் ஜனங்களுக்கு
ஹிதஞ்செய்பவன். யமன தண்டனைமாத்ரமே செய்வான்.
குபேரன் தனத்தைமாத்ரம் கொடுப்பான் இந்த்ர பா
லனமாத்ரமே செய்வான். வருணன் நதீஜலத்தைகளை
மாத்ரம் ஏற்படுத்துவான. அரசனேவென்றால் இந்த ஸ
லாவிதகர்மத்தையும் தானேயாகவே செய்து ரக்ஷிக்கையால்
அந்த யம குபேராதிகள் நால்வரிலும் அதிசயித்திருப
பான. 'இது நல்லது-இது கெட்டது' என்று வேறு வேறு
கர்மாநுஷ்டானஞ்செய்து பத்ததிகளை ஏற்படுத்தும் மன்னவன்
உலகத்தில் இல்லாமற் போவானுயின, ஐயோ! இந்த ஜக
த்து முழுவதும் இருள் மூடப்பெற்றதுபோல் ஆய்விடும்.
மேலும், 'இது தகும் இது தகாது' என்று ஒன்றுமே ஏற்ப
டாது. மஹாராஜன பிழைத்திருக்குமபொழுது நாம்,
ஸமுத்ரம் தன்கரையைத் தாண்டாதிருப்பதுபோல், உம
து வார்த்தையை எள்ளளவும் எல்லோரும் அதிக்ரமித்
தறியோம். இனி மன்னவன் காலஞ்சென்றபினபு அப்ப
டியே இருப்போமென்பது பற்றிச் சொல்லவேண்டுமோ?
ப்ராஹ்மணோத்தமரே! ராஜாவை ஏற்படுத்துவது நமக்
குள்ள கடவுடிக்கையென்பதை ஆலோசித்தும், ராஜா
இல்லாமையால் நமக்கு உண்டாகும் தோஷத்தை ஆராய்
ந்து பார்த்தும், ராஜா இல்லாதபக்ஷத்தில ராஜ்யம் முழு

வதும் அரண்யம்போல் ஆய்விடுமென்பதை ஸஹரிந்தும் இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த குமாரனென்றுவனை ராஜாவாகப் பட்டாபிஷேகஞ் செய்வீராக' எனறனர். அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்டரா, பரதனை அழைத்து வருவதற்காக கேகய தேசத்திற்குத் தூதர்
களை அனுப்புதல.

அவர்களது வார்த்தையைக் கேட்ட வஸிஷ்டரும், தனக்கு நண்பர்களாகிய ஸுமந்த்ரர் முதலிய மந்த்ரிகளையும் மார்க்கண்டேயர்முதலிய மறைறை ப்ராஹ்மணர்களையும் ஆகிய அனைவரையும் நோக்கி 'பரதன தனது தம்பியாகிய சத்ருக்னனோடுகூட ராஜக்ருஹமெனனும் பட்டணத்தில் தனது மாமாவின் அகத்தில் ஸுகமாயிருக்கின றனன். ஆகையால் இப்பொழுது வீரர்களாகிய அச்வவண்ணன் ,தமபிகளிருவரையும் அழைத்துக்கொண்டுவருவதற்காகச் சீக்ரமாகப் போகவல்ல தூதர்கள் வேகமாகச் செல்லுங் குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு விரைவில் போவார்களாக. ராஜன பரதனுக்கு ராஜ்யங் கொடுத்திருக்கினறானே! இனி நாம் விசாரிக்கவேண்டியது யாதிருக்கினறது?' எனறனர். அனகதரம் மந்த்ரிகள் முதலிய அவர்களெலலோரும் 'நீர சொலலியபடியே தூதர்கள் போவார்களாக' எனறு வஸிஷ்டரிடஞ் சொலலினர். வஸிஷ்டரும் அவர்கள சொனனதுகேட்டு 'ஸித்தார்த்தர! விஜயனே! ஜயந்த! அசோகர! நந்தன![1] இங்கு

---

1 இங்குச சொலலுகிற ஸித்தார்த்தன் முதலியவாகள மந்த்ரிகளலலர. மந்த்ரிகளின் பேரைப் போன்ற பேருடைய வேறு சிலர். ஆனதுபற்றியே இவர்களோடு மந்த்ரியாகாத நந்தன எனன்பவனும் சேர்த்துச சொல்லப்பட்டனன்.

வாருங்கள். நீங்களெல்லோரும் என்ன செய்யவேண்டுமோ, அதைச் சொல்லுகிறேன், கேளுங்கள். வேகமுள்ள குதிரைகளின்மீது ஏறிக்கொண்டு நீங்கள் வேகமாக ராஜக்ருஹமென்னும் பட்டணத்திற்குச் சென்று துக்கத்தைத் துறந்து எனது ஆஜ்ஞையின்படி பரதனைப்பார்த்து அவனோடு புரோஹிதரும் மந்த்ரிகளும் ஆகிய அனைவரும் உனக்குத் தமது க்ஷேமத்தைத் தெரிவிக்கின்றனர். ஒரு கார்யம் காலம் விஞ்சிப்போகின்றது. நீ அதைச் செய்யவேண்டியதாயிருக்கையால் தாமதஞ் செய்யாமல் உடனே புறப்பட்டு வரவேண்டும்' என்று சொல்வீர்களாக. நீங்கள் சென்று 'ராமன் அரண்யத்திற்குப் போனான்' என்றுவது 'உங்கள தகப்பனார் காலஞ்சென்றார்' என்றுவது ரகுகுலத்திற்கு சேர்ந்த இந்தத் தோஷகாசத்தை எள்ளளவுஞ் சொல்லவேண்டாம். கேகயராஜனுக்கும் பரதனுக்கும் காணிக்கையாகப் பட்டுவஸ்த்ரங்களையும் விலையுயர்ந்த ஆபரணங்களையும் சீக்ரமாகளெடுத்துக்கொண்டு போவீர்களாக' என்று ஆஜ்ஞாபித்தனர். இங்ஙனஞ் சொல்லி வழியில ஆஹாரஞ்செய்வதற்கு வேண்டிய ஸாமக்ரிகளைக் கொடுத்தனுப்புகையில்; அந்தத்தூதர்கள் ப்ரயாணத்திற்குத் தகுந்தவையென்று புகழ்ப்பெற்ற மேலான குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு கேகயதேசத்திற்குப் போக முயன்று மனைவிமுதலியவர்க்குத் தமது ப்ரயாணத்தைத் தெரிவிக்கும்பொருட்டுத் தந்தமது வீட்டிற்குச்சென்றனர். அனந்தரம் அந்தத் தூதர்கள் ப்ரயாணத்திற்கு வேண்டிய பாதேயம் முதலியவற்றை ஸித்தப்படுத்திக்கொண்டு மற்றைக் கார்யங்களையும் நிறைவேற்றிவிட்டு மீளவும்வஸிஷ்டரிடம்வந்து அனுமதிபெற்றுக்கொண்டு வேகமாகச் சென்றனர். அவர்கள் அயோத்தியைக்கு மேற்றிசைவழியாகப் புறப்பட்டு அவதாலமென்

ணும்பர்வதத்திற்கு மேலண்டையாகச் சென்று, அந்தப்பர்வதத்திற்கும் அதற்கு மேலண்டையிலிருக்கிற ப்ரலம்பபர்வதத்திற்கும் இடையிலுள்ள மாலினியென்னும் நதியின்கரைவழியாகக் கொஞ்சதூரம் வடதிசையாகச் சென்று அனந்தரம் ப்ரலம்ப பர்வதத்திற்கு வடக்கு பாகத்தைத் தொடர்ந்து மேற்கு முகமாக ப்ரயாணமாய்ப் போயினர். அவர்கள் ஹஸ்திபுரத்தினருகில் கங்கையைத் தாண்டி மேற்கு முகமாகத் திரும்பிக குருதேசஹஸ்திரத்திலடங்கிய ஜாங்கல தேசத்தின் மத்ய மார்க்கமாகப் போய் பஞ்சால தேசஞ் சேர்ந்து, அங்கு ஜலம் நிரம்பிய குளங்களையும் தெளிந்த ஜலமுடைய நதிகளையும் பார்த்துக் கொண்டு கார்யசித்தியில் எங்கும் நிற்க தோன்றாமல் தலையாகப் போயினர். அவர்கள், தெளிந்த ஜலமுடையதும் பலவித பக்ஷிகள் குலாவப் பெற்றதும் ஸ்நானபானங்கள் செய்யும் ஜனங்கள் நிறைந்திருப்பதும் அற்புதமுமாகிய சரஸ்வதியென்னும் நதியின் அருகில் சீக்ரமாகச் சென்று அங்கு நிற்காமல் அதைத் தாண்டிச் சென்றனர் அந்தத் தூதர்கள் அந்தச் சரஸ்வதி நதியின் மேல் பாகத்தில் தேவதாதிஷ்டான முடையதும் விரும்பியவற்றை யெல்லாம் ஈடேற்றுவதுபற்றி ஸத்யோபயாசனமென்னும் யதாரத்தநாமம் பொருந்தியதுமான புண்யவ்ருக்ஷத்தின அருகிற்சென்று எல்லோராக்கும் நமஸ்கரிக்கத் தக்கதாகிய அவ்ருக்ஷத்திற்கு பரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்துக் குலிங்கையென்னும் பட்டணத்திற்குச் சென்றனர். அனந்தரம் அங்கிருந்து புறப்பட்டு அபிகாலமென்னும் க்ராமஞ்சேர்ந்து, அங்கு போதிபவனமென்னும் பெருடைய பர்வதத்தினின்றும் பெருகி வருகின்ற இக்ஷுமதியென்னும் நதியைக் கடந்து சென்றனர். அந்த நதியின் கரையில் உள்ள க்ராமங்கள் தசரதனது வம்சத்திற் பிறந்த மன்ன

வர்களால் பித்ரு பிதாமஹ க்ரமமாக ஆண்டு வரப் படுமவை. துவர்கள் அந்ததியின் கரையில் அஞ்ஞலியளவு ஜலத்தை மாத்ரமே ஆஹாரமாகக் கொண்டு தவஞ் செய்யும் வைதபாரங்கதர்களாகிய ப்ராஹ்மணர்களைக் கண்டு, பாஹ்லிக தேசத்திலுள்ள க்ராமங்களின் வழியாகவே சென்று ஸுதாம பர்வதத்திற்குப் போயினர். அவர்கள் அந்தப் பர்வதத்தில் விஷ்ணுபாதாரவிந்தத்தின் அடையாளமுடைய ஓர் புண்யஸ்தானத்தையும் அம்மலைச்சரிவிலுள்ள விபாசா நதியையும் அநதிக் கரையிலுள்ள ஓர் இலவமரத்தையும் பார்த்துக் கொண்டே நடந்து சென்று ஆங்காங்குள்ள நதிகளையும் நடைவாவிகளையும் குளங்களையும குட்டைகளையும் ஓடைகளையும் ஸிம்ஹம் புலி யானை முதலிய பலவகை ம்ருகங்களையும் பார்த்துக் கொண்டே ராஜாஜ்ஞையைச் செய்ய விரும்பி நெடுந்தூரம் வழியைக் கடந்து சென்றனர். அனந்தரம் அந்தத் தூதர்கள் குதிரைகளுக்கு நிரம்பவும் இளைப்புண்டாகும்படி நெடுந தூரங்கடந்து சென்று விரைவாகவே கிரிவ்ரஜமெனனும் வேறு பேருடைய கேகயராஜனது பட்டணத்திற்குப்போய்ச் சேர்ந்தனர். பரதனைச் சீக்ரமாக அழைத்துக் கொண்டு வரது, அவனை [1] ஔர்த்வதைஹிகம் முதலியவற்றைச் செய்வித்துப் பரலோக ப்ராப்தி யென்னும் ப்ரியத்தைத் தமது பரபுவாகிய தசரதமஹாராஜனுக்கு விளைவிப்பதற்கும், தசரதனது குலத்திலுள்ளவர் யாவரும் அநாதர்களாயிருக்கையால பரதனை அழைத்துக்கொண்டு வந்து அவனை நாதனாகச் செய்து அவர்களை ரக்ஷிப்பதற்கும், பர்த்தாவாகிய தசரதனுடைய வம்சமாகிய பரதாதிகளை அழைத்துக்கொண்டு வந்து அவனது வம்சத்திற்கு மேன்மேலும் ப்ரதிஷ்டையை விளைப்பதற்கும் அந்தத் தூ

---

1 ஸ்ராத்தம்.

தர்கள் மிகுந்த ஆதரத்துடன் த்வரைப்பட்டுப் பொழுது போயினும் ப்ரயாணத்தை கிறுத்தாமல் ராத்ரியிலும் கொஞ்சம் நடந்து சென்று அனறைத்தினம் ராத்ரியே அந்த ராஜக்ருஹத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அறுபதெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று

கேகய நகரதிலை பரதன் தனக்குண்டான
துஸ ஸவப்னங்களைத் தனது நண்பா
களுக்குச சொல்லுதல.

அந்தத் தூதர்கள் கிரிவ்ராஜபுரம் போய்ச் சேர்ந்து, ராத்ரியே பரதனுக்கு மனவருத்தத்தை விளக்கும்படியான இந்த ஸ்வப்னம் உண்டாயிற்று. அனறிரவு விடியும் பொழுதே அனிஷ்டமாகிய அந்த ஸ்வப்னத்தைக் கண்டு ராஜாதிராஜகுமாரனகிய பரதன, இந்த ஸ்வப்னம் சீக்ரத்தில் பலிக்குமே யென்று பரிதபித்தனன. ப்ரியங் கூறுகதன்மையர்களாகிய பரதனது நண்பர்கள் அவன எதோ பரிதபிக்கிறானென்று தெரிந்துகொண்டு அவனுக்குள்ள அம்மனவருத்தத்தைப் போக்க விரும்பி ஸபையில் பலவித கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தனர். பரதனுடைய துக்கத்தைப் போக்குவதற்காகச் சிலர் வீணைதிவாத்யங்களைக் கொண்டு பாடினர். சிலர் அபிநயஞ் செய்தனர். மற்றுஞ் சிலர் நாடகங்களை வாசித்தனர். சிலர் நராஸ்யஞ் செயதனர். ரகுவம்சத்திற் பிறநத அம்மனாவன பரதன், ப்ரியத்தைக் கூறுந் தன்மையராகிய தனது நண்பர்கள் ஸபைக்குரிய ஹாஸ்யங்கள் எவ்வளவு செய்யினும் ஸந்தோஷம் பெறுதிருந்தனன். அப்பொழுது நண்பர்களால் சூழப்பெற்றிருக்கிற பரதனைப் பார்த்து அந்தரங்க ஸ்னேஹித னொருவன் 'அன்பனே! அன்பர்கள் சுற்றிலுஞ் சூழ்நதிருநது எவ்வளவு வேடிக்கைகளைச் செய்யினும் நீ ஸந்தோஷமுறுதிருக்கின்றனை, ஏன?"

என்று விஞ்வினன். அங்ஙனம் நண்பன் கேட்கையில், பாதன் அவனைப் பார்த்து 'எனக்கு இந்த மனக்கவலை உண்டானதற்குக் காரணஞ் சொல்லுகிறேன், கேட்பாயாக. நான் ஸ்வப்னத்தில் என் தந்தை அழுக்கடைந்த சரீரத்துடன் தலை மயிர்களை விரித்துக்கொண்டு பர்வத சிகரத்தினின்றும் கலங்கின சாணிமடுவில் விழுக் கண்டனன். மேலும், அவர் அந்தச் சாணிமடுவில் தவளைபோல் நீந்திக்கொண்டும் அஞ்ஜலியால் எண்ணெயை யெடுத்துச் சாப்பிட்டுக்கொண்டும் அடிக்கடி விகாரமாகச் சிரித்துக் கொண்டு மிருக்கக் கண்டனன். பிறகு அவர் எள்ளோரை சாப்பிட்டு அடிக்கடி தலைகீழாகிச் சரீரம் முழுவதும் எண்ணெயைப் பூசிக்கொண்டு எண்ணெயிலேயே மூழ்கி விட்டனர். மேலும், அந்த ஸ்வப்னத்தில் ஸமுத்ரம் உலர்ந்துபோகவும், சந்த்ரன் பூமியில் விழவும், உலகமெல்லாம் இருள் மூடப் பெற்று ஒளிறுந் தோற்றுதிருக்கவும், அரசனது பட்டத்து யானையின் தந்தங்கள் சுக்கல் சுக்கலாய் ஒடிந்து விழவும், எரிந்துகொண்டிருக்கும் அக்னி திடீரென்று அணைந்து போகவும், பூமி வெடிக்கவும், பலவகை வ்ருக்ஷங்கள் பட்டுப் போகவும், பர்வதங்கள் சிதறிப் புகையவும் கண்டனன். பின்னும், அம்மன்னவர் கறுத்த வஸ்த்ரந் தரித்து இரும்பு மணையின் மேல் உட்கார்ந்திருக்கையில், கறுப்பு வர்ணமும் கோரோசனை வர்ணமுமுடைய ஸ்த்ரீகள் அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கக் கண்டனன். மேலும், தர்மஸ்வபாவராகிய அம்மன்னவர் சிவந்த பூமாலையைச்சூடிச் செஞ்சந்தனம் பூசி வேகமாகக் கழுதைகள் கட்டப்பெற்ற ரதத்தின் மேல் ஏறிக்கொண்டு தென் திசை நோக்கிச் செல்லக் கண்டனன். சிவந்த வஸ்த்ரந் தரித்து விகாரமான முகத்துடன் கூடிய ராக்ஷஸ மடந்தை யொருத்தி, பெருஞ் சிரிப்புச்

சிரித்துக்கொண்டு அரசனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போகக் கண்டனன். இங்ஙனம் இனறிரவு மிகவும் பயங்கரமான இந்த ஸ்வப்னங் கண்டனன. ஆகையால எனக்கோ, ராமனுக்கோ, அரசனுக்கோ, அல்லது லக்ஷ்மணனுக்கோ மரணம உண்டாகப் போகினறது. ஸ்வப்னத்தில எந்த மனிதன் கழுதை கட்டின ரதத்தின்மேல ஏறிகொண்டு போவதாகப் புலப்படுவாரே, சிதையில் அவனது சரீரத்தினின்றும் புகையின் சிகை புலப்படும. இதற்கு காரணத்தைப்பற்றி நான மனக்களிப்பற்றிருக்கினறனன். ஆனதுபற்றியே நான் உங்களைப் பாராட்டாதிருக்க நேரிட்டது. என நெஞ்சு உலர்ந்துபோவது போலிருக்கின்றது. என மனத்திற்குச் சிறிதும் தன்னிலைமை தோற்றாதிருக்கினறது. பயம் உண்டாவதற்குக் காரணம் ஏதும் எனக்குத் தோற்றவில்லை. ஆயினும், எனக்கும் வசபபடாமல் பயமே மேலெழுந்து வருகினறது. என் கண்டத்வனியும் அடங்கிவிட்டது. என் சரீரகாந்தியும் மாறிவிட்டது. என்னையே நான பார்த்து ஜுகுப்ஸைப் படுவதுபோலிருக்கின்றனன. காரணமோ தெரியவில்லை. இந்த ஸ்வப்னப்ரகாரம் பலவிதமாயிருக்கின்றது. இப்படிப்பட்டதை இதற்கு முன்பு நான் எப்பொழுதும் விசாரித்துப் பார்த்ததில்லை. இப்படிப்பட்ட துஸ்வப்னங் கண்டதனல் மனனவரைப பார்க்க நேருமோ நேராதோவென்று மனக்கவலை உண்டாகப் பெற்றிருக்கினறனன். இப்பொழுது பார்க்க முடியாதிருக்கிற மன்னவரை நினைக்கையில், என மனத்தில் உண்டான இம்மஹாபயம் அதைவிட்டுப் போகாதிருக்கின்றது' என்றனன். அறுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் அயோத்யைக்கு ப்ரயாணமாய்ப் புறப்படுதல்.

பரதன் அங்ஙனம் துஸ்வப்ன வ்ருத்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டிருக்கையில், தூதர்கள் தமது குதிரைகளை மிகவும் ப்ரமப்படுத்திக்கொண்டு வந்து, பகைவருக்குத் தாண்டமுடியாத அகழியுடைய ரமணீயமான அந்த ராஜக்ருஹமென்னும் பட்டணத்தில் ப்ரவேசித்து, கேகயராஜனும் ராஜகுமாரனுகிய யுதாஜித்தும் எதிர்கொண்டு செய்யும் பூஜைகளைப் பெற்றுக் கேகயராஜனது பாதங்களில் நமஸ்காரஞ்செய்து, அனந்தரம் பரதனிடஞ்சென்று அவனுடன் 'புரோஹிதர் உன்னிடம் தனது க்ஷேமத்தை அறிவிக்கச் சொலலினர். அப்படியே மந்த்ரிகள் அனைவரும் உன்னுடன் க்ஷேமத்தைச் சொல்லுங்களென்றனர். ஆனல் நீ சீக்ரமாய்ப் புறப்பட்டு வரவேண்டும். ஒரு கார்யம் காலந்தவறிப்போகின்றது. நீ அதைச் செய்யவேண்டும். ஆகையால் வேகமாகப் புறப்பட்டுவரவேண்டும். அகன்றழகிய கண்களையுடையவனே! மிகவும் மேலான இத்தவஸ்த்ரங்களையும் ஆபரணங்களையும் கைப்பற்றி உனது மாதாமஹனுக்கும் மாமனுக்கும் கொடுப்பாயாக. ராஜகுமாரனே! இதில் உனது மாதாமஹனுகிய கேகயராஜனுக்குக் கொடுக்கவேண்டிய வஸ்த்ராபரணங்கள் குறையில்லாமல் இருபதுகோடி விலையுள்ளவை இருக்கின்றன. அப்படியே உனது மாமனுக்குக் கொடுக்கவேண்டிய வஸ்த்ராபரணங்கள் குறையின்றிப் பத்துகோடி விலையுள்ளவை இருகின்றன. ஆகையால் இவைகளை வாங்கி அவர்களுக்குக் கொடுப்பாயாக' என்றனர். பரதன் நண்பர்களிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவன். ஆகையால் அவை யெல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு மாதாமஹனுக்கும் மாதுலனுக்குங் கொடுத்து, அந்தத் தூதர்

களுக்கும் வேண்டிய தனம் முதலியவற்றைக்கொடுத்து ஸந்தோஷப்படுத்தி, அனந்தரம் அவர்களை நோக்கி 'என் தந்தை தசரதமஹாராஜர் க்ஷேமமா? அன்றியே ராமனும், மஹானுபாவனாகிய லக்ஷ்மணனும் ஆரோக்யம் உண்டாகப் பெற்றே யிருக்கிறார்களல்லவா? புத்தியிற்சிறந்த ராமனது தாயும் பூஜிக்கத்தகுந்தவளும் தர்மத்தில் நன்கு மனஞ் செலுத்தியவளும் தர்மங்களை நன்குணர்ந்தவளும் ப்ராணிகளிடத்தில் குணத்தைதமாத்ரமே க்ரஹிப்பவளுமாகிய கௌஸல்யை க்ஷேமமாயிருக்கிறாளா? லக்ஷ்மணனுக்கும் வீரனாகிய சத்ருக்னனுக்குந் தாயும் தர்மங்களை உணர்ந்தவளும் நடுத்தாயுமாகிய ஸுமித்ரையும் ஆரோக்யத்தோடிருக்கிறாளல்லவா? தனது கார்யத்தையே பாராட்டுந்தன்மையளும் எப்பொழுதும் க்ரூரமாயிருப்பவளும் கோபத்தினால் கரும்புருமென்றிருப்பவளும் தன்னை எல்லா மறிந்தவளாக நினைத்துக் கர்வித்திருப்பவளுமாகிய எனது அன்னை கைகேயியும் ரோகங்களின்றி க்ஷேமமாயிருக்கிறாளா? அன்றியே நீங்கள் தனது பந்துக்களிடம் வருவது தெரிந்தது அவள் ஏதுஸமாசாரஞ் சொல்லினள்?' என்று விஞ்வினன். மஹானுபாவனாகிய பரதன் இங்ஙனஞ் சொல்லுகையில், அதைக்கேட்ட அத்தூதர்கள் வணக்கத்துடன் அந்தப் பரதனை நோக்கி 'புருஷப்ரேஷ்டனே! நீ எவருடைய க்ஷேமத்தை விரும்புகின்றாயோ, அவர்கள் எல்லோரும் க்ஷேமமே.[1] கையில், தாமரைமலரேந்திய மஹாலக்ஷ்மியும் உனைனைக் கைப்பற்றுகின்றனள். ராஜ்யத்தை ஸித்தப்படுத்திக் கொள்வா

---

1 இங்கு—ராஜ்ய லக்ஷ்மி உனக்கு நேரப் போகிறதென்று தூதர்களின் உட்கருத்து. அதை, அமங்கலந் தொலைவதற்காகச் சுபமாகச் சொன்னார்களென்று பரதனுக்குத் தோற்றும்படி மறைத்துச் சொல்வினர்.

யாக' என்றனர். பரதனும் அந்தத் தூதர்கள் இங்ஙனஞ் சொல்லக்கேட்டு, அவர்களை நோக்கி 'நான் கேகயமஹாராஜரிடஞ் சென்று 'தூதர்கள் வந்து என்னை வரவேண்டுமென்று த்வரைப்படுத்துகிறார்கள்' என்று தெரிவித்து வருகிறேன்' என்று சொல்லி அந்த ராஜகுமாரன் தூதர்கள் தூண்டுதலால் மாதாமஹனாகிய கேகயராஜனிடஞ் சென்று 'மன்னவரே! என் தந்தையினிடமிருந்து தூதர்கள் வந்து என்னை அயோத்தியைக்கு வரும்படி அழைக்கின்றனர். ஆகையால் தகதையினிடம் போகின்றனன். மீளவும் நீர் எப்பொழுது நான் வரவேண்டுமென்று நினைக்கிறீரோ, அப்பொழுது அது தெரிந்து வருகின்றேன்' என்றனன். பரதன் அங்ஙனஞ் சொல்லுகையில், அவனது மாதாமஹனாகிய அந்தக் கேகயராஜன் அந்த ராஜகுலகுமாரனது உச்சி மோந்து அவனைப் பார்த்து 'என்னப்பனே! பகைவரை அடக்கும் பராக்ரமசாலியே! நான் அனுமதி கொடுத்தனன். போய்வருவாயாக. உன்னைப் பெற்ற கைகேயி கல்ல புத்ரனுடையவளாயினள். உன் தாய்க்கும் உனது தந்தைக்கும் க்ஷேமத்தை அறிவிப்பாயாக. புரோஹிதராகிய வஸிஷ்டருக்கும் மற்றுமுள்ள ப்ராஹ்மணோத்தமர்களுக்கும் பெருவில்லாளிகளாகிய அவ்வண்ணன் தம்பிகள் ராம லக்ஷ்மணர்களுக்கும் இவ்விடம் க்ஷேமமென்று சொல்லுவாயாக' எனறு இங்ஙனம் சுபமான மொழிகளைக் கூறினன். இங்ஙனஞ் சொல்லிக் கேகயமன்னவன் பரதனுக்கு மிகுந்த கௌரவத்துடன சிறந்த யானைகளையும் அற்புதமான சித்ரகம்பலங்களையும் மேலான மான் தோல்களையும் ஏராளமான தனங்களையுங் கொடுத்தனன. மேலும் கேகயாதிபதி, கைகேயியின் குமாரனை மேன்மைப்படுத்தி அவனுக்குப் பொன்னிற்செய்த இரண்டாயிரம் கண்டபூஷணங்களையும் ஆயிரத்தை

க்நூறு குதிரைகளையும் தந்தனன். பின்னும், அவ்வப்
வபதிமன்னவன் பரதனுக்கு ப்ரபுவோடுகூட ப்ராணன்க
ளை விடும்படியான ஸ்வாமி பக்தி அமைந்தவர்களும், எவ்
விதஸங்கடத்திலும் ஸஹாயமாயிருப்பவர்களும் விஸ்வா
ஸஞ்செய்வதற் குரியவர்களும் குணங்களெல்லா முடைய
வர்களுமாகிய தனது அந்தரங்க புருஷர்களை அவனைப்
பினசெனறு போகும்படிக்குக் கொடுத்தனுப்பினன். பர
தனது மாமனாகிய யுதாஜித்தும், இராவதமென னும்
பர்வதத்தில் உண்டானவைகளும் பார்க்க மிக இனிய
வைகளுமாகிய யானைகளையும், மேகமுள்ளவைகளும் பர
ஸஞ்சுமப்பதற்குத் தகுந்தவைகளுமாகிய கழுதைகளையும்,
தனதனையுங் கொடுத்தனன். மேலும், அவன் அந்தப்புர
த்திலேயே ஸுகமாக வளர்ந்தவைகளும் பெரும்புலியைப்
போல் வீர்யமும் பலமும் பொருந்திக் கோவைப்பற்களை
யே ஆயுதமாகப் பெற்றுப் பெரிய சரீரத்துடன் விளங்கு
கின்ற நாய்களையுங் காணிக்கையாகக் கொடுத்தனன். அப்
பொழுது கைகேயியின குமாரனாகிய பரதன், ப்ரயாண
தினுள்ள த்வரையினால், கேகயமஹாராஜன் தனக்கு அ
வ்வளவு தனங் கொடுத்ததற்கு ஸந்தோஷ முண்டாகப்
பெறாதிருந்தனன. அப்பொழுது தூதர்கள் அவஸரப்ப
டுத்துவதனாலும் துஸ்வப்னங் கண்டிருப்பதனாலும் அ
னர்த்தம் ஏதோ உண்டாயிருக்கிறதென்று அவன் மனத்
தில் பெரியதொரு சிந்தை உண்டாய்விட்டது. ஜ்ஞ்வர்
யம் பொருந்திய அந்த ராஜகுமாரன் தனது விடுதியினி
ன்றும் புறப்பட்டுச் சென்று ஜனங்களும் யானை குதிரைக
ளும் சூழப்பெற்று மிகவும் விசாலமாகி அழகாயிருக்கும்
ராஜ வீதிவழியாகச் சென்றனன். பிறகு மிகுந்த மதியுடை
யவனாகிய அந்த ராஜகுமாரன் அத்தகைய ராஜவீதியைக்
கடந்து அந்தப்புரத்தைக் கண்டனன். ஸ்ரீமானாகிய அ

ப்பரதன் அவ்வந்தப்புரத்திற்குள் தடையின்றி ப்ரவேசித்தனன். அதைப் பரதன் சத்ருக்னனுந் தானுமாகப் பாட்டனுகிய கேகயராஜனையும் மாமாவாகிய யுதாஜித்தையும் பார்த்து அவர்களிடம் அனுமதி பெற்றுகொண்டு ரதத்தின்மேல் ஏறி ப்ரயாணமாய்ச் சென்றனன். அங்ஙனம் பரதன் போய்க்கொண்டிருக்கையில், வட்டமான சக்ரங்களையுடைய பலநூறு தேர்களில் ஓட்டைகளையும் எருதுகளையும் குதிரைகளையும் கட்டி ஓட்டிக்கொண்டு பலர் அவனைப் பின்சென்று போயினர். மஹானுபாவனுகிய அப்பரதன் பாட்டன் கொடுத்த ஸைன்யம் தன்னைக் காத்துக்கொண்டு வரபெற்றுச் சத்ருக்னனையும் அழைத்துக்கொண்டு, தன்னைப் போனறவர்களாகிய பின்தொடர்ந்து வருகின்ற ஸஹாய புருஷர்களோடுங்கூடிச் சத்ருக்களாருவருமினறி, ஸ்வர்க்கத்தினின்றும் ஸித்தன புறப்படுவதுபோல், க்ருஹத்தினின்றும் புறப்பட்டனன். எழுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் அயோத்யைக்கு வருதலும், தந்தையின்க்ருஹத்திற்குப் போதலும்.

பிறகு ரகுகுலாலங்காரனும் மிகுந்த ஒளியுடையவனும் ஐச்வர்யங்களெல்லாம் அமைந்தவனும் இக்ஷ்வாகுவம்சத்திற்கு ஸந்தோஷத்தை விளைப்பவனுமாகிய அதைப் பரதன், ராஜக்ருஹமென்னும் கேகயராஜனது நகரத்தினின்றும் புறப்பட்டுக் கிழக்குமுகமாகச் சென்று வழியில் புலப்படுகிற ஸுதாமையென்னும் நதியைக் கண்டு ஸந்தோஷித்து அதைத் தாண்டி, அக்கரை வெகுதூரமாயிருக்கப் பெற்றதும் மிகவும் அகன்றிருப்பதுமாகிய ஹ்லாதினியென்னும் நதியையுங்கடந்து, மேற்குமுகமாகப் பெருகிவருவதும் அலைகள் ஓயாதுவீசப்பெற்றதுமாகிய ச

தத்ருஷதியைத் தாண்டினன். செல்வம் நிறைந்தவனுகிய அ
ந்தராஜகுமாரன் வலாதான மென்னும் க்ராமத்தின் அரு
கில் அந்தச்சதத்ருஷதியைத் தாண்டி இளைப்பாறுவதற்
காக அபரபர்ப்படமென்னுங் க்ராமஞ் சேர்ந்து, கற்களைப்
புரட்டிக்கொண்டு வருந்தன்மையுடைய சிலாவஹ யென்
னும் நதியைத் தாண்டி, அதற்குத் தென் கிழக்கு மூலை
யில் இருக்கும் சல்யகர்த்தனமெனனும் பட்டணஞ் சேர்
ந்து அதன் அழகைப் பார்த்து, ஸத்யஸந்தனும் பரிசுத்
தனுமாகையால் அங்குள்ளவர்களின் ஈதிபாதைகளைப்
போக்குவதாகச் சொல்லி அப்படியே செய்து, சைத்ராத
மென்கிற வனத்தைப் பார்க்கவேண்டு மென்னுங் குதூ
ஹலத்தினுல் வழியில் கிடக்கிற பல மஹாசைலங்களைக்
கடந்து சென்றனன். அவன் ஸரஸ்வதீ நதியும் ஸிந்து
நதியும் ஸங்கமிக்கிற இடத்திற்குச்சென்று, வீரமத்ஸ்ய தே
சத்திற்கு வடபாகத்திலுள்ள பாருண்டமெனனும் வன
தில் ப்ரவேசித்தனன். அனந்தரம் அவன, வேகத்துடன்
பெருகி வருவதும் மனத்திற்கு மிகவும் இனிப்பைக் கொ
டுபபதும் பர்வதங்களால் சுற்றிலுஞ் சூழப்பட்டதுமாகிய
குலிங்கா நதியைச் சேர்ந்து சில இடங்களில் ப்ரவாஹ
வேகத்தினுலும் மற்றைச் சில இடங்களில் மலைகள் சூழ்
ந்திருப்பதனுலும் தாண்டமுடியாமல் யமுனையி னருகில்
வந்து அந்நதியைத் தாண்டி வெயிலில் வழி நடந்து வந்த
ச்ரமத்தினுல் ஓய்ந்திருக்கிற தனது ஸைன்யத்தை இளை
ப்பாறும்படிக்குக் கட்டளையிட்டனன். குலிங்கையும் யமு
னையும் ஸந்திக்கும்படியான அவ்விடத்தில் குதிரைகளின்
ச்ரமத்தைத் தீர்த்து ஜலங்களை யிறைத்துக் குளிப்பாட்
டித் தாமும் அவ்விடத்தில் ஸ்நானபானங்களைச் செய்து
இதற்கு மேல் ஜலம் அகப்படுவது கஷ்டமாகையால் வே
ண்டிய ஜலத்தையும் ஸித்தப் படுத்திக்கொண்டு சென்ற

னன். மங்கலாசாரம் பொருந்திய அந்த ராஜ குமாரன் பத்ராஜாதியிற் பிறந்த யானையின் மேல் ஏறிக்கொண்டு எவ்வளவும் ஜனஸஞ்சாரமில்லாத அம் மஹாரண்யத்தை, வாயு ஆகாசத்தைக் கடந்து செல்வதுபோல், ஸுகமாகக் கடந்து சென்றனன். அனந்தரம் அந்தப் பாதன் அம் சுதானமென்னும் தேசத்தில் அடங்கிய ப்ராக்வட மென்னும் பட்டணம் கங்கையைத் தாண்டுவதற்குரிய இடமென்று ப்ரஸித்தமாகையால் அவ்விடத்தில் அந்நதியைத் தாண்டும் பொருட்டுச் சென்றனன். அவன் ஸைனியத்துடன்கூட அவ்விடத்தில் அந்நதியைத் தாண்டி அனந்தரம் தர்மவர்த்தனமென்னும் க்ராமஞ் சேர்ந்தனன. அங்கிருந்து தோரணமெனனும் க்ராமஞ் சேர்ந்து, அதற்குத் தென்புறமாகப் புறப்பட்டுச் சென்று ஜம்பூப்ரஸ்தமென்னுங் க்ராமம் அடைந்து அங்கிருந்து அழகியதான வருதமெனனுங் க்ராமம் போய்ச் சேர்ந்தனன். அவன் அவ்வூருக்கருகில் இருக்கும் அழகான ஓர் வனத்தில் அன்றிரவு வஸித்திருந்து, விடிந்தவுடன் கிழக்கு முகமாகப் புறப்பட்டு உஜ்ஜிஹானை யெனனும் நகரத்தின் உத்யான வனம் போய்ச் சேர்ந்தனன். அவ்வுத்யான வனத்தில் கடம்ப மரங்கள் வெகுவாயிருந்தன. அவன் அவ்வனத்திலுள்ள கடம்ப வருக்ஷங்களைக் கிட்டினவுடனே இனிமேல் எல்லாம் தனது தேசமேயாகையால பயமில்லாமல் மெதுவாக வாருங்களென்று ஸைன்யத்திற்குக் கட்டளையிட்டு விட்டு வேகமுள்ள குதிரைகளை ரதத்தில் பூட்டிக்கொண்டு த்வரையாகச் சென்றனன. அவன் பிறகு [1]ஸர்வதீர்த்த மென்னுங் க்ராமத்தில் ஓரிரவு வஸித்திருந்து, விடிந்தவுடன் புறப்பட்டு உத்தானிகை யெனனும் நதியையும் மற்றுமுள்ள பலவகை நதிகளையும், தனது

---

1 இங்கு ஸர்வதீர்த்த மென்பதற்கு ஸர்பதீர்த்த மென்று பாடம்.

ரதத்திற் பூட்டிய மலைகளிற் பிறந்த சிறந்த குதிரைக ளைக் கொண்டு தாண்டிச் சென்று [1]ஹஸ்திப்ருஷ்டகமென் னும் க்ராமஞ் சேர்ந்து அதனருகிலுள்ள குடிகை யென் னும் நதியைத் தாண்டினன். புருஷ வ்யாஷ்டஞ்சய அ ந்த ராஜகுமாரன் அங்கிருந்து சென்று லௌஹித்யமென் னும் பட்டணஞ் சேர்ந்து அங்குள்ள கபீவதி யென்னும் நதியைத் தாண்டினன். அவன் ஏகஸால மென்னும் க்ரா மத்தில் ஸ்தாணுமதி யென்னும் நதியைத்தாண்டி அங்கி ருந்து வினதமென்னும் க்ராமஞ் சேர்ந்து கோமதி யென்னும் நதியைத் தாண்டிக் கலிங்க நகரஞ் சென்று அதனருகிலுள்ள ஸாலவனஞ் சேர்ந்து அங்குக் குதிரை கள் இளைப்பாறும் பொருட்டுக் கொஞ்ச நேரமே இரு ந்து அப்பொழுதே புறப்பட்டுச் சீக்ரமாகப் போயினன். அவன் அந்த ஸாலவனத்தை அந்த ராத்ரியிலேயே கடந்து கடந்து, அருணோதய மாகையில் வைவஸ்வத மனுவால் நிருமிக்கப்பட்ட அயோத்யாபுரத்தைக் கண் டனன். அநதப் புருஷசிகாமணியாகிய பரதன சீக்ரம் போய்ச் சேரவேண்டுமென்கிற த்வரையின் மிகுதியால் ஏழுராத்ரிகள் வழிநடந்து பிறகு எட்டாவதுநாள் தன் கண்முன புலப்படுகிற அயோத்தியையைப் பார்த்து ஸாரதி யை நோக்கி 'ஸாரதீ! அழகிய உத்யானவனங்கள் அமை ந்ததும் மிகவும் புகழ்பெற்றதும் வளருத்த மண்ணுடை யதும், பலயாகளுசெய்தவர்களும் நற்குணங்களெல்லாம் அமைந்தவர்களும் வேதங்களின் கரையறிந்தவர்களும் செல்வம் மிகுந்திருக்கப் பெற்றவர்களுமாகிய ப்ராஹ்மணர் கள் நாற்புறத்திலும் சூழ்ந்திருக்கப் பெற்றதும் ராஜர்ஷி

---

1 ஹஸ்திப்ருஷ்ட மென்றுல் ஓர் க்ராமத்தின் பேர். அன்றியே யானையின் முதுகில் ஏறிக் குடிகாநதியைத் தாண்டிஞ னென்று மஹேஶ்வரதீர்த்தர் கூறுகின்றார்.

களால் பரிபாலிக்கப்பட்டதுமாகிய அயோத்யாபுரம் இ
தோ புலப்படுகின்றது, பார். ஆனல் இக்ஷகாரம் பார்க்கும்
பொழுதே முன்போல் ஸந்தோஷத்துடனிருப்பதாகத்
தோற்றவில்லை. முன்பு அயோத்யையில் புருஷர்களும் ஸ்த்
ரீகளும் நாற்புறத்திலும் கலகலவெனறு பேசிக் கொண்டி
ருக்கையில், இனது இனியதென்று தோற்றுமல் பெரு
ங்கோஷமொன்று செவிப்பட்டுக் கொண்டிருக்கும். அதை
இப்பொழுது நான் கேட்கப் பெறுதிருக்கினறனன். [1] மு
ன்பு ஸாயங்காலங்களில் புருஷர்கள் உத்யானங்களுக்கு
வந்து விளையாடியிருந்து பிறகு இருட்டுகையில் விளைய
டுவதை நிறுத்தி நாற்புறத்திலும் பிரிந்து வேறுவேறுகத்
தந்தமது மாளிகைகளுக்குப் போகையில் அவ்வுத்யானங்
கள் அப்பொழுது ஓர் அழகுடனகூடி வேறுவிதமாகவே
ப்ரகாசித்துக் கொண்டிருந்தன. இப்பொழுது அவைகள்
காழுகாகள் எவரும் வரப்பெறுமல் அழகற்றவைபோல்
இருக்கின்றன. ஸாரதீ! பட்டணம் முழுவதும் அரண்யமா
றற்போல எனக்குப் புலப்படுகின்றது. முன்போல் ப்ரமு
கர்களாகிய புருஷர்கள் ரதங்களின்மீதும் யானைகள்
மேலும் குதிரைகள்மேலும் ஏறிக்கொண்டு பட்டணத்தி
னின்று வெளியிற் போகிறவர்களாவது பட்டணத்திற்கு
ள் நுழைகிறவர்களாவது எவரும் புலப்படவில்லை. முன்பு
உத்யானவனங்கள், பழங்களையும் தளிர்களையும் தேன்க
ளையும் உட்கொண்டு மதித்த கிளி குயில் வண்டு முதலிய
பக்ஷிகளுடன் ப்ரகாசித்துக்கொண்டும், பாத்திகள் ஏற்ப

---

1 இதற்கு—'முன்பு ஜனங்கள் ஸாயங்காலங் கடந்த பின்பு
ராத்ரிகளில் உத்யான வனங்களுக்கு வந்து விளையாடிவிட்டு உதய
மானவுடன் விளையாடலை நிறுத்தி நாற்புறம் புறப்பட்டுத் தந்தமது
மாளிகைகளுக்குப் போகையில், அப்பொழுது அவ்வுத்யானங்கள்
மற்றொரு விதமாகப்ரகாசிக்கும்' என்று கோவிந்தராஜர்.

நத்தி ஜலம் பாய்ச்சப்பெற்றுக் களகளவென்று தளிர்த்து விளங்குகின்ற கொடிசெடிகளோடு கூடியும், ரதிகேலியின் பொருட்டுவரும் ஜனங்கள் கூடுவதற்கு வேண்டிய கொடிமாடம் கடைவாவிமுதலிய ஸ்தானங்கள் பொருந்தியும் மிகுந்த குணமுடையனவாகி அழகாயிருந்தன. அப்படிப்பட்ட அந்த லீலோத்யானங்களெல்லாம் இப்பொழுது வழிகளில் எங்கும் இலைகள் உதிரப்பெற்று அழுவனபோலிருக்கிற வ்ருக்ஷங்களோடுகூடி நாற்புறமும் ஆநந்தமற்றுப் புலப்படுகின்றன. ஸூர்யோதயம் ஆக வேண்டியிருப்பினும் இன்னுங்கூட க்ரீடாம்ருகங்களும் பக்ஷிகளும் யதேஷ்டமான ஆஹாரங்களால் மதித்து அழகிய ராகத்துடன் அவ்யக்தமதுரமாகச் செய்யுஞ் சப்தங்கள் ஏதும் செவிப்படாதிருக்கின்றன. முன்போல் சந்தனகுருவாலை னைகளுடன் கலந்தும் தூபவாஸனைகள் நிரம்பியும் மனங் கமழ்ந்துகொண்டு மனக்களிப்பை விளக்கும் மேலான காற்று இப்பொழுது என் வீசாதிருக்கின்றது? முன்பு எப்பொழுதுங் கம்பீரமாகக் கிளம்பும்படி கைகளாலும் கோல்களாலும் அடிக்கப்பட்ட துந்துபிம்ருதங்கம்வீணை முதலிய வாத்யங்களின் த்வனி ஓயாமற் செவிப்பட்டுக் கொண்டிருக்கும். அது இபபொழுது ஏன் ஓய்ந்திருக்கின்றது? அனிஷ்ட ஸூசகங்களும் க்ரூரங்களும் பார்த்த பொழுதே மனத்திற்கு மிக்க துக்கத்தை விளவிப்பவைகளுமாகிய அசுபசகுனங்கள் பலவும் புலப்படுகின்றன. அதனல் என் மனது மிகவும் வருந்துகின்றது. ஸாதீ! எனமனத்திற்கு வருத்தம் உண்டாகக் காரணமின்றியிருப்பினும், என் மனது மிகவும் வருந்துகின்றதே! ஆகையால் எப்படியாயினும் எனது பந்துகளுக்கு க்ஷேமம் உண்டாவது அரிதென்றே தோற்றுகின்றது' என்றனன். இங்ஙனம் பரதன் மனவருத்தமுற்று மனங் கலங்கவும்

பயம் மேலெழவும் இந்த்ரியங்கள் கலுங்கவும் பெற்று இக்ஷ்வாகுவம்சத் தரசர்களால் பாதுகாக்கப்பட்டு வரும் அயோத்யாபுரத்திற்குள் சீக்ரமாகப்ரவேசித்தனன்.[1] தூரப்ரயாணமாகையால் மிகவும் வருந்திய குதிரைகளோடு பரதன் வைஜயந்த மென்கிற மேற்கு வாசற்படி வழியாகப் பட்டணத்திற்குள் நுழைந்தனன். அனந்தரம் அங்குள்ள த்வாரபாலகர்கள் திடீரென் றெழுந்திருந்து 'விஜயமா'என்று கேட்டுப் பின்தொடர்ந்து வர, அவர்களுடன கூடவே போயினன். ரகுகுல குமாரனாகிய அந்தப் பரதன், மனது ஒன்றிலும் நிலை பெறாமல் வ்யாகுலப்பட்டிருப்பதனல் அந்த த்வார பாலகர்களை உபசாரத்துடன் திருப்பிவிட்டுத் தன் மனத்திற்கு இனியனும் தூரவழி வந்ததனல் இளைப்புற்றவனுமாகிய அஸ்வபதியின ஸாரதியைப் பார்த்து 'குற்றமற்றிருக்கும் ஸ்வபாவனே! ஆலோசனை யறிந்தவனே! காரணம் ஒன்றும் இல்லாமல் எனனை வஸிஷ்டர் த்வனையாக வரவழைப்பது ஏனோ? யாது அசுபமோ? என்று மனத்திற் சங்கை உண்டாகின்றது. எனது இயற்கையும் கெட்டு மாறுவதுபோல் இருக்கின்றது. ஸாரதீ! பூர்வத்தில் அரசர்களுக்கு மரணம் உண்டாகும் பொழுது எவ்வகைக் குறிகள் இருக்குமென்று கேள்விப்பட்டிருக்கிறோமோ, அக் குறிகளெல்லாம் எனக்கு இங்குப் புலப்படுகின்றன. இங்குக் குடிகளின் வீடுகள் விளக்குதலில்லாமையால் க்ரூரமாயிருக்கின்றன. அவைகளின கதவுகள் மூடப் பட்டிருக்கின்றன. அங்கு எங்குப் பார்க்கிலும் அ

---

1 இதற்கு 'ஈவாரேண வைஜயந்தேந ப்ராவிஶச் ஶீராந்த வாஹந:' என்று மூலம். இதில் (ஈவாரேண) என்ற இடத்திலுள்ள (ரே) என்னும் அக்ஷரத்திலல் காயத்ரியின் ஆறுவதக்ஷரம் க்ரஹிக்கப்பட்டது. இதலல் ஐயாயிரங் க்ரந்தங்கள் கடந்தன வென்றும் ஆறுவதாயிரம் தொடங்கப்பட்டதென்றுந் தெரிகின்றது.

முகு சிறிதுந் தோற்றுதிருக்கின்றது. மேலும், அவைக ளில் பூஜா கார்யங்களும் அற்றிருக்கின்றன. பின்னும், மணங் கமழும் தூபவாஸனைகளும் இங்குப் புலப்படவில் லை. இங்குள்ள ஜனங்கள் எல்லோரும் போஜனங் கூடச் செய்யாமல் ஓனி மழுங்கி மனக்களிப்பற்றிருக்கின்றனர். ஆனதுபற்றியே இதத வீடுகள் லக்ஷ்மீ விலாஸமற்றிருக்கி ன்றன. தேவாலயங்களும் த்வாரங்களில் புஷ்ப மாலைகள் இடப் பெறுமல் சூனயமாயிருக்கின்றன. அவைகளின மு ற்றங்களும் ஜலத் தெளித்து விளக்கப் பெறுமல் துலகக மற்றிருக்கின்றன. மேலும், பூஜகபரிசாரகாக ளில்லாமை யால் பாழாகி முன்போல விளக்க முறுதிருக்கினறன. தேவபூஜைகளும் ஒழிந்திருக்கின்றன. யாகஸபைகளும் அப்படியே பாழாயிருக்கின்றன. பூக்கடைகளில சரக்கு களும் முன்போல் புலப்படவில்லை. இபபொழுது இங்கு வர்த்தகர்களும் மனக்கவலையுற்றவராகி க்ரய விக்ரயாதி வ்யாபாரங்களைத் துறந்து ஸங்கோசமடைந்திருக்கிறார்க ளேயனறி, முன்போல் புலப்படவிலலை. தேவாலயங்களி லும் சதுர்சந்திவீதிகளி லும் உள்ள பறவைக் கூட்டங்க ளும் அப்படியே மனக் களிப்பறறிருக்கினறன. பட்டணத் தி லுள்ள ஜனங்கள் ஸ்த்ரீகளும் புருஷர்களும் சரீரம் அ ழுக்கடையவும் கண்களில் நீர் பெருகவும் பெற்றுத்தீ னர்களாகிச் சிந்தையிணல் இளைத்து ப்ரியபதத்தைக் இழந்தால வருத்தமுறுவதுபோல் வருந்தியிருக்கக் கா ண்கின்றேன்' என்றனன். இங்ஙனம் அப்பரதன் அயோத் யையில அவவனிஷ்ட சகுனங்களைக் கண்டு இதத ப்ரகா ரஞ செலலித் தசரதமஹாராஜனது மாளிகைக்குச் செ ன்றனன். அமராவதிபோல் விளங்கியிருத்த அக்கரம் சாற்சந்திவீதிகளி லும் க்ருஹங்களி லும் ராஜமார்க்கங்க ளி லும் ஜனஸஞ்சாரம் அறப் பெற்றுப் பாழாகி, விளக்கு

தல் முதலிய ஸம்ஸ்காரங்களில்லாமையால் வாசற்கதவுகளும் அலைகளின் பிடி முதலியனவும் தாசிபடிந்து சிவக்கப் பெற்றுப் பார்க்கமுடியாதிருப்பதைக் கண்டு அவன் மிகுந்த மனவருத்தமுற்றனன். மிகவுந் தைர்யசாலியாகிய அந்தப் பாதன் முனபு ஒருக்காலும் தன் பட்டணத்தில் உண்டாகாதவைகளும் மனத்திற்கு அப்ரியங்களுமாகிய அந்த லக்ஷணங்களும் மற்றும் பல அசுப சகுனங்களும் உண்டாயிருப்பது கண்டு தலைவணக்கமுற்று மனங் கலங்கப் பெற்றுச் சிறிதுங் களிப்பின்றித் தகதையின் க்ருஹத்துள் நுழைந்தனன். எழுபத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

கைகேயி, பாதனுக்குத் தசரதன் மரணம் அடைந்த வ்ருத்தாந்தத்தையும் ராமன் காட்டுக்குப் போனதையுந தெரிவித்து ராஜ்யாபிஷேகம் பெறுவாயென்று கூறுதல.

அனந்தரம் பாதன அங்குச் சென்று தந்தையின் க்ருஹத்தில் தகதையைக் காணுமல் தாயைப் பார்க்கும் பொருட்டு அவளது மாளிகைக்குச் சென்றனன். கைகேயி அப்பொழுது, தேசாந்தரம் போயிருந்த தன் புதல்வன் வருவதைக் கண்டவுடனே ஸந்தோஷாதிசயத்தினல் உட்கார்ந்திருந்த பொன் பீடத்தினின்றும் திடீரென்று எழுந்தனள். தர்மஸ்வபாவனாகிய அப்பாதன் ஓளிவிளக்கம் மாறியிருக்கிற தன் தாயின் மாளிகைக்குப் போனவுடனே, சுபங்களாகிய தாயின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு நமஸ்காரஞ் செய்தனன். அவள், மிகுந்த புகழுடையோனாகிய அப்புதல்வனை உச்சி மோகந்து ஆலிங்கனஞ் செய்து மடியில் உட்கார வைத்துக் கொண்டு விஞவத்தொடங்கி 'அப்பா! நீ உனது பாட்டனாகத்தை

விட்டுப் புறப்பட்டு இன்றுளத்தனை ராத்ரிகள் ஆயின? ரதத்தின்மீதேறி மிக்க வேகத்துடன் வந்தனையே, உனக்கு மார்க்காயாஸம் இலலாதிருக்கின்றதா? புதல்வனே! பூஜ்யராகிய உனது மாதாமஹரும் உனது மாமாவாகிய யுதாஜித்தும் க்ஷேமமாயிருக்கிறார்களா? உனக்கு இங்கிருந்து போனதுமுதல் ஸுகமா? இதையெல்லாம் எனக்குச் சொல்ல வேண்டும்' என்றனள். பரதன் அவளைப் பார்த்து 'அம்மா! நான் பாட்டனாகத்தினின்றும் புறப்பட்டு இன்றைக்கு ஏழு ராத்ரிகள் ஆயின. அம்மாவின் தகப்பனையும் எனது மாமா யுதாஜித்தும் க்ஷேமமாயிருக்கின்றனர். பகைவரைத் தபிக்கச் செய்ய வல்லவராகிய கேகய ராஜர் எனக்குக் கொடுத்த தனங்களும் ரத்னங்களுமும், அவைகளைக் கொண்டுவரும் வாஹனங்கள் வழி நடந்து வந்த ச்ரமத்தினால் இளைப்புற்றிருப்பதுபற்றி வழியிலேயே விட்டு நான் முன்னதாக வந்தனன். ராஜா சொல்லியனுப்பின தூதர்கள் எனனை த்வரைப்படுத்தினபடியால் நான முன்னே வந்துவிட்டனன். அம்மா! நான் எதைக் கேட்க விரும்புகின்றேனை, அதை எனக்குச் சொல்லவேண்டும். ஸ்வர்ணத்தினால் சிங்காரிக்கப்பட்டுப் படுக்கத் தகுந்திருக்கும் உனது மஞ்சம் தகுதி இல்லாமல் பாழாயிருக்கின்றது. இக்ஷ்வாகு வம்சத்து மன்னவராகிய தசரதரது ஜனங்கள் ஸந்தோஷமற்றிருப்பது போல் எனக்குத் தோற்றுகின்றது. மஹாராஜர் இங்கு அம்மாவினகத்தில் வெகுவாக இருப்பவரென்று நினைத்து அவரைப் பார்க்க விரும்பி இவ்விடம் வந்தனன். இப்பொழுது அவரை இங்குப் பார்க்க தோதிருக்கின்றனன். அம்மா! தந்தையின் பாதங்களைப் பிடித்து நமஸ்காரஞ் செய்ய விரும்புகின்றனன். அதற்காகக் கேட்கின்றனன். அவர் எங்கே இருக்கின்றனர்?

சொல்வாய். ஓருக்கால் என் பெரிய தாயார் கௌஸல்யை யின் அகத்தில்இருக்கிறாரா என்ன?" என்றுவினவினன். அனந்தரம் கைகேயி ராஜ்யத்தில் போராசை யுற்று மதி கெட்டிருப்பதனல் கோரமாகி மிகவும் அப்ரியமுமாயிருக் கிற வ்ருத்தாந்தத்தை ப்ரியமாகப் பாவித்து, கடந்ததை ன்றுந் தெரியாத அப்பரதனைப் பார்த்து 'ஸமஸ்த ப்ர ணிகளும் தப்பாமல் எந்தக் கதியைப் பெறுவார்களோ, மஹாநுபாவரும் மஹா தேஜஸ்வியும் யாகஞ் செய்யும் ஸ்வபாவரும் ஸஜ்ஜனங்களுக்கு ஆதாரவாயிருப்பவருமாகி ய உன தந்தை மஹா ராஜர் அப்படிப்பட்ட கதியைப் பெ ற்றார்' என்றனள். தர்மஸ்வபாவனும் ஸத்குலத்திற் பி றந்தவனும் பரிசுத்தனுமாகிய பரதன் தந்தை மரணம் அடைந்தாரென்னும் அவ்வார்த்தையைக் கேட்டவுட னே தந்தையைப் பற்றிய துக்காதிசயத்தினல் நலுங்கித் திடீரென்று கீழேவிழுந்தனன். மஹாபாஹுவும் பரக்ர ம நிதியுமாகிய அந்தப் பரதன் 'ஐயோ ! பாழாய்விட்டே னே' என்று கேட்போர்க்கு மனஇரக்கத்தை விளைப்பது ம் தீனமுமாகிய வார்த்தையைச் சொல்லிக் கைகளை உத றிக்கொண்டு தரையில் வீழ்ந்தனன். பிறகு அம் மஹா தேஜஸ்வியாகிய பரதன் தந்தையின் மரணத்தைக்கேட்டு வருந்திச் சோகம் மேலெழப்பெற்று ஓருநிலையில் நில்லா மற் கலங்கின மனமுடையவனாகி இங்ஙனம் புலம்ப ஆரம்பி த்து 'சரத்காலத்து ராத்ரியில் நிர்மலமான ஆகாசம் சந்த் ரனுடன்கூடி ப்ரகாசிப்பதுபோல், முன்பு என் தந்தை படிக்கும் இந்தப் படிக்கை அம்மஹாநுபாவரால் மிகவும் அழகுற்று ப்ரகாசித்துக் கொண்டிருந்தது. அப்படிப்பட் ட இந்தப் படிக்கை இப்பொழுது அப்புத்திமான இல்லா மையால், சந்த்ரனில்லாத ஆகாசம்போலவும் ஜலம்வற்றின ஸமுத்ரம்போலவும் அழகழியப்பெற்று ப்ரகாசியாதிருக்கி

ன்றதே' என்று கதறினன். ஜயசாலிகளில் மேன்மையுற் றவனுகிய அந்தப் பாதன் பெருங்குரலுடன் இங்ஙனங்கத றிக் கண்ணீர் பெருக்கிப் பளபளவென்னும் ஒளியுடன் வி ளங்குகின்ற தனது முகத்தை வஸ்த்ரத்தினல் மூடிக் கொண்டு மிகவும் பரிதபித்து மனம் வருந்தப்பெற்றிருந் தனன். தேவதையைப்போல் ப்ரகாசிப்பவனும் மதங்கொ ண்ட யானையை நிகர்த்திருப்பவனும் சந்த்ரஸூர்யர்களுக் கு ஒப்பானவனுமாகிய அந்தப் பாதன், வனத்தில்கோடா லியால் அறுப்புண்ட ஸாலமரத்தின் அடிபாகம்போல் த ரையில் விழுந்திருக்கக்கண்டு கைகேயி அவனைப் பூமியி னின்றும் எழுந்திருக்க எடுத்து 'ராஜகுமாரனே! பெரு ம்புகழுடையோனே! எழுந்திருப்பாயாக. என் படுத்தி ருக்கின்றனை? ஸபையில் மேன்மைப்படுத்துவதற்குரிய உன்னைப்போன்ற ஸத்புருஷர்கள் எள்ளளவும் மனவருத் தமுறுகளல்லவா? மிகுந்த மதியுடையவனே! உன் புத்தி, தானத்திலும் யாகத்திலும் ஊக்கமுற்றிருப்பதல் லவா? அன்றியே கன்னடத்தையையும் வேதவாக்யங்களை யும் அனுஸரித்திருக்குந் தன்மையுடையது. ஆகை யால் அது, மந்தரபர்வதத்தினல் ஸூர்யகாந்தி மிகவும் விளங்குவதுபோல் உன்னிடத்தில் மிகவும் விளகுகழுற் றிருக்குமலலவா?' என்றனள். அப் பாதன் வெகுநேரம் அழுதுகொண்டே புவியில் புரண்டிருண்டிருந்து பலவகை ச் சோகங்கள் மேலெழப்பெற்று தாயை நோக்கி 'அர சர் என்னை அழைத்துவரத் தூதர்களை அனுப்பினரே! ராமனுக்கு எதாயினும் பட்டாபிஷேகம் கடத்துவாரா! அல்லது, தான் ஏதேனும் ரகஸ்யஞ்செய்வாரா?' என்று மனத்தில் நினைத்து ஸந்தாஷப் பட்டுக்கொண்டு ப்ரயா ணமாய் வந்தனன். அப்படிப்பட்ட என் நினைவு மற்றொரு விதமாய்விட்டதே! ப்ரதிதினமும் எனக்கு ஸந்தோஷத்

தைவிளைத்து மேன்மையைச் செய்துகொண்டிருந்த என் தந்தையைக் காணப்பெறுத என் மனம் இருபிளவாகப் பிளந்து போவதுபோலிருக்கின்றது. அம்மா! நான் வராதிருக்கும்பொழுது மன்னவர்னந்த வ்யாதியால் மரணம் அடைந்தனர்? பெற்ற தந்தையைத் தாமே கைகளாரஸம்ஸ்காரஞ் செய்யப்பெற்ற ராமன் முதலியவர்களே புண்யஞ்செய்தவர்கள். மிகுந்த புகழுடைய மஹாராஜர், நான் வந்திருக்கிறேனென்பதை அறியார். இது வாஸ்தவம். அறிவாராயின், சீக்ரமாகவந்து என்னைவணக்கி உச்சிமோந்து ஸந்தோஷப்படுவாரல்லவா? துக்கங்களைத் தொலைக்கும்படியான கார்யங்களைச் செய்யுந் தண்மையராகிய என் தந்தை, எந்த ஹஸ்தத்தினால், தாரத்தினின்று வந்து புழுதிபடிந்த மேனியுடனிருக்கிற என்னைத் துடைத்துக் கொடுப்பாரோ, ஸுகஸ்பர்சமுடைய அந்த ஹஸ்தம் எங்கே இருக்கின்றது? எவன் எனக்குத் தாயும் தந்தையும் பந்துவும் ஆவானே, மேலும், எவனுக்கு நான் தாஸனாயிருக்கிறேனே, யாதொரு வருத்தமுமின்றித் தான் முயன்ற கார்யத்தை நிறைவேற்றுந் தண்மையனுகிய அப்படிப்பட்ட ஸ்ரீராமனுக்கு நான் வந்திருப்பதை வேகமாகத் தெரிவிப்பீர்களாக. பெரியோர்களின் தர்மங்களை அறிந்தவனுக்குத் தமையன் பிதாவே ஆவானல்லவா? ஆகையால் அவனது பாதங்களைப் பிடித்துக்கொண்டு நமஸ்காரஞ் செய்கிறேன். தந்தை காலஞ் சென்ற பின்பு இனி இப்பொழுது அவனே அன்றோ எனக்குக் கதி? தர்மங்களை அறிந்து தர்மங்களிற்றானே கடக்குந் தண்மையுடையவரும், ஸத்யஸந்தரும் முயன்ற நியமத்தைக் கைவிடாதவரும் உண்மையான பராக்ரமமுடையவரும் பூஜிக்கத் தகுந்தவருமாகிய என் தந்தை மஹாராஜர்என்னசொல்லிப்போயினர்? அவர் மரணஸமயத்தில் என்னைக் குறித்து என்

சொல்லிப் போயினரோ, அதை நன்றாகக் கேட்க விரும் புகின்றேன்' என்று விஞவினன். இங்ஙனம் அவன் கேட் கையில், கைகேயி நடந்ததை நடந்தபடியே அவனுக்கு சொல்லத் தொடங்கி [1]'நல்ல கதி பெற்றவர்களில் உத்த மரும் மஹர்ஷுபாவருமாகிய அம்மஹாராஜர் 'ராமா! ஜ யோ ஸீதே! லக்ஷ்மண!' என்று புலம்பிக்கொண்டே பர லோகம் அடைந்தனர். மேலும், உன் தந்தை பாசங்க ளால் கட்டுண்ட பெரிய மத்தகஜம்போல் மரணத்தில் அக ப்பட்டுக் கடைசியாக'எவர் இவ்விடத்திற்கு ஸீதையோடு கூடத் திரும்பி வருகின்ற ராமனையும் மஹாபாஹுவாகிய லக்ஷ்மணனையும் பார்க்கப் பெறுவார்களோ, அவரே ப்ர யோஜனங் கைகூடப் பெற்றவர்கள்' என்று இந்தச் சொ ல்லமாத்ரமே சொன்னர்' என்று மொழிந்தனள். பரதன் அது கேட்டு ராமன் பட்டணத்தில் இல்லையென்னும் இர ண்டாந் துக்க வார்த்தையைக் கேட்பதனல் முகவொளி மழுங்க மிகவுந் துக்கித்து மீளவும் தாயைப் பார்த்து ' தர்ம்ஸ்வபாவனும் கௌஸல்யைக்கு ஸந்தோஷத்தை விளக்குந் தன்மையனுமாகிய ராமன், தம்பி லக்ஷ்மண னேடும் ஸீதையோடுங் கூடி இப்பொழுது எவ்விடம் போ யிருக்கின்றன்?' என்று விஞவினன். அங்ஙனம் அவன் கேட்கையில், கைகேயி மிகவும் அப்ரியமாகிய பெரியதொ ரு வார்த்தையை ப்ரியமாக ப்ரமித்து நடந்ததை நடந்த படியே முழுமையும் சொல்லத் தொடங்கி 'பிள்ளாய்! அ ந்த ராஜகுமாரன் லக்ஷ்மணனேடும் ஸீதையோடுங் கூடி மரவுரிகளை உடுத்துத் தண்டகாரண்யம் போனன்' என்றுரைத்தனள். பரதன் அது கேட்டுத் தன் வம்சத்தி ற்கு ஸதாசாரத்தில் நிலைநின்றிருக்கையாலுண்டான மஹி மையை நினைத்து 'தனது அண்ணன் ஏது தவறிநடந்த னனே! இப்படி அரண்யம் போவதற்கு' என்று அவனது

கடத்ததையைப்பற்றிச் சங்கித்துப் பயந்து மீளவுங் கேட்
கத் தொடங்கி 'ராமன் யாராவதொரு ப்ராஹ்மணருடை
ய தனத்தை அபஹரிக்கவில்லையன்ரு? மேலும், தனி
கனையாவது தரித்ரனையாவது எந்தப்பாபமுஞ் செய்யாத
எவனையும் ஹிம்ஸிக்கவில்லையன்ரு? அந்த ராஜகுமாரன்
பிறர் மடந்தையர்மீது விருப்பமுரருனல்லவா? ராமன் எந்
தப் பாபத்ததையும் அறியானே! ஸமஸ்த வேதபாகங்களு
ம் ஸகல சாஸ்த்ரங்களும் உணர்ந்தவனைக் கொன்றவன்
போல் ராமன் தண்டகாரண்யத்திற்கு என் துரத்தப்பட்
டான்' என்று விணவினன். பிறகு ராஜ்யத்தில் விருப்பமு
ள்ளவளாகிய அவன் தாய் கைகேயி மூன்பு ராஜனை வர
ங்கேட்டபொழுது வெளிப்படுத்தின தன் ஸ்வபாவத்தை
யே அனுஸரித்துத் தான் செய்தது நன்றென்று நினைத்
து கடந்தபடியே சொல்ல ஆரம்பித்தனள். மஹாநுபா
வனாகிய பரதன் இங்ஙனங் கேட்கையில், கைகேயி மதிய
ற்றவளாகையால் தன்னைப் பண்டிதையாக நினைத்து
'ராம் இவனுக்கு ஹிதஞ்செய்தோம்' என்னும் ஸந்தோ
ஷத்துடன் அவனைக்குறித்து 'ராமன் எந்த ப்ராஹ்மண
னுடைய தனத்தையும் அபஹரிக்கவில்லை. மற்றும் தனி
கனையாவது தரித்ரனையாவது பாபஞ்செய்யாதவனை எவ
னையும் ஹிம்ஸிக்கவில்லை. ராமன் பிறர்ஸ்த்ரீகளைக் கண்
கொடுத்தாயினும் பார்க்கமாட்டான். புதல்வனே! ராம
னுக்கு அபிஷேகம் நடப்பதைக் கேட்டு நானே உனக்கு
ராஜ்யங்கொடுக்கவேண்டுமென்றும் ராமனைக் காட்டுக்கு
அனுப்பவேண்டுமென்றும் உன் தந்தையை வேண்டிக்
கொண்டனன். உன் தந்தை அம்மஹாராஜர் சொல்லித்
தவறுத தன தர்மத்ததைத் தவறமுடியாமல் நான் வேண்
டிக்கொண்டதை அப்படியே நடத்திவிட்டனர். ராமனை
லக்ஷ்மணனையும் சீதையோடும் அடவிக்குத் துரத்திவிட்

டனர். பெரும்புகழுடையராகிய மன்னவர், இப்படி ராமன் அரண்யம் போகையில் அவ்வனபு குமாரனைக் காணப் பெறுமல் புத்ரசோகத்திலல் பரிதபித்துக்கொண்டே மரணம் அடைந்தனர். நீ ராஜநீதிகள் அறிந்தவன், ஆகையால் இப்பொழுது ராஜ்யத்தைக் கைப்பற்றுவாயாக. நான் இதையெல்லாம் உனக்காகவேயன்ரு இங்ஙனஞ் செய்தனன் ? எனனப்பனே ! நீ, 'மன்னவர் மரணம் அடைததார்' எனகிற சோகத்தையும், 'ராமன் காட்டுக்குப்போனன்'என்று மனஸ்தாபத்தையும் கொள்ளவேண்டாம். தைர்யம்பெறுவாயாக. இந்தகாரமும் உபத்ரவமொன்றுமில்லாத இந்த ராஜ்யமும் இனி உன்னதீனமன்ரு ! புதல்வனே ! இங்ஙனம் இருப்பதுபற்றிச் சாஸ்த்ரங்களை உணர்ந்த வஸிஷ்டர்முதலிய ப்ராஹ்மணோத்தமர்களோடுகூடி., பின்வாங்காத வீர்யம் பொருந்திய மஹாராஜருக்கு விதியின்படி வேகமாக ஸமஸ்காரஞ்செய்து உனக்கு இப்பூமண்டலத்தில் பட்டாபிஷேகஞ் செய்வித்துக்கொள்வாயாக'என நனள். எழுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று

பரதன் கைகேயியைத் தூறுதல.

பரதன், தந்தை மரணம் அடைந்ததையும் அண்ணன் தம்பிகளை அரண்யத்திற்கு அனுப்பினதையும் கேட்டவுடனே துக்கத்திலல் மிகவும் பரிதபித்து இங்ஙனஞ் சொலலத்தொடங்கி 'தகாதையை இழந்து தந்தையப் போனற உடன்தோன்றலையும் பிரிந்து பாழாகி வருந்துகினற எனக்கு இங்கு ராஜ்யத்திலல் செய்யவேண்டிய கார்யம் என ? ராஜனை மரணம் அடையச்செய்து ராமனையும் தாபஸனுக்கிவிட்டனையே ! துக்கத்தின்மேல் துக்கத்தை

விளவித்தனையே ! உரித்த புண்ணின்மேல் காரத்தை இட்டாய்போலும், நீ எங்கள் குலம் ஒளறுமில்லாமல் நசித்துப்போகும்படி ப்ரலயகாலராத்ரிபோல் வந்தனையே! என் தந்தை நெருப்பைக் கட்டிக்கொள்வதுபோல் உன்னைக் கட்டிக்கொண்டனர். உன்னை அறியாமற்போயினர். நீ பாபத்திலேயே கண்வைத்தவள். ஆகையால் மன்னவருக்கு ம்ருத்யுவை விளைத்தனை. குலத்தைக்கெடுக்கவந்தவளே ! அறிவுகெட்டு எமது குலத்தை இக்கதிபெறச்செய்து, அதில் ஸுகமென்பது சிறிதும் இல்லாதிருக்கும்படி செய்தாயே ! ஸத்யஸந்தரும் பெரும் புகழுடையவருமான என் தந்தை தசரதமன்னவர் உன்னைக் கைப்பற்றியன்று இப்பொழுது கொடிய துக்கத்தினல் மிகவும் பரிதபித்து மாண்டனர்? என் தந்தை தர்மங்களில் விருப்பமுடையவர், அம்மஹாராஜரை என் கொளறுவிட்டனை? மேலும், எதுக்காக ராமனை ஊரைவிட்டுத் துரத்தி அரண்யம் போகச்செய்தனை? என தாயாகிய உன்னைப்பற்றிக் கௌஸல்யையும் ஸுமித்ரையும் புத்ரசோகத்தினல் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். இனி அவர்கள் பிழைக்கமாட்டார்கள். ஒருக்கால் பிழைத்திருப்பார்களாயின், அது அவர்களுக்கு நிரம்பவும் கஷ்டமாகவே இருக்கும். பூஜ்யனாகிய ராமனும் பெரியோரிடத்தில் நடக்கவேண்டிய வழிகளெல்லா மறிந்தவன் ; தர்மஸ்வபாவன் ; ஆகையால் அவன் தன் தாயிடத்தில் நடப்பதுபோலவே உனனிடத்திலும் ஒப்பில்லாத சுச்ரூஷையெல்லாம் நடத்துவனல்லவா? தூரத்தில் வருமவற்றையெல்லாம் முன்பாகவே கௌஸல்யை அறியுந் திறமுடையவள்; ஆகையால், என் பெரிய தாயான அவளும் அப்படியே தர்மத்தில் முயன்று, உன்னை உடன் பிறந்தவளைப்போல் பார்த்துக்கொண்டு வருகிறளல்லவா? அப்படிப்பட்ட தர்மசீல

யின குமாரனை, பாபிஷ்டே! மிகுந்த மதியுடைய ராமனை மரவுரி உடுத்து வனவாஸஞ்செய்ய அனுப்பி மனவருத்தமின்றி எப்படி இருக்கின றனையோ? ராமன் பாபத்தில் கண்வைப்பவனல்லன, நல்ல மதியுடையவன், மிகுந்த புகழ் அமைந்தவன், அப்படிப்பட்டவனை நீ மரவுரி களை உடுத்து வனத்துறைந்து போகும்படி அனுப்பினையே! இதற்கு யாதுகாரணம் உனக்குத்தோற்றியது? இதனல் நீ யாதுபயனைப் பெற்றனை? நீ போராசைபிடித்தவள். ஆனதுபற்றியேகான ராமனிடத்தில் எப்படி இருக்கிறதேனை, அது உனக்குத் தெரியாதென்று நினைக்கிறன். அப்படி தெரியாமையைப் பற்றியே எனக்கு ராஜ்யம் வரவேண்டுமென்று இப்படிப்பட்ட பெரும் அனர்த்தத்தைக் கொண்டுவந்தனை. கான் புருஷஸிம்ஹங்களாகிய ராமலக்ஷ்மணர்களைப் பாராமலே எதச் சக்தி விசேஷத்தைக்கொண்டு ராஜ்யபரிபாலனஞ் செய்ய வல்லுவேன? அவரிருவர்களேயன்று எனது சக்திவிசேஷம்? எனக்கு மாதரமே அவனை எதிர் பார்க்கவேண்டுமென்ப தில்லை. மஹாபலரும் தர்மஸ்வபாவ முள்ளவருமான மன்னவருங்கூட, மேருபர்வதம் தனது ரக்ஷணத்தின்பொருட்டுத் தன்னைச் சேர்ந்த அரண்யத்தை எதிர் பார்த்திருபபது போல், எப்பொழுதும் பலவத்தனுகி விளங்கும் ராமனையே எதிர்பார்த்துக்கொண் டிருந்தாரல்லவா? பெருமபளுவத் தூக்கவல்ல பெருங் காளைமேல் ஏற்றவேண்டிய பாரத்தை இளங் கன்றுக்குட்டி பரிக்கமாட்டாதது போல், மஹாபலராகிய மன்னவர் நிர்வஹித்துவந்தஇத ராஜ்யபாரத்தைப்பாலனஞ்செய்ய கான் எந்த அவலம்பத்தைக் கொண்டு பரிகரவல்லேன? ஒருக்கால் ஸாமாதி உபாயங்களாலாவது தாரணமுதலிய புத்தி பலத்தினாலாவது ராஜபுத்ரனகிய எனகதுபாபாலனஞ்செய்யச் சக்தியுண்

டாயினும், பிள்ளையிடத்தில் பராசையால் இப்படிப்ப ட்ட அனர்த்தத்தை விளவித்த உன் கருத்தைமாத்ரம் நான் ஈடேற்றப்பொறேன். ராமனுக்குத் தன் தாயிடத் திற்போலவே உன்னிடத்திலும் பக்தியோடுகூடிய மனக் கருத்து இல்லாதிருக்குமாயின், பாபநிச்சயமுள்ள உன் னைத்துறக்க எனக்கு விருப்பம் உண்டாகாதிராது. உன் னைத் துறக்கவே நிச்சயிப்பேன். அவனுக்கு உன்னிடத் திலுள்ள கௌரவத்தைப் பற்றியே, ஏது கோபிப்பாரே னென்று உன்னைத் துறக்க முடியாதிருக்கின்றனன். பாப த்திலேயே கண்ணுடையவளே! ஸாதுக்களின் நடத்தை யினின்று கழுவினவளே! எமது பூர்வர்கள் அனைவரும் நன்கு நிந்திக்கும்படியான இந்தத் துர்ப்புத்தி உனக்கு எப் படி உண்டாயிற்றோ? எமது இக்குலத்தில் பெரியவனு க்கு ராஜ்யாபிஷேகஞ் செய்வதே வழக்கமல்லவா? மற்றை உடன் பிறந்தவர்கள் எல்லோரும் அம்மூத்தவனது மன த்தை அனுஸரிப்பதில் மிக்க ஊக்கத்துடன் நடப்பார் கள். க்ரூரஸ்வபாவமுடையவளே! நீ ராஜ்யதர்மத்தைப் பாராட்டுபவளல்லையென்றும், ராஜாக்களுக்கு அனுதியாக த்தவறமுடியாமல் நடந்துவரும் ஸதாசாரம் இன்னதென் றுதெரியாதவளென்றும் எனக்குத் தோற்றுகின்றது. ரா ஜாக்களின்நடத்தையைப்பார்க்கையில், எப்பொழுதும் மூ த்தவனே ராஜ்யாபிஷேகம்பெறுகிறானல்லவா? இந்த ஆ சாரம் அரசர்கள் அனைவர்க்கும் ஸமானமேயன்றி அதி லும் ஸதாசாரத்தில் நிலைநின்ற இக்ஷ்வாகுவம்சத்து ரா ஜாக்களுக்கு அது மேலும் விசேஷித்திருப்பதல்லவா? அவர்கள் தர்மத்தையே தமக்கு ரக்ஷையாகக் கொண்டி ருப்பவர். குலபரம்பரையாக வந்த நடத்தையை எப்போ தும் கைவிடாமல் அனுஷ்டித்து வருபவர். அப்படிப்பட் டவர்களுக்கு 'எம்மைப்போன்ற ஸதாசாரமுடையோர்

இல்லை'னன்று கமதுசரித்ரத்தைப்பற்றிய கர்வம், நீ வந்து சேர்ந்தபின்பு தொலைந்துவிட்டதே. எமது வம்சத்திலுள்ளவரேயன்று, உன் பிறந்தகத்து ராஜாக்களும் மூத்தவனுக்கே பட்டாபிஷேகம் செய்வது வழக்கம். மேலும், அவர்கள் மிகுந்த மேன்மையுற்றவர்கள. இப்படிப்பட்ட வம்சத்திற் பிறந்தும் எதனல்இப்படிப்பட்டமதிகேடு உனக்கு நேரிட்டதோ? நீ பாபஞ்செய்ய நிச்சயங்கொண்டவள். ஆகையால் உன் விருப்பத்தைமாத்ரம் நான் நடத்தமாட்டேன். நீ என் ப்ராணன்களுக்கு முடிவைக் கொடுக்கும் படியான வ்யஸனத்தை ஆரம்பித்தனை. உனனிஷ்டத்தை நிறைவேற்றுமைமாத்ரமே அன்று, உனக்குக் கஷ்டத்தையுஞ் செய்கிறேன். இதோ நான் உனக்கு அப்ரியஞ்செய்வதற்காக இப்பொழுதே சென்று, பாபமற்றவனும் பந்துஜனங்களுக்கு ப்ரியனுமாகிய ராமனை அரண்யத்தினின்றும் திருப்பி அழைத்துக்கொண்டு வரப்போகிறேன் இவ்வளவே அனறு, ராமனை அங்ஙனம் திருப்பி அழைத்துவருது, தேஜஸ்ஸுடன ப்ரகாசிக்கின்ற அவனுக்கு மிகவும் நிலைன்ற மனத்துடன் தாஸனயிருக்கப் போகிறேன்' எனறனன. மஹானுபாவனகிய பரதன் இப்படி அக்கைகேயியை மனவருத்தம் விளக்கவல்ல வார்த்தைகளால் பீடித்து, மீளவும் சோகம் மிகுந்து மேலழப்பெற்றுப் பர்வதகுஹையிலுள்ள ஸிம்ஹம்போல் பெருத்த கண்டத்வனியுடன் கதறலிட்டனன். எழுபத்துமூன்றுவது ஸர்க்கம முற்றிற்று.

பரதன் கோபத்தின் மிகுதியால் கைகேயியைப் பருஷமாகத் தூறுதலும், சோகத்தில் மூர்சசித்தலும்.

பரதன் அங்ஙனந் தனது தாயை ம்ருதுவாக நிந்தித்து, மீளவும் மிகுந்த ரோஷமுற்றவனாகி அவளை நோக்கி 'க்ரூரஸ்வபாவமுடையவளே! துர்கடத்தையுள்ளவளே! தர்மத்தைத்துறந்தனையே! நீ உன். தாயைப் போலவே ராஜ்யத்தினின்றுந் தொலைந்துபோவாயாக. உனக்கு நான் செத்தாற்போலவே யாகைபால் என்னைச் செத்தவனாக நினைத்து அழுதுகொண்டிருப்பாயாக நீ மஹாராஜருக்கு மரணத்தையும் ராமனுக்கு வனவாஸத்தையும் ஓரேகாலத்தில் விளைத்தனையே! அந்த மன்னவராவது பரமதார்மிகனாகிய ராமனாவது உனது குணத்தையோ கடத்தை முதலியவற்றையோ எதைத் தூஷித்தனர்? கைகேயி! இக்குலத்தை நாசஞ்செய்தாயாகையால் உனக்கு இப்பொழுது ப்ரூணஹத்தியை செய்தவளவு பாபம் சேரிட்டதே! ஆகையால் நீ நரகத்திற்கே போவாயாக. உனபர்த்தா போன லோகத்திற்நே நீ போகமாடடாய். பயங்கரமான செய்கையால் கொடிகட்டி ராமனை அரண்யத்திற்கு அனுப்பும்படியான பாபத்தைச்செய்து தீர்த்து விட்டனை. இதனால் ஸமஸ்த லோகங்களுக்கும் ப்ரியனாகிய அந்தராமனைத் துரத்தி எனக்கு அவனுடைய ஸம்பத்தமில்லாமற்செயது பயத்தையே விளைத்தாயன்றி ராஜ்யத்துக்கு நன்மைவிளைத்தவளல்லை. உன்னைப்பற்றி என் தந்தை மரணம் அடைகதார். ராமனும் அரண்யஞ் சென்றனன். ஆகையால 'தாய்மூலமாகத் தனதனையைக்கொன்று அண்ணனை அடித்தோரட்டினன்'என்னும் அபகீர்த்தி இந்தப் ராணிலோகத்தில் எங்கும் எனக்கு சேரிட்டதே! தாய் ரூபமாக எனக்கு சேரிட்டசத்ருவே! கொடுந்தன்மையுடையவ

ளே! ராஜ்யத்தில் ஆசை கொண்டவளே! பதிவைக்கொ
ன்ற பாபிஷ்டே! என்னோடு பேசாதே. கௌஸல்யையும்
ஸுமித்ரையும் மற்றுமுள்ள என் தாய்மார்களும், நீவம்ச
த்தைப்பாழாக்க முயன்றமையால் மிக்க மனவருத்த முற்
றிருக்கின்றனர். என்றும் ஸத்யத்தில் மனவுக்கமுடைய
தார்மிகனானராமனை அரண்யத்திற்கு அனுப்பினை. அந்த
த்துஷ்கத்திலால் என்தந்தையைப் பரலோகத்திற்கு அனு
ப்பிவிட்டனை. ஆகையால் இப்படிப்பட்ட நீ, தர்மத்தை
யே முக்யமாகக்கொண்ட மன்னவரும் சிறந்த புத்தியுடை
யருமாகி விளங்குங் கேகயருக்குப் பிறந்தவள்லை. அந்
தத் தந்தையின் குலத்தை த்வம்ஸஞ் செய்யும்பொருட்டு
அதில் பிறந்த ராக்ஷஸியே ஆவாய. உனக்குப் பாபகார்
யமே முக்யம் அப்படிப்பட்ட பாபம் நீ செய்ததற்கு அத
ன் பலம் எனக்கும் ஸம்பவித்துத் தந்தையை இழந்து
அண்ணன் தம்பிகளும் கைவிடப்பெற்று ஸமஸ்த லோக
ங்களுக்கும் அப்ரியனும் ஆயினன். நீ பாபத்திற்கே முய
னறவள்; ஆகையால் நரகத்திற்கே போக வேண்டிய
வள். தர்மிஷ்டையான கௌஸல்யைக்குப் புத்ரவியோ
கத்தை விளைவித்த நீ எந்த நரகத்திற்குப் போவாயோ?
ஸ்ருஷ்டித்திருக்கிற நரகம் உனக்குப் போதாதே! கொடி
யவளே! கௌஸல்யையின புதல்வனாகிய ராமன் பரிசுத்த
னென்றும் பந்துக்களெல்லோர்க்கும் கதியென்றும் மூத்
தவனாகையால் எமக்குத் தந்தைபோன்றவனென்றும் அ
றியாயா என்? இப்படிப்பட்ட ராமனைப் பந்துகாதுக
னெனறே நினைத்தனை![1] புத்ரன் தாயினுடைய முகம
கண்டம் முதலிய அங்கத்தினனறும் கண் மூக்குமுதலிய
உபாங்கத்தினின்றும ஹ்ருதயத்தினின்றும் பிறக்கிறான்.

---

1 இதற்கு 'அங்மாதுங்மாத ஸம்ஹவஸி ஹ்ருதயாதுயிஜாயஸே' இது முதலான ஸ்ருதி ப்ரமாணம்.

ஆகையால் அவன் தாய்க்கு மற்றை யெல்லோரைக் காட்டிலும் மிகுந்த அன்பிற்கிடமாவான். பந்துக்கள் கேவலம் அன்பிற்கிடமாவார்களேயன்றிப் புத்ரனைப்போல் மிகுந்த அன்பிற்கிடமாகமாட்டார்கள். அங்ஙனம் அவன் ப்ரீதிக்கிடமாயிருப்பதனால்தாய்க்குப் பந்துவைப் போன்றவனல்லன், முன்னம் ஒருகாலத்தில் ஸகல தர்மங்களையும் அறிந்து தேவர்களுங் கௌரவிக்கும்படியான மேன்மையுடைய காமதேனு, பாரத்தைச் சுமந்து வருந்தி மூர்ச்சை அடைந்தவைகளும் தன் வம்சத்தில் பிறந்தமையால் தனக்குப் பிள்ளைகளுமாகிய இரண்டு எருதுகளைக் கண்டது. அக்காமதேனு அன்று மத்யாஹ்னம் வரையில் பாரஞ்சுமந்ததனல் இளைப்புற்றிருக்கிற அப்புத்ரர்களைப் பூமியில் கண்டு அவைகளின் துக்கத்தினல் தானும் துயரம் அடைந்து கண்களிரண்டிலும் நீர் தளும்பப் பெற்றுக் கதறவிட்டது. அப்பொழுது அந்தக் காமதேனுவுக்குக்கீழ்ப்புறத்தில் மஹானுபாவனாகிய தேவேந்த்ரன் போய்க்கொண்டிருக்கையில், அதன் கண்ணீர்க்களின் சிறு துளிகள் கறுமணங் கமழ்ந்துகொண்டு அந்த இந்த்ரனது சரீரத்தின்மேல் வீழ்ந்தன. இந்த்ரனும் கம்மென்னும் வாஸனையுடன்தன்மேல்விழுந்த அந்தக் கண்ணீர்களைக்கண்டு சிறப்புற்ற காமதேனு ரோதனஞ் செய்கிறதென்று நினைத்தனன். இந்த்ரன் பிறகு காற்புறத்திலுங் கண்விட்டுப் பார்க்கையில், ஆகாயத்தில் தீனையாகிலும் மனவருத்தத்துடன் அழுதுகொண்டிருக்கிற அந்தக் காமதேனு புலப்பட்டது. வஜ்ராயுதந்தரித்த அவ்விந்த்ரன், மிகுந்த புகழுடைய காமதேனு சோகத்தினல் பரிதபிப்பது கண்டு 'யாது வருத்தமோ' என்று பயந்து அஞ்சலியுடன் அருகிற் சென்று 'காமதேனுவே' எம்மைச்சேர்ந்தவர்களில் ஒருவராலும் உனக்குப் பெரும்

பயம் ஒன்றும் உண்டாகிறதில்லையல்லவா? ஆனால் நீ இங்ஙனஞ் சோகிப்பதற்குக் காரணம் யாது? நீ யாவர்க்கும் மேன்மையை விரும்புந் தன்மையள். உனக்கு யாவர் கெடுதிசெய்தனர்? சொல்வாய்' என்றனன். புத்திமானுகிய அந்த வானவாதிபதி இங்ஙனம் விளவுகையில், காமதேனுவும் பேசவல்லவனுகிய இந்த்ரனைப் பார்த்துக் கம்பீரமாக 'ஓ தேவராஜனே! இப்படிப்பட்ட அமங்கலம் எப்போதும் உண்டாகாதிருக்குமாக. உன்னைச் சேர்ந்தவர்கள் ஒருவராலும் எனக்குப் பயம் ஒன்றும் இல்லை. தேவேந்த்ரனே! பயிர் செய்வானொருவன் பிடித்துப் பீடிக்கையில் இளைப்புற்று வருந்திஸௌர்யகிரணங்கள்பட்டுப் பரிதபிக்கவும் பெற்று இப்படி ஸங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற என் பிள்ளைகளான் எருதுகளைப் பார்த்துச் சோகிக்கிறேனன்றி மற்றொன்றும் இல்லை. இவர்கள் என் தேஹத்தினின்றும் பிறந்தவர்களல்லவா? ஆகையால் இங்ஙனம் பலவை இழுக்கமுடியாமல் பீடிக்கப்பட்டு வருந்துவது கண்டு சோகிக்கின்றனன். இது ஓர் ஆச்சர்யம் அன்று. உலகத்தில் எங்காயினும் பிள்ளைக்கொப்பான அனபன எவனும் அகப்படான்' என்றது. காமதேனு, ப்ரபஞ்சம் முழுவதும் பரம்பும்படி அனேகமாயிரம் பிள்ளைகளைப் பெற்றதாயினும் இரண்டு பிள்ளைகள் கஷ்டப்படுகிறார்களென்று அழுவது கண்டு, இந்த்ரன் புத்ரனைக் காட்டிலும் மேற்பட்டது மற்றொன்றும் இல்லையென்று நினைத்தனன். ஒப்பில்லாத நனைடத்தையுடையதும் மிகுந்த ஒளி விளங்கப் பெற்றதும் அளவில்லாத கற்குணங்கள் அமைந்ததும் நினைத்தவுடனே வேண்டியுருவற்றைப் புடைகக வல்லதுமாகிய காமதேனு ஸ்த்ரீபுருஷர்களின் இயற்கையாகிய ஸாரதவ்யாபாரபரம்பரையால் லோக ஸங்க்ரஹத்தை விரும்பிப் பலவாயிரம் பிள்ளைகளைப் பெ

ற்றதாயினும் இரண்டு பிள்ளைகளின் கஷ்டத்தைதப் பார்த்துச் சோகிக்கின்றதே! இனி ராமனெருவனையே பிள்ளையாகப் பெற்ற கௌஸல்யை இவ்வொரு புதல்வனையும் விட்டுப் பிரிந்து சோகிப்பாளென்பது சொல்ல வேண்டுமோ? அவள் போயும் வந்தும் ஒரே பிள்ளையைப் பெற்றவள். மேலும் பதிவ்ரதை. அவளைப் பிள்ளையைத் துறக்கும்படி செய்தனை. ஆகையால் நீ இவ்வுலகத்தில் மாத்ரமேயன்றிச் செத்துப் பரலோகம் போனபொழுதும் என்றும் துக்கத்தையே அனுபவிப்பாயாக. கான் எனது அண்ணனாகிய ராமனையும் என் தந்தையையும் பரிபூர்ணமாகப் பூஜித்து மிகுந்த கீர்த்தியை விளைவித்துக்கொள்கின்றனன். பூஜிக்கும் விதஞ் சொல்லுகிறேன்; கேள். கௌஸல்யையின் குமாரனும் மிகுந்த பலமுடையோனுமாகிய ராமனை அழைத்துக் கொண்டு வந்து அவனுக்குப் பதிலாக கானே முனிகள் வஸிக்கும் அரண்யத்திற்குப் போகின்றனன். பாபக் கருத்துடையவளே! பரவீ! இந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்கள் கண்டத்தில் கண்ணீர் தடைபடப் பெற்று என்னைப் பார்த்துக் கொண்டிருக்கையில் நீ செய்ய முயன்ற இப்பாதகத்தைக் கான் நிறைவேற்ற வல்லனல்லேன். கான் அரண்யத்திற்கே போவேன். அப்படிப்பட்ட மஹா பாபத்தைச் செய்த நீ கெருப்பிலாவது விழுவாய். அல்லது கீயே தண்டகாரண்யமாவது செல்வாய். அல்லது கழுத்துக்கு உச்சுளுக்காவது பொகட்டுக்கொள்வாய். உனக்கு இவை தவிர மற்றொரு கதி இல்லை. கானும் ஸத்யபராக்ரமனாகிய ராமன் ராஜ்யம் பெறுகையில், அதனல் என் பாபத்தைப் போக்கி மனக்கருத்தீடேறப் பெறுகிறேன்' என்றனன். இப்படி பரதன் மிகுந்த கோபங் கொண்டு ஸர்ப்பம் போல் பெருமூச்செறிந்து, அரண்யத்தில் வேடர்கள் ஈட்டி

மாவிவட்டி இலைகளால் அடியுண்டு பள்ளத்தில் விழும் யானை போல் தரையில் விழுந்தனன். பரந்தபனாகிய அந்த ராஜகுமாரன் கோபத்தினால் கண்கள் சிவக்கவும் ஆடை அவிழ்ந்து விழவும் ஆபரணங்கள் சிதறவும்பெற்று, உத்ஸவம் முடிந்தவுடன் இந்த்ரத்வஜம் கீழ் சாய்வது போல் கீழே விழுந்தனன். எழுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

{பரத சத்ருக்னர்கள் கௌஸல்யையிடம் போதலும், பரதன் கௌஸல்யையோடு ராமனை அழைத்துக்கொண்டு வருவதாக ப்ரதிஜ்ஞை செய்தலும்.}

பராக்ரமம் பொருந்திய பரதன் வெகுநேரஞ் சென்ற பின்பு ப்ரஜ்ஞை அடைந்து கண்களில் நீர் நிரம்பப் பெற்றவனாகி, வருந்துகின்ற தன்தாயைப் பார்த்து, அதற்கு முன்பே தான் வந்திருப்பது தெரிந்து அவ்விடம் வந்திருக்கிற ஸுமந்த்ரன் முதலிய மந்த்ரிகளிடையில், அவர்கள் அறியும் பொருட்டு மீளவும் அவளை நிந்திக்கத் துடங்கி 'நான் ஒருக்காலும் ராஜ்யத்தை விரும்பவில்லை. அப்படி ராஜ்யத்திற்காகத் தாயுடன் கலந்தாலோசித்ததும் இல்லை. ராஜா என்னபிஷேகத்தைப்பற்றி ஆலோசித்த விஷயமும் எனக்குச் சிறிதும் தெரியாது. நான் சத்ருக்னனோடுகூடி வெகு தூர தேசத்தில் இருந்தது உங்களுக்குந் தெரியும் அல்லவா? மஹானுபாவனாகிய ராமனுக்கு வனவாஸம் ஏற்படுத்தின விஷயமும் எனக்குத் தெரியாது. அன்றியே லக்ஷ்மணனுக்கும் ஸீதைக்கும் வனவாஸம் எப்படி நேர்ந்ததோ, அதையும் நான் அறிவேன்' என்றனன். அங்ஙனம் மஹானுபாவனாகிய

பரதன் கூக்குரலிடும் சப்தத்தைக் கேட்டுக் கௌஸல்யை ஸுமித்ரையைப் பார்த்து 'கொடுந்தொழிலுக்கு மூயன்ற கைகேயியின் புதல்வன் பரதன் வந்திருக்கின்றனன். [1] அவன் வெகுதூரஞ் சென்றறியவல்ல மதியுடையவன். ஆகையால் அவனைப் பார்க்க விரும்புகின்றேன்' என்றனள். துக்கத்திலுல் ஒளி மாறி அழுக்கடைந்து இளைத்திருக்கிற அந்தக் கௌஸல்யை ஸுமித்ரையுடன் இந்த வார்த்தையைச் சொல்லி, உடனே கிடுகிடுவென்று நடுங்கி ப்ரஜ்ஞையற்றுப் பரதனிருக்குமிடத்திற்குப் போகப புறப்பட்டனள். அப்பொழுது ராமனது தம்பியாகிய பரதனும் சத்ருக்னனோடுகூடக் கௌஸல்யையிருக்குங் க்ருஹத்திற்குப் போயினன். பிறகு பரத சத்ருக்னர்கள், துக்கத்திலுல வருந்தித் தரையில் வீழ்ந்தது ப்ரஜ்ஞையினறி அழுதுகொண்டிருப்பவளும் மிகுந்த மேன்மையுடையவளும கம்பீரமனமுடையவளுமாகிய கௌஸல்யையின் அருகிற் சென்று அவளைப்பார்த்து மனவருத்தமுற்றுக கதறிக்கொண்டே இருவரும் அவளைக் கட்டிக்கொண்டனர். அப்பொழுது (கௌஸல்யை) மிகவுந் துயரம் அடைந்து பரதனைப் பார்த்து 'ராஜ்யத்தின் பொருட்டு ஆசைபடட்டுக்கொணடிருக்கிற உனக்கு இதோ அகண்டகமான ராஜ்யம் கிடைத்தது. ஐயோ! கைகேயி செய்த கொடுஞ் செய்கையால் த்வரையில் உனக்கு ராஜ்யம் ப்ராப்தமாயிற்று. கைகேயியின கார்யம் இது. க்ரூர கார்யங் களில்கண்வைத்தகைகேயி என் புதல்வனை மராவுரி உடுத்துவனத்தில் குடியிருக்கும்படிக்குச் செய்தனளே! அங்ஙனஞ் செய்ததனால் அவளுக்கு லாபம் என்? ராமனை அ

---

1 இதற்கு 'ஜீவஹாரிணம்' என்று மூலம். இதனால பரதனுககு ராமனைத் துரதிஷ்டமன்றென்று கௌஸலையைக்குத் தெரியுமென்று தெரிகின்றது.

ரண்யத்திற்கு அனுப்பாமலே ராஜ்யம் பெறக்கூடாதா? இனிச் சீக்ரமாகவே ஸர்வாதிகாரமுள்ள கைகேயி, மிகுந்த புகழுடையவனும் ஸுவர்ணம்போல் பளபளவென்று விளங்கும் சரீரமுடையவனுமாகிய என் புதல்வன் ராமன் எங்கே இருக்கினறானோ, அவ்விடத்திற்கு என்னையும் அனுப்பிவிடுவாள. அவ்வளவென்? நான் ஸுமித்ரையைக்கூடவே அழைத்துக்கொண்டு ஸுகமாகத்[1] தசரதனது அக்னிஹோத்ரத்தையும் அவரது சரீரத்தையும் எடுத்துக்கொண்டு ராமனிருக்குமிடத்திற்குப போகினறனன். புருஷச்ரேஷ்டனுகிய என புதல்வன ராமன எங்குத் தவஞ்செய்துகொண்டிருக்கிறானோ, அவ்விடத்திற்கு நீயாவது என்னைகொண்டுபோய விட்டுவரத்தகும் 'உனனைக்கொண்டு போய் விட எனக்கு யாது சக்தி' எனபாயோ? அப்படியன்று மிகுந்த விஸ்தாரமுடையதும் தனதான்யங்கள் நிறைந்ததும் ரதகஜ துரகபதாதிகள் நிரம்பியதுமாகிய இந்த ராஜ்யத்தை யெல்லாம உனக்குக கைகேயி கொடுப்பித்தனள் அனறோ?' என்றனள். இது முதலிய க்ரூர வாக்யங்கள் பலவுஞ் சொல்லிக் கௌஸல்யையை தன்னை வையவும, ஒரு பாபத்தையும் அறியாத பரதனை முன்னமே தந்தையின் மரணம் முதலியவற்றால் வருந்தியிருப்பவனைகையால் புண்ணின்மேல் ஊசியால் குத்தப்பெற்றவன்போல் அவ்வார்த்தைகளைக் கேட்டு மிக்க மனவருத்தமுற்றனன். அப்பொழுது மனவு கொதிக்கப பெற்ற

---

1 அகனி ஹ்யேஷ்ட பாரியககு அதீனமாகையாலும், தசரதன் பரதன ஸம்ஸ்காரஞ் செயய வேண்டாமென்று நிஷ்கர்ஷித்ததனமையாலும் அவ்வகனியைத தான் எடுத்துக் கொண்டு போவதாகக் கௌஸலையை சொலலினள். இதனல—கௌஸலையை பரதனுககுக் கைகேயி செய்த பாப ஸம்பநதத்தினல் ராஜஸம்ஸகாரத்திற்கு அதிகாரியலலையென்று ஸூசிப்பித்தாளென்று தெரிகின்றது.

அப்பரதன் கௌஸல்யையின் பாதங்களின் மேல் விழுந்து மிகவும் ப்ரஜ்ஞை தப்பியிருந்து பலவாறுகப் புலம்பி அனந்தரம் தெளிவு பெற்றனன். பரதன் அப்பொழுது பெரிய பரிதாபத்துடன் புலம்புகின்ற கௌஸல்யையைப் பார்த்துக் ைகைகளைக் குவித்து ' அம்மா ! ராமனிடத்தில் எனக்கு மிகவும் திடமான பக்தி உண்டென்று உனக்குத் தெரியுமே. தெரிந்தும், இவ்வபிஷேகாதிகளை எவ்வளவும் அறியாமல் எந்தப பாபத்தையுஞ் செய்யாமல் இருக்கிற எனனை எதுக்காக இங்ஙனம் நிருதிக்கின்றனை? எவனராமன அரண்யம் போக ஸம்மதித்தாயே, அவன் குருமுகமாகச் சாஸ்த்ரங்களை அனுஸரித்துக் கற்றபுத்தி ஶாலிக்காலும் நேரப்பெறுதிருப்பானாக. எவன் ராமன் அரண்யம் போக ஸம்மதித்தாயே, அவன், மிகவும் பாபிஷ்டர்களான ஹீனஜாதிகளுக்கு வாழியனை செய்யப் பெறுவானாக. மேலும், ஸூர்யனுக்கு எதிராக நின்று மலமூத்ரங்களை விட்டவனது பாபத்தை அடைவானாக. நித்ரை போகின்ற பசுவைக் காலால் மிதித்த பாபத்தில் போவானாக. எவன் ஸம்மதித்திருக்க ராமன் காட்டிற்குச் சென்றாயே, அவன், வேலைக்காரனைக் கொண்டு பெருங்கார்யமொன்று நிறைவேற்றிக் கொண்டு அவனது ப்ரமத்தை வீண் செய்யும் ப்ரபுவுக்கு நேரும் பாபத்தை அடைவானாக. எவன் ஸம்மதித்திருக்கையில் ராமன் அரண்யஞ் சென்றாயே, அவன், ப்ராஜ்ஞகளைத் தன் பிள்ளைகளைப் போல் பரிபாலனஞ் செய்யும் மன்னவனுக்கு த்ரோ

I இது முதலாகப் பரதன், தன்மேல் கௌஸலையை ஆரோபித்த தோஷத்தைப் பரிஹரிப்பதற்காகச சபதவாக்யங்களைச சொல்லுகின்றனன். இச சபதங்கள பரதன் பேரால சொலலாமல ஸாமான்யமாகச சொன்னபோதிலும் பரதனுக்கே ஸம்பந்திக்கின்றன். மேலும், பரத சபதவ்யாஜத்தால் வாலமீகி தர்மவிசேஷங்களைத் தெரிவிக்கிறாரென்றும தெரிகின்றது.

ஹஞ் செய்பவர்களின் பாபத்தைப் பெறுவானாக. எவன் ஸம்மதித்திருக்கையில் ராமன் அரண்யஞ்சென்றானே, அவனுக்கு, விளக்தவற்றில் ஆறில் ஒருபாகங் கப்பம்வாங்கிக்கொண்டு ப்ரஜைகளை ரக்ஷிபாதிருக்கும் மன்னவனுக்கு நேரும் பாபம் ஸம்பவிக்குமாக. எவன் ஸம்மதித்திருக்கையில் ராமன் அரண்யஞ் சென்றானே, அவனுக்கு யாசகத்தில் வ்ரதோபவாஸ சீலர்களாகியாகஞ் செய்விக்கும் ப்ராஹ்மணர்களுக்குத் தக்ஷிணை கொடுப்பதாக ப்ரதிஜ்ஞை செய்து பிறகு இல்லை யென்று சொல்பவனுக்கு நேரும் பாபம் நேருமாக. எவன் ஸம்மதித்திருக்கையில் ராமன அரண்யஞ் சென்றானே, அவன், ரத கஜ துரக பதாதிகள் நிறைந்த யுத்த பூமியில் யுத்தஞ் செய்யும் பொழுது வீரதர்மத்தை இழந்து ஓடிப் போகிறவனுக்கு நேரும் பாபத்தை அடைவானாக. எவன் ஸம்மதித்திருக்கையில் ராமன் அரண்யஞ் சென்றானே, அவன் புத்தியில சிறந்த ஆசார்ய பரலோகஸ்தானங்களாகிய ரிஷிஸ்யார்த்தங்களோடு வேதாரத்த சாஸ்த்ரத்தை பத்னத்துடன் உபதேசிக்கையில. அதை மறந்தவனுக்கு ஸம்பவிக்கும் பாபத்தை அடைவானாக. எவனுடைய ஸம்மதியின்படிக்கு ராமன அரண்யஞ் சென்றானே, அவனுக்கு, அழகிய புஜங்களுந் தோள்களு முடையவனும் ஸூர்யனையும் சந்த்ரனையும் நிகர்த்த ஒளியுடையவனுமாகி ராஜ்யாபிஷேகம் பெற்றுச் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் ராமனைக் கண்டு களிக்கும் பாக்யம் இல்லாதிருக்குமாக. எவனுடைய ஸம்மதியைக் கொண்டு ராமன் அரண்யத்திற்குச் சென்றானே, அவன், பாயஸத்தையும் எள்ளும் வெல்லமும் கலந்த பக்ஷியத்தையும் மேஷ மாம்ஸத்தையும் தேவதைகளுக்கும் பித்ருக்களுக்கும் அதிதிகளுக்கும் அழுது செய்யப் பண்ணுமல் வீணாகத் தையின்றிப் பா

க்ஷிப்பவனும், தாய் தந்தை முதலிய பெரியோர்களைக் கௌரவிக்காமல் அவமதிப்பவனுமாவானாக. எவன் லம்மதித்திருக்கையில் ராமன காண்யஞ் சென்றானே, அவன் பசுவைக் காலால் உதைத்தவனும். தானுகவே குருவை நிந்தித்தவனும், ஸ்னேஹிதனுகத மிகுந்த அபகாரம் நினைத்தவனும் ஆவானாக. எவனுடைய லம்மதியின் மேல் ராமன் காண்யத சென்றானே, அவன். தன் னேதி ஒரு ஸ்னேஹிதன் நம்பிகையால் ரஹஸ்யமாக ஏதேனும் ஓர் அபவாதத்தைச் சொல்ல, அதை வெளி யிட்டவனுவானாக. எவன் லம்மதித்திருக்கையில் ரா மன் காண்யம் போனானே, அவன பரோபகாரஞ் செய் யாதவனும், பிறர் செய்த உபகாரத்தை மறந்தவனும், ஸத் புருஷர்களால் துறக்கப்பட்டவனும், உச்சுலுக்கு முதலியவற்றால் ப்ராணனகளை விட்டு துர்மரணம் அடை நதவனும், பாபத்தைச் செய்து ப்ராயச்சித்தத்தையாவ தது செய்து கொள்ளாமல் வெட்கமின்றித் திரிபவனுமா கி உலகத்தில் அனைவரும் த்வேஷிக்குந தன்மையுடைய வனும் ஆவானாக. எவன் ராமன் காண்யம் போக லம்மதித்திருந்தானே, அவன தன் வீட்டில் பிள்ளை களும பார்யைகளும் வேலைக்காரர்களும் சுற்றியிருந்து பா ர்த்துக் கொண்டிருக்கையில், அவர்களுக்குச் சிறிதும் இடாமல் தான் மாத்ரம அறுசுவை அமைந்த மேலான ஆஹாரத்தை உட்கொள்பவனுக்கு லம்பவிக்கும் பாபத் தை அடைவானாக. எவன் ராமன் காண்யம் போ க லம்மதித்திருந்தானே, அவன தகுந்த குலத்திற் பிற நத கல்ல பார்யையைப் பெறுமல் அக்னிஹோத்ரம் முத லிய நாம கார்யங்களைச் செய்யாமல் லந்தானங்கூட உண்டாக நேராமல் இங்ஙனம் இஹலோகஸுகத்தினி னறும் பரலோக ஸுகத்தினின்றும் கழுவி மரணம் அ

டைவாணுக. எவன் ராமன் அரண்யம் போக ஸம்ம திக்தாலே, அவன் பூர்ணயுஷ்யம் பெரூமல் மனவருத்த மூற்றுத் தன் பார்யையிடத்தில் ஸந்தானத்தைக் காணு தோராதிருப்பாணுக. எவன் ராமன் அரண்யம் போக ஸம்ம திக்தாலே, அவனுக்கு, மன்னவன் மடந்தை இளம் பி ள்ளை கிழவன் ஆகிய இவர்களை அடிப்பினும், வெலக்கார னைப் போஷியாமல் கைவிடினும் எதப் பாபம் ஸம்பவிக் குமோ, அந்தப் பாபம் ஸம்பவிக்குமாக. என ராமன அர ண்யனுசெல்ல ஸம்மதிக்தாலே, அவன் எப்பொழுதும் அ ரக்கு மத்ஸ்யம் மாம்ஸம் லோஹம் விஷம் இவை முதலிய நிஷித்தவஸ்துக்களை விக்ரயஞ்செய்துகுடும்பபோஷணஞ் செய்வாணுக. என் ராமன் அரண்யம் போக ஸம்மதிக் தாலே; அவன், சத்ருப்க்ஷத்திற்குப் பயங்கரமான யுத் தம் ஸமீபித்து வருகையில் பயந்து பின்வாங்கி ஓடிச்செல் கையில் அடிகளப் படிவாணுக. என ராமன் அரண்யம் போக ஸம்மதித்தாலே, அவன் கபாலத்தைத் தரித்து மாவரி உடித்துப் பித்தம் பிடித்தவன்போல் இப்பூமி முழுவதும் பிச்சையெடித்துத் திரிவாணுக. என ராமன் அரண்யம்போக ஸமமதித்தாலே, அவன எப் பொழுதும் காமக்ரோதங்களால் வருத்தப்பட்டு மத்யபா னஞ் செய்துகொண்டு ஸ்த்ரீலோலனாகிச் சூதுசதுரங் கங்களில் மனவுக்கமுற்றிருப்பாணுக. என் ராமன அரண்யம்போக ஸம்மதித்தாலே, அவன் தர்மத்தில் மனஞ்செல்லப் பெரூமல் அதர்மத்ததையே செய்துகொண் டிருப்பாணுக; மேலும் அவன் ஸத்பாத்ரங்களிற் சிறிதும் கொடுக்காமல் அஸத்பாத்ரங்களுக்கே தானஞ்செய்வா ணுக. என ராமன் அரண்யம்போக ஸம்மதித்தா லே, அவன் ஆயிரமாயிரமாக ஸம்பாதித்த பலவகைத் தனங்களையும் திருடர் திருடிக்கொண்டு போவார்களாக.

எவன் ராமன் அரண்யம் போக ஸம்மதித்தாளே, அவனுக்கு ஸூர்யோதயத்திலும் ஸூர்யாஸ்தமயத்திலும் நித்ரைசெய்பவனுக்கு நேரும் பாபம் ஸம்பவிக்குமாக. எவன் ராமன் அரண்யம்போக ஸம்மதித்தாளே, அவன், வீட்டின்மேல் நெருப்பை வைத்தவனுக்கும் குருபார்யையிடம போனவனுக்கும் மித்ரத்ரோஹஞ் செய்தவனுக்கும் உள்ள பாபங்களைப் பெறுவாளாக. எவன் ராமன் அரண்யம்போக ஸம்மதித்தாளே, அவன் தேவதைகளுக்கும் பித்ருக்களுக்கும் தாய் தந்தைகளுக்கும் சுச்ரூஷை செய்யாதவனுக்கு நேரும் பாபத்தை அடைவாளாக. எவன் ராமன அரண்யம்போக ஸம்மதித்தாளே, அவன சீக்ரமாக இப்பொழுதே ஸத்புருஷக்குழாங்களால துறக்கப்படுவாளாக; ஸத்புருஷர்கள் செய்யும் புகழ்ச்சிக்குப் பாத்ரமாகாதிருப்பாளாக; ஸத்புருஷர்கள் செய்யுங் கர்மங்களை இழந்திருப்பாளாக. எவன, முழுத்தாள் வரையில் நீண்ட பாஹுதண்டங்களையுடையவனும் அகன்றழகிய மார்பமைந்தவனுமாகிய ராமன அரண்யம் போக ஸம்மதித்தாளே, அவன் பலபுதலவர்களைப்பெற்று, தரித்ரனாகி ஜ்வரம் முதலிய ரோகங்களும் உண்டாகப்பெற்று எப்பொழுதும் மனவருத்தமுற்றிருப்பாளாக. எவன் ராமன அரண்யம்போக ஸம்மதித்தாளே, அவன, உயாகத ஆஸனத்தின்மேல் வீற்றிருக்கிறதன்னைக், கண்களை மேலெடுத்துப்பார்த்தும் புகழ்ந்து தீனர்களாகி யாசிப்பவர்களின ஆசையை வீண் செய்வாளாக. எவன் ராமன் அரண்யம்போக ஸம்மதித்தாளே, அவன் என்றும் அதர்ம ஸ்வபாவனும் மனஇரக்கமற்றவனும் கபடமுடையவனும் தூய்மையற்றவனும் மன்னவனிடம் பயந்தவனுமாகி வஞ்சனைசெய்து ஜீவித்திருப்பாளாக. எவன ராமன் அரண்யம்போக

ஸம்மதித்தாயே, அவன், பதிவ்ரதையான தன் பார்யை ருதுஸ்னானஞ்செய்து ருதுகாலநியமத்தை அனுஸரித்துத் தன்னை அடுத்திருக்கையில அவளை உல்லங்கனஞ் செய்திருப்பானாக. எவன் ராமன் அரண்யமேபோக ஸம்மதித்தாயே, அவன் தர்மத்தில் ஆஸக்தியை இழந்துழுடனுஷித்தனது தர்மபத்னியைவிட்டுப பரஸ்த்ரீகமனஞ் செய்வானாக. எவன ராமன அரண்யம்போக ஸம்மதித்தாயே, அவன் ஸ்நானத்தை இழந்த பாஹ்மணனுக்குச் செய்ய நிச்சயித்த பூஜையைக் கெடுத்தவனாவானாக; பின்னும், ஏனறு பத்துத் தினங்களுஞ் செல்லாத இளங்கனறுடைய பசுவைப பால கறபபானாக. எவன் ராமன் அரண்யம்போக ஸம்மதித்தாயே, அவன, அவை வருங் குடிக்கத் தகுந்த ஜலத்தைக் கலக்கிப் பாழ்செய்தால், எதப் பாபமோ, எவனுக்காவது விஷத்தைக் கொடித்தால் எதப் பாபமோ, அவரிண்டு பாபங்களையும் அடைவானாக. எவன் ராமன் அரண்யம்போக ஸம்மதித்தாயே, அவன, இதரியங்கள் கெட்டு பாஹ்மணனுக்குச் செய்ய நிச்சயித்த பூஜையைக் கெடுத்தவனாவானாக; பின்னும், ஏனறு பத்துத் தினங்களுஞ் செல்லாத இளங்கனறுடைய பசுவைப பால கறபபானாக. எவன் ராமன் அரண்யம்போக ஸம்மதித்தாயே, அவன தன் வீட்டில் குடிநீர் இருப்பினும் ஜலங்குடிக்க விரும்பினவனுக்கு அதைக் கொடாமல மோசஞ்செய்பவனுடைய பாபத்தில் போவானாக. எவன ராமன அரண்யம் போக ஸம்மதித்தாயே, அவன இருவர் விவாதஞ்செய்துகொண்டிருக்கையில, அவர்களில் ஒருவனிடத்தில் ஸ்னேஹத்தினால் ஜயோபாயமாக தெரிந்தும் அதைச்சொல்லாமல் வெறுமனே பார்த்துக்கொண் டிருப்பவனுக்கு கெரும் பாபத்தை அடைவானாக என்றனன். ராஜகுமாரனுகிய அந்த ஸ்ரீராகவன், பர்த்தாவை இழந்து புத்ரனையும் விட்டுப் பிரிந்திருக்கிற கௌஸல்யைக்குத் தன்னிடத்தில்

கம்பிக்கை உண்டாகும்பொருட்டு இங்ஙனஞ் சொல்லிக் கொண்டே துக்கத்தினால் வருந்திப் பூமியில்விழுந்தனன். கௌஸல்லை அங்ஙனம் செவிகொடுத்துக் கேட்கமுடியாத சபதங்களைச் செய்து பரிதபித்து மூர்ச்சித்துக் கிடக்கிற பரதனைப்பார்த்து 'பிள்ளாய்! நீ இங்ஙனஞ் சபதஞ்செய்யக்கேட்டு என் மனவருத்தம் மேன்மேலும் வளர்ந்துவருகின்றது.[1] என் ப்ராணன்களும் வருந்துகின்றன. என்னப்பா! பாக்யவசத்தினால உன்மனது பெரியோரினை அனுவர்த்திக்கையாகிற தர்மத்தினின்றும் தவறுதிருக்கின்றது. என் விஷயத்தில் லக்ஷ்மணனைப்போல் நீயும் ப்ரதிஜ்ஞை தவறுதவறாயிருக்கின்றனை. ஆகையால் ஸத்புருஷர்கள் பெறும் லோகங்களைப பெறுவாயாக' என்று மொழிந்து உடனே பிறகதவனிடத்தில் மிகுந்த ப்ரீதியுடைய அம்மஹாபாஹுவான பரதனை எடுத்துத் துடையினமேல உட்காரவைத்துக் கட்டியணைத்து மிகுந்த மனவருத்தத்துடன் கண்ணீர் பெருகினள். இங்ஙனம் சபதங்களைச் சொல்லிப் புலம்பிப் பரிதபிக்கின்ற அகதமஹாஜபாவனுக்கு மூர்ச்சையாலும் சோகததாலுண்டான ஆயாஸத்தினாலும் மனது மிகவும் கலக்கமுற்றது. அவன் பலவாறுகப் புலம்பி ப்ரஜ்ஞையை இழந்து மதியுமழியப் பெற்றுப் பூமியில் விழுந்து அடிக்கடி பெருமூச்செறிந்து சோகித்துக் கொண்டிருக்கையில், அனறிரவு கடந்து சென்றது. எழுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

---

1 'ப்ராணைரவருணத்ஸீமே' என்று மூலம். ப்ராணன்களைத தடுக்கிறேனென்று பொருள். ராமவியோகத்தினால் போகின்ற ப்ராணன்களைச சபதங்களையிட்டுப் போகவொட்டாமல நிறுத்துகிறே னென்று கருத்து. இங்ஙனம் அர்த்தாந்தரம்.

பரதன் தசரதனுக்கு ஸம்ஸ்காரஞ்செய்தல.

பேச அறிந்தவர்களில் மேன்மையுள்ளவரும் மேலா னவாக்குடையவருமான வஸிஷ்ட மஹர்ஷி இங்ஙனஞ் சோகத்தினால் புலம்புகின்ற கைகேயியின் புதல்வனுகிய பாதனைப்பார்த்து 'ராஜகுமாரனே! நீ மிகுந்த புகழுடை யவன்; ஆகையால் துக்கப்பட்டது போதும். நீ துக்கப் படத் தகாது. உனக்கு மங்கலம் உண்டாகுக. தசரதம ஹாராஜன் ஸ்வர்க்கம் அடைவதற்குரிய உத்தரகிரியை களைச்செய்வாயாக. அதுவன்றே இந்த ஸமயம் செய்யத தக்கது' என்றனர். தர்மங்களையறிந்த பாதன வஸிஷ்டர் சொன்ன வாத்தையைக கேட்டு, தைரியத்துடன மனத் தை நிலைநிறுத்திக்கொண்டு தகனத்துக்குச் செய்யவேண் டிய ப்ரேதகார்யங்களையெலலாஞ செய்தனன. தசரத னைத் தைலத்ரோணியினினறும் எடுத்து எண்ணெயைத் துடைப்பதற்காகப் பூமியிலிடடனர். எண்ணெயில் ஊறி யிருப்பதால் பொனவாணமுண்டாகப் பெற்று அவயவங் கள் அழியாமலிருப்பதால் நித்ரை செய்கின்றவனபோ லிருக்கிற அவ்வரசனது சரீரத்தைப் பலவகை ரத்னங் களால் அலங்கரிக்கப்பட்ட மேலான மஞ்சத்தில் விட்டு, பிறகு புத்ரனுகிய பாதன் மிகுந்த மனவருத்தங்கொண்டு 'மன்னவரே! நான் தேசாந்தரஞ் சென்று இவ்விடம் தி ரும்பிவராதிருக்கும் பொழுது, தர்மங்களையுணர்ந்த ராம னையும் மஹாபலனன லக்ஷ்மணனையும் அரண்யத்திற்கு அனுப்பி நீ இப்பொழுது ஸ்வர்க்கத்திறகுப போனது ஏனே? மஹாராஜனே! அனைவர்க்கும் மனக்களிப்பை விளைக்கும்படியான கார்யத்தைச் செய்பவனுகிய ராமனை இழந்து வருந்துகின்ற இந்த ஜனத்தை உதாஸித்துவிட் டு எவ்விடம் போயினை? தகனதையே! நீ அரசனன்றே?

அங்ஙனமிருக்க நீ ஸ்வர்க்கம் போயினையே. ராமனும் அரண்யஞ் சென்றனே. இனி உன் பட்டணத்திற்கு யோகக்ஷேமம் விசாரிப்பவன் யார்வன்? ராஜனே! நீ இல்லாமையால் இப்பூமி விதவையாகி மனக்களிப்பற்றிருக்கின்றது. நீ இல்லாமையால் இந்தகரம் சந்த்ரனில்லாத ராத்ரிபோல் எனக்குத் தோற்றுகின்றது' என்றிவ்வாறு புலம்பினன். அனந்தரம் வஸிஷ்டமாமுனிவர் இங்ஙனம் மனந்தளர்ந்து வருந்துகின்ற பரதனைப் பார்த்து மீளவும் 'நீண்ட புஜங்களுடையவனே! அரசனுக்கு இபபொழுது ப்ரேதகார்யங்கள் எவை செய்யவேண்டுமோ, அவைகளை மனவுக்கத்துடன் பொழுதுபோக்காமல் எமாறுதலின்றி எல்லாவற்றையும் நடத்துவாயாக' என்றனர். பரதனும் 'அப்படியே' என்று வஸிஷ்டர் சொன்ன வார்த்தையைப் பாராடடி ருத்விக்குகளையும் புரோஹிதாகளையும் ஆசார்யர்களையும் 'சீக்ரமாக நடத்துவீர்கள்' என்று த்வரைப் படுத்தினன். ராஜக்ருஹத்தில் உள்ள சவம் இருக்கையால் .வெளியிற்கொண்டு வைக்கப்பட்ட கார்ஹபத்யம் முதலிய அக்னிகளை, ருத்விக்குகளும் புரோஹிதர்களும் விதியினபடிகொண்டுவந்தனர். பிறகு பரிசாரகர்கள் மரண மடைந்த மன்னவனைப் பல்லக்கில் எடுத்துவைத்து மனவருத்தமுற்றுக் கண்ணீரால் தடைபட்ட கண்டங்களுடையவர்களாகித் தூக்கிக்கொண்டு போயினர். அப்பொழுது ஜனங்கள் பொன்னாலும் வெள்ளியாலுஞ் செய்யப்பட்ட புஷ்பங்களையும் பலவித வஸ்த்ரங்களையும் வழியில் இறைத்துக்கொண்டு அரசனுக்கு முன்னே சென்றனர். அப்படியே மற்றுஞ் சிலர் சந்தனப்பொடிகளையும் அகுரு சூர்ணங்களையும் குங்கில்யங்களையும் ஸரலமெனுந் தூபத்ரவ்யத்தையும், பத்மகமெனும் வாஸனையுள்ள காஷ்டசூர்ணத்தையும் தேவதாரு சூர்ணத்தையும் மற்றுமுள்ள பல

வகை வாஸனத்ரவ்யங்களையும் இரண்டுபக்கத்திலும் பிடித்துக்கொண்டு வருகிற பொன்வெள்ளிமயமான குமட்டிகளில் இறைத்துக்கொண்டிருந்தனர். அனந்தரம் அவ்விடம் போனபினபு அரசனுடைய ருத்விக்குகள் ராஜசரீரத்தை அதப்பல்லகினின்றும எடுத்துச் சிதையின் மேல் பிதக்கவிட்டனர். உத்காதாமுதலிய ருத்விக்குகள் பாதனைக் கொண்டு மன்னவனுக்கு அக்னிப்ரதானஞ செய்வித்துப் பித்ருமேதத்திற்குரிய மந்த்ரங்களை ஜபித்தனர். அங்கு ஸாமவேதங்களையறிந்த அத ருத்விக்குகள் சாஸ்த்ரத் தவறுமல் ஸாமகானஞசெய்தனர். அப பொழுது வயது முதிர்ந்த பரிசாரகர்கள் சூழ்ந்துவரப் பெற்று அம்மன்னவனது பார்யைகள் தந்தமகுரியபடி பல்லக்குமீதும் குதிரைமுதலிய வாஹனங்கள்மீதும பட்டணத்தினின்றும் புறப்பட்டு அவ்விடம் வந்து சேரத்தனர். அபபொழுது ருத்விக்குகள் மனவருத்தத்தினுல பரிதபித்துக் கொண்டிருக்கிற கௌஸலையை முதலிய ஸ்த்ரீகளையும் பாதனையுங்கொண்டு, அச்வமேதம் முதலான பலயாகங்கள் செய்த அம்மன்னவனுக்கு அப்ரதக்ஷிணமும் ப்ரதக்ஷிணமும் செய்வித்தனர். அங்கு அந்தத்துக்கஸமயத்தில் ஸ்த்ரீகள் துக்கத்தினுல் பீடிக்கப்பட்டவராகளாகி க்ரௌஞ்சப் பறவைகளைபோல மன இரக்கமுண்டாகும்படி பலவாறுகப் புலம்பிக் கதறுங் கோஷம புலப்பட்டது. அனந்தரம் அந்த மடந்தையர்மணிகள கண்ணீர் பெருக்கிப பரவசாகளாகி அடிக்கடி கதறலிட்டு வாஹனங்களில் ஏறிக்கொண்டு ஸரயூநதியின் கரையில் வந்திழிந்தனர். ராஜபார்யைகளும் மந்த்ரிகளும் புரோஹிதர்களும் பாதனுடனகூடி மன்னவனுக்கு ஜலதர்ப்பணஞ்செய்து பட்டணத்தில் ப்ரவேசித்துக் கண்ணீர் பெருக்கிக் கதறிக்கொண்டே தரையில் படுத்துக்கிட

ந்தனர். இங்ஙனம் மனவருத்தத்துடன் [1] பத்துநாள் ஆசௌசங் கடத்தினர். எழுபத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் பன்னிரண்டாவது நாள ஸ்ராத்தஞ்செய்தலும், பரதசத்ருக்னர்கள் தந்தையை நினைத்துச சோகிக்க வஸிஷ்டாதிகள ஸமாதானப்படுத்தலும்.

அனந்தரம் பத்துத் தினங்கள் கடந்துபோகையில் ராஜபுத்ரனை பரதன் புண்யாஹவாசனம் முதலியவற்றை கடத்தி ஆசௌசத தீர்த்துப் பதினைனாவது நாள் வருகையில் அனைறத்தினஞ் செய்யவேண்டியப்ராத்தகர்மங்களை நிறமேவற்றினன். மேலும், தந்தையின் பரலோகக்ரியையை உத்தேசித்து ப்ராஹ்மணர்களுக்கு ரத்னங்களையும் தனத்தையும் அன்னத்தையும் மேலான வஸ்த்ரங்களையும் ஆட்டு மாடுகளையும் மிகுந்த வெள்ளியையும் நூறு நூறுகப் பசுக்களையும் தாஸதாஸீஜனங்களையும் வாஹனங்களையும் மிகவும் பெரிய வீடுகளையும் அந்த ராஜகுமாரன தானஞ்செய்தனன். பிறகு பதின்மூனாவதுநாள் காலையில் பரதன் அஸ்திஸஞ்சயனத்தின் பொருட்டு தஹனஞ்செய்த இடத்திற்கு வந்து சோகத்தினால் மன

---

1 'ஷோடஶாஹேந ஸுபிதா' என்று க்ஷத்ரியனுக்குப் பதினாறு நாள வரையிலும் தீட்டுண்டாயிருக்கையில, இங்குப் பத்துத் தினங்களில தீட்டுக கழிந்தமை யெப்படி யென்னில்—'க்ஷத்ரியஸ்து த்ரயோதஶேந ஸுத்யதி ஶுசிஃ' (தனகு ஏற்பட்ட கர்மங்களைத் தவறுமல நடத்திப் பரிசுத்தனையிருகுகும் க்ஷத்ரியன பத்துதினங்களில தீட்டுக கழியப் பெறுவான்) என்னும் விசேஷ சாஸ்த்ரத்தைப் பற்றிப் பத்துத்தினங்களில தீட்டுக் கழிந்தமை உசிதமென்று கண்டுகொள்க.

வருத்தமுற்றுப் பெருங்குரல் பாய்ச்சி ரோதனஞ்செய்தனன். அங்ஙனம் அவன் பெருத்துயரமுற்றுத் தந்தையின் சிதைக்கருகில் அவனைக்குறித்து 'என்னப்பனே! நீ என்னை எவனிடத்தில் ஒப்புவித்துப் போகவேண்டுமோ, அப்படிப்பட்ட என் தமையனாகிய ராமன் அரண்யஞ் சென்றானே! திக்கில்லாவிடத்தில் கைவிட்டுப் போயினையே! மன்னவனே! என்னைப் பெற்ற தந்தையே! அநாதையான கௌஸல்யைக்குக்கதியான புதல்வனை அரண்யம் போக அனுப்பினையே! பிள்ளையைப் பிரிந்து திக்கற்றிருக்கின்ற அனாதையாகிய அந்தக் கௌஸல்யையுங் கூட விட்டெங்குப் போயினை?' என்று கதறினன். அப்பரதன், தன தாயின் சரீரத்தை யிட்டு தஹனஞ் செய்யப் பெற்றதும் நன்றாக எரிந்து சிவந்து நீறு பூத்ததும் வெந்துபோன எலும்புகளுடனே கூடியதுமான சிதாமண்டலத்தைக் கண்டு உரக்க கதறி வருந்தினன். பரதன் அங்ஙனம் அதிதாசமாக கண்ட வுடனே ரோதனஞ் செயது மிகவுந் தீனனாகி, கபிறுகளால் மேலெடுக்கப்பட்ட இந்த்ரத்வஜம் கயிறறுந்து கீழே விழுவதுபோல், பூமியில் விழுந்தனன். அனந்தரம் அவன் அவ்வண்ணம் அவஸ்தைப் படுவது கண்டு ஜ்ஞாதிகள் அனைவரும் புண்யகூபத்தினுள் கீழே விழுந்த யயாதியை அவனது தௌஹித்ரர்களான ரிஷிகள் எழுந்திருக்க எடுத்தாற்போல், தூய நெறியுடையோனாகிய அவனை எழுப்பி யெடுக்கும் பொருட்டு அருகில் வந்தனர். சத்ருக்னன் அதுவரையில் தைர்யத்தோடிருப்பினும் பரதன விழுவதைக் கண்டவுடனே தைர்யமெலலாம் அழியப் பெற்று மனனவனை நினைத்து மிகவும் வருந்தி மெயம்மறந்து பூமியில் மூர்ச்சித்து வீழ்ந்தனன். அந்த சத்ருக்ன தந்தைக்குள்ள அவலோ குணங்களையும் அவனது அவயவங்களையும் நி

னைத்து மிக வருத்தமுற்று மெய்ம் மறந்து பித்தம் பிடித்தவன் போல் பிதற்றத் தொடங்கி 'மந்தரையிடத்து நின்றுண்டானதும் கைகேயியாகிற முதலையோடு கூடியதும் வரதானமாகிற ஜலம் நிரம்பியதும் மிக்க ஆழமுள்ளதும் கலக்கமுடியாததுமான இந்தத் துக்கமென்னும் ஸமுத்ரம் எங்களை மூழ்கச் செய்து விட்டது. என்னப்பா! நீ எப்பொழுதும் ஆதரித்து மேன்மைப்படுத்திவரும் ஸுகுமாரனும் பாலனுமாகிய பரதன் புலம்பிக்கொண்டிருக்கையில், அவனை விட்டு நீ எவ்விடம் போயினையோ? அண்ணே! போஜ்யபதார்த்தங்களிலும் பானத்ரவ்யங்களிலும் ஆடையாபரணங்களிலும் 'உனக்கு எது இஷ்டமோ அதை எடுத்துக்கொள்' என்று பலாத்காரஞ் செய்து எமக்கு இஷ்டமானவற்றை நாங்களே எடுத்துக்கொள்ளும்படி செய்வாயே! அப்படி எங்களுக்கு இனிச் செய்பவன யாவன்? தர்மங்களை யுணர்ந்தவனும் மஹானுபாவனுமாகிய உன்னைப் போன்ற மன்னவனைப் பிரிந்தும் பூமி இரண்டு பிளவாகப் பிளந்து போகாதிருக்கின்றதே! ஆகையால் இப் பூமி ப்ரலயகாலத்திலும் பிளவாதது போலத் தோற்றுகின்றது. தசரதரும் ஸ்வர்க்கம் அடைந்து ராமனும் காட்டுக்குப் போகையில் எனக்குப் பிழைத்திருக்கச் சக்தி எதிருக்கின்றது? நெருப்பில் குதித்து ப்ராணன்களை விடவேண்டுமேயன்றி வேறில்லை. அண்ணனையும் விட்டுத் தந்தையும் இழந்து இக்ஷ்வாகுவம்சத்தரசர்களால் பரிபாலிக்கப்பட்ட அயோத்யாபுரம் இங்ஙனம் பாழடைந்திருக்கையில் நான் எவ்விதத்திலும் அதில் நுழையமாட்டேன். தபோவனத்திற்கே போவேன்' என்று கண்ணீர் பெருக்கி அழுதனன். அவ்விருவரும் அங்ஙனம் புலம்புவதைக் கேட்டு அவர்களது மனவருத்தத்தைப் பார்த்து அவர்களைப் பின் தொடர்ந்து வந்தவர்கள் அ

னவரும் மிகுந்த மனவருத்தமுற்றனர். பிறகு பாதசத்
ருக்ன்ர்களிருவரும் மனவருத்தத்துடன் புலம்பிப்புலம்பி
மிகவும் ஆயாஸம் அடைந்து கொம்புகள் ஒடியப் பெற்ற
வ்ருஷபங்கள் போல், தரையில் விழுந்து புரண்டனர். பிற
கு சிறந்த ஸ்வபாவமுடையவரும் வேதாந்த வித்யைகளை
யுணர்ந்தவரும் பரதாதிகளின தந்தையான தசரதனுக்
குப் புரோஹிதருமான வஸிஷ்டர் தரையில் புரளுகின்ற
பரதனை எழுப்பி எடுத்து 'ஸாமர்த்யமுடையவனே! உன
தந்தைக்கு ஸம்ஸ்காரஞ்செய்து இன்றைக்குப் பதின்மூன்
றுவது நாள். [1] அஸ்திஸஞ்சயனகர்மம் இன்றும் நிறைவே
றாமலிருக்க, இங்ஙனந தாமதிப்பதேன்? பரி தாஹங்க
ளும் சோக மோஹங்களும் ஜராமரணங்களுமாகிய இம
மூன்று த்வந்த்வங்களும் ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஸமா
னமாகவே ஸம்பவிக்கும. இவை உண்டாகப் பெறாத
ப்ராணி ஒன்றுமேயில்லை இவைகளைப பரிஹரிக்கமுடியா
தாகையால இவைகளைப் பற்றி உன்னைப போன்றவன்
மூடனைப்போல இங்ஙனம் புலம்புவது யுக்தமன்று' என்
றனர். தத்வங்களை உணர்ந்த ஸுமந்த்ரனும் சத்ருக்னனை
யழுகதிருக்க எடுத்து மனக்கலக்கந்தீர்த்து ஸமஸ்த ப்
ராணிகளுக்கும் பிறப்பும் சாவும் ஸ்வாபாவிகங்களாகை
யால் அவைகளைத் தடுக்கத் தரமன்றென்றும் ஆகையால்
அவ்விஷயத்தில் வருந்தலாகாதென்றும் அவனது செவி
யிற்படித்திச் சொல்லினன். மிகுந்த புகழுடையோர்களும்
புருஷ ஸிம்ஹங்களுமான பாதசத்ருக்னர்களும் எழுகதி

I தசாஹமத்தியில செய்யும்படி சாஸ்த்ரங்களில ஏற்படுதப்
பட்ட ப்ரதாஸஸ்தி ஸஞ்சயனஞ் செய்து பதின்மூன்றுவது நாள
தேசாசாரத்தின்படி செயயவேண்டிய ஸ்தலசோதனமாத்ரஞ் செய்
யப்பட்டதாகையால் பதின்மூன்றுவது நாள அஸ்திஸஞ்சயனஞ் செ
ய்யவேண்டுமென்னும் ஸ்ம்ருதிக்கு விரோதமில்லையென்று தெரி
கின்றது.

ருந்து வெயிலிலும் மழையிலும் அடிபட்ட இந்த்ர த்வஜங் கள்போல் வேறுவேறுக ப்ரகாசித்துக் கொண்டிருந்த னர். மந்த்ரிகள், கண்ணீர்களைத் துடைத்துக்கொண்டு அழுததனல் சிவந்த கண்களோடு தீனஸ்வரமாகப் பேசு கின்ற அந்த ராஜகுமாரர்களை, மற்றை அஸ்திஸஞ்சயனை தி கார்யங்களைச் செய்யும் பொருட்டு த்வரைப்படுத்தினர். எழுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

சத்ருக்னன் மந்தரையைச் சிக்ஷித்தலும், கைகேயி மந்தரையை ஸமாதானப் படுத்துதலும்.

அபாக்ரியைகளை நிறைவேற்றி க்ருஹத்திற்குப் போன பின்பு லக்ஷ்மணனது தம்பியாகிய சத்ருக்னன் சோகத்தி னல் வருந்தி ராமனிடம் போக முயன்றிருக்கிற பரதனைப் பார்த்து 'மனவருத்தமுண்டாகும் பொழுது ஸமஸ்தப்ரா ணிகளுக்குந் திக்காகிக் காக்கும்படியான ராமன் தனக்கு வருத்தமுண்டாகும்பொழுது தனக்குத் தான் திக்காகிக் காத்துக்கொள்வானென்பது சொல்லவேண்டுமோ? அப் படிப்பட்ட ராமன் தான் மிகுந்த பலமுடையவனையிருந் தும் கடைசியில் ஓர் அபலையால் அரண்யம் போகும்படி தூரத்தப்பட்டானே! இதென்ன விசித்ரம்! 'தந்தைக்கு உட்பட்டவனைகையால் ராமன் என்செய்வான்?" என்கிறு யோ, ஸரி; மிகுந்த பலமுடையவனும் பராக்ரமத்திற் சிற ந்தவனுமாகிய லக்ஷ்மணனென்பா னொருவன் இருக்கிறு னல்லவா? அவனுவது தந்தையைத் தடுத்து ராமனை வன வாஸத்தினின்றும் ஏன் விடுவிக்கவில்லை? ஸ்த்ரீக்கு ஸ்வா தீனப்பட்டுத் தகாத வழியிற் செல்கின்ற மன்னவனை, ந்யாயாந்யாயங்களை ஆலோசித்து இப்படிப்பட்ட அனர்த் தம் உண்டாவதற்கு முன்னமே சிக்ஷிக்கவேண்டும்' என்

றனன். இங்ஙனம் லக்ஷ்மணனுக்குப் பின் பிறந்தவனாகிய சத்ருக்னன் சொல்லிக் கொண்டிருக்கையில் கூனியாகிய மந்தரை அப்பொழுது தான் விரும்பின பரதாபிஷேகத்தை எதிர்பார்த்துக்கொண்டு ஸமஸ்த ஆபரணங்களையும் அணிந்து தெய்வாதீனமாகப் பரதசத்ருக்னர்களிருக்கும் க்ருஹத்தின் கீழ்வாசற்படியின் அருகில் வந்து சேர்ந்தனள். அவள் அப்பொழுது மேலான கலவைச் சாந்து பூசிக் கைகேயி கொடுத்த ராஜயோக்யங்களானவஸ்த்ரங்களைத் தரித்துப் பலவகை ரத்னங்களிழைக்கப்பட்ட அனேகவித ஆபரணங்களையும் அணிந்து விளங்கி நின்றனள். மேலும், அவள் அற்புதமான அனேக முத்துமாலைகளாலும் மற்றுமுள்ள மேலான பலவகை ஆபரணங்களாலும் அலங்காரஞ்செய்துகொண்டு கயிற்றுற் கட்டுண்ட பெண்வானரம்போல் ப்ரகாசித்தனள். அப்பொழுது த்வாரபாலகர்கள், பாபஸ்வபாவமுடையவளும் தையையற்றவளுமான அம்மந்தரையைப் பார்த்து, அவளைப் பிடித்துக்கொண்டு வந்து சத்ருக்னனிடம் ஒப்புவித்து 'எவளால் ராமன் அரண்யஞ் சென்றானே, எவளால் உங்கள் தந்தை சரீரத்தை இழந்தாரோ, அப்படிப்பட்ட பாபிஷ்டையும் கொடுந்தன்மையுடையவளும் இவளே. இவளுக்கு உனமனம் போனபடி சிக்ஷை செய்வாயாக' என்று மொழிந்தனர். தெறி தவறுத சத்ருக்னனும் அவர்கள் சொன்னது கேட்டு மிகவும் வருந்தி அந்தப்புரத்திலுள்ளவர் எல்லோரையும் பார்த்து 'எவளால் என்னுடன் பிறந்தார்க்கும் தந்தைக்கும் இப்படிபபட்ட கொடுந்துயரம் உண்டாயிற்றோ, அப்படிப்பட்ட இவள் தன் கொடுஞ்செயலுக்குத் தகுந்த பலனை இப்பொழுது அனுபவிப்பாளாக' என்றனன். அவன் அங்ஙனஞ் சொல்லி, தோழிகள் சூழப்பெற்ற அக்கூனியைப் பலாத்காரமாகப பிடிக்

க்கையில், அவள் அம்மாளிகை முழுவதும் ப்ரதித்வனி உண்டாகப்பெற்றுக் கோஷிக்கச் செய்துகொண்டு உரக்கக்கூச்சலிட்டனள். அனந்தரம் அவளுடைய தோழிகள் அனைவரும் சத்ருக்னன் கோபித்திருப்பதுகண்டு மிகவும் பரிதபித்துக்கொண்டே மூலக்கு மூலையாகச் சிதறி ஓடிப் போயினர். அங்ஙனம் ஓடிப்போன அவளதுஸ்மஸ்தஸகீ ஜனங்களும் மற்றவர்களும் ஒருவருக்கொருவர் எகாந்த மாக 'இவன் ஆரம்பித்த விதங்கண்டால் நம்மெல்லோ ரையும் மிகுத்தமாட்டான்போல் தோற்றுகிறது. பெரும் புகழுடைய கௌஸல்யாதேவி மிகவுந் தயையுடையவள்; இனிய உரைகளை உரைக்குந் தன்மையள்; மேலும் தர் மங்களை உணர்ந்தவள்; ஆகையால் நாம் அவளைச் சரண மடைவோம். அவளே நமக்குத் தகுந்த கதி' என்று பே சிக்கொண்டனர். அப்பொழுது பகைவரைத் தபிக்கச் செய்யுந் தன்மையுடைய அந்தச் சத்ருக்னன் கோபத்தி னல் கண்கள் சிவக்கப் பெற்று, கூச்சலிடுகின்ற அக்கூனி யைப் பிடித்துத் தரையில் விழுத்தள்ளி இழுத்துக்கொ ண்டுபோயினன். அவன் அங்ஙனம் இழுத்துக்கொண்டு போகையில், அப்பொழுது அவளது மேனியிலுள்ள சித்ரவிசித்ரங்களான பலவித ஆபரணங்கள் ஆங்காங் குத் தரையில் தேய்ந்து சிதறிப்போயின. அப்பொழுது அப்பூஷணங்கள் சிதறி இறைந்திருக்கையால் காந்தி விளங்கப்பெற்ற அந்த ராஜக்ருஹம் முழுவதும், சரத்கா லத்தில் மாசு மறுவின்றி ப்ரகாசிக்கின்ற நக்ஷத்ரங்களோ டுகூடின ஆகாயம்போல் மிகவும் ப்ரகாசித்தது. மிகுந்த பல்முடையோனுகிய அந்தப் புருஷ சிகாமணி மிகவுங் கோபமுற்று, பலாத்காரமாக அவளை இழுத்துக்கொண் டு, விடுவிக்க வந்த கைகேயியை அதட்டிப் பருஷமா கப்பேசினன். கைகேயி, மனவருத்தத்தை விளையச்செய்

வனவாகிய அந்தக் கடின வாக்யங்களைக்கேட்டு மிகவும் வருந்தி, 'சத்ருக்னன் என்செய்வானே' என்னும் பயத்தினால் நடுநடுக்கமுற்றுத் தன் புதல்வனாகிய பரதனைச் சரணமடைந்தனள். பரதன் அக்கைகேயியின் அவஸ்தையைக் கண்டும் சத்ருக்னன் கோபித்திருப்பதைப் பார்த்தும் அவளைநி 'ஸமஸ்த ப்ராணிகளிலும் ஸ்த்ரீகளை ஹிம்ஸிக்கலாகாது. ஆகையால் பொறுத்துக்கொள்வாயாக. ராமன் தார்மிகனாகையால், நான் தாயைக்கொல்வேனின் மாத்ருகாதகனென்று என்னை அவன் நிந்திப்பான். அவன அப்படி நிந்திக்கமாட்டானாயின், இந்தப் பாபிஷ்டையாகிய துஷ்ட ஸ்வபாவையை இக்கைகேயியை நானே கொன்றுவிடுவேனே! 'மாத்ருஹத்தியை கூடாதேயன்றிக் கெடுதிகளுக்கெல்லாம் மூலமாகிய இக்கூனியை ஏன் கொல்லலாகாது' என்பாயாயின், சொல்லுகிறேன், கேள். இக்கூனியையாயினும் நாம் கொன்றோமென்று ராமன் கேட்பாரானால், தர்மஸ்வபாவனாகையால, அவன 'ஸ்த்ரீவதஞ்செய்தாய்' என்று உன்னைடாவது என்னைடாவது எள்ளளவும் பேசமாட்டான். இது நிச்சயம்' என்றனன். லக்ஷ்மணனுக்குத் தம்பியான சத்ருக்னன், இப்படி பரதன்சொன்னது கேட்டு உடனே கோபத்தைத் துறந்து அம்மகாராணியைவிட்டுத் தொலைத்தனன். அவளும் கைகேயியின பாதத்தில் வீழ்ந்து மிகுந்த மனவருத்தத்துடன பரிதபித்துப் பெருமூச்செறிந்துகொண்டு மனஇரக்கமுண்டாகும்படி அழுதனள். சத்ருக்னன் பிடித்திழுத்ததனல் மூர்ச்சித்து வருந்தி, வலையில் அகப்பட்டுப் பயந்த பெண் க்ரௌஞ்சப் பறவைபோல் மிகவும் கதறுகின்ற அக்கூனியைப் பார்த்து, பரதனுககுத் தாயாகிய கைகேயி மெல்ல ஸமாதானப் படுத்தினள். எழுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் ராஜ்யத்தைக் கைகொளாளாமல்
ராமனைத் திருப்பி அழைத்துவரப்
போகமுயன்று வழியைச செவ்வைப்படுத்
தும்படி கட்டளையிடுதல.

அனந்தரம் பதிணன்காவது நாள் விடியற்காலத்தில் ராஜனுக்குப் பட்டாபிஷேகம் நடத்துமதிகாரிகள் அனைவரும் வந்து பரதனைப் பார்த்து 'நமக்குப் பரமகுருவாகிய தசரதமஹாராஜன் ஜ்யேஷ்டகுமாரனை. ராமனையும் மஹாபலஞகிய லக்ஷ்மணனையும் அரண்யத்திற்கனுப்பித் தானும் ஸ்வர்க்கத்திற்குப் போயினன். ராஜகுமாரனே! நீ மிகுந்த புகழுடையவன். இப்பொழுது நீ எங்களுக்கு ராஜாவாயிருக்கவேண்டும். இந்த ராஜ்யம் இதுவரையில் நாதனற்றதாயினும் தெய்வாதீனமாக இதிலுள்ள பரனைகள் எவரும் ஒருவர்க்கொருவர் த்ரோஹஞ்செய்யாமல் அபராதமும் நடத்தாமலிருக்கின்றனர். ராஜகுமாரனே! பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய பதார்த்தங்களெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வந்து மந்த்ரி முதலானவர்களும் பட்டணத்திலுள்ள ஜனங்களும் உனைனெதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். புருஷரிகாமணீ! தந்தைபாட்டன் நாள்தொடங்கிப்பரம்பரையாகவந்திருக்கிற இந்த ஸ்திரமான ராஜ்யத்தைப் பரிக்ரஹித்து அபிஷேகத்தை நடத்திக்கொண்டு எம்மைப்போன்றவர் அனவரையும் காப்பாற்றுவாயாக' என்றனர். பரதன் தனது நியமத்தைத் தவறுதலணுகையால் பட்டாபிஷேகத்தின்பொருட்டு ஸித்தப்படித்தப்பட்ட பதார்த்தங்களெல்லாவற்றிற்கும் ப்ரதக்ஷிணஞ்செய்து ராஜாபிஷேகஞ்செய்யுமதிகாரமுடைய அந்தப் புருஷர்களெல்லோரையும பார்த்து 'எமது வம்சத்தில் மூத்தவன் அரசுபுரிவதன்றோ வழக்கம். அப்படியிருக்க ஸமஸ்தமும் தெரிந்த ப்ரௌடர்

களாகிய நீங்கள் என்னைப்பார்த்து இப்படிப்பட்ட வார்த்தை சொல்வது உசிதமன்று. எங்களுக்குப் பெரியதமையனுகிய ராமனே ராஜாவாகவேண்டும். நான் அவனுக்குப் பதிலாகப் பதினைஞ்சு ஸம்வத்ஸரங்கள் வனவாஸஞ்செய்கிறேன். நான் வனத்திற்குச் சென்று எனது ஜ்யேஷ்டப்ராதாவாகிய ராமனை அழைத்துக்கொண்டு வருகிறேன். சதுரங்கங்களோடு கூடிய பெரும் ஸைன்யை வரவழைப்பீர்களாக. அத்துடன்கூடப் போகிறேன. இப்பொழுது பட்டாபிஷேகத்திற்காக ஸித்தப்படுத்தப்பட்ட இந்த த்ரவ்யங்களெல்லாவற்றையும் ராமாபிஷேகத்தின்பொருட்டு எனனுடன் கூடவே எடுத்துக்கொண்டு வனத்திற்குப் போகின்றனன். பூஜ்யனுகிய அந்தப் புருஷசிகாமணியான ராமனை அவ்வனத்திலேயே அபிஷேகங்கொண்டருளச்செய்து யாகசாலையினின்று [1]த்ரேதாக்னியைக் கொண்டுவருவதுபோல் அவனை வனத்தினின்றும் இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு வருகின்றனன். தாயென்னும் பேர்மாத்ரமுடைய இவளது கருத்து ஈடேறும்படி நான் எள்ளளவுஞ் செய்யமாட்டேன. இவளபிப்ராயத்திற்கு விருத்தமாக நானே புகமுடியாத அரண்யத்தில வாஸஞ்செய்யப் போகிறேன். ராமனே அரசனுகப் போகிறுன். சிற்பிகள் மேடபள்ளங்களை ஸமமாகச்செய்து வழியைச் சீர்திருத்தும்படி கட்டளையிடுவீர்களாக.

---

1 தக்ஷிணுக்னி காஹபத்யாகனி ஆஹவனீயாகனி என்று யாகத்தில வழகுகிவரும இம்மூன்றக்னிகளை த்ரேதாக்னியென்று சொல்லப்படுகினறன. யாகசாலையில் தென்புறத்திலிருக்கும் அக்னி தக்ஷிணுகனி. க்ருஹபதியோடு சேர்ந்திருககும் அகனி கார்ஹபத்யாக்னி. ஆஹவனரு செய்யும் அக்னி ஆஹவனீயாக்னி. ஆஹவனம் ஹவிஸ்ஸைக் கொடுத்தல் 'தக்ஷிணுகீநிர் மார்ஹபத்யா ஹவநீயெள தரயோகீநய: அகீந்த்ரயமிஹுத்ரேதா' என்று நாமலிங்காநுஸாஸனதிற் சொல்லப்படடது.

மேலும், வழிகளில் துர்க்கஸ்தலங்களைச் சோதித்தறிந்து அங்கு ஜனங்களை கடத்தவல்லான ரக்ஷாபுருஷர்களும் பின்தொடர்வார்களாக' என்றனன். இங்ஙனம் ராமனைக்குறித்து நிகரில்லாததும் மேன்மையை விளக்கவல்லதுமான வார்த்தைகளைச் சொல்லுகிற அந்த ராஜகுமாரனைப்பார்த்து ஜனங்களெல்லோரும் 'நீ மூத்த ராஜகுமாரனுகிய ராமனுக்கு ராஜ்யங்கொடுக்க விரும்புகின்றனை. இப்படிப்பட்ட உன்னிடத்தில் கையுந் தாமரைப்பூவுமாகி விளங்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மி நித்யவாஸஞ் செய்வாளாக' என்றனர். ராமனை அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்னும் ப்ரதிஜ்ஞைவிஷயமாக ராஜகுமாரனை பரதன் சொன்ன நிகரில்லாத அவ்வார்த்தைகளைக்கேட்டவுடனே மேன்மைக்கிடமாகிய ராஜாபிஷேகஞ்செய்யுமதிகாரிகளுக்குப் பரமஸந்தோஷத்தினால் கண்களினின்றும் ஆநந்தபாஷ்பத் துளிகள் உதிர்ந்தன. அவர்களும் மந்த்ரிகளும் மற்றுமுள்ள ஸபிகர்களும் பரதன் சொன்னதைக் கேட்டுத் துக்கத்தைவிட்டு ஸந்தோஷத்துடன் அவனைப் பார்த்து 'புருஷசிகாமணீ! உனது கட்டளையின்படி ராஜபக்தியுள்ள ரக்ஷகர்களை மார்க்கத்தைக்காப்பதற்குமிடம் சிற்பிகளை வழி ஏற்படுத்துவதற்கும் இதோ அனுப்பிவிட்டோம்' என்றனர். எழுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அயோத்யையிலுள்ள மார்க்கத்தைசீர்திருத்தல்.

பிறகு அந்தந்த பூப்ரதேசங்களின் இயற்கையறிந்தவர்களும் ஆழமுள்ள நடைவாவி கிணறுமுதலியவற்றினின்று ஜலந்தாக்குவதற்கு வேண்டிய ஸூத்ரங்களைச்செய்

யவல்லவர்களும் சேணியர்களும் தமது கார்யமாகிய மார்க்க ரக்ஷணத்தில் வல்லவரான சூரர்களும் பூமியைத்தோண்டி ஸுரங்கம் முதலியவற்றை இயற்றுபவர்களும் பெரிய கால்வாய் முதலான இடங்களைத் தாண்டுவதற்குக்கோம்புகொடிகளால் யந்த்ரங்களைச் செய்பவர்களும் வலை முதலான யந்த்ரக்காரர்களும் கூலி வேலைக்காரர்களும் சிற்பிகளும் அதிகாரமுள்ள ராஜபுருஷர்களும் ஓடம் முதலான யந்த்ரங்களைச் செய்ய அறிந்தவர்களும் தச்சர்களும் மேடுபள்ளங்களை நிரவி வழியைச் செவ்வைப்படுத்த வுணர்ந்தவர்களும் வழிகளில் குறுக்காகத் தடைசெய்யும் வருக்ஷங்களை வெட்டும் வேலைக்காரர்களும் கிணறு வெட்டுபவர்களும் மாடமாளிகைகட்டத் தெரிந்த சுண்ணாம்பு வேலைக்காரர்களும் மூங்கில்களால் பாய் புட்டிற்கூடை முதலியவற்றை முடையவல்லவர்களும் மற்றவேலைகளில் ஸாமர்த்யமுடையவர்களும் மார்க்கத்தில் பலவாறு கடகது அ
னுபவமுடையவர்களும் முன்னே புறப்பட்டுச் சென்றன ர்.
அளவில்லாத அப்பட்டணத்து ஜனக்கூட்டமானது ராம
னைப்பார்க்குங் குதூஹலத்தினால் அவனிருக்குமிட தை
க்குறித்துப் போகும்போது பூர்ணிமையின்று கவும்
பெருகின ஸமுத்ரம்போல் ப்ரகாசித்தது. வழியை ச்செவ்
வைப்படுத்தவல்ல அந்த வேலைக்காரர்கள் அந்த வயாபா
ரத்தைத் தந்தமக்குரியபடி பங்கிட்டுக் கொண்டு மன்வெ
ட்டி புட்டில் கோடாலி வாள் உளி ரம்பம் முத லான கரு
விகளை எடுத்துக்கொண்டு முன்னே போயி னர். அவர்
கள் வழியில் படர்ந்திருக்கிற கிளைகளையும் கொ ாடிகளையும்
புதர்களையும் சிறுச் செடிகளையும் மொட்டை மாங்களை
யும் கற்களையும் மற்றுமுள்ள பலவகை வ்ருக்ஷங்களையும்
வெட்டிப் புகக்கூடாத இடங்களில் மார்க்கத்தை ஏற்படு
த்தினர்கள். சிலர் வ்ருக்ஷங்களிற்றிப் பா லவனமான

இடங்களில் நிழலுண்டாகும் பொருட்டு வ்ருக்ஷங்களை நாட்டினர். சிலர் ஆங்காங்கு வழிகளில் தடையான செடி கொடி மரங்களைக் கோடாலி கல்லுளி வாள் அரி வாள் இவைகளைக்கொண்டு வெட்டி வழிகளைச் சீர்திருத் தினர். மேலும், பலிஷ்டர்களான சிலர் வேரூன்றி அறுக்க முடியாத விலாமிச்சை முதலியவற்றின் புதர்களைக்கொ ளுத்தி நுழையக்கூடாத இடங்களில்லாகமாகப் போகும் படி செய்தனர். மற்றுஞ் சிலர் வழியில் குறுக்காயிருந்த பாழுங் கிணறுகளையும் பெரிய பள்ளங்களையும் மண்களால் தூர்த்துவிட்டனர். வேறு சிலர் மேடுபள்ளங்களை நிரவிச் சமமாக்கினர். இன்னுஞ் சிலர் ஸைன்யந்தாண்டுவதற்கு அணைகட்டவேண்டிய ஜலப்ரதேசங்களில் அணைகளைக் கட்டினர். சிலர் பொடிசெய்யத்தக்க சிறுகற்கள் முதலி யவற்றைப் பொடிசெய்தனர். சிலர் பிளக்கவேண்டிய பெருங் கற்களைப் பிளந்தனர். சிலர் ஏரிகுளம் முதலிய ஜலம் நிறைந்த இடங்களை வழியின் ஸௌகர்யத்திற்காக வெட்டிவிட்டனர். சிலர் சீக்ரகாலத்திலேயே பெருகிவரு ம் சிறிய ப்ரவாஹங்களைக் கட்டி ஜலம்தேக்கிக் கரை ஏற் படுத்தி ஸமுத்ரம்போல் பெரிய பல ஜலாதாரங்களுண்டாக் கச்செய்தனர். சிலர் ஜலமில்லாத இடங்களில் மனிதர்க ளும் யானை குதிரை முதலியவைகளும் இழிந்து தண்ணீர் குடிக்க ஸௌகமாயிருக்கும் பொருட்டுப் பலவித மாகச் சிறந்த கடைவாவிகளையும் வெட்டுவித்து அதன் கரைகளில் இளைப்பாறும்படி கட்டடங்களையும் ஏற்படுத் தினர். இவ்வண்ணம் அவர்களால் இயற்றப்பட்ட அவ்வ ழியானது சுண்ணும்பிட்டுக் கட்டனை செய்யப்பட்டு மழ மழப்பான பூமியை யுடையதும் ஜலம் பாய்ச்சுவதால் கு ளிர்ந்துப் பூத்த பலவ்ருக்ஷங்களமைந்ததும் மதமேறிக் கலகலவென்று கூவுகின்ற பறவைகளுடைய

தும் பதாகைகளால் அலங்காரஞ் செய்யப்பட்டதும் சந்தனத்தண்ணீர் தெளிக்கப் பெற்றுக் குளிர்ந்து அழகான விடுதிகளுடையதும் பலவகைப் புஷ்பங்கள் இறைக்கப் பெற்றதுமாகித் தேவமார்க்கம் போல் மிகவும் ப்ரகாசித்துக்கொண்டிருந்தது. அங்ஙனம் வழி ஏற்படுத்தினபின் பு அவர்களுக்குத் தலைவர்களான அதிகாரிகள் தாமெல்லோரும் ஒன்றுகூடி மிகவும் ருசியுள்ள பழங்கள் நிறைந்து சிறந்த ப்ரதேசங்களில் மஹாஜனபாவனரான பரதனுக்கு மனக்களிப்பை விளைப்பனவாகவும் தாமே அலங்கரித்துக்கொண்டிருப்பனை போன்றவைகளுமாகிய அழகான இடங்களில் தங்கக்கலசங்களை அமைத்து மகாதோரணங்களையும் மேற்கட்டிகளையும் கட்டி த்வஜங்களை நாட்டி மற்றும் பலவகை அலங்காரங்களும் செய்து சிங்காரித்தனர். வாஸ்து சாஸ்த்ரங்களை யறிந்தவர் சிறந்த ரக்ஷத்ரங்களுள்ள சுபமுஹூர்த்தங்களில் பரதன் தங்குவதற்காகக் கூடாரங்களை அடித்து ஸ்தாபித்தனர். அந்தக் கூடாரங்கள் முழுமையும் நெய்ய மணலிடப் பெற்றுச் சுற்றிலும் அகழியால் சூழப்பெற்று இந்த்ரகீலபர்வதத்தை நிகர்த்து மேலான வீதிகள் ஏற்படுத்தப் பெற்றுத் தேவாலயங்களாலும் மன்னவர் இழியும் விடுதிகளாலும் நிறைந்து சுண்ணம்படித்து வெளுத்தமதிட் சுவருடையனவாகி த்வஜங்களால் அலங்காரஞ் செய்யப் பெற்றுச் செவ்வைப்படுத்தின ராஜவீதிகள் அமைந்து ஏழுகிலகளுள்ள மெத்தை மேடைகளால் ஆ ராயத்தை அளாவி நுணிபாகங்களில் பக்ஷிகள் தங்கும்படி அமைக் கப்பட்ட கொடுங்கைகளுடன் விளக்குற்று இந்த்ரபட் டணம்போல் மிகவும் அழகாயிருந்தன. பல் கூடங்கள் நிறைந்த காடுகளடர்ந்தனவாகிக் குளிர்ந்த நி மலமாகியு ண்ணீர் பொருந்திப் பெருத்த மீன்கள் நிரம்பி ப் பெருகி

வருகின்ற கங்காநதியளவும் இவ்விதமாக டோராக்கள் ஏற்படுத்தப்பட்டு விளங்கின. அதற்கப்புறம் அஸாத்யமாகையால் டோராக்களை ஏற்படுத்தவில்லை. இந்நகரம் வல்லவரான சிற்பிகளால் இயற்றப்பட்ட அழகான அவ்வழியானது இரவில் நக்ஷத்ரங்களோடும் சந்த்ரனோடும் கூடி விளங்கும் ஆகாயம்போல் மேன்மேலும் ப்ரகாசித்துக் கொண்டிருந்தது. எண்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் சோகித்தலும், வஸிஷ்டர் ஸுமந்த்ரனைக்கொண்டு பரதசத்ருக்னர் முதலியவர்களை ராஜஸபைக்கு வரவழைத்தலும், அவர்கள அனைவரும் ஸபைக்கு வருதலும்.

அனந்தரம் ஸ்ரீராமனை அழைத்துக்கொண்டுவருவதன்பொருட்டு வஸிஷ்டர் முதலிய பலமுனிவர்களும் அன்றிரவெல்லாந் தூக்கமில்லாமல் மங்கல கார்யங்களைச் செய்தனர். அப்படியே துன்பங்கள் தீரும்படி பல நற்செயல்களையும் இயற்றினர். பிறகு விடியற்காலமாகையில் வாக்கின் விசேஷங்களையுணர்ந்த ஸுத மாகத வந்திகள் வந்து மங்கல சப்தங்களமைந்த நற்கவிகளைப் பாடி பரதனைப் புகழ்ந்தனர். ஜாமங்களைத் தெரிவிக்கும் பேரிவாத்யமும் ஸ்வர்ணமயமான தண்டங்களால் லடிக்கப்பட்டுப்பேரொலியுண்டாக்கிற்று. சங்குகளும்பலவாகவூதப்பட்டன. பலவாறான சப்தங்களையுடைய காஹளி முதலான வாத்யங்களையும் வாசித்தனர். அந்த வாத்யங்களின் த்வனிகள் எல்லாம் ஒன்றுகக் கலந்து ஆகாயமெங்கும் பரந்து பரதனையெழுப்பிச் சோகத்திலுல் வருந்துகின்ற அந்த ராஜகுமாரனை மேலும் பெருஞ்சோகமுற்றுப் பரிதபிக்கச் செய்தன. உடனே பரதன் விழித்து அந்தச் சப்தத்தைகேட்டு 'நான் ராஜா அல்லேன். ராஜனைப் புகழ்வதுபோல்

என்னைப் புகழாதிருப்பீர்களாக' என்று மொழிந்து அதையெல்லாம் நிறுத்தி, சத்ருக்னனை அழைத்து 'சத்ருக்ன! கைகேயி உலகத்திற்கு எவ்வளவு அபகாரஞ் செய்தனள் பார். தசரதமஹாராஜர் துக்கத்தில் எல்லாவற்றையும் என்மேல் பொகட்டுப் போயினர். மஹாஜ்ஞ பாவராகிய அந்த தர்மப்ரபுவினுடைய இந்த ராஜ்ய லக்ஷ்மியும் மன்னவனுக்குப் பின்பு மூத்த குமாரனுக்குச் சேருந் தர்மத்திலேயே நிலைநின்றிருப்பது. அப்படிப்பட்டது இப்பொழுது ஜலத்தினிடையில் கடத்துகிறவனில்லாத ஓடம்போல் அலைகின்றது. எவன் நம்மெல்லோர்க்கும் காதலே அப்படிப்பட்ட ராமனையும் இந்த என் தாய் தர்மத்தைத் தவிர்த்து தானுகவே அரண்யத்திற்குத் துரத்தினளே!' என்றனன. இங்ஙனம் புலம்பி ப்ராஜ்ஞைதப்பின பாதனைப் பார்த்து ஸ்த்ரீகள் அனைவரும் மிக்க வருத்தமுற்றுப் பெருங்குரல் பாய்ச்சிக் கதறினர். அதைப் பரதன் அங்ஙனம் அழுதுகொண்டிருக்கையில், ராஜதர்மங்களை அறிந்தவரும் பெரும்புகழுடையவருமான வஸிஷ்டமாமுனி ராஜஸபையுள் ப்ரவேசித்தனர். ஸுவர்ணமயமாகி மிகவும் அழகுபொருந்திச் சிறந்த ரத்னங்களாலிழைக்கப்பட்டு ஸுதர்மையெனும் தேவஸபைபோல் விளங்கும் ராஜஸபையில் தர்மஸ்வபாவராகிய அம்மஹர்ஷி சிஷ்யகணங்களோடு ப்ரவேசித்தனர். வேதங்களையெல்லாமுணர்ந்தவராகிய அம்முனிமன்னவர் ஸுகமான பாய் பரப்பப்பெற்ற ஸ்வர்ணமயமான ஆஸனத்தில் உட்கார்ந்து தூதர்களைப் பார்த்து 'தூதர்களே! நீங்கள் விரைவாகச் சென்று அந்தணர்களையும் க்ஷத்ரியர்களையும் வைஸ்யர்களையும் மந்த்ரிகளையும் அந்தந்த இனத்தவர்களில் தலைவரையும் ராஜனுக்கு அந்தரங்கர்களான வேலைக்காரர்களோடு சத்ருக்னனையும் பெரும்புகழாளனாகிய பரதனையும்

யுதாஜித்தையும் ஸுமந்த்ரனையும் மேலும் ராஜ்யத்தின் ஹிதத்தை விரும்புவார் யாவர் உளரோ அவர்களையும் அழைத்துக்கொண்டு வருவீர்களாக. நாம் எல்லோருங் கலந்து ஸ்ரமப்பட்டுச் செய்யவேண்டிய கார்யம் ஒன்று உளதல்லவா' என்று ஆஜ்ஞாபித்தனர். அனந்தரம் அந்த ஆஜ்ஞையின்படி ஜனங்களெல்லோரும் தந்தமது அதிகாரத்திற்குரியபடி ரதங்கள் மீதும் குதிரைகள்மேலும் யானைகள்மேலும் ஏறிவருகையில், அதனல் பெருந் த்வனியொன்றுண்டாயிற்று. பிறகு ஸபைக்கு வருகின்ற பரதனைப்பார்த்து ப்ரஜைகள், தேவதைகள் தேவேந்த்ரனைக்கொண்டாடுவதுபோலும் முன்பு தசரதனைப்புகழ்வதுபோலும் அவனைப் புகழ்ந்தனர். அப்பொழுது பெரிய மத்ஸ்யத்தோடும் நீர்யானையோடும் கூடிச் சிறிதுமசையாத ஜலமுடையதாகி மணி சங்கு மணற்குன்று இவைகளோடு கூடி விளங்குகின்ற ஸமுத்ரத்தைச் சார்ந்த பெருமலைவைப்போல், தசரதகுமாரர்களான பரதசத்ருக்னர்களோடும் வஸிஷ்டரோடும் ஸுமந்த்ரன் முதலானோர்களோடும் விளங்குகின்ற அச்சபையானது முன்பு தசரதனிருந்தகாலத்திற்போலவே மிகவும் ப்ரகாசித்தது. எண்பத்தொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் ராஜ்யத்தை அங்கீகரியாமல் பட்டணத்துஜனங்களோடு ராமனிடம் போகப் புறப்படுதல.

புத்தியில் மிகுந்தவனுகிய பரதன் வஸிஷ்டர் முதலான பெரியோர்கள் நிறைந்து நியமத்துடன்கூடிய அந்த ஸபையை, பூர்ணசந்த்ரன், ப்ருஹஸ்பதி முதலான சிறந்த க்ரஹகணங்களோடு கூடின ராத்ரியைப்போல் ஸந்தோஷத்துடன் கண்டனன். அப்பொழுது மேன்மைப்படுத்து

கைக்குரிய ஸபிகர்கள் ஸபையில் ப்ரவேசித்து அவரவர் கௌரவத்துக்குத் தகுந்தபடி ஆஸனங்களின்மேல் உட்கார்ந்திருக்கையில், அவர்களுடுத்திருந்த வஸ்த்ரங்களுடையவும் சந்தனம் முதலான பூச்சுக்களுடையவும் ஆபரணங்களுடையவும் கந்தியினல் அம்மேலான ஸபை முழுமையும் விளங்கியது. அப்பொழுது பெரியோர்கள் பராதாபிஷேகத்தைக் குறித்துக் குவியல் குவியலாக அவ்விடம் வந்து நிறைந்திருக்கையில் அந்த ஸபை மிகவும் அழகுபொருந்தி சரத்காலத்தில் பூர்ணசந்த்ராலுடன் விளங்கும் ராத்ரிபோல் ப்ரகாசித்தது. தர்மங்களையறிந்தவராகிய அந்தப் புரோஹிதர் நானுதேசத்தினின்றும் வந்த ராஜாக்களும் பட்டணத்தில் தலைவரான ப்ரஜைகளும் வந்திருப்பதைக்கண்டு மெதுவான வார்த்தையுடன் பரதனை நோக்கி 'என்னப்பனே! தசரதமஹாராஜனஸத்யபரிபாலனமென்னும் தர்மத்தைத் தவறுமல் நிறைவேற்றமுயன்று தனதான்யங்களால் மிகவும் செழிப்புற்றதாகிய இப்பூமியை உனக்குக் கொடுத்துத் தான் ஸ்வர்க்கத்திற்குச் சென்றனன். அம்மன்னவன்போலவே ஸத்யத்தில் ப்ரீதியுடையவனகிய ராமனும் ஸத்புருஷர்களின் ஆசாரத்தை நினைத்து உதயமான சந்த்ரன் நிலாவைவிட்டுப் பிரியாதிருப்பதுபோல் தந்தையின் ஆஜ்ஞையைத் தவறுமல் அரண்யம்போயினன். உன்தந்தையும் உன்ப்ராதாவும் கண்டகங்களையெல்லாம்போக்கி ஸுகத்தை விளைப்பதாகிய ராஜ்யத்தை உனக்குக் கொடுத்தனர். ஆகையால் நீ அதை ஸுதோஷத்துடன் அனுபவிப்பாயாக. சீக்ரத்தில் அபிஷேகஞ் செய்துகொள்வாய். வடதிசை ராஜாக்களும் மேற்றிசை ராஜாக்களும் கீழ்த்திசை ராஜாக்களும் அபராந்ததேசத்து யவனர்களும் ஸுராஷ்ட்ரத்தின் தீவிலுள்ள அரசர்களும் உனக்குக் கோடிகோடியாக

ரத்னங்களைச் சுல்கமாகக் கொண்டுவந்து கொடுப்பார் களாக' என்றனர். [1] பரதனும் வஸிஷ்டரது வாக்யத் தைக்கேட்டுச் சோகத்தில் மூழ்கி தர்மிஷ்டனுகையால் மூ த்தவனை அனுவர்த்திக்க வேண்டுமென்னுக தர்மத்தில் விருப்பமுற்று மனத்திணல் தமையனுகிய ராமனை ஸ்மரித் தனன். [2] ஹம்ஸத்தின் கண்டத்வனிபோன்ற கண்டத்வ னியுடைய அப்பரதன் தான் போகத்துக்குரிய யௌவன ப்பருவத்திலிருப்பினும் ராஜ்யபோகத்தில் மனஞ்செல்லப் பெருமல் தர்மத்தையே பாராட்டி ராமனை நினைத்துக்

---

1 இதற்கு 'தசஹீருத்வா ராஹவோவா வாகயம் ஸோகேநாஹிபரிப் லுதஃ | ஜகாம மநஸா ராமம் யர்மஜ்ஞோ யர்மகாங்க்ஷயா' என்று மூ லம். (தத் ஸ்ரீருதவா) தர்மாதர்மஙகளின் தாரதம்யஙகள் தெரிந்த வராயினும் வஸிஷ்டர் அங்ஙனஞ் சொன்ன வாதத்தையைக் கேட்டு (யர்மஜ்ஞஃ) பெரியோனை அனுவர்த்திக்க வேண்டுமென்கிற தர்மந் தெரிந்த பரதன், (ஸோகேந-அஹிபரிப்லுதஃ) சோகத்தால் மிகவும் அமிழ்த்தப்பட்டனன். இப்பொழுது ஸர்வஜ்ஞருரும் அத்யந்தஹிதரு மான குருவும் தர்மமெனும் வ்யாஜத்திலை அதர்மத்தையே சொன் னரே யென்னுஞ் சோகத்திலை நன்கு அமிழ்ததப்பட்டனன்.(யாம காங்க்ஷயா) அதர்மமான தன் ராஜ்யாபிஷேகத்தைக் கேட்ட பாபத் திற்கு ப்ராயஸ்சித்தமென்னும் புத்தியோடு, (மநஸா ராமஞ் ஜகாம) இப்படி ஆசார்யன் சொன்ன வார்த்தையைக்கேட்ட பாபத்தை நீயே க்ஷமிக்கவேணுமென்று மனத்திலை ராமனிடசதில ப்ரபததி செய்த னன். (யாமகாங்க்ஷயா) ராஜ்யபரிபாலனரூப ஸாமான்ய தர்மத்தைக காட்டிலும் அதிகமான ராம கைங்கர்யமென்னும் தர்மத்தை ஆசை ப்பட்டு இங்ஙனஞ் செய்தானென்று பொருள.

2 இதற்கு மூலம்—'ஸ வாஷ்பகலயா வாசா கலஹம்ஸஸ்வ ரோ யுவா | விலலாப ஸஹாமயீயே ஜகர்ஹே ஹச புரோஹிதம்'. (ஸா ஷ்பகலயா) அதர்மத்தை நினைத்தாவது ராமனை நினைததாவது கண் ணீருண்டாகப் பெற்றிருக்கை. (கலஹம்ஸஸ்வராஃ) இதலைல் அபி நிவேச விசேஷம் தோற்றுகிறது. (யுவா) போகாலத்திலும் போ கோபகாணமான ராஜ்யத்தை இழப்பதே யென்று ரிஷி வியப்புறுகி

கண்ணீர்களால் வார்த்தை தழுதழுக்கப்பெற்றுப் புலம்பிப் புரோஹிதரை நிந்தித்து மேலும் இங்ஙனஞ் சொல்லத் தொடங்கி 'ப்ரஹ்மசர்யத தவறாமல் குருகுலவாஸம் அனுஷ்டித்து வேதாத்யயனஞ் செய்தபினபு ஸ்நாதகர்மம்பெற்று வேதார்த்தங்களையுணர்ந்து அதிற் சொல்லிய தர்மங்களை அனுஷ்டிக்குந் தன்மையனகிய ராமனது ராஜ்யத்தை, சாஸ்த்ரத்திற்குட்பட்டு நடக்கும் [1] என்னைப்போன்

ரூர். (ஸஹாமயீயே ஜுஹுர்ஹே) 'நியமாதிக்ரமம் ரஹஸி வோயயேத்' என்னும் நியமத்தையும் தவறினன். அதிக்ரூரமான அதர்மத்தைச் சொன்னதொன்று துககத்தில மெய்ம்மறந்து ஏகாந்த மென்றும் ஸபை யென்றும் விவேகஞ் செய்யப் பெறாமல் நிந்தித்தான். (புரோஹிதம் ஜுஹுர்ஹே) இநதக் குலத்திற்கு வரும் ஹிதத்தை நீர நன்கு ஆலோசித்தீரென்று எடுத்தெதறிந்தாற் போல நிநதித்தாரென்றபடி. (ஸஹாமயீயே) பலரும் ஒன்றுகூடி என்னெருவனுடைய ராமபாரதந்த்ர்யத்தை ஏன் அழிக்கப் பார்க்கிறீரகளென்றனன்.

1 'கயம் ஹுரயாஜ்ஜாதோ ஹவேஜ் ராஜ்யாபஹாரகஃ | ராஜ்யஞ் சாஹ்ம ராமஸ்ய யர்மாவகதுமிஹார்ஹஸி' என்று மூலம். (ஹுரயாஜ்ஜாதஃ) ராமனைப்பிரிந்த உத்தரக்ஷணத்திலேயே ப்ராணன்களைத் துறந்த தசரதரது வயிற்றிலபிறந்தவன், (கயம்ராஜ்யாபஹாரகோ ஹவேத்) அவன் துறந்த ராஜ்யத்தை எப்படி அபஹரிப்பான்? ராமனைப்பிரிந்த மாத்ரத்தில் தசரதரைப்போல் நான்ப்ராணன்களைவிடாமற் போயினும், அப்படிப்பட்ட தசரதரது வயிற்றில பிறந்தமைக்குராமராஜ்யத்தைக் கைப்பற்றுவேனே?என் ஸ்வரூபத்தை ஆலோசிக்கினும் நான் ராஜ்யத்துக்குரியனல்லேனென்பது வெளியாகுமென்கிறன்—(ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய) சேஷவஸ்துவை சேஷியாயிருப்பவன் காப்பாற்றவேண்டுமேயன்றி, அதை மற்றொரு சேஷவஸ்து காப்பாற்றக் கூடுமோ? அப்படி கூடுமாயின் நான் ராஜ்யதத்தை ரக்ஷிப்பதுபோல ராஜ்யமும் என்னை ஏன் ரக்ஷிக்கக் கூடாது? ஆகையால சேஷபூதனனை நான் சேஷமான ராஜ்யதத்தை ரக்ஷிக்கத்தகாது. (யர்மஷக்துமிஹார்ஹஸி) உலகத்திலு பெற்ற தநதைகளையும் நிராகரித்து ராஜ்யஞ்செய்பவர் உளர். அவர்களைப்போல என்னை நினைக்கவேண்டாம். இவ்விஷயத்தில என் ஸ்வபாவத்தை அறிந்து 'ரக்ஷக

றவன் எவன்தான் அபஹரிப்பான்? தசரதரிடத்தினின் று பிறந்தவன் தனது ஜயனுக்கு வரவேண்டிய ராஜ்யத் தை அபஹரிப்பானு? இந்த ராஜ்யம் ராமனுடையது. நா னும் ராமனுடையவனே. இவ்விஷயத்தில் நீர் தர்மத் தையே சொல்லவேண்டும். மூத்தவனும் மேன்மையுடைய வனும் தர்மஸ்வபாவனும் திலீபநஹுஷாதி பூர்வராஜாக் களை நிகர்த்தவனும் இப்படி ஸமஸ்தகுண ஸம்ருத்தியு டையவனும் ககுத்ஸ்த குலாலங்காரனுமாகிய ராமனே தசரதரைப்போல் ராஜ்யம் பெறுதற்குரியவன். அசிஷ் டர்கள் செய்யத்தகுந்ததும் ஸ்வர்க்கத்திற்குப் பொருந் தாததுமான இப்படிப்பட்ட பாபத்தைச் செய்வேனையின், இக்ஷ்வாகு வம்சத்தில் நானொருவன் குலமுறை கெடுத்த கொடும்பாவியாவேனன்றோ? என் தாய் செய்த இத்தீச் செயலை நான் எள்ளளவும் அங்கீகரிக்கமாடேன். நான் இங்கிருந்தே புகக்கூடாத அரண்யத்திலிருக்கிற ஸ்ரீராக வனைக் கைகுவித்து நமஸ்கரிக்கிறேன். நான் ராமனையே பின்றொடர்ந்து செல்வேன். புருஷச்ரேஷ்டனுகிய அந்த ராமனே ராஜாவன்றி மற்றெவரும் அல்லர். ராமன் இந்த ராஜ்யத்திற்கு மாத்ரமே உரியவனென்பதில்லை. மூன்று லோகங்களுக்கும் அவன் ராஜ்யஞ்செய்யவல்லவன். ஆ கையால் இந்த ராஜ்யத்திற்கு நான் சிறிதும் உரியவனல்

னிவன் ரக்ஷ்யவஸ்துவிது' என்னும் தர்மத்தைச சொலலவேண்டுமே யன்றிச சேஷவஸ்துவே மற்றொரு சேஷவஸ்துவைக் காப்பாற்றக் கூடுமென்னும் அதாமத்தைச் சொல்லவேண்டாம். (யர்மம் வக்து மிஹாாஹவஸி) ராமன் அரண்யம்போகையில் ராஜ்யத்துக்காசனில் லையென்னுமிவ்வளவுமாத்ரமே ஆலோசித்தீரன்றி அங்ஙனம்செய் தால ராமனுககுச சேஷப்பட்ட என் ஸ்வரூபம் நசித்துப்போமென் று விசாரிக்காமற் போனீர். ஆகையால் இனி அங்ஙனஞ் சொல்லா மல் ராமகைங்கர்யமென்னும் தர்மமே சொல்லவேண்டுமன்றி ராஜ்ய பரிபாலனஞ் செய்யச சொல்லத்தகாது.

ஶலன்' என்றனன். இங்ஙனம் பரதன சொன்ன தர்மிஷ்டமான வார்த்தையைக் கேட்ட ஸபையிலுள்ளவர் யாவரும் மிகவும் ஸந்தோஷித்து ராமனிடத்தில் மனஞ்செல்லப்பெற்று ஆநந்தக் கண்ணீர் பெருக்கிப் பரதனைப் போற்றினர். மீளவும் பரதன் 'நான் பூஜ்யனாகிய ராமனை எவ்வளவு வேண்டியும் வனத்தினின்றும் திருப்பி அழைத்துக்கொண்டு வர வல்லமுகேனாயின், பெருமை பொருந்திய லக்ஷ்மணனைப்போல் நானும் அவ்வரண்யத்திலேயே இருக்கப்போகிறேன். ஸத்புருஷர்களும் குணங்களிலகிலின்றவர்களுமாகிய இந்த ஸபிகர்களின் கண்முன்னே ராமனை வனத்தினின்றும் திருப்பி அழைத்துக்கொண்டுவர எனக்கு கூடியவரையில் ஸமஸ்தோபாயங்களாலும் ப்ரயத்னஞ்செய்து பார்க்கிறேன். ஆகையால் நீங்களெல்லோரும் என்னுடன் கூடவே வரவேண்டும். நான், முன்னமே வேட்டிக்கு வேலைசெய்பவர்களையும் கூலிவேலைக்காரர்களையும் வழியைச்செவ்வைப்படுத்திக் காத்திருக்கும்படி அனுப்பியிருக்கிறேன். ஆகையால் இப்பொழுது நாம் ப்ரயாணமாய்ப் புறப்பட்டுப் போகலாமென்றே எனக்குத் தோற்றுகிறது' என்றனன். தர்மஸ்வபாவனாகிய பரதன் ப்ராதாவினிடம் மிகுந்த ப்ரீதியுடன் இங்ஙனம் வஸிஷ்டாதிகளைப் பார்த்து மொழிந்து, ஆலோசனைகளில் தேர்ந்த ஸுமந்த்ரனை அருகிலிருக்கக் கண்டு 'ஸுமந்த்ரனே! நீ எனதாஜ்ஞையின்படி எழுந்துசென்று ப்ரயாணமாய்ப் புறப்படவேண்டுமென்று ஆஜ்ஞாபித்து ஸைன்யத்தை அழைத்துக்கொண்டு வருவாயாக' என்றனன். ஸுமந்த்ரனும் மஹாநுபாவனாகிய பரதன் இங்ஙனஞ் சொல்லக்கேட்டு மிகுந்த ஸந்தோஷம் அடைந்து தன்கருத்தைப்பினசென்று பரதன் அளித்த ஆஜ்ஞையை ஸைனியிலுள்ளவர்க்குத் தெரிவித்தனன். அங்குள்ள ப்ரஜைகளும்

ஸைந்யபதிகளும் ராமனை அழைத்துக்கொண்டு வருவதற்காக ப்ரயாணமாகும்படி ஸைன்யத்திற்கு ஆஜ்ஞைசெய்தானென்று செவியுற்று மிகுந்த ஸந்தோஷம் அடைந்தனர். பிறகு வீடுகள்தோறும் ஸைனியிட்களின் பார்யைகளெல்லோரும் ராமனிடம்போக ப்ரயாணம் கேரிட்டதென்று தெரிந்து ஸந்தோஷத்துடன் தந்தமது பர்த்தாக்களைச் சீக்ரம் புறப்படுங்களென்று த்வரைப்படுத்தினர். அந்த ஸைந்யபதிகள், குதிரைகளும் வேகமுள்ள எருதுகள் பூட்டின வண்டிகளும் மிக்க வேகமுள்ள தேர்களும் கால்நடைகளும் நிறைந்த ஸைன்யம் முழுமையும் ஸித்தமாகும்படி ஆஜ்ஞாபித்தனர். பரதன் ஸைன்யமெல்லாம் ஸித்தமாயிருப்பது கண்டு குருவான வஸிஷ்டருடைய அனுமதிக்காக அவரது ஸந்நிதானத்தில் 'ரதத்தை வேகமாகக் கொண்டு வருவாய்' என்று ஸுமந்த்ரனுக்கு ஆஜ்ஞாபித்தனன். ஸுமந்த்ரனும் பரதனது ஆஜ்ஞையைச் சிரஸாவஹித்து ஸந்தோஷித்துச் சிறந்த குதிரைகள் பூட்டின ரதத்தைக்கொண்டு வந்தனன். அப்பொழுது ரகுவம்சத்திற் பிறந்தவனும் அமோக தைர்யமுடையவனும் மஹாபராக்ரமசாலியுமாகிய பரதன், மிகவும் யுக்தமான வார்த்தைகளைச் சொல்லி மஹாரண்யத்திலிருக்கிற பெரும்புகழோனை ராமனை அருள்புரியச்செய்து அழைத்துக்கொண்டு வரமுயன்று ஸுமந்த்ரனைப் பார்த்து 'ஸுமந்த்ரனே! நீ சீக்ரமாக எழுந்து ஸைன்யத்தலைவரிடஞ் சென்று ஸைன்யங்களை ஸித்தப்படுத்தச் சொல்வாயாக. நான் உலகத்தின் க்ஷேமத்தை விரும்பி அரண்யத்திலிருக்கும் ஸ்ரீராகவனை அருள்புரியச் செய்து அழைத்துக்கொண்டுவர ஆவலுற்றிருக்கின்றேன்' என்றனன். பரதன் அங்ஙனம் கம்பீரமாக ஆஜ்ஞை செய்கையில் அந்த ஸுமந்த்ரன் தானே தன் கருத்தெல்லாம் நிறைவேறப்

பெற்றவனுகி ப்ரஜைகளில் ப்ரமுகர்களுக்கும் ஸைந்ய கூர்களுக்கும் நண்பர்களுக்கும் பரதனது ஆஜ்ஞையைத் தெரிவித்தனன். பிறகு வீடுகள் தோறும் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ரர்கள் எல்லோரும் ஓட்டைகள் மேலும் கோவேறு கழுதைகள் மேலும் தேர்கள் மேலும் யானைகள் மேலும் சிறந்த குதிரைகள் மேலும் அவரவர்க்குரிய படி ஏறிக்கொண்டு ப்ரயாணமாய்ப் புறப்பட்டனர். எண்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ பரதன் ஸைன்யங்களோடு புறப்பட்டுக கங்காநதீதீரததில் இளைப்பாறுதல். }

பிறகு பரதன் மற்றைநாள் விடியற்காலத்தில் எழுந்திருந்து சிறந்த ரதத்தின்மேல் ஏறி ராமனைப் பார்க்குங் குதூஹலத்தினுல் சீக்ரமாகப் போயினன். மந்த்ரிகளும் குதிரைகள் பூட்டப்பெற்று ஸூர்யரதத்தை நிகர்த்த ரதங்களில் ஏறிப் பரதனுக்கு முன்னம் நடந்தனர் பரதனது ஆஜ்ஞையின்படி ஸித்தஞ்செய்யப்பட்ட ஒன்பதினுயிரம் யானைகள், இக்ஷ்வாகு குலகுமாரனை பரதன் போகையில், அவனைப் பின்தொடர்ந்தன. மிகவும் புகழ் பொருந்திய ராஜகுமாரனகிய பரதன் புறப்பட்டுப் போகையில், அவனைப் பின்தொடர்ந்து அறுபதினுயிரம் தேர்களும் பல ஆயுதங்களைத் தரித்தவர்களும் சிறந்த வில்லாளிகளுமாகிய அறுபதினுயிரம் காலாட்களும் போயினர். ரகுவம்சத்திற் பிறந்தவனும் ஸத்யஸந்தனும் ஜிதேந்த்ரியனுமாகிய பரதன் புறப்பட்டுப் போகையில் நூறுயிரங் குதிரைவீரர்கள் அவனைப் பின்பற்றிச் சென்றனர். கைகேயியும் ஸுமித்ரையும் மிகுந்த புகழுடைய கௌஸல்யையும் ராமனை அழைத்துக்கொண்டுவரும்ஸங்கேதாக்ஷத்தினுல் மனங்குளிரப்பெற்று வேறுவேறுகச் சிறந்த வாஹனங்களில்

ஏறிக்கொண்டு போயினர். அவர்களில் கைகேயி தான் செய்த கார்யத்திற்குப் பஶ்சாத்தாபம் அடைந்தவளாகி மூந்தற முன்னம் கடந்தனள். ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்யர்கள் அனைவரும் கும்பல்கூடி லக்ஷ்மணனோடு கூடிய ராமனைப் பார்க்கும் பொருட்டு மனக்களிப்புற்றவராகி [1]'மேகம்போல் கறுத்த நிறமுடையவனும் நீண்டபுஜதண்டங்களையுமுடைத்தவனும் நிலையான முயற்சியும் திடமான ஆஶ்ரிதரக்ஷணை வ்ரதமும் பொருந்தி உலகங்கட்கெல்லாம் சோகத்தைப் போக்குந் தன்மையனுமாகிய ராமனை எப்பொழுது பார்ப்போம்! [2]ராமன புலப்பட்டால் போதும்.

I 'மே஘ஶ்யாமம் மஹாவாஹும் ஸ்திரஸத்தவந்ஹ்ரஜவ்ரதம்। கஹ்ரீரக்ஷயாமமேஹ ராமம் ஜஹ்தஶ்ரீஶோகநாஶநம்' என்று மூலம் (மே஘ஶ்யாமம்) மேகம்போல தாரஸ்தரூயினும அவனது ஸௌந்தர்யதனை அனுபவிக்காமல் உபேக்ஷிக்கத தாமன்று. வெயிலில அடிபட்டவனுக்கு மேகம்போல் பார்த்தமாத்ரத்திலேயே ஸமஸ்த ஸந்தாபங்களையும் போக்கவல்லவன். (மஹாவாஹும்) விரோதிகளைப் போகஇ ஆஶ்ரிதாகளுக்கு அந்த ஸௌந்தாயானுபவத்தை மூற்றூட்டாகக கொடுக்கவல்லவன். ஆனதுபற்றியே 'ராமஶ்ரீவாஶ்யாமம்' என்று ஸௌந்தர்யத்தைச சொல்லி 'ஸர்வஜத்ருநிவர்ஹணம்' என்று சதருநிராஸனஸாமர்த்யமுடனே சொல்லப்பட்டது. (ஸ்திரஸத்வம்) தனதாஶ்ரிதர்கள தனககுப்ரதிகூலராயிருப்பினும் மனகலக்கமுறுதவன். (ஹ்ரஜவ்ரதம்) அநதரங்காலு மழிக்கமுடியாத ஆஶ்ரித ரக்ஷணவ்ரதமுடையவன். (ராமங்கஹ்ரீரக்ஷ்யாமஃ) அவன் முகத்தைப்பார்க்க நேரினும் போதும். கைகேயிவாத்தைகளைக்கேட்டதலுண்டான கர்மங்களெல்லாம் நிவ்ருத்தியாகும். (ஜஹ்தஶ்ரீஶோகநாஶநம்) அவன் ஸமஸ்தலோகங்களுக்கும் சோகத்தைப் போக்குபவனாயிருக்க நமக்குமாத்ரம சோகம் எங்கிருந்துண்டாயிற்று? அவன் ஸாவலோகங்களுடையவும் சோகத்தைப் போக்கும ஸ்வபாவத்திற்கும நமது சோகத்திற்கும ஸமபந்தமில்லையே. நமக்கு எப்படி சோகமுண்டாயிற்றென்று கருத்து

2 ஹ்ரஷ்டஏவஹி நஶ்ஶோகமபநேஷ்யதி ராகவஃ' என்று மூலம்

தூரத்தில் உதித்த ஸூர்யன் உலகத்திலுள்ள இருட்டையெல்லாம் அழிப்பதுபோல் அவன் புலப்பட்டவுடனே நமது சோகத்தையெல்லாம் போக்கவல்லவன்' என்று விசித்ரமான ராமகதைகளையேபேசிக்கொண்டுபோயினர். இங்ஙனம் அகஸ்தியரது ஜனங்கள் ராமனைக் குறித்த அழகான கதைகளைச் சொல்லிக்கொண்டும் மனக்களிப்புற்று ஒருவர்க்கொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டும் சென்றார்கள். மேலும், எவரெவர் ஸ்ரீராமனுக்கு அன்பர்களோ அவர்களெல்லோரும் வர்த்தகர்களும் பட்டணத்து ஜனங்கள் அனைவரும் போயினர். பின்னும் பத்மராகம் முதலான ரத்நங்களைச் சாணைபிடிப்பவர்களும் தம்வேலைகளில் கைதேர்ந்த குயவர்களும் நெசவுவேலைக்காரர்களும் மயிலிறகிலால் குடைவிசிறி முதலியன செய்பவர்களும் ரம்பத்தினால் கட்டைகளை அறுத்துப் பிழைப்பவர்களும் தந்தச் சுவர்முதலியவற்றிற்கு மெருகிடுபவர்களும் மரம மணிமுதலிபவற்றில தொளை செய்பவர்களும் தந்தவேலைக்காரர்களும் ஸன்னகாரைவேலை செய்வோர்களும சங்தனம் முதலான வாஸனைத்ரவயங்களை விற்று ஜீவிப்பவர்களும் மிகுந்த புகழுடைய தங்கவேலைக்காரர்களும் கம்பளம் முதலியவற்றைத் தோய்த்து அழுக்கெடுப்பவர்களும்

(ஊஷ்டாஸ்வ) பார்த்தமாத்ரத்திலேயே. நம்மைப்பார்த்து மதஸ்மிதம் பண்ணவேண்டிய அவஸ்யமுமில்லை. நம்மைக் கடைக்கண்களால் கடாக்ஷித்து இனியதொரு பேசசுப்பேசவேண்டிய அவஸ்யமுமில்லை. நாமும் ஒரு ப்ரயத்னஞ்செய்யவேண்டிய அவஸ்யமிலலை. அவன் தூரத்தில் புலப்படினும் போதும். நமது சோகங்களெல்லாம் தொலையும். இதற்கு தாத்பர்யம்—(தமஸ்ஸூர்யஸ்ய லோகஸ்ய ஸமுத்யந்நிவ ஹாஸ்கரஃ) தூரத்திலுதித்த ஸூர்யன் ஸமஸ்தலோகங்களுடையவும் இருட்டைப் போக்குவதுபோல், ராமன் தூரத்தில் புலப்பட்ட மாத்ரத்திலேயே நமது சோகாந்தகாரங்களையெல்லாம் போக்குவானென்று கருத்து.

எண்ணெய் தேய்த்து ஸ்னானஞ்செய்விப்பவர்களும் உடம் பைப்பிடித்து சோரையுர்ப்பவர்களும் வைத்யர்களும் வீடுகளில் அகில் முதலான வாஸனைப்புகை யிடுபவர்களு ம் பலவகை மத்யஞ்செய்பவர்களும் துணிவெளுப்பவர்க ளும் தையற்காரர்களும் க்ராமங்களிலும் இடைச்சேரி களிலும் உளள தலைவர்களும் வேஷங்கட்டியாடி ஜீவிப் பவர்களும் பாடகர்களும் வாரஸ்த்ரீகளும் செம்படவர் களும் ராமனைப் பார்க்கும்பொருட்டு பாதனைப் பின்சென் று போயினர். யோகநிஷ்டாகளும் வேதவித்துக்களும் ஸ தாசார முள்ளவர்களுமாகிய ப்ராஹ்மணர்கள் ஆயிரமாயி ரமாக மாட்டுவண்டிகளில் ஏறிப் பாதன் போகும்பொழுது பின்சென்றனர். இங்ஙனம் அவர்கள் எல்லோரும் நன்கு அலங்காரஞ் செய்து நிர்மலமான வஸ்த்ரங்களை உடுத் துச் சென்ற சந்தனத்தை நிறைந்த பூஷணமையும் பூசிப் பலவகை வாஹனங்களின்மேல் ஏறி மெதுவாகப் பாதனைப் பின் சென்று போயினர் லோகத்தில் உள்ளவர் யாவரும் மயிர்க் கூச்சலுண்டாகும்படி மகிழ்ச்சிபுற்றவராகி ப்ராதாவி னிடத்தில் ப்ரீதியால் அவனை அழைத்துக்கொண்டுவரப் போகும் கைகேயி குமாரனாகிய பாதனைப் பின் சென்ற னர். அவர்கள், தேர் குதிரை யானை பல்லக்கு முதலான வாஹனங்கள்மேல் ஏறி வெகுதூரம் போயினர். அங்ங னம், ராமனது நண்பனும் வீரனுமாகிய குஹன் பந்து ஜனங்கள் சூழப்பெற்று மனவுக்கத்துடன் அங்குள்ள தேசத்தைப் பரிபாலித்துக் கொண்டு வாஸஞ்செய்யும் ப் ருங்கபேரபுரத்தைக் குறித்துப் போகமுயன்று அதன ஸமீபத்திலுள்ள கங்காநதியைச் சேர்ந்தனர். பாதனைப் பின் செல்லும் அந்த ஸைன்யமானது சக்ரவாகபக்ஷிகள் குலாவப்பெற்ற கங்கையின் கரையைச்சேர்ந்து அங்கே இழிந்தது. பேசவல்லனாகிய பாதன் தன் பின்னேவந்த

ஸைன்யத்தையும் அழகிய ஜலத்தோடுகூடவிளங்கும் அக்கங்கையையும் பார்த்து மந்திரிகள் எல்லோரையும் நோக்கி 'உங்கள் எல்லோருடையவும அபிப்ராயத்தின்படி என் ஸைனயத்தை அங்கங்கே இறக்குவீர்களாக. இப்பொழுது இங்கு இளைப்பாறி காளத்தினம் இரவதியைத் தாண்டுவோம். மேலும் கான நதியுள்ளேயிழிந்து, ஸ்வர்க்கஞ்சென்ற மஹாராஜருக்கு, அவரது ஊர்த்வதேஹ லௌக்யத்தின் பொருட்டு ஜலதர்ப்பணஞ்செய்ய விரும்புகின்றேன்' என்றனன். அவன் அங்ஙனம் சொல்லுகையில் மந்திரிகள் அப்படியேயென்று, மனஒக்கழுற்றுத் தமதிஷ்டப்படி வேறுவேறாக அந்த ஸைனகளுக்கெல்லாம் விடுதிகளை ஏற்படுத்தினர். பரதன் மஹாநதியாகிய கங்கையின் கரையில் பலவிதமான ஏற்பாடுகளைச்செய்து டேராமுதலான பரிகரங்களோடு ஸைனையை இறகி மஹாஜனபாவனகிய ராமனை அழைத்துவரும் விஷயத்தை ஆலோசித்துக கொண்டே அங்கிருந்தனன். எண்பத்து மூன்றுவது ஸர்க்கம முற்றிற்று.

பரதனுக்கு குஹன் அதிதிபூஜை செய்தல.

அனந்தரம் கங்காநதியின ஓரத்தில் இழிந்திருக்கிற ஸைனையைப் பார்த்து நிஷாதாதிபதியாகிய குஹன் பரபரப்புற்றுத் தன் பந்துக்களை நோக்கி 'இங்கு ஸமுத்ரம் போலகிகவும் பரந்து இப்பெரும்ஸைன புலப்படுகின்றதே. இதை எவ்வளவுதூரம் பார்த்தபோதிலும் இதன் முடிவு மனத்திலும் நினைக்க முடியாதிருக்கினறது. துர்ப்புத்தியாகிய பரதன் தன் தாய்செய்தது போதாதென்று தானும் ராமனைப் பாதிக்கவநதனன். இது நிச்சயம். ரதத்தில் பெரிய உயர்வுள்ள கோவிதாரத்வஜம் இதோ

புலப்படுகின்றதே. இந்தப் பரதன் நம் செம்படவர்கள் எல்லோரையும் பரதனமாவது செயவான்; அல்லது நம்மெல்லோரையும் கொன்றுவது விடுவான். அல்லது இக்ஷ்வாகுகுமாரன், ராஜாவாணைக் குரியலுகிய ராமன் திரும்பி வருவாணுயின தனக்கு ராஜ்யலக்ஷ்மி நிலக்காதென்றுநினைத்தும், அது அவனுக்கு எவ்விதத்திலும் பெற அஸாத்யமாப் தனக்கே முழுமையும் நிலநிற்கவேண்டுமென்று விரும்பியும், அதற்காக, தகைத ராஜ்யத்தினின்றுக துரத்திவிடுகையில் ஸஹாயஸம்பத்தியினறி தர்ப்பலணுகித் தாயாதியான ராமனைக் கொல்லவேண்டுமென்றுவருகினறனன்? 'ஆனல் உனக்கு என்' எனகிறுயோ? தசரதகுமாரணுகிய ராமன எனக்கு ப்ரபுவும் கண்பனுமாயிருப்பவன். ஆகையால் ராமனது ப்ரயோஜனத்தை விரும்பி நீங்கள் எல்லோரும் ஸித்தப்பட்டு கங்காதீரத்தில கெட்டியாக நிலைபெற்றிருக்க வேண்டும். நம் செம்படவர்களெலலோரும கங்காநதியில் குறுக்காக லைனயங்களோடுகூடி மாம்ஸங்களையும் காய்கிழங்குகளையும் ஆஹாரஞ் செய்துகொண்டு காத்திருப்பீர்களாக. ஐநூறு ஓடங்களை ஸித்தப்படுத்திக்கொண்டு ஓடம் ஓவ்வொன்றுக்கு யுத்தலகாரஹ முற்ற வயதுள்ள செம்படவாகள நூறுபேர்வீதம் காத்துக்கொண்டிருப்பீர்களாக'என்று ஆஜ்ஞாபித்தனன். மேலும் அநதக குஹன் 'பரதன் ராமனிடத்தில் கொடுங்கருத்தில்லாதவனுயின, அப்பொழுது அவனுடைய இநத லையன்யமானது ஸுகமாக இகலங்காநதியைத் தாண்டுமாக. அப்படி இல்லையாயின், இவனைக்கொல்ல வேண்டும்' என்றனன். அந்தவேடர்தலைவன் பட்டுவஸ்த்ரம் முதலியவற்றையும் மத்ஸ்யங்களையும் ம்ருகமாம்ஸங்களையும் தேன்களையும காணிக்கையாகக கொண்டு பரதனை எதிர்கொண்டு சென்றனன். பிறகு ப்ரதாபசாலியும் வணக்க

முடையவனுமாகிய லக்ஷ்மணன், அங்ஙனம் குஹன் வருவது கண்டு வணக்கத்துடன பாதனைப் பார்த்து 'இதோ வருகின்றான். இவன் இங்குள்ள வேடர்களுக்குப்ரபு, அனேகமாயிரம் பந்துக்களால் சூழப்பட்டவன். இவன் இத்தண்டகாரண்ய ஸஞ்சாரத்தில் வல்லமையுடையவன், வயது சென்றவன், உனது அண்ணனாகிய ராமனுக்கு நண்பனுமாயிருப்பவன். ககுத்ஸ்தகுலாலங்காரனே! குஹனென்னும் பேருடைய இவ்வேடர்தலைவன் இப்படிப்பட்டவனைகயால் இவனுககு நீ தர்ஶனம் கொடுப்பாயாக. நம் ராம லக்ஷ்மணர்கள் எங்கிருக்கிறார்களோ அது இவனுக்கு நிஸ்ஸம்ஶயமாகத் தெரிந்திருக்கும்' என்றனன். லக்ஷ்மணன் சொன்ன அந்த சுபவார்த்தையைக் கேட்டு பரதன் 'சீக்ரமாக என்னைக் குஹன் பார்க்க வரலாம்' என்றனன். குஹன் அனுஜ்ஞைபெற்று ஸ்துஷ்டனாகி பந்துக்களோடுகூட வந்து பாதனைப் பார்த்து வணங்கி 'இத்தேசம் உன் வீட்டுப் புறக்கடைத் தோட்டம் போலவே! நீ வருவது தெரியாமையால் நாங்கள் எல்லோரும் மோசம் போயினம். அது எங்களுக்குத் தெரிந்திருக்குமாயின் செய்யவேண்டிய எதிரிடல் முதலிய மர்யாதைகளைச் செய்திருப்போம். நீ உன் ஸொந்த தாஸர்களின் வீட்டிலிருந்து போகவேண்டுமென்று நாங்கள் எல்லோரும் வேண்டுகின்றனம். எமது வேடர்கள் வேர்களையும் காய்களையும் பச்சை மாம்ஸங்களையும் உலர்ந்த மாம்ஸங்களையும் தினைமுதலான பலவித வன்ய தான்யங்களையும் ஸித்தஞ் செய்திருக்கின்றனர் இந்த ஸைன்யம் முழுவதும் எனது இருப்பிடம் வந்து ஸுகமாகப் புசித்து இன்றிரவுமுழுமையும் வஸித்திருக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றனன். ஆகையால் நீ விரும்பினபடியெல்லாம் நாங்கள் செய்ய, நாணுவித பூஜைகளால் பூஜிக்கப்பட்டு நானா

த்தினம் ஸைன்யத்துடன் புறப்படடுப் போகலாம்' என்ற னன். எண்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று

குஹன் பரதனுக்கு நலவார்த்தை சொல்லுதல்.

வேடர் தலைவனாகிய குஹன் இங்ஙனம் சொல்லுகையில், மிக அறிவுடையோனாகிய பரதன் அந்தக் குஹனைப் பார்த்து, யுக்திகளும் ப்ரயோஜனங்களும் அமைந்திருக்கு மாறு கூற முயன்று 'எனது ஜ்யனாகிய ராமனது நண்பனே! நீ ஒருவனே அளவிடக்கூடாத எனதுடைய இவ்வளவு ஸைன்யத்துக்கும் பூஜைகள் செய்ய விரும்புகின்றாயே! அப்படி செய்யவேண்டுமென்று மேன்மேலும் நீ விரும்புவது மாத்ரத்திலேயே எனக்குப் பூஜைகளெல்லாம் செய்தாற்போலவே ஆயிற்று' என்றனன். மஹா தேஜஸ்வியாகையால் கம்பீரனாகி அப்பொழுது ஸந்தாஷப் பெருக்கினால் மிக்க ஓளியுடன் விளங்குகின்ற பரதன் வேடர் தலைவனோடு அங்ஙனம் மேலானமொழியைக்கூறி, மீளவும் அவனைப்பார்த்து 'குஹனே! பரத்வாஜாச்ரமத்திற்கு எவ்வழியால் போகவேண்டும்? இத்தேசம் மிகவும் புக அரிதாயிருக்கின்றது. மேலும் கங்கையைச் சேர்ந்த இவ்வோடைகளைத் தாண்டுவதும் கஷ்டம்' என்றனன். அரண்யவாஸியாகையால் அரண்யஸஞ்சாரத்தில் வல்லவனாகிய குஹனும் சிறந்த அறிவுடையோனாகிய ராஜகுமாரனது வார்த்தையைக் கேட்டுக் கைகளைக் குவித்து 'ராஜகுமாரா! பெரும்புகழுடையவனே! எமது செம்படவர்கள் வில்லைத் தரித்து மிக்க மனஉக்கத்துடன் உன் பின்னே வருகின்றனர். நானும் உன்னைப் பின் பற்றி வருகின்றனன். ஆகையால் மார்க்கத்தைக் குறித்து நீ சிந்திக்கவேண்டாம் நமது ராமன்

எவர்க்கும் துக்கத்தை விளைக்குமபடியான கார்யத்தைச் செய்யமாட்டான். அப்படிப்பட்ட ராமனுக்குக் கெடுதியைச் செய்ய நினைத்து நீ போகிறாயல்லையே! உன்னுடன் வந்திருக்கிற இவ்வளவு பெரும சேனையைப் பார்க்கவும் எனக்குக் கொஞ்சம் ஸந்தேஹமாயிருக்கிறது. ராமனைப் பார்ககிறதற்கு மாத்ரமே போவாயாயின், இவ்வளவு சேனை வேண்டியதில்லையே' என்றனன். பரதன் ஆகாயம் போல் அழுக்கற்றவணுகையால் இங்ஙனம் மொழிகின்ற குஹனைப் பார்த்து அவன அங்ஙனம் விணவுதற்குச் சிறிதும் கோபமின்றி, மெதுவான வாக்யத்துடன் 'ராமனுக்குக் கெடுதியை நினைப்பவனென்று உனக்கு ஸந்தேஹமுங்கூட உண்டாக கூடாதா! இப்படிப்பட்ட கஷ்டகாலம் உண்டாகாதிருக்குமாக. ஆகையால் என்னைக் குறித்து நீ ஸந்தேஹப்படத்தக்கதனறு. ஏனென்னில்—ராமன எனக்குப் பெரிய தமையன. ஆகையால அவன எனக்குத் தந்தையைப்போலவே ப்ரவிக்கத்தகுந்தவன். குஹனே! அரண்யத்தில வஸிக்கின்ற ஸ்ரீராமனைத் திருப்பி அழைத்துக்கொண்டுவருவதற்காகப் போகின்றன. ஆகையால் வேறுவிதமாக நீ நினைக்கலாகாது. நான் உனக்குச் சொன்ன இவ்விஷயம் ஸத்யமே' என்றனன். அந்தக குஹன் இவ்வண்ணம் பரதன் சொன்ன வார்த்தையைக் கேட்டு முகமதளியப்பெற்றுப் பெரும் ஸந்தோஷத்துடன் மீளவும் பரதனைப பார்த்து 'ஓரு ப்ரயத்னமுமினறித் தானுகவேவந்த ராஜ்யத்தையும் மறக்க விரும்புகின்றாயே! நீ எவ்வளவு தர்மஸ்வபாவன்? உன்னைபபோனற தனயனை இப்புவனியில் எங்கும் இதுவரையில நான் பார்க்கவில்லை. நீ, வ்யஸனத்தில் அகப்பட்ட ராமனைத் திருப்பிக்கொண்டுவந்து ஸுகமாயிருக்கச்செய்ய விரும்புகிறாயாகையால் உன்கீர்த்தி ஸாஸ்வத

மாக ஸமஸ்த லோகங்களிலும் வயாபித்து விளங்கும்' என்றனன். அப்பொழுது குஹன் இங்ஙனம் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே ஸூர்யனது கரந்தி குறைந்து ஸாயங்காலம் ஆயிற்று பிறகு ராத்ரியும் நெருங்கியது. அனந்தரம் அந்தச் செல்வக்குமாரனுகிய பரதன் லக்ஷ்மணனை அந்தந்த இடங்களில் இறக்கி குஹன் தனக்கு மனக்களிப்பை விளைத்துக்கொண்டிருக்கையில், சத்ருக்ஞனும் தானுமாகப் பதிக்கையில், பதித்துக கொண்டனன. பரதன் கர்ப்பைஸ்வர்ய முடையவன்; துக்கத்திற்கு எவ்வளவும் தகாதவன்; மஹாதைர்யமுடையவன்; சோகத்தை விளக்கும்படியான பாபம் எதுஞ்செய்யாத தர்மபுத்தியுடையவன். இப்படிப்பட்டவனுயினுமராமனைக் குறித்த சிந்தை இவனுக்கு ஸஹிக்கமுடியாமல் வாயாற்சொல்லக்கூடாததும் நெஞ்சால் நினைக்கக்கூடாததுமான அப்படிப்பட்ட சோகம் ஸம்பவித்ததல்லவா! ஸமீபத்திலுள்ள அரண்யம் நெருப்புப் பற்றி எரிகையில் அத்தியினல் எரிக்கப்படட வ்ருக்ஷத்தை, அதன் பொந்தில் அக்னி மறைவாகப்பற்றி மேன்மேலும் தபிக்கச செய்வதுபோல் சிந்தையென்னுந தீயினல் எரிக்கப்பட்டுப் பரிதபிக்கின்ற பரதனைச் சோகாக்னியானது மேன்மேலும் பரிதபித்து வருந்தச்செய்தது. ஸூர்யகிரணங்களால் உருக்கப்பட்ட இமயமலையினின்றும் பனிநீர் பெருகுவதுபோல், பரதனது ஸகலாவயவங்களினின்றும் சோகாக்னியால் புழுக்கநீர் பெருகலாயிற்று. கைகேயியின்மகனுகிய பரதன அத்துயரம் பெருமலைபோல் அழுத்திவிட்டது. * அத்துயரமெனும் பர்வதத்தி

---

* த்யானங்கள் இடைவிடாதிருக்கையால உடைந்து சிதறினகல்குவியலாகவும், கைகால்முதலிய அவயவங்கள் தந்தமது வ்யாபாரங்களைச் செய்யாமல் ஒய்ந்திருக்கையால வ்ருக்ஷங்களாகவும், சோ

ற்கு இடைவிடாது கடக்கும் ராமசிக்கதையே குகைகளில் வெடித்துக் கிடக்கும் கல்குவியல்களும், பெருமூச்சுக்களே பற்பல தாதுக்களும், இந்திரியங்கள் தந்தம் கார்யங்களில் செல்லாதிருத்தலே மரக்கூட்டங்களும், மேனமேலும் வளர்ந்து வருகின்ற சோகமும் ஆயாஸமும் மனோவ்யாதியுமே சிகரங்களும், மதிமயக்கங்களே அளவிறந்த ஜந்துக்களும், ஸந்தாபமே ஓஷதிகளும் மூங்கில்களுமாயின. புருஷசிகாமணியாகிய அப்பரதன் மிக்க மனக்கலக்கமுற்றுப் பெருமூச்செறிந்து ப்ரஜ்ஞையுந் தப்பி இங்ஙனம் மிகுந்த ஆபத்தில் ஆழ்ந்து மனக்கவலையால் வருந்தி, கூட்டத்தினின்றும் பிரிந்த வ்ருஷபம் போல் பரிதபித்திருந்தானன்றிச் சிறிதும் மனக்கவலை தீரப் பெறவில்லை. மஹானுபாவனாகிய பரதன் பரிவாரங்களோடு ராமனையே சிந்தித்துக்கொண்டிருக்கையில், குஹன் வந்து அவனுடன் கலந்தனன். பிறகு குஹனும் பரதனது நிலைமையைக் கண்டு மிக்க மனவருத்தமுற்று ராமனைக் குறித்த வார்த்தைகளைச் சொல்லி அப்பரதனை ஸமாதானப் படுத்தினன். எண்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

குஹன், ராமனைக் குறித்து லக்ஷ்மணன் தன்புற்றுப் புலம்பியதைப் பாதனிடம் கூறுதல்.

1 அனந்தரம் வனத்தில் நித்யவாஸஞ் செய்பவனாகிய குஹன், அளவிடவெண்ணாத மஹிமைபொருந்திய பர

காதிகள் மேன்மேலும் வளர்ந்து ஸ்திரமாயிருக்கையால திடமுள்ள சிகரங்களாகவும், மோஹங்கள ப்ராணபயத்தை விளக்கையால் க்ரஹஜந்துக்களாகவும், ஸந்தாபங்கள புகக்கூடாதிருக்கையால மூங்கில் புதர்களாகவும், இவற்றோடு கூடிய சோகம் பொறுக்கமுடியாமல் பெரும்பாரமாயிருக்கையால் மஹாபர்வதமாகவும் ரூபிக்கபட்டன.

1 'அசசேஷாயி ஸஜ்ஜனாவம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மந: । ஹாதா

தனைப்பார்த்து, மஹாநுபாவனுகிய லக்ஷ்மணனுக்குத் தமையனிடத்திலுள்ள பக்தியாகிற நல்ல ஸ்வபாவத்தைச் சொல்லத்தொடங்கி 'அண்ணனைக் காக்கும் பொருட்டு வில்லையும் பாணத்தையும் தரித்துக் கண்கொட்டாமல் விழித்துக்கொண்டிருக்கும் குணவந்தனுகிய லக்ஷ்மணனைப்பார்த்து நான் "ரகுகுலத்திற்கு மனக்களிப்பை விளைக்கும் மஹாநுபாவனே! லக்ஷ்மண! இதோ உனக்காகப் படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. நீ மனத்தீரிக்கையுடன் இதன்மேல் ஸுகமாகப்படுத்துக்கொள். தர்மஸ்வபாவனே! இதோ இருக்கும் நாங்கள் எல்லோரும் துக்கத்தை அநுபவிக்கத்தகுந்தவர்களே. நீயோ ஸுகத்திற்கே உரியவனுகையால் ஸுகமாகப் படுத்து நித்ரை செய்வாயாக. ராமனைக் காப்பதற்கு நாங்களெல்லோரும் விழித்துக்கொண்டிருக்கின்றனம். இப்புவனியில் ராமனைக்காட்டிலும் இனியவன் எனக்கு எவனும் இல்லை. ஆ

யாப்ரமேயாய ஸுஷேஹா ஸஹந மோசராஃ' (அயி) பாதனது அபிப்ராயந் தெரிந்தபின்பு. அல்லது—பாதனைத் தேற்றின பின்பு. (லக்ஷ்மணஸ்ய மஹாத்மநஃ) ஸமுத்ரத்தைக் கையால் அளக்க முயன்றனன். (ஸஜீஹாவம்) 'வால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தியஃ' என்று தமையனை அநுவர்த்தித்திருக்கும் மேலான ஸ்வபாவத்தை. (ஆசசக்ஷே) சொலலினன். இதலை—பகவத்விஷயோபதேசத்திற்குப் புதியவர் பழையவரென்னும் பேதமில்லை. சொல்லுவா ரெல்லோரும் குருக்களே. ஆதரமுள்ளவரெலலோரும் ஸ்ரோதாக்களேயென்று தெரிகின்றது. (ஆசசக்ஷே) சிறிது சொல்லினன். லக்ஷ்மணனது ஸத்பாவத்தை வாயால் சொல்லக்கூடுமான வரையிலுமே சொன்னனன்றி அசக்தகையால் முழுமையும சொல்லவில்லை யென்று பொருள. (ஸுஷேஹா ஸஹநமோசராஃ)வனத்திலுள்ள வ்ருக்ஷங்களின் தாரதம்யங்களை மாத்ரமறிந்தவன், இவனுடைய பாவத்தை அறிந்திலன். அல்லது—ராமவிரஹத்தால் ஓர் புதரில் புகுந்திருந்தனன், அந்த தேசத்திலுள்ளவர் வரக்கண்டு வெளிப்புறப்பட்டு வந்தானென்றபடி.

கையால் நீ ராமனுக்காக மனவுக்கங்கொண்டு வருந்தி விழித்துக்கொண்டிருக்கவேண்டிய அவஸ்யமில்லை. உன் னெதிரில் நான் இதுவிஷயத்தில் அபத்தம் சொல்வேனோ? இந்த ராமனது அனுக்ரஹத்தினாலேயே, நான் இவ்வுல கத்தில் பெரும்புகழையும் பரலோக ஸாதனமான தர்மத் தையும் மேலும் நியாயப்படி நேர்ந்த தனுதிகளையும் பெற விரும்புகின்றேன். ஆனதுபற்றி நான் வில்லேத்தரித்து பந்துக்களெல்லாருடன் கூடி ஸீதையுந் தானுமாகப் படு த்து நித்திரைசெய்கின்ற எனதருமைத் தோழனாகிய ராம னைக் காத்துக்கொண்டிருக்கின்றனன். நான எப்போதும் அரண்யத்தில் திரிபவனாகையால் இதில் எனக்குத் தெரி யாதது ஒன்றும் இல்லை. நாங்கள் சதுரங்க ஸைன்யம் வந்து போராடினும் அதைப்பொறுத் தெதிர்க்கவல்லோ ம்' என்றனன். மஹானுபாவனாகிய லக்ஷ்மணன் தர்மத்தி லேயே மனஞ்சென்றவனாகையால் நாங்கள் சொன்னதைக் கேட்டு எங்களெலலோரையும் நல்வார்த்தை சொல்லி ஸமாதானப் படுத்தி 'தசரதமஹாராஜர் வயிற்றில் பிறந்த ராமன் ஸீதையோடு கூட நிலத்தில் படுத்திருக்கையில், என் ப்ராணன்களைத் தரித்திருப்பதே எனக்குக் கஷ்ட மாயிருக்கின்றது, இனி எங்கிருந்து எனக்கு நித்ரை நே ரப்போகின்றது? அன்றியே மற்றை ஸுகங்கள் தானும் எப்படி எனக்குப் பொருந்தும்? குஹனே! என் தேவா ஸுராதி ஸகலபூதங்களாலும் எதிரிடவொண்ணாத சூரத் தன்மையுடையவனே, அப்படிப்பட்ட மஹாபராக்ரமசாலி யாகிய ராமன இப்பொழுது ஸீதையுடன் கூடப் புற்படுக் கையில் படுத்திருக்கின்றனன் பார். தசரதர் பெருந்தவங் கள் செய்து பற்பல வ்ரதங்களை கடத்தி அனேக யாகங் களைப்பண்ணி இப்பிள்ளையைப் பெற்றனர். இவனொரு வனே தந்தையைப்போல் ஸமஸ்த லக்ஷணங்களும் அமை

ந்தவன். இவன் அரண்யம் வந்த பின்பு, இனி மஹாராஜர் வெகுகாலம் ஜீவித்திரார். இனி சீக்ரத்திலேயே பூமி யும் விதவையாகப் போகின்றது. இது நிச்சயம். அப்பா ! இக்கோரம் அந்தப்புர ஸ்த்ரீகள் பெருங்குரலுடன் புலம்பி அலுப்புற்று ஓய்ந்துபோயிருப்பார்கள். ராஜமாளிகையும் ஒலிஓய்ந்து நிச்சப்தமாயிருக்குமென எண்ணுகின்றேன். கௌஸல்யையும் மன்னவரும் எனதன்னையும் இன்னும் ஜீ வித்திருப்பார்களென்று நினைக்கவில்லை. ஒருக்கால் ஜீவித் திருப்பார்களாயின், இன்றிரவு மாத்ரமே ஜீவித்திருப் பார்கள். என் தாயான ஸுமித்ரை இரண்டாங் குமா ரனெகிய சத்ருக்னனைப் பற்றி ஜீவித்திருப்பினும், இவ்வீர னைப் பெற்ற மாதாவான கௌஸல்யைமாத்ரம் நாசமடை வது தவறுது. விஞ்சிப்போயிற்று, விஞ்சிப்போயிற்று. எல் லாம் பாழாய்விட்டது. என் தந்தை தசரதமஹாராஜர் ரா ஜ்யத்தில் ராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யாமையால் தன் கருத்து ஈடேறப் பெறுமலே நாசமடைகின்றாரே. தந் தை மஹாராஜர் மரணமடையும்பொழுது அவருக்கு அந் தந்தக்காலங்களில் ஸமஸ்த ஸம்ஸ்காரங்களையும் நடத்துகி ற பாதசத்ருக்னர்களன்றே[1]க்ருதார்த்தர்கள். எம் தந்தை மரணமடையும்படியான காலம் வரப்பெற்று மரணமடை கையில், அவருக்கு ப்ரேதகார்யங்களில் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்களைச்செய்பவரன்றே நல்வினையாயினர். எம் தந்தையின் ராஜதானியாகிய அயோத்யை மிகவும் அழ கான நாற் சந்திவீதிகளும் நன்கு பகுத்து ஏற்படுத்தப் பட்ட ராஜமார்க்கங்களும் அமைந்து தனிகர்களின் மே டைகளும் தேவாலயங்களும் ராஜாக்களின் உப்பரிகைக ளும் விளங்கப்பெற்று மேலான வஸ்துக்களும் நிறைந்து ரமணீயமாயிருக்கும். மேலும் அதில் தேர்களும் யானைக

1 ப்ரயோஜனங் கைகூடப்பெற்றவர்.

ஸ்ரீ குநிரைகளும் நிறைந்து வாத்யத்வனிகள் ப்ரதித்வனிபெழப்பெற்றிருக்கும் பின்னும் அநகரத்தில் ஸமஸ்த மங்கலங்களும் நிரம்பி ஜனங்களெல்லோரும் துஷ்டியும் தனதான்ய புஷ்டியும்உண்டாகப்பெற்று விளங்குவார்கள். அங்குத் தோட்டங்களும் ராஜாக்களின உத்யானங்களும் எங்கும் நிறைந்திருக்கும். அதில ஜனங்கள் கும்பு கூடி என்றும் ஓயாமல் உத்ஸவங்களை கடத்திக்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட அநகரத்தில் இனபுற்றவர்களன்றோ வாழ்வார்கள். நாங்கள் இதற்குப் பதிணைகு ஸம்வத்ஸரங்களென்னுங் கெடிணவக் கடத்தினபின்பு வனவாஸ ப்ரதிஜ்ஞையைத் தீர்த்து கேஷமமாயிருக்கும் ராமரோடுகூட ஸுகமாக அயோத்திமாநகரம் போய்ச்சேருங் காலமும் நேருங்கொலோ?' என்றுரைத்துப் புலம்பினன். மஹாபுபாவனாகிய அந்த ராஜகுமாரன் இங்ஙனம புலம்பிகொண்டிருக்கையிற்றானே அவவிரவு கடநதுசெனறது. அனந்தரம் நன்றுகப்பொழுது விடிநதவுடனே அவவிரு வரும் இக்கங்காநதிக்கரையிலேயே ஜடைகளைத் தரித்துக்கொண்டனர் பிறகுதான் அவர்களை ஸுகமாகக் கங்கையைத் தாண்டுவித்தனன். மிகுந்த பலமுடையவர்களும் மேலான கஜராஜத்தை நிகர்த்தவர்களும் பகைவரைப் பறக்கச் செய்பவர்களுமாகிய அநத ராமலக்ஷ்மணர்கள் இருவரும் ஜடைகள் தரித்து மாவுரிகளை உடுத்துச் சிறந்த பாணங்களையும் வில்லையும் கத்தியையும் பிடித்து மிக்க மனவூக்கத்துடன் நாற்புறமும் உற்றுப் பார்த்துக்கொண்டு ஸீதையுடன் கூடிப் போயினர். எண்பத்தாறுவது ஸர்க்கம் முற்றிற்று.

குஹன் பரதனுக்கு ராமன் ஜலாஹாரஞ் செய்து ஸீதையுடன் இங்குணமரத்தின் கீழ்ப் படுத்திருந்தது முதலான வ்ருத்தாந்தங்களைக் கூறுதல்.

குஹன் 'ராமலக்ஷ்மணர்கள் ஜடைகளைத் தரித்து அரண்யம் போயினர்' என்று மிகவும் அப்ரியமான வார்த்தையைச் சொல்லிக்கொண்டிருக்கையில், பரதன்கேட்டு ராமன் அங்ஙனம் ஜடைகள் தரித்துப் போனதுபற்றித் தன கருத்தின்படி திரும்பி வருவாரேமாட்டாரேவென்று பெருஞ் சிந்தையில் ஆழ்ந்தனன். அதிஸுகுமாரனும் மஹா பலமுடையவனும், சிங்கத்தின் தோள்போன்ற தோள்களும் திரண்டிருண்டு நீண்ட புஜதண்டங்களும் செந்தாமரை மலர்போல் அகன்றழகிய கண்களும் விளங்கப்பெற்று இளம்பருவம் பொருந்திப் பார்க்க இனியனுமாகிய பரதன் சிறிதுகோரம் தெளிகதிருகது மனத்தில் வருத்தம் மீதூரப்பெற்றுப் பொறுக்கமுடியாமல் மாவெட்டியால் மிகவும் அடிக்கப்பட்ட யானைபோல் கபீலென்று தரையில் வீழ்ந்தனன். அருகிலிருந்த சத்ருக்ன அவ்வவஸ்தையிலிருக்கிற பரதனை அணைத்துச் சோகத்தினால் பீடிக்கப்பட்டு மதிமயங்கிப் பெருங் குரலுடன் புலம்பி அழத்தொடங்கினன். அனந்தரம் பர்த்தாவை யிழந்த வ்யஸனத்தினால் வருந்தி முகம் வாடி உபவாஸத்தினால் இளைத்திருக்கிற பரதனது தாய்மார்களனைவரும் அவ்விடம் வந்தனர். அவர்களும் தரையில் வீழ்ந்திருக்கிற பரதனைச் சுற்றிக்கொண்டு கதறினர். அவர்களில் கௌஸல்யைமாத்ரம் மனவருத்தத்துடன் பரதனருகிற்சென்று அவனைக் கட்டிக்கொண்டனள். கன்றினிடத்தில் மிகுந்த ப்ரீதியுடைய பசு தன் கன்றுக்குட்டியைப்போலவும் தமது அருமைக்குமாரனைப்போலவும் தபஸ்வினியாகிய கௌஸல்யை பரதனை அணைத்துச்

சோகத்தின் மிகுதியால் புலம்பி அவனை நோக்கி 'மகனே! உன் தகப்பனை ராமவிரஹமெனும் வ்யாதி எதாயினும் பாதிக்கின்றதோ? இப்பொழுது ராஜவம்சத்திலுள்ள எம்மைல்லோருடைய வாழ்வும் உன்னதீனமாகவே யிருக்கின்றது. குழந்தாய்! ராமன் தன் தம்பியோடு அரண்யம் போயினன். தசரதமஹாராஜரும் மரணம் அடைந்தனர். ஆகையால் நீ ஒருவனே எங்களெல்லோர்க்கும் திக்கு. உன் முகத்தில் தைன்யத்தைப் பார்த்தாயினும் ராமன் திரும்பிவரமாட்டானே?" என்னும் ஆசையுடன் உன்னைப்பார்த்துப் பிழைத்திருக்கின்றனன். மகனே! லக்ஷ்மணனைக் குறித்தாவது, போயும் வந்தும் என் வயிற்றில் ஒருவனேயாகப் பிறந்து இப்பொழுது பார்வையும் தானுமாக அரண்யம் போயிருக்கிற என்குமாரனாகிய ராமனைக்குறித்தாவது உனக்கு எவராயினும் அப்ரியவார்த்தையைக்கேட்பித்தார்களா என்ன?" என்று விளவினள். மஹாயஸ்வியாகிய அப்பரதன் முஹூர்த்தகாலங்கழித்து மூர்ச்சை தெளிந்து ரோதனஞ் செய்துகொண்டே கௌஸல்யையைப்பார்த்து 'தாயே! நீசொன்னது ஒன்றும் இல்லை' என்று ஸமாதானப்படுத்தி குஹனைப்பார்த்து 'குஹனே! எனதண்ணன் ராமன் ராத்ரி எங்கிருந்தனன்? ஸீதாதேவி எங்கிருந்தனள்? லக்ஷ்மணன் எங்கிருந்தனன்? அன்றியே எதைப்புசித்து எங்குப் படுத்து நித்ரைபோயினர்? இவையெல்லாம் எனக்குச் சொல்வாய்' என்றனன். வேடர்தலைவனாகிய அந்தக் குஹனும் ராம வ்ருத்தாந்தத்தைச் சொல்லும்படியான பாக்யம் நேர்ந்ததேயென்று ஸந்தோஷித்துத் தனக்கு ப்ரியனும் ஹிதனுமாகிய ராமன் தன்னிடத்திற்கு அதிதியாய் வருகையில் அவனுக்குத் தான் எப்படி உபசாராதிகள் செய்தானோ, ராமன் ஏதேது கடத்தினானோ அதையெல்லாம் பரதனுக்குச் சொல்லமுயன்று

‘நான ராமபோஜனத்திற்காகப் பலவகை அன்னங்களை யும் பக்ஷியங்களையும் பலவகைப் பழங்களையும் மேலும்சோ ஷ்யலேஹ்யாதிகள் பலவற்றையும் ஸித்தஞ் செய்தனன். தானஞ் செய்கையே க்ஷத்ரியதர்மமன்றிப் பெற்றுக்கொ ள்ளுதலன்றுகையால் ராமன் க்ஷத்ரதர்மத்தை நினைத்து அவைகளில் ஒன்றையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஸத்ய பராக்ரமனுகிய அந்த ராமன அதையெல்லாம் என்னையெ டுத்துக்கொண்டுபோகும்படி ஆஜ்ஞை செய்தனன். ரா ஜனே! அம்மஹானுபாவன் என்னை நோக்கி ‘நண்பனே! க்ஷத்ரியர்களான எமக்கு எப்பொழுதும் ப்ரதிக்ரஹிப்ப துகூடாது. தானம் மாத்ரமே தகும்’என்றுரைத்து ஸமா தானப்படுத்தினன். பெரும்புகழுகிய ராமன் லக்ஷ்மண ன்கொண்டு வந்து கொடுத்த ஜலத்தைபபருகி ஸீதையுந் தானுமாக அன்றிரவு உபவாஸமிருந்தனன். அனந்தரம் அப்போது ராமன் பருகி மிகுந்தஜலத்தை லக்ஷ்மணனும் பானஞ்செய்தனன். [1] அம்மூவரும் வாக்குநியமத்துடன் மனஒக்கங்கொண்டு [2] ஸந்த்யாவந்தனஞ் செய்தனர். அத ன்பிறகு லக்ஷ்மணன தானே சீக்ரமாகச் சென்று தர்ப்பங் களைக் கொண்டுவந்து நன்றுகப் பரப்பி ஸுகமாகப் படுக்

---

1 மூவருமென்கையால ஸீதைக்கும் ஸந்த்யா ஸமயததில் த்யா ன ஜபாதிகள் உணடென்று தெரிகின்றது.

2 முன்பு ‘ததஸ்தீரோத்தராஸஞ்சஹஸ் ஸந்யியாமந்வாஸ்ய பஸ் சிமாம் । ஜலமேவாதேஹோஜ்யம் லக்ஷ்மணோஹ்யாத° ஸ்வயம்’ என்று முதலில் ஸந்த்யாவந்தனஞ்செய்து பிறகு ஜலத்தைப் பானஞ் செய்ததாகச் சொல்லி யிருக்க, இங்கு மாற்றிச் சொல்லுவதெப்படி யெனில—முன்பு சொன்னதே க்ரமம். இங்கு குஹன் கொண்டு வந்த அன்னத்தை ராமன் புசிக்கவில்லையென்றபோது மற்றதைப் புசித்தானென்று ப்ரஸக்தி வருகையில, அதைப்பற்றி முதலில ஜல பானத்தைச் சொலலிப் பிறகு ஸந்த்யாவந்தனஞ் சொல்லப்பட்டது. ஆகையால தோஷமில்லையென்றறிக.

கை ஏற்படுத்தினன். ராமனும் ஸீதையும் அந்தப்படுக்கை யில் சயனித்திருந்தனர். ஸீதா ராமர்களின் பாதங்கள் கங்கையின் கரையில கடந்ததனல புழுதி படிந்திருந்தது பற்றி, லக்ஷ்மணன் ராமனது பாதங்களைத் தானே அலம்பி ஸீதைக்கு ஜலங்கொண்டு வந்து கொடுத்துப் பாதங்களை அலம்பிக்கொள்ளச் செய்து பிறகு அப்புறம் சென்று தூரத்தில் காத்துக்கொண்டிருந்தனன். ராமன ஸீதை இருவரும் அன்றிரவு படித்திருந்த தர்ப்பங்களும் இவைதான. பரந்தபனுகிய லக்ஷ்மணன் நாணடிபடாதிருக்கும் பொருட்டு விரல்களுக்கும் உள்ளங்கைக்கும் கவசந்தரித்து, பாணம் நிறைந்திருக்கும் இரண்டு அம்பறாத்தூணிகளையும் தோளின பின்புறத்தில் கட்டி, வில்லை நாணேறிட்டுக் கையில் பிடித்துக் கண்ணிமைகொட்டாமல் ராமனைச்சுற்றிக் காப்பாகத் திரிந்துகொண்டிருந்தனன். பிறகு நான் அப்பொழுது ராமன் நித்ரை செய்துகொண்டிருக்கையில் லக்ஷ்மணன் என் செய்துவிடுவானேனவென்று சங்கித்து மேலான பாணங்களையும் வில்லையும்தரித்து லக்ஷ்மணன் போன இடங்களெல்லாம் அடிதோறும் அவனைப் பின் சென்று எண்பந்துக்களும் தனுஸ்ஸைப்பிடித்துச் சோம்பலின்றி என்னைச் சூழ்ந்திருக்க, மஹேந்த்ரனைப்போன்ற ராமனைப் பரிபாலித்துக் கொண்டிருந்தனன். எண்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் இங்குணமரத்தினடியில வீதையின்
ஆபரணத்தினின்றும் இறைந்த பொன்
பொடிகளையும், அவளது பட்டுவஸத்
ரங்களின் நூலிழைகளையும் பார்த
துச் சோகித்தலும், ஸ்ரீராமபி
ராலுக்கு நேர்ந்த துன்பத்
தை நினைத்துப் புலம்புதலும்.

பரதன் தானும் மந்த்ரிகளுமாக குஹன் சொன்ன வார்த்தைகளையெல்லாம் நன்றாகக் கேட்டு அவ்விங்குணமரத்தினடியிற் சென்று ராமன் சயனித்திருந்த படுக்கையைப் பார்த்துத் தாய்மார்கள் அனைவரோடும் 'இங்கு மஹாநுபாவனாகிய ராமன் சயனித்தனன். இவ்விடத்தில் அவன் படுத்திருந்தமையால் கலங்கியிருக்கின்றது. மஹாபாக்யம் பொருந்திய இக்ஷ்வாகுவம்சத்தில் பிறந்தவரும் மஹாபாக்யசாலியும் புத்தியித் சிறந்தவருமாகிய தசரதமஹாராஜரது வயிற்றில் பிறந்த ராமன் தரையில் படுத்துநித்ரைசெய்யத் தகாதவன், விலையுயர்ந்த வஸ்த்ரங்களை அடியில் விரித்து மேலே சிறந்த மான்தோல்களை அமைத்து, மெத்தென்ற பஞ்சசயனங்களில் படுத்திருந்த புருஷச்ரேஷ்டனாகிய ராமன் இப்பொழுது பூமியின்மேல் எப்படி படுக்கின்றனன்? விமானங்கள் போன்ற உப்பரிகைகளுடைய மாளிகைகளிலும் மேற்புறங்களிலும், பொன் வெள்ளிகளால் இயற்றப்பட்ட தரையுடையவைகளும் பலவகைப் புஷ்பங்களைத் தூவி சந்தனகரு தூபங்களிட்டு நன்கு அலங்காரஞ் செய்யப்பட்டவைகளும் வெளுத்த மேகம்போன்றவைகளும் குவியல் குவியலாய்க் கிளிகள் குலாவுதலால் இனியவைகளும் ஜிலுஜிலென்று குளிர்ந்திருப்பவைகளும் அத்தர் புனுகு பன்னீர் பச்சைக்கற்பூரம் முதலான வாஸனையுடையவைகளும் பொன்னிலிதிக்கப்பட்ட சுவருடையவைகளும் மேருபர்வதம்போல் விளக்கமுற்ற

வைகளுமான உப்பரிகைகளிலும் பகைவரை அடக்கும் பராக்ரமசாலியாகிய அம்மஹாபாவன் படுத்திருந்து, கீதங்களும் அதை அனுஸரித்த வீணாதி வாத்யங்களும் முழங்க, இங்குமங்கும் நடந்துசெல்கின்ற பரிசாரகர்களின் கைவளை தோள்வளை சிலம்புத்தண்டை அரைநூல் மாலை முதலான ஆபரணத்வனிகள் மேலெழ, மத்தளங்களின் ஒலி மீதூர, ஸூதமாகதவந்திகள் பலரும் உரிய கத்ய ப்ரபந்தங்களையும் துதிகளையும் பாட, அவைகளைச் செவியுற்றுத் துயிலுணர்ந்த எம்மையன் இவ்விடத்தில் புல்பகுக்கையில் படுத்திருந்தானென்பது நம்பத்தகுந்ததன்று. இது எனக்கு உண்மையாய்த் தோற்றவில்லை. என்மனது மயக்கமுறுகின்றதோ? அல்லது இதெல்லாம் ஸ்வப்னமென்றே எனக்குத் தோற்றுகிறது. இல்லையாயின் ஒருகாலும் நேரக்கூடாதவை எப்படி நேரும்? அன்றியும் ராமனைப்போன்றவனுக்கு இப்படியும் ஸம்பவிக்குமா? தசரதமஹாராஜாது வயிற்றில் பிறந்த ராமனும் பூமியில் படுக்க நேர்ந்ததே! ஆகையால் காலத்தைதகாட்டிலும் தெய்வம் சிறந்ததெனக் கூடாது. இது நிஜம். விதேஹராஜன் திருமகளும் தசரதசக்ரவர்த்தியின மருமகளும் இனிய காட்சியுடையவளும் ராமனுக்கு ப்ராணனைக்காட்டிலும் ப்ரியையுமாகிய ஸீதாதேவியும் அவ்வண்ணம் தரையில் படுத்தனளே! இதோ எனது ஐயன் படுத்தபடிக்கை. எம்மையன் புரண்டு திரும்பின இடம் இது இவ்விடம கடினமாயிருக்கையால் சரீரத்தை இபபடியப்படி திருப்பும் பொழுது இப்படிக்கையிலுள்ள தர்ப்பங்கள் கலைந்திருக்கின்றன. மேலான இப்படிக்கையில் ஸீதை வழிநடந்துவந்த ஆபாஸத்திலில் ஆபரணங்களைக் கழற்றுமிலபடுத்தாளென்று நினைக்கின்றனன். ஆனதுபற்றியே ஆங்காங்கு அவளது பொன்னபரணங்களினின்று இறைந்த தங்கத்து

கள்கள் பற்றியிருக்கின்றன. அப்பொழுது ஸீதையின் மேல் பட்டாடை இங்கு வைத்திருந்ததென்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகின்றது. ஆனதுபற்றியே ஆங்காங்குப் பட்டுநூலிழைகள் ஓட்டிக்கொண்டு விளங்குகின்றன. மனஇரக்கத்தை விளைவிக்குந் தசையிலிருக்கின்ற அந்த ஸீதைபர்த்தாவே தெய்வமென்றிருப்பவளாகையால் தான் இளம்பருவமுடையவளும் ஸுகுமாரையுமாயிருந்தும் இப்படிப்பட்ட புல்படுக்கையில்படுத்து வருத்தமறியாதிருக்கின்றனள். இதனால் பதிவ்ரதைகளுக்குக் கணவனுடன் படுப்பது எப்படிப்பட்டதாயினும் ஸுகமாகவே யிருக்குமென்று நிணைக்கின்றேன். ராமன் பார்யையோடுகூட அதாதன்போல் இப்படிப்பட்ட புல்படுக்கையில் என் நிமித்தமாகப் படுத்தானல்லவா? ஐயோ! நான் என்ன பாபிஷ்டனே! ராமன் சக்ரவர்த்திகளின் வம்சத்தில் பிறந்தவன்; ஸமஸ்தலோகங்களாலும் கொண்டாடப்பட்டவன்; ஸமஸ்தலோகங்களுக்கும் மனக்களிப்பை விளைவிப்பவன்; கருநெய்தல்போன்ற அழகானவர்ணமுடையவன்; பார்க்கப் பதிணாயிரங் கண்கள்வேண்டும்படி இனிய காட்சியுடையவன், இப்படி ஜன்மத்திணாலுங் குணங்களாலும் ப்ரஜைகளை ரஞ்ஜிப்பிக்குந்தன்மையாலும் ஸாமுத்ரிகலக்ஷணங்களாலும் ராஜ்யத்துக்கு உரியவனாகிய அந்த ரகுகுலாலங்காரன் ஸுகத்தை அனுபவிக்கத் தகுந்தவனேயன்றி துக்கத்திற்குச்சிறிதும்தகுந்தவனல்லன் அப்படிப்பட்ட ராமன் ஸுகத்தை விளைவிப்பதும் ஓப்பில்லாததுமான் அப்படிப்பட்ட ராஜ்யத்தைத் துறந்து வெறுந்தரையில் எப்படி படுத்திருந்தனன்? மஹானுபாவனும் சுபலக்ஷணங்களமைந்தவனுமாகிய லக்ஷ்மணன் தமையனாகிய ராமனை ஸங்கடகாலத்தில் கைவிடாமல் பின் செல்கின்றனன். ஆகையால் அவனன்றோ தன்யன்! ஸீதையும் பர்த்தாவைப் பின்றொடர்ந்து அரண்

யஞ் சென்றுளாகையால் அவளும் நல்வினையளாயினள். நாமெல்லோரும் அம்மஹானுபாவனைப் பிரிந்திருக்கின்றனம். அவன் நம்மைக் கைப்பற்றுவானே மாட்டானேவென்று ஸந்தேஹமாயிருக்கின்றது. தசரதன் ஸ்வர்க்கத்திற்குப்போய் ராமன் அரண்யம் போகையில், இப்பூமி ஓட்டுகிறவனில்லாத ஓடம்போல் ப்ரதான காயகனில்லாமல் பாழடைந்தாற்போல் எனக்குத் தோற்றுகின்றது. இப்படி ராஜ்யமெல்லாம் அநாயகமாயிருப்பினும் எத்தப்பகை மன்னவனும் ராமனது புஜபலத்திலில் காக்கப்பட்டிருக்கின்ற இந்த ராஜ்யத்தை, அவன் அரண்யத்திலிருந்த போதிலும் கைப்பற்றுவதற்கு மனத்திலுங்கூட நினைக்க மாட்டான். இப்பொழுது அயோத்யை மதில்காப்பவரின்றி குல்மஸ்தானங்களுக்கேற்ற காப்புமில்லாதிருக்கின்றது. இதிலுள்ள குதிரைகளும் யானைகளும், அவைகளைப் பாதுகாக்கும் வேலைக்காரர்களெலலோரும் ராமனிடத்தில் மனஞ்சென்றிருப்பதால் கட்டுத்தறியில் கட்டுவாரில்லாமல் அலைகின்றன. பட்டணத்து வாசல்களெல்லாம் கதவுமூடப் பெறுதிருக்கினறன. ஆனது பற்றியே அப்பட்டணம் தகுந்த காப்பின்றிக கருவிகள் குறையப்பெற்று வெளியில் காப்பவர் சுற்றிக் காத்திருக்கவும் பெறுமல் துர்தசையடைந்திருப்பினும் பகைமன்னவர்கள் ராமபயத்திலில் விஷங்கலந்த பக்ஷியங்களைப்போல் கைப்பற்றாவுகொள்ளாதிருக்கின்றனர். நான இது முதலாக நித்யமும் காய்கிழங்குகளை ஆஹாரஞ் செய்து ஜடைகள் தரித்து மரவுரி உடுத்து வெறுந்தரையிலோ, அல்லது புற்களைப் புரப்பியோ படுக்கப்போகின்றனன. மேலும், ராமன் செய்த ப்ரதிஜ்ஞையை அவனுக்கில்லாதபடி நான் எடுத்துக்கொண்டு ராமனுக்காக இதுவரையில் சென்றதுபோக இனி அவன் இருக்கவேண்டிய கடைசி காலம் வரையில்

ஸுகமாக வனவாஸஞ் செய்யப்போகின்றனன். இப்படி செய்வதனல் ராமனது ப்ரதிஜ்ஞையும் பொய்யாகாது. எனதண்ணலுக்காக நான் அரண்யவாஸஞ் செய்கையில் சத்ருக்னன் எனனை அனுஸரித்துக் கூட இருப்பான். பூஜ்யனுகிய ராமன் லக்ஷ்மணனேனுகூட அயோத்தியைப்பரிபாலித்து வருவானுக. அயோத்தியில் ப்ராஹ்மணர்கள் ராமனுக்கு அபிஷேகம் நடத்துவார்களாக. எனது இஷ்டதேவதைகள் நான் விரும்பின இவ்விருப்பங்களை நிறைவேற்றுவார்களாக! நான் தலைவணக்கி நமஸ்காரஞ்செய்து பற்பலவிதங்களால் அருள்புரியச் செய்யினும் அருள் புரியாவிடினும், அப்பொழுது நான் ராமனிருக்கும் காலம் முழுமையும் வனத்தில் வஸித்து அவனை அனுஸரித்தேயிருக்கப் போகின்றனன். தம்பியும் தாஸனுமாகிய என்னை இந்த அனுஸரணமாத்ரத்துக்காவது ராமன் அங்கீகரியாதிருக்கத் தகான்' என்று புலம்பலுற்று வருந்தினன். எண்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ பரதன் கங்காநதியைத் தாண்டிப் பரத்வாஜாஸ்ரமத்திற்குப்போதல. }

ரகுகுலகுமாரனுகிய பரதன் அனறிரவெல்லாம் அக்கங்கையின் கரையிலேயே இருந்து விடியற்காலத்தில் எழுந்திருந்து சத்ருக்னனைப் பார்த்து 'சத்ருக்ன! எழுந்திரு. இன்னும் படுத்திருக்கிறையென்? சீக்ரமாக வேடர்தலைவனை குஹனை அழைத்து வருவாயாக. உனக்கு நன்மை உண்டாகுமாக. அவன் நம்மை இந்நதியைக் கடக்கச் செய்வான்' என்றனன். அவன் இங்ஙனம் எழுப்புகையில் தம்பியாகிய சத்ருக்னனும் [1] 'நான் நீ நினைத்துக்கொண்

---

1 இதலைல சரமபர்வ நிஷ்டனையிருப்பவனுக்கு ப்ரதமபர்வத்தில்

டிருக்கிற அப்பெரியோனையே சிந்தித்து விழித்துக்கொ
ண்டே யிருக்கின்றனன். தூங்கவில்லை' என்றனன். அந்தப்
புருஷச்ரேஷ்டர்க ளிருவரும் இவ்வாறு பேசிக்கொண்டி
ருக்கும் பொழுதே குஹன் பரதனைப் பார்க்கத் தகுந்த
வேளை அறிந்து உள்ளே புகுந்து அவனைப் பார்த்துக்
கைகளைக் குவித்து 'ககுத்ஸ்த குலாலங்காரனே! இன்றி
ரவு சுதீதரத்தில் ஸுகமாக வஸித்திருந்தாயல்லவா? உன
க்கும் உன் ஸைன்யத்திற்கும் ஆரோக்யமா?" என்று விளை
வினன். ராமனிடத்தில் மனஞ்சென்ற பரதன், குஹன்
ஸ்னேஹத்துடன் சொன்ன வார்த்தையைக் கேட்டு அவ
னைப் பார்த்து 'வேடர் தலைவனே! எங்களுக்கு ராத்ரி
ஸுகமாகவே இருந்தது. இதுவேயன்றி வேண்டிய பூ
ஜைகளெல்லாம் உன்னால் நன்கு நடந்தன. உனது செம்ப
டைவர்கள் ஓடங்கள் பலவற்றைக் கொண்டுவந்து இக்கங்
காநதியைமாத்ரம் எங்களைத் தாண்டுவிக்கவேண்டும்' என்
றனன். அனந்தரம் குஹன், பரதன் த்வரையுடன் செய்த
ஆஜ்ஞையைக் கேட்டு மீளவும் தன்பட்டணத்தில் புகு
ந்து தன் பந்துக்களைப்பார்த்து 'விழித்துக்கொள்ளுங்
கள். எழுந்திருங்கள். உங்களுக்கு எப்போதும் சுபம் உண்
டாகுமாக. ஓடங்களை இழுத்துக்கொண்டு வாருங்கள். பர
தாதிகளை ஆற்றைத்தாண்டுவிப்போம்' என்றனன். அவன்
அங்ஙனஞ் சொல்ல, ராஜாஜ்ஞையாகையால் அவர்கள எ
ழுந்து வேகமாகச் சென்று நாற்புறங்களில் எலலாத்து
றைகளினின்றும் ஐந்நூறு ஓடங்களைக் கொண்டுவந்தனர்.
அவ்வேடர்களேயன்றி ஸ்வஸ்திகமெனப்படும் ராஜார்ஹ
மான ஓடங்களையும் இழுத்துக்கொண்டுவந்தனர். இந்த

அபிநிவேசம் தனது சேஷியின் திருப்திக்காகவே யென்று தெரிகின்
றது. சரமபர்வநிஷ்டை—பாகவதாபிமானத்தி லொதுங்குகை. ப்ர
தம பர்வம்—பகவத்விஷயம்.

ஸ்வஸ்திக ஓடங்கள் நான்கு மூலைகளிலும் பெருமணிகள் கட்டியிருக்கும். இவைகளில் பலகைகளால் சுவர்களும் அவற்றில் உரியபடிச் சாளரங்களும் ஏற்பட்டிருக்கையால் வேண்டியவளவு காற்று வீசிக்கொண்டிருக்கும். மேலும் அவை இரும்பாணிகளிட்டுத் திடமாக நிருமிக்கப்பட்டிருப்பவை. பிறகு ஸ்வஸ்திகமெனப்படும் அவ்வோடங்களில் மிகவும் அழகாய்விளங்குகின்ற ஓர் ஓடத்தைத் தூதன் கொண்டுவந்தனன். அதில் கீழெல்லாம் வெள்ளைக் கம்பளிகள் பரப்பப்பட்டிருந்தன. மணி முதலியவற்றால் அது களிப்புண்டாகும்படி கணகணவென்று சப்தித்துக் கொண்டிருந்தது. அவ்வோடத்தின்மேல் பரதனும் மஹாபலமுடையனகிய சத்ருக்னனும் ஏறிக்கொண்டனர். அனந்தரம் புரோஹிதரான வஸிஷ்டரும் பின்னும் பெரியோரான ப்ராஹ்மணர்களும் அதன்மேல் முதலில் ஏறினர். பிறகு ராஜபத்னிகளான கௌஸல்யாதிகள் ஆரோஹித்தனர். பிறகு வண்டிகளும் படைச்சரக்குகளும் ஏற்றப்பட்டன. இப்படி ஓடமேறப்புறப்படுகையில் [1] தாம் இழிந்திருந்த வீடுதிகளில் தீயிட்டுப் படபடவென்று எரிப்பவர்களின் சப்தமும், ஓடமேறுவதற்கு நான் நானென்று முற்பட்டுத் துறைக்கு வருபவர்களின் கூக்குரலும், கங்காதீர்த்தத்தில் நீராடுபவர்களின் அலையொலியும், தந்தம் உபகரணங்களை என்னுடையது என்னுடையதென்று அவஸரப்பட்டு எடுப்பவர்களின் கலகலசப்தமும் சேர்ந்து பெருந் த்வனியாகி ஆகாயத்தை எட்டியது. அப்பொழுது, ஓடங்களுக்குக் காற்றில் வேகத்துடன் போவதற்காக த்வஜங்கள் கட்டப்பட்டிருக்கை

I ராஜபடாகள் தாம் மற்றோரிடத்திற்குப் போகும்பொழுது முன்பிருந்த இடத்தில் செல்வப் பெருக்கின் பொருட்டு நெருப்பிடுவது வழக்கமென்று தெரிகின்றது.

யால், அவை செம்படவர்கள் ஏறினமாத்ரத்தில் அவர்க
ளின் ப்ரயத்னமொன்றையும் எதிர்பாராமல் அதிவேகத்
துடன், ஏறின ஜனங்களெல்லோரையும் இழுத்துக்
கொண்டுபோயின. அவைகளில் சில ஓடங்களில் ஸ்த்
ரீகளே நிறைந்திருந்தனர். சிலவற்றில் குதிரைகள் நிறை
ந்திருந்தன, மற்றுஞ்சிலவற்றில் மிகுந்த விலையுள்ளதேர்க
ளும் வண்டி முதலியவைகளும் அவைகளிற் கட்டும் கோ
வேறுகழுதைகளும் எருதுகளும் நிரம்பியிருந்தன. அனந்
தரம் அவ்வோடங்கள் அக்கரை சேர்ந்து ஏறின ஜனங்
களை இறக்கித் திரும்பிவரும்பொழுது குஹனது பந்து
க்களான செம்படவர்கள் பாரமின்றி லகுவாயிருக்கையால்
அவ்வோடங்களை ஜலப்ரவாஹத்தில வேடிக்கைக்காக வி
சித்ரமாகச் செல்லும்படி திருப்பினர். [1] த்வஜங்களோடு
கூடிய யானைகள் மாலவெட்டியால் தூண்டப்பட்டு ஜலத்
தில் இழிந்து நதியைக் கடந்து செல்லுகையில, கடந்து
செல்லும் பர்வதங்கள்போல் விளங்கின. சிலர் ஓடங்களை
ஏறித் தாண்டினர். சிலர் குடங்களால நீந்திக் கடந்தனர்.
சிலர் கைகளால் நீந்திச் சென்றனர். கங்காஸ்னானஞ்செய்
து பரிசுத்தமாகிய அந்தஸைன்யம் செம்படவர்கள் தாண்
டிவிக்க அக்கரையைத் தாண்டி மைத்ரமென்னும் முஹூர்

---

1 'ஸவைஜயந்தாஸ்து ஹஜா:' என்று மூலம். அரசாகள யானை
களின் முதுகில க்ருஹத்தை நிர்மாணஞ் செய்து அதிலிருந்து ப்ர
யாணமாயப் போவதுண்டாகையால 'ஸவைஜயந்தா ஹஜா:' என்ப
தற்கு க்ருஹங்களோடு கூடிய யானைகளென்று பொருள கூறப்பட்
டது. இதற்கனுகுணமாகவே 'ஸயீவஜா இவ பாவதாக' என்ற தருவ்
டாந்த வாகயத்தில 'யீவஜ ஹதள' என்னுந தாதுவைப் பற்றி நட
கும் பர்வதங்கள்போலென்று பொருள செய்யப்பட்டது. அன்றியே-
த்வஜத்தோடு கூடிய யானைகள மாலவெட்டியால் தூண்டப்பட்டு ஜல
த்திலிழிந்து நதியைத் தாண்டும்போது த்வஜத்துடன் கூடிய பர்வத
ங்கள் போல ப்ரகாசித்தன வென்றும் பொருள கொளக.

தத்தில் ப்ரயாகவனம் போய்ச்சேர்ந்தனர். மஹரஹுபா வருகிய பரதன் ஸைன்யத்தையெல்லாம் ஸமாதானப்படு த்தி அவரவர்க்கு வேண்டிய ஸ்தானங்களில் ஸுகமாக இறங்கும்படி விடுதிகளேற்படுத்தி மிகவும் வயதுசென்ற ரிஷிதிலகராகிய பரத்வாஜரைக்கண்டு நமஸ்காரஞ்செய்ய, வஸிஷ்டர் முதலான ருத்விக்குகளால் சூழப்பட்டுக் கால் நடையாகவே சென்றனன். அப்பரதன், தனது வேதங்க ளனைத்தையுமோதினவரும் மஹரஹுபாவரும் ப்ருஹஸ்பதி குமாரராகையால் தேவதைகளுக்குப் புரோஹிதரும் ப்ரா ஹ்மணச்ரேஷ்டரும்மாகிய பரத்வாஜமஹர்ஷியின் ஆச்ரமத் திற்குச் சென்று அங்கு அழகான பர்ணசாலைகளும் வ்ரு க்ஷஸமூஹங்களும் அமைந்து விளங்குகின்றதும் தன் ஸைன்ய இறங்கத்தகுந்ததும் அம்மஹர்ஷியினுடையது மான ஓர் பெரியவனத்தைக்கண்டனன். எண்பத்தொன்ப தாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் பரத்வாஜரைக் காணுதலும்,
ஒருவர்க்கொருவர் குசல
ப்ரஸ்னமும்.

புருஷச்ரேஷ்டனும் தர்மங்களை அறிந்தவனுமாகிய அந்தப் பரதன் கூப்பிடு தூரத்திலேயே பரத்வாஜாச்ர மத்தைக்கண்டு ஸைன்யத்தையெல்லாம் நிறுத்திவிட்டு, ஆயுதங்களையும் ஆபரணங்களையும் கழற்றிப் பொகட்டு, வஸ்த்ரங்களையெல்லாம் அவிழ்த்துவைத்து, மேலும் அ ரையில் இரண்டு பட்டுவஸ்த்ரங்களை உடுத்துப் புரோஹி தரை முன்னிட்டுக்கொண்டு மந்த்ரிகளோடு கூடிக் கால் நடையாகவே ஆச்ரமத்திற்குப் போயினன். பரத்வா ஜாச்ரமம் தூரத்தில் புலப்படும் பொழுதே ரகுவம்சவ்ருத்

தாந்தங்களை அறிந்த அப் பரதன் மந்த்ரிகளை நிறுத்திப் புரோஹிதரை முன்னிட்டுக்கொண்டு பரத்வாஜரைப் பார்க்கப் போயினன். பிறகு மஹாதபஸ்வியாகிய பரத்வாஜரும் வஸிஷ்டரைப் பார்த்தவுடனே சிஷ்யர்களைப் பார்த்து 'அர்க்யங் கொண்டுவாருங்கள்' என்று சொல்லிக்கொண்டே சீக்ரமாக ஆஸனத்தினின்றும் எழுந்திருந்தனர். மஹாதேஜஸ்வியாகிய பரத்வாஜர், வஸிஷ்டருடன்கூடி வந்து [1]பரதன் அபிவாதனஞ் செய்கையில் வஸிஷ்டருடைய ஸந்நிதானத்திலல் அவனைத் தசரதகுமாரனென அறிந்தனர். பிறகு தர்மங்களையறிந்த அந்தப் பரத்வாஜர் க்ரமமாக வஸிஷ்டருக்கும் பரதனுக்கும் அர்க்யங்களைக்கொடுத்து உடனே பழங்களைக்கொடுத்து, பிறகு 'க்ருஹத்தில் எல்லோரும் க்ஷேமமா?' என்று விணவி, பின்பு 'அயோத்யையே க்ஷேமமா? ஸைன்யமும் பொக்கிஷமும் பத்ரமா? ஸ்நேஹிதர்களும் மந்த்ரிகளும் க்ஷேமமாயிருக்கிறார்களா?' என்று விசாரித்தனர். ஆனல் தசரதமஹாராஜன் மரணமடைந்தானென்றறிந்தவராகையால் ராஜவிஷயமே எடுக்கவில்லை. வஸிஷ்டரும் பரதனும் பரத்வாஜரைப்பார்த்து [2] 'உமது சரீரத்தில் ஆரோக்யமா? அக்னி கார்யங்கள் நன்கு நடக்கின்றனவா? வ்ருக்ஷங்கள் நன்றாயிருக்கின்றனவா? சிஷ்யர்கள் க்ஷேமமா? வனத்திலுள்ள ம்ருகங்களும் பக்ஷிகளும் க்ஷேமமா?' என்

---

1 முன்பு பரதன் மரவுரி உடுத்துக்கொண்டதாகச் சொல்லியிருக்க இங்குப் பட்டு வஸ்த்ரந் தரித்தானென்பது எப்படி யென்னில் முன் மரவுரி உடுத்துவதாக ப்ரதிஜ்ஞை மாத்ரஞ் செய்தாலும் கையால் பரத்வாஜாஸ்ரமத்திற்கு வந்த பின்பே அதை அநுவர்த்தித்தானென்று தெரிகின்றது.

2 ஸமானவயஸ்ஸைப்பற்றி வஸிஷ்டர் நமஸ்காரஞ் செய்யவிலலை யென்றுணர்க.

று விணவினர். மஹாதபஸ்வியாகிய பரத்வாஜர் அவ்விருவ ரையும் பார்த்து 'எல்லாம் க்ஷேமமே' என்றுரைத்து உ டனே ராமனிடத்திலுள்ள ஸ்னேஹாநுபந்தத்தினல் ப ரதனைப் பார்த்து 'நீ ராஜ்யபரிபாலனம் பண்ணும் ஸமய த்தில் அதைவிட்டு இப்பொழுது இங்கேன் வந்தனை?எனக் கு எல்லாவற்றையும் விசதப்படுத்திச் சொல்வாயாக. கார ணந்தெரியாமையால் என்மனது தெளிவற்றிருக்கின்றது. பகைவரைப் பறந்தோடச் செய்பவனும் ஸமஸ்த ப்ராணி களுக்கும் மனக்களிப்பை விளவிப்பவனுமாகிய எவனைக் கௌஸல்யாதேவி பெற்றனளோ, எவன் தம்பியோடும் பார்யையோடும் வெகுகாலம் அரண்யவாஸஞ்செய்யும்படி தூரத்தப்பட்டனனே, மேலும் தந்தையாகிய தசரதன் ஓ ரு பெண்பிள்ளைக்குட்பட்டுப்'பதிணன்கு ஸம்வத்ஸரங்கள் அரண்யத்தில் இருப்பாய்' என்று எந்தப்பெரும்புகழோ னை ஆஜ்ஞாபித்தனனே, ஒரு பாபத்தையும்அறியாத அந் த ஸ்ரீராமனுக்கும் அவன் தம்பியாகிய லக்ஷ்மணனுக்கும், நீ ராஜ்யத்தைப்பெற்று அகண்டகமாக அதை அனுபவி க்கவேண்டுமென்னும் நினைவால் பாபகார்யமேதுஞ்செய்ய விரும்பாயல்லவா?" என்று விணவினர். பரத்வாஜர் இந்த னம் கேட்கையில், பரதன் கண்ணுங் கண்ணீருமாகி மன வருத்தத்தினல் வார்த்தை தழதழக்கப் பெற்று அம்மு னிவரை நோக்கி 'பூதபவிஷ்யத் வர்த்தமானங்களை அறிந் தவரும் மஹாமஹிமையுடையவருமாகிய நீர் என்னை இந் நனம் நினைப்பீராயின், நான் பாழாய்விட்டனன். என்னல் தோஷமே உண்டாகாதாகையால் நான் ஏதேனும் தோ ஷஞ்செய்தேனேவென்கிற ஸந்தேஹமும் எனக்கில்லை. ஆகையால் நீர் இப்படி கர்ணகடோரமாக என்னை அரு னிச்செய்யலாகாது. என்தாயே இவ்வளவும் செய்யினும், நான் இல்லாதபோது அவள் சொல்லிச்செய்த இக்கார்

யம் நான் ஸம்மதித்ததுமன்று. அதனல் எனக்கு ஸந் தோஷமும் உண்டாகவில்லை. அதை நான் அங்கீகரிக்க வும் இல்லை. நான் புருஷஸ்ரேஷ்டனகிய அந்த ராமனை அருள்புரியச் செய்து அயோத்யைக்கு அழைத்துக்கொ ண்டுபோய் அவன் பாதங்களுக்கு நமஸ்காரஞ் செய்து கொண்டிருப்பதற்காக வந்தனன். நீர், நான் இப்படிப்ப ட்ட நினைவோடு இவ்விடம் வந்ததாக நினைத்து என்மீது அருள்புரியவேண்டும். மஹாநுபாவரே! மஹீபதியாகிய ராமன் இப்பொழுது எங்கிருக்கின்றனன். எனக்குச்சொ ல்லவேண்டும்' என்று விண்ணவினன். வஸிஷ்டர் முதலான ருத்விக்குகளும் 'பரதனிடத்தில் அருள்புரியவேண்டும்' என்று ப்ரார்த்திக்கையில், பிறகு பகவனகிய பரத்வாஜர் மனந்தெளிந்து பரதனைப் பார்த்து 'புருஷஸ்ரேஷ்டனே! தமையனுக்குத் தொண்டுபூண்டிருத்தலும் இந்த்ரியங் களை அடக்கிப் பெண்ணாசை பொருளாசை மண்ணாசை களைத் துறந்திருப்பதும், பெரியோர்கள் சொற்படி நடப் பதும் ஆகிய இவையெல்லாம் ரகுவம்சத்திற் பிறந்த உனக்குத் தகுந்தவையே. நான் யோகமஹிமையால் உன்மனத் திலுள்ள இவ்விஷயத்தைத் தெரிந்துகொண்டே இருக் கின்றனன். ஆயினும், அது மாறுமல் நிலைநிற்கவேண்டு மெனவும், உனக்குப் பெரியோனை அனுஸரிப்பதாலுண் டான கீர்த்தி நாற்றிசையிலும் வளரவேண்டுமெனவும், இவ்வாறு விண்ணவினன். தர்மங்களையறிந்த ராமனும் ஸீ தையும் லக்ஷ்மணனும் எங்கிருக்கிறார்களோ அது எனக் குத் தெரியும். உனது அண்ணனகிய ராமன் சித்ரகூடமெ ன்னும் மஹாபர்வதத்தில் இருக்கின்றனன். அவ்விடத்தி ற்கு நாளைத்தினம் போகலாம். இன்றைத்தினம் நீ உன் மந்த்ரிகளோடுகூட இங்கிருப்பாயாக. நீ எல்லாம் நன்கறி ந்தவன்; விரும்பியவற்றைக் கொடுப்பதில் வல்லவன்; ஆ

கையால் நான் விரும்பினபடி செய்வாயாக' என்றனன். ராஜகுமாரனுகிய பரதனும் மிகவும் கம்பீரமான புத்தியுடையவனுகையால் மஹர்ஷி சொன்னதற்கு நிரம்பவும் ஸந்தோஷித்து 'அப்படியே செய்கிறேன்' என்றுசொல்லி அன்றிரவு அம்முனிவரது ஆச்ரமத்திலிருக்க மனங்கொண்டனன். தொண்ணூற்றுரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரத்வாஜர் பரதனுக்கும் அவனது ஸைன்யத்திற்கும் ஆதித்யஞ்செய்தல்.

அப்பொழுது அவ்வாச்ரமத்திலேயே இறங்குமபடி மனத்தில் நிச்சயித்திருக்கிற கைகேயியின் புதல்வனை பரதனைப்பார்த்து பரத்வாஜமுனிவர் 'போஜனமிரூன அதிதி ஸத்காரம்பெறவேண்டு' மென்று ப்ரார்த்தித்தனர். பரதனும் அவரைப் பார்த்து 'முனிவர்களாகிய தமக்கு அரண்யத்தில் கிடைக்குமளவும் அர்க்யத்தையும் பாத்யத்தையும் காய் கிழங்குகளையும் கொடுத்து எமக்கு ஆதித்யஞ் செய்யப்பட்டதே. இன்னும் என்?' என்றனன். பிறகு பரத்வாஜர் மனத்தில் நகைத்து அந்நகையை வெளியிடும் முகவிகாஸத்துடன் பரதனைப் பார்த்து 'என்னிடத்தில் உனக்கு ப்ரீதி உளதென்று எனக்குத்தெரியும். எதாவதொரு உபசாரத்தைப்பெற்று நீ ஸந்தோஷிப்பாய். ஆயினும், புருஷதிலகனே! உன்னுடன் வந்திருக்கிற இந்த ஸைன்யங்களுக்கெல்லாம் விருந்து செய்ய விரும்புகின்றனன். என் ப்ரீதி எப்படிப்பட்டதோ, அதற்குத் தகுந்தபடி நீ அனுமதி செய்வதே யுக்தம். புருஷ லாமனே! ஸைன்யத்தை யெல்லாம் தூரத்தில் என் நிறுத்திவிட்டு நீ மாத்ரம் இவ்விடம் வந்தனை? ஸைன்யத்துடன் என் வரவில்லை?' என்று விஞவினர். பரதன் கைகூப்பி அமழு

னிவரைப் பார்த்து மிகுந்த மதியுடையவரே! நீர் கோபிப் பீரென்னும் பயத்தினல் ஸைன்யத்துடன் கூட வரவில்லை. மஹானுபாவரே! ராஜாவாவது ராஜகுமாரனவது ஸைன் யங்களோடுப்ரயாணஞ் செய்யுங் காலத்தில் தமது தேசத் தில் தாபஸர்களிருக்கும் இடங்களைத் தவிர்த்து அவர்க்கு அந்த ஸைன்யங்களால் பாதை உண்டாகாதபடி வேறு வழியில கடந்து செல்லவேண்டும் மிகுந்த ப்ரபாவமுடை யவரே! இம்மஹா ஸைன்யம் மேலான குதிரைகளும் கா லாட்களும் வெற்றுமனிதர்களும் மதித்துச் சிறந்த யானை களும் நிரம்பப் பெற்று மிகவும் விஸ்தாரமுள்ள பூமியைப் படர்ந்து என்னுடன் வருகினறது. அவையெல்லாம் இவ் விடம் வந்து ஆச்ரமங்களிலுள்ள வருக்ஷங்களையும் குளங் களையும் நிலங்களையும் பர்ணசாலைகளையும் பாழ் செய்யா திருக்கவேண்டுமென்னும் இக்காரணத்தைப் பற்றியே கா னிருவனே வந்தேன்' என்றனன. அம்மஹர்ஷி 'இவ் விடம் ஸைன்யத்தை வரவழைப்பாய்' என்று ஆஜ்ஞாபிக் கையில், உடனே பரதன் ஸைனையை அவ்வாச்ரமத்திற்கு வரச் செய்தனன. பிறகு பாத்வாஜர் பரிசுத்தமான அக்னி ஹோத்ராக்ருஹத்திற்குள்சென்று மூன்றுதரம் ஆசமனஞ் செய்து இரண்டுதடவை வாயைத்துடைத்து, ஆதித்யம் ஸித்தப்படித்தும்பொருட்டு [1]ஆஹ்வானமந்த்ரத்தைச் சொ ல்லி விச்வகர்மாவை இங்ஙனம் அழைத்தனர். 'நான் க்ருஹாதிகளை உடனே நிருமிக்கும்படியான விச்வகாமா வை அழைக்கின்றேன். பரதனுக்கும் அவனது ஸைன்ய த்திற்கும் ஆதித்யஞ் செய்ய விரும்புகின்றனன். அவ்விஷய த்தில் விச்வகர்மா இதற்கு வேண்டிய க்ருஹம் முதலிய வற்றை ஸித்தப்படுத்துவாஞக. அப்படியே யம வருண குபேரர்கள் மூன்று திக்பாலகர்களையும் தேவேந்த்ரன்

---

1 அழைப்பதற்கு உரிய மந்த்ரம்.

முதலான தேவதைகளையும் அழைக்கின்றனன். ஆதித்யஞ் செய்ய விரும்புகின்றேன். அவ்விஷயத்தில் அவரவர்கள்வந்து ஸித்தப்படுத்துகிற அன்னபாநாதிகளைக் காத்திருக்கவேண்டும். பூமியிலும் ஆகாயத்திலும் கிழக்கு முகமாகவும் மேற்கு முகமாகவும் பாய்கிற நதிகளனைவரும் ஓரேயமயத்தில்இவ்விடம் வருவார்களாக. அவர்களில் சிலர் கர்ஜூராதிகளால் செய்யப்பட்ட மைரேயமென்னும் மத்யத்தைப் பெருக்குவார்களாக. சிலர் நன்கு பக்வமாகச் செய்யபபட்ட மத்யத்தைக் கொடுப்பார்களாக. மற்றுஞ் சிலர் கரும்புரஸம்போல் மதுரமான குளிர்ந்த ஜலத்தைப் பெருக்குவார்களாக. மேலும், கானஞ் செய்வதற்காக [1] தேவகந்தர்வ ஜாதியிற் பிறந்த விஶ்வாவஸுவையும் ஹாஹாஹூஹூ என்பவர்களையும், அப்படியே தேவஜாதியர்களான அப்ஸரஸ்த்ரீகளையும் கந்தர்வ ஜாதியர்களான அப்ஸரஸ்த்ரீகளையும் அழைக்கின்றனன். மேலும், நாட்யத்திற்காக, க்ருதாசி விஶ்வாசி மிஶ்ரகேசி அலம்புஸை நாகதந்தை ஹேமை ஹிமை அத்ரி க்ருதஸ்தலை ஆகிய இவர்களை அழைக்கின்றனன். தேவேந்த்ரனை அடுத்திருக்கும் அப்ஸரஸ்த்ரீகளையும், ப்ரஹ்மாவினிடமிருக்கும் அப்ஸரஸ்த்ரீகளையும், அவரது கூத்துப்பாட்டுக்குரிய உபகரணங்களுடன் காலசார்யரான தும்புருவையும் வரவேண்டுமென்று அழைக்கின்றனன். உயர்ந்த ஆடையாபரணங்களை இலகளாகவும் சிறந்த மடந்தையர்களைப் பழங்களாகவுமுடையதும் உத்தர குருதேசத்தில் தேவார்ஹமாகி விளங்குவதுமான சைத்ரரதமென்னும் குபேரனது உத்

I. மனுஷ்யகந்தர்வர்கள் தேவகந்தர்வர்களென்று இருவகையுண்டாகையால் இங்கு தேவகந்தர்வஜாதியிலென்று கூறப்பட்டது.

யானம் இங்கு வருமாக. மிகுந்த மஹிமை பொருந்திய சக்த்ரன் இவ்விடத்தில் எனக்காக பக்ஷய போஜ்ய சோஷ்ய லேஹ்யங்க ளென்னும் நான்கு வகைப்பட்ட அன்னங்களை யும் அவற்றில் ஓவ்வொன்றும் பலவிதமாகவும் அளவின் றியுமிருக்கும்படி நிருமிப்பாயாக. மேலும் அந்தச் சக்த்ரன் ஓஷதிகளுக்கு ப்ரபுவாகையால், செடிகளினின்றும் அப் போது பறித்த சித்ர விசித்ரமான பூமாலைகளையும் ஸுரை முதலான பானத்ரவ்யங்களையும் பலவகைப்பட்ட மாம்ஸங் களையும் கொடுப்பாயாக' என்று ஆஹ்வானமந்த்ரங்க ளை ஜபித்தனர். யோகப்ரபாவத்தோடும் அழைத்தபடி வாராதபக்ஷத்தில் தண்டிக்கும்படியான ஓப்பில்லாத மஹி மையோடும் கூடி அம்முனிவர் சிக்ஷாசாஸ்த்ரத்தின்படி ஸ்வரங்களை ஸ்பஷ்டமாகவும் தவறுதலின்றியும் உச்சரி த்து இம்மந்த்ர வாக்யங்களை ஜபித்தனர். அம்முனிவர் இங்ஙனம் கிழக்குமுகமாகக் கைகூப்பி மனத்தில் த்யானி த்துக்கொண்டிருக்கும்பொழுதே அகதத் தேவதைகள் அனைவரும் வேறுவேறாக அவ்வாஸ்ரமத்திற்கு வந்து சே ர்ந்தனர். பிறகு காற்றானது மலயதர்துர பர்வதங்களில் திரிந்து புழுக்கத்தைப் போக்குந் தன்மையுடன் நல்ல வா ஸனை அமைந்து ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஸுகமாக வும் மங்கலமாகவும் வீசிக்கொண்டிருந்தது. பிறகு ஆகா யத்தினின்றும் இடை வெளியின்றி ஓயாமல் மலர் மழை கள் பொழிந்தன. நாற்றிசையிலும் தேவதுந்துபி வாத்ய கோஷம் செவிப்பட்டது. காற்றுக்கள் மிகவும் இனிதாக வீசின. அப்ஸரஸ்த்ரீகள் ஆடினர்; தேவகந்தர்வர்கள் பாடினர். வீணை முதலிய வாத்யங்களும் ஒலிக்கலாயின. இங்ஙனம் வீணாதி வாத்யங்களாலுண்டான அந்தச் சப்த மானது ஸ்வரங்களில் ஏற்றக் குறையில்லாமலும் ஸ்ருதி யோடொத்ததும் லயத்தோடு கூடியதுமாகி ஆகாயத்தி

லும் பூமியி லுமுள்ள ஸமஸ்த ப்ராணிகளுடையவும் செவி யிற் புலப்பட்டது. மனிதர்களனைவர்க்கும் செவிக்கினிதா கிய அந்த திவ்ய கானத்வனி நின்றவுடன் பரதனது ஸை ன்யத்திலுள்ளவர் விஸ்வகர்மாவுடைய கிர்மாணத்தைக் கண்டனர். நாற்புறத்திலும் ஐந்து யோஜனதூரம் பூமி மேடுபள்ளமில்லாமல் ஸமமாகி நீலம்போலும் வைடூர்யம் போலும் விளங்குகின்ற இளம் புற்கள் நிறைந்து திகழ்ந் தது. அவ்விடத்தில் வில்வம் விளா பலா மாதுளை நெல்லி மா முதலிய மரங்கள் காய்த்துப் பழுத்து மிகவும் அழகாய் விளங்கின. உத்தர குரு தேசத்தினின்றும் திவ்யமான உபயோகங்களுக்குத் தகுந்த சைத்ரதமென்னும் உத் யானம் வந்து சேர்ந்தது. திவ்யதிகளும் தீரங்களில் பல வ்ருக்ஷங்கள் விளங்கப் பெற்று அவ்விடம் வந்து பெருகின. நாறபுறமும் தாழ்வாரங் கட்டிய வெகு த்தநிறமுள்ள பெரிய மாளிகைகளும் யாஜன கட்டத் தகுந்த கொட்டாரங்களும் குதிரை லாயங்களும் மே டைகளும உப்பரிகைகளும் அழகிய புஷ்பாதி தோர ணங்களும் அங்குத் தோன்றின. மேலும் தோரணங் கள் நாட்டப்பெற்று வெண்மேகங்களை நிகர்த்துக் கற் பகமாலைகளால் அலங்காரஞ் செய்யப்பட்டுத் திவ்ய சந் தன ஜலங்கள் தெளிக்கப்பெற்று நாற்சதுரமாகி நெரு க்கமில்லாமல் விசாலமுமாகி அழகான ராஜக்ருஹமும் ஒன்றுண்டாயிற்று. அம்மாளிகையில் பலவகைப் படுக்கை களும் ஆஸனங்களும் வாஹனங்களும் நிரம்பியிருந்தன. அதில் திவ்யமான சர்க்கரைமுதலிய ரஸங்களும் மேலான நல்லுணவுகளும் உயர்ந்த ஸரிகைவஸ்த்ரங்களும் விளங் கின. பின்னும் அதில், அப்பம் முதலான பலவகைப்பக்ஷி யங்களும் ஸித்தமாயிருந்தன. பாத்ரங்கள் நன்கு துலக் கப்பெற்று நிகுநிகென்று ப்ரகாசித்தன. இவ்வளவேயன்றி

அதில் போஜன ஸ்ரேஷ்டி ஆஸனங்களும் வேறுவேறாக அமைக்கப்பட்டிருந்தன. மேலான துப்பட்டி பரப்பப்பெற்று நித்ரைபோவதற்குரிய சிறந்த பங்கையும் அதில் விளங்கியது. மஹாநுபாவனாகிய அந்தக்கைகேயியின் பிள்ளை பரதன் மஹர்ஷியிடம் அநுமதி பெற்றுப் பலவகை உத்தம த்ரவ்யங்கள் நிறைந்திருக்கிற அம்மாளிகையுட் ப்ரவேசித்தனன். புரோஹிதர்களும் மந்த்ரிகளும் பரதனுடன் அதனுள் புகுந்தனர். அவர்கள் அந்த க்ருஹம் நிருமித்திருக்கிற நீர்மையைப் பார்த்து மிகவும் ஆநந்தித்தனர். இவ்வளவேயன்றி அவன் அதை ராஜனைப்போல் பூஜித்து அதில் ராமன் உட்கார்ந்திருப்பதாகப் பாவித்து அவனுக்கு நமஸ்காரஞ்செய்து தான் வெண்சாமரத்தைப்பிடித்துக்கொண்டு அதன்கீழ் மந்த்ரிகள் உட்காரத்தகுந்த ஓராஸனத்தில் உட்கார்ந்தனன். மந்த்ரிகளும் புரோஹிதர்களும் க்ரமப்படி உட்கார்ந்தனர். பிறகு ஸேநாதிபதியும் அவனுக்குப் பிறகு படைத்தலைவனும் உட்கார்ந்தனர். பிறகு அவ்விடத்தில் ஒருமுஹூர்த்தகாலத்தில் பரத்வாஜமுனிவரின் ஆஜ்ஞையின்படி பாயஸங்களைச் சேருகவுடைய பாலாறுகள் பரதனது முன்னிலையில் பெருகின. அந்தநதிகளின் இரண்டு கரைகளிலும அம்மஹர்ஷியின் அநுக்ரஹத்தினால் வெள்ளை பூசப்பெற்று மிகவும் அழகாகிச் சிறந்த மாளிகைகள் தோன்றின. அம்முஹூர்த்தத்தில் தானே ப்ரஹ்மாவினால் அநுப்பப்பட்டவர்களும் திவ்யாபரண பூஷிதர்களுமான இருபதினாயிரம் அப்ஸரஸ்த்ரீகள் வந்தனர். பிறகு ஸ்வர்ணபரணங்களையும் ரத்நபரணங்களையும் முத்துமாலைகளையும் பவழஹாரங்களையும் அணிந்து விளக்கமுற்ற இருபதினாயிரம் பெண்கள் குபேரனால் அநுப்பப்பட்டு அவ்விடம் வந்து சேர்ந்தனர். புருஷன் எவனாயினும், தன்னை ஆலிங்கனம் பண்ணினமாத்

ரத்தில் காதலுற்று மதிமயங்கும்படியான அழகுபொருந்திய இருபதினாயிரம் அப்ஸரஸ்த்ரீகள், தேவேந்த்ரனால் அனுப்பப்பட்டு நந்தனவனத்தினின்றும் வந்தனர். நாரதர் தும்புரு கோபர் என்னும் இம்மூன்று கந்தர்வராஜர்களும் ஸூர்யன்போல் பளபளவென்று விளக்கமுற்றுப் பரதனிடம் வந்து பாடினர். பிறகு பரத்வாஜரின் ஆஜ்ஞைப்படி அலம்புஸை மிஸ்ரகேஸி புண்டரீகை வாமனை என்னும் அப்ஸரமடந்தையர் பரதனுக்கு முன்னேவந்து நாட்யஞ்செய்தனர். தேவ உத்யானமாகிய நந்தனாதிகளிலும் குபேரனது சைத்ரரதமென்னும் உத்யானத்திலும் எந்தெந்தப் புஷ்பமாலைகள் உண்டோ, அவையெல்லாம் பரத்வாஜரது ப்ரபாவத்தினால் ப்ரயாகக்ஷேத்ரத்திலுள்ள அவரது ஆஸ்ரம வ்ருக்ஷங்களில் புலப்பட்டன. இதுவரையிலும் பரதனுக்கு உபசாரமாகையில், இனி ஸைனிகர்களுக்காகவும் பரத்வாஜரின் கட்டளைப்படி வில்வமரங்கள் மத்தளம் வாசித்தன. தாளிமரங்கள் தாளம்போட்டன. அரசுமரங்கள் நாட்யமாடின. பிறகு முனிவரது மஹிமையால தேவதாரு பனை மஞ்சாடி புங்கைமுதலிய மரங்கள் மகிழ்ச்சிகொண்ட குள்ளர்களும் குறளர்களுமாகித் திரிந்தன, சிம்சுபை நெல்லி நாவல்முதலான செடிகளும் பெண்ணுருவந் தரித்து அங்கு விருந்துண்ணும் பரதனது ஸைந்யஜனங்களைப் பார்த்து 'மஹாஜனங்களே! மத்யம் வேண்டியவர் மத்யத்தைப் பானஞ் செய்வீர்களாக. பசியுடையவர் பாயஸம் உண்பீர்களாக. மாம்ஸம் வேண்டியவர் பரிசுத்தமான மாம்ஸத்தைப் புசித்து மகிழ்வீர்களாக. ஒன்றிலும் குறைசெய்யவேண்டாம். எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் புசிக்கலாகும்' என்றுரைசெய்தன. ஒவ்வொரு மனிதனுக்கும் ஏழெட்டுப் பெண்கள் வீதம் வந்துசூழ்ந்துகொண்டு அழகான நதிக்கரைகளில்

எண்ணெய் தடவி உடம்பைப்பிடித்து ஸ்னானஞ்செய்வித்தனர். அழகான கண்களையுடைய சில மடந்தையர் உடம்பைப் பிடிக்கவந்து ஸ்னானஞ்செய்தவர்களின் உடம்பில் ஈரத்தைத் துடைத்து அலங்கரித்து ஏகாந்தத்தில் மத்யபானஞ் செய்வித்தனர். பரத்வாஜரது மஹிமையினால் ஏற்பட்ட சில வேலைக்காரர்கள் யானைகள் குதிரைகள் ஒட்டைகள் கோவேறு கழுதைகள் காளைகள் முதலான வாஹனங்களைக் காப்பவராகி க்ரமப்படி அவ்வவைகளுக்கு வேண்டிய ஆஹாரங்களைக் கொடுத்தனர். மிகுந்த பலமுள்ள அந்த வாஹனபாலர்கள் இக்ஷ்வாகு குலதிலகனுகிய பரதனது படைவீரர்களின் யானைமுதலான வாஹனங்களைத் தின்னும்படி தாண்டி, அவைகளுக்குக் கரும்பு களையும் தேன்கலந்த பொரிகளையும் ஆஹாரமாக அளித்தனர். குதிரைக்காரன் தன் குதிரை இனனதென்று அறிந்திலன். யானைக்காரன் தன் யானை இதுவெனறு தேன்றப்பெறுதிருந்தனன். அந்த ஸைனியிலுள்ளவர் எல்லோரும் மதகரமான த்ரவயங்களால் மதித்து மத்யபானத்தினல் மெய்ம்மறந்து புஷ்பசந்தனதிகளால் மனக்களிப்புற்று விளங்கினர். அவர்கள் விரும்பின பதார்த்தங்களையெல்லாம் இஷ்டப்படி அனுபவித்து மிகவும் திருப்தியடைந்து செஞ்சந்தனம் பூசி ஒவ்வொருவனும் பல அப்ஸரமடந்தையருடன் கூடி மஹாநந்தமடைந்து 'நாம அயோத்யைக்குப் போகோம். தண்டகாரண்யத்திற்கும் செல்லோம். இங்கேயே இருப்போம். பரதன ஏதோ ஒரு விதத்தில் க்ஷேமமாயிருப்பானுக. ராமனும் அப்படியே ஸுகமாயிருப்பானுக' என்றனர். காலாட்களும் படைவீரர்களும் யானைக்காரர்களும் குதிரைக்காரர்களும் யானை குதிரைகட்டும் வேலைக்காரர்களும், அம்முனிவர் செய்த ஸத்காரத்தினல் மதித்துத் தமக்கு காதனில்லையென்றே

நினைத்து ஸ்வதந்த்ரர்களாகி இங்ஙனம் உரைசெய்தனர். பரதன் பின்னேவந்த ஸைந்யஜனங்கள் ஆங்காங்கு வேறுவேறாக மனக்களிப்புற்றுக் கூச்சலிட்டுக்கொண்டு 'இதுவே ஸ்வர்க்கம். மற்றொன்றும் அன்று' என்றனர். அந்த ஸைன்யஜனங்களெல்லோரும் பூமாலைகள் சூடி ஆயிரமாயிரமாகக் கும்பல் கூடி ஆடுதல் பாடுதல் சிரித்தல் காற்புறமும் ஓடித்திரிதல் முதலிய பல சேஷ்டைகளைச்செய்தனர். அனந்தரம் அவர்கள் அம்ருதம் போன்ற அன்னங்களை யதேஷ்டமாகப் புசித்தும் திருப்தியடையாமல் அங்கு மிகுந்துள்ள திவ்ய பக்ஷ்யங்களைப் பார்த்து மேன்மேலும் புசிக்க நினைத்தனர். அந்த ஸைன்யமிலுள்ள பரிசாரகர்களும் தாஸிகளும் படைவீரர்களது பார்யைகளும் மற்றும் அங்குள்ள ஸ்த்ரீகளும் அனேகமாயிரங்கணக்குள்ள அனைவரும் புதிய வஸ்த்ரங்களை உடுத்துமிக்க மனக்களிப்புடன் உலாவிக்கொண்டிருந்தனர். அங்கு யானைகளும் கழுதைகளும் ஒட்டைகளும் பசுக்களும் குதிரைகளும் விளையாட்டின்பொருட்டு ஸைந்யஜனங்கள்கொண்டுவந்த ம்ருகங்களும் பக்ஷிகளும் பரத்வாஜ மஹிமையாலுண்டான பக்ஷ்யாதிகளை உட்கொண்டு மிகவும் புஷ்டியடைந்தன. அதில் எவனும் வேறே ஆஹாரம் எதையாயினும் தின்னவில்லை. அதிலும் ஒரு மனிதனும் வெளுத்த வஸ்த்ரந் தரிக்காதவனுவது பசித்தவனுவது அழுக்கடைந்த சரீரமுடையவனுவது தலையில் தூள் படிந்தவனுவது புல்படவில்லை. எல்லோரும் வெளுத்த வஸ்த்ரங்களை உடுத்துப் பசியென்பதறியாமல் எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்து பரிசுத்தமாக விளங்கினர். மேலும், ஆட்டு மாம்ஸங்களையும் பன்றி மாம்ஸங்களையும் சிறந்த வ்யஞ்ஜன ஸமூஹங்களையும் கன்றுகப் பழுத்த பழங்களையிட்டுச் சர்க்கரையுடன் காய்ச்சின ரஸாயனங்களையும் கனகு சமை

க்கப்பட்டு வாஸனையும் ருசியுமுள்ள பருப்பு வகைகளையும் வெளுத்த அன்ன ராசிகளையும் இட்டு நிறைக்கப்பட்டவை களும் புஷ்பங்களால் விசித்ரமாக அலங்காரஞ் செய்யப் பெற்று நாற்புறமும் நிரம்பின அனேகமாயிரம் பாத்ரங்க ளையும் பார்த்து அந்த ஸைந்யங்கள் மிக ஆச்சர்யம் அடைந்தனர். அப்பொழுது அரண்யத்திலுள்ள கிணறு கள் அனைத்தும் பரமான்னங்களால் நிறைந்திருந்தன. அங்கு முனனம் திரிந்துகொண்டிருந்த பசுக்களும் எவ் வளவு வேண்டுமோ அவ்வளவு பாலைச் சுரந்தன. அங்கு ள்ள வ்ருக்ஷங்களெல்லாம் தேன்களைப் பெருக்கிக்கொண் டிருந்தன. அவ்விடத்து நடைவாவிகளெல்லாம் மைரேய மென்னும் மத்யங்களால் நிறைந்திருந்தன. அதைச் சுற் றி நாற்புறங்களிலும் பாத்ரங்களில் நன்கு பசனஞ் செய்த மான் மயில கோழி முதலியவற்றின் மாம்ஸங்கள் விளங்கி ன. ஆயிரமாயிரமாக அன்னக்குடங்களும் வ்யஞ்ஜன மிடப் பெற்ற அனேக லக்ஷம் குடங்களும் கோடிகோடியாகப் பொன்மயமான போஜன பாத்ரங்களும், சுக்கு முதலிய ஸ ம்பாரங்கள் சேர்த்து நன்கு மணஞ் சேர்க்கப்பெற்ற தயிர் நிறைந்த குடங்களும் சிறிய குடங்களும் வாணக்களும் அங்குப் புலப்பட்டன. அங்குச் சில மடிக்கள் மிகப்பழை யதும் புதியது மல்லாமல் விளாங்கனியின் பரிமள முள்ள வெளுத்த மேலான கபித்த மென்னும் மோர் நிறைந்திரு ந்தன. சில மடிக்கள் சுக்கு திப்பிலி மிளகுகளும் ஏலம் லவ ங்கம் தக்கோலம் நாகபுஷ்பங்களும் சர்க்கரை இஞ்சி சீர கங்களும் சேர்த்து மணமிடப் பெற்ற ரஸாலமென்னும் மோர் நிறைந்திருந்தன. சிலமடிக்கள் பாயஸம் நிரம்பியிரு ந்தன. இவைகளுக்கு வ்யஞ்ஜனமாகச் சர்க்கரைக்குவியல் களும் சர்க்கரை கலந்த யவகோதுமை அப்பங்களின் ராசி களும் புலப்பட்டன. அந்த ஸைந்யங்கள் நதித்துறைக

னில் பாத்ரங்களில் அரைத்து வைக்கப்பட்ட சீக்காய் நெல்லிக்காய்முதலியவைகளையும் உலர்த்தமாமுதலிய உடம்புப்பொடிகளையும் காய்ச்சின சீக்காய்முதலிய கஷாயங்களையும் எண்ணெய் வெந்நீர் முதலிய காரவகைஸ்னைத்ரவ்யங்களையும் கண்டனர். மேலும், வெளுத்துக் கூர்ச்சங்களோடு கூடின தந்த காஷ்டங்களும் கிண்ணங்களிலிடப்பட்ட வெளுத்த சாதனக் குழம்புகளும் கன்றுகத் துடைக்கப்பட்டுப் பளபளவென்று விளங்குகின்ற கண்ணாடிகளும் சிறந்த வஸ்த்ரங்களும் அனேகமாயிரம் பாதுகைகளும் பாதரக்ஷை ஜதைகளும் பாதரக்ஷை ஜதைகளும் மைச்சிமிழ்களும் சீபுகைகளும் மீசை முதலியவற்றைச் சரிப்படுத்தும் சிறிய கூர்ச்சங்களும் அலங்காரத்தின் பொருட்டு வைக்கப்பட்ட கத்தி முதலான ஆயுதங்களும் தனுஸுக்களும் கவசங்களும் சித்ரவிசித்ரமான படுகைகளும் அற்புதமான ஆஸனங்களும் ராசிராசியாக விளங்கக் கண்டனர். கழுதைகளும் ஒட்டைகளும் யானைகளும் குதிரைகளும் ஆஹாரம் தின்ற பின் ஜீர்ணமாகும் பொருட்டுத் தண்ணீர் குடிப்பதற்காக நீர் நிறைந்த மடுக்களும், ஸ்னானஞ் செய்வதற்குரிய துறைகள் பொருந்திக் கருகெய்தலும் தாமரையும் நிறைந்து ஆகாசம் போல் நிர்மலமான ஜலங்கள் பொருந்தி ஸுகமாக ஸ்னானஞ் செய்யத் தகுந்த குளங்களும் நீலமும் வைடூர்யமும் போன்று பசுக்களின் பொருட்டு நிர்மித்தஞ் செய்யப்பட்ட இளம் புல் கட்டுகளும் புலப்பட்டன. அந்தப் படையிலுள்ளவர் இதுவரையில் எங்கும் காணுததும் கேளாததும் யாதுப்ரயத்னமுமின்றி நிர்மித்ததும் அற்புதமாயிருப்பதால் ஸ்வப்னத்தை நிகர்த்ததும் இப்படியப்படியென்று சொல்லக்கூடாததுமாக அங்ஙனம் பரதனுக்காக மஹர்ஷி ஏற்படுத்தின அவ்விருந்தைக் கண்டு மிகவும் ஆச்சர்யம் அடைந்தனர். கந்தன

வனத்தில் தேவதைகள் விளையாடுவதுபோல் பரத்வாஜாப்ரமத்தில் இவ்வண்ணம் அவர்கள் நாளுவித விளையாட்டுகளைச் செய்துகொண்டிருக்கையில் அன்றிரவு கடந்தது. அனந்தரம் அந்நதிகளும் தேவகந்தர்வர்களும் அவ்வுத்தமஸ்த்ரீகளும் பரத்வாஜமுனிவரிடம் அனுமதி பெற்றுவந்தவழியே தத்தமிடத்திற்குப்போயினர் பொழுதுவிடிந்தபின்பும் மனிதர்கள் அவ்வண்ணமே மத்யத்தால் மிகவும் மதங் கொண்டு அப்படியே திவ்யாகருசந்தனப் பூச்சுக்களுடன் ப்ரகாசித்துக் கொண்டிருந்தனர்.[1] திவ்யங்களான பலவகை நற் பூமாலைகள் மனிதர்களால் படுக்கையில் துவக்கப்பட்டு வாடி மலர்கள் உதிர்ந்து தனித்தனியே சிதறிப் போயிருந்தன. தொண்ணூற்றொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் பரத்வாஜருக்குக கௌஸலயாதி
களை அறிவித்தலும், சித்ரகூடம்
போகப்புறப்படுதலும், இடையில
யமுனைநதிகரையிலுள்ள
வனத்தில் ஸைன்ய நிவேஶஞ்
செய்தலும்.

பிறகு பரதன் பரிவாரத்துடன் ஆதித்யம் பெற்று ராமனைப் பார்க்க மனவிருப்பங் கொண்டு பரத்வாஜரிடம் போயினன். பரத்வாஜ மஹர்ஷியும் அக்னி கார்யந் தீர்ந்தவுடன் தன்னிடம் வந்து கைகூப்பி நிற்கின்ற புருஷஶ்ரேஷ்டனான அந்தப் பரதனைப் பார்த்து[2] 'பாபமற்றவ

---

1 இதனால் இது இந்த்ரஜாலம் போலன்றி உண்மையான பதார்த்தமே யென்று தெரிகின்றது.

2 பரதவாஜமஹர்ஷி பரதனது மனஸ்ஸைப் பரீக்ஷிக்க இங்ஙனம் விருந்து செய்தனர். பரதனுக்கு ராமனிடத்தில் அன்பில்லையா

னே! உனக்கு எமதாஸ்ரமத்தில் ராத்ரி ஸுகமாகக் கடந்ததன்று! நான் கடத்தின ஆதித்யத்திற்கு உனது ஜனங்களெல்லோரும் த்ருப்தி அடைந்தார்களா? எனக்கு இதைச் சொல்வாய்' என்று விணவினர். மிகுந்த ஓளியுடன் விளக்கழுற்றுத் தான் புறப்படும்பொழுதே தன்னைப் பார்க்கும்பொருட்டு ஆஸ்ரமத்தினின்றும் புறப்பட்டு வருகின்ற அம்மஹர்ஷியைப் பார்த்துப் பரதன் கைகூப்பி நமஸ்கரித்து 'மஹானுபாவரே! நானும் என் மந்த்ரிகளும் எனது ஸைந்யஜனங்களும் குதிரை முதலான வாஹனங்களும் ஆகிய அனைவரும் ஸமஸ்தமான வாஞ்சித பதார்த்தங்களையும் பெற்று த்ருப்தி அடைந்திருக்கின்றனம். எமது பரிசாரகர்கள் முதலாக நாங்களெல்லோரும் இளைப்பாறி தேஹஸந்தாபமும் தீர்ந்து ஸம்ருத்தமான அன்னபானங்களையும் உட்கொண்டு அழகான க்ருஹங்களில் மிக்க ஸுகமாக வஸித்திருந்தனம். ரிஷிதிலகரே! உம்மிடத்தில் இஷ்டப்படி போய்வர அனுமதி வேண்டுகின்றனன். எனது ஜயனிடத்திற்குப் போகின்றனன். என்னை ஸ்னேஹம் பொருந்திய கண்களால் கடாக்ஷிப்பீராக. நீர் யோக மஹிமையால் எல்லாவற்றையும் அறிந்தவர். ஆகையால் பித்ருவசன பரிபாலனமென்னும் தர்மத்தை ஆசரிக்கின்ற அம்மஹாதீரனது ஆஸ்ரமம் எதுவோ சொல்ல வேண்டும். அதற்குப் போகும் வழி யாது? அது இவ்விடத்திற்கு எவ்வளவு தூரம்? இதையெல்லாம் எனக்கு ஸவிஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்றனன். பரதன் அங்ஙனம் விணவுகையில், மஹா தேஜஸ்வியும் மஹா தபஸ்வியுமாகிய பரத்வாஜர் அண்ணனைப் பார்க்க விரும்பு

யின் இந்தப் போகத்தில மூழ்கியிருப்பானென்று ரிஷியின் அபிப்ராயம். பரதன் அங்ஙனம் அதில் கால் தாழாமல் ராமனைப் பார்க்கப் பறந்தானென்று தெரிகின்றது.

கின்ற பாதனைப் பார்த்து 'பாதா! இங்கிருந்து இரண்டு ரையோஜனை தூரம் கடந்துபோகையில், முனிவர் தவிர மற்றை எவரும் புலப்படாத அரண்யத்தில் அழகிய தாழ்வரைகளும் காடுகளும் அமைந்த சித்ரகூடமென்னும் ஓர் பர்வதம் இருக்கின்றது. அதன் வடபாகத்தில் மந்தாகினியென்னும் ஓர் நதி பெருகிவருகின்றது. அதன்கரையில் வ்ருக்ஷங்கள் புஷ்பித்து நன்கடர்ந்து விளங்குகின்றன. நிரம்பப்பூத்து அழகான அரண்யங்களும் அங்கிருக்கின்றன. அப்பா! அந்நதியின பக்கத்திலேயே சித்ரகூட பர்வதம் இருக்கின்றது. அதில் ஓர் பர்ணசாலை உளது. அதில் அவர்கள் வாஸஞ்செய்கின்றனர். இது நிச்சயம். லக்ஷ்மணனுக்குத் தலைவனே! மஹாபாக்யமுடையவனே! இவ்விடத்திற்குத் தென்புறமாகப் போகும் மார்க்கத்தில் கொஞ்சதூரம் ரதகஜதுரகங்கள் நிறைந்த ஸைன்யத்தைக் கொண்டுபோய் அதற்குப் பின் தென்மேற்காகச் செல்லும் ஓர் கிரிவழியைப்பற்றி கடப்பாயாக. அரண்யங்களில் வழி ஸூக்ஷ்மமாயிருக்குமாகையால் அதற்கு வலதுபக்கத்திலாவது இடதுபக்கத்திலாவது விஸ்தாரமாயிருக்கும் ப்ரதேசத்தில் ஸீதையை கடத்திக்கொண்டு செல்வாயாக. பிறகு ராமனைப் பார்ப்பாய்' என்றனன். ப்ரயாணமென்று கேள்விப்பட்டு ராஜாதிராஜனுகிய தசரதனது பார்யைகள் கௌஸல்யையுதலானவர்கள் வாஸஸ்தானத்தைவிட்டு வெளியேவரத்தகாதவராயினும் வாஹனங்களைவிட்டு வந்தனஞ் செய்வதற்காக பரத்வாஜமஹர்ஷியைச் சுற்றிக்கொண்டனர். அவர்களில் வார்த்தகத்திணும் ரிஷிதர்ஶனத்திணும் கடுக்கமுற்றுப் புத்ரசோகத்தால் இளைத்து தீனையாயிருக்குங் கௌஸல்யாதேவி ஸுமித்ரையுடன்கூட அம்முனிவரது பாதங்களைத் தமது ஹஸ்தங்களால் பிடித்துக்கொண்டு நமஸ்காரஞ்செய்

தனர். பிறகு தன் மனோரதம் ஈடேறப்பெறாமல் யாவரும் இகழ்வதற்குமாத்ரம் இடமாக நின்ற கைகேயி நாணத்துடன் வந்து அம்முனிவரைப் பணிந்து மனம் புண்பட்டவளாகிக் கௌஸல்யாதிகளைப்போல் அம்முனிவர் எதிரில் நிற்க முகமில்லாமல் அம்மஹாநுபாவரை வலஞ்செய்யும் வ்யாஜத்தினால் அவ்விடமிருந்து சென்று பரதனது அருகில்போய் நின்றனள். பின்பு வ்ரதங்களில மனந்திடமாயிருக்கப்பெற்ற பரத்வாஜர் பரதனைப் பாராத்து 'ரகுகுலதிலகனே! [1] உன் தாய்மார்களில் அவரவர்களின் பேர் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். சொல்வாய்' என்று விளவினர். பரதன் வார்த்தை சொல்லுவதில் நிபுணனுகையால் புத்தியில் மிகுந்த பரத்வாஜர் சொன்ன வார்த்தையைக் கேட்டுக் கைகூப்பி 'மஹாநுபாவரே! இதோ தீனையாகிச் சோகத்தாலும் உபவாஸத்தாலும் இளைத்து தர்மதேவதைபோல் புலப்படுகின்றவளே, இவள் என் தந்தைக்குப் பட்டமஹிஷி. இவள் கௌஸல்யையென்னும் பேருடையவள். அதிதிவிஷ்ணுதேவனைப் பெற்றாற்போல் இவளே புருஷஶ்ரேஷ்டனும் ஸிம்ஹம்போல் கம்பீரமாக நடப்பவனுமாகிய ராமனைப்பெற்றவள். மனவருத்தமுற்று அரண்யத்தில் புஷ்பங்களை உதிர்த்த கர்ணிகாரச் செடியின் இளைபோல் நடுக்கமுற்றுக் கௌஸல்யையின் வலது புஜத்தை அணைத்து நிற்கின்றவளே, இவள் ஸுமித்ரை. வீரர்களும் உண்மையான பராக்ரமமுடையவர்களும் அப்ஸினதேவதைகள்போல் விளங்குங் குமாரர்களுமாகிய லக்ஷ்மண சத்ருக்னர்களிருவரும் இவளது புதல்வர்களே. எவருக்காகப் புருஷஶ்ரே

I ஸர்வஜ்ஞரான மஹர்ஷிக்குக் கௌஸல்யாதிகள் தெரிந்திருந்தும் பரதன் மூலமாகக் கைகேயியின் யோக்யதையை வெளிப்படுத்த விளவினர்.

ஷ்டர்களான ராமலக்ஷ்மணர்கள் ராக்ஷஸர் நிறைந்த தண்டகாரண்யத்திற்குத் துரத்தப்பட்டு ஜீவநாசமடைந்தவராகி இவ்வரண்யம் வந்து சேர்ந்தார்களோ, எவருக்காக தசரதர் பிள்ளைகளைப் பிரிந்து ஸ்வர்க்கம் அடைந்தாரோ, அப்படிப்பட்ட கோபிஷ்டையும் நற்புத்தியில்லாதவளும் கட்டழகியென்னுஞ் செருக்குடையவளும் தர்மத்தைவிட்டுக் கேவலம் பொருளாசையுற்றவளும் மிகக் கொடியவளும் நல்லவள்போல் மேலுக்குப் புலப்படினவளும் பாபத்தையே திடமாகக் கைப்பற்றினவளுமாகிய என் தாய் கைகேயியென்பவள் இவளே. இவளால்தான் இம்மஹாவ்யஸனத்தை அனுபவிக்கின்றேன்' என்றனன். அந்தப் புருஷசிகாமணி கண்ணீரால் வார்த்தை தழுதழுக்கப் பெற்று இங்ஙனஞ் சொல்லிக் கண்கள் சிவக்கச் சினந்து பெருமூச்சுவிடுகின்ற ஸர்ப்பம்போல் பெருமூச்செறிந்துகொண்டிருந்தனன். வரப்போகிற விஷயங்களையெல்லாம் அறிந்தவரும் புத்தியில் சிறந்தவருமாகிய பரத்வாஜமஹர்ஷியும் அங்ஙனம் மொழிகின்ற பரதனைப் பார்த்து ப்ரயோஜனம் அமைந்திருக்குமாறு 'பரதா! நீ [1]கைகேயியிடத்தில் தோஷம் உளதென்று நினைக்கலாகாது. ராமனை அரண்யத்திற்கு அனுப்பினதால் தேவதைகளுக்கும் தானவர்களுக்கும் ஆத்மஹித்துக்களான ரிஷிகளுக்கும் ஹிதமே உண்டாகப்போகின்றது' என்றனர். பரதன் மஹர்ஷிக்கு நமஸ்காரஞ் செய்து அவரிடம் ஆசீர்வாதம் பெற்று அவர்க்கு ப்ரதக்ஷிணஞ் செய்து ஸைன்யத்தை அழைத்து ப்ரயாணத்திற்கு ஸந்நாஹம் கடத்தும்படி ஆஜ்ஞாபித்தனன். அனந்தரம் ஸைன்யத்

---

1 கைகேயி தேவப்ரார்த்தனத்தால அங்ஙனஞ் செய்ததையும் ராவணவதாதிகளால் உலகங்களுக்கு ஸுகம் விளைவதையும் ஸர்வஜ்ஞரான மஹர்ஷி அறிந்து இவ்வண்ணம் மொழிந்தாரென்றுணர்க.

திலுள்ள ஜனங்கள் பலவகைப்பட்டவராகையால் தந்தமக்குத் தகுந்தபடி ஸ்வர்ணத்திலல் அலங்கரிக்கப்பட்டுஸித்தமாயிருக்கின்ற திவ்யமான குதிரைகள் மேலும் தேர்கள்மேலும் ஏறிக்கொண்டனர். பிறகு பெண்யாகனகளும் ஆண்யாகனகளும் ஸ்வர்ணமயமான இருப்புக்கயிறுகளும் த்வஜங்களுமுடையனவாகி வர்ஷாகாலத்தில் கர்ஜனைசெய்கின்ற மேகங்கள்போல் கழுத்தில் கட்டிய மணிபோசையுடன் புறப்பட்டன. பெரிதும் சிறிதுமாகி மிகுந்த விலையுள்ள பலவகை மேலான வாஹனங்கள் மனிதர்களால் தூக்கப்பட்டுப் புறபபட்டன. காலாட்கள் கால்கடையாகவே கூடப்போயினர். அனந்தரம் கௌஸல்யை முதலிய ஸ்த்ரீகள் ராமனைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பத்துடன் ஸந்தோஷமுற்று விளங்கிச் சிறந்த வாஹனங்கள் மேல் ஏறிப்போயினர். ப்ரீமானகிய பரதன், சந்த்ரஸூர்யர்கள்போல் கிரம்ப ஒளியுற்றதும வலிஷ்டாதிகளால அனுமதி செய்யப்பட்டு அழகுள்ளதுமாகிய பல்லக்கின்மேல் ஏறிப் பரிவாரங்கள் சூழப்பெற்றுப்போயினன, ரதகஜதுரகங்கள் திறந்து, அவ்விடத்தில் தெற்குமுகமாகப் பெருகிச் செல்கின்ற கங்காநதியின மேலண்டைக்கரையில் இழிந்திருந்த அம்மஹாஸைனியானது ம்ருகங்களும் பக்ஷிகளும் கிரம்பின பலவனங்களைத் தாண்டி ஆங்காங்குப் பர்வதங்களிலும் நதிகளிலும் இளைப்பாறி, மேற்கிளம்பின மேகம்போல் தென்திசைமுழுமையும் பரந்து ப்ரயாணமாய்ப் போயிற்று. அப்பொழுது யாகனகளும் குதிரைகளும் படைவீரர்களும் மிகுந்த ஸந்தோஷத்துடன் விளங்கப்பெற்ற அந்தப் பரத ஸைன்யமானது அம்மஹாரண்யத்தில் ப்ரவேசித்து அங்குள்ள ம்ருகபக்ஷிஸமூஹங்களைப் பயமுறுத்திக்கொண்டு மிகவும் ப்ரகாசித்தது. தொண்ணூற்றிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் சித்ரகூடத்தின் தாழ்வரையிலுள்ள வனங்களில புகுதலும், வனவர்ணனமும், ராமாஸ்ரமதைத தேடுதலும், புகையைப் பிடித்து ஆஸ்ரமததை அறிந்து ஸைன்யததை ஓடத்திலேயே நிறுத்துவதும்.

அம்மஹா ஸைன்யம் போய்க்கொண்டிருக்கையில், அரண்யத்திலுள்ள யானைமுதலியவற்றின் கூட்டங்களில் தலைமையுள்ள அந்தந்த ஜந்துக்கள் அந்த ஸைன்யத்தைக் கண்டு அச்சங்கொண்டு தந்தமது கூட்டடங்களோடு நெடுந்தூரம் ஓடிப்போயின. காட்டுவரிசைகளிலும் மலைகளிலும் நதிகளிலும் புள்ளிமான் கலைமான் புலி காடி முதலியம்ருகங்கள் ஆங்காங்குத் திகைத்து நின்றன. தர்மஸ்வபாவனுகிய அகதத் தசரத குமாரன மனக்களிப்புற்றுத் தனது பெரும் ஸைன்யம் ரதகோஷங்களாலும் குதிரைக் கனைப்பு முதலியவற்றாலும் பேரொலி செய்துகொண்டு பரந்து வருகையில் ப்ரயாணமாய்ப் போயினன. மஹாஸ்வபாவனுகிய பரதனது ஸைன்யம் ஸமுத்ரம்போல் அதிவிஸ்தாரமுடையதாகி, வர்ஷாகாலத்தில மேகம் ஆகாயதத்தைக் கவர்வதுபோல் பூமி முழுவதும் மறைத்துச் சென்றது. அச்சமயத்தில் பூமியானது மிகுந்த வேகமுள்ள குதிரைக் கூட்டங்களாலும் யானைகளாலும் சூழப்பட்டு நெடுநேரம் கண்ணுக்குத் தோற்றுமலேயிருந்தது. ஸ்ரீமானுகிய அந்தப் பரதன் வெகுதூரம் அங்ஙனம் சென்று வாஹனங்கள் மிகவும் இளைப்புற்றிருப்பது கண்டு ஆலோசனைகளில் ஸமர்த்தராகிய வஸிஷ்டரை நோக்கி 'எப்படியிருக்குமென்று நான் ஊஹித்திருந்தேனே; நான் எப்படி கேட்டிருந்தேனே; அப்படியே இதோ புலப்படுகின்றது. பரத்வாஜர் சொன்ன இடத்திற்கு ஸ்பஷ்டமாக நாம் வந்து சேர்ந்தனம். இதோ இதப் பர்வதமே சித்ரகூடம். இந்நதியே மந்தாகினி. அதோ தூரத்தில் கருமுகில்போல்

கறுத்த வனம் விளங்குகின்றது. இப்படி பாரும். மேகம் போல் புலப்படுகின்ற எனது யானைகள் இப்பொழுது அழகான சித்ரகூட பர்வதத்தின் தாழ்வரைகளைக் கொற்றிக் குளம் பறிக்கின்றன. வர்ஷாகாலத்தில் ஜலத்தை முகந்து கறுத்திருக்கும் மேகங்கள் மழை பெய்வது போல், தாழ்வரையிலுள்ள வருக்ஷங்கள் புஷ்பங்களைப் பொழிகின்றன. காண்பீர்'என்றுரைத்துப் பிறகு தம்பியைப் பார்த்து 'சத்ருக்ன! முதலைகள் நிறைந்த மஹா ஸமுத்ரம் போல் நாற் புறங்களிலும் ம்ருகங்கள் நிரம்பியதாகிக் கின்னரர்கள் ஸஞ்சரிக்கும் இடங்கள் துலங்கப் பெற்று விளங்குகின்ற இந்தப் பர்வதத்தைக் காண்பாய். சரத்காலத்தில் மழையைப் பெய்து வெளுத்திருக்கும் மேகங்கள் காற்றால் ஏவுண்டு ஆகாயத்தில் மிக்க வேகத்துடன உலாவுவதுபோல், இம் மான்களின் கூட்டங்கள் நமது ஸைன்யங்களால் துரத்தப்பட்டு விரைவாய் ஓடுகின்றன, பார். தென்னாட்டு மனிதர்கள் மேகம்போல் கறுத்து விளங்குகின்ற தலைமயிர்களை ஒருவிதமாக உயர எடுத்துக் கட்டி அவற்றில் பூமாலைகளைச் சூடுவது போல், இந்த வ்ருக்ஷங்களும் மேகம் போல் கறுத்திருக்கும் தமது சிரஸுக்களில் நிரம்பப் பூத்திருக்கிற புஷ்பங்களைச் சிரோபூஷணமாகத் தரித்திருக்கின்றன பயங்கரமாகப் புலப்படுகின்ற இவ்வரண்யம் முன்பு மனிதர்களின் ஸஞ்சாரமேயின்றி நிர்ப்பயமாயிருந்து இப்பொழுது நமது ஸைன்யத்திலுள்ள ஜனங்கள் நிரம்பப் பெற்று ஜனங்கள் நிறைந்த அயோத்யாபுரம்போலவே எனக்குப் புலப்படுகின்றது. குதிரை முதலியவற்றின் குளம்புகளால் கிளம்பின தூள் அரண்யம் முழுவதும் (அல்லது—ஆகாயம் முழுவதும்) மறைத்து நிற்கின்றது. இதனால் எனக்கு ராமாஸ்ரமமிருக்கு மிடத்தைக் கண்டு பிடிப்பது அஸாத்யமாகையால் காற்று எனக்கு ப்ரியஞ்

செய்ய விரும்பியது போல் சீக்ரமாக அந்தத் தூள அப் புறம் அடித்துக்கொண்டு போய்விடுகின்றது. சத்ருக்ஞ! சிறந்த ஸாரதிகள் ராமனைப் பார்க்கவேண்டு மென்னுங் குதூஹலத்தினால் அரண்யத்தில் குதிரைகள் பூட்டின ரதங்களின் மீதேறி அவைகளைச் சீக்ரமாகவும் நன்றாக வும் ஓட்டுகின்றனர், பார். அழகான தோகைகள் அமை யப்பெற்றுப் பார்க்க மிகவும் இனியவைகளாகிய இம் மயி ல்கள் ரதம் முதலியவற்றின் சப்தத்தைக் கேட்டுப் பயந்து சீக்ரமாக இதோ தந்தமது இருப்பிடங்களைச் சேருகின்ற ன, பார். இந்த ப்ரதேசம் மிகவும் அழகாயிருக்கையால் எனக்கு இது ஸ்வர்க்கமார்க்கமோ என்னும்படி தோற் றுகின்றது. ஆகையால் இது ரிஷிகளின் வாஸஸ்தானமெ ன்பது ஸ்பஷ்டம். அடவியில் புள்ளிமான்கள் பல பெண் மான்களோடு கூடிச் சரீரம் முழுமையும் புஷ்பங்களால் சித்ரஞ் செய்யப்பட்டவைபோல் அழகிய உருவங்களுடன் புலப்படுகின்றன. புருஷச்ரேஷ்டர்களாகிய ராமலக்ஷ்மண ர்களைக் கண்டுபிடிப்பதற்காக ஸைன்யத்திலுள்ளவர் ஆ ங்காங்குச் சென்று அரண்யம் முழுவதும் தேடுவார்க ளாக' என்றனன். பரதன் சொன்ன வார்த்தையைக் கே ட்டுச் சூரர்களான புருஷர்கள் சிலர் ஆயுதங்களைக் கையி லெடுத்து அவ்வரண்யத்தில் ப்ரவேசித்து அதில் கொஞ்ச தூரத்தில் புகை யெழும்பக் கண்டனர். அதைக் கண்ட வுடன் அவர்கள் திரும்பிப் பரதனிடம் வந்து 'மனிதர்க ளில்லாத இடத்தில் அக்னியிருக்க மாட்டாது. ஆகையால் இங்கேயே ராமலக்ஷ்மணர்களிருப்பது ஸ்பஷ்டம். ஒருக் கால் பரத்தபர்களும் புருஷசிகாமணிகளுமாகிய அந்த ராஜகுமாரர்கள் இங்கில்லாமற் போயினும், இங்கு ராம னை நிகர்த்த உத்தம தாபஸர்களாவது இருக்கவேண்டும். இதற்கு ஸந்தேஹமில்லையென்று நினைக்கிறோம்' என்ற

னர். பகைவரது பலத்தைதப் பாழ் செய்ய வல்லவனுகிய பரதன், ந்யாயமுணர்ந்தவர்கள் கொண்டாடும்படி அவர்கள் உரைத்த அவ்வுரையைக் கேட்டு ஸை ஜனங்களெல்லோரையும் பார்த்து 'நீங்கள் இங்குச் சப்தஞ் செய்யாமலிருப்பீர்களாக. இதற்கு மேல் நீங்கள் தாண்டி வரவேண்டாம். ராஜாக்களில் காலிருவனும், மந்த்ரிகளில் ஸுமந்த்ரனும் ருத்விக்குகளில் குருவாகிய வஸிஷ்டரும் ஆகிய இம்மூவர் மாத்ரமே போகின்றனம்'என்று ஆஜ்ஞாபித்தனன். இங்ஙனம் ஆஜ்ஞாபிக்கையில அத்தலைனயத்திலுள்ளவர் அனைவரும் அங்கேயே நிலைன்றிருந்தனர். பரதன் அக்தப் புகையின் நுனி புலப்பட்ட இடத்தில் கண்ணை நிலை நிறுத்திக்கொண்டு சென்றனன் அப்போது பரதன் நிறுத்திப் போன ஸைஜனங்கள் இனிச் சீகரத்திலேயே ப்ரியணகிய ராமனைப் பார்க்க கேரலாமென்றறிந்து பரமஸந்தோஷமடைந்து விடாமல் அந்தப் புகையின் நுனியையே பார்த்துக்கொண் டிருந்தனர். தொண்ணூற்று மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் சிதரகூடம் புகுந்ததுமுதல இது
வரையில நடநத ப்ரதிதின வ்ருத்தாந்தமும்,
ராமன் சித்ரகூடம் அயோததியைக் காட்டிலும் அழகாயிருககிறதென்று ரூபித்தலும்.

அனந்தரம் அவ்விடத்தில் தேவதைபோன்ற ஸ்ரீராகவன் பர்வதங்களிலும் அரண்யங்களிலும் ப்ரீதியுடையவனுகையால் அந்தச் சித்ரகூடபர்வதத்தில் ஒருமாஸம் வஸித்திருந்து பரதன் வருமன்று ஸீதைக்கு ஸந்தோஷஞ் செய்யவிரும்பியும் தன் மனத்தைக் கொஞ்சம் விநோதப்படுத்த முயன்றும் தேவேந்த்ரன் சசீதேவிக்குச் சொல்லுவதுபோல் தன் பத்னிக்குச் சித்ரங்களான சித்ரகூ

டபர்வதத்திலுள்ள விசேஷங்களைக் காண்பித்து 'கல்யாணி! ரமணீயமான இந்தச் சித்ரகூடபர்வதத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதலால் ராஜ்யங் கைசோர்ந்ததாவது கண்பார்களைப் பிரிந்திருத்தலாவது என் மனத்திற்கு எள்ளளவாயினும் வருத்தம் விளைக்கவில்லை. மங்கலஸ்வபாவமுடையவளே! இப்பர்வதம் பலவகைப் பக்ஷிகளோடுகூடி கைரிகதாதுக்கள் நிறைந்து ஆகாயத்தில் உறைவனபோல் மிகவு முயர்ந்த சிகரங்களோடு விளங்குகின்றது. பர்வதங்களிற் சிறந்த இதச்சித்ரகூடம் பலவகைத் தாதுக்கள் நிறைந்திருக்கையில் இதில் சில ப்ரதேசங்கள் வெள்ளியைப் போன்றவைகளும், சில ரக்தம்போல் சிவந்தும், சில பொன்வர்ணங்களும், சில நாணவர்ணங்களும், சில மஞ்ஜிஷ்டைவர்ணங்களும், சில இந்த்ர நீலவர்ணங்களும், சில புஷ்யராகவர்ணங்களும், சில ஸ்படிகவாணங்களும், சில தாழம்பூவர்ணங்களும், சில கக்ஷத்ரவர்ணங்களும், சில பாதரஸவர்ணங்களுமாகி மிகவும் ப்ரகாசிக்கின்றன. இந்தச் சித்ரகூடபர்வதம் முனிவர்களின் ஸந்நிதானத்தால் கொடுமையும் பகையும் நீங்கி மிகவும் சாந்தகுணம்பொருந்திய பலவகை மான்களும் பெரும்புலிகளும் சிறுத்தைகளும் கரடிகளும் பலவிதப் பறவைகளும் நிறைந்து மிகவும் விளங்குகின்றது. மேலும் இதில் மாகாவல் வேங்கை வெள்ளலத்தி முள்ளம் பலா கொன்றை அழிஞ்சில் தினிசம் பில்வம் திந்துகம் முருங்கில் குமிழம் வேம்பு மாவலிங்கம் இருப்பை மஞ்சாடி இலந்தை நெல்லி கடம்பு பரம்பு இங்குதம் மாதுளை முதலிய மரங்கள் புஷ்பித்தும் பழுத்தும் கிழல்நிறைந்தும் தழைத்தும் அழகாயிருப்பதால் இம்மலை மிகவும் அழகுபெற்றிருக்கின்றது. நல்லொழுக்கமுடையவளே! அழகான இம்மலையின் தாழ்வரைகளில், பார்த்தவுடனே மயிர்க்கூச்சலை விளைக்கின்ற கின்னரர்கள் தம்ப

திகளாய்க்கூடி ஒருவர்க்கொருவர் மனம்பொருந்தி வி
ஹாரஞ்செய்வதைக் கண்ணுறுவாய். வித்யாதரர்கள் மர
க்கிளைகளில் வாள்முதலிய படைக்கலங்களையும் சிறந்த
வஸ்த்ரங்களையும் தொங்கவிட்டிருப்பதைக் காண்பாய்.
வித்யாதரஸ்த்ரீகள் க்ரீடைசெய்யும் அழகான இடங்களை
யும் இதோ பாராய். சில இடங்களில் மேலிருந்துவிழும்
அருவிகளும் சிலஇடங்களில் பூமியைப்பிளந்து மேல்கிள
ம்பிவரும் அருவிகளும் சிலஇடங்களில் ஸாதாரணமாய்ப்
பெருகிவரும் நீரூற்றுக்களும் பெருகப்பெற்ற இப்பர்வதம்
மதஜலத்தைப் பெருக்குகின்ற மதயானைபோல் திகழ்கின்
றது. குஹையினின்று வீசுகின்ற இக்காற்றானது பலவ
கைப் புஷ்பங்களின் வாஸனையமைந்து க்ராணேந்த்ரியத்
திற்கு மிக இனிப்பைக் கொடுக்கின்றதே! இதற்கு எவ
ன்தான் ஸந்தோஷிக்கமாட்டான்? ஸர்வாங்கஸுந்தரி!
இங்கு உன்னோடும் லக்ஷ்மணனோடும்கூடிப் பல்லாண்டுகள்
இருப்பேனாயினும், அயோத்தியையை விட்டுப்பிரிந்த சோ
கம் எள்ளளவும் என்னைப் பாதிக்காது. அழகிய கோபமு
டையவளே! பலவகைப் புஷ்பங்களும் பழங்களும் நிறை
ந்து பலவகைப் பக்ஷிஸமூஹங்களுமடர்ந்து அற்புதமா
ன சிகரங்களுமமைந்து ஜம்புலன்களுக்கும் ஆநந்தம்விளை
க்கின்ற இப்பர்வதத்தில் எனக்கு நிரம்பவும் ப்ரீதிஉண்டா
யிருக்கின்றது. இந்த வனவாஸத்தினால் தர்மத்தில் தந்
தையின் கடனைத்தீர்த்ததும் பரதனுக்கு ப்ரியஞ்செய்
கையுமாகிய இரண்டுபலன்கள் எனக்கு சேரிட்டன. விதே
ஹராஜன் திருமகளே! இந்தச் சித்ரகூடத்தில் மே
வாக்காயங்களென்னும் மூன்று காரணங்களையும் தம் வச
மாக்குகின்ற பலவகை விநோதங்களையும் கண்டு என்னை
டுகூட நீயும் மனக்களிப்புறுகின்றனையா? கேளாய், ராஜ
குமாரத்தியே! என் முப்பாட்டன்மார்முதலிய முன்புள்ள

ராஜர்ஷிகள், இந்த வனவாஸம் இம்மையில் இன்பந் தருவதுமாத்ரமேயன்றி மறுமையிலும் இது வானுலகத்தையும் கொடுக்குமென்று மொழிந்தனர். இம்மலையில் சிலைகள் இருபுறமும் நிரம்பிக் கறுப்பு மஞ்சள் வெளுப்பு சிவப்பு ஆகிய பற்பல வர்ணங்கள்பொருந்தி அகன்று நாறுநாறுக விளங்குகின்றன. இந்தப் பர்வதத்தில் இரவில் எரிகின்ற அனேகமாயிரம் ஓஷதிகள் தமதுகாந்தியின் மிகுதியால் அக்னிஜ்வாலைகள்போல் தோற்றுகின்றன. அழகிய கோபமுடையவளே! இம்மலையில் சில இடங்கள் குகைகள் நிறைந்திருக்கையால் க்ருஹங்கள்போலவும், சில இடங்கள் செடிகளும் கொடிகளும் அமைந்திருக்கையால் உத்யானவனங்கள்போலவும், சில இடங்கள் ஓரே பாறையாகவும் ப்ரகாசிக்கின்றன. இதைச் சித்ரகூடபர்வதம் பூமியைப்பிளந்து மேலெழுந்ததுபோல் துலங்குகின்றது. இந்தச் சித்ரகூடத்திலுடைய இந்தச் சிகரமானது எல்லாவற்றிலும் அழகாய்ப் புலப்படுகின்றது. கோவிட புஷ்பங்களையும் புன்னைகபுஷ்பங்களையும் தகரபுஷ்பங்களையும் பூர்ஜபத்ரங்களையும் மேலிற்பரப்பப்பெற்றுத் தாமரையிதழ்களோடுங்கூடிய காமுகர்களின் படுக்கையைப் பார். மாதரசே! காமுகரால் மோந்து எறியப்பட்டு வாடிவதங்கின தாமரைப்பூமாலைகளும் அவர்கள் சாப்பிட்டெறிந்த பலவகைப் பழங்களும் புலப்படுகின்றன பார். இந்தச் சித்ரகூடம் வேர்களும் காய்களும் மிகுந்திருக்கப்பெற்று அலகாபுரியையும் மானஸமென்னும் ஸரஸ்ஸையும் உத்தரகுருதேசங்களையும் அதிக்ரமித்துச் சிறந்து விளங்குகின்றது. பெண்மணியே! ஸீதே! நான் உன்னோடும் லக்ஷ்மணனோடும் கூடி முன்னோர் சென்றவழியில் நின்று சிறந்த நியமங்களைக் கைப்பற்றி இந்தப் பதிநான்கு ஸம்வத்ஸர காலத்தையும் விளையாடிக் கடத்திப் பிறகு குல

தர்மமாகிய ப்ரஜாபாலனத்தை வளர்த்திக்கொண்டு ராஜ ஸுகத்தை அனுபவிக்கப் போகிறேன்' என்றனன். தொண்ணூற்று நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் மந்தாகினியென்னும் நதியின் அழகைக்காட்டி ஸீதையை மகிழ்வித்தல்.

ராமன் அங்ஙனம் மைதிலிக்குச் சித்ரகூடத்திலுள்ள விசித்ரங்களைக்காட்டி அதினின்றும் அப்புறத்திற்சென்று அங்கு மிகவுமழகான ப்ரவாஹத்துடன் பெருகிவருகின்ற மந்தாகினியென்னும் நதியைக் காட்டினன். சிறந்த பின் புறமுடையவளும் பர்வதத்தைப் பார்க்கும் ஸந்தோஷத்தினால் மலர்ந்து மாசுமறுவற்ற சந்த்ரன்போல் அழகான முகமுடையவளும் விதேஹராஜன் திருமகளுமான ஸீதையைப் பார்த்து ராமன் ஸந்தோஷத்தினால் கண்களிரண்டும் தாமரையிதழ்போல் மலரப்பெற்று 'மிகவும் அற்புதமான மணற்குன்றுகள் அமைந்து ஹம்ஸங்களும் ஸாரஸங்களும் நிரம்பப் பெற்றுத் தாமரைப்புஷ்பங்கள் நிறைந்து அழகாயிருக்கின்ற இம்மந்தாகினீநதியைப் பாராய். இந்நதி இரண்டுதீரங்களிலும் பலவகைப் புஷ்ப வ்ருக்ஷங்களும் பலவ்ருக்ஷங்களும் முளைக்கப்பெற்று எங்கும் விளங்குகின்ற குபேரனது மானஸமென்னும் தாமரையோடை போல் விளங்குகின்றது. ம்ருகங்கள் குவியல்குவியலாகவந்து ஜலங்குடிக்கையால் கலக்கமுற்றுக் குங்குமக்குழம்பு போல் அழகான ஜலமுடைய இந்நதியின் துறைகளைக் கண்டதும் எனக்கு இதில் ஸ்நானஞ்செய்யவேண்டுமென்னும் ப்ரீதி விளைகின்றது. அன்பிற்கிடமாயிருப்பவளே! ஜடைகளையும் க்ருஷ்ணாஜினத்தையும் தரித்து மரவுரியை உத்தரீயமாக உடுத்தின ரிஷிகள் தகுந்தகாலத்தில் இம்மந்தாகினியில் நீராடுகின்றனர், காண்பாய். விசாலாக்ஷி!

இதோ வ்ரதந்தவறுத சில முனிவர்கள் நியமத்துடன் கைகளை உயர்த்திக் கதிரவனை நோக்கித் தவஞ்செய்கின்றனர். இந்நதியின் இருபுறங்களி லுமுள்ள வ்ருக்ஷங்கள் காற்றினல் அசைந்து இலைகளையும் புஷ்பங்களையும் உதிர்க்கையில் இப்பர்வதம் புஷ்பாஞ்சலி இறைத்துக் கைகளை அசக்கிக்கொண்டு ந்ருத்யஞ் செய்ய முயன்றவன்போல் புலப்படுகின்றது. இந்நதி சில இடங்களில் முத்துப்போல் தெளிந்த நீருடையதும் சில இடங்களில் மணற்குன்றினை யுடையதும் சில இடங்களில் ஸ்நானத்தின்பொருட்டு இறங்கின ஸித்தஜனங்கள் நிறைந்ததுமாகி விளங்குகின்றது, பார். காற்றினல உதிர்க்கப்பட்ட புஷ்பங்கள் சில கரையில் விழுந்து நிறைந்திருக்கின்றன. மற்றுஞ் சில புஷ்பங்கள் ஜலப்ரவாஹத்தின் மத்தியில் வீழ்ந்து மிதக்கின்றன, பார். மங்கல ஸ்வபாவமுடையவளே! சக்ரவாகப் பறவைகள் ஸம்போகத்திற்காக ஒன்றுக்கொன்று இனிய குரலுடன் அழைத்து ஸம்போக காலத்தில் உண்டாகும் அழகிய ஒலிகளை ஒலித்துக்கொண்டு ரதியின் பொருட்டு அந்தப் புஷ்பராசியின மீதேறுகின்றன. அழகுடையவளே! இந்தச் சித்ரகூடம் மிகவும் ஏகாந்தமான போகஸ்தானமாயிருக்கையால் இதைப்பார்த்துக்கொண்டு இதில் வஸித்திருப்பது அயோத்தையில் வஸிப்பதைக் காட்டிலும் அதிக ஸுகமாயிருக்குமென்று எனக்குத் தோற்றுகின்றது. இந்நதி காமத்தை மிகவும் விளக்கின்றமையால் இதைப் பார்த்திருப்பது உன்னைப் பார்ப்பதைவிட அதிக ஸுகமாயிருக்கிறதென்று நான் நினைக்கிறேன். தவமும் தமமும் சமமும் பொருந்தி அதனல் பாபங்களையெல்லாம் போக்கின ஸித்தர்கள் நித்யமும் ஸ்நானஞ்செய்கையால் இதன் ஜலம் கலங்கி அவர்களது பாதம்படுவதால் புனிதமாயிருக்கின்றது. இதில் நீ என்னுடன் இழி

ந்து நீராடுவாயாக. மடந்தையர் மணியே! நீ உன் ஸகிக ளுடனகூடி க்ரீடிப்பதுபோல் என்னுடன் இம்மந்தாகினி யில் இழிந்து இதிலுள்ள செந்தாமரைகளும் வெண்தா மரைகளும் நீரில் மூழ்கி மறையுமாறு ஜலக்ரீடைசெய்வா யாக. மாதுஷிரோமணியே! நீ இவ்வனத்திலுள்ளஜந்துக் களைப் பட்டணத்து ஜனங்களைப் போலவும் இப்பர்வதத் தை அயோத்தியையைப்போலவும் ப்ரீதியுடன் பாவித்திரு ப்பாயாக. லக்ஷ்மணன் தர்மஸ்வபாவனாகி எனது ஆஜ்ஞை யைத் தவறுமல் நடந்துகின்றனன். நீயும் எனக்கு அனுகூ லையாகி நடக்கின்றனை. நீங்களிருவரும் எனக்கு மிகவும் க ளிப்பை விளைவிக்கின்றீர்கள். இப்படிப்பட்ட தம்பியையும் பார்யையையும் பெற்றிருப்பதைவிட ஸுகந்தருவது யா தது? இங்ஙனம் மூன்று ஸந்திகளிலும் ஸ்னானஞ்செய்து தேன்வேர் பழம்இலைகளை ஆஹாரஞ்செய்து உன்னுடன் கூடி அயோத்தியையையாவது ராஜ்யத்தையாவது நினைக் கமாட்டேன். இம்மந்தாகினி ம்ருக ஸமூஹங்கள் நிரம்பப் பெற்று மிகவும் அழகியதாகி யிருக்கின்றது. மேலும், இ தில் ஆஸ்ரமமஹிமையால் யானைகளும் ஸிம்ஹங்களும் வா னரங்களும் ஒன்றுக்கொன்று வைரத்தைவிட்டு ஜலங்குடி க்கையால் இது பரிசுத்தமாயிருக்கின்றது. பின்னும் இங் குள்ள வருக்ஷங்கள் நன்கு புஷ்பித்திருக்கையால் இது காமத்தை விளக்கவற்று. இப்படிப்பட்ட இம்மந்தாகினீ யில் நீராடியும் இளைப்புத்தீர்ந்து ஸுகப்படாதவன் எவ னும் இருக்கமாட்டான்' என்றனன். ரகுவம்சத்தை வள ரச்செய்யுந் தன்மையனுகிய ராமன் காதலியுடன்கூடி இங் ஙனம் அந்நதியைப்பற்றிப் பொருந்தும்படி பலவாறு மொ ழிந்து கண்மைபோல் கறுத்து விளங்கும் அழகான அச் சித்ரகூடத்தில் உலாவிக் கொண்டிருந்தனன். தொண் ணூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமனும் ஸீதையும் மாம்ஸாஹாரஞ்செய்
கையில வனத்திலுள்ள ம்ருகங்களை
கலக்கமுறுவது கண்டு அதன் காரணந்
தெரிவதற்காக லக்ஷ்மணனை அனுப்ப,
அவன் வ்ருக்ஷத்தின்மேலேறிப் பரதன்
ஸைன்யத்துடன் வரக்கண்டு சங்கிதல.

ராமன் அங்ஙனம் ஸீதைக்குச் சித்ரகூடபர்வதத்தில் விளங்கும் அம்மந்தாகினீ நதியின் அதிசயத்தைக்காட்டின பிறகு அம்மலையின் தாழ்வரையில் உட்கார்ந்து மாம்ஸத்தை ஊட்டி அவளை மனக்களிப்புறச் செய்யமுயன்று 'இது பரிசுத்தமானது, இது ரஸமுடையது, இது அக்னியில் நன்கு பக்வமாயிருக்கின்றது' என்று இனிய உரைகளை மொழிந்துகொண்டு அவருடன் கூடி தர்மஸ்வபாவனுகிய அந்த ராகவன் வீற்றிருந்தனன். அங்ஙனம் அம்மலைச்சாரலில ராமன் உட்கார்ந்திருக்கையில் அருகில் வருகின்ற பரதனுடைய ஸைனிகளின தூளும் சப்தமும் மேலெழுந்து ஆகாயமெங்கும பரம்பிப புலபபட்டன. இச்சமயத்தில் அந்தப் பெரும் சப்தத்தைக கேடடுப் பயமுற்றுக் கலங்கி அந்தந்த இனங்களில தலைமையுளள ம்ருகங்கள் தந்தமது கூட்டங்களோடு மூலைகளுமில திரள் திரளாக ஓடின. அந்த ராமனும் ஸைனியத்தாலுண்டான அந்த த்வனியைக் கேட்டனன். அதற்கு பயந்து நாற்புறமும் ஓடுகின்ற அந்த ம்ருக ஸமூஹங்களையும் கண்டனன். ராமன் பயந்தோடுகின்ற அந்த ம்ருகங்களைப் பார்த்தும் அந்தப் பெருஞ் சப்தத்தைக் கேட்டும் தேஜஸ்வியாகிய ஸுமித்ராபுத்ரனை லக்ஷ்மணனைப் பார்த்து 'ஆ! லக்ஷ்மண! இது என்? இதைக்காண்பாய். நீ ஸுமித்ரையின் வயிறு குளிரப் பிறந்த ஸத்புத்ரன். பயங்கரமான மேககர்ஜனைபோல் கம்பீரமாய் இனனது இனியதென்று தோன்றுமல் பெரும்த்வனி ஒன்று செவிப்படுகின்றது கா

ட்டில் யானைக்கூட்டங்களோ அல்லது பெருங்கானகத்திலுள்ள எருமைக்கடாக்களோ, அல்லது மற்றை ம்ருகங்களோ ஸிம்ஹங்களால் துரத்தப்பட்டுப் பயந்தோடுகின்றன. எவனேனும் ஓர் அரசனை, அல்லது அரசனைப் போன்ற மற்றவனை, எவனேனும் ஒருவன் அரண்யத்தில் வேட்டையாடுகின்றானே? அல்லது எதாயினும் ஓர் க்ருராஜந்து வனத்தில திரிகின்றதோ? லக்ஷ்மண! இதைக் கண்டறியவேண்டும். லக்ஷ்மண! பக்ஷிகளுக்குங்கூட இப்பர்வதம் ஸஞ்சரிக்க அரிதாயிருப்பது. கீழ்ச்சொன்னவையெல்லாவற்றிலுங் காரணம் எதுவோ, அதை உள்ளதுள்ளபடி சீக்ரந் தெரிந்துகொள்வாயாக' என்றனன். அந்த லக்ஷ்மணனும் அதைக்கேட்டு மிகுந்த த்வரையுடன் கன்கு புஷ்பித்திருக்கும் ஓர் ஸாலமரத்தின்மேலேறி காற்றிசையும் பார்க்கத்தொடங்கிக் கீழ்த்திசையில் கண்வைத்தனன். உடனே வடதிசைநோக்கிப் பார்க்கையில் ரதங்களும் குதிரைகளும் யானைகளும் நிறைந்து ஸந்தர்களான காலாட்களும் அமைந்து வருகின்ற ஓர் மஹாஸைன்யம் புலப்பட்டது. அப்வங்களும் கஜங்களும் சூழப்பெற்று த்வஜங்களால் அலங்கரிக்கப்பட்ட ரதங்கள் நிறைந்த ஓர் ஸேனை வருகின்றதென்று ராமனுக்குத் தெரிவித்து மீளவும் ராமனைப்பார்த்து 'இனி அக்னியை அணைப்பாயாக. ஸீதை குஹைக்குள் புகுவாளாக. வில்லெடுத்து காணைற்றிவைப்பாயாக. பாணங்களையும் கவசங்களையும் எடுத்துக்கொள்வாயாக' என்றுரைக்கையில் புருஷசிகாமணியாகிய ராமன் அவனைப் பார்த்து 'ஓ லக்ஷ்மண! நன்றுகப்பார். இந்த ஸேனை யாருடையதாக உனக்குத் தோற்றுகின்றது' என்று விணவினன். இப்படி ராமன் கேட்கையில் லக்ஷ்மணன் கோபத்தினால் அக்னிபோல் ஜ்வலித்து அந்த ஸேனையை எரிப்பவன்போல் சுருசுருவென்று

கண்ணுற்று, ராமனை நோக்கி 'கைகேயியின் பிள்ளை பரதன் தாயின்வரத்தின்படி ராஜ்யாபிஷேகம் பெற்று அவ்வளவில் த்ருப்தி அடையாமல் ராஜ்யத்தையெல்லாம் நிஷ்கண்டகமாகப் பெற விரும்பி தாயாதிகளாகையால் அதற்குக் கண்டகமாகிய நம்மைக் கொல்ல எதிர்த்துவருகின்றனன், இது வெளிச்சம். இதோ மிகப்பெரியதும் காந்தி விளங்கப்பெற்றதுமாகிய வ்ருக்ஷம் த்வஜத்தில் புலப்படுகின்றது. உயர்ந்த அடிபாகத்தையுடைய மலயத்திமரத்தின் த்வஜம் தேரின்மேல் ப்ரகாசிக்கின்றது. (பருத்த அடிபாகத்தையுடையதும் கிளைகள் நிறைந்ததுமாகிய இந்த மலயத்திமரத்தின் த்வஜம் மஹாஸைன்யத்தில் தேரின்மீது ப்ரகாசிக்கின்றது.) இந்தக் குதிரைக்காரர்களும் வேகமுள்ள குதிரைகளின்மீதேறி இஷ்டப்படி இவ்விடம் வருகின்றனர். யானைக்காரர்களும் யானைகளின்மேலேறி மகிழ்ந்து விளங்குகின்றனர். வீரனே! ஆகையால் நாம் வில்லைப்பிடித்து மலையின்மேல் ஏறி நிற்போம். அல்லது படைக்கலங்களைச் சித்தஞ் செய்துகொண்டு இங்கேயாயினும் நிற்போம். [1] கோவிதாரத்வஜமுடையவன் யுத்தத்தில் நங்கையில் அகப்படுவானோ? பரதனைக் கண்ணுறுவேனோ? ராகவனே! இவனலன்றோ ஸீதையும் நீயும் நானும் இம்மஹாவ்யஸனத்தை அனுபவிக்கினறனம். ராகவனே! எவன் நிமித்தமாக நீ அழிவில்லாத ராஜ்யங்கைசோரப்பெற்றனையோ, அப்படிப்பட்ட சத்ருவாகிய பரதன் இதோ வந்திருக்கின்றனன். வீரனே! நான் இவனைக் கொன்றேதீருவேன். ராகவா! பரதனைக் கொல்வதில் தோஷமொன்றும் எனக்குத் தோற்றவில்லை. முனபு அபகாரஞ் செய்தவனைக் கொல்வது அதர்மமென்று

---

1 கோவிதாரம்-மலயதத்திமரம்.

சாஸ்த்ரம் விதிக்கவில்லையன்ரு? ராகவா! பரதன் நமக்கு முன்பு அபகாரஞ் செய்தவன். மனஞக்கந்தவறி அங்ஙனஞ் செய்தானல்லன்; தர்மத்தைக்கைவிட்டே அங்ஙனஞ் செய்தனன். இவனைக்கொன்ற பின்பு பூமியை முழுவதும் பாதுகாப்பாயாக. ராஜ்யத்தில் பேராசையுள்ள கைகேயி, இப்பொழுது, யானையால் முறிக்கப்பட்ட வ்ருக்ஷம்போல் யுத்தத்தில் என்னல் அடிக்கப்பட்ட பிள்ளையை மிக்க மனவருத்தத்துடன் கண்ணுறுவாளாக. கைகேயியை மந்தரைமுதலிய அவளைச் சேர்ந்தவர்களோடும் மற்றுமுள்ள அவளது பந்துக்களோடும் கொன்றுவிடுகின்றனன். இன்றைத்தினம் பூமி கைகேயியென்னும் மஹாபாபத்தினல் விடுபட்டுப் பரிசுத்தியைப் பெறுமாக. ராமா! நீ மானத்தைக் காப்பாற்றுந்தன்மையன். இத்தனைகாலமாக உளளே அடக்கிக்கொண்டிருந்த இந்தக் கோபத்தையும் அவமானத்தையும் இப்பொழுது பாணங்களின் வ்யாஜத்தால் உலர்ந்த புதர்களில் நெருப்பையிடுவதுபோல் சத்ருஸைன்யங்களின்மீது விடுகின்றனன். இப்பொழுது கூரான பாணங்களால் பகைவரது சரீரங்களைப் பிளந்து இந்தச் சித்ரகூடத்தின் அடவிகளையெல்லாம் குருதியால் நனைத்துவிடுகின்றனன். எனது பாணங்களால் மார்பில் அடிபட்டு விழுந்த யானைகளையும் குதிரைகளையும் என்னல் அடியுண்ட காலாட்களையும் இங்குள்ள புலி முதலிய க்ரூரம்ருகங்கள் இழுத்துக் கொண்டுபோமாக. நான் இதுவரையில் பல யுத்தங்களில் எனது பாணங்களுக்கும் வில்லுக்கும் வேண்டிய சத்ரு சரீரங்களை ஆஹாரமாகக் கொடுத்து அவைகளின் கடனைத் தீர்த்தேயிருக்கின்றனன். இப்பொழுதும் மஹாயுத்தஞ் செய்து பரதனையும் அவனது ஸைன்யங்களையும் அடித்து பாணுதிகளின் கடனைத் தீர்க்கின்றனன். இதற்கு ஸந்தேஹம் இல்லை' என்று மொழிந்தனன். தொண்ணூற்றுரூவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் கோபித்துக்கொண்டிருக்கும் லக்ஷ்மணனை ஸமாதானப் படுத்துதல்.

பிறகு ராமனென்றால்—அங்ஙனம் மிகவும் கினைத்து பரபரப்புற்றிருக்கும் லக்ஷ்மணனை ஸமாதானப்படுத்தி, அவனை நோக்கி 'லக்ஷ்மண! பரதன் பெரிய வில்லாளி. மேலும் எல்லா முணர்ந்தவன். ஆகையால் அவன் மற்றொருவர் தூண்டுகோலின்றித் தானே நம்மிடம் வரும் போது நமக்கு தனுஸ்ஸினாலாவது கத்தியாலாவது கார்யமென்? லக்ஷ்மண! பித்ருவாக்யத்தைப் பரிபாலனஞ் செய்கிறேனென்று ப்ரதிஜ்ஞை செய்து என்னிடம் வந்த பரதனைக் கொல்லுவேனாயின், அங்ஙனம் தந்தை பரதனுக்கு ராஜ்யங் கொடுக்கையில் ராமன் அவனைக் கொன்று ராஜ்யத்தை அபஹரித்தானென்று ஜனங்களால் நிந்திக்கப்படுவேனல்லவா? அப்படிப்பட்ட ராஜ்யம் எனக்கு எதுக்கு? பந்துக்களாவது நண்பர்களாவது நாசமடைகையில் எந்த த்ரவ்யம் நேருமோ அதை விஷங் கல்ந்து செய்யப்பட்ட பக்ஷ்யத்தைப்போல் நான் எள்ளளவும் விரும்பமாட்டேன். லக்ஷ்மண! தர்மத்தையும் ரத்னம் முதலிய அர்த்தத்தையும் காமத்தையும் பூமியையும் உங்களுக்காக நான் விரும்புகிறேனன்றி வேறில்லை. உனக்கு இதில் நம்பிக்கை இல்லாதபக்ஷத்தில் அப்படி ப்ரதிஜ்ஞை செய்கிறேன். ராஜ்யம் பல அநர்த்தங்களுடையதாயினும், ஸோதரர்களுக்குப் பொருள் சேர்ப்பதற்காகவும் அவர்களுடைய ஸுகத்தினை பொருட்டும் அதை விரும்புகிறேனன்றி எனக்காக அன்று. இது விஷயத்தில ஸத்யமாக ஆயுதத்தைப பிடித்துச் சபதஞ் செய்கிறேன. நல்வியற்கை யுடையவனே! கடல் சூழ்ந்த இம்மண்ணுலகம் முழுவதையும் பெறுவது எனக்கரிதன்று. ஆயினும் அதர்

மத்திலல் வருமாயின் இந்த்ரபட்டத்தையும் வேண்டே
ன். சத்ருக்களது கர்வத்தைப் போக்குந் தன்மையனே!
பரதனுக்கும் உனக்கும் சத்ருக்னனுக்கும் இல்லாத ஸு
கம் எனக்கு எது உண்டாகுமோ அதை அக்னி பஸ்மஞ்
செய்யுமாக. அது எப்படிப்பட்டதாயினும் நான் விரும்ப
மாட்டேன். எனக்கு பராணன்களைக் காட்டிலும் ப்ரிய
மிய பரதன் ப்ராதாக்களிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவ
னைகையால் மாமாவினகத்தினின்றும் பித்ரு சுப்ரூஷை
செய்யுங் குல தர்மத்தை நினைத்து அயோத்யைக்கு வ
ந்திருப்பான். வீரா! புருஷ ஸ்ரேஷ்டனே! அங்ஙனம்
வந்து நான் தந்தையின் ஆஜ்ஞையின்படி ஜடாவல்கலங்க
ளைத் தரித்து உன்னுடைய ஸீதையோடுங்கூடி அரண்யம்
வந்ததைக் கேட்டு என்னிடத்திலுள்ள ஸ்நேஹத்தால்
மனம் பொறுமல் புலன்கள் கலங்கப் பெற்று நம்மைப் பா
ர்க்க வந்தானன்றி வேறில்லை யென்றே எனக்குத் தோற்
றுகின்றது. அச் செல்வக் குமாரன் மிகவுஞ் சினந்து தா
யான கைகேயியைப் பருஷமான அப்ரியங்களைப் பேசித்
தந்தையையும் ஸமாதானப்படுத்தி எனக்கு ராஜ்யங் கொ
டுப்பதற்காகவே இங்கு வருகின்றனன். இப்பரதன் இப்
போது நம்மைப் பார்க்க வருவது காலோசிதமாகவேயிரு
க்கின்றது. இவன் மனத்திலுங் கூட நமக்கு அபகாரத்
தை நினைக்கமாட்டான். இதற்கு முன்பு எப்போதாயினு
ம் பரதன் உனக்கு அபகாரஞ் செய்திருக்கிறானா? அல்ல
து இப்படிப்பட்ட பாபத்தை விளைக்கும் வார்த்தையாவது
மொழிந்ததுண்டா? என் பரதனிடத்தில் இவ்வாறு சங்
கைப்படுகின்றனை? நீ பரதனைப் பார்த்து எள்ளளவும்
பருஷமாவது அப்ரியமாவது மொழியலாகாது. அவனை
அப்ரியமாகப் பேசினால் அது எனனைச் சொன்னதாயா
கும். லக்ஷ்மண! ஏதோ ஒரு ஆபத்து நேருமாயின் அத

ற்காகப் பிள்ளைகள் தமக்கு ப்ராணன் போன்ற தந்தை யையாவது, அண்ணன் தம்பிகள் தமக்கு ப்ராண ஸ்தான மாகிய உடன் பிறந்தவர்களையாவது எப்படி ஹிம்ஸிக்கக் கூடும்? நீ ராஜ்யம் வேண்டுமென்னும் விருப்பத்தினால் பரதனை இங்ஙனஞ் சொல்வாயாயின், பரதன் வந்தவுட னே அவனைப் பார்த்து 'பரதா! ராஜ்யத்தை லக்ஷ்மண னுக்குக் கொடுத்துவிடுவாய்' என்று சொல்லுகிறேன். லக்ஷ்மண! கான பரதனுடன் 'ராஜ்யத்தை இவனுக்குக் கொடு' என்று மனமின்றி வாய் மாத்ரத்தில் மொழிவே னையினும், அவன் நிஜமாக 'அப்படியே கொடுக்கிறேன்' என்றுரைப்பானன்றி மற்றொன்றும் உரையான்' என்ற னன். லக்ஷ்மணன் ராமனது ஹிதத்திலேயே மனஞ்செ லு டையவனாகையால் அவனுக்கு என் விளையுமோ என்று பயந்து முன்பின் பாராமல் மொழியினும், தர்மஸ்வபாவ னாகிய தமையன் அங்ஙனஞ் சொன்னதற்கு மிகவும் வெட் கித்துத் தனது அவயவங்களில் தான் புகுந்தாலென்ன வெம் பெருமான் அங்கங்களையெல்லாம் ஓடுக்கிக்கொண்டு தலை வணங்கப் பெற்றிருந்தனன். இங்ஙனம் லக்ஷ்மணன் ராம னது வார்த்தையைக் கேட்டு வெட்கித்து அவனைப் பார் த்து 'நம் தந்தை தசரதர் தானே உன்னைப் பார்க்க வந் தாரென்று எனக்குத் தோற்றுகிறது' என்றனன். அங் ஙனம் லக்ஷ்மணன் மற்றொரு ப்ரஸ்தாவஞ் செய்கையில் தர்மஸ்வபாவனாகிய ராமனும் அவன் நாணமுற்றிருப்பது கண்டு அதைப் போக்குவதற்காக அதே ப்ரஸ்தாவத் தைப் பற்றி 'மஹாபாஹுவாகிய இந்தத் தசரதர் நம்மை ப்பார்க்க இங்கு வந்தாரென்றே நானும் நினைக்கிறேன். அல்லது அவர், நாம் ஸுகத்திற்கே உரியவர்களென் றும் நமக்கு வனவாஸம் கஷ்டமென்றும் சிந்தித்து நம் மை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போவாரென்று

நினைக்கிறேன். இதுவே நிஜம். அல்லது ஸ்ரீமானுகிய நம் தந்தை தசரதர் மிகவும் ஸுகத்தையே அனுபவித்த இந்த ஸீதையையாவது அடவியினின்று வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோவார். வீரோத்தமா! கல்லகுலத்தில் பிறந்தவைகளும் மனத்துக்கினியவைகளும் வேகத்தில் வாயுவைவப்போன்றவைகளும் ராஜாக்கள் ஏறுமவைகளுமான அவ்வுத்தமக் குதிரைகள் இதோ ப்ரகாசிக்கின்றன. சிறந்த மதியுடையாராகியநம்தந்தையாரதுபட்டத்துயானையும் பெரிய சரீரமுடையதும் மிக்க உயர்வுடையதுமாகிய சத்ருஞ்ஜயமென்னும் அம்மஹாகஜம் இதோ ஸைன்யமுகத்தில் ஆடி அசங்கிக்கொண்டு வருகின்றது. மஹாபாஹுவே! உலகமெங்கும் புகழ்பெற்றதும் திவ்யமுமாகிய கம்தந்தையது வெண்கொற்றக் குடைமாத்ரம் புலப்படவில்லை. ஆகையால் தந்தைவிஷயத்தில் எனக்கு ஸந்தேஹமாயிருக்கின்றது. லக்ஷ்மண! நீ மரத்தினுனியிலிருந்து கீழ் இழிந்து வருவாயாக நான் சொன்னபடி செய்வாய்' என்று லக்ஷ்மணனுக்குச் சொல்லினன். 'யுத்தங்களில் வெற்றி பெறுந்தன்மையனுகிய அந்த லக்ஷ்மணன் பிறகு மரத்தினின்றும் கீழிழிந்து கைகூப்பித் தமையனுக்குத் திடரென்று என்ன பயம் நேருமோவென்னுஞ் சங்கையால் அவனது பார்ச்வத்தில் வந்து நின்றனன். ராமப்ரமத்தற்கு ஸைனியால் உபத்ரவங் கூடாதென்று பரதன் ஆஜ்ஞாபித்தமையால் அவனது ஸைன்யம் சித்ரகூடத்தின் கற்புறத்திலும் மண்டலாகாரமாக இருந்தது. யானைகளும் குதிரைகளும் தேர்களும் நிறைந்திருக்கிற அவ்வீக்ஷவாகு ஸைன்யமானது ஒன்றரையோஜனதூரம் அந்தப் பர்வதத்தின் தாழ்வரையைச்சுற்றிப் பரம்பினின்றது. ஸைன்யங்களை இறக்கி ஆச்ரமங்களுக்குக் கெடுதிசெய்யலாகாதென்னும் நீதியைப் பரதன் அறிந்தவனுகையால் ரா

ஜாவினிடம் வணக்கமமைந்த வேஷத்துடன் போகவேண்டுமென்னும் தர்மத்தை முன்னிட்டு கர்வத்தைத்துறந்து ராமனை அருள்புரியச் செய்யும்பொருட்டு அழைத்துக் கொண்டுவந்த அச்சேனையானது சித்ரகூடத்தினருகில் இறங்கி மிகவும் ப்ரகாசித்தது. தொண்ணூற்றேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் சத்ருக்னனோடு குஹாதிகளோடுங் கூடப் பாதசாரியாய் ராமாஸ்ரமத்தைத் தேடுதலும், அதற்கடையாளமான புகையைக் கண்டபின் மற்றவரை நிறுத்தித் தான் குஹ சத்ருக்னர்களோடு நடந்து செல்லுதலும்.

பரமதார்மிகனுகிய ராமனிடம் நடந்துசெல்லுபடி பாக்யம் தனது பாதங்களுக்கு நேருகையால் பாதமுடையவர்களில் உத்தமனும் ப்ரபுவுமாகிய பரதன் ஸேனையை இறக்கித் தந்தையின் ஆஜ்ஞையை அனுஸரித்திருப்பவனுகிய ராமனிடம் பாதங்களால் நடந்து செல்லவிரும்பினன். தான்உத்தேசித்தபடி அததந்த இடங்களில்ஸைன்யம் இறங்கினவுடனே, பரதன் தாமஸஞ்செய்யாமல் விஷயம்பொருந்திய வேஷம்பூண்டுதம்பியாகிய சத்ருக்னனை அழைத்து 'ஸௌம்ய! நீ இப்போது இக்காலாள் கூட்டங்களோடும் வேடர்களோடுங்கூடிச் சீக்ரமாக இவ்வனத்தில் நாற்புறத்திலும் தேடவேண்டும், குஹன், பாணம் வில் கத்திகளைத் தரித்த பந்துக்கள் பலருடன்கூடித் தானை காத்ஸ்தகுலாலங்காரர்களாகிய ராமலக்ஷ்மணர்களைத் தேடுவானுக. மந்த்ரிகளும் பட்டணத்து ஜனங்களும் ப்ராஹ்மணர்களும் சூழ்ந்து வரப்பெற்று நானும் இவ்வனம் முழுவதும் பாதசாரியாய்த் திரிகின்றனன். ராமனையாவது மஹா

பலனுகிய லக்ஷ்மணனையாவது மஹாபாக்யவதியாகிய ஸீதையையாவது பார்க்கும்வரையில் எனக்கு துக்கசாந்தி உண்டாகாது. சந்த்ரன்போல் விளங்குவதும் தாமரையிதழ்போன்ற கண்களுடையதும் அழகியதுமாகிய ராமனது முகத்தைப் பாராதிருக்கும்வரையில் எனக்கு துக்கசாந்தி உண்டாகாது. வஜ்ரத்வஜாங்குச கலசாரவிந்தாதி ராஜலக்ஷணங்கள் பொருந்திய ராமனது பாதங்களைச் சிரஸில் தரிக்காதிருக்கும்வரையில் எனக்கு துக்கசாந்தி உண்டாகாது. ராஜ்யத்திற்குரியவுகிய ராமன் அபிஷேகஜலத்தில் நனைந்து தகப்பன் பாட்டன் பரம்பரையாக வந்த ராஜ்யத்தில் நிலைபெறுதவரையில் எனக்கு துக்கசாந்தி உண்டாகாது. அழுக்கற்ற சந்த்ரன்போல் விளங்குவதும் தாமரையிதழ்போன்ற கண்களுடையதும் மிகுந்த ஓளியுடையதுமான ராமனது முகத்தைப் பார்க்கப்பெற்ற லக்ஷ்மணன்றோ நல்வினையினன். ஸமுத்ரம் முடிவான பூமண்டலம் முழுமைக்கும் பர்த்தாவாகிய ராமனைப் பின்சென்றுபோகும் மஹாபாக்யமுடைய ஜனகராஜன் திருமகளான ஸீதாதேவியன்றோ நல்வினையினள். குபேரன் நந்தனவனத்தில் வஸிப்பதுபோல் ராமன் இபபர்வதத்தில் வாஸஞ்செய்கின்றனன. ஆகையால் ஹிமவத்பர்வதம்போன்ற இந்தச்சித்ரகூடம் சிறந்தபாக்யம்பெற்றது. மிகுந்த ஓளியுடன் விளங்குபவனும் ஆயுதம்பிடித்தவர்களில் சிறந்தவனுமாகிய ராமன் வாஸஞ்செய்கையால் க்ரூரம்ருகங்கள் நிறைந்ததும் புகக்கூடாததுமான இவ்வரண்யமும் நல்வினையுற்றது' என்றனன். மஹாதேஜஸ்வியும் மஹாபாஹுவும் புருஷசிகாமணியுமாகிய பரதன் இங்ஙனம் சத்ருக்னனுக்குச்சொல்லி உடனே பாதசாரியாகவே அம் மஹாரண்யத்தில் ப்ரவேசித்தனன். பரதன் பேசவல்லவனுகையால் ராமனிடம் விண்ணப்பஞ்செய்ய வேண்டியதை

ச் சிந்தித்துக்கொண்டே, அம்மலையின் தாழ்வரைகளில் புஷ்பித்திருக்கிற நுனிகளையுடைய வ்ருக்ஷங்களின் நடுவில்போயினன். அவன் அங்ஙனஞ்சென்று அத்தச்சித்ரகூடபர்வதத்தில் புஷ்பித்திருக்கும் ஒரு வ்ருக்ஷத்தின் கீழ்ச்சேர்ந்து அங்கு ராமாஸ்ரமத்தினின்றும் புகையெழும்பிச் செல்வதைக்கண்டனன். பரதன் அதைக்கண்டவுடன ஸ்க்தோஷத்தினால் ஒளியுடன் ப்ரகாசித்து ராமன் அங்கிருக்கிறானென்றறிந்து ஆநந்தத்தின் மிகுதியால் மெய்ம்மறந்தனன். அப்பொழுது பரதன், ஸமுத்ரத்தில் வீழ்ந்தவன் கரைசேர்ந்தாற்போல் புலப்பட்டனன். அம்மஹானுபாவன் சித்ரகூடத்தில் ஸத்புருஷர்கள் கிறைந்த ராமாஸ்ரமத்தைக்கண்டு ராமனைத்தேடும் பொருட்டுத் தன்னுடன் வந்த ஸைந்யங்களையும் கிறுத்திக் குஹனுடன வேகமாகப்போயினன். தொண்ணூற்றெட்டாவது ஸர்க்கம முற்றிற்று

{ பரதன் ஸைனஇறங்கின இடத்திலுள்ள தாயமார்களை அழைத்துவர வஸிஷ்டரை அனுப்பித் தானும் குஹனும் மந்த்ரிகளுடன் சென்று ராமாஸ்ரமஞ் சேருதல். }

அங்ஙனம் ஸைன்யத்தை நிறுத்தினபின்பு தான் அங்கு க்ஷணமிருந்து பரதன் ராமனைப் பார்க்கவேண்டுமென்னும் பராசையுடன் சத்ருக்னனுக்கு ராமாச்ரமத்தினது அடையாளங்களைக் காட்டிக்கொண்டே ராமனைப் பார்க்கப்போயினன். தமையனிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவனாகிய பரதன் வஸிஷ்டமஹர்ஷியைப் பார்த்து 'நீர் எமது தாய்மார்களை வேகமாக அழைத்துக்கொண்டு வருவீர்'என்று சொல்லியனுப்பித் தான். முன்பு சீக்ரமாகச் சென்றனன். ஸுமந்த்ரனும் சத்ருக்னனுக்கு அருகில் பின்

சென்றனன். ராமனைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பம் பரதனுக்குப்போல் சத்ருக்னனுக்கும் உண்டாயிருந்தது. ஸ்ரீமானுகிய பரதன் கொஞ்சதூரம் போனபின்பு தாபஸர்களின் ஆஸ்ரமம்போல் தீர்த்துக் கட்டப்பட்டதும் அக்னிஹோத்ரக்ருஹமுமாகிய பர்ணசாலையையும், அதற்கு முன்னிலையில் பார்க்க வந்தவரோடு ஸுகமாகஉட்காரும் பொருட்டு ஏற்பதித்தப்பட்ட பாணமண்டபத்தையும், அந்தப்பர்ணசாலைக்கு முன்பு ராத்ரியில் வெளிச்சத்தின் பொருட்டு எரிப்பதற்காக வெட்டிப் பொகட்டிருக்கும் கட்டைகளையும், பூஜையின் பொருட்டு ஸித்தப்பதித்தின புஷ்பங்களையும், ராமனும் லக்ஷ்மணனும் நீராடுவதற்காக மந்தாகினிக்குப் போய் வரும் வழியில அடையாளமாக இடையிடையே வ்ருக்ஷங்களில் தர்ப்பங்களாலும் மரவுரிகளாலும் செய்யப்பட்ட குறிகளையும், குளிர் காய்வதன்பொருட்டுக குவைகுவையாக ஈட்டப்பட்ட ஆடுமாடுகளின் எரிமுட்டைகளையும் கண்டனன். அப்பொழுது மஹாபாஹுவான பரதன் மிகுந்த ஓளியுடன் அவைகளையெல்லாம் பார்த்து ஸந்தோஷமடைந்து சத்ருக்னனையும் மற்றுமுள்ள மந்த்ரிகளையும் பார்த்து 'பரத்வாஜர் சொன்னஇடத்திற்கு வந்து சேர்ந்தோமென்று நினைக்கிறேன். மந்தாகினீ நதியும் அருகிலிருப்பதாகவே தோற்றுகின்றது. இங்கு வ்ருக்ஷங்களின் நுனியில் மரவுரிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இது லக்ஷ்மணன் ஸாயங்கால முதலிய அகாலங்களில் காய் கிழங்கு ஜலம் முதலியன கொண்டு வரப்போய் வரும்போது வழி நன்கு தெரிவதற்காக அடையாளஞ் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இவ்வழியாகவே போவோம். இம்மலையோரத்தில் மிகுந்த வேகமுள்ள யானைகள் தமது நீண்ட தந்தங்களுடன் ஒன்றுக் கொன்று பகை கொண்டு கர்ஜித்துப் போர் செய்ததாகத் தெரி

கின்றது.[1] அரண்யங்களில் ரிஷிகள் காலை மாலைகளில் ஹோமஞ் செய்வதற்காக எப்போதும் காப்பாற்றி வருகிற அக்னியினின்று புகை கனமாகக் கிளம்புகின்றது. இவ் வாஸ்ரமத்தில் மேலான மந்த்ரோபதேசங்களைச் செய்

---

1 'யமேவாயாதுமிசஹந்தி தாபஸாஸ்ஸதம் வநே: தஸ்யாஸௌ தூஷ்யதே யஜ்ஞமஸ்ஸங்குலஃ கரவ்ஷ்ணவர்த்மநஃ'. இங்கு தூமத்துக்கு 'ஸங்குலஃ' என்னும் இவ்விசேஷணம் புகை ஓயாமல் கனமாய்க் கிளம்புவதைக காட்டுமே, இதலால இவ்வக்னி பசலுக்னியிலும் ஹோமாக்னியிலும வேறுபட்டு அணையாதிருக்கும்படியான கார்ஹபத்யாக்னியென்று தெரிகின்றது. பசனத்திற்கு வேண்டுவது ஜ்வாலைகளும் ஹோமத்திற்கு வேண்டுவது தணல்களுமாகையால் அவைகளில புகைக்கு ப்ரஸக்தியில்லை. இதலால் ராமன் அக்ன்யாதானஞ் செயயாமையால (அக்ன்யாதானம்-அக்னியைச சுத்தஞ்செய்து அணைபவொட்டாமல் காத்துக் கொளளல.) இங்குச சொனன அக்னி ஸ்ரௌதாக்னி அன்று. அப்பொழுது ஏற்படுத்திக்கொண்ட ஸமார்தாகனியே. ராமனுக்கு ஸ்ரௌதாக்னி உளதாயில், அப்போது 'ராமஃ கமலபத்ராக்ஷஃ புரோயஸ மயாவிரவீத் । அக்நிஹோத்ரம் வ்ரஜத்வக்ரே ஸாபிஜ்வலித பாவகம்' என்று சாரமயாத்ரையில அக்னிஹோத்ரத்தை முன்னிட்டதாகச சொலலுகையால வனம் போகும் போதும் அங்ஙனம் சொலல வேண்டிவரும் அதிலல. பின் சென்ற பட்டணத்து வ்ருத்தர்களும அக்னியோடு வந்ததாகவே சொலலப்பட்டது. ராமனுக்கும் அதுளதாயின் அங்ஙனமே சொலல நேரும். ஆகையால் ஸ்ரௌதாகனி இலலையென்றே தெரியவருகின்றது மேலும், 'ஸீக்ஷிதம் வ்ரதஸம்பந்நம் வாஜிநயாரம் ஸுசிம், குரங்மஸ்ருங்மாநிஞ்ச பஸ்யந்தீ த்வாம்லஜாம்யஹம்' என்று ஸீதை யாகதீக்ஷையை ஆசைப்பட்டதாகச சொலலுகையால் ராஜ்யாபிஷேகத்திற்கு முன்பு அவன் யாகஞ் செய்ததில்லையென்று தெரிகிறது. ஆகையால் இவ்வக்னி க்ருஹ்யாக்னியே. அதைக் கொண்டுவந்ததாகவும் முன்புச சொல்ல விலலையே யென்னவேண்டாம். அதை ஆத்மஸமாரோபணஞ் செய்து எடுத்துக்கொண்டு வரலாகு மல்லவா? ஆயினும் காலை மாலைகளில் ஹோமஞ் செய்யவேண்டுமலலவா? அது சொல்லவில்லையே. மேலும், தமஸாதிரத்திலும் கங்கைக்கரையிலும் மரத்தடியிலும்

யும் மஹர்ஷிகளைப் போல் விளங்குகின்றவனும் புருஷ ச்ரேஷ்டனும் பூஜ்யனுமாகிய ராமனை மிகுந்த ஸ்நேஹத்துடன் பார்க்கப் போகிறேன்' என்றனன். பிறகு அப்

யமுனைக்கரையிலும் ஸந்த்யாவந்தனம் மாத்ரமே சொல்லப்பட்டது. பின்னும் இந்த ஸ்ரீலோகத்திலுள்ள தாபஸ சப்தத்திலுலும் வன சப்தத்திலுலும் காட்டிலே ரிஷிகள் குளிர் காய்வதற்காகவும் இருட்டில் வெளிசசத்திற்காகவும் காய்கிழங்குகள் பசனஞ் செய்வதற்காகவும் ஹிதஞ் செய்து வைத்துகொள்ளுகிற அக்னியே இது வென்று சொல்லக்கூடும். அப்போது 'ஆயாதும்' என்றுல் ஹித்தப்படுத்துவ தற்கென்று பொருள். ஆகையால் இவ்வக்னி பசனதிகளுக்காக ஏற் படுத்தப்பட்ட அக்னியேயன்றி ஆத்ம ஸமர்ப்பணஞ் செய்தஸ்மார்தா க்னியும் அன்று—என்னலாகாது. ஏனென்னில—'ப்ராஹுதிக்ப்ர வணம் வேஷ்டிம் விஸ்ராலாம் தீப்தபாவகாம்' என்று மேலசொலலப்படுகின் றது. ஸம்ஸ்காரமிலலாத அகனிக்கு வேதிஸம்பந்தம் ப்ராஹித்தமன் று. 'ப்ராஹுதிக்ப்ரவணம்' என்றித்யாதி லக்ஷணங்கள வேதிக்குச் சொல்லுகையால் வேதியிலுள்ள அகனியும ஸம்ஸ்க்ருதமானதென் றே தெரியவருகின்றது. இப்படி ஸம்ஸ்க்ருதமான அக்னியை க்ருஹ்ய யாக்னியென்பது விருத்தம. லௌகிகாக்னி யென்பது சிறிதும் சே ராது. ஆலல் காலமாலகளில் ஹோமஞ் செய்ததாக ஏன் சொல்ல விலலை யெனில—கேட்பாரில்லாமையால் மனம் போனபடி செல் லும் ஸ்வபாவமான மஹர்ஷி இசசையும் பலனுமில்லாவிடின் ஒன் றைப் பலகாலுஞ் சொலலவேண்டிய அவஸ்யமிலலையன்று? இதை மேலில ஸுதீக்ஷ்ணஸ்ரமத்தில் 'அய தேஉ ஹிநம் ஸுராம் ஸ்ரைவ வைதேஹீ ராமலக்ஷ்மணெள । கால்யம் வியிவஹ்ய பர்சய தபஸவிஸரா ணே வநே । உஷயந்தம் ஜிநகரம் ஹ்ரஷ்ட்வா விஹதகலமஷாஃ । ஸுதீக்ஷ்ண மஹிமம்னையவமிஹ் வசநமவிருவந்' என்று சொலலலவும் போ கிறார். இங்கு ஹோமஞ் சொல்லவிலலையே யென்னவேண்டாம் உதயத்திற்கு முன்பு அக்னிகார்யஞ் செய்ததாகச் சொல்லுகையா லும் 'அஹ்நிம' என்னு மொருமையாலும் ஔபாஸனம் நன்கு சொல் லப்பட்டதென்றுணர்க. இங்ஙனமே எலலாவிடத்திலும் நடந்ததாக ஊஹிக்கவேண்டும். பின்னும் இங்கு அக்னிகார்யத்தில் ராமன் ப்ர தான கர்த்தாவாகவும், ஸீதை கூட இருந்து நெருப்பு விசிறுவது

பரதன் ஒரு முஹூர்த்தகாலம் அந்தச் சித்ரகூட பர்வதத்தில் கடந்து மந்தாகினிக்குச் சென்று தன்னுடன் வந்த ஜனங்களைப் பார்த்து 'புருஷ ச்ரேஷ்டனும் ஜகதிபதியுமாகிய ராமன் ஜனஸஞ்சாரமில்லாத கானகஞ் சென்று வெறுந் தரையில் வீராஸனத்தில் உட்கார்ந்திருக்கின்றனன். இனி என் ஜன்மமும் என் பிழைப்பும் சீ! எதுக்கு? ராமன் ஸமஸ்த லோகங்களுக்கும் நாதன், மிகுந்த ஔியுடையவன். இப்படிப்பட்டவன், கைகேயி எனக்காகச் செய்த கார்யத்தினல் ராஜ்யத்தைத் துறந்து பெரும் வ்யஸனத்திலாழ்ந்து ஸமஸ்த போகங்களையுமிழந்து அரண்யத்திலிருக்கின்றனனே! இங்ஙனம் பலவிதமாக லோகங்களால் அபவாதப்படுகிற நான ராமனை அருள்புரியச் செய்யும்பொருட்டு அவன் பாதங்களில் விழப்போகிறேன். ஸீதையின் பாதாரவிந்தங்களிலும் அடிக்கடி விழப்போகிறேன். அவனிருவரும் அருள்புரியாராயின் லக்ஷ்மணனது பாதங்களிலும் விழப்போகிறேன' என்று இங்ஙனம் புலம்பிக் கொண்டே சென்று தசரதகுமாரனாகிய பரதன் அவனத்தில் மிக விசாலமுற்றதும் பரிசுத்தமும் அழகுள்

முதலியன செயவதாலும், லக்ஷ்மணன் ஸமித்து முதலியவற்றைக் கொண்டு வருவதனலும் அன்வயித்ததாகத் தெரியவருகின்றது. 'தபஸவிஸாரணே வநே' என்பதால் ரிஷிகள் நெருங்கி இடமிலலாத ஸங்கட ப்ரதேசங்களிலும் தவறுமல அனுஷ்டிக்கையால ஸீதையின் மிகுதி தோற்றுகின்றது. ஆகப பதினன்கு ஸம்வத்ஸரங்களில் ராவணன் ஸீதையைக் கொண்டு போகுமளவும் சித்ரகூடம முதலாகப் பஞ்சவடி பரியந்தமுள்ள ப்ரதேசங்களில் எங்கு மாஸக்கணக்கிலும் ஸம்வத்ஸரகணக்கிலும் வெகுகாலம் வஸித்திருந்தாலே அவ்விடங்களில வெளியில் ஸ்மார்தாக்னியை நித்யமாகத் தரித்திருத்தலும் மற்றை யிடங்களில ஆத்மாவிலோ அல்லது ஸமித்திலோ ஆரோபணஞ் செய்து ஹோமகாலங்களில் அவரோபணஞ் செய்து காலமாலைகளில ஹோமஞ் செய்தலுந் தெரியவருகின்றது.

ளதுமாகிய ராமனது பர்ணசாலையைக் கண்டனன். அது ஸாலம் பனை அஸ்வகர்ணம் முதலிய மரங்களின் தழைக ளால் நிறைக்கப்பட்டதும் விசாலமுமாகி யாகவேதிகை போல் மெத்தென்ற தர்ப்பங்கள் பரப்பப்பட்டதும் இந்ர தனுஸ்ஸுக்கள் போன்று மிகச் சிறந்த யுத்த கார்யங் களை ஸாதிப்பனவாகிப் பொன் பிடிகளிடப்பெற்று மிகு ந்த வலிவுற்றுப் பகைவரைப் பீடிக்கவல்ல பல தனுஸ் ஸுக்கள் திகழப் பெற்றதும், அம்பறாத்தூணிகளில் ஸூர்ய கிரணங்கள் போல் தகதகவென்று மின்னும் முகமுடைய பயங்கரமான பாணங்கள் நிறைந்து ஸர் ப்பங்கள் சூழ்ந்த போகவதி யென்னும் ஸர்ப்ப நகர ம்போல் விளங்குவதும், ஸ்வர்ணத்தால செய்யப்பட்ட உறையுடைய கத்திகளாலும் அழகுக்காக இடையி டையில் பொற்புள்ளிகள் நிருமிக்கப்பெற்ற கேடயங்க ளாலும் உடும்புத் தோலால் செய்யப்பட்டுத் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட கை விரல்களின் கவசங்களாலும் ப்ரகாசிப்பதும் இதர ம்ருகங்களுக்கு ஸிம்ஹத்தின் குஹை போல் சத்ருக்களுக்கு ப்ரவேசிக்க முடியாததுமாயிருந்த து. பரதன் அந்த ராமனது பர்ணசாலையில் விசாலமுற்ற தும் அக்னி எரியப்பெற்றதும் பரிசுத்தமுமாகிய அக்னி வேதிகையைக் கண்டனன். அது வட கிழக்கு பாகத்தில் முறையே தாழ்ந்திருந்தது. பர்ணசாலையில் ஜடாமண்ட லந் தரித்து அக்னிபோல் நாற்புறமும் துலங்கும்படி ஜ்வ லித்து உட்கார்ந்திருக்கும் ராமனைப் பரதன் ஜடைகள் தரித்திருப்பதுபற்றி ராமரே அன்றோ என்று ஒரு மு ஹூர்த்தகாலம் உற்றுப்பார்த்துப் பின்பு தனது அண்ண னே யிவனென்று தெரிந்து கொண்டனன். சிங்கத்தினது தோள்களை நிகர்த்த தோள்களும் நீண்ட புஜதண்டங்க ளும் செந்தாமரை மலர் போன்ற கண்களும் அமைந்த

மஹா சக்ரவர்த்தி லக்ஷணங்கள் பொருந்திக் கடல் சூழ்ந்த இவ்வுலக மனைத்திற்கும் காதலையிருந்தும் தர்மாசரணத்தின் பொருட்டு க்ருஷ்ணஜினத்தை உத்தரீயமாகப் பொகட்டுக்கொண்டு மாவுரியை அரையில் உடுத்து தர்ப்பம் பரப்பின தரையின்மேல் ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் கூட சாக்ஷாத ப்ரஹ்மதேவன் போல் உட்கார்ந்திருக்கும் ஸ்ரீராமனைப் பரதன் கண்டனன். தாமஸ்வபாவனும் ஓளி விளங்கப் பெற்றவனுமாகிய கைகேயியின் பிள்ளை பரதன் அங்ஙனமிருக்கின்ற ராமனைக் கண்டு துக்கமும் சோகமும் மேலெழப் பெற்று அருகில் வந்தனன். அவன் ராமனைப் பார்த்தவுடனே மிக்க மனவருத்தமுற்றுக் கண்டத்தில் கண்ணீர் வந்து தடுக்கையால் பேச்சுக்கள் இன்னவை யென்று பிரியாமல தழுதழுக்கவும் பெற்று மனவருத்தம்பொறுக்க முடியாமல் புலம்பிப் பிறகு தைர்யத்தை அவலம்பித்து மேல்வருமாறு கூறத்தொடங்கி 'என்ன ஸபையில் மந்த்ரிகள் முதலிய ஸபிகர்களால் சூழத் தகுந்தவனை அப்படிப்பட்ட இந்த எனது ஐயன் இப்போது அரண்ய ம்ருகங்களால் சூழப்பட்டிருக்கின்றனன். எந்த மஹானுபாவன் பலவாயிரம் விலையுள்ள மேலான வஸ்த்ரங்களை உடுத்திருந்தனனே அப்படிப்பட்ட இவன் இப்பொழுது தர்மத்தை ஆசரிக்க முயன்று க்ருஷ்ணஜினத்தை உடுத்திருக்கின்றனன். எவன் முன்பு பலவகைப் புஷ்பங்களைச் சிரஸில் முடித்துக் கொண்டிருந்தனனே அப்படிப்பட்ட இவன் இப்பொழுது சடை முடியை எப்படி வஹிக்கலாயினன்? அனேக யாகங்களை விதிமுறைப்படி நடத்தி தர்மத்தை ஸம்பாதிக்கத் தகுந்த ராமன் இப்போது வானப்ரஸ்தரைப் போல் சரீர ச்ரமப்பட்டு ஸம்பாதிக்க வேண்டிய தர்மத்தைத் தேடுகின்றனன். எவனது சரீரம மிகச் சிறந்த சந்தனங்களால் முன்பு பூசப்பட்டிருந்தனதா, அப்படி

ப்பட்ட இம்மஹாநுபாவனது சரீரம் இப்பொழுது புழுதி படிந்து மலினமாயிற்றே! லோகத்திற்கே தகுந்த ராமன் என் நிமித்தமாக இப்படிப்பட்ட மஹா துக்கத்தை அநுபவிக்கின்றனன். இப்படி க்ரூரனும் உலக நிந்தைக்கிடமுமாகிய என்னைப் போன்றவனுடைய ப்ராணன்கள் நீ! எதுக்கு?" என்று புலம்பினன். பரதன் தினகரனைத் தாமரை மலர் போன்ற முகம் வேர்த்து வாடப் பெற்று இங்ஙனம் புலம்பிக்கொண்டே ராமனது பாதங்களில் விழச் சென்று கண்ணீர் மறைக்கையால் ஒன்றும் தோற்றுமல் பாதங்களில் விழப்பெறுமலே கதறிக்கொண்டு தரையில் வீழ்ந்தனன். மஹா பலசாலியான அந்த ராஜகுமாரன் பரதன் துக்கத்தினால் பரிதபித்து 'எம்மையனே!' என்று ஒருதாழாதத்துப் பிறகு ஒன்றுங் கூறாதிருந்தனன். அப்பொழுது பரதன் பெரும்புகழுடைய ராமனைப்பார்த்து 'ஐயனே!' என்று ஒருதரம் உரக்கக் கூவிப் பிறகு கண்களில் நீர் நிரம்பப் பெற்று ஒன்றுஞ் சொல்ல முடியாமல் திகைத்து நின்றனன். சத்ருக்னனும் கதறிக்கொண்டே ராமனது பாதாரவிந்தங்களில் வந்தனஞ் செய்தனன். அந்த ராகவனும், அப்பரத சத்ருக்னர்களிருவரையும் வாரி அணைத்துக் கண்ணீர் பெருக்கினன். பிறகு அவ்வரண்யத்தில் அந்த ராமலக்ஷ்மணர்களிருவரும் சந்த்ர ஸூர்யர்கள் ப்ருஹஸ்பதியோடும் சுக்ரனோடும் சேருவதுபோல் ஸுமந்த்ரனோடும் குஹனோடும் சேர்ந்தனர். அங்ஙனம் ஒருவர்க் கொருவர் கலந்து ஸுகித்திருக்கிற அந்த ராஜகுமாரர்கள் அங்குக் கூட்டத்தில் தலைமையுள்ள யானைகள் போல் விளங்கினர். அந்த ராஜ குமாரர்கள் அம்மஹாரண்யத்தில் ஒருவர்க் கொருவர் கலந்திருப்பதைக் கண்டு அரண்யவாஸிகளான ஸமஸ்த ரிஷிகளுங் கூட மனக் களிப்பின்றிக் கண்ணீர் பெருக்கினர். தொண்ணூற்றொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் பரதனைக் குசலப்ரஸ்னம் பண்ணுதலும், தன் மூலமாக ராமன் ராஜநீதியை உபதேசித்தலும்.

ஜடைகளைத் தரித்து மரவுரி உடுத்துக் கை கூப்பித் தரையில் வீழ்ந்து ப்ரலய காலத்து ஸூர்யன் போல் கண்கொண்டு காணமுடியாதிருக்கின்ற பரதனை ராமன் கண்டனன். பிறகு ராமன், முகவொளி மழுங்கி இளைத்திருப்பதுபற்றிப் பரதனைக் கண்டவுடனே தெரிந்துகொள்ளமுடியாமல் சிறிது நேரங் கழித்துக் கஷ்டப்பட்டறிந்து கைகளால் வாரியெடுத்துக்கொண்டனன் ரகுகுலாலங்காரணகிய அந்த ராமன் அப்பரதனை உச்சி மோந்து கட்டியணைத்து மடியில் உட்கார வைத்து மனவுக்கத்துடன் அவனைப் பார்த்து 'என்னப்பனே! நீ அரண்யத்திற்கு வந்தனையே! உன் தந்தை எங்குப் போயினர்? அவர் பிழைத்திருக்கையில் நீ அரண்யம் வரக்கூடாதல்லவா? நெடுநாள் கழித்து இவ்வரண்யத்திற்கு வெகு தூரத்திலுள்ள கேகயநகரத்தினின்றும் பரதன வரக்கண்டனன். ஸந்தோஷம். தேஹம் மிகவும ஒளிமாறி யிருக்கையால் அடையாளந் தெரியாதிருக்கின்றது. என்னப்பனே! நீ வனத்திற்கு எப்படி வந்தனை? மன்னவர் பிழைத்திருப்பாராயின் நீ இவ்விடம் வரப்பொறுக்கமாட்டாரே. நீ இவ்விடம் வந்ததனால் ஸந்தேஹமாயிருக்கின்றது. இப்பொழுது அவர் பிழைத்திருக்கிறாரல்லவா? ராஜ்யாதிகாரத்தினால் லோகாந்தரஞ் செல்லாதிருக்கின்றாரா? அழகிய ஸ்வபாவமுடையவனே! நீ பாலனுகையால் வல்லமையின்றிச் சாப்வதமான ராஜ்யத்தை இழக்காதிருக்கின்றாயா? உண்மையான பராக்ரமமுடைய தந்தைக்குச் சுப்ரூஷைசெய்கின்றாயா? தசரதமஹாராஜா சொன்னவார்த்தை தவறுதவர், ராஜஸூயமும் அச்வமேதமுஞ் செய்தவர்; தர்மத்தில் திடமான மனவுக்கமுடையவர்; அப்படிப்பட்ட அம்

மன்னவர் க்ஷேமமா? அப்பா! ப்ராஹ்மணர்களில் தலைவ
ரும் எல்லாமுணர்ந்தவரும் தர்மத்தில் நிலைநின்றவரும்
மிகுந்த ப்ரஹ்மதேஜஸ்ஸுடையவரும் இக்ஷ்வாகு வம்சத்
தரசர்களுக்குக் குலகுருவுமாகிய வஸிஷ்டமாமுனியை முன்
போல் பூஜித்துவருகின்றாயா? அப்பனே! முன்பு துக்
கித்திருந்த கௌஸல்யை க்ஷேமமா? கற்பிள்ளைபெற்ற
ஸுமித்ரையும் ஸுகமா? பூஜ்யையான கைகேயிதே
வியும் ராஜ்யம்பெற்று ஸந்தோஷமுற்றிருக்கிறாளல்லவா?
வணக்கமுடையவரும் கற்குலத்தில் பிறந்தவரும் பலபோரி
டத்தில் பல விசேஷார்த்தங்களைக் கேட்டவரும் அஸ்தி
யையற்றவரும் வஸிஷ்டர்உபதேசித்த அர்த்தங்களை கண்கு
ணர்ந்தவருமாகிய உன் புரோஹிதரை (அல்லது ஸுயஜ்
ஞரை) கண்கு பூஜித்துவருகின்றாயா? சாஸ்த்ரங்களையுணர்
ர்ந்தவரும் மிகுந்தமதியமைந்தவரும் கபடமறியாதவரும்
அக்னிஹோத்ர கார்யங்களில் ஏற்பட்டவருமாகிய உன் பு
ரோஹிதர் அந்தந்தக் காலங்களில் கடத்தின ஹோமங்க
ளையும் கடத்தவேண்டிய ஹோமங்களையும் எப்போதும்
உனக்குத் தெரிவிக்கின்றாரா? அப்பா! நீ தேவதைகளை
யும் தாய்தந்தையர்களையும் ஆசார்யர்களையும் தந்தையைப்
போன்ற பந்துக்களையும் மூப்பினர்களையும் பண்டிதர்களை
யும் ப்ராஹ்மணர்களையும் அவரவர்க்குரியபடி கடந்து பூஜி
த்து வருகின்றாயல்லவா? அப்பா! மந்த்ரமில்லாத உயர்ந்
த பாணங்களும் மந்த்ரத்துடன் கூடிய திவ்யாஸ்த்ரங்
களும் நீதிசாஸ்த்ரத்தில் வல்லமையும் அமைந்த ஸுதந்
வரென்னும் உபாத்யாயரையும வெகுமானிக்கின்றாயா? உ
னக்கு நிகரானவர்களும் சூரர்களும் நூல்களையுணர்ந்த
வர்களும் புலன்களைவென்றவர்களும் கற்குலத்தில் பிறந்
தவர்களும் முகத்தைப் பார்த்தவுடனே மனக்கருத்தை
யறியுந்திறமுடையவர்களுமான புருஷர்களை மந்த்ரிகளாக

வைத்துக்கொண்டிருக்கிறாயா? ரகுகுலகுமாரனே! நீதி சாஸ்த்ரத்தில் வல்லவர்களும் ஆலோசித்த விஷயத்தை வெளிவிடாமல் மறைக்குந் தன்மையுடையவர்களுமான மந்த்ரிகளுடன் ஏகாந்தத்தில் செய்யப்பட்டதும் கண்கு மறைக்கப்பட்டதுமான ஆலோசனையே அமைச்சர்களுக்கு வெற்றியைக் கொடுப்பதல்லவா? நித்ரைக்குட்படாதிருக் கின்றாயா? தகுந்த காலத்தில் விழித்துக்கொள்கிறாயா? மேலும் அர்த்தராத்ரிகளில் ஏகாந்தமாகப் பொருள்ஸம் பாதிக்குமுபாயங்களை ஆலோசிக்கின்றனையா? நீ தனியே ஆலோசனை செய்யாமலும் பலருடன் கலந்து ஆலோச னைசெய்யாமலும் தக்க மந்த்ரிகளுடன் பாத்ரங் கலந்து மந்த்ராலோசனை செய்கின்றனையா? நீ ஆலோசனைசெய் தவிஷயம் ராஜ்யமெங்கும் பரம்பி எல்லோர்க்கும தெரி யாமல் வெளிப்படாதிருக்கின்றதா? ரகுகுலகுமாரனே! அற்பமுயற்சியால சித்திக்கத் தக்கதும மிக்கபொருள்வி னையத்தக்கதுமாகிய ஒருகார்யத்தைச் செய்யநிச்சயித்துத் தாமஸிக்காமல் சீக்ரமாகவே அதைச் செய்துமுடிக்கத் தொடங்குகின்றாயா? உன் பகைமன்னவர்களுக்கு நீ ஆ லோசித்த கார்யங்களெல்லாம், அவை கண்ணுக முடிந்து நிறைவேறின பின்பாவது ஏறக்குறைய முடிந்து பயன்பெ றும் ஸமயத்திலாவது மாத்ரமேயன்றிச் செய்துமுடிப்ப தற்குமுன்பே எள்ளளவும் தெரியாதிருக்கின்றனவா? அப் பனே! நீயாவது உன்மந்த்ரிகளாவது ஆலோசித்த கார் யங்களைப் பிறர் ஊஹத்தாலாவது யுக்தியாலாவது இங்கி தம் முதலிய மற்றக் காரணங்களாலாவது சிறிதும் அறி யாதிருக்கிறார்களா? நீ மூர்க்கர்கள் ஆயிரம்பேர்களைத் துறந்தாயினும் கண்கு ஆலோசித்துச் செய்யும் பண்டித னொருவனையே விரும்புகின்றனையா? கார்யஸங்கடங்களி ல் பண்டிதனன்றோ கன்காராய்ந்து பெருகலம் வினையுமாறு

செய்வான். அரசன் மூர்க்கர்களை ஆயிரம்பேர்களையாவது பதிஞ்யிரம்பேர்களையாவது அடித்திருப்பாயினும் அவர்களால் அவனுக்கு மந்த்ரோபாயங்களில் ஸஹாயஞ்சிறிதுமுண்டாகாது. பிறர்சொன்ன அர்த்தங்களை உடனே அறியுக்திறமுடையவனும் நிலைநின்றபுத்தியுடையவனும் விசாரத்தில் ஸமர்த்தனும் நீதிசாஸ்த்ரங்களில் தீர்ந்தவனுமாகிய மந்த்ரி ஒருவனையினும் உளனையின் ராஜனுக்காவது ராஜனைப் போன்றவனுக்காவது மிகுந்த ஐச்வர்யத்தை விளைவிப்பான். சிறந்த ப்ருத்யர்களைச் சமையல் முதலிய சிறந்தகார்யங்களினும், நடித்தரமானவர்களைப் படிக்கை போடுவது முதலிய நடுத்தரமான கார்யங்களினும், கடையானவர்களைக் காலலம்புவது முதலிய கடையாயுள்ள கார்யங்களினும் ஏவுகின்றனையா? நன்கு பரீக்ஷிக்கப்பட்டவர்களும் கபடமற்றவர்களும் தகப்பன் பாட்டன் பரம்பரையில் வந்தவர்களும் பரிசுத்தர்களுமான மந்த்ரிகளையே சிறந்தகார்யங்களில் ஏவுகின்றனையா? கைகேயியின் குமாரனே! நீ ப்ரஜைகளுக்கு உக்ரமான தண்டனைகளைச்செய்து ராஜ்யத்தைப் பீடிப்பாயாயின், உன் மந்த்ரிகள் அதற்கு ஸம்மதிக்காமல் உன்னைத்தடுக்கின்றார்களா? துர்தானங்களை வாங்கிப்பணம் ஸம்பாதித்துயாகஞ்செய்ய விரும்புகின்றவனை ருத்விக்குகள் நிந்திப்பதுபோலவும், பலாத்காரஞ்செய்து அனுபவிக்க விரும்புங்காமுகனை ஸ்த்ரீகள் தூஷிப்பதுபோலவும், க்ரூரமான கார்யங்களை விதித்துப்பணம் ஸம்பாதிக்கிறானிவனென்று உன்னை ப்ரஜைகள் அவமதியாதிருக்கிறார்களா? ஸாமம் முதலான உபாயங்களில் ஸமர்த்தனும் குடிலநீதிகளை நன்கறிந்தவனும் அதர்மாங்கப்ருத்யர்கள்மேல் இல்லாத தோஷங்களைச் சொல்லி அவர்களைத் தொலையச்செய்பவனும் ராஜதண்டனைக்கும் பயப்படாத சூரனும் அரசனதுப்ரபுத்வத்தையே அபஹரிக்கவி

ரும்புகின்றவனுமாகிய புருஷனை அரசன் கொல்லாதிருப்பாயின் அவன் அரசனைத் தப்பாமல் கொன்றுவிடுவான. அப்படிப்பட்டவன் உன்னிடத்தில் இலலையன்ரு ? ராஜா ஸத்காரியங்களுக்கு ஸந்தோஷிப்பவனும் வ்யவஹாரங்களில கைதேர்ந்த சூரனும் அந்தந்த ஸமயங்களுக்குத் தகுந்தபடி தன்னைன்யங்களைச் சேர்க்கவும் பிறர் னைன்யங்களைப் பிரிக்கவும் போதுமான புத்தியுடையவனும் ஆபத்காலங்களில் தைர்யம் மிகுந்திருக்கப் பெற்றவனும் உள்ளும் வெளியு மொக்கப் பரிசுத்தனயிருப்பவனும் தன் ஸ்வாமியிடத்தில் நம்பிக்கை யுடையவனும் நற்குலத்தில் பிறந்தவனும் தன்னிடத்தில் மிகுந்த ப்ரீதியுடையவனும் கார்யத்தில் வல்லவனுமான புருஷனை ஸேனாபதியாகச் செய்திருக்கின்றனையா ? மிகுந்த பலசாலிகளும் யுத்தத்தில் பல முறை வெற்றி கொண்டவர்களும் யாவர்க்கும் ப்ரத்யக்ஷமான பௌருஷச் செய்கையுடையவர்களும் சூரர்களுமான முக்ய புருஷர்களுக்கு உரிய வெகுமதிகளால் மர்யாதை செய்கின்றனையா ? ஸைந்யங்களுக்கு அந்தந்தக் காலங்களில் கொடுக்கவேண்டிய உணவையும் சம்பளத்தையும் காலதவறுமல் அவரவர்க்குத் தகுந்தபடி கொடுக்கின்றனையா ? படர்கள், நாம் கொடுக்குமுணவுகளையும் சம்பளத்தையுங் கொண்டு ஜீவிப்பவர்களாகையால் கொடுக்கவேண்டியகாலத்தை அதிக்ரமிக்கும்பக்ஷத்தில் ப்ரபுவின்மேல் கோபங்கொண்டு கெடுதியைச் செய்ய முயல்வார்கள். அதைப்பெரும் அனர்த்தமாகப் பெரியோர்கள் கூறுகின்றனர். ப்ரதானமான க்ஷத்ரிய குலத்தில் பிறந்தவர்கள் அனைவரும் உன்னிடத்தில் மிகுந்த ப்ரீதியோடிருக்கின்றூர்களா ? அவர்கள் மனப்பூர்வமாக உன் விஷயத்தில் தமது ப்ராணன்களையாயினும் துறந்து உதவி செய்ய ஸித்தமா

யிருக்கிறார்களா? பரத! உன் தேசத்திலேயே பிறந்தவ
னும் பிறரது அபிப்பாயங்களை அறியுந் திறமுடையவனும்
ஸமர்த்தனும் அப்பொழுதைக்கப்பொழுது மேன்மேலும்
புதிது புதிதாகத் தோற்றங் கொள்கின்ற புத்தியுடையவ
னும் தனனிடஞ் சொன்னவற்றைச் சிறிதுந் தவறுமல்
செப்து திர்வஹிப்பவனும் யுக்தாயுக்தங்களை யறிந்து
சொல்லத் தெரிந்தவனுமாகிய புருஷனைத் தூதனுக வை
த்துக்கொண் டிருக்கின்றனையா? நீ உனது சத்ருபக்ஷத்
திலுள்ளமந்த்ரி முதலிய[1] பதினெட்டுத் தீர்த்தங்களையும்
ஒவ்வொருவர்க்கும் மும்மூன்று சாரர்களாக ஒருவர்க்கொ
ருவர் முகமறியாதவர்களை அனுப்பி அவரது ரஹஸ்யங்க
ளைத் தெரிந்து கொள்கின்றனையா? அப்படியே உன பக்ஷி

---

1 பதினெட்டுத் தீர்த்தங்களாவன—மந்த்ரி, புரோஹிதன், யுவராஜன் ஸேநாபதி; அந்தப்புரத்து வாசற்காப்பவன், அந்தப்புரத்
துக் காரியங்களை நிர்வஹிப்பவன், சிறைச்சாலைக்கதிபதி; பொக்கிஷ
ங்காப்பவன்; அரனது ஆஜ்ஞையை வெளியில விளக்கஞ்செய்யுங் கார்
யநியோஜகன்; வ்யவஹாரங்களை விசாரிக்கும்ப்ராட்விவாகன்; ஸே
னைகளுக்குப் படியும் சம்பளமும் கொடுக்கும் ஸேநாயகன்; ராத்ரி
களில் நகரசோதனஞ் செய்துகொண்டு பட்டணத்து வாசற்படிகளை
யும் கோட்டை முதலியவற்றையும் ரக்ஷிக்குங்காலத்தை விதிக்கும
நகராத்யக்ஷனும்; ஸேனையில சோமல் தனியே வேலைசெயது தீர்ந்
தவுடனே சம்பளம வாங்கிகொள்ளும் மற்றை வேலைக்காரர்களை
அனைவர்க்கும் சம்பளத்தை ராஜனிடத்திலின்றும் தானெலோ மொத்
தமாக வாங்கிக்கொண்டு அவர்க்கு வேறுவேறுகப் பங்கிட்டுக்கொடுக்
கும் அதிகாரியாகிய கர்மாந்திகனும்; ப்ரதிதினம் ஸைபயை அலங
கரித்தல ராஜன் மந்த்ரிமுதலானவர்க்குத் தகுந்த ஆஸனங்களை ஏற்
படுத்தல, ஸபிகர்களை அழைத்துகொண்டு வருதல், அஸப்யர்களை
வரவொட்டாமல் தடுத்தல், அவரவர்களுக்குத் தகுந்த இடங்களை
ஏற்படுத்தல், ஸபையில் சப்தமில்லாதபடி செயதல, ஸபைபைக்
காத்தல, முதலிய கார்யங்களைசசெய்பவாகளுக்கு நிர்வாஹகளுகிய
ஸப்யனும்; தாயபாகம் முதலிய விவாதங்களில விவாத விஷயங்க

த்திலும் எப்பொழுதும் உனனெதிரிலேயே யிருக்கிற மந்த்ரி புரோஹித யுவராஜர்களென்னும் மூவரைத் தவிர மற்றைப் பதினைந்து தீர்த்தங்களையும் அப்படியே மூன்று முகமறியாத சார்களை வைத்து அவரது ரஹஸ்யங்களை அறிகின்றனையா? சத்ருக்களைத் தொலைப்பவனே! உன்னால் நியமிக்கப்பட்ட சத்ருக்கள் சிலகாலங் கழித்துத் திரும்பி வரும்பொழுது தூர்ப்பலர்களென்று அவர்களை லக்ஷ்யஞ செய்யாமலிருப்பது தவிர்த்து எப்பொழுதும் அவர்களிடத்தில் மனவூக்கத்துடனிருக்கின்றனையா? அப்பா! காஸ்திகரான ப்ராஹ்மணர்களை அருகில் சேரவொட்டாமல் உபேக்ஷை செய்கின்றனையா? இவர்கள் மூர்க்கர்களாயினும் தம்மைப் பண்டிதர்களாகத்தாமே நினைத்துக்கொண்டிருப்பவர். ஆகையால் தூப்போதனை செய்து தர்மலோபம் அதர்மாசரணம் முதலிய பலவனர்த்தங்களை விளைப்பதில் வல்லவர், தூர்ப்புத்திகளான அந்நாஸ்திகர்கள் லாத்விகர்களாகிய மஹர்ஷிகள் செய்ததும் லஜ்ஜனங்கள் ஆதரிக்கையால் முக்யங்களுமான

வனென்று சோதிதது தாமசாஸத்ரத்தின்படி தீர்ப்புசெயயுந் தாமாத்யகளும்; பிறாசொத்தைத் திருடுதல் முதலிய அபராதங்களைச் செய்தவர்களுக்கு ராஜாஜ்ஞையின்படி கைகால் வெட்டுவது முதலிய தண்டனைகளைச செய்யும் ஜனங்களுக்கு நிர்வாஹகளென தண்டபாலனும்; தனது ராஜ்யத்தின் எல்லைகளிலெ எல்லாத்திசைகளிலும் சத்ரு ராஜர்கள வரது ஆக்ரமித்தல முதலியவை உண்டாகாதபடி ரக்ஷிக்குந் ஜனங்களுக்கு நிர்வாஹகளென ராஷ்ட்ராந்தபாலனும்; ஆகிய இந்தப் பதினெண்மருமே பதினெட்டுத் தீர்த்தங்களெனப்படுவார்கள். தீர்த்தம்-துறை. ஸ்வபக்ஷத்தில் மந்த்ரி புரோஹிதயுவராஜர்களை மூவரும் தன்னெதிரிலேயே இருக்கையால அவரது நடத்தையைத் தானே விசாரித்துக் கொளகையால் அவர்களை விட்டு மற்றப் பதினைந்துபேர்களை மாத்ரம் சார்களைவைத்து அவரது நடத்தையைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

தர்மசாஸ்த்ரங்கள் இருக்கையில் அவைகளை விட்டு நிலையில்லாத கேவல தர்க்க யுக்திகளைக் கொண்டு பயன் சிறிதுமின்றிப் பலவாகப் பேசுவார்கள். என்னப்பா! அயோத்யை பாரக்ஷமசாலிகளான நம்பூர்வர்கள் வஸித்திருந்த நகரம். ஆகையால் உண்மையான பேருடன் சத்ருக்களுக்குச் சிறிதும் புகக்கூடாதது. அதன் வெளிப்புறத்து வாசற்படிகள் மிகவும் திடமாயிருப்பவை. மேலும், அதுவாத கஜ துரகங்கள் நிறைந்திருக்கப் பெற்றது. தந்தமது கர்மங்களில் மனவூக்கங்கொண்டு க்ஷத்ரியர்களும் உத்ஸாஹமுடையவர்களும் பூஜ்யர்களுமாகிய ப்ராஹ்மணர்களும் பலவாயிரம்பேர் வாஸஞ்செய்யப் பெற்றது. நானுவித உப்பரிகைகளால் சூழப்பட்டது. வித்வஜ்ஜனங்களால் விளக்கமுற்றது. மனக்களிப்புற்ற ஜனங்களுடையது. ஸகல ஸம்பத்ஸம்ருத்தியும் நிரம்பப் பெற்றது அவ்வயோத்யாபுரத்தை பத்ரமாகப் பரிபாலித்து வருகின்றாயா? நமது தேசம் அஸ்வமேதம் முதலிய மஹா யாகம் நடத்தின ப்ரதேசங்களோடு கூடியதும் கல்ல அரசாட்சி மழை ஆரோக்யம் முதலிய குணங்களைப்பற்றித் தேசாந்தரத்தை நெஞ்சிலும் நினைக்க நேராத ஜனங்கள் நிரம்பியதும் தேவாலயங்களும் தண்ணீர்ப் பந்தல்களும் தடாகங்களும் விளங்கப் பெற்றதும் என்றும் ஸந்தோஷமுற்ற ஸ்த்ரீபுருஷர்களையுடையதும் ஜனங்கள் கூட்டங்கூடி நடத்தும் உத்ஸவங்களால் ப்ரகாசிப்பதும் நன்கு உழப்பட்ட நிலங்கள் பொருந்தியதும் மிக்க பசுநிரையுடையதும் ஹிம்ஸை யென்பதுசிறிதுமில்லாததும் மழையை எதிர்பார்த்தே ஆகவேண்டியதிர்ப்பந்தமின்றி ஆற்றுநீர்ப் பாய்ச்சலுடையதும் தோட்டம் முதலியவற்றால் அழகாயிருப்பதும் வ்யாக்ரம் முதலிய கொடிய ஜந்துக்களற்றதும் தன்னைச் சுற்றி நாற்புறத்திலுங் கூடத் திரும் முதலிய ஸகல பயங்களும் நீங்கியது,

ஸ்வர்ணம் ரத்னம் முதலியன விளையுமிடங்கள் நிறைந்
தும் பாபிஷ்ட ஜனங்களில்லாததும் நமது பூர்விகர்களால்
பாதுகாக்கப்பட்டதுமாகி ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்.
அப்படிப்பட்ட அத்தேசம் முழுவதும் ஸம்பத்ஸம்ருத்தியு
டன் ஸுகமாயிருக்கின்றதா? அப்பனே! பயிர் செய்தல்
பசு ஸம்ரக்ஷணம் முதலியவற்றில் ஜீவிப்பவர்களாகிய வை
ச்யர்கள் அனைவரும்உன்னிஷ்டப்படி நடக்கின்றனர்களா!
வ்யாபாரம் நன்கு வளர்ந்து வருமாயின், உனைனப்பற்
றின ஜனங்களுக்கு ஸுகம் மேன்மேலும் பெருகிவரும்
நீ அந்த வைச்யர்களுக்கு அபீஷ்டங்களைக் கொடுத்துக்
காத்தும் அநிஷ்டங்களைப் போக்கியும் அவர்களைப் போ
ஷித்து வருகின்றாயா? அரசன் தர்மத்தில் நிலனின்று
தன் தேசத்து ஜனங்களெல்லோரையும் தப்பாமல் காக்க
வேண்டுமல்லவா? நீ உன் மனைவிகளை கல்வார்த்தைக
ளால் மனக்களிப்புறச் செய்து அவர்க்கு அனுகூலமாயி
ருக்கின்றனையா? அவர்களுக்குப் பரபுருஷ ஸம்பாஷணை தி
கள் தோஷதபடி மிகவும் பத்ரமாக அவர்களைக் காக்கின்
றனைபா? அவர்களிடம் நம்பிக்கை யில்லாமல ரஹஸ்யங்க
ளைச் சொல்லாதிருக்கினறனையா? யானைகளுக்கு உத்பத்தி
ஸ்தானமாகிய வனத்தை நன்கு ரக்ஷிக்கின்றனைபா? கா
ட்டு யானைகளை வசப்படுத்திப் பிடிக்கவல்ல பெண் யானை
கள் உன்னிட மிருக்கின்றனவா? பின்னும் பெண் யானை
களையும் யானைகளையும் குதிரைகளையும் ஸங்க்ரஹிப்பதில்
இது போதுமென்னும் த்ருப்தி உண்டாகப் பெறுதிருக்
கின்றனையா? ராஜ குமாரனே! நீ ப்ரதினமும் விடியற்
காலத்தில் எழுந்திருந்து அலங்காரஞ் செய்துகொண்டு
ஸபையில் ஜனங்களுக்கு தர்சனங் கொடுக்கின்றனையா?
வேலைக்காரர்க ளெல்லோரும் பயமின்றி உன்னெதிரில்
வாராதிருக்கின்றனர்களா? ஆனால் அவர்களுக்கு அடி

யோடு தர்சனங் கொடாதிராமலும் அடிக்கடி தர்சனங் கொடுக்காமலும் அவர்கள் கார்யத்தை விசாரிக்குமளவே தர்சனங் கொடுத்து மர்யாதை குன்றாமல் பெருமதிப்புட னிருக்கின்றனையா ? கடுத்தாமாயிருப்பதே கார்ய ஸித்தி யை ஹிஸைக்க வல்லது. உனது கோட்டைகளெல்லாம் தண் ணீர்யங்களாலும் ஜலத்திலும் பலவகை ஆயுதங்களா லும் யந்த்ரங்களாலும் ஸம்பூர்ணமாகிச் சிற்பிகளும் வில் லாளிகளும் சிறையப்பெற்றிருக்கின்றனவா ? ராகுகுலகுமா ரனே ! உனக்கு வரவு அதிகமாகவும் செலவு மிகக் குறை வாகவுமிருக்கின்றதா ? ராகவ ! கடர் விடர் காயகர் முத லிய அபாத்ரங்களில் உன் பொக்கிஷம் போய்ச் சேராதிருக் கின்றதா ? உன் செலவு தேவதைகள் பித்ருதேவதைகள் ப்ராஹ்மணர்கள் அதிதிகள் படர்கள் கண்பர்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் உபயோகபபட்டு வருகின்றதா ? பரி சுத்தமான ஸ்வபாவமுடையவனும் மேலுவரக்காயங்க ளென்னும் மூன்று காரணங்களும் சுத்தமாயிருக்கப்பெற்ற பூஜ்யனுமாகிய புருஷன் தெய்வாதீனமாகக் களவு செய் ததாகக் குற்றம் சார்த்தப்பட்டுனதில் கொண்டுவரப்படி வானையின், அவனை நீதிசாஸ்த்ரங்களுணர்ந்த பண்டிதர் களைக்கொண்டு கேட்பித்து நன்கு விசாரணை செய்யாமல் பொருளாசைபால் தண்டனை செய்யாதிருக்கின்றனையா ? புருஷஸ்ரேஷ்டனே ! ஒருவன் திருடிவிட்டு ஓடிப்போவா னையினும் தகுந்தகாலத்தில் பார்த்துத் திருடின வஸ்து வுடன் பிடித்துப் பண்டிதர்களால் விசாரிக்கப்பட்டுத் திரு டனே இவனென்று நிச்சயிக்கப்பட்டவனையும் அவனிடம் பணம்வாங்கிக்கொண்டு பணத்தாசையால் அவனை விட் டுவிடாமல் தண்டனைசெய்கின்றனையா ? ராகவம்சத்திற் பிறந்தவனே ! மிகவும் அறிஞர்களாகிய உன் மந்த்ரிகள் பணக்காரனுக்கும் ஏழைக்கும் விவாதம் வருகையில்

பணத்திலாசையில்லாமல் அவர்களது வ்யவஹாரத்தைப் பக்ஷபாதமின்றிப் பரீக்ஷிக்கின்றீர்களா? ராகவா! ஒருவன் தனது போகபாக்யங்களை மேலாக எண்ணி வ்யவஹாரங்களை நன்கு விசாரணை செய்யாமல் ஒருவனிடம் பொய்யானகுற்றம் சாத்தித் தண்டனை விதிப்பாளையின், அவ்வாறு தண்டனைக்குட்பட்டவன் மனவருத்தமுற்றுப் பெருக்கும் கண்ணீர் தண்டித்தவனது புத்ரன் பசுமு தலிய எல்லாவற்றையும் அழித்துவிடும். ரகுகுலத்திற் பிறந்தவனே! மூப்பினர்களையும் பாலர்களையும் பண்டித ஜனாமணிகளையும் தனதிகளைக் கொடுத்தும் கட்டைக் காட்டியும் கல்வார்த்தைகளைச் சொல்லியும் இம்மூன்று உபாயங்களாலும் வைவசப்படுத்துகின்றனையா? ஆசார் யர்களையும் வயது சென்றவர்களையும் தாபஸர்களையும் தேவதைகளையும் அதிதிகளையும் நாற்சந்தி வீதிகளில் தெய்வங்களுக்கிருப்பிடமான மஹா வ்ருக்ஷங்களையும் யோகாப்யாஸம் முதலியவற்றால் க்ருதார்த்தர்களான ப்ராஹ்மணர்களையும் வணங்குகின்றனையா? பொருளா ஸைகொண்டு தர்மத்தையும் தர்மத்திலாசை கொண்டு பொருளையும், லோகத்திலும் காமத்திலும் ஆசை கொ ண்டு தர்மார்த்தங்களிரண்டையும் அழிவுறச் செய்யாதி ருக்கின்றனையா? ஜயசீலர்களில் தலைவனே! நீ அந்தந்தக் காலங்களை அறிந்தவன்; ஆகையால் தர்மார்த்தகாமங்க ள் மூன்றையும் பிரித்து அவ்வவற்றுக்குத் தகுந்த காலத் தில் தவறாமல் க்ரமமாய் அனுஷ்டித்து வருகின்றனையா? எல்லாமுணர்ந்தவனே! ஸகல சாஸ்த்ரங்களையுமறிந்த ப்ராஹ்மணர்களும் பட்டணத்து ஜனங்களும் பள்ளிப்பட் டி ஜனங்களும் உன் லோகத்தை விரும்புகின்றார்களா? தெய்வமும் பரலோகமுமில்லையென்றிருக்கை, பொய்பே சுகை, மிகச்சின முறுகை, மனவூக்கமற்றிருக்கை, ஆலஸ்

யங் கொண்டு கார்யங்ளை நிறைவேற்றுமை, பெரியோர்க ளைத் தர்சனஞ் செய்யாமல் இறுமாந்திருக்கை, மத்யம் முதலியவற்றைக் குடித்து மதம் பிடித்துத் திரிகை, ஐம் புலன்களையும் அடக்காமல் அவற்றின் வழியேசெல்லுகை, மந்த்ரிகள் வேண்டாமென்று தானொருவனே கார்யாலோ சனை செய்கை, நன்மையுணராத மூடர்களோடாராய்கை, ஆலோசித்து நிச்சயஞ் செய்த விஷயத்தைச் செய்யாமல் தாமஸஞ் செய்கை, தாம் செய்த ஆலோசனையை மறைக் காமல் வெளிப்படுத்துகை, விடியற்காலத்தில் கண்ணாடி யைப் பார்த்தல் முதலிய மங்கலப்ரயோகங்களைச் செய் யாதிருக்கை ஒரே காலத்தில் பலசத்ருக்களோடு யுத்தஞ் செய்யப் போகை ஆகிய இப்பதிணன்கு ராஜதோஷங் களையும் நீ கைவிட்டிருக்கினறனையா? மிகுந்த மதியுடைய வனே![1] தசவர்க்கம் பஞ்சவர்க்கம் சதுர்வர்க்கம் ஸப்த வர்க்கம் அஷ்டவர்க்கம் த்ரிவர்க்கம் மூன்று வித்தைகள் என்னும் இந்த்ரியவசீகரணம், ஆறு குணங்கள், தெய்வத்

---

1 தசவர்க்கமாவது—'ம்ருகயாக்ஷாஜிவாஸ்வாபஃ பரீவா வஸ்ஸ்தரியோமஜஃ। தளாயத்ரிகம் வ்ருயாட்யாச காமஜோ தஶகோ மணஃ' என்று சொல்லப்பட்ட வேட்டை சூது பகலதூக்கம் நிந்தித் தல் ஸ்த்ரீஸேவை மத்யபானம் கூத்து பாட்டு வாதயம் வீணைதத்திரி தல் என்று காமத்தாலுண்டாகுங் குணங்களாகிய இந்தப்பத்துமே தசவர்க்கமெனப்படுகின்றன. பஞ்சவர்க்கமாவது—'ஔஜஃகம் பார்வ தம் வார்க்ஷமைரிணம் யாங்வநம் தயா'என்று ஜலதுர்க்கம் பர்வததுர்க் கம் வ்ருக்ஷதுர்க்கம் இரிணதுர்க்கம்(இரிணம் நிளாபூமி) மருதுர்க்கம் (மருஜலமில்லாதபூமி) ஆகிய இவ்வைவகை துர்க்கங்களும் பஞ்சவர்க்க மெனப்படும். சதுர்வர்க்கமாவது—'ஸாம தானஞ்ச லோஷ்ட ஷண் டஸ்ய சேதி சதுர்விதம்' ஸாமதான பேத தண்டங்களென்கிற இந் நான்கு உபாயங்களே. ஸப்தவர்க்கமாவது—'ஸ்வாம்யமாத்யாஸ்ச ராஷ்ட்ரஞ்ச துர்கம் கோஸோ பலம் ஸுஹ்ருத்। பரஸ்பரோப காரீதமாராஜ்யம் ஸப்தாங்கம் முசயதே' அரசன் மந்த்ரிதேசம் துர்க்கம்

தால் வருந்துன்பங்கள், பேதந் செய்தல், விம்சதிவர்க்கம், ப்ரக்ருதிமண்டலம். தண்டயாத்ரை, தண்டவிதா

பொகஜிஷும் ஸேனை நணைபர் என்னும் இவ்வேழு ராஜ்யாங்கங்களே. அஷ்டவர்க்கமாவது—'கருஷிவாணிஜ்யது—மாணி ஸைதுஃ குஞ் ஜாவேந்யகம் । வயாகராஃ காரஷாகம ஸ்ரேநயாகாஃச நிவேஸநம்। அஷ்டவர்ஸமிமம ஸாய—ஃ ஸவஸ்யிவ்ருத்தோ நலோபயேத்' பயிர செய்தல் வாத்தகம் துர்க்கம் அணைகட்டுதல் யானைபிடித்தல பொன் வெளளி முதலியன விளையுமிடங்களை ஸங்க்ரஹித்தல கப்பம் வாங்குதல் சூன்யமான இடங்களில் இருப்பிடமேற் படுத்தல் ஆகிய இவ்வெட்டுமே. த்ரிவர்க்கமாவது—தர்மம அர்தம காமம எனனுமஃ இம்மூன்று புருஷார்த்தங்களே. மூன்றுவித்யைகளாவன—வேதம், க்ருஷிகோரக்ஷணவாணிஜ்யங்கள நீதிசாஸ்த்ரம் ஆகிய இம்மூன்று வித்யைகள. விம்சதிவர்கமாவது—'லோலோவ்யுஷ்யோ ஷீர்ஷரோகீ தயா ஜ்ஞாதிவிவறிஷ்க்ருதஃ।ஹீருகோ ஹீருஜாகோலுவீயோ லுவீயஜாஸ்தயா । விரகதப்ரக்ருதிஸ் சைவ விஷயே வ்ஷ்வதிஸைகதிமாந் । அகேக சித்தமந்த்ராஸ் ச தேவவிராஹ்மணநிந்தகஃ । நைஷ்வோபஹதகஸ் சைவ நைவசிந்தகஏவச । உபாஸிக்ஷ்வ்யஸோபெதோவலவ்யஸாஸஹகுலஃ । அதேஸஸ்யோ வைஹாரிபுராயுக்தோஉகாலேநயஸ் ச ஸஃ । ஸதயயாமவ்யபேதஸ் ச விம்ஸதிஃ புருஷாஅமீ । ஏதைஸ்ஸங்யிம நகுர்வீத நிஷ்ரஹணீயாத்து கேவலம்" பாலன், கிழவன், தீர்க்கரோக முடையவன், பந்துக்களால் பஹிஷ்காரஞ் செய்யப்பட்டவன், பயந்தவன், பயந்த மநதாரி முதலான ஜனங்களுடையவன், வைராக்யஸ்வபாவன், விஷய லோலன், ஒரு நிலையான மனத்தோடு ஆலோசனை செய்யாதவன், தேவதைகளையும் ப்ராஹ்மணர்களையும் நிந்திப்பவன், தெய்வத்தால அடிக்கப்பட்டவன்—அதாவது சர்பாதிகளால் அடியுண்டவன், தெய்வதத்தையே நம்பிப் புருஷப்ரயதனஞ் செய்யாதவன், துர்ப்பிக்ஷத்தால பீடிக்கப்பட்டவனும், ஸைன்யம அழிந்து மனக்கவலை யுற்றவன், தேசாந்தரத்திலிருப்பவன், பலசத்ருக்களுடையவனும, அகாலத்தோடு கூடினவன்—அதாவது—கொடிய க்ரஹாதிகளுடையவன், ஸத்யமும் தாமமும் இலலாதவன், ஆகிய இவ்விருபது புருஷாகளே. இவர்களோடு ஸந்தி செயயலாகாது. யுத்தமே செய்ய வேண்டும். இவைகளில ஒவ்வொன்றையும் பலவிதமாகக் கூறுவர்: விஸ்தரபயத்தால எழுதுகிறிலோம்.

ணம், இருவகைப்பட்ட ஸத்திவிக்ரஹங்கள் ஆகிய இவை களை விதிப்படி கன்காராய்ந்து விடவேண்டியவற்றை விட்டும் அனுஷ்டிக்கவேண்டியவற்றை அனுஷ்டித்தும் வருகின்றனையா ? சாஸ்த்ரங்களில் சொல்லிய லக்ஷணங் கள் பொருந்திய மந்த்ரிகள் மூவரையாவது கால்வரை யாவது ஏற்படுத்திக்கொண்டு ரஹஸ்யமாக அவர்களெல் லோரையும் உட்காரவைத்துக்கொண்டாவது அல்லது ஒவ்வொருத்தரோடு தனித்தனியேயாவது கலந்து ஆ லோசனை செய்கின்றனையா? நீ ஓதியுணர்ந்த வேதங் கள், அக்னிஹோத்ரம் முதலிய அனுஷ்டானங்களால் பயன் பெற்றிருக்கின்றனவா? நீ ஸம்பாதித்த பணங்கள் தானபோகங்களால் ஸபலமாகின்றனவா? உன் மனைவி யர்கள் ஸம்போகஸுகத்தைக் கொடுப்பதனாலும் கற்பிள் ளையைப் பெறுவதனாலும் பயன் படைத்திருக்கின்றனர் களா ? நீ கேட்ட சாஸ்த்ரங்கள் உனக்கு நல்வழியைக் காட்டிப் பயன் பெறுகின்றனவா? பரதா ! வளர்ந்த வாழ் நாளைக் கொடுப்பதும் சிறந்த கீர்த்தியை விளைப்பதும் தர் மார்த்த காமங்களை அளிப்பதுமாகிய புத்தியை உனக்கு இப்பொழுது நான் சொல்லினன். அது எனக்கு எப்படி யோ அப்படியே உனக்கும் இருக்கின்றதா? நம் தந்தை தசரதர் எவ்வண்ணம் நடக்கின்றாரோ, நமது முன்னோர் களான பாட்டன்மார்களும் எவ்வண்ணம் நடந்தனர்க ளோ, எது ஸன்மார்க்கத்திற்கிணங்கியும் நிந்தைக்கிடமி ன்றியுமிருக்குமோ, அப்படிப்பட்ட நீதியைத் துறக்காமல் நீயும் நடந்துவருகின்றனையா ? ரகுவம்சத்திற் பிறந்தவ னே ! அறுசுவையும் பொருந்தி நன்கு அமைக்கப்பட்ட கல் லுணவை நீ யொருவனே உண்ணுமல் மித்ரர்களுக்கும் கொடுக்கின்றனையா ? நண்பர்கள் வேண்டிய தனம் முத லியவற்றைக் கொடுக்கின்றனையா ? அரசனையிருப்பவன்

இவ்வாறு தர்மந்தவறுமல் உரிய தண்டனை செலுத்தி ப்ர
ஜைகளைப் பரிபாலனஞ் செய்வாயாயின், அவன் இம்மை
யில் ஸமஸ்த பூமண்டலத்திற்கும் அதிபதியாகி மிகவும்
ஆநந்தத்திலிருந்து சரீராத்மஜ்ஞானம் பெற்றுக் கடைசி
யில் இந்த லோகத்தை விட்டுப் பூர்விக ராஜர்களைப்போல்
ஸ்வர்க்கஞ் செல்வான. நாறுவது ஸர்க்கம் முற்றிற்று

பரதன் ராமனுகருத் தசரதன் மரண மடைந்த வ்ருத்தாந்தத்தைக் கூறுதல.

பரதன் இவ்வாறு ராமன் மொழிந்த வார்த்தையைக் கேட்டு அவனைப் பார்த்து 'உனக்குப் பணி செய்கையா கிற பரமதர்மத்தை இழந்த எனக்கு ராஜ்ய பரிபாலன தர் மம் என் செய்யப் போகின்றது? புருஷஸ்ரேஷ்டனே! மஹாராஜா! மூத்தவனிருக்க இளையவன் அரசனையிருப்ப தில்லை. அநுதியாக நடந்து வரும் இந்த தர்மம் நங்குல த்து மன்னவரிடத்தில் எப்போதும் நிலகின்றிருப்பது. ரகுகுலாலங்காரனே! நீ மூத்தவனுகையால் என்னுடன் கூட ஸகல ஸம்பத்தும் நிறைந்த அயோத்யாபுரத்திற்கு வந்து நம் வம்சத்திற்கு க்ஷேமம் உண்டாகும்படி நீ அபி ஷேகஞ் செய்துகொள்வாயாக. ராஜனையிருப்பது கேவல மன்று. ராஜாவை மனுஷ்யனுக அறிவிலா மூடர் சொல் லுவார்கள். தர்மசூக்ஷ்மத்தை விளக்க வல்ல மன்னவன் செயல் அதிமானுஷமாயிருப்பதென்று பெரியோர்கள் சொ ல்வதுபற்றி அரசன் தேவனென்பதே எனக்கு ஸம்மதமா யிருக்கின்றது. என்னப்பனே! நான் கேகயநாட்டிற்குப் போயிருக்கையில் நீயும் அரண்யத்திற்கு வருகையில் யாக ஞ் செய்யுந் தன்மையரும் ஸத்புருஷர்களில் தலைவரும் மேன்மைபொருந்துகைக்குரியவருமாகிய மஹாராஜர் ஸ்வ

ர்க்கும் அடைந்தனர். நீ வந்தபின்பு அவர் வெகுகாள் இருக்கவில்லை. நீ ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் கூடிப் புறப்படும்பொழுதே மஹாராஜர் துக்க சோகங்களால் பீடிக்கப்பட்டு ஸ்வர்க்கலோகஞ் சென்றனர். ஆண் சிங்கமே! எழுந்திரு. சீக்ரமாகத் தந்தைக்கு ஜலதர்ப்பணம் முதலிய செயல்களை கடத்துவாயாக. காலும் இந்தச் சத்ருக்னனும் முன்பே தர்ப்பணஞ் செய்து முடித்தனம். 'நீங்கள் செய்திருக்க காலும் செய்யவேண்டுமோ' என்ன வேண்டாம். ரகுகுல குமாரனே! தந்தைக்கு ப்ரியனுயிருக்கும் புதல்வன் கொடுக்கிற ஜலதர்ப்பணாதிகளே பித்ருலோகத்தில் என்றும் பாழாகாமல் மிக்க பயனை விளைப்பவையாமென்று பெரியோர்கள் கூறுகின்றனர். நீயே தந்தைக்கு ப்ரியகுமாரன். ஆகையால் நீயும் அரசனுக்கு அபாக்ரியைகளைச் செய்யவேண்டும். உன் தந்தை மஹாராஜர் உன்னைப் பிரிந்து வருந்தி உன்னையே பார்க்க விரும்பி உன்னைப்பற்றியே பலவாறு புலம்பி உன்னிடத்தில் பற்றின மனத்தைத் திருப்பிக் கொள்ள கோரமல் மிகவும் துக்கித்து உன்னையே நினைத்துக்கொண்டு லோகாந்தரஞ் சென்றனர். நூற்றொன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் தசரதன் துஞ்சினதைக் கேட்டுப
புலம்புதலும், மந்தாகினியில் ஜலதர்ப்
பணஞ் செய்தலும், மீளவும் ஆஸ்ர
மத்தில் புகுந்து வருந்துவது, அ
யோத்யா ஜனங்கள் ராமனேடு
சேருதலும்.

ராமன் இவ்வாறு பரதன் மொழிந்த பித்ரு மரணவ்ருத்தாந்தத்தைக் கேட்டு மிகவும் துக்கத்தை விளைப்பதாகிய அதை எள்ளளவும் பொறுக்கமுடியாமல் மூர்ச்சை

யடைந்தனன். பகைவரை அடக்கவல்ல அம்மஹா வீரன் யுத்தத்தில் இந்த்ரன் ப்ரயோகித்த வஜ்ராயுதம் போல் சிறிதும் பொறுக்கமுடியாத பரதன் சொன்ன கடினவ்ருத்தாந்தத்தைக் கேட்டுக் கைகளை உயர எழுப்பி, அரண்யத்தில் புஷ்பித்திருக்கும் வ்ருக்ஷத்தைக் கோடாலியால் வெட்டுகையில் அது கபீலென்று தரையில் வீழ்வது போல் மெய்ம்மறந்து கீழ விழுந்தனன். கரையைக் குத்தி விளையாடி வருந்திப் படித்து நித்ரைபோகின்ற குஞ்சரம் போல் மூர்ச்சித்துக் கீழ விழுந்திருக்கிற ஜகதீசனும் மஹாவீரனுமாகிய ராமனைக் கண்டு பரத லக்ஷ்மண சத்ருக்னர்களும் ஸீதையும் கதறிக்கொண்டு சோகத்திலுல் வருத்தி அவனை மூர்ச்சையினின்றும் தெளிவிக்கும் பொருட்டு அவயவங்கள் முழுவதும் தண்ணீர் தெளித்தனர். ராமனும் சிறிது நேரங் கழித்து மூர்ச்சை தெளிந்து கண்களினாண்டிலும் நீர் பெருக்கி மிகவுந் தீனமாகிய பல வாக்யங்களைச் சொல்லத் தொடங்கினன். தர்மஸ்வபாவனாகிய ராமன் மஹாராஜனாகிய தந்தை மரணம் அடைவது கேட்டுப் பரதனைப் பார்த்து, தர்மம் அமைந்திருக்குமாறு 'ஐயோ! என்னப்பன் காலகதி அடைந்தனரே! என் செய்வேன்? இனி அயோத்தையில் எனக்கு என்ன கார்யம்? இனி அப்படிப்பட்ட ராஜாதிராஜனைப் பிரிந்த அயோத்தியை எவன் பாதுகாக்கப் போகின்றனன்? அம்மஹானுபாவன் என்னைப் பிரிந்த சோகத்திலேயே மரணம் அடைந்தனன். தானும் அவர்க்கு ஸம்ஸ்காரஞ் செய்யப் பெற்றிலன். அம்மஹானுபாவருக்கு இகழத்தக்க பிறப்பினையுடைய இப்படிப்பட்ட அஸத்புத்ரனாகிய என்னால் என்ன ப்ரயோஜனம்? பரதா! நீ காலத்தில் தந்தைக்கு ஸம்ஸ்காரஞ் செய்யப்பெறாத பாபந் தொலைந்தனன். நீயும் சத்ருக்னனும் காலத்தில் ராஜாவுக்கு ப்ரேத கார்யங்கள் செய்யப்

பெற்றீர்களாகையால் கல்வினையுடையரானீர்கள். மஹாராஜர் மரணமடைகையால் ப்ரதானனில்லாமல் கலக்கமுற்றதும் மனக்களிப்பற்றதுமாகிய அயோத்யைக்கு நான் வனவாஸந் தீர்ந்தபின்னும் போக விருப்புகிறிலேன். பகைவரைப் பறந்தோடச் செய்யும் பராக்ரமசாலியே! என்னப்பன் மரணம் அடைந்தனனே! இனி நான் அரண்யத்தில் பதிணென்கு ஸம்வத்ஸரங்கள் கடத்தி அயோத்யைக்குப் போனபின்பு அங்கு என்னைக் கார்யங்களில் இது நன்று இது தீதென்று சிக்ஷிப்பவர் யாவர்? மூன்புன்னப்பன், நான் அவரது ஆஜ்ஞையின்படி தவறுமல் நடக்கும் நடத்தைக்கு ஸந்தோஷித்து என்னை மனக்களிப்புறச்செய்யும் பொருட்டுச் செவிக்கினிய செஞ்சொற்களைக் கூறுவர். இனி அப்படிப்பட்ட வார்த்தைகளை எனக்கு எவர் சொல்லப் போகின்றனர்?" என்றிவ்வண்ணம் புலம்பினன். ராமன் அங்ஙனம் பரதனுடன் சொல்லிப் பூர்ணசந்த்ரன போன்ற முகமுடைய ஸீதையைப் பார்த்துச் சோகத்தினால் வருந்தி 'ஸீதே! உன் மாமனர் மரணம் அடைந்தனரே! லக்ஷ்மணா! நீ தந்தையில்லாதவனாயினை. பரதன் மன்னவர் விண்ணுலகடைந்தாரென்னும் துக்கவார்த்தையைச் சொல்லுகின்றான்' என்றனன். ராமன் அங்ஙனஞ் சொல்லிக் கொண்டிருக்கையில் மிகவும் புகழ்பெற்ற அததக் குமாரர்கள் அனைவர்க்கும் கண்களில் பலமடங்கதிகமாக நீர் பெருக்குண்டாயிற்று. பிறகு அத்தஅண்ணன் தம்பிகள் அனைவரும் ராமனைப் பலவாறு ஸமாதானப்படித்தி லோகநாதனாகிய தந்தைக்குத் தர்ப்பணஞ் செய்யும்படி உரைத்தனர். அந்த ஸீதையும் மாமனராகிய மஹாராஜர் ஸ்வர்க்கலோகஞ் சென்றது கேட்டுக் கண்ணீல் நீர் தளும்பப்பெற்றுக் கணவனைப் பார்க்க சோராதிருந்தனள். ராமன் அங்ஙனம் கண்ணீர் பெருக்குகின்ற ஜனகராஜன் புதல்வியாகிய ஸீ

தையைத் தேற்றி மனவருத்தமுற்றிருக்கின்ற லக்ஷ்மணனைப் பார்த்து மிக வருத்தத்துடன் 'லக்ஷ்மண! தபஸ்விகளுக்கு போக்யமாகிய இக்குணப் பிண்ணாக்கைக் கொண்டு வருவாயாக. ள்ளைத்தின் பொருட்டு அரைத்துணியையும் மேல் உத்தரீயத்தையும் எடுத்துக் கொடுப்பாயாக. மஹானுபாவராகிய என் தந்தைக்குத் தர்ப்பணஞ் செய்யப்போகிறேன். ஸீதை முன்னம் நடந்து செல்வாளாக. அவளுக்குப் பின் நீ நடப்பாயாக. நான் உன்னைப் பின்தொடர்ந்து வருகின்றனன். மிகவும் ஸஹிக்கமுடியாத துக்கத்தின் நிமித்தமாகப் போகும்போது ஸ்த்ரீகளையும் பாலர்களையும் இவ்வண்ணம் முன்னிட்டுக்கொண்டு போகவேண்டுமில்லவா?' என்றனன். அனந்தரம், அவர்களைக் குலக்ரமமாக அனுஸரிப்பவனும் ஆத்மஸ்வரூபத்தெரிந்தவனும் மிகுந்த புத்தியுடையவனும் ம்ருதுஸ்வபாவனும் ஜம்புலன்களையும் அடக்கி வென்றவனும் ராமனிடத்தில் திடமான பக்தியுடையவனுமாகிய ஸுமந்த்ரன் ராமனையும் மற்றும் அந்த ராஜகுமாரர்களையும் ஸமாதானப்படுத்தி அவர்களைப் பிடித்து அழகியதான மந்தாகினியின் துறைக்கு மெல்லமெல்ல அழைத்துக்கொண்டு சென்றனன். பெரும்புகழாளரான அந்த ஸீதா ராமலக்ஷ்மணர்கள் அழகிய துறைகளுடையதும் ரமணீயமாகப் புலப்படுவதும் கரைகளில் என்றும் புஷ்பித்த அரண்யங்களுடையதும் வேகமாகப் பெருகி வருகின்ற ப்ரவாஹமும் பொருந்தியதுமாகிய அம்மந்தாகினி நதிக்கு மனவருத்தத்துடன் சென்று ஸ்னானஞ் செய்து அங்குச் சேறில்லாத ஓர் அழகிய துறையிலிறங்கு 'ஸன்னப்பனே! இந்த ஜலம் உன்னைச் சேருமாக' எனறு மொழிந்துகொண்டே மஹாராஜனுக்கு ஜலதர்ப்பணஞ் செய்தனர். ராமன் இரு கைகளாலும் ஜல

மெடுத்துக்கொண்டு தென்திசை முகமாகத் திரும்பிக் க
ண்ணீர் பெருக்கிக்கொண்டே மன்னவனைக் குறித்து 'ரா
ஜஸிம்ஹனே! பித்ரு லோகஞ் சேர்ந்த உமக்கு நானிப்
பொழுது கொடுக்கும் அழுக்கற்ற ஜலமானது அக்ஷயமா
கி உமக்குச் சேருமாக' என்று மொழிந்து ஜலத்தை
விட்டனன். அனந்தரம் தேஜஸ்வியாகிய ராமன் அம்மந்த
கினீ தீரத்தினின்றும் அக்கரைக்குச் சென்று அங்குத்
தந்தைக்குப் பிண்டப்ரதானஞ் செய்தனன். ராமன் இங்கு
ணப்பிண்ணைக்கை இலந்தம்பழங்களுடன் கலந்து உருண்
டைகள் செய்து தர்ப்பங்களைப் பரப்பி அவைகளின்
மேலிட்டு மனவருத்தத்தினால் பரிதபித்துக் கண்ணீர் பெ
ருக்கிக்கொண்டு 'மஹாராஜனே! எமக்கு இங்கு இவ்விங்
குணப் பிண்ணைக்கே ஆஹாரமாகையால் இதையே உமக்
கிப்பொழுது ஸமர்ப்பித்தனம். ஆகையால் இதை ப்ரீதியு
டன் அமுது செய்தருளவேணும். புருஷன், தான் எதை
ஆஹாரமாகக் கொள்கின்றானே, அதையே அவன் தன்
தேவதைகளுக்கும் ஸமர்ப்பிக்கவேண்டும்' என்று மொழி
ந்தனன். பிறகு அந்தப் புருஷஸிம்ஹன் அவ்வழியாகவே
அவ்வாற்றின் கரையினின்றும் புறப்பட்டுப் போய் அழகிய
தாழ்வரைகளையுடைய சித்ரகூட பர்வதத்தின்மேல் ஏறி
னன். பிறகு மஹீபாலனாகிய அந்த ராமன் பர்ணசாலையின்
வாசற்படியில் சேர்ந்தவுடனே பரத லக்ஷ்மணர்களிருவ
ரையும் கைகளால் அழுந்தக் கட்டிக்கொண்டனன். அவ்
வண்ணன் தம்பிகள் ஸீதையுடன் ஸிம்ஹங்கள் கர்ஜிப்பது
போல் புலம்பிக் கொண்டிருக்கையில் அதனுண்டாகும்
த்வனியால் அப் பர்வதத்தில் ப்ரதி த்வனி உண்டாயிற்று.
மஹா பலிஷ்டர்களாகிய அந்த ராமாதிகள் தந்தைக்குத்
தர்ப்பணஞ் செய்து மனவருத்தத்துடன் புலம்புகையில்
அப் பெருங்கோஷத்தைக் கேட்டுப் பரதனது ஸைன்ய ஜன

கள் பயமுற்றனர். அவர்கள் 'பரதன் ராமனோடு கலந்தனன். இது நிஜம். அவர்களெல்லோரும் கலந்து மரணமடைந்த தசரதரையைக் குறித்து மனவருத்தப்படுகின்றனர். ஆகையால் இதோ புலப்படுகின்ற இப் பெருந் த்வனி அவர்களுடையதே ஆகவேணும்' என்று ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டனர். பிறகு அந்த ஸைன்ய ஜனங்களெல்லோரும் தமது வாஸஸ்தானங்களை விட்டு ஒரு மனத்துடன் அந்த த்வனி யுண்டாகுந் திசையைப் பிடித்து மிக்க வேகத்துடன் எதிர்த்தோடி வந்தனர். அரண்யத்தில் வருந்துகின்ற ஸ்ரீராகவனைப் பார்க்க நடந்தே செல்லவேண்டுமாயினும் அவர்கள் நடக்கமுடியாத ஸுகுமாரர்களாகையால் நடப்பதரிதென்று அவர்களில் சிலர் குதிரைகளின்மேலும் சிலர் யானைகளின்மேலும் சிலர் நன்கு அலங்கரிக்கப்பட்ட தேர்களின்மேலும் ஏறிக்கொண்டு சென்றனர். மற்றுஞ் சிலர் கால்நடையாகவே சென்றனர். அந்த ஜனங்களெலலோரும் ராமன் அரண்யஞ் சென்று கொஞ்சகாலமே ஆயிருப்பினும் வெகுகாலமாகத் தம்மைப்பிரிந்து சென்றுற்போல் நினைத்து அவனைப் பார்க்க மிக்க மனவிருப்பங்கொண்டு அதிவேகத்துடன் அவ் வாப்ரமத்திற்குப் போயினர் அவர்கள் அங்கு அவ்வண்ணன் தம்பிகள்சேருவதைக்காணவிரும்பிப் பலவகைவாஹனங்கள் மேல் ஏறிக்குளம்புகளுடையவும் சக்கரக்கட்டுகளுடையவும் சப்தங்கள் பரம்ப, த்வரையுடன் போயினர். அங்ஙனம் நடந்து செல்கின்ற யானை குதிரை முதலியவற்றின் குளம்புகளாலும் தேர்முதலியவற்றின் சக்கரக்கட்டுகளாலும் உறைக்கப்பட்டு பூமியானது வர்ஷாகாலத்தில் மேகங்களால் ஆகாயம் ஒலிப்பதுபோல் பெரிதும் ஒலித்தது. அப்பொழுது அவ் வனத்திலுள்ள யானைகள் அந்த த்வனிக்குபயந்து பெண்யானைகளால்சூழப்பட்டு அவ்வனத்தி

னின்றும் மற்றொரு வனம்போயின. அப்பொழுது அவை போயினும் அவைகளின் மதஜலவாஸனையால் அவ்வனம் முழுவதும் பரிமளித்துக் கொண்டிருந்தது. பன்றிகளும் செந்நாய்களும் எருமைகளும் ஸர்ப்பங்களும் குரங்குகளும் புலிகளும் கோகர்ணமென்கிற மான்களும் கவய மெனப் படும் மருக விசேஷங்களும் புள்ளிமான்களும் பயந்தோடின. சக்ரவாகங்களும் நீர்மான்களும் ஹம்ஸங்களும் நீர்க்காகங்களும் பெருங் கொக்குகளும் ஆண் குயில் பறவைகளும் க்ரௌஞ்ச பக்ஷிகளும் முதலிய மற்றுமுள்ள பறவைகளும் பயத்தால் ப்ரஜ்ஞை தப்பி காற்புறமும் பறந்தோடின. அந்த த்வனியைக் கேட்டுப் பயந்தோடும் பறவைக் கூட்டங்களால் ஆகாயம் நிறைந்திருந்தது. பாதனது ஸைன்யங்களால் பூமியும் நிரம்பியிருந்தது. ஆகையால் அவ்விரண்டும் நன்கு ப்ரகாசித்தன. பிறகு அந்த ஸைன்யங்கள் அங்ஙனஞ் சென்று பர்ணசாலையில் பெரும் புகழும் பகைவரை அடக்கும் பராக்ரமமும் பொருந்தின புருஷச்ரேஷ்டனாகிய ராமன் தரையில் உட்கார்ந்திருக்கக் கண்டனர். அவர்களெல்லோரும் ஒன்றுகூடிக் கைகேயியையும் மந்தரையையும் தூறிக்கொண்டே ராமனருகிற் சென்று முகம் முழுவதும் கண்ணீர் நிரம்பப் பெற்று அவனெதிரே நின்றிருந்தனர். அனந்தரம் அந்த தர்மஸ்வபாவனாகிய ராமன் மிகவும் மனவருத்தமுற்றுக் கண்ணீர் பெருக்குகின்ற அந்த ஜனங்களைக் கண்டு பிள்ளைகளைத் தகப்பன் போலவும் பெண்களைத் தாய் போலவும் பெருமையுடன் அணைத்துக் கட்டிக்கொண்டனன். அப்பொழுது ராமன் சிலரைக் கட்டிக் கொண்டனன். சிலர் பூரீராகவனை நமஸ்காரஞ் செய்தனர். அந்த ராஜகுமாரன் ஸ்னேஹிதர்களையும் பந்துக்களையும் எல்லோரையும் அவரவர்க்குத் தகுந்தபடி ஸம்மானித்தனன். அவ்வி

டத்தில் மஹாநுபாவர்களாகிய அந்த ராமாதிகளின் ரோதனத்வனி பூமியிலும் ஆகாயத்திலும் பர்வதகுஹைகளிலும் திசைகளிலும் ப்ரதித்வனியுண்டாகப் பெற்று மிருதங்ககோஷம் போல் கம்பீரமாகச் செவிப்பட்டுக்கொண்டிருந்தது. நூற்றிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் தாய்மார்களோடு கலப்பதும் வஸிஷ்டா மந்த்ரிகள முதலானவர்க்கு ராமஜூடு ஸமாகமமும்.

வஸிஷ்டர் தசரதனது பார்யைகளை முன்னிட்டுக்கொண்டு ராமனைப் பார்க்க வேண்டுமென்னும் மனவிருப்பம் மிகப் பெற்று ராமாதிகளிருக்கும் அந்த ப்ரதேசத்தைக் குறித்து வந்தனர். கௌஸல்யை முதலிய ராஜபார்யைகள் மெல்ல மெல்ல நடந்து மந்தாகினீ நதிக்குப் போய்க்கொண்டிருக்கையில் ராமலக்ஷ்மணர்கள் இழிந்த அந்த நூறுயைக் கண்டனர். அதைக் கண்ட கௌஸல்யை முகம் வாடி வதங்கக கண்ணீர் நிரம்பப் பெற்று மிக்க மனவருத்தத்துடன் ஸுமித்ரையையும் மற்றுமுள்ள ராஜபார்யைகளையும் பார்த்து 'எவர் பிறர்க்கு மனவருத்தத்தை விளைக்குங் கார்யங்களைச் செய்யாதவர்களாயினும் தோஷத்தினின்று துரத்தப்பட்டனர்களோ, அந்த அநாதர்களாகிய ஸீதா ராமலக்ஷ்மணர்கள் இழிந்து ஸ்நானஞ் செய்த நூறு இது. நிச்சயம். ஆகையால்தான் இது கலங்கியிருக்கின்றது. ஸுமித்ரே! உன் பிள்ளை லக்ஷ்மணன் என் புதல்வன் நிமித்தமாகச் சோம்பலின்றி எப்பொழுதும் இவ்விடத்தினின்று தானே ஜலங்கொண்டு போவதாகத் தெரிகின்றது உன் பிள்ளை இப்படிப்பட்ட இழிவான கார்யத்தைச் செய்யினும் எள்ளளவும் நிந்தைக்கிடமாகான். தமையன் தந்தையைப் போன்றவனுகையால் அவனுக்கு

ப்ரயோஜனகரமாக எந்தக் கார்யஞ் செய்யினும் அது அவ்வளவுங் குணமேபரகும். இனிப் பரதனது வேண்டுகோளுக்குட்பட்டு ராமன் ராஜ்யம் பெற்ற பின்பு, இப்படிப்பட்ட கஷ்டங்களுக்குத் தகாத உன பிள்ளையும், இழிவானதும் கஷ்டத்தைத் கொடுப்பதுமாகிய ஸஹாசரத்துடன்கூடிய இச்செயலை இனிபாவது செய்ப தேராமல் லோகமுற்றிருப்பாஞக' என்றனள். பிறகு நீண்டமுகிய கண்களையுடைய அக் கௌஸல்யை அங்குப் பூமியின் மேல் தெற்கு நுனியான தர்ப்பங்களின் மேல் பிதருப்பீதியின் பொருட்டு ராமன் பக்தியோடிட்ட பிண்டத்தைக் கண்டு மற்றுமுள்ள தசரத பத்னிகளெல்லோரையும் நோக்கி 'இதோ இக்ஷ்வாகுவம்சத்திற்கு ப்ரபுவும் மஹானுபாவரும் தன் தக்ஷையுமாகிய தசரதருக்கு ராமன் சாஸ்த்ரங்களில் சொல்லிய படி கொடித்த பிண்டத்தைப் பாருங்கள். தேவேந்த்ரனை நிகர்த்து ஸமஸ்த போகங்களையும அனுபவித்த மஹானுபாவராகிய அம்மஹாராஜருக்கு இவ்விங்குணப் பிண்ணைக்கு எவ்வளவும் ஆஹாரமாக நேரரது; நான்கு ஸமுத்ரங்களிடையிலுள்ள ஸாகூமண்டலத்ததையும் ஆண்டனுபவித்து தேவேந்த்ரனைப் போல் விளங்கும் ப்ரபுவாகிய அம்மஹீபாலன் பங்குணப் பிண்ணைக்கை எங்ஙனந் தின்று மகிழ்வான்? பெரும் ஐஸ்வர்யத்துடன் கூடிய ராமன் தக்ஷைதக்கு இங்குணப் பிண்ணைக்கைப் பிண்டமிட வேண்டிவருதே! இதைக்காட்டிலும் உலகத்தில் துக்கமென்பது மற்றொன்றும் எனக்குத் தோற்றவில்லை. ராமன் ப்ரஸ்தாபத்தில் இங்குணப் பிண்ணைக்கிடுவது கண்டும் என் மனம் துயரமுற்று ஆயிரஞ் சுக்கலாய்ப் பிளவாதிருக்கின்றதே? 'புருஷன் தான் எதை ஆஹாரமாகக் கொள்வானே, அவனது தேவதைகளுக்கும் அதுவே ஆஹாரம்'என்று உலகத்தில் வழங்கிவருகின்ற இந்தப் பழமொழி என

க்கு உண்மையாகத் தோற்றுகின்றது' என்றனள். அந்
தத் தசரதனது பார்யைகளனைவரும் அங்ஙனம் மனவரு
த்தமுற்றுக் கதறுகின்ற கௌஸல்யையை நல்வார்த்தைக
ளால் தேறச் செய்து அவளை அழைத்துக்கொண்டுபோய்
ஆஸ்ரமத்தில் ஸ்வர்க்கத்தினின்றும் வந்தேதவதைபோல்
விளங்குகின்ற ஸ்ரீராமனைக் கண்டனர். கௌஸல்யை முத
லிய தாய்மார்கள் ராமன் ஸமஸ்த போகங்களையுந் துறந்
து அரண்யத்திலிருப்பதைக் கண்டு மிகவும் வருந்திப் பெ
ருங் கோஷமுண்டாகும்படி ரோதனஞ் செய்து கண்ணீர்
பெருக்கினர். ஸத்யப்ரதிஜ்ஞரான அந்தப் புருஷஸிம்
ஹன் ராமன் தாய்மார்கள் அனைவருடையவும் சுபமான
பாதாரவிந்தங்களைப் பிடித்துக் கொண்டு நமஸ்காரஞ் செ
ய்தனன். நீண்ட கண்களையுடைய அந்தக் கௌஸல்யாதே
வியும் தமக்கு ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்த ஸ்ரீராமனது
முதுகிலிருக்குத துராசுகளை, மெதுவான விரல்களையுடைய
வைகளும் ஸ்பர்சம் ஸுகமாயிருக்கப் பெற்றவைகளுமா
கிய தமது கைகளால் துடைத்தனர். லக்ஷ்மணனும்
அந்தத் தாய்மார்களெல்லோரையும் பார்த்து மிகுந்த
மனவருத்தங் கொண்டு ராமன் வணங்கின பின்பு தானும்
வணக்கமாக அவர்களெல்லோர்க்கும் நமஸ்காரஞ் செய்த
னன். அந்த ராஜஸ்த்ரீகளெல்லோரும் சுபலக்ஷணங்கள்
பொருந்திய தசரத குமாரன் லக்ஷ்மணனிடத்தில் ராமனி
டத்திற் போலவே ப்ரீதியுடன் நடந்து கொண்டனர். ஸீ
தையும் கண்களில் நிரம்ப நீர் தளும்பப் பெற்று மாமியார்
களது பாதங்களைப் பிடித்துக்கொண்டு நமஸ்கரித்து அ
வர்கள் முன்பு கினறிருந்தனள். கௌஸல்யை, வனவாஸ
த்தில் அகப்பட்டு வருந்துகின்ற அந்த ஸீதையைத் தாய்
தன் புதல்வியை அணைத்துக் கட்டிக்கொள்வதுபோல்,
அணைத்துக்கொண்டு 'ஜனகமஹாராஜரது வயற்றில் பி

றந்து தசரதசக்ரவர்த்தியின் மணட்டுப்பெண்ணும் ராம னுக்குப் பத்னியுமாகிய ஸீதை ஜனஸஞ்சாரமில்லாத வனத்தில் எப்படி துக்கமுற்றிருக்கின்றனள்? ஸீதே! வெயிலில் வதங்கின தாமரைபோலவும் வாடிவதங்கின கருநெய்தல்போலவும், தூள்படிந்த பொன்போலவும், மேகங்களால் மறைக்கப்பட்ட சந்த்ரன்போலவும் காந்திகுறையப் பெற்றிருக்கிற உன்முகத்தைப் பார்க்கையில், அக்னி தனக்காச்ரயமான காஷ்டங்களைக் கொளுத்துவதுபோல், வ்யஸனமெனும் அரணியினின்றுண்டான சோகாக்னியானது மனத்தில் என்னை மிகவும் தஹிக்கின்றதே' என்றனள். இங்ஙனம் தாயான கௌஸல்யை துக்கத்தால் பரிதபித்துச் சொல்விக்கொண்டிருக்கையில் பாதனுக்குத் தமையனாகிய ராமன் அவள் அருகிற்சென்று அவள் பாதங்களைப் பிடித்துக்கொண்டு நமஸ்கரித்தனன். அப்படியே வஸிஷ்டருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு நமஸ்காரஞ்செய்தனன். அப்பொழுது ராமன், தேவேந்த்ரன் ப்ருஹஸ்பதியை வணங்குவதுபோல், அக்னிபோல் மிகுந்த ஓஜஸுடன் விளங்குகின்ற புரோஹிதராகிய வஸிஷ்டரைவணங்கி அவரோடுகூடவே உட்கார்ந்தனன். அங்ஙனம் அவ்விருவரும் உட்கார்ந்தபின்பு தார்மிகனாகிய பரதன், மந்த்ரிகளோடும் பட்டணத்திலுள்ள ப்ரமுகர்களோடும் ஸைந்யஜனங்களோடும் மிகவும் தர்மிஷ்டர்களான மற்றை ஜனங்களோடுங்கூட ராமனது அருகில் உட்கார்ந்திருந்தனன். அப்பொழுது வீர்யவந்தனாகிய அப்பரதன் ராமனது ஸமீபத்தில் உட்கார்ந்து, தாபஸவேஷந்தரித்து மிகுந்த காந்தியுடன் ப்ரகாசிக்கின்ற ராமனைப் பார்த்துக்கொண்டு பரிசுத்தனாகி ப்ரஹ்மதேவனது எதிரில் மஹேந்த்ரன்போல் கைகூப்பிக்கொண்டிருந்தனன். அப்பொழுது அங்குள்ள பூஜ்யர்களான ஜனங்களெல்லோர்

க்கும் 'இப்பொழுது இந்தப்பாதன் ராமனை நமஸ்கரித்து ஸத்காரஞ்செய்து நன்றுகவே பேசுவான்' என்று மிகுந்த குதூஹலம் வாஸ்தவமாகவே உண்டாயிருந்தது. பெருந் தைர்யசாலியாகிய ராமனும் மஹாநுபாவனாகிய லக்ஷ்மணனும் தர்மிஷ்டனான பாதனும் ஆகிய மூவரும் ஸ்நேஹிதர்களால் சூழப்பட்டு, யாகத்தில் ஸபிகர்களால் சூழப்பட்ட கார்ஹபத்யம் முதலிய மூன்றக்னிகள் போல்மிகவும் ப்ரகாசித்தனர். நூற்றுமூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

பாதன் ராமனை ராஜ்யத்தை அங்கீகரிக்கும் படி வேண்டுதலும், ராமன் பிதாவின் ஆஜ்ஞையைத் தாண்டலாகாதென்று ஸமாதானஞ்சொலலுதலும.

பாதன் ராமனை, ராஜ்யத்தைத் துறந்து ஜடாவல்கலங்களைத் தரித்து வருகையால் தன்னிடத்தில் பக்தியுடையவனென்றறிந்து ப்ராதாவான லக்ஷ்மணனுடன் தானுமாக அவனை விஸ்வத்தொடங்கி 'நீ ஜடைகளைத் தரித்து மாவுரிகளை உடுத்து க்ருஷ்ணஜினத்தைப் போட்டுக்கொண்டு இவ்வரண்யதேசத்திற்கு வந்தாயே! இதற்குக்காரணம் யாது? நீயே அதைச்சொல்ல விரும்புகின்றனன். சொல்லுவாய்' என்று விஸ்வாஸித்து, அவன் சோகத்தால் ஒன்றும் தோற்றாதிருக்கையில், மீளவும் மஹாநுபாவனாகிய ராமன் பாதனை பலாத்காரமாகப் பிடித்துக் கட்டிக்கொண்டு வினவுகையில் பாதன் கைகூப்பிட்டு 'மஹாபாஹுவாகிய நம் தந்தை மூத்தவனுக்கு உரியதாகிய ராஜ்யத்தை இளையவனுக்குக் கொடுத்து செய்யத்தகாத கார்யத்தைச்செய்து உன்னைக் காட்டுக்குப்போகவிட்டுப் பின்பு புத்ரசோகத்தால் மிகவும் பீடிக்கப்பட்டு ஸ்வர்க்கமடைந்தனர். பரந்தபனே! கேவலம் பெண்பிள்ளையாகிய என்

தாய் கைகேயி தூண்டினமாத்திலேயே மஹாராஜன் தன் கீர்த்தியெல்லாம் பாழாகும்படியான இம்மஹாகோர பாபத்தைச் செய்தனன். இப்படிப்பட்ட மஹாபாபகார்யத்திற்கு முயன்ற அப்பெண்பிள்ளை, தான் விரும்பின ராஜ்யத்தைப் பெறுமலே விதவையாகிச் சோகத்தால் இவ்வுலகத்து மஹா கோரமான நரகத்தில் விழப்போகின்றனள். அவளது வயிற்றில் பிறந்து வீணன அபவாதத்திற்காளாயிருக்கும் உன்தாஸனகிய என்னிடத்தில் அனுக்ரஹஞ்செய்யவேண்டும். இப்பொழுதே நீ தேவேந்த்ரன்போல் ராஜ்யத்தில் அபிஷேகங்கொண்டருள்வாயாக. இந்த ப்ரஜைகளும் விதவையான தாய்மார்களும் எல்லோரும் உன்னிடம் வந்திருக்கின்றனம். ஆகையால் அனுக்ரஹிக்கத்தகும். ராமா! நீ நமது வம்சத்தின்பெருமையைக் காப்பாற்றுபவன். ஆகையால் ஜ்யேஷ்டக்ரமமாக வருவதுபற்றியும் உனக்கே தகுந்திருப்பது பற்றியும் இந்த ராஜ்யத்தை தர்மத்தின்படி கைப்பற்றுவாயாக. அங்ஙனங் கைப்பற்றி கண்பர்களனைவருடையவும் விருப்பத்தை ஈடேற்றுவாயாக. நிர்மலனகிய சந்த்ரனல் சரத்காலராத்ரிபோல் பர்த்தாவாகிய உன்னல் இத்தப்புவனி முழுவதும் வைதவ்யந் தீர்ந்திருக்குமாக. இம்மந்த்ரிகளனைவரோடும் கூட நான் தலையால்வணங்கி யாசிக்கின்றனன். தம்பியும் சிஷ்யனும் தாஸனுமாகிய எனனை அனுக்ரஹிப்பது உனக்கு யுக்தமாயிருக்கின்றது. புருஷதிலகனே! நமது பட்டணத்தில் பரம்பரையாய் வந்தவர்களும் தந்தை பாட்டன்மார்களை ஸம்பந்தித்தவர்களும் பூஜைக்குரியவர்களுமாகி இதோ வந்திருக்கின்ற இம்மந்த்ரிமுதலானவர்களெல்லோரும் ஒன்றுகச்சொல்லுகிற வார்த்தையை உல்லங்கனஞ் செய்யலாகாது'என்றனன். கைகேயியின் புதல்வனகிய அந்தப் பரதன் இங்ஙனஞ் சொல்லி நீண்ட பாஹுதண்டங்களை நீட்

டிக் கண்ணீர் பெருக ராமபாதங்களைத் தலைசாய்த்து வி
திப்படி பிடித்துக்கொண்டு நமஸ்காரஞ் செய்தனன். மதி
த்த யானைபோல் அடிக்கடி பெருமூச்சு விடுகின்ற அந்
தத் தம்பி பரதனை ராமன் அணைத்துக்கொண்டு 'நற்குல
த்தில் பிறந்து மிகுந்த ஸத்வகுணம்பொருந்தி தேஜஸ்
ஸுடன் விளங்கி மஹாவ்ரதங்களை ஆசரித்துக்கொண்டி
ருக்கும் உன்னைப்போன்றவன் துச்சமான ராஜ்யத்திற்
காக இப்படிப்பட்ட பாபகார்யத்தை எப்படி செய்
வான்? சத்ருக்களை அழிக்கவல்லவனே! உன்னிடத்
தில் தோஷம் சிறிதும் எனக்குத் தோற்றவில்லை. நீ பால்
யத்திலல், பூஜ்யையாகிய தாயை நிந்திக்கின்றனை.
இது உனக்கு யுக்தமன்று. பாபதூரனே! பெரி
யோர்கள் எப்பொழுதும் தம்மைச் சேர்ந்த சிஷ்யதாஸ
தாகளிடத்திலும் பார்யைகளிடத்திலும் பிள்ளைகளிட
த்திலும் மனம் தோன்றினபடி செய்யலாமென்று விதிக்கப்
பட்டிருக்கின்றது. அழகிய ஸ்வபாவமுடையவனே! உல
கத்தில் ஸாதுக்கள் பார்யைகளையும் புத்ரர்களையும் சிஷ்
யர்களையும் நியமித்தபடி நடக்கவேண்டியவர்களெனக்
கூறுகின்றனர். நாமும் அப்படியே இத்தத் தசரதரது நிய
மனத்துக் குட்பட்டவர்களே யென்று நீ அறிவாயாக.
நல்லியற்கை யுடையவனே! மஹாராஜன் என்னை கார்த்
தணியை அனையாடையாகவும் க்ருஷ்ணஜினத்தை மே
லுத்தரீயமாகவும் உடுத்து அடவியில் காத்திருக்கும்படி
யும், அல்லது ராஜ்யத்தில் காத்துக்கொண்டிருக்கும்படி
யும் செய்ய அதிகாரமுடையவன். நீ தர்மத்தை யுணர்ந்த
வர்களில் மேலானவன். தர்மிஷ்டனுகிய தந்தையிடம் உ
லகத்தார் கொண்டாடும்படியான கௌரவம் எவ்வளவு
ண்டோ, அவ்வளவு கௌரவம் தாயிடத்திலும் வைக்க
வேண்டும். ரகுவம்சத்திற் பிறந்தவனே! தர்ம சீலர்களா

ன இந்த நம் தாய் தந்தைகள் 'என்னை அரண்யத்திற்குப் போ' என்று நியமிக்கையில் அங்ஙனஞ் செய்யாமல் மற்றொரு விதம் எப்படி நடத்தலாகும்? நீ அயோத்தையிலிருந்து லோகபூஜ்யமான ராஜ்யத்தைக் கைப்பற்றிப் பாதுகாத்துவரவேண்டும். நான் மரவுரி உடுத்து, தண்டகாரண்யத்தில் வாஸஞ செய்யவேண்டும். மஹா தேஜஸ்வியாகிய தசரதமஹாராஜன் ப்ரஜைகளின் கண் முன்னம் இங்ஙனம் விபாகம் ஏற்பாடு செய்து ஆஜ்ஞை கொடுத்து ஸ்வர்க்கஞ் சேர்ந்தனன். தர்மஸ்வபாவனும் லோக குருவுமாகிய மஹாராஜனே உனக்கு ப்ரமாணம். ஆகையால் உனக்குத் தந்தை கொடுத்த பாகத்தை விதிப்படி அனுபவிக்கத் தகும். நல்லியற்கை யுடையவனே! நான் தண்டகாரண்யத்தில் பதிணன்கு ஸம்வத்ஸரங்களிருந்து மஹானுபாவராகிய தந்தை கொடுத்த பாகத்தை அனுபவிக்கவேண்டியவன். மனிதர்களனைவராலும் பூஜிக்கப்பட்டு மஹானுபாவராகி தேவேந்த்ரனை நிகர்த்த நம் தந்தை எனக்கு எதை ஆஜ்ஞாபித்தனரோ, அதுவே எனக்குப் பரமஹித மென்று நினைப்பேனன்றி, தந்தை ஆஜ்ஞை செய்யாத ஸர்வலோகேச்வரத்வம் கேருமாயினும் அதை எனக்கு ஹிதமாக நினைக்கமாட்டேன்' என்றனன். நூற்றுநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் ராமனை மீளவும் ராஜ்யத்தை அங்கீகரிக்கும்படி ப்ரார்த்தித்தலும், ராமன் தத்வாத்தங்களைப் பராமர்ஸித்து ஸமாதானங கூறுதலும்.

புருஷஸிம்ஹர்களாகிய ராமாதிகள் இங்ஙனம் கண்பர்கள் சூழ இருந்து துக்கித்துக் கொண்டிருக்கும் பொழுதே அந்த ராத்ரி அதி கஷ்டத்துடன் கடந்த

து. பிறகு விடியற்காலமாகையில், அவ்வண்ணன் தம்பி கள் தந்தமது கண்பர்களால் சூழப்பட்டு மந்தாகினீ நதி யில் ப்ராதக்கால ஜபஹோமாதிகளை முடித்து ராமனிடம் வந்து சேர்ந்தனர். அப்பொழுது அவர்களெல்லோரும் வெறுமனே உட்கார்ந்திருந்தார்களன்றி எவரையினும் ஒரு மொழியாயினும் மொழியவில்லை. பிறகு பரதன் மாத் ரம் கண்பர்களினிடையில் ராமனைப் பார்த்து 'நீ, ஒரு வனது ராஜ்யத்தை மற்றொருவன் எப்படி கைப்பற்றலா மென்னவேண்டாம். நான் என் தாயை கல்வார்த்தை சொல்லியிருக்கின்றேன். நீயே எனக்கு இந்த ராஜ்யங் கொடுத்தனை. இனி என் ராஜ்யத்தை நான் மீளவும் உன க்கே கொடுக்கின்றனன். அங்கீகரித்து அகண்டகமான இந்த ராஜ்யத்தை யெல்லாம் இஷ்டப்படி அனுபவிப்பா யாக. வர்ஷாகாலத்தில் பெரிய ஜலப்ரவாஹம் வர, அதன் வேகத்தால் உடைந்த அணைகட்டைக் கட்டுவதற்கு யா வர்க்கும் தரமில்லையன்று? அப்படியே இப்பெரும் ராஜ்ய த்தை கிர்வஹிப்பது மிகவும் கஷ்டம். அதற்கு நீ தவிர ம ற்றொருவனும் வல்லவனல்லன். மஹீபதியே! குதிரையை ப்போல் கழுதை நடக்க முடியாது. கருடனைப்போல் கே வலமான ஒரு குருவி ஆகாயத்தில் பறக்க முடியாது. அ ப்படியே உன் நடத்தையின்படி நடக்க எனக்குச் சக்தி யில்லை. ராமா! எவனுல் பல ஜனங்கள் பிழைக்கின்றார்க ளோ, அவன் பிழைப்பு மேலானது. பிறரை அடித்து ஜீ வீப்பவன் பிழைப்பு மாத்ரம் மிகவும் நீசமானது. மஹாபா ஹுவே! ஒரு புருஷன் விதை விதைத்து நீர் வார்த்து வளர்த்துக் கஷ்டப்பட, அந்த வ்ருக்ஷம் கொஞ்ச காலத் தில் குள்ளர்களுக்கு ஏற அலாத்யமாகும்படி கப்புங்கிலை யுமாக வளர்ந்து பெரும் வ்ருக்ஷமாகிக் காலத்தில் புஷ் பித்தும் பழங்களைப் பழுக்காது போமாயின், அதற்கு

அம்மரத்தை நாட்டினவன் அதன் பலங்களை யுண்டாகும் ப்ரீதியை அநுபவிக்காமற் போவானல்லவா? இதுவே உபமானம், அதன் பொருளை நீயே உணர்வாயாக. நீ பெரியோனுகி எங்களுக்கெல்லாம் பர்த்தாவாயிருந்தும் பட்டங் கட்டிக்கொண்டு ப்ருத்யர்களாகிய எங்களைப் பாதுகாக்க மாட்டாயாயின், கீழ்ச் சொன்ன கதை யெல்லாம் விளையு மென்னும் இப்பொருளை நீயே உணர்வாயாக, மஹாராஜனே! சத்ருக்களை யடக்க வல்ல நீ ராஜ்யத்தில் பட்டாபிஷேகங் கொண்டருளி ஸூர்யன் போல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கையில், ப்ரமுகர்களான பட்டணத்து ஜனங்களெல்லாம் குவியல்கூடி உன்னைக் கண்டு மகிழ்வார்களாக. காகுத்தனே! மதித்த யானைகள் உன் பின்னே வர மனக்களிப்புற்று கர்ஜிக்குமாக. மேலும், அந்தப்புரத்திலுள்ள ஸ்த்ரீகளெல்லோரும் மனக்கலக்கத்தை யெல்லாந் துறந்து ஸந்தோஷமுறுவார்களாக' என்றனன். பல வகைப்பட்ட பட்டணத்து ஜனங்களெல்லோரும் ராமனை அங்ஙனம் ப்ரார்த்தித்துக் கொண்டே பரதன் மொழிந்த வார்த்தைகளைக் கேட்டு 'நன்று நன்று' என்று கொண்டாடினர். இங்ஙனம் தன் ப்ரார்த்தனையை அங்கீகரிக்கவில்லையே யென்று மனவருத்தங் கொண்டு 'என்னுல் அண்ணன் அரண்யஞ் சென்று தந்தையும் மாண மடைந்தனரே' என்று புலம்பிக் கொண்டிருக்கும் பெரும்புகழுடைய பரதனைப் பார்த்து ராமன் தான் நன்கு திருத்திய மதியுடையவனுகையால் ஸமாதானப்படுத்த முயன்று 'புருஷன் ஸ்வதந்த்ரன் அன்று. ஆகையால் தன்னிஷ்டப்படி நடக்க முடியாது. இங்கிருந்து மற்றோரிடத்திற்கும், மற்றோரிடத்தினின்று இவ்விடத்திற்கும் புருஷனைத் தெய்வமே இழுத்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் கைகேயியைப் பற்றி நான் இவ்விடத்திற்கு அனுப்பப்பட்டேனை

ன்று நினைக்கலாகாது. மேலும், தந்தை மரண மடைந்தைதப் பற்றி வருத்தமுறுவது யுக்தமன்று. பணக்குவியல் கூளப் பலவிதமாக ஸம்பாதித்தபோதிலும் கடைசியில் அழிபவையேயன்றி நிலைநிற்பவை யல்ல. எவ்வளவு உயர்ந்த பதவியைப் பெற்றபோதிலும் கடைசியில் கீழ் விழுந்தே தீரவேண்டும். புத்ரமித்ராதிகளோடு கூடியிருப்பதெல்லாம் பிரிகையிற்றானே வந்து முடியும். எவ்வளவு நல் வாழ்க்கையும் மரணத்தில் வந்து முடியாமல் தீராது. வஸ்து ஸ்வபாவம் இப்படிப்பட்டதாகையால் தந்தையும் மரணமடைந்தனர். நன்கு பழுத்த பழத்திற்குச் செடியினின்றுந் தரையிலிற்று வீழ்கை யொன்றுழிய வேறு பயமில்லாததைப்போல், பிறப்புற்ற மனிதனுக்கு மரணமடைவதைக்காட்டிலும் வேறுபயமில்லை. திடமான தூண்களையுடைய மாளிகையானது நாள் செல்லச்செல்லப் பழையதாகி நசிப்பதுபோல், மனிதர்களும் மூப்பிறப்புகளுக்குட்பட்டு நாசமடைவார்கள். கடந்த ராத்ரி மீளவும் திரும்பிவர மாட்டாது. யமுனையின் ப்ரவாஹம் ஜலம் நிரம்பிய ஸமுத்ரத்திற்குப் போய்ச்சேருமேயன்றித் திரும்புவதில்லை. வெயிற்காலத்தில் ஸூர்ய கிரணங்கள் ஜலத்தை இழுப்பதுபோல், கடந்துசெல்கின்ற இரவும்பகலும் ஸமஸ்த ப்ராணிகளுடையவும் வாழ்நாள்களை நசிக்கச் செய்கின்றன. நீ நிற்கிலும் கடக்கிலும் உனது வாழ்நாள் க்ஷீணித்துக்கொண்டேயிருக்கின்றது. ஆகையால் உன்னைப்பற்றியே நீ சோகிப்பாயாக. உன்கதி இப்படியிருக்க மற்றொருவனைப்பற்றிச் சோகிப்பதேன்? மனுஷ்யன் போகும்பொழுது ம்ருத்யுவும் கூடவே போகின்றது. உட்கார்ந்திருக்கும்பொழுதும் கூடவே உட்கார்ந்திருக்கின்றது. வெகு தூரம் ப்ரயாணமாய்ப் போய் வரும்பொழுதும் ம்ருத்யுவும் கூடவே போய் வருகின்றது.

ஆகையால் ம்ருத்யுவினின்றுந் தவறிப் போவது எவ்வித த்திலும் ஸாத்யமன்று. 'காலாந்தரத்தில் நீசொன்னபடி செய்கிறேன்' என்கிறாயோ? தேஹம் முழுவதும் சதை மடிப்புகள் உண்டாயின. கறுத்தமயிர்களெல்லாம் நரை மயிராயின. கிழத்தனம் வந்து தாக்கும் ஜீர்ணித்தனன். இனிப் புருஷன் எத்த உபாயஞ் செய்து இவ்வனர்த்தங்க ளைத் தொலைக்க வல்லவனுவான? ஆகையால் நன்றாகப் பிழைத்திருக்குங் காலத்திலேயே ஆத்ம விசாரம் தடக்க வேண்டும. மனிதர்கள் ஸுர்யன் உதயமாகும் பொழுதே பணம் ஸம்பாதிக்குங் காலம் வந்ததென்று ஸந்தோஷிக் கின்றனர். ஸுர்யன் அஸ்தமிக்கும் பொழுது காமஸுக ங்களை அனுபவிக்குங் காலம் வந்ததென்று ஸந்தோஷிக் கின்றனர். இதுவன்றி எவரும் அவ்வுதயாஸ்தமய காலங் களால் தமது வாழ்நாள் க்ஷீணிக்கின்றதென்று தெரிந்து கொள்வாரில்லை. அந்தந்த ருதுக்கள் புதிதுபுதிதாகத் த லைகாட்டும் பொழுது அவைகளில் மனிதர்கள் அந்தந்தப் போகங்களுக்குக் காலம் வந்ததென்று ஸந்தோஷிக்கிறார் களன்றி ருதுக்கள் சுழன்று சுழன்றோடுவதால் ப்ரா ணிகளின் வாழ்நாள் க்ஷீணிக்கின்றதே! அதை மாத்ரம் அறிவாரில்லை. மஹா ஸமுத்ரத்தில் ஒரு காஷ்டத்தோடு மற்றொரு காஷ்டம் எப்படி ஒன்றுகக் கூடுகின்றதோ, அங்ஙனஞ் சேர்ந்து அவை கொஞ்சகாலத்தில் எப்படி வே றுவேறுகப் பிரிகின்றனவோ, அப்படியே பார்யைகளும் புத்ரர்களும் பந்துக்களும் பணங்களும் கொஞ்சகாலம் ஒருவரோடொருவர் சேர்ந்திருந்து காலம் வருகையில் ஒருவர்க்கொருவர் வேறுபட்டுப் போகின்றனர். கடைசியில் பிரிவு நேரிலிகையே நிஜமன்றி ஸம்பந்தம் எவ்வளவும் ஸ்திரமன்று. இவ்வுலகத்தில் எந்தப்ராணியாயினும் தன் னிஷ்டத்தின்படி பந்துக்களோடு கலந்திருக்கமுடியாது;

ஆகையால் மரணமடைந்தவனைக் குறித்து எவ்வளவு சோகித்தபோதிலும் அவனை மீளவும் பிழைப்பிக்கத் தர மன்று.வழிகடந்து செல்கின்ற வழிப்போக்கர்கூட்டத்தை நோக்கி வழிகடந்து செல்கின்ற மற்றொருவன் 'நானும் உங்களைப் பின்தொடர்ந்து வருகிறேன்' என்று சொல்விப் பின்தொடர்வதுபோல், இதற்குமுன் பூர்வர்கள் தொடங்கித் தம்தந்தை பாட்டன் முதலானோர் அனுஷ்டித்த (மரண) மார்க்கத்தையே புத்ராதிகளும் அனுஸரிக்கவேண்டுமென்பது நிச்சயம் அதை எவ்வளவும் தவறகலாகாது. அம்மார்க்கத்திற்கு வேறுபாடில்லை. அம்மார்க்கத்தை அடைந்து எப்படி துக்கிக்கமுடியும்? ப்ரவாஹம்போல் வயது திரும்பாமல் கடக்கையில், பரலோக ஸுகத்திற்கு ஹேதுவாகிய தர்மத்திலேயே மனத்தைச் செலுத்தவேண்டும். ஸுக ஹேதுவான அந்தத் தர்மத்தைப் படைத்தவர்களே ப்ராஜ்ஞகளெனப்படுவார்கள். மற்றவர் மிருகங்களே. தர்மஸ்வபாவராகிய நம் தந்தை தசரத மஹாராஜர் மங்கலகரமான ஸமஸ்த யாகங்களையும் உரிய தக்ஷிணைகளுடன் நடத்தி அப்புண்யாநுசயத்தினல் ஸ்வர்க்கமடைந்தனர். நம் தந்தை ப்ருத்யர்களை நன்கு போஷிக்கையாலும் ப்ராஜ்ஞகளை நீதிவழுவாமல் பரிபாலிக்கையாலும் தன் மத்தின்படி தனம் வாங்குகையாலும் புண்யாத்மாவாகி ஸ்வர்க்கஞ் சென்றனர். நம் தந்தை தசரதமஹாராஜர் ப்ராஜ்ஞகளுக்கும் தனக்கும் இஷ்டமான குளம் வெட்டுவிப்பது முதலிய சுபகார்யங்களாலும் உரிய தக்ஷிணைகளுடன் யாகங்கள் செய்தமையாலும் க்ருதார்த்தராகி ஸ்வர்க்கஞ் சென்றனர். அம்மஹாராஜர் பலவகை யாகங்களைச் செய்து புஷ்கலமாக ஸமஸ்த போகங்களையும் அனுபவித்து வெகுநாள் வாழ்ந்திருந்து ஸ்வர்க்கமடைந்தனர். என்னப்பா! ரகுகுலகுமாரனே! பூர்விகர்களைக் காட்டிலும்

வெகுகாலம் பிழைத்திருந்து பலவகைப் போகங்களை அனுபவித்து ஸஜ்ஜனங்களால் பூஜிக்கப்பட்டு ஸ்வர்க்கமடைந்தவராகிய நம் தந்தையைக் குறித்து எள்ளளவும் துக்கிக்கவேண்டிய அவச்யமில்லை நம் தந்தை ஜீர்ணமான மனுஷ்ய தேஹத்தை விட்டு திவ்ய தேஹத்தைப் பெற்று ப்ரஹ்மலோகத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறாரல்லவா? அப்படிப்பட்ட அவரைப்பற்றி வருத்தப்படுவதேன்? அப்படிப்பட்ட பதவியைப் பெற்ற தந்தையைக் குறித்து இப்படிப்பட்ட அறிவுடையிருப்பவன் எவ்வளவும் துக்கிக்கத் தகாது. தந்தை மரண மடைந்தாரென்றும், நான் அரண்யம் போனேனென்றும் இவ்வனம் பலஹீனமாகச் சோகிப்பதையும் புலம்புவதையும் கண்ணீர் பெருக்குவதையும் எல்லா அவஸ்தைகளிலும் தீரனையிருக்கும் புத்தியுடையோன் விட்டுத் துறக்கவேண்டும். நீ பேசுவதில் யாவரிலும் மேலானவன். உனக்கு நான் சொல்லவேண்டுவதில்லை. நீ மனக்கவலை தீர்ந்திருப்பாயாக. மனவருத்தமுறவேண்டாம். போய் கம்பட்டணத்தைப் பரிபாலித்துக் கொண்டிருப்பாயாக; அப்படியே ஜ்யேஷ்டரான தந்தை உனக்குக் கட்டளையிட்டிருக்கின்றனர். புண்யகர்மாவாகிய அவரே என்னை எங்கிருக்கும்படி நியமித்தாரோ, அங்கேயே இருந்து பூஜ்யராகிய என் தந்தையின் ஆஜ்ஞையை நிறைவேற்றப் போகின்றனன். சத்ருக்களையடக்குந் திறமுடையவனே! அந்தத் தந்தையின் ஆஜ்ஞையை உல்லங்கனஞ் செய்தல் எனக்கு ந்யாயமன்று, நீயும் அந்த ஆஜ்ஞையை எப்பொழுதும் கௌரவித்துக் கொண்டிருக்கவேண்டும். அவரே நமக்கு பரம். மேலும் நமக்குத் தந்தை. ஆகையால் ரகுவம்சத்தில் பிறந்தவனே! நான் பதிணன்கு ஸம்வத்ஸரங்கள் வனவாஸமிருந்து அதனால் தர்மஸ்வபாவராகிய தந்தை அளித்த மேலான ஆஜ்ஞை

யைப் பாதுகாக்கின்றனன். புருஷப்ரேஷ்டனே! பரலோ
கத்தைப் பெற விரும்புவோன் தார்மிகனெ க்ரூரத் தன்
மையைத் துறக்து குருவிஞ்ஞையின்படி நடக்கவேண்
டும். புருஷ ஸிம்ஹனே! நம் தந்தை தசரத மஹாராஜரு
டைய சுபாசாரத்தை யெல்லாம் மனத்தில் வைத்துக்கொ
ண்டு ஸஹஜமான ராஜத்தணமையை ஏற்றுக்கொள்வா
யாக' என்றனன். மஹாஜுபாவனும் ஸமர்த்தனுமாகிய
ராமன் இங்ஙனம் தன் தம்பியைப் பார்த்துத் தசரதையி
ஞ்ஞையை அவச்யம் பரிபாலிக்க வேண்டுமென்னும்
பொருளடங்கிய வசனங்களைக் கூறிப் பிறகு வெறுமனே
இருந்தனன். நூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் ராமனை மீளவும் ப்ரார்த்தித்தலும், வஸிஷ்டரும கௌஸலையாதிகளும் மந்த்ரி முதலானவாகளும் ராமனை ப்ரார்த்திதசலும்.

இங்ஙனம் ராமன பெரும்பொருளடங்கிய உரைகளைப்
பேச் வாளைமூடிக்கொண்டிருக்கையில், பிறகு தார்மிக
னெகிய பரதன மந்தாகினீதீரத்தில் ஸஹஜவாத்ஸல்யசீல
னெகிய ராமனைப்பார்த்து, தர்மம்பொருந்தியதும் மற்றுமுரு
முகமாக ராமனை மடக்கத்தொடங்குகையால அற்புதமு
மாகிய உரைகளுடன் 'சத்ருக்களையடக்குந் திறமுடையவ
னே! ராமா! உன்னைப்போன்றவன் உலகத்தில் ஒருவனும்
அகப்படான். துக்கமும் உன்னைத் துக்கப்படுத்தாது.
ஸந்தாஷமும் உனனை ஸந்தாஷப்படுத்தாது. ஸர்வஜ்ஞ
னகையால் பெரியோர்களுங்கூட உன்னைப்பூஜிக்கின்றனர்.
ஆயினும் நீ அவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு அவர்க
ளை வினவி ஸந்தேஹங்களைத் தீர்த்துக்கொள்கின்றனை.
செத்தவனிடத்தில் எப்படி த்வேஷம் உண்டாகாதோ,
அப்படியே பிழைத்திருப்பவனிடத்திலும் த்வேஷமில்லா

திருத்தல், இல்லாதவஸ்துவினிடத்தில் ப்ரீதிவையாதிருப்பதுபோலவே உள்ளவஸ்துவினிடத்திலும் ப்ரீதிவையாதிருத்தல் ஆகிய இப்புத்தி எவனுக்குண்டாகுமோ, அவன் எதைப் பற்றிப்பரிதபிப்பான்? எதுக்கும் எவ்வளவும் பரிதபிக்கமாட்டான். ஆகையால் நீ சொன்னபடி எனக்கு துக்கலேசமும் இல்லை. 'அப்படியாயின், சோகவார்த்தைகளை என் சொல்லுவாய்' என்கிறாயோ? மனிதர்களுக்கதிபனே! ஆத்ம அனாத்மஜ்ஞான முடையவன் இப்படிப்பட்ட வ்யஸனத்தில் அகப்படுவதையினும் வருத்தப்படலாகாது. அப்படியே நீயும் ஆத்ம அனாத்மஜ்ஞானமுடையவனாகையால் இந்தவ்யஸனத்திற்கு மனவருத்தமுறமாட்டாய். நீ வருத்தமுறுதிருந்தபோதிலும் உன்வ்யஸனத்தை நான் எப்படி பொறுத்திருப்பேன்? தேவர்களை சிக்ஷித்தவனே! ஸூரராகவ! நீ ஸத்வகுணமமைந்தவன், மஹாதீரன், ஸத்யப்ரதிஜ்ஞன், (ஸர்வஜ்ஞன், ஸர்வதர்சி, மிகுந்த புத்தியுடையவன்.) கழிகாலம் நிகழ்காலம் வருங்காலமாகிய மூன்று காலங்களிலுமுள்ள எல்லாவற்றையு மறிந்தவன். இப்படிப்பட்ட நற்குணங்களோடு ப்ரகாசிப்பவன். மேலும், ப்ராணிகளின் பிறப்பையும் இறப்பையு மறிந்தவன். இப்படிப்பட்ட உன்னை எம்மைப்போன்றவர்க்கும் மிகவும்ஸஹிக்கமுடியாத எப்படிப்பட்ட துக்கமாயினும் வருத்தமுறச் செய்பத்தகாது. நான் தேசாந்தரம் போயிருக்கையில் நீசத்தன்மையுடைய என்தாய் என்னிமித்தமாக கடத்தின பாபகார்யம் எனக்கு ஸம்மதமன்று. ஆகையால் நீ கோபமின்றி என்மீது அருள்புரியவேண்டும். நான் தர்மபாசத்தால்கட்டுண்டிருக்கின்றனன். ஆகையால் பாபங்களை ஆசரிக்கும் என்தாய் தண்டிக்கத் தகுந்தவளாயிருந்தும் இப்பொழுது கொடிய தண்டனைகொண்டு கொலைசெய்யாதிருக்கின்றனன். பரிசுத்த குலத்தில் பிறந்தவரும் பாவன

கார்யங்களைச் செய்பவருமாகிய தசரதனிடத்தினின்றும் பிறந்து தர்மங்களை அறிந்து தர்மத்திற்கிணங்காததும் உலகனித்தைக்கிடமுமாகிய கார்யத்தை எப்படி நடத்துவேன்? 'குரு; யாகாதி கார்யங்களை ஆசரித்தவர், வ்ருத்தர், ராஜா, மரணமடைந்தவர், தந்தை, தெய்வம்போன்றவர்' என்றே நம் தமதையைச் சபையில் நிந்தியாதிருக்கின்றனன். தர்மங்களை யறிந்தவனே! தார்மிகனையிருப்பவன் எவன் ஒருபெண்பிள்ளைக்கு ப்ரியஞ்செய்வதற்காக தர்மார்த்தங்களிரண்டையுந் தவறின இப்படிப்பட்ட பாபகார்யத்தைச் செய்வான? ப்ராணிகளுக்கு அந்திமகாலத்தில் புத்திமயங்கிப்போமென்று பழையதோரு கேள்வியுண்டு. மஹாராஜர் இப்படி அகார்யத்தைச்செய்து அப்பழமொழியை உலகத்தில் எல்லோர்க்கும் ப்ரத்யக்ஷமாக்கினர். கைகேயி விஷத்தைப் பானஞ்செய்வேனென்று க்ரமமாகக்காட்டின கோபத்தைப்பற்றியும், மிகுந்த ப்ரீதியுடைய அக்கைகேயி யிடத்திலுள்ள மோஹத்தைப்பற்றியும், அன்றியே ஸாஹஸத்தினாலும் எமது ஐயர் செய்த தர்மாதிக்ரமத்தை நீ கற்பொருளை நெஞ்சிற்கொண்டு திருப்புவாயாக. எந்தப் புதல்வன் தந்தை செய்த தர்மாதிக்ரமத்தை ஸரிப்படித்த விரும்புவானோ அவனே புதல்வனென்று உலகத்தவர் எண்ணுவார்கள். அப்படியல்லாதவன் புதவல்வனே அல்லன். நீ அப்படிப்பட்ட புதல்வனையிருப்பாயாக. தந்தை உலகத்தில பண்டிதர்கிந்திக்கும்படி செய்த பாபகார்யத்தை நீ அனுஸரிக்கத்தகாது. நீ கைகேயியையும் என்னையும் எமது ஐயரையும் நமது கண்பர்களையும் பந்துக்களையும் பட்டணத்து ஜனங்களையும் இந்த ராஜ்யம் முழுவதையும் பரிபாலிக்கவேண்டும். வனவாஸம் எங்கே? க்ஷத்ரியதர்மம் எங்கே? ஜடைகள் எங்கே? ராஜ்யபாலனம் எங்கே? இப்படிப்பட்ட விரு

த்த காரியத்தை நீ எள்ளளவும் செய்யலாகாது. போறிஞ னே! ப்ரஜைகளைப் பாதுகாத்தல் பட்டாபிஷேகம் பெற் றே நடத்தவேண்டியதாயிருக்கின்றது. ஆகையால் க்ஷத் ரியனுக்குப் பட்டாபிஷேகமே முதன்மையான தர்மமன் ரு? உபயோகமில்லாத எந்த க்ஷத்ரியன்தான் தானபோ கங்களுக் கிடமாகையால் ப்ரத்யக்ஷபலமாகிய ப்ரஜாபால னமென்னும் தர்மத்தை விட்டு அப்ரத்யக்ஷமும் அங்க லோபாதிகள் நேருமாகையால் ஸம்சயிக்கக்கூடிய பல னுடையதும் லக்ஷணமில்லாமைபால் சிரமபிக்கமுடியாததும் காலாந்தரத்தில் பலத்தைக் கொடுப்பதும் க்ஷத்ரியனுக்கு இது முதலாக ஆசரிக்க வேண்டுமென்று எந்த ப்ரமாண த்தாலும் நிச்சயிக்கப்படாதிருக்கும் தாமஸ தர்மத்தை ஆசரிப்பான்? இனி மிகவும் ப்ரமத்தைவினைக்குத் தர்மத் தையே ஆசரிக்கவேண்டுமென்று விரும்புவாயாயின், தர் மத்தின்படி ப்ராஹ்ம க்ஷத்ரிய வைச்ய சூத்ரர்களென்னும் நான்கு வர்ணங்களையும் தந்தமது தர்மங்களை அதிக்ரமிக் காதிருக்கும்படி பாதுகாத்துவருவாயாக. இதுவும் கஷ் டத்தை விளைக்குந் தர்மமே ஆகும். தர்மங்களையுணர்ந்த வனே! தார்மிகர்கள் நான்காச்ரமங்களிலும் க்ருஹஸ் தாச்ரமமே சிறந்ததென்று மொழிவார்களன்ரு? அப்ப டிப்பட்ட க்ருஹஸ்தாச்ரமத்தை எப்படி நீ விட்டுத்துறக் கலாகும்? நான் விதேயபரனாலும் ராஜ்யத்திற்குவருங் க்ர மத்தினாலும் உனக்குக்காட்டிலும சிறியவன். அப்படிப்பட் ட நான் எல்லாவிதத்திலும் பெரியவனாகிய நீ இருக்கை யில், எப்படி பூமியைப் பரிபாலிக்கலாகும்? 'உன்னைப் போல் நானும் பாலனேயன்ரு' என்கிறாயோ? நான் பா லன மாத்ரமேயன்று, நற்குணங்களும் புத்தியுமில்லாதவ ன். என் ஸ்திதியும் கீழ்ப்பட்டது. உன்னை விட்டேனானால் வெறுமனேயு மிருக்கமாட்டேன். இனி நீ யில்லாமல் எப்

படி ராஜ்யபரிபாலனஞ் செய்வேன்? தர்மங்களை யறிந்த வனே! நீ நிஜதாமத்தை அவலம்பித்து, பந்துக்களோடுகூடி அகண்டகமான உன தந்தையின் ராஜ்யத்தை யெல்லாம் ஏமாறுமல் நன்கு பரிபாலித்து வருவாயாக. ப்ரஜைகளெல்லோரும் வஸிஷ்டர் முதலிய மந்த்ர வித்துக்களான ருத்விக்குகளும் இங்கேயே உனக்கு மந்த்ரங்களோடு பட்டாபிஷேகம் கடத்துவார்களாக. உலகங்களையெல்லாம் வென்றபினபு தேவதைகளால் அபிஷேகஞ்செய்யப்பட்ட இந்த்ரனபோல் நீ எங்களால அபிஷேகஞ்செய்யபபட்டு ப்ரஜைகளைப் பரிபாலனஞ் செய்யவேண்டிய நிமித்தமாக அயோத்யைபக்குத் திரும்பிவருவாயாக, தேவ ரிஷி பித்ரு ருணங்கள் மூன்றையுந் தீர்த்துக்கொண்டு சத்ருக்களை நன்ருகத் தஹித்து நண்பர்களை ஸமஸ்த இஷ்டங்களாலும் த்ருப்தியடையச்செய்து இப்படி ராஜ்யத்தையுமென்னையும் நீயே பரிபாலனஞ் செய்வாயாக. பெரியோனே! இப்பொழுது நீ பட்டாபிஷேகம் பெற்றிருக்கக்கண்டு உனது நண்பர்களனைவரும் களிப்பார்களாக. இப்பொழுதே உன் பகைவரெல்லோரும் பயமுற்றுப் பத்துத்திசைகளிலும் பறந்தோடுவார்களாக. புருஷ ச்ரேஷ்டனே! என்தாயபெற்ற லோகநிந்தையைத் துடைத்துப் பொகட்டுப் பூஜ்யராகிய தந்தையைப் பாபத்தில் விழாதபடி பாதுகாப்பாயாக. நான் தலைசாய்த்து வணங்கி வேண்டுகிறேனன். மநுஷ்யன் ப்ராணிகளிடத்தில்போல் நீ என்னிடத்திலும் பந்துக்களிடத்திலும் மற்றையெல்லோரிடத்திலும் அனுக்ரஹஞ் செய்யவேண்டும். இனி நீ என்னுடைய இந்த ப்ரார்த்தனையைப் பின்னே தள்ளிவிட்டு இங்கிருந்து வனத்திற்கே போவாயாயின் நானும் உன்னோடுகூடவே வனத்திற்கு வருகின்றேன்' என்றனன். ராமன் மிகவுந் தைர்யமுடையவனுகையால் பரதன் மனவருத்த

த்துடன் தலைசாய்த்து வணங்கித் தான் அருள் புரியும்படி எவ்வளவு ப்ரார்த்தித்தபோதிலும் தந்தையளித்த ஆஜ்ஞையில்தானே நிலைநின்று அயோத்யைக்குத் திரும்பச்சயங் கொள்ளாதிருந்தனன. ஜனங்களெல்லோரும் மிகவும் அற்புதமான ராமனது நிலைமையைக்கண்டு ஒரேகாலத்தில் ஸந்தோஷத்தையும் துக்கத்தையும் பெற்றனர். அயோத்யைக்கு வரமாட்டானென்று துக்கத்தையும் ப்ரதிஜ்ஞை தவறுனென்று ஸந்தோஷத்தையும் அவர் அடைந்தனர். அப்பொழுது ராமனைநோக்கி யுக்திகள் பொருந்தச் சொல்லுகின்ற பாதனைக்கண்டு ருத்விக்குகளும் பட்டணத்து ஜனங்களில் ப்ரமுகர்களும் மனமயங்கிக் கண்ணீர் பெருக்குகின்ற தாய்மார்களும் மிகவும் கொண்டாடினர். பிறகு அவர்களெல்லோரும் ராமனை நமஸ்கரித்து வணக்கத்துடன் ப்ரார்த்தித்தனர். நூற்றுறுவது ஸர்க்கம் முற்றிற்று.

{ பரதன் தந்தையது காமமோஹத்தை
தித்திகைபில், ராமன் அதைமறுத்து
அவர் தர்மமே ஆசரித்தாரென்று
வேறொரு யுக்தியைச சொல்லுதல. }

ஸ்ரீமானாகிய லக்ஷ்மணனுடைய தமையன் ராமன் பாதனது ஸ்தோத்ரம் முதலியவற்றால் பூஜிக்கப்பட்டிபந்துமத்யத்தில அங்ஙனம் பேசுகின்ற பாதனை நோக்கி மீளவும்

'இப்பொழுது நீ சொன்னவார்த்தை ராஜஶ்ரேஷ்டராகிய தசரதமஹாராஜருக்குக் கைகேயி யிடம் பிறந்த ஸத்புத்ரனுகிய உனக்கு யுக்தமாயிருக்கின்றது. முன்புகம் தந்தை தசரதமஹாராஜர் கைகேயி யிடம் பிறந்தவனுக்கே ராஜ்யங் கொடுக்கிறேனென்னும் இந்தச் சுல்கத்தை ப்ரதிஜ்ஞை செய்தனர். மேலும், ப்ரபுவாகிய அம்மஹா

ராஜர் தேவாஸுரயுத்தத்தில் உன் தாய் செய்த பணிவிடைக்கு மிகவும் ஸந்தோஷித்து அவளுக்கு இரண்டு வரங்களைக் கொடுத்தனர். புருஷதிலகனே! பிறகு பெரும் புகழுடையவளும் பெண்மணியுமாகிய உன் தாய் புருஷச்ரேஷ்டராகிய மஹாராஜரால் சபதஞ்செய்வித்துக்கொண்டு உனக்கு ராஜ்யங் கொடுக்கும்படிக்கும் என்னைக்காட்டுக்கனுப்பும்படிக்கும் இரண்டு வரங்களைக் கேட்டனள். அப்பொழுது மஹாராஜர் அவள் நியமித்தபடியே அவ்விரண்டு வரங்களையுந் தந்தனர். புருஷச்ரேஷ்டனே! அங்ஙனம் தந்தை கைகேயிக்கு ராஜ்யங்கொடுத்தமையால் என்னை வாதானத்தின்படி பதிணன்கு ஸம்வத்ஸரங்கள் வனவாஸஞ் செய்வாயென்று ஆஜ்ஞாபித்தனர். அப்படி ஆஜ்ஞாபிக்கப்பட்ட நானும் தகைமையின் வார்த்தையைக் கைப்பற்றி அவரது சொல்லை ஸத்யமாக்குவதில் நிலைநின்று எவர்சொன்னபோதிலும் கேளாமல எதிரின்றி லக்ஷ்மணனுடனும் ஸீதையோடும் கூடி நிர்ஜனமான அரண்யத்திற்கு வந்தனன். ராஜ சிரோமணியே! தந்தையின் கட்டளைப்படிக்கே சீக்ரத்தில் அபிஷேகஞ்செய்துகொண்டு தந்தையின் வார்த்தையை ஸத்யஞ் செய்யவேண்டும். பரதா! நீ என்னைப்பற்றி ப்ரபுவும் தந்தையுமாகிய மஹாராஜரைக் கைகேயி யிடம் பட்ட கடனில் நின்றும் விடுவித்து, தர்மஜ்ஞராகிய அத்தந்தையையும் உனது அன்னையையும் ஸந்தோஷப்படுத்துவாயாக. என்னப்பனே! முன்பு கயை யெனனும் க்ஷேத்ரத்தில் பித்ருயாகம் கடத்தின மஹானுபாவனுகிய கயன பாடின பழமொழி செவிப்படுகின்றதல்லவா? தந்தையைப் பும்மென்னும்பெருடைய நரகத்தில் விழாதபடிரக்ஷிக்கையாலும், தந்தையின்போல் இஷ்டாபூர்த்தாதிகர்மங்களைச்செய்து பரலோகத்தில் தந்தைக்கு ஸுகத்தை உண்டாக்கிப்பாதுகாப்

பதனலும் புதல்வனுக்குப் புத்ரனென்னும் பேர் உண்டா யிற்று. நற்குணமுடையவர்களும் கல்வியிற்சிறந்தவர்களு மாகிய புதல்வர்கள் பலர் பிறப்பார்களாகவென விரும்ப வேண்டும். பலபுத்ரர்கள் உளராயின், அவர்களில் ஒருவ னுயினும் அந்த கயாக்ஷேத்ரத்திற்குப் போவானென்று கயன் சொன்ன பழமொழியைக்கேட்டிருக்கிறீருமல்லவா? ராஜகுமாரனே! ப்ரபுத்வமுடையவனே! புருஷர்களிற்சி றந்தவனே! இங்ஙனம் ராஜர்ஷிகளெல்லோரும் அனுஷ் டிக்கின்றனர். ஆகையால் நம் தகதையாகிய மஹாராஜருக் கு நரகமுண்டாகாதிருக்குமாறு நடத்துவாயாக. மனி தர்களில் தலிவனே! பரத! நீ அயோத்யைக்குப் போய், சத்ருக்னனேடும் வஸிஷ்டர் முதலிய ப்ராஹ்ம ணோத்தமர்களோடும் கூடி ஜனங்களைப்பாதுகாப்பாயாக. ராஜனே! இனி நானும் காலதாமதஞ்செய்யாமல் இந்த ஸீதாலக்ஷ்மணர்களிருவரோடும் கூடித் தண்டகாரண்ய த்திற்குப்போகின்றனன். பரதா! நீ மனிதர்களனைவர்க்கும் ராஜனாயிருப்பாயாக. நான் வனத்திலுள்ள ம்ருகங்களுக் கெல்லாம் ராஜாவாயிருக்கின்றனன். நீ மனக்களிப்புடன இப்பொழுதே அயோத்யைக்குப் போவாயாக. நானும் மனக்களிப்புடன் இப்பொழுதே தண்டகாரண்யத்திற்குப் போகின்றனன். பரதா! வெண்குடை உனதலேமல் ஸூர் யகிரணங்கள் படாதிருக்குமாறு தடுத்துக் குளிர்ந்தி ருப்பதாகிய நிழலைச்செய்யுமாக. நானும் எல்லாவற்றி லும் சிறந்த இவ்வரண்ய வ்ருக்ஷங்களின நிழலைப்பற்றி ஸுகமாயிருக்கின்றனன். மிகவும் புத்திசாலியாகிய சத் ருக்னன் உனக்கு ஸஹாயமாயிருக்கின்றனன். எனக்கு முக்ய ஸ்னேஹிதனாகியலக்ஷ்மணன் இருக்கின்றனன். நாம் கால்வரும் பரஸ்பர ஸஹாயத்தால் நம் தகதையாகிய மஹாராஜரது வார்த்தையை ஸத்யஞ்செய்யவேண்டும்.

பரதா! நீ மனவருத்தப்படாதிருப்பாயாக' என்றனன்.

நூற்றேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் பரதனை நிருத்தராலயிருக்கச்செய்கையில், ஜாபாலி சார்வாகமதத்தை அவலமபித்து ராமனை ராஜ்யத்தை அடைக்கிக்கும்படி ப்ரார்த்தித்தல.

ப்ராஹ்மண ஸ்ரேஷ்டராகிய ஜாபாலி அங்ஙனம் பரதனை ஆஸ்வாஸப்படுத்தும் ஸகலதர்மஜ்ஞனாகிய ராமனைப் பார்த்து அதர்மத்தைத் தொடர்ந்த சார்வாக மதத்தை அவலம்பித்து வைதிகதர்மத்திற்கு வெகுதூரமான உரைகளை ராமனிடஞ் சொல்லத்தொடங்கி 'ராகவா! நீ புகழத்தகுந்த புத்தியுடையவன், மிகுந்த தைர்ய மமைந்தவன், இப்படிப்பட்ட உனக்கு ஸாமான்ய மனிதனைப்போல் இப்படி நிஷ்ப்ரயோஜனமான புத்தி சிறிதும் உண்டாகாதிருக்குமாக. அதிலனினறு நன்கு திரும்புவாயாக. எவனுக்கு எவன் பந்து? எவனுக்கு எதனல் எது உண்டாகக் கூடியது? எதுவும் இல்லை. ப்ராணி பிறந்தபொழுது ஒருத்தனுகவே பிறக்கின்றனன். சாகும்பொழுதும் ஒருத்தனே சாகின்றனன். ஆகையால் எவனும் கூடப்பிறப்பதில்லை. கூடச்சாவதுமில்லை. ராமா! விஷயம் இப்படியிருக்கையால் எவன் தாயெனறும் தந்தையென்றும் மிகவும் ஆஸக்தி அடைவானே, அவன் பைத்யக்காரனென்றறிவாயாக. ஒருவனுக்கு மற்றொருவன் ஒன்றுமேயல்லன். ஒருவரோடொருவர்க்கு எவ்வளவும் ஸம்பந்தமில்லை. ஒருவன் ஒருக்ராமத்திற்குப் போகையில் நடுவில் இளைப்பாறும்பொருட்டு ஓரிடத்தில் வஸித்திருந்து மற்றநாள் அவ்விடத்தை விட்டு ப்ரயாணமாய்ப்போவது போலவே, மனிதர்களும் ஸம்ஸாரயாத்ரை செய்துகொண்டு நடுவில் வாஸஸ்தானத்தைப்போல் தாயையும் தந்தையையும் க்ரு

ஹத்தையும் தனத்தையும் பெறுகின்றனர். ஆகையால் தாய்தந்தை மூதலானர் கேவலம் வாஸஸ்தானம் போல் வாரேயன்றி மற்றேதுமல்லர். ஆகையால் ஸத்புருஷர்கள் அவரிடத்தில் மனப்பற்று வையார்கள். புருஷஶ்ரேஷ்டனே! அப்படிப்பட்ட மஹாபுத்திசாலியாகிய நீ தகப்பனது ராஜ்யத்தைவிட்டு துக்கத்தை விளைப்பதும் யௌவனபுருவத்திற்குத் தகாததும் பல உபத்ரவங்களையுடையதுமாகிய இத்தக்கோணல்வழியை (வானப்ரஸ்தவ்ருத்தியை) அனுஸரிப்பது எவ்வளவும் தகாது. ஸமஸ்தஸம்பத்துகளும் விளங்கப்பெற்ற அயோத்யாபுரத்திற்குப்போய் அபிஷேகஞ்செய்வித்துக் கொள்வாயாக. பதிவரதை நியமத்துடன் தலைமயிர்களை ஒருபின்னலாகப் பின்னிக்கொண்டு தன்பர்த்தாவை எதிர்பார்ப்பது போல் அயோத்யாகரத்தின் அதிதேவதை நியமத்துடன் உன்னை எதிர்பார்க்கின்றனள். ராஜகுமாரனே! நீ மிகவும் உத்தமங்களான ராஜபோகங்களை அனுபவித்துக்கொண்டு ஸ்வர்க்கத்தில் தேவேந்த்ரன்போல அயோத்தையில் விளையாடிக்கொண்டிருப்பாயாக. உனக்குத் தசரதனுடு எவ்வித ஸம்பந்தமும் இலலை. தசரதனுக்கும் உன்னுடு எவ்வித ஸம்பந்தமும் கிடையாது. அம்மன்னவன் வேறு, நீ வேறு. ஆகையால் நான் சொன்னபடி செய்வாயாக. ஜந்துக்களுக்குத் தந்தை முக்யகாரணமன்று, ஸ்வல்பகாரணமே. ருதுகாலத்தில் தாய்தரித்த சுக்லசோணிதங்களே ப்ரதானகாரணம். அதனாலேயே இவ்வுலகத்தில் புருஷன் ஜன்மிக்கின்றனன். மஹாராஜன் எங்குப்போகவேண்டுமோ, அவ்விடத்திற்கே போயினன். பூதங்களில் லயம்பெற்றனன். இதுவேயன்றி விசேஷமொன்றுமில்லை. இது மரணமடைவோரனைவர்க்கும் ஸ்வபாவம். நீ மாத்ரம் இல்லாதஸம்பந்தமொன்றை இழுத்துவைத்துக்கொண்டு வருத்தப்படு

கின்றனை. ப்ரத்யக்ஷ ஸ்ஸௌக்யத்தைதவிட்டு எவர் கேவலம் பணம் ஸம்பாதிப்பதிலாவது கேவலம் தர்மஞ்செய்வதிலாவது விருப்பமுறுவார்களோ அவர்களை நோக்கியே நான் வருத்தப்படுகின்றனன். ப்ரத்யக்ஷ ஸௌக்யங்களையனுபவிக்கும் பிறரைப்பார்த்து எனக்கு வருத்தமில்லை. ஏனென்னில்—அத்தப்பணத்திலும் தர்மத்திலும் முயன்றவர் இங்கு வருத்தமுற்றுக் கெடுவதேயன்றிச் செத்தபின்பும் துக்கத்தையே பெற்றுக் கெடுவார்கள். இதற்கு உதாஹரணஞ் சொல்லுகிறேன் கேள். அஷ்டகாப்ரார்த்தமென்றும் ப்ரத்யாப்திகமென்றும் இவ்வுலகத்தில் ஜனங்கள் ப்ரார்த்த கர்மங்களைச்செய்கின்றனர், அந்தக்கர்மங்களெல்லாவற்றிலும் ஸௌகமாகத் தாம் புஜிக்கவேண்டிய தமது அன்னத்தைப் பிறர்க்கிடுவதால் உண்டாகும் நாசத்தை ஆலோசித்துப்பார். செத்தவன் என்னதின்னமுடியும்? அவனுக்காகப் பிறர்க்கிடுமன்னமெல்லாம் வ்யர்த்தமேயல்லவா? இவ்வுலகத்தில் ஒருவன் புஜித்த அன்னம் மற்றொருவன் தேஹத்துக்குப் போய்ச்சேருமாயின், அப்போது தேசாந்தரஞ்சென்றவனைக்குறித்து அவன் புத்ராதிகள் ப்ரார்த்த போஜனங்களைச் செய்விக்கவேண்டிவருமல்லவா? அங்ஙனம் பிறர்க்கிட்ட அவ்வன்னம் அத்தத்தேசாந்தரஞ் சென்றவனுக்கு வழிச்சோறாகக் கூடுமல்லவா? ஆயினும் அப்படி ஆவதில்லை. அப்படியே செத்தவனுக்கு அது அன்னமாவது எவ்வளவும் ஸம்பவிக்காது. ஆகையால் 'தேவதைகளை ஆராதிப்பாய், தானங்களைச்செய்வாய், யாகதீக்ஷை வஹிப்பாய், பணத்திலாசையைத் துறப்பாய்' என்று, த்ரவயம் ஸம்பாதிப்பதில் மிகவும் ஸமர்த்தமான புத்தியுடையவர்கள் தானங்களைச் செய்யும்படி ஸ்வாதீனப்படுத்துவதற்கு உபாயங்களாக இந்த க்ரந்தங்களை ஏற்படுத்திவைத்தனர். மற்றொன்றுமில்லை. ராமா!

நீ எவர்க்கும் மிகுந்தமதியுடையவன், பித்ருவசனபரி பாலனஞ் செய்யவேண்டுமென்று நினைக்கின்ற நீ பரலோ கமே யில்லையென்று நிச்சயிப்பாயாக. ப்ரத்யக்ஷ ஸித்த மான ராஜ்யபோகாதிகளை அங்கீகரிப்பாயாக. பரலோக ஸுகங்களைக் கொடுக்குமென்னப்படுகிற பித்ருவசனபரி பாலனாதிகளை அப்புறந் தள்ளிவிடுவாயாக. நீ ப்ரத்யக்ஷத் தைக்காட்டிலும் அதிகமொன்று மில்லையென்றும் இந்த ஸர்வஜன ஸம்மதமான புத்தியை முன்னிட்டுக்கொண்டு பரதன் ப்ரார்த்தனைக்குக் கலக்கந்தீர்ந்து ராஜ்யத்தை அங்கிகரிப்பாயாக. நூற்றெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

{ ராமன் ஜாபாலியின் மததத்தை நிராகரித்து வைதிக மதத்தை ஸ்தாபித்தல். }

ஸத்யத்தில் புத்தியை நிலைநிறுத்தினவர்களில் ரா மன் மேலானவன். ஆகையால் அவன், ஜாபாலி சொன்ன வார்த்தையைக் கேட்டும் வைதிக கர்மங்களில் மிகவும் தனக்குள்ள ப்ரத்தையை விடாமல் மதிமயக்கமின்றி அ வரைப் பார்த்து 'நீர் எனக்கு ப்ரியங்களாகிய ராஜ்யாதி ஷேகாதிகளில் விருப்பமுண்டாகும்பொருட்டுச் சொன்ன வார்த்தை செய்யத்தக்கதுபோல் தோற்றுமேயன்றி வா ஸ்தவத்தில் செய்யத் தகாததே. ஹிதம்போல் தோற்று கிறதன்றி அது அஹிதமே. அதைச் செய்தால் பிறகு நர க்கமே விளையும். இந்த மதத்தைப்பற்றி இதனால் பாபா சாரங்களில் இழிந்து மர்யாதை தவறும் புருஷனைப்புரு ஷர்கள் எள்ளளவும் வெகுமானிக்கமாட்டார்கள். 'கல்லவ னென்றும் கெட்டவனென்றும் எப்படி தெரிந்துகொள்ள லாம்' என்கிறீரோ? நற்குலத்தில் பிறந்தவனென்றும் து ஷ்குலத்தில் பிறந்தவனென்றும் வீரமுடையோனென்றும் தன்னை ஆண்பின்னை யென்று வீணாக நினைத்துக்கொண்

டிருப்பவனென்றும் பரிசுத்தனென்றும் பரிசுத்தியில்லாதவனென்றும் அவனவனது ஆசாரமே நிரூபிக்கும். நானது துஷ்டனுகவே யிருந்து கல்லென போலவும் சரியற்றவனுகிச் சுசியாயிருப்பவன் போலவும் சிஷ்டலக்ஷணங்கள் இல்லாதவனுயினும் அந்த லக்ஷணங்களைமைந்தன் போலவும் துச்சீலனுயினும் சிறந்த சீலமுடையவன போலவும் நடித்துச் சுபமான வைதிக தர்மத்தைவிட்டு வைதிகரியையகளையும் வேதவிதிகளையுங் கடந்ததும் லோகங்கள் கெட்டுப் போவதற்குக் காரணமும் தர்மம்போல் மேலுக்குப் புலப்படுவதுமாகிய நீர் சொன்ன இந்த அதர்மத்தைப்பற்றுவேனுயின், இப்படிப்பட்ட துராசாரனும் லோகதூஷகனுமாகிய என்னை உலகத்தில் கார்யாகார்யங்களை யறிந்த அறிஞனுயிருப்பவன் எவன்தான் என்னை வெகுமதிப்பான்? இதுமாத்ரமே யன்றி, நான் எனது வளவாலை ப்ரதிஜ்ஞையை விட்டு, நீர் 'அபரோக்ஷத்தை விதிவாய'என்றுரைத்த இதத்துராசாரத்தின்படி நடப்பேனுயின், இனி'நான் சொலலுவதை நீ ஆசரிப்பாயாக'என்றுளவர்க்கு உபதேசிப்பேன்? ப்ரதிஜ்ஞை தவறின எனவார்த்தையை எவர் தாம் கேட்பார்கள்? மேலும், ஸ்வர்க்கத்தையாவது எந்த உபாயத்தால பெறுவேன்? நீர் சொன்னபடி நான் செய்வேனுயின, என்னைப் பார்த்து இவ்வுலகத்தவர்யாவரும்இஷ்டப்படி நடக்கத்தொடங்குவார்கள். ஏனென்னில்—அரசன் எப்படி நடப்பானே அப்படியே யன்றே ப்ரஜைகளும் நடப்பார்கள். ஆகையால் எனக்கு மாத்ரமே யனறி உலகத்தவரனைவர்க்கும் அதனல் பரலோகஹானி உண்டாகும். பூத தயையையே முக்யமாகவுடையதும் சாஸ்வதமுமாகிய ராஜாக்களின் நடத்தையானது ஸத்யமே வடிவாயிருக்கப் பெற்றது. இப்படி ஸத்யமே ராஜாக்களின் நடத்தையாகையால் ராஜ்யத்தில

ள்ள ஜன ஸமூஹமும் ஸத்யமே முக்யமா யிருக்கப்பெற்ற
து. அந்த ஸத்யத்திலேயே உலகமெல்லாம் நிலின் றிருக்
கின்றது. அப்படிப்பட்ட ஸத்யத்தை எப்படி விடக்கூடும்?
ரிஷிகளும் தேவதைகளும் ஸத்யத்தையே மிகவும் சிறந்
தாக நினைத்தார்களல்லவா. இவ்வுலகத்தில் ஸத்யவா தி
யாயிருப்பவன் பரமபதத்தைப் பெறுவான். உலகத்தி லு
ள்ளோர் ஸர்ப்பத்தைப் பார்த்தாற்போல் பொய்யுரைப்ப
வனைப் பார்த்து பயப்படுவார்கள். உலகத்தில் ஸத்யமே
பரம தர்மம். அதுவே ஸ்வர்க்கத்திற்குக் காரணமென்று
கூறப்படும். ஸத்யமே உலகத்தில் அரசனும் தெய்வமுமா
கும். செல்வமும் ஸத்யத்தையே எப்பொழுதும் ஆச்ரயி
த்திருக்கின்றது. ஸத்யமே எல்லாவற்றிற்கும் ஆதாரம்.
ஸத்யத்தைக் காட்டிலும் பரமகதி வேறொன்றுமில்லை.
தானங்களுக்கும் யாகங்களுக்கும் ஹோமங்களுக்கும் தவ
ங்களுக்கும் எல்லாவற்றிற்கும் ஸத்யமே ஆதாரம். வே த
ங்களுக்கும் ஸத்யமே ஆதாரம். ஆகையால் எப்பொழு
தும் ஸத்யத்தை விடலாகாது. ஒருவன் உலகத்தைப் பா
துகாப்பான். ஒருவன குலத்தைப்பாதுகாப்பான. ஒருவன்
நரகத்தில் வீழ்வான். ஒருவன் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்
பட்டிருப்பான். இப்படி ஸத்யந் தவறுதிருப்பவனுக்கு
ஐஹிகாமுஷ்மிக பலங்களெல்லா முண்டாகும். ஸத்யந்
தவறுமவர்க்கு நரகமே ஸித்திக்கும். நான் என்னுள்
ஸத்யஸந்தன். மேலும் நீ சொன்னபடி செய்கிறேனென்
று கைகேயியோடு ஸத்யத்தின மேல் சபதஞ் செய்திருக்
கின்றனன். இப்படிப்பட்ட நான் ஸத்யமாகிய தந்தையி னை
ஜ்ஞையை எப்படி பாதுகாக்காதிருப்பேன்? ஸத்ய ப்ரதிஜ்
ஞையுடைய நான் ராஜ்யத்திலுள்ள அபிலாஷத்தாலாவது
இப்படிப்பட்ட மோச வார்த்தைகளால் மன மயக்கமுற்று
வது அஜ்ஞானத்தாலாவது தமோகுணம் மிகப் பெற்று

வது, எது எப்படியாயினும் 'உனக்கு ப்ரியமானவற்றை ஸத்யந் தவறுமல செய்கிறேன்' என்று என் தகதை கை கேயிக்குச் சொன்ன ஸத்யவாக்யத்தின் மர்யாதையைச் சிறிதும் பேதிக்கமாட்டேன். அஸத்யம் பேசுகிறவனும் பாபஸ்வபாவமுடையவனும் மனம் நிலைநிற்கப் பெறுதவனுமாகிய மனிதன் ஹவ்யகவ்யங்களைக் கொடுத்த போதிலும் தேவதைகளும் பித்ருக்களும் பரிக்ரஹிக்கமாட்டாரென்று நாம் கேட்டிருக்கின்றனம். இந்த ஸத்ய மென்னுக தர்மம் ஆத்மாவைக் குறித்து இடைவிடாமல் கடப்பதென்று யான் எனக்குள் ஆலோசிக்கின்றனன். ஸத்புருஷர்கள் ஆசரிக்கின்ற இந்தச் சடை மரவுரி முதலிய பாரமும் ஸத்யத்திற்காகவே அங்கீகரிக்கப்படுகின்றதன்றி வேறில்லை. க்ஷத்ரிய தர்மத்தில் அதர்மமே அதிகமாயிருப்பது. தர்மம் கொஞ்சமாகவே யிருக்கும். அதை அல்பர்களும் கொடியர்களும் லுப்தர்களும் ஆகிய பாபகர்மாக்களே மதித்துப் போருவார்கள். ஆகையால் அதை நான் துறப்பேனன்றி அதனபடிக்கு ராஜ்யத்தை அங்கீகரிக்கமாட்டேன். மனிதன முதலில் பாபத்தைச் செய்ய மனத்தில் நிச்சயித்துக் கொள்வான. பிறகு சரீரத்தால் அதைச் செயவான். மேலும், நாகரால் அபத்தஞ் சொல்லுவான. இப்படி மானஸிகங்களென்றும் காயிகங்களென்றும் வாசிகங்களென்றும் பாபங்கள் மூன்று வகைப்பட்டிருக்கும். பூமியும் தானத்தாலுண்டாகுங் கீர்த்தியும் பௌருஷத்தாலுண்டாகும் புகழும் செல்வமும், த்ரிகரண சுத்தியோடு ஸத்யத்திலேயே நிலைனற புருஷனையே அடைய விரும்புகினறன. அப்படிப்பட்ட புருஷன் ஸ்வர்க்கத்திலிருப்பானுயினும் இவை அவனைப் பின் செல்லுகின்றன. ஆகையால ஸத்யத்தையே அவலம்பிக்கவேண்டும். நீர மிகவும் மேலானதென்று நிச்சயித்துக்கொண்டு 'இ

து மங்கலகரம் இதைச் செய்வாய்' என்று யுக்திகள் பொருந்திய வாக்யங்களை உரைத்தீரே, அது எவ்வளவும் பூஜிக்கத்தக்கதன்று. ஆகையால் பரோக்ஷமான பரலோகத்தை அப்புறம் தள்ளி ப்ரத்யக்ஷமான இஹலோக போகத்தை மாத்ரம் கைப்பற்ற வேண்டுமென்பது செல்லாது. மேலும், பரதன் வேண்டினபடி ராஜ்யத்தை அங்கீகரிப்பா யென்றீர் கான தசரதயிடம் இங்ஙனம் வனவாஸஞ் செய்வதாக ப்ரதிஜ்ஞை செய்து இபபொழுது தந்தையின் வார்த்தையைத் துறந்து பரதனுடைய வசனத்தின் படி எங்ஙனஞ் செய்வேன்? கான் எனது தந்தையினிடில் ஸ்திரமான ப்ரதிஜ்ஞை செய்திருக்கின்றனன். அப்பொழுது கைகேயியும் அதற்கு மிகவும் ஸந்தோஷமுற்றனள். அப்படிப்பட்ட ப்ரதிஜ்ஞையை இப்போது விடுவது யுக்தமன்று. எனக்குக் கார்யங்கள் கன்றாகத் தெரியுமாகையால் ப்ரத்யுதயுடன் வஞ்சனையின்றிப் பரிசுத்தனாகி வனவாஸஞ் செலுத்திக் கொண்டே காட்டிலுள்ள ஆஹாரங்களை நியமத்துடனே உட்கொண்டு அதனால் பஞ்சேந்த்ரியங்களுக்கும் த்ருப்தியை உண்டாக்கிப் பரிசுத்தங்களான புஷ்ப பல மூலங்களால் பித்ரு தேவதைகளுக்கும் தேவதைகளுக்கும் த்ருப்தியைச் செய்து இங்ஙனம் பித்ருவசன பரிபாலனமென்னும் லோகயாத்ரையை நடத்திக் கொண்டு காலத்தைக் கழிக்கின்றனன். அஷ்டகாதிகளில் சொல்லிய கர்மங்கள் நிஷ்பலங்களென்றீர். அதில் லை. ஜனங்கள் இதக் கர்ம பூமியிலிருக்கும் வரையில் சுபகர்மங்களை அவச்யஞ் செய்யவேண்டும் அப்படியே அக்னியும் வாயுவும் சந்த்ரனும் இக்கர்மபூமியிலிருக்கும்பொழுது நடத்தின கர்மங்களுக்குப் பலமாக அக்னித்வவாயுத்வசந்த்ரத்வங்களைப் பெற்றவராயினர். ஆகையால் கர்மங்கள் ப்ரயோஜனமற்றவையல்ல. தேவேந்த்ரன்

நூறுயாகங்கள்செய்து தேவலோகத்திற்கு அதிபதியா யிருக்குந தன்மையைப் பெற்றனன். மஹர்ஷிகளும் கொ டுமையான தவங்களைச்செய்து ஸ்வர்க்கமடைந்தார்கள்' எனறனன். இங்ஙனம் பயங்கரமான தேஜஸ்ஸையுடைய அதராஜகுமாரன் ராமன், ஜாபாலி சொல்லிய நாஸ்தி க்யவாதங்களைக்கேட்டுப் பொறுக்கமுடியாமல் அவரது வசனங்களை நிந்தித்துகொண்டு மீளவும் அவரைப்பார்த் து 'ஸத்யம் தர்மம் பராக்ரமம் பூததயை ப்ரியபாஷணம் தேவதார்ச்சனம் அதிதிஸத்காரம் இவையெல்லாம் ஸ்வ ர்க்கத்திற்கு மார்க்கமென்று ஸத்புருஷர்கள் சொல்லு கின்றனர். ஆனதுபற்றியே ப்ராஹ்மணர்கள் இவ்வர்த்தத் தை உள்ளபடி இங்ஙன தெரிந்துகொண்டு எல்லோரும் ஜகமத்யத்துடன் பராக்கின்றிச் சாஸ்த்ரந் தவறுமல் தந்த மதுவர்ணஸ்ரமங்களுக்குத் தகுந்த தர்மங்களெல்லாவற் றையும் ஆசரித்துக்கொண்டு ஸ்வர்க்காதிலோகங்களைப் பெற விரும்புகின்றனர். வேதத்திற்கிணங்காத மார்க்கத் தில் உமது புத்தி நிலைனறிருக்கின்றது. மேலும், நீர் வைதிகவேஷத்தைத் தரித்து அதராங்கத்தில் மஹாநா ஸ்திகராகிச் சார்வாகமதத்தை அனுஸரித்த இந்த நாஸ் திக புத்தியைப் பிறர்க்கு உபதேசித்துக்கொண்டு திரிகி ன்றவர். பின்னும், தர்மமார்க்கத்திற்கு வெளிப்பட்டவர், இப்படிப்பட்ட உம்மை என்தந்தை தமதருகில் வைத்துக் கொண்டாரல்லவா. அவர் செய்த இந்தக்கார்யத்தை நான் அவைதிககார்யமென்று நிந்திக்கின்றனன். திரு டனை எப்படி நிராகரிக்கவேண்டுமோ, அப்படியே வேத பாஹ்யனாகிய புத்தன் நிராகரிக்கத் தகுந்தவனல்லவா. இவ்வுலகத்தில் நாஸ்திகனையும் அந்தப் புத்தனையு ஸமமாகவே அறிவீராக. ஆகையால் ப்ரஜைகள் நாஸ் திகனை அவைதிகனைவே சங்கிக்கவேண்டும். பண்டிதனை

யிருப்பவன் அவன் முகத்திலும் விழிக்கலாகாது.உமக்கு முன்பட்டவர்களும் உம்மைக்காட்டிலும் மேலானவர்களுமாகிய பலர் அனேகசுபகர்மங்களைச்செய்து இஹபரலோகங்களிரண்டையும் வென்று எப்பொழுதும் ஆகாயத்தில் க்ரஹநக்ஷத்ராதிரூபங்களைப்பெற்று விளங்குகின்றனர். ஆனதுபற்றியே ப்ராஹ்மணர்கள் சுபகர்மங்களையும் யஜ்ஞாதிஹோம கார்யங்களையும் தபோதானாதிகார்யங்களையும் செய்கின்றனர். தர்மத்தில் நிலைகின்றவர்களும் ஸத்புருஷஸேவாஸஞ்செய்பவர்களும் மிகுந்த வொளியுடன் விளங்குபவர்களும் தானமென்னுங்குணத்தை முக்யமாக உடையவர்களும் ஹிம்ஸையைத் தவிர்ந்தவர்களும் நிர்மலஸ்வபாவர்களுமாகிய முனிப்ரேஷ்டர்கள் உலகங்களெங்கெல்லாம் பூஜிக்கத்தகுந்தவர்'என்றனன். இங்ஙனம்போர் ஷத்துடனுரைக்கும் மறைஞானபாவனும் மறைபலனுமாகிய ராமனைப்பார்த்து அந்த ப்ராஹ்மணர் கல்வார்த்தை சொலலிக்கொண்டு யதார்த்தமும் ஆஸ்திக மதத்தை யெடுத்துரைப்பதும் ஸத்புருஷர்களுக்கு ஹிதமுமாகிய உரைகளுடன 'ராமா! நான் நாஸ்திகர் கூறும் வார்த்தைகளைச் சொல்லவில்லை.நான் நாஸ்திகனுமல்லேன். பரலோகம் முதலியவை இல்லையென்பதுமில்லை. நாஸ்திகவாதிகள் எவராயினும் நேரிடுங்காலத்தில அவர்களனைவரையும் உன்னைப்போலவே ஆஸ்திகனெனக் கண்டிடத்துக் கொண்டிருந்தனன். பின்னும் தர்மஸங்கடகாலம் வந்தபொழுது மாத்ரம் கார்யஸித்தியின் பொருட்டு நாஸ்திகவாதி யாவேனன்றி வாஸ்தவத்தில் அப்படிப்பட்டவனன்று. ராமா! இப்பொழுது மெதுவாக அப்படிப்பட்ட ஸங்கடகாலம் இதோ வந்ததாகையால் நான் நாஸ்திகவாதம் செய்யும்படிக்கு நேரிட்டது. உன்னை அயோத்யைக்குத் திருப்பவேண்டுமென்றும் உன்னை அருள்புரியச்செய்ய விரும்பியும் இங்

ஙனம் உரைத்தேதனன்றி மற்றொன்றுமில்லை' என்றனன்.

நூற்றொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்டர் ஜாபாலி வசனத்தினபிப்ராயத்
தைச சொலலி ராமனது கோபத்தைத்
தீர்த்து மனுமுதலாகத் தசரதன் வரை
யிலுமுளள அரசர்களின் பூர்வாசார
த்தைச சொல்லிப் பெரியவனே
ராஜ்யத்திற்குரியவனென்று
தெரிவித்து அதன் மூலமாக ராமனைத்
திருப்பப் பார்த்தல்.

ராமன் ஜாபாலியின் நாஸ்திக வசனங்களைக்கேட்டுக் கோபித்துக்கொண்டிருப்பதை அறிந்து வஸிஷ்டர் அவனைப்பார்த்து 'ஜாபாலியும், இந்த ஜனங்கள் பரலோகத்திற்குப் போவார்களென்றும் புண்யம் தீருகையில் அங்கிருந்து இவ்வுலகத்திற்குத் திரும்பிவருவார்களென்றும் அறிவாராகையால நாஸ்திகரன்று. அவர் உன்னை எப்படியாயினும் அயோத்தியைக்குத் திருப்பவேண்டுமென்று விரும்பி இவ்வுரை கூறினர். லோகநாதனே' நான் லோகோத்பத்தி ப்ரகாரத்தையெல்லாம் இதோ சொல்லுகிறேன், கேள். முன்பு எல்லாம் ஜலம் நிரம்பியிருந்தது. அதில் பூமி ஸ்ருஷ்டிக்கப்பட்டது. அதில் ஸ்வயம்புவாகிய ப்ரஹ்மாவும் தேவதைகளும் உண்டானார்கள். பிறகு ப்ரஸித்தனாகிய நாராயணன் வராஹரூபங்கொண்டு அந்த ஜலங்களினின்றும் பூமியை எடுத்தனன் அந்தப்ரஹ்மாவும் திருந்தின மதியுடைய தன் புத்ரர்களாகிய மரீசி முதலானவர்களோடுகூடி இந்த ஜகத்தையெல்லாம் படைத்தனன் பரப்ரஹ்மத்தினின்றும் ப்ரஹ்மா உண்டாயினன். அந்த ப்ரஹ்மதேவன் ப்ரவாஹம்போல் நித்

யமாயிருப்பவன். பிறர்கனைக்காட்டிலும் அவன் வெகுகாலம் வாழ்ந்திருப்பவன் தனது ஸ்தானத்தினின்றுமே மோக்ஷத்தைப் பெறுகையால் நாசமில்லாதவன். அந்த ப்ரஹ்மாவினிடத்தினின்று மரீசி உண்டாயினர். மரீசிக்குக் கஸ்யபர். கஸ்யபருக்கு ஸூர்யன். அந்த ஸூர்யனுக்கு வைவஸ்வதமனு பிறந்தனர். அந்த வைவஸ்வதரே முன்பு ராஜாவாயிருந்தனர். அவர்க்கு இக்ஷ்வாகு பிறந்தனன். அந்த இக்ஷ்வாகுவே அயோத்தையைக்கு முதன்மையான மன்னனென்றுணர்வாயாக. இக்ஷ்வாகுவுக்கு ஸ்ரீமானும் குக்ஷியென்று ப்ரஸித்தனுமாகிய ஓர் புதல்வன உண்டாயினன. பிறகு குக்ஷிக்கு வீரனாகிய விகுக்ஷியென்பவன் பிறந்தனன். விகுக்ஷிக்கு மஹாதேஜஸ்வியும் ப்ரதாபசாலியுமாகிய பாணன் பிறந்தனன். பாணனுக்கு மஹாபாஹுவும் பெருங்கீர்த்தியுடையோனுமாகிய அனரண்யன் பிறந்தனன். ஸத்புருஷர்களிற் சிறந்தவனாகிய இவ்வனரண்யன் மஹாராஜனாகி ராஜ்யபரிபாலனஞ் செய்யும்பொழுது அனவ்ருஷ்டியின்றி மழை நன்றாகப் பெய்துகொண்டிருந்தது, துர்ப்பிக்ஷம் உண்டாகவில்லை. திருடன் ஒருவனும் புலப்படவில்லை. அனரண்யனுக்கு நீண்டபுஜங்களையுடைய ப்ருதுவென்பவன் பிறந்தனன. அந்த ப்ருதுவுக்கு மஹாராஜனாகிய த்ரிசங்கு ஜன்மித்தனன் வீரனாகிய அந்த த்ரிசங்கு ஸத்யஸந்தனாகையால் சரீரத்தோடு ஸ்வர்கம் சேர்ந்தனன். த்ரிசங்குவுக்குப் பெரும்புகழனாகிய யுவனப்வனென்பவன் பிறந்தனன். அவன் மஹாதேஜஸ்வியாகி துந்துவென்னும் ராக்ஷஸனைக்கொல்லுவதால் துந்துமாரனென்னும் பேர்பெற்றனன். யுவனப்வனுக்கு ஸ்ரீமானாகிய மாந்தாதா பிறந்தனன். மாந்தாதாவுக்கு மஹாதேஜஸ்வியாகிய ஸுஸந்தியென்பவன் ஜன்மித்தனன். ஸுஸந்திக்கு த்ருவஸந்தியென்னும் ப்ரஸேனஜித்தென்

னும் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் த்ருவ ஸந்திக்குச் சத்ருக்கனையழிக்கும்படியான பரதன் பிறந்தனன். மஹாபாஹுவாகிய பரதனுக்கு அஸிதனென்பவன் உண்டாயினன். அவ்வஸிதனுக்குப் பக்கத்து தேசத்தரசர்களாகிய ஸஹஜனென்னுஞ் சிலரும் காலஜ்ஞனென்னுஞ் சிலரும் சூரர்களாகிய சரிபிந்துக்களென்னுஞ் சிலரும் சத்ருக்களாயிருந்தனர். அந்த அஸிதன் அவர்களெல்லோரையும் எதிர்த்து யுத்தஞ்செய்து தோற்றுப் போகையால் அரண்யத்திற்குத் துரத்தப்பட்டனன். அவன் அழகான ஹிமவத்பர்வதத்திற்குச் சென்று அங்கிருந்துந் துரத்துவார்களென்று நினைத்து முனிவ்ருத்தியை அவலம்பித்து விரக்தனாயினன். அவனது பார்யைகளிருவரும் அப்பொழுது கர்ப்பிணிகளாயிருந்தார்களென்று கேள்வி. அவர்களிலொருத்தி தன் சக்களத்தியின் கர்ப்பத்தையழிக்கும் பொருட்டு அவளுக்கு விஷங்கலந்த பக்ஷியத்தைத் தின்னக் கொடுத்தனள். அப்பொழுது ப்ருகுவம்சத்திற் பிறந்த சயவனரென்னும் மஹர்ஷி அந்த ஹிமவத் பர்வதத்தில வஸித்திருந்தனர். விஷந்தின்ன காலிந்தி யென்னும் அஸிதனது பார்யை அம்முனிவரிடஞ்சென்று நமஸ்கரித்தனள். அந்த ப்ராஹ்மணர் 'பிள்ளை பிறக்கவேண்டுமென்று வரம் வேண்டுகிற அந்தக் காலிந்தியைப பார்த்து 'உனக்கு மஹாமதியும் ஸகலலோக ப்ரஸித்தனும் தார்மிகனுமஸ ஸதாசாரமுடையவனும் வம்சத்தை வளரச்செய்பவனும் சத்ருக்களையழிப்பவனுமாகிய புதல்வன் பிறப்பான்' என்றனர். பிறகு அந்த ராஜபத்னியும் மிகவும் ஸந்தோஷமுற்று அமமுனிவர்க்கு ப்ரதக்ஷிணஞ்செய்து பூஜித்து அநுமதிபெற்று வீட்டிற்குவந்து தாமரையிதழ்போன்ற கண்கள் பொருந்தி ப்ரஹ்மதேவன்போல் விளங்கும் குமாரனைப்பெற்றனள். அ

வளது கர்ப்பத்தை அழிக்க விரும்பிச் சக்களத்திவிஷ மிட்டாளல்லவா! அந்தக்குமாரன் அவ்விஷத்தோடுகூட வே பிறந்தாணுகையால் ஸகரனென்று பேர் பெற்றனன். ஸகரனென்னும் அம்மன்னவன் யஜ்ஞதீக்ஷைகொண்டு புலப்படாமற் போன தனது யாகாச்வத்தைத் தேடும் பொருட்டு, பர்வகாலத்தில ஜலவேகத்துடன் அலைமோ திக்கொண்டு ப்ரஜைகளை பயமுறுத்துவதுபோன்ற ஸமு த்ரத்தைப் புதல்வர்களைக் கொண்டு வெட்டுவித்தனன. அந்த ஸகரனுக்கு அஸமஞ்ஜனென்னும் புதலவன் இருந்ததாகக் கேட்டிருக்கிறனம். அவன் பாபகர்மங் களைச் செய்ததனல் தந்தை அவனை ப்ராணனகளோடு கூடவே அரண்யத்திற்குத் துரத்திவிட்டனன். அஸமஞ் ஜனுகுட பராக்ரமசாலியாகிய அம்சுமானெனபவன் பி றந்தனன. அம்சுமானுடைய புதல்வன திலீபன. திலீப னுடைய புதல்வன் பகீரதன. அவன பிளை ககுத்ஸ்தன. அம்மனனவனல் தான் நீங்கள் ககுத்ஸ்தர்களென்று ப்ரஸித்திபெற்றீர்கள். ககுத்ஸ்தன் பிள்ளை ரகு. அவனல் தான உனனைச்சேர்ந்தவர்கள் ராகவர்களென்று கூறப் படுகிறனர். ரகுவுக்குத்தேஜஸ்வியாகிய புதல்வனொரு வன் பிறந்தனன. அவன ப்ரவருத்தனென்றும் புருஷா தனென்றும் கல்மாஷபாதனென்றும ஸௌதாஸனென் றும் உலகத்தில் ப்ரஸித்திபெற்றனன் கல்மாஷபாதனுக் குச் சங்கணனென்னும புதலவன பரஸித்தனாயிருந்தன ன். அவன [1]அந்தக்கலமாஷபாதனது பராக்ரமத்திலகப் பட்டு ஸைனியங்களோடு நாசமடைந்தனன. சங்கணன் பிள்ளை ஸுதர்சனன். அவன சூரனும் செல்வம் நிறைந் தவனுமாயிருந்தனன். ஸுதர்சனன பிள்ளை அக்னிவர் ணன. அவன பிள்ளை சீக்ரகன். அவன பிள்ளை மரு. அவ ன்பிள்ளை ப்ரஸுச்ருக. அவன பிள்ளை மிகவுந் தேஜஸ்வி

---

1. கலமாஷபாதன் வஸிஷ்ட சாபததால ராக்ஷஸரூபினன். ஆகையால அவன தன் புதலவனையே அடித்துக் கொன்றனன்.

யாகிய அம்பரீஷன். அவன் பிள்ளை உண்மையான பராக்ர மமுடைய நஹுஷனென்பவன். அவன்பிள்ளை பரமதார்மிகனெகிய நாபாகன். அவனுக்கு அஜனென்னும் ஸுவ்ரதனென்னும் இரண்டு பிள்ளைகள். அஜனுக்கு தர்மாத்மாவாகிய தசரதமஹாராஜன பிறந்தனன. அந்தத் தசரதனுக்கு ராமனென்று நாற்றிசையும் புகழ்பெற்ற நீ முத்த குமாரனைப் பிறந்தனை. ராஜனே! நீ இங்ஙனம் ஜ்யேஷ்டகுமாரனையால் நீயே ராஜாவாகவேண்டுமானதுபற்றி நீ உன்னுடைய ராஜ்யத்தைக் கைப்பற்றி ப்ரஜைகளைப் பரிபாலனஞ்செய்வாயாக. இக்ஷ்வாகுராஜாக்களனைவரிலும் நானிப்பொழுது ருபித்தபடி ஜ்யேஷ்டகுமாரனே ராஜ்ஜியத்து வழக்கமாயிருக்கின்றது. மூத்தவனிருக்கையில் இளையவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வதில்லை. மூத்தவனுக்கே பட்டாபிஷேகம் நடப்பதுவழக்கம். பெரும்புகழினை! மூத்த குமாரனெகிய உனக்கும் உன்னை ஸம்பந்தித்த ரகுவம்சத்தவர்களனைவர்க்கும் பரம்பரையாகவந்த மூத்தவனுக்கே பட்டாபிஷேகமென்னுங் குலதர்மத்தை இப்பொழுது நீ முதலில் கெடுப்பது உனக்குத் தகாது. பெரும்புகழனே! உன தந்தையைப்போல் நீயும், சிறந்த வஸ்துக்கள் பலவும் நிறைந்ததும் பலவகை தேசங்கள் பொருந்தியதுமாகிய இப்பூமண்டலத்தைப் பரிபாலனஞ் செய்வாயாக' எனறு மொழிந்தனன். நூற்றுப்பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

வஸிஷ்டர் ஆசார்யராகிய தன்வசனத்தைக் கடக்கலாகாதென்பதும், ராமன் தந்தையின்வாத்தை இதைக் காட்டிலும் மேலென்பதும், பரதனது ஸ்தண்டிலசயனமும், ராமன் ஸமாதானங்கூறுதலும்.

புரோஹிதராகிய வஸிஷ்டர் அப்பொழுது ராமனுக்குக் குலதர்மத்தைச் சொல்லியும், அந்தராமன் தந்தை

யிஞ்ஞைருக்கு அக்குலதர்மம் விருத்தமென்று நினைத்து வெறுமனே யிருக்கிறூனென்று தெரிந்துகொண்டு மீளவும் தர்மம் தவறூதிருக்குமாறு அவனை நோக்கி 'காகுத்ஸ்தனே! பிறப்புற்ற ஒவ்வொரு புருஷனுக்கும் ஆசார்யன் தந்தைதாய் என்னும் இம்மூவருரும் குருக்களாகின்றனர். புருஷதிலகனே. தந்தையும் தாயும் இப்புருஷனது தேஹமாத்ரத்தைப் பிறப்பிக்கின்றனர். ஆசார்யன் இவனுக்கு ஜ்ஞானத்தைக் கொடுப்பவனைகயால் அந்தத் தாய்தந்தைகளைக் காட்டிலும் மேலானவனென்று சொல்லப்படுகின்றனன். சத்ருகளைத் தபிக்கச் செய்பவனே! நான் உன் தகப்பனுக்கும் உனக்கும் ஆசார்யனைகயால் நீ என் வார்த்தையின்படி நடக்கவேண்டும் அப்படி நடப்பாயாயின் ஸஜ்ஜனங்கள் செல்லும் மார்க்கத்தை அதிக்ரமியாதிருப்பாய். என்னப்பனே! இந்த ப்ராஹ்மணர்களுடன்பட்டனைத்து ஜனங்களும் க்ஷத்ரியர்களும் வைச்யர்களும் உன்னுடையவர்கள். இவர்களைக்காப்பது உனக்கு தர்மம். அந்த தர்மத்தை அனுஷ்டித்து வருவாயாயின், நீ ஸத்புருஷர்கள் செல்லும் மார்க்கத்தை மீறி நடவாதவனுயிருப்பாய். வயது சென்றவனும் பரமதர்மிஷ்டையுமாகிய தாய்க்குச் சுச்ரூஷை செய்யாதிருப்பது எவ்வளவும் யுக்தமன்று. ஆகையால் அவளது வார்த்தையின்படி நடந்துகொண்டிருப்பாயாயின், ஸன்மார்க்கத்தை அதிக்ரமித்தவனுகாதிருப்பாய். ராகவனே! நீ ஸத்யத்தையும் தர்மத்தையும் அனுஷ்டிப்பதில் சூரன். அப்படிப்பட்ட நீ 'என் தாயை ஸமாதானப்படுத்தினேன். நீ பட்டங்கட்டிக்கொள்வாயாக' என்று உன்னை வேண்டுகின்ற பரதனது வார்த்தையை நிறைவேற்றுவாயாயின், உனது ஆத்மாவைப் போன்ற பரதனை உல்லங்கனஞ் செய்யாதவனுவாய்' என்றனர். இங்ஙனம் ஆசார்யராகிய வஸிஷ்டர் இனிதாக

மொழிகையில், புருஷ ஸ்ரேஷ்டனுகிய ராமன் உட்கார்க் திருக்கிற அந்த வலிஷ்டரைப் பார்த்து 'தாய்தந்தை கள் முதலில் பிள்ளேபிறக்கவேண்டுமென்று கடத்தின வ்ரதோபவாஸ தேவதார்ச்சனதிகளுக்கும் பிள்ளே பிறக் தபின்பு தமது சக்திக்குரியபடி முலேப்பால் கொடுத்து அனனவஸ்த்ராதிகளே யளித்து கலங்கிட்டு நீராட்டி எப் பொழுதும் இனியவுரைகளே யுரைத்து காளொருமேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்த உபகா ரங்களுக்கும் நாம் செய்யுங்கைம்மாறு யாதொன்றுமில்லே யன்றோ. ஸமஸ்த தர்மங்களுக்கும் மூலனமான இப்படி ப்பட்ட தேஹத்தை நாம் பெற்றதற்குக் காரணம் தாய் தகதைகளே. ஆகையால் அவர்களே ஆசார்யனைக்காட் டிலும் மேலானவர்கள். அந்தத் தசரதமஹாராஜர் என் னேப்பெற்ற தந்தை. ஆகையால் அவர்க்கு நான்செய்த ப்ரதிஜ்ஞையை எவ்வளவும் பொய் செய்யலாகாது. அவ ர்க்கே முதலில் நான் ப்ரதிஜ்ஞைசெய்துவிட்டேனேயால் அனைத்தவறிய தாய்வார்த்தையையாவது தம்பியின் வார்த்தையையாவது நான செய்வது யுக்தமன்று' என்ற னன். இங்ஙனம் ராமன மொழிகையில், மிகவும் கம்பீரமன மூடைய பரதன் மிகவும் மனம் தபிக்கப்பெற்றுத் தனத ருகிலிருக்கும் ஸுமந்த்ரனேப் பார்த்து 'ஸாரதீ! எனக்கு இங்குத் தரையினமேல் தர்ப்பங்களேச் சீக்ரம் பரப்புவா யாக. எனனதயணுகிய ராமன் எனமீது அருள்புரியாதிரு க்கும் வரையிலும் அவர்க்குக் குறுக்கே படுத்திருக்கப் போகிறேன். வட்டிக்காகத் தனது பணங்களேயெல்லாம் கடன் கொடுத்த ப்ராஹ்மணன, கடன் வாங்கிக்கொண்ட வன்வாசலில் குறுக்காக ஆஹாரமின்றி முகத்தை மூடிக் கொண்டு படுத்திருக்கும் விதமாக காணும் ராமன் அயோ த்யைக்குத் திரும்பி வாராதிருக்குமளவும் ஆஹாரத்தை

விட்டு முகத்தில் தூணியைப் பொகட்டு மூடிக்கொண்டு பர்ணசாலையின் வாசலில் படுத்துக் கொள்கிறேன்' என்று சொல்லி, அந்த ஸுமந்த்ரன தர்ப்பங்களைப் பரப்பரமல் ராமனது அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு மனவருத்த முற்றிருக்கிற அந்தப் பரதன் தானே தர்ப்பங்களைக் கொண்டு வந்து பரப்பிப் படுத்துக் கொண்டனன். மஹா தேஜஸ்வியும் ராஜர்ஷிகளில் தலை வனுமாகிய ராமன் பரதனைப் பார்த்து 'என்னப்பனே! உனக்கு நான் என்ன அபகாரஞ் செய்கிறேனென்று எனக்குக் குறுக்காகப் படுத்துக் கொள்வாய்? ப்ராஹ்மணன் மாத்ரமே தன்னிடங் கடன் வாங்கிக்கொண்டு ஏமாற்றப் பார்க்கிறவன் வாசலில் குறுக்காகப் படுத்துக் கொள்ளத் தகுவானன்றி அபிஷிக்தர்களாகிய க்ஷத்ரியர்களுக்கு இங்ஙனம் குறுக்காகப்படுத்துப் பீடிப்பது விதிக்கப் பட்ட தன்றே, புருஷ ஸிம்ஹனே! ரகுகுல குமாரா! எழுந்திரு. இந்த பயங்கரமான வ்ரதத்தை விட்டு இங்கிருந்து புறப் பட்டுச் சீக்ரம் பட்டணங்களிற் சிறந்த அயோத்தியைக்குப் போவாய்' என்றனன. பரதன் அப்படியே அந்த தர்ப்பங் களில் உட்கார்ந்தே யிருந்து பட்டணத்து ஜனங்களையும் பள்ளிப்பட்டு ஜனங்களையும் பார்த்து 'நீங்களாயினும் எனதண்ணனைத் திருத்தமாட்டீர்களா யென்?' என்ற னன். அந்தப் பட்டணத்து ஜனங்களும் காட்டுப் புறத்து ஜனங்களும் அம்மஹானுபாவனைப் பார்த்து 'ராமன் ஸத்யஸந்தனென்று நாங்கள் கண்கறிவோம். அவன் சொன்னது கன்றுகளே யிருக்கினறது. இம்மஹானுபாவன் தந்தையின் வார்த்தையில் தானே தவறுமல் நிலையுற்றி ருக்கின்றனன். ஆனதுபற்றியே அவனை உடனே திருப்ப எமக்கு ஸாத்யமில்லாதிருக்கின்றது' என்றனர். ராம னும் அவர்கள் சொன்ன வார்த்தையைத் தெரிந்து கொ

ண்டு பரதனைப் பார்த்து 'தர்மத்தில் கண் வைத்த உனது கண்பர்கள் இங்ஙனம் சொல்லுகின்றனர், கேட்பாய். மஹாபாஹுவே! ரகுவம்சத்திற் பிறந்தவனே! என் வார்த்தையையும் பௌரஜானபதர்களின் வார்த்தையையும் இண்டையும் கேட்டு இனிச் செய்ய வேண்டியது இதுவென்று நன்கு நிச்சயித்துக் கொள்வாய். (க்ஷத்ரியர்களுக்குத் தகாத ப்ராயோபவேசத்தைச் செய்தாயாகையால் அதற்கு ப்ராயஶ்சித்தமாக) என்னையும் ஜலத்தையும் பரிசிப்பாயாக. (இனிமேல் இங்ஙனஞ் செய்யேனெனபதற்குச் சபதமாக) ஜலத்தையும் பரிசித்து என்னையும் பரிசிப்பாயாக' என்றனன். அனந்தரம் பரதன் எழுந்திருந்து ஜலத்தைப் பரிசித்து, பிறகு அங்குள்ளவர்களை நோக்கி 'ப்ராஹ்மணர்களும் மந்த்ரிகளும் பட்டணத்து ஜனஸமூஹங்களும் நான் சொல்லும் வார்த்தையை மனஹக்கத்துடன் கேட்பார்களாக. எனக்கு ராஜ்யம வேண்டுமென்று நான் தகாதையை யாசிக்கவில்லை. எனக்கு ராஜ்யம் வருவதற்காக இங்ஙனம செய்வாயென்று எனதாயையும் நான் விதிக்கவில்லை. தர்மம் மிகுந்திருக்கின்ற அண்ணனுகிய ராமனை அரண்யம் போகும்படியனுப்புவதற்கு நான் எள்ளளவும அனுமதிக்கவேயில்லை. ஆகையால் தந்தையின் வார்த்தையை நான் செய்யவேண்டிய அவஶ்யமில்லை. அரண்யத்திற்குப் போக வேண்டியதுமில்லை. ஆயினும் தகதையின் வார்த்தையை அவஶ்யஞ் செய்யவேண்டுமாயின், அதன்படி அரண்யத்தில் அவஶ்யம் வஸிக்கவேண்டுமாயின், அப்பொழுது ராமனுக்குப் பதிலாக நானே வனத்தில் பதிணன்கு ஸம்வத்ஸரங்கள் வாஸஞ் செய்கிறேன். ராமன் எனக்குப் பதிலாக ராஜ்ய பரிபாலனஞ் செய்வானாக. அப்போது இருவரும் தகதை வசனத்தின்படி நடந்தவர்களாவோம்' என்றனன். தர்ம

ஸ்வபாவஞ்ஞனிய ராமன் தம்பி சொன்ன யதார்த்த வசனத்தைக் கேட்டு ஆச்சர்யப்பட்டுப் பௌரஜானபதர்களை நோக்கி 'என் தந்தை பிழைத்திருக்கும் பொழுது எதை விக்ரயஞ் செய்தாரோ, எதைக் குதுவை வைத்தாரோ, எதை விலைக்கு வாங்கினாரோ, அதை மாற்றுவதற்கு ஞயினும் பரதஞயினும் எவ்வளவும் வல்லவரல்லோம் எனக்கு வனவாஸத்தைக் குதுவை வைத்து அதற்கு விலைப்பணமாக ராஜ்யத்தை வாங்கிக்கொண்டு உனக்குக் கொடுத்தனர். அதை மாற்ற ஸாத்யமன்று. நான் வனவாஸஞ் செய்ய வல்லவஞயிருக்கின்றேன். சக்தஞகாமற் போயினும் எனக்குப் பதிலாக மற்றொருவனை வனவாஸஞ் செய்ய அனுப்புவது எனக்குத் தகாது. அது மிகவும் அதமபக்ஷமாகையால் நிகதைக்கிடமாகும். அசக்தர்கள்ன்றே அங்ஙனஞ் செய்யவேண்டும். கைகேயி யுக்தமாகத்தானே சொல்வினள். தந்தையும் நல்ல தர்மகார்யத்தையே செய்தனர். நாமிருவரும் அங்ஙனஞ் செய்யாமற் போவோமாயின், அதமபக்ஷத்தைக் கைப்பற்றுவோமாயின, தந்தைக்கு அஸத்யம் நேரும். பரதன் பொறுமையுடையவனென்றும் பெரியோர்களைப் பூஜிக்குந்தன்மையனென்றும் அறிவேன. ஸத்யஸந்தனும் மஹானுபாவனுமாகிய அந்தப் பரதனுக்கு ஸமஸ்தமும் மங்கலமே ஆகுமாக. நான கெடு தீர்ந்தவுடன வனத்தினின்று வந்து தர்மசீலனாகிய இந்தத் தம்பி பரதனுடனே கூடி பூமிக்குப் பதியாகி நன்கு பரிபாலனஞ்செய்கிறேன்' என்று சொல்லி, பரதனைப் பார்த்து 'கைகேயி மன்னவனை வரம் வேண்டினள். அவளது வார்த்தையின்படி நானும் கடந்து கொண்டேன். நீயும் என் வார்த்தையின்படி கடந்து பட்டங் கட்டிக்கொண்டு தந்தையை அஸத்ய தோஷத்தினின்றும் தப்புவிப்பாயாக' என்றனன். நூற்றுப்பதினொன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் பாதனை ஸமாதானப் படுத்தி அயோத்யைக்குப் புறப்படுத்தி யனுப்புதல்.

ஒப்பில்லாத ஒளியுடன் விளங்குகின்ற அண்ணன் தம்பிகளாகிய அந்த ராம பரதர்களின் சேர்த்தி மயிர்க் கூச்சலை விளைக்கும்படி அற்புதமாயிருந்தது. ஆகையால் அவ்விடம் வந்திருந்த மஹர்ஷிகள் அந்தச் சேர்த்தியைக் கண்டு மிகவும் ஆச்சர்யமடைந்தனர். இதற்கு முன்பே கண்ணுக்குப் புலப்படாமல் அங்கு மறைந்திருந்த ராஜர்ஷிக் கூட்டங்களும் ஸித்தர்களும் தேவர்ஷிகளும், மஹானுபாவர்களும் அண்ணன் தம்பிகளும் குகுத்ஸ்தகுலதிலகர்களுமாகிய அந்த ராம பரதர்களைக் கண்டு 'எமக்கு இவ்விருவரின் ஸம்பாஷணத்தைக் கேட்கவே இவ்விருவரிடத்திலும் ப்ரீதி உண்டாகின்றது. ஆகையால் இப்படிப்பட்ட தர்மஜ்ஞர்களும் தர்மானுஷ்டானத்தில் சூரர்களுமாகிய இவ்விரண்டு பிள்ளைகளைப் பெற்றவனே தன்யனுவான்' என்று கொண்டாடினர். பிறகு அந்தரிஷிக் கூட்டங்கள் ராவணவதத்தை விரும்பி எல்லோரும் ஒரு மிடராக ராஜஸ்ரேஷ்டனுகிய பரதனைப் பார்த்து 'பரதா! நீ மஹாகுலத்தில் பிறந்தவன்; மிகவும் அறிஞனையிருப்பவன்; பெரிய ஆசாரஸம்பத்துடையவன்; மிகவும் பெரும் புகழ் பெற்றவன்; உன் தந்தை ஸுகமாயிருக்க விரும்புவாயாயின், ராமன் சொன்னபடி நடத்தவேண்டும். ராமன் எப்பொழுதும் தந்தைக்குக் கடன்படாதிருக்கவேண்டுமென்று எங்கள் விருப்பம். அங்ஙனம் தசரதன் கைகேயியின் கடனைத் தீர்த்துக் கொள்வதனுல் ஸ்வர்க்கம் பெற்றனன். நீங்கள், அவ்வரசன் கைகேயிக்குக் கொடுத்த வரத்தை அபத்தஞ் செய்வீர்களாயின், ஸ்வர்க்கம் போ

கப் பெறுவ' ரென்றனர். 'இப்படி யெனக்குமும் கருதிச்சென்
கலும் பரிஜனிகளும் படகமைந்து இருகரைக்கும் சென்றபின்
அப்பெரும்பூதே மெல்லெனறும் நாகமரநிழலிடங்களுக்குப்
போயினர். அழகிய சுடர்சியுடைபோலுள்ள ராமனும் அவர்
களை சுபலரைத்தனையைக் கேட்டு மிகவும், மனக்களிப்
புற்று யுகந்நில் லைத்தோதகிர்க்கு வெள்ளங்கப் பெற்று
அவர்களெல்லோரையும் பூஜித்தனன். பிறகு பரதனை மர
ந்ரமு தன் விருபடியும் கைகுசியையும் சேடருதிருப்பதை
கண்டு . அயலங்களெல்லரும் பிலத்திலுத்துப் போகவும் வர
ந்தெய்தாதகன் கழுதழுக்கவடம் பெற்றுக் கைகூப்பி மீளவும்
ராமசேனம் பார்த்து "அரசர்களுக்கு நாற்படையினாலுஞ்
செய்கையே தர்மம். மூதந்தையன் பட்டாபிஷேகம் பெறு
வது எமது குலத்தில் இணை யில்லாமல் நடந்து வருந தர்
மம். இவ்விரண்டு தர்மங்களையும் ஆலோசித்து, மன
தை யடக்கிக்கொண்டு தர்மத்தில் ப்ரீதியுடையவ
னாகி யிருக்கிறான். இந்த ராஜ்யத்தை யடைந்து மேன்மேலும் ப்ரீதியுற
ச் செய்யாமலிருப்பது தகுதியல்லவே. நம் பரதனுக்குமும் கொடுக்கவும்
மனமில்லை. இவர்களுக்கு முடிகவிழ்த

அப்பொழுது ராமனது பாதங்களில் வீழ்ந்து பலவாறு ப்ரார்த்தித்தனன். கறுத்த சரீர காந்தியுடையவனும் ராமையிதழ்போன்ற கண்களுடையவனும் மதித்த ஹம்ஸத்தின் கண்டஸ்வரம் போன்ற கண்டஸ்வரமுடையவனுமாகிய அந்தப் பாதனை ராமன் தானே எடுத்துத் தடை மேவிட்டுக கொண்டு 'உனக்கு ஸஹஜமான புத்தியும் குருசிஷ்யஷயாலுண்டாகும் புத்தியும் இதற்கு முன்னமே ஸித்தமாயிருக்கின்றன. ஆகையால் நீ இப்பூமண்டலத்தை யெல்லாம் பரிபாலிப்பதற்கு மிகவும் வல்லவனாகின்றனை. நீ ப்ரதான மந்த்ரிகளோடும் ஸ்னேஹிதர்களோடும் புத்தியிற் சிறந்த உபமந்த்ரிகளோடும் கூடி ஸர்வகார்யங்களையும் நன்காலோசித்து எப்படிப்பட்ட பெரிய கார்யங்களாயினும் தடத்துவாயாக. காந்தியின் பெருக்கு சந்த்ரனை விட்டொழிகதாலும் ஒழியும். ஹிமவத்பர்வதம் பனிகளை இழந்தாலும் இழக்கும். ஸமுத்ரம் தன் கரையை மீறினாலும் மீறும். அவ்வளவேயன்றி நான் மாத்ரம் தந்தைக்குச் செய்த ப்ரதிஜ்ஞையை உல்லங்கனஞ் செய்யமாட்டேன். என்னப்பனே! 'ஒரு பெண் பிள்ளையின் பேராசையால் நேரிட்ட ப்ரதிஜ்ஞையைத் தவறுவது யுக்தமே' என்கிறாயோ? விஷயங்களி லுள்ள காமத்தினாலாவது, அல்லது ராஜ்யஞ் செய்யவேண்டுமென்னும் பேராசையாலாவது உன் தாய் உனக்காக இந்தக் கார்யஞ் செய்தனள். அதை நீ மனத்தில் வைக்கலாகாது. நீ அவளைத் தாயைப் போலவே பார்த்து நடக்க வேண்டும்' என்று மொழிந்தனன். ஸூர்யன் போல் எதிரில்லாத தேஜஸ்ஸுடன் விளங்கி ப்ரதமையினன்று சந்த்ரன் போல் மேல் மேலும் வளர்ந்து வருந் தன்மையனும் பூஜிகத் தகுந்தவனுமாகிய ராமன் இங்ஙனஞ் சொல்லுவதைக் கண்டு பரதன் அவனை நோக்கி 'ஐயனே! ஸ்வர்ணமயமாகி விளங்

கும் இப்பாதுகைகளின் மேல் உனது பாதங்களை யிட்டு ளறுவாயாக. இவையே ஸமஸ்த லோகங்களுக்கும் யோக க்ஷேமங்களை நடத்துவல்லவை' என்றனன். மஹாதேஜஸ்வியாகிய அந்தப் புருஷச்ரேஷ்டனும் அதப் பாதுகைகளின்மேலேறி மீளவும் இறங்கி மஹானுபாவனாகிய பரதனுக்குக் கொடுத்தனன். அனந்தரம் பரதன் அந்தப் பாதுகைகளை நமஸ்கரித்து ராமனைப் பார்த்து 'வீரோத்தம! ரகுகுலகுமாரனே! நான் பதிணன்கு ஸம்வத்ஸரங்கள் ஜடைகளைத் தரித்து மரவுரிகளை உடுத்துக் காய் கிழங்குகளை ஆஹாரமாக உட்கொண்டு பரந்தபனாகிய உனது பாதுகைகளின மேல் ராஜ்ய தந்த்ரங்களை யிட்டுப் பட்டணத்திற்கு வெளியில் வாஸஞ் செய்து உன்னை யெதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். ரகுநந்தனனே! பதிணன்கு ஸம்வத்ஸரங்கள் நிரம்பிப் பதினாலாவது ஸமவத்ஸரத்தின முதலில் உன்னைப் பாரேனையின தப்பாமல் அக்னியில் குதித்து விடுவேன்' என்றனன். ராமன 'அப்படியே ஆகட்டும்' என்றெழுப்புக்கொண்டு அதப் பாதனை ப்ரியுடன் கட்டிக்கொண்டு சத்ருக்னனையும் அணைத்துக் கட்டிப் பரதனைப் பாராத்து 'ரகு மனனவர்களில் மேன்மையுற்றவனே! தாயாகிய கைகேயியைப் பாதுகாப்பாயாக. அவள் மேல் கோபந் செய்யாதே. இப்படிக்கு எனமீதும் ஸீதை மீதும் நடந்திறேன்' என்றிங்ஙனஞ் சொல்லிக் கண்களிரண்டிலும் நீர் நிரம்பப் பெற்றுத் தம்பியாகிய பரதனை விடைகொடுத்தனுப்பினன். ப்ரதாபசாலியும் தர்மங்களை யறிந்தவனுமாகிய அந்தப் பாதன் கன்கலங்கரிக்கப்பட்ட அந்தப் பாதுகைகளை விசேஷமாகப் பூஜித்து ராமனை ப்ரதக்ஷிணஞ் செய்து அவைகளை ராஜர்க்குரிய உத்தமமான சத்ருஞ்ஜயத்தின் சிரஸில் வைத்தனன. பிறகு ராமன் ஹிமவத்பர்வதம் போல் ஸ்வதர்மத்தில் சலியாமல்

ஸ்திரமாயிருப்பவனைகயாலும் · ரகுவம்சத்தை வளரச் செய்பவனைகயாலும் எவர் தாண்டினை லும் அசையாமல் குருக்களையும் மந்திகளையும் ஜனங்களையும் தம்பிகளாகிய பரத சத்ருக்னர்களையும் அயோத்யைக்குத் தகுந்தபடி பூஜித்து எல்லோரையும் விடை கொடுத்தனுப்பினன். தாய் மார்கள் கண்ணீர் கண்டத்தில் வந்தடைக்கப்பெற்று மனவருத்தத்தினல் ராமனைப் பார்த்துப் போய்வருகிறேமென்று விடை பெற்றுக் கொள்ள வல்லமையற்றிருந்தனர். அந்த ராமனே தாய்மார்களெல்லோர்க்கும் நமஸ்காரஞ் செய்துக கண்ணீர் பெருகிக் கொண்டே தன பாணசாலையுள் ப்ரவேசித்தனன. நூற்றுப்பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் அயோத்தையுள ப்ரவேசித்தல.

பிறகு பரதன் அப்பொழுது சத்ருக்ன ஜயத்தின் சாலிலிருக்கின்ற ராம பாதுகைகளைத் தன சிரஸிலிட்டுக் கொண்டு பரம ஸந்தோஷத்துடன் சத்ருக்னனும் தானுமாக ரதத்தின் மேலேறினன. வஸிஷ்டரும் வாமதேவரும் திடமான வ்ரதமுடைய ஜாபாலியும் மந்த்ரகார்யங்களில் வல்லவராகிய மற்ற மந்த்ரிகளும் முன்னே போயினர். அவர்கள் ராமனது வாஸஸ்தானமாகையால் மஹாபர்வதமான சித்ரகூடத்திற்கு ப்ரதக்ஷிணமாகக் கிழக்குதிசையைப் பிடித்து ஸீதாராமர்களின் ஜலக்ரீடைகளால் ரமணீயமான மந்தாகினீ நதியைச் சேர்ந்தனர். அப்பொழுது பரதன் ஸைன்யங்களோடு கூடப் பலவகையுடன் அழகாகப் புலப்படுகின்ற அனேகமாயிரங் கணக்குள்ள கைரிகதாஸக்களைப் பார்த்துக் கொண்டே அப்பர்வதத்தின் பக்கத்து வழியாகப் போயினன். அப்பொழுது பரதன் சித்ரகூடபர்வதத்தின் ஸமீபத்தில் பரத்வாஜர் வாஸ

ருசெய்கின்ற ஆப்ராம்த்ணைத்க் கண்ட்ன்ன். அப்பரத்ன் சிற
க்த மதியுடையவனுகையரல் அக்ரப்பரத்வாஜாப்ரமத்நி
ற்குச் சென்று ராகத்நிணின றும் இறங்கி அம்முனிவரது
பாதங்களில் வநதனனஞ் செய்ரனன் பிறகு பரத்வாஜரும்
அவனது வரவுக்கு மிகவும் ஸந்தோஷமடைந்து, அவனை
நோக்கி 'எனனப்பா! ராமசினப் பார்த்தாயா? நீ போன
கார்யம் ஆயிற்று?" என்று விணவினர். புத்திசாலியாகிய
பரத்வாஜர் இங்ஙனங் கேட்டகையில், பிறகு உடன்பிறந்த
வனிடத்தில் மிகுந்த ப்ரீதியுடைய பரதன் அவரை நோ
க்கி 'ராமன பராக்ரமம் திடாரயிருந்தப்பிறற்றனனரு!
ஆகையால் ராஜனும் குருவாகிய வஸிஷ்டரும் ராஜ்யத்தை
க் கைப்பற்ற வரவேண்டுமென்று வேண்டுகையில, அவன்
மிகவும் ஸந்தோஷித்து வஸிஷ்டரைப் பார்த்து 'நான்கை
கேயிக்காகப் பதிணான்கு ஸம்வத்ஸரங்கள் காண் அர
ண்யத்திலிருக்கும்படிக்குச் செய்த ப்ரதிஜ்ஞையை யதா
ர்த்தமாகப் பரிபாலனஞ் செய்வேனன்றி விடமாட்டேன்'
எனறனன. அவனிப்படி உரைகையில், மஹா ப்ராஜ்ஞ
ரும் வாக்யங்களை யறிந்தவருமாகிய வஸிஷ்டர் வியாபார
பேசவல்ல மணிய ராமசினப் பார்த்து மிகுந்த பொரு
ளமைந்திருக்கும்படி 'ராமா! நீ மிகுந்த அறிவுடைய
வன். ஆகையால் ஸுவர்ணத்தால் அலங்கரிக்கபபட்டு
உனக்காகக் கொண்டுவரப்பட்ட இந்தப் பாதுகைகளைக்
கொடுப்பாயாக. இவையே அயோத்தியில் நினறு எம்து
யோகக்ஷேமங்களைச் செய்யவல்லன" என்றனர். வஸிஷ்
டர் இங்ஙனஞ் சொல்லக் கேட்ட ராமன் கிழக்குமுகமாக
நின்று அந்தப் பாதுகைகளின் மேல் அடிகளைவைத்து எ
னக்குராஜ்யாபக்ஷண சக்தியுண்டாவதற்காக அவைகளைக்
கொடுத்தனன. மிகவும் மஹாநுபாவனகிய ராமனிடம்
அனுஜ்ஞையைப் பெற்று மங்கலகரமான அப்பாதுகைக

ளை எடுத்துக் கொண்டு திரும்பி அயோத்தியைக்கே போகி றேன்' என்றனன். மஹாநுபாவனாகிய பரதனை சொன்ன இந்தச் சுபவாக்யத்தைதக் கேட்டுப் பரத்வாஜ மஹர்ஷியும் அவனைப் பார்த்து மிகவும் சுபமானவார்த்தைதகளைச் சொல்லத் தொடங்கி 'புருஷஸிம்ஹனே! நல்ல ஸ்வபாவமும் நல் லதடவடிக்கையு முடையவர்களில் நீ மேலானவன். ஆகை யால் பள்ளத்தில் ஜலந் தேங்குவது போல் உன்னைப் போன்றவனிடத்தில் மூத்தவனைப் பின் செல்லவேண்டு மென்னும் இக்கன்மை நிலனின்றிருக்கின்றது. ஆகை யால் இது ஓராச்சர்யமன்று. மஹாபுஜனாகிய உன் தந் தை தசரதனுக்கு தர்மங்களை யுணர்ந்தவனும் தர்மங்க ளில் விருப்பமுடையவனுமாகிய இப்படிப்பட்டஸத்புத்ரன் நீ இருக்கிறாயாகையால் அவன் மரணமடையவில்லை. இ ன்னும் பிழைத்தேயிருக்கிறான்' என்றனர். பிறகு பரதன் மஹாநுபாவராகி அம்முனிவர் மொழிந்த வார்த்தைதக் குக் கைகூப்பிப் பாதங்களைப பிடித்துகொண்டு விடையத் துடன் விடைபெற்றுகொள்ள முயன்றனன். பிறகு ஸ்ரீ மானாகிய பரதன் பரத்வாஜமஹர்ஷியை அடிக்கடி வலஞ் செய்து மந்த்ரிகளோடுகூட அயோத்தியைக்குப் போயினன். மிகவும் பரப்புள்ள அந்தப் பரதஸைன்யம் பல்லக்குக ளோடும் வண்டிகளோடும் குதிரைகளோடும் அந்தப் பர தனைப் பின் சென்றது. பிறகு அவர்களெல்லோரும் அலை களின் வரிசைகளால் அழகாகப் புலப்படும் திவ்ய நதியா கிய யமுனையைத் தாண்டி அழகிய ஜலத்துடன் விளங்கு கின்ற கங்காநதியைக் கண்டனர். அப்பரதன் பந்துக்க ளோடும் ஸைனிகளோடும் அழகிய ஜலப்ரவாஹம் நிறை ந்த அக்கங்காநதியைத் தாண்டி ரமணீயமான ப்ருங்க பேர புரத்திற்குப் போயினன். அவன ப்ருங்கபேரத்தினி ன்றும் புறப்பட்டு அயோத்தியையைக் கண்டனன். பரதன்

தந்தையையும் அண்ணனையும் துறந்த அவ்வயோத்தியை யைக் கண்டவுடன் துக்கத்திணல் மிகவும் பரிதபித்துக் கொண்டு ஸாரதியைப் பார்த்து 'ஸாரதி! அயோத்தியை ராமவியோக துக்கத்தால் பீடிக்கப்பட்டுக் கலங்கி கலங்குலித்து உருவம் மாறி ஆநந்தமின்றித் தீனையாகி ஒலியற்று விளங்காதிருக்கின்றது பார்' என்றனன். நூற்றுப் பதின்மூன்றுவது ஸர்க்கம் முற்றிற்று.

{ பரதன் அயோத்தியை நிராநந்தமாயிருப்பது கண்டு சோகித்தல. }

பெருங்கீர்த்தியுடையவனும் ஸமர்த்தனுமாகிய பரதன் செலிக்கினிய கம்பீர த்வனியுடைய ரதத்தின் மேலேறிச் சென்று சீக்ரமாக அயோத்யாபுரியுள் ப்ரவேசித்தனன். அப்பொழுது அநகப் பட்டணம் முன்பு மனிதர்களும் யானைகளும் உலாவப் பெற்றிருப்பதுபோய்ப் பூனைகளும் கோட்டான்களும் திரியப்பெற்று, ஒளியின்றி இருள் மூடப் பெற்ற க்ருஷ்ணபக்ஷத்து ராத்ரி போலவும், மிகுந்த ஒளிவெள்ளத்துடன் மேலாக ப்ரகாசித்துக் கொண்டிருந்தது அங்காரகனல் பீடிக்கப்பட்டுத் தனியாகிப் பரிதபிக்குஞ் சந்த்ர பத்னியாகிய ரோஹிணி போலவும், தண்ணீரெல்லாம் வெயிலில் வற்றி வெந்நீராகிக் கலங்கிப் போகையில் பக்ஷிகள் மிகவும் பரிதபிக்கவும் சிறுமீன் பெருமீன் முதலை முதலிய ஜலஜந்துக்களெல்லாம் மறைவும் பெற்றுச் சிறுத்திருக்கிற ஓர் மலையாறு போலவும், முதலில் புகையின்றிப் பொன்போல் விளங்கிப் பின்பு தயிர் முதலிய ஹவிஸ்ஸுக்களை யிடுகையில் மழுங்கின யாகாக்னி ஜ்வாலை போலவும், மஹாயுத்தத்தில் மேலான வீரர்கள் மூடியக் கவசங்கள் முறிய யானைகளும் குதிரைகளும் கோவுபடத் தேர்களும் கொடிமரங்களும் ஓடிந்துவீழ ஆபத்

வதுபடைத்த சேலினைபோலவும், மூதனில் கார்றின்சோதத்
திறல் நுணைகளினாலும் பெருங்கோதையிற்சேதிம் வைடூர்
யத்தினின்றும் சினம்பி உடுசின்ற அதகதார்றின்சேலம் அடை
ங்கிப்போனைகடிசில் நுணைதலருப்தமூரின்றி ஓய்கின்ற சீத
லைபோலவும், யாமம் மூடிய நிசம் விடிந்த உதயகாலத்தி
ன முருக்கிதழுகள் பாதரிபூ சேம்புடிய லாமை வாயினை
யெல்லாமெதித்துக்கொண்டி சோலைகளில் சுற்றுடயில் நிற்
கும்பமாகிய பாதசேவகரிடம்போலவும், நமது ராஜ்யமு
யிருந்து காலைபெருது நம்மை விட்டிப்போனகயில் நிரா
லத்தினிடையில் அனாதசீ சீதையைக்கண்டி ராமன் மூல
னிட்டினைவைத்த பகும்புனலைபுடு நின்றமல் வருத்திய ஆ
னைபோலவும், மிருத்த நீசோட்டத்துடன் வினங்கி எரிவான
போன்ற பத்மராகம் மூதனியஜாதி ரத்னாய்களின்றிய முத்
துமாலைபோலவும், புன்பமில்லாம் அழுலினைகயில் நிலை
ன்று ஆகாயத்தினின் நுங்கு சேழுமிழுதபு மூனிப்பிருமையை
யிழுந்த தபஸ்திரம்போலவும், வளரதகாலத்தின்முடியில்
புஷ்பங்கள்நிறைதது வண்டுகள்மதித்து ஜுங்காரஞ் செய்
யப்பெற்றிருதது வேகத்துடன் படர்ந்தெரிகின்ற காட்டுத்
தீபால் கொளுந்தப்பட்டி வாடிவதங்கின காட்டுக் கொடி
போலவும் புலப்பட்டது. மேலும், அதகப்பட்டணம் மார்
க்கத்தில் ஜனலஞ்சாரமின்றிக் கடைகள் மூடப்பெற்று
க்ரயவிக்ரயாதிகளற்றிருக்கைபோல் மேகங்களால் மறைக்
கப்பட்ட சதந்ரனையும் நக்ஷத்ரங்களையுமுடைய ஆகாயம்
போலவும், மேல்மறைவிலலாத இடத்தில சிறுத்த மற்பங்
களெல்லாம் பாழாகவும் மத்யபாத்ரங்கள் உடையவும்
கள்ளுடித்தமதித்த ஜனங்கள் அடிபட்டோடவும்பெற்று
ஜம்ஸ்காரமொனமுயிலலாத பாழாபூமியைப்போலவும், பூ
மியெல்லாம் பிளந்து பள்ளமாகிய பாத்ரங்களுடும் உடைந்
து ஜலமெல்லாம் செலவழிதது முறிதது தலையில் வீழ்தத

தண்ணீர்ப்பக்தல்போலவும், தனுஸ்ஸில் ஏற்றப்பட்டதும் இரண்டு நுனிகளிலும் வில்லுடன் சேர்த்துக்கட்டும்பொருட்டு ஸித்தப்படுத்தின கயிறுகளுடையதும் அகன்றதும் யுத்தகாலத்தில் சத்ருக்களது பாணாங்கள் பட்டறுத்து வில்வினின்றும் கீழேவிழுந்ததுமாகிய தரண்போலவும், யுத்தத்தில் ஸமர்த்தனுகிய குதிரைப் பாகன், மேலறி கடத்துகையில் வாஹனத்திற்குத்தகாதகாகி இளைப்புற்று அலங்காரங்களெல்லாம் எடுக்கப்பெற்று துர்ப்பலமான பெண்குதிரைக்குட்டிபோலவும், ஜலம் ஸம்ருத்தமாயிருக்கும்பொழுது பலமீன்களும் ஆமைகளும் நிறையப்பெற்றிருந்து ஜலம் உலர்ந்துபோகையில், அவையெல்லாமற்றுக் கருகெய்தல்களும் பறிக்கப்பெற்றுக் கரைகளும் உடைந்து விஸ்தாரமாகிய தடைவாவிபோலவும், சந்தனம் முதலிய வாஸனைப்பூச்சுகளொன்றுமின்றிச் சோகத்தினல் பரிதபித்துக்களிப் பற்று இளைத்திருக்கும் தங்கையுடைய தேஹம்போலவும், வர்ஷாகாலம் முதிர்ந்துவருகையில் ஸூர்யன் மேகமண்டலத்தில் புகுந்து, கறுத்தமேகங்களால் மறைக்கப்பட்ட அவனுடைய தேஜஸ்ஸைபோலவும் புலப்படுகின்ற அயோத்தியையுள் பாகன் ப்ரவேசித்தனன். தசரதனது செல்வக்குமாரனுகிய அந்தப்பாகன் ரதத்திலிருந்துகொண்டே அம்மேலான ரதத்தை நடத்துகின்ற ஸாரதியைப்பார்த்து 'முன்பு அயோத்தியில் கீதவாத்யங்களினிறைவி கம்பீரமாகி நாற்புறமும் பறந்துச் செவிப்பட்டுக்கொண்டிருந்தது. இப்பொழுது ஏனே அந்தத் வனி அங்ஙனமே செவிப்படாதிருக்கின்றது? மோக்தமாத்ரத்தில் மதத்தைதவிலைக்கும்படியான மத்யகந்தமும் பூமாலைகளின் வாஸனையும் புகைக்கப்பட்ட அகுருதூபங்களின் மணமும் முன்போலவே பட்டணம் முழுவதும் நிரம்பி நாற்புறமும் வீசாதிருக்கின்றதே. ராமன அரண்யம்

பொகையில் இப்பொழுது அயோத்யாபுரத்தில் பல்லக்கு முதலிய மேலானவாஹனங்களின் த்வனியும் குதிரைகளின இனியகனைப்புகளும் மதித்தயானைகளின் கர்ஜனைகளும் ரதங்களின் பேரொலிகளும் செவிப்படாதிருக்கின்றன. ராமன் அரண்யம் போகையில், யௌவனப்பருவம் நிறைந்தவர் அனைவரும் துக்கத்தினல் பரிதபித்துச் சந்தனம் அகுரு முதலிய வாஸனைப்பூச்சுகளையும் மிகவும் மேலான பூமாலைகளையும் தரியாதிருக்கின்றனர். பட்டணம் முழுவதும் ராமசோகத்தினல் பீடிக்கப் பட்டிருப்பதுபற்றிப் புருஷர்கள் பலவகைப் பூமாலைகளை அணிந்து விளையாடுவதற்கு வெளிப்புறப்படாதிருக்கின்றனர். உத்ஸவங்கள் ஒன்றும் கடக்கவில்லை. எனதையருகிய ராமனேடுகூடவே அயோத்தியையின் காந்தியும் போறற்போவிருக்கின்றது. இது வாஸ்தவம். விடாமழையுடன்கூடிய சுக்லபக்ஷத்ராத்ரிபோல் இவ்வயோத்தியை எள்ளளவும் விளங்காதிருக்கின்றது. என தண்ணருகிய ராமன மஹாத்ஸவம்போல்வந்து வெயிற்காலத்து மேகம்போல் இவ்வயோத்தியையிலுள்ள ஜனங்களுக்கு எப்போது ஸந்தோஷத்தை உண்டாக்கப்போகின்றனன்? நன்கு அலங்காரஞ்செய்துகொண்டு மிடுக்குடன் நடந்துவரும் யௌவனப் பருவமுடையவர் ஸஞ்சரிக்காமையால் அயோத்தியையிலுள்ள ராஜமார்க்கங்களெல்லாம் விளங்காதிருக்கின்றனவே' என்றனன். இங்ஙனம் பரதன் பலவாறுக ஸாரதியைப்பார்த்துச் சொல்லிக்கொண்டே மஹாராஜரில்லாமையால் ஸிம்ஹமில்லாத குஹைபோல் புலப்படும் தந்தையின் மாளிகையுள் ப்ரவேசித்தனன். அப்பொழுது மஹாநுபாவனும் தீரனுமாயெ பரதன் தேவாஸுரயுத்தத்தில் தேவதைகள் தோல்வியடைந்து ஸூர்யனும் ராஹுவால் அடிபட்டிருக்கையில் ராத்ரிபகலென்னும் பிரிவினையின்றிய தினம்போல்

ஓளியற்று ஜனஸஞ்சாரமில்லாத அவ்வந்தப்புரத்தை யெல்லாம் பார்த்து மிகவும் வருந்திக் கண்ணீர் பெருக்கினன். நூற்றுப்பதிணென்காவது ஸர்க்கம் முற்றிற்று.

பரதன் அயோத்தியையை விட்டு நந்தி க்ராமத்திலு ராமபாதுகைகளை முன் னிட்டு ராஜ்யபரிபாலனஞ் செய்தல்.

பிறகு ரதங்களில் நிலைநின்ற பரதன் அயோத்தை யில் தாய்மார்களைவிட்டு மனவருத்தத்துடன் வஸிஷ்டர் முதலான பெரியோர்களைப்பார்த்து 'நான் இப்பொழுது நந்திக்ராமம் போகிறேன். இப்பொழுதே உங்களெல்லோ ரிடத்திலும் விடைபெற்றுக் கொள்கிறேன். அங்கு ராம வியோகத்தாலுண்டாகும் இம்மனவருத்தங்களை யெல் லாம் பொறுக்க வல்லேனையன்றி இங்கு எள்ளளவும் பொறுக்கமாட்டேன். என்தந்தை ஸ்வர்க்கம் அடைந்த னரல்லவா. எனதண்ணனும் அரண்யம்போயினன். மஹா யசஸ்வியாகிய அந்த ராமனேயன்ரு ராஜாவாகவேண்டும். ஆகையால் ராஜ்யத்திற்கு அவன் வரும்வரையிலும் காத் துக்கொண்டிருக்கிறேன?" என்றனன். மஹானுபாவனாகிய பரதன் சொன்ன இந்தச் சுபவாக்யத்தைக்கேட்டு மந்தி களெல்லோரும் புரோஹிதராகிய வஸிஷ்டரும் அவனைப் பார்த்து 'பரதா! உடன்பிறந்தவனிடத்திலுள்ள ஸ்னே ஹத்தினால் நீ இப்பொழுது சொன்னவார்த்தை மிகவும் புகழத்தகுந்ததாகவே யிருக்கின்றது. உன் குலத்திற்கும் இது தகுந்திருக்கின்றது. இப்படிப்பட்ட வார்த்தை உன க்கே தகும். நீ எப்பொழுதும் பந்துக்களிடத்தில் மிகவும் ப்ரீதியுடையவன், மேலும் அண்ணன்தம்பிகளிடத்தில் ஸ்னேஹம் விளங்கப்பெற்றவன். இங்ஙனம் பூஜிக்கத் த குந்த மார்க்கத்தில் முயன்றிருக்கிற நீ சொல்லும் வார்த்

தையை ஏவன் ஸம்மதிக்கமாட்டான்?" என்றனர். அவ
னும் தான் விரும்பினபடி இனிதாக மந்திரிகள் மொழிந்த
உரைகளைக்கேட்டு ஸாரதியைப் பார்த்து ரதம் ஸித்தப்ப
டுத்துவாயென்று ஆஜ்ஞாபித்தனன். அச் செல்வகுமா
ரன் முகத்தில் ஸகலாநந்தமும் பொங்கியழிபப் பெற்றுத்தாய்
மார்களுக்கு நமஸ்காரஞ்செய்து சத்ருக்னனும் தானுமா
ரதத்தின்மேலேறினன். இங்ஙனம் பரதசத்ருக்னர்க
ளிருவரும் மிகுந்த மனக்களிபபுடன ரதத்தின்மேலேறி
மந்திரிகளும் புரோஹிதரும சுற்றிச்சூழ்ந்துவரச் சேன
மாகப்போயினர். அவர்களில குருக்களாகிய வஸிஷ்டர்
முதலிய ப்ராஹ்மணர்களெல்லோரும் முன்னதாகக் கிழக்
குமுகமாக நடத்து கந்திக்ராம மிருக்குமிடத்திற்குப் போ
யினர். பரதன் போனவுடனே அவன வாருங்களென்று
ழைக்காமற்போயினும ரதகஜதுரகங்கள் நிறைந்த ஸை
ன்யமெல்லாம் அவனைப் பினசென்று போயிற்று. அயோ
த்தையிலுள்ள ஜனங்களெலலோரும அவனைப் பினதொ
டர்ந்தனர. உடன் பிறந்தவரிடத்தில பரீதியுடையவனும்
தர்மஸ்வபாவனுமாகிய பரதன் ரதத்திலிருந்தே ராமபா
துகைகளைச் சிரத்திலிட்டுகொண்டு சீக்ரமாக நந்திக்ரா
மத்திற்குப் போயினன. பிறகு பரதன் சீக்ரமாக நந்திக
ராமத்திற்குள் ப்ரவேசித்து ரதத்தினின்றும் வேகத்து
டனிழிந்து குருவைப்பார்த்து 'எனதண்ணன் இந்த ரா
ஜ்யத்தை என்னிடத்தில் [1] நிக்ஷேபமாகவே வைத்திருக்
கின்றனன். ஆகையால் இந்த முழுவதும் அவனுக்குத் தி
ருப்பிக்கொடுக்கவேண்டியதே. நிக்ஷேபமாகவைத்ததை
ரக்ஷிக்கைமுதலிய ஸ்வாதந்த்ர்யம் எனக்கில்லை. ஸ்வர்
ணமயமாகி விளங்குகின்ற இப்பாதுகைகளே இதன

---

1 நிக்ஷேபம் - பாதுகாத்து வைக்கும்படி ஒருவன் மற்றொருவ
னிடம் கொடுத்தவஸ்து. இதையே நயாஸமென்றுஞ் சொலலுவர்.

யோகக்ஷேமங்களை நிறைவேற்றவல்லவை' என்றனன். பிறகு, ராமன் தனக்குப்பதிலாகக்கொடுத்த பாதுகைகளைப் பரதன சிரஸாவஹித்து மனவருத்தத்துடன், கூடநிற்கும் ப்ரஜைகளைப்பார்த்து 'இத்தப் பாதுகைகளுக்கு வெண்கொத்தக்குடையும் சாமரங்களும் பிடிப்பீர்களாக. இவையே பூஜிக்கத்தகுந்த ராமனது பாதுகைகள். இந்த எனதண்ணனது பாதுகைகளாலேயே ராஜ்யத்தில் தர்மம் நிலைநின்றிருக்கும். எனதையன் ஸ்வர்கத்திலிருந்து என்னிடத்தில் இதை வைப்பாக வைத்தனன். ஆகையால் நான் அதற்காகவன் வரும்வரையில் இதைப் பாதுகாத்துவருவேன். ராமன் வந்தவுடன் சீக்ரமாக இந்தப் பாதுகைகளை அவனது பாதங்களுக்குள்ளே இட்டு அப்பாதுகைகளுடன்கூடிய அவனது பாதங்களைக் கண்ணுறக்காண்பேனாக. இந்த ராஜ்யபாரம் என்னிடம் வைப்பாக வைக்கப்பட்டிருக்கிற தாதையால் ராமன் வந்தவுடனே அவனிடன் கலந்து இப்பாரத்தைத்தப்பினியோடிருந்து அவனுக்குத் திருப்பிக்கொடுத்துத் தக்தைதக்குச் செய்வதுபோல் அவனுக்குச் சுச்ரூஷை செய்துகொண்டிருப்பேன். அங்ஙனம் ராமனுக்கு ப்ரதிநிதிகளாகிய இம்மேலான பாதுகைகளையும் ராஜ்யத்தையும் அயோத்யாபுரியையும் ராமனிடம் ஒப்புவித்து என்தாய் கைகேயியாலுண்டான அபகீர்த்தியைப் போக்கிக்கொள்வேனென்றனன். ராமன் பட்டாபிஷேகம் பெற்றிருக்கையில் அதுகண்டு ஜனங்கள் மயிர்க்கூச்சலுள்ள சரீரமுடையவர்களாகிக் களித்தபின்பு எனக்கு ராஜ்யத்தைத்தக்காட்டிலும் தன்குமடங்கு மேலானகீர்த்தியும் லாபகாரகமும் விசேஷமும். ஆகையால் இவையே வேண்டுமன்றி ராஜ்யமே வேண்டா' என்றனன். பெரும்புகழுடைய அந்தப் பரதன இங்ஙனம் புலம்பிக்கொண்டு மனக்கிளர்ச்சியினால் வருந்தி மயங்கி

டன் நந்திக்ராமத்தில் ராஜ்யம் நடத்திக்கொண்டிருந்தனன். வீரனும் ப்ரபுவுமாகிய அந்தப் பரதன் ஜடைகளையும் மரவுரியையும் தரித்து முனிவேஷத்தைக் கைப்பற்றி அப்பொழுது ஸைனிகளுடன நந்திக்ராமத்தில் வஸித்திருந்தனன். உடன்பிறந்தவரிடத்தில் ப்ரீதியுடையவனாகிய பரதன் ராமனது வரவை எதிர்பார்த்துக்கொண்டு அவனது ராஜ்ஞையின்படி நடந்து தன் ப்ரதிஜ்ஞையை ஈடேற்ற முயன்று ராமபாதுகைகளுக்கு அபிஷேகஞ்செய்வித்து அப்பொழுது நந்திக்ராமத்தில் வஸித்து ராஜசாஸனகளையெல்லாம் அந்தப் பாதுகைகளுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டிருந்தனன். அப்பொழுது அங்ஙனந்தச் செல்வக்குமாரன் அண்ணனது பாதுகைகளுக்கு அபிஷேகஞ்செய்வித்து எப்பொழுதும் அவைகளுக்கு ராஜ்யஞ்செய்து வந்தனன். ராஜ்யபரிபால்னகார்யமு மெதாயினும் நேரும்பொழுதும் எவராயினும் வஸ்த்ரம் புஷ்பம் முதலிய பெரியகாணிக்கைகளைக் கொண்டுவந்த பொழுதும் பரதன அவைகளை முதலில் பாதுகைகளுக்கு நிவேதனஞ்செய்து அதற்குப்பின்பு தான் ஸ்வீகரித்து நடத்தவேண்டியபடி கார்யங்களை நடத்திக்கொண்டுவந்தனன். நூற்றுப்பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் சித்ரகூடத்தைவிட்டு மற்றோராச்ரமத்திற்குப் போதல.

பரதன் புறப்பட்டுப் போனபின்பு ராமன் அந்தத் தபோவனத்திலேயே வஸித்திருந்து அங்குள்ள ரிஷிகள் பயப்பட்டு மற்றோராச்ரமத்திற்குப் போக விருப்பமுற்றிருப்பதை இவர்களதுஇங்கிதாதிகளால் கண்டறிந்தனன. முன்பு சித்ரகூடத்திலுள்ள ரிஷ்யாச்ரமத்தில் ராமனை மிகவும் அடுத்திருந்த ரிஷிகள் அனைவரும் அவ்வாச்ர

மத்தைவிட்டுப் போக விருப்பங்கொண்டிருப்பதை ராமன் டைகளால் ஊஹித்துத் தெரிந்துகொண்டனன். அவர் ள் சங்கைப்பட்டுக் கண்களாலும் புருவ நெறிப்புகளா யுமே ராமனை நிர்த்தேசித்து ஒருவர்க்கொருவர் மெதுவா க் காசகொசவென்று சொல்லி ராமனைக்குறித்து ஏறு யமாக என்னென்னவோ கதைகளைப் பேசிக்கொண்டி ந்தனர். ராமன், அவர்கள் அங்ஙனம் ஆரண்யத்தை வி நிப்போக விருப்பமுற்றிருப்பது கண்டு தன்னால் ஏதாயி அபாதம் நேரிட்டதோ வென்று சங்கித்துப் பிறகு யிரகிய நிஷியைப் பார்த்துக் கைகூப்பிக்கொண்டு யபாவரே! நிஷிகளுக்கு விகாரத்தை விளைக்கும் கெட்டகடவுக்கை இதற்குமுன்பு நான் ஏதா கடத்தக் கண்டீர்களில்லையன்று! ஆனால் இவர்க ளில்லோரும் விகாரமுற்றிருக்கிறார்களே! இதுவென்? ன்தம்பி லக்ஷ்மணன் தனக்குத்தகாத கார்யமேதாயி னும் மனஞ்சுத்தவறிச் செய்யப் புலப்படவில்லையன்று? ங்களுக்கும் சுப்ரஜையை செய்துகொண்டு எனக்கும் சுப் ணை தவறுதிருந்தின்ற என் பத்னியாகிய இந்த ஸீதை ங்களிடத்தில் நடத்தவேண்டிய நீதிப்படி நன்கு நடகக ல்லையா யென்ன?" என்று விணவினன். பிறகு வயதா னும் தவத்தாலும் முதிர்ந்திருக்கிற அத்தக்குலபதி கிழத் தன்மையால் நடுக்கமுற்று ப்ராணிகளிடத்தில் தயை மி தந்திருக்குந் தன்மையணுகிய ராமனைப்பார்த்து 'என்ன ப்பா! விதேஹராஜனது வயிற்றிற்பிறந்த ஸீதை மங்கல ஸ்பாவமுடையவள்; மங்களானுஷ்டானத்தில் மனஞ்சுத்த முடையவள். அப்படிப்பட்ட அவள் தர்மந்தவறுவது எங்ஙனே? அதிலும் விசேஷித்து நிஷிகள் விஷயத்தில் அங்ஙனந்தவறுவது எப்படி நேரிடும்? உன்னைப்பற்றி ரா க்ஷஸர்களால் நிஷிகளுக்கு உபத்ரவங்கள் உண்டாகின்ற

னை. அவைகளுக்கு பயப்பட்டு ரிஷிகள் ஓருவர்க்கொருவர் எகாந்தமாக ஏதோகதைகளைப் பேசிக்கொண்டிருக்கின்றனர். அவ்வுபத்ரவங்களைக் கேட்டபடியாக. எனனப்பனே! இங்கு ராவணனுடைய தம்பி காலனென்னும் ஓரு ராகஷஸனுண்டு. அவன் மிகவும் தீரமுடையவன். யுத்தத்தில் யாவரையும் வெல்லவல்லவன், க்ரூரன், ராமம்ஸங்களைப் பகஷிக்குந் தனமையன்; மிகுந்த கர்வங்கொண்டவன்; பாபஸ்வபாவன். இத்தன்மையருகிய அவன் ஜனஸ்தானத்தில் வாஸஞ்செய்யும் முனிவர்க ளனைவரையும் அடித்தோட்டின்றனன். இங்கு நீ வந்திருப்பதையும் பொறுக்கமுடியாதிருக்கின்றனன. எனனப்பனே! நீ இந்த ஆஸ்ரமத்திற்கு வருது எதுமுதல் வாஸஞ்செய்கிறாயோ, அதுமுதலாக ராகஷஸர்கள் முனிவரைப் பலவாறு பீடிக்கின்றனர். அந்த ராகஷஸர்கள் பார்த்தமாத்திரத்தில் ஜனங்களைப்படத்தக்கவையுருமாயிருபபவைகளும் பயத்தை விளைவிக்கவல்லவைகளும் பலவகைப்பட்டவைகளும் உலகத்தில் புலப்படும் உருவங்களைக்காட்டிலும் வேறு வேறனவைகளும் விகாரமான கண்களுடையவைகளுமாகிய தமது ருபங்களைக் காட்டி பயப்படுத்துகின்றனர். அவை ராக்கர்கள் முனிவர்களின் முன்னேவைத்து நின்று அவர்களில் சிலரை அமங்கலங்களும் அசுத்தங்களுமாகிய த்ரவ்யங்களில் விழுத்தன்னி மற்றுஞ்சிலரைப் பிடித்து அடிக்கின்றனர். அற்பபுத்திகளாகியராகஷஸர்கள் சிலர் அந்தந்த ஆஸ்ரமங்களில் தெரியாதபடி மறைத்திருந்து அங்குள்ள முனிவர்களை ஹிம்ஸித்துக்கொண்டு விளையாடுகின்றனர். ஹோமஞ்செய்யும்பொழுது வந்து ஸ்ருகபாத்ரம் முதலிய யாகத்திற்கு வேண்டியவஸ்துக்களை அப்புறம் எடுத்தெறிந்து யாகாக்னியை ஜலங்கொட்டியணைத்து ஜலகலசங்களை உடைத்துப் பொடியாக்குகின்றனர். ஆகையால் ரிஷி

களெல்லோரும் அந்த துஷ்டர்கள் ஸஞ்சரிக்கும்படியான இவ்வாப்ரமங்களை விட்டு வேறிடத்திற்குப் போகவேண்டுமென்று இப்பொழுது என்னைத் தூண்டுகின்றனர். ராமா! துஷ்டர்களாகிய அந்த ராக்ஷஸர்கள் முனிவர்களுக்குச் சரீரஹிம்ஸையையும் செய்வார்கள். ஆகையால் இவ்வாப்ரமத்தை விட்டுப்போகின்றனம். இவ்விடத்திற்கு வெகு தூரத்தில் காய்கிழங்குகள் ஏராளமாயிருக்கப்பெற்ற ஓர் விசித்ரமான வனமிருக்கின்றது. அங்கு காங்கள் முன்னேவஸித்திருந்த ஆப்ரமம் இருக்கின்றது. காணும் மற்றுமுள்ள ரிஷிக்கூட்டமும மீளவும் அவ்விடத்திற்குப் போகின்றனம். அப்பனே! இங்கிருப்பாயாயின், கரன் உனக்கும் ஏதாவது கெடுதலைச்செய்வான். உனக்கு அபிப்ராயம் உண்டாயின் நீயும் எங்களோடுகூட இவ்விடத்தினின்றும் புறப்பட்டு வருவாயாக. நீ இருப்பிடத்தில் நித்யம்ஸக்காஹத்துடனிருந்தபோதிலும் ஸமர்த்தனையினும் இப்பொழுது இங்குப் பார்யையுடன் வாஸஞ்செய்கையால் உனக்கு நித்யம் என்னுண்டாகுமோ வென்று ஸந்தேஹமாயிருக்கின்றது. ஆகையால் நீ இங்கு வாஸஞ்செய்வது துக்கத்திற் கிடமாகவே யிருக்கின்றது' என்றனர். ராஜகுமாரனுகிய ராமன், ப்ரயாணமாய்ப்போக ஸித்தமாயிருக்கிற அத்தக்குலபதியைப் பார்த்து 'நானிருக்கும்பொழுது உங்களுக்குப் பயமேன்? நானே சற்றிலுங்காத்துக்கொண்டிருந்து உங்களை ரக்ஷிக்கிறேன்' என்று இதுமுதலிய பலஉத்தரங்களைச் சொல்லி அவரைத்தடுக்கப் பேராவலுடன் முயன்றும் வல்லமுடிவில்லை. அக்குலபதி ராமனைப்பற்றிஸந்தோஷித்து ஸமாதானங்களைச் சொல்லி ஒப்புவித்து அனுமதி பெற்றுக்கொண்டு தன்னைச்சேர்ந்த ரிஷிஸமூஹத்துடன் அவ்வாப்ரமத்தைவிட்டுப்போயினர். ராமன் அந்தரிஷிஸமூஹத்துடன் கொஞ்சதூரம் அங்கிரு

ந்து பின்சென்று வழிவிட்டனுப்பிக் குலபதிக்கு கமஸ்கா ரஞ்செய்து அகதரிஷிகள் மிகுந்தப்ரீதியுடன உபதேசித்த விஷயங்களைச் சிரஸாவஹித்து விடை பெற்றுக்கொண் டு பரிசுத்தமாகிய தனது பர்ணசாலையில் வாஸஞ்செய்யப் போயினன். ராமன் ரிஷிகளில்லாமையால் அவ்வாச்ரமத் தை உடனே விட்டுத் துறக்கவேண்டியதாயிருந்தும் அம் முனிவரிடத்திலுள்ள ப்ரீதியைப்பற்றி அவர்கள் வஸித் திருந்த இடமென்று அதை ஒருகாடிப்பொழுதும் விடா திருந்தனன். ராமன் ரிஷிகளைப்போல் கடந்தகடவடிக்கை யைப்பார்த்து ரிஷிகளும் தாங்கள் அவ்வண்ணம் குண லம்ருத்தி யுண்டாகப்பெற்ற அந்தராகவனே அனுஸ ரித்திருந்தார் களாகையால் அவர்களிடத்தில் அந்தராம னும் தான் மிகவும் ப்ரீதி உண்டாகப்பெற்று அவர்கள்வர லஞ்செய்த இடமாகையால அதை க்ஷணகாலமும் பிரியா திருந்தனன். நூற்றுப்பதிநேழுவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் அத்ரியிருஷ்ரமத்தில ப்ரவேசித்தல்.

அந்த ரிஷிகளெலலோரும் போனபின்பு ராமன் ஆ லோசனைசெயது பலகாரணங்களைபற்றி அப்பொழுது அ வ்வாச்ரமத்தில் வாஸஞசெய்ய விருபபமுறுதிருந்தனன. அந்தராகவன, 'நான் இந்த ஆச்ரமத்தில்தானே பர தனையும் பட்டணத்து ஜனங்களையும எனது தாயமார்களை யும் கண்டனன. அவர்களைக்குறித்து நித்யமும் துக்கித்து கொண்டே யிருக்கின்றனன். மேலுமம, அவர்கள் வந்தி ருந்த இத்தப்ரதேசமோ அவர்களை என் நினைவில மேன் மேலும் மூட்டிவித்து என்னை பாதித்துகொண்டேயிரு க்கும். மஹாநுபாவனகிய அந்தப்பரதனது ஸைன்யம் இ ங்கிறங்கி யிருந்ததாகையால் யானை குதிரைகளின கரீஷ ங்களால் ஆச்ரமமெல்லாம் பாழாயிருக்கினறது. ஆகை

யால் இதைவிட்டு வேறு இடம் போகிறேன்' என்று சொல்லி த்து ஸீதாலக்ஷ்மணர்களுடன் ப்ரயாணமாய்ப் போயினன். பெரும்புகழுடைய அந்த ராகவன் அக்நிமுதலியன ஆச்ரமத்திற்குச் சென்று அவரை நமஸ்கரித்தனன். அம்முனிவரும் ராமனைத் தன்குமாரனைப்போல் பாராட்டினர். அம்முனிவரால் ராமனுக்குத்தானே அதிதி ஸத்காரமும் பிருந்த கௌரவத்துடன்செய்து லக்ஷ்மணனையும் மைதிலியாகிய ஸீதையையும் இனியவசனங்களால் ஆதரித்தனர். தர்மங்களை உணர்ந்தவரும் லோகப்ராணிகளுக்கும் ஹிதஞ்செய்பவருமாகிய அம்முனிவர் ஸகலஜனங்களாலும் பூஜிக்கப்பட்டவரும் வயதுசென்ற வருமாகிய தன்பத்னி அருகிலிருக்க அவளையும் அழைத்து அவளுக்தானுமாக அந்த ஸீதாராம லக்ஷ்மணர்களை இனிய உரைகளால் ஆதரித்தனர். அந்த நிவேசநத்திலிருந்த ஸீதையைப்பார்த்து 'அனலஸூயை பிருந்த மாஹாத்ம்ய முடையவள்; பெருந்தவமுடையவள்; தர்மானுஷ்டானத்தில் நிலைகின்றவள்; ஆகையால் அவளுக்கு நமஸ்காரஞ் செய்வாய்' என்றனர். மேலும் அம்முனிவர் தர்மங்களைக் குறைவற அநுஷ்டிக்குந் தன்மையளாகிய அந்தத் தாபஸியைக்குறித்து ராமனைப்பார்த்து 'ராகவனே! இவ்வனஸூயை முன்பு பத்து ஸம்வத்ஸரங்கள் மழையில்லாமல் மஹாகோரமாய் உண்டாகி உலகமெல்லாம் இடைவிடாமல் எரிந்து போய்க்கொண்டிருக்கையில், நிவிருக்குக் காய்கிழங்குகளை ஸ்ருஷ்டித்துக் கங்காநதியையும் ப்ரவஹிக்கும்படிக்குச் செய்தனள். இவள் தபோமயமான தவத்துடன்கூடி ஸகல நியமங்களாலும் மலங்காரமுற்றவள். இவள் பத்தாயிரம் ஸம்வத்ஸரங்கள் பெருந்தபஸ் செய்தவள். க்ருச்ரம் சாந்த்ராயணம் முதலிய பல வ்ரதங்களை ஆசரித்து ஸ்நானஞ் செய்தவள்; நிவிருக்குத்தே

நிங்க் தபோவிக்னங்களை யெல்லாம் போகசினவள்; முன்பு ஒருகாலத்தில் தேவகார்யத்தின் பொருட்டு த்வரைப்பட்டு ப்பத்து ராத்ரிகளை ஒரு ராத்ரியாகச் செய்தனள். இவளைத் தாயைப்போல் கௌரவிப்பாயாக. உனக்கு நன்மை உண்டாகும். பிறர்க்கு நன்மையை விளக்குங் கார்யங்களைச் செய்யுந் தன்மையளாகையால் அஸூயையற்றிருப்பதுபற்றியும் இதரஸ்த்ரீகளுக்கு அசக்யமான இவளது பாதிவ்ரத்ய கர்மங்களைப் பார்த்து இவளுக்கே தகுமென்று வியப்புற்றுப் பிறர் அஸூயைப்படத் தகாதவளாயிருப்பதுபற்றியும் அனஸூயையென்று ப்ரஸித்தியடைந்தனள். ஸமஸ்தப்ராணிகளும் நமஸ்கரிக்கத் தகுந்தவள்; பெரும் புகழுடையவள்; வயது முதிர்ந்தவள்; கோபமற்றிருப்பவள்.இப்படிப்பட்ட அனஸூயைக்கு ஸீதை நமஸ்காரஞ் செய்வாளாக' என்றனர். அம்முனிவர் அங்ஙனஞ் சொலலிக் கொண்டிருக்கையில், ராமன் கேட்டு அப்படியே யென்று தர்மங்களை யறிந்த ஸீதையைப் பார்த்துச் சிறந்த வுரைகளுடன் 'ராஜபுத்ரீ! இம்முனிவர் மொழிந்த வார்த்தையைக் கேட்டனை யல்லவா. ஆகையால் உனது நன்மைக்காகச் சீக்ரமாகத் தவம் பொருந்திய மஹாநுபாவையாகிய இந்த அனஸூயையை வணங்குவாயாக' என்றனன். ஸீதையும் தன்மேன்மையை விரும்புகின்ற ஸ்ரீராகவன் மொழிந்த அவ்வுரைகளைக கேட்டு தர்மஜ்ஞையாகிய அவ்வத்ரி மஹர்ஷியின் பார்யைக்கு ப்ரதக்ஷிணஞ் செய்தனள். கட்டுக்குலைந்து மடிப்புற்ற சரீரமுடையவளும் வயது சென்றவளும் கிழத்தனம் மேலெழுகையால் தலைமயிர்களெல்லாம் நரைத்திருக்கப் பெற்றவளும் பெருங்காற்றிலகப்பட்ட வாழைமரம்போல் ஓயாமல் நடுக்கமுற்றவளும் மஹாநுபாவையும் பதிவ்ரதையுமாகிய அனஸூயைக்கு ஸீதை தன் பேரைச் சொல்லிக்கொண்டே நமஸ்காரஞ்

செய்தனள். நிந்தைக் கிடமல்லாத அந்தத் தாபஸிக்கு ஸீதை நமஸ்காரஞ் செய்து மிகுந்த ஸந்தோஷத்துடன் கைகூப்பிக்கொண்டு 'உமக்கு ஆரோக்யமா' என்று விணவினள். அனந்தரம் அனஸூயை மஹாபாக்யவதியும் பரமதர்மிஷ்டையுமாகிய ஸீதையைப் பார்த்து மிகுந்த ஸந்தோஷத்துடன் ம்ருதுவும் இனிதுமாகிய கல்வார்த்தைகளால் ஸமாதானப்படுத்திகொண்டு 'நீ செய்த பாக்யத்தினல் பாதிவ்ரத்ய தர்மத்தை மனஒக்கத்துடன் கைப்பற்றி நடத்துகின்றனை. ஸீதே! பந்து ஜனங்களையும் அரண்மனை வாசத்தையும் ஐச்வர்யத்தையும் விட்டு, பதிணன்கு ஸம்வத்ஸரங்கள் அரண்யத்தில் வஸிக்கும்படி தகப்பனல் நியமிக்கப்பட்ட ராமனைப் பின்தொடர்ந்து வந்திருக்கின்றனையே! இது உன் பாக்யமே. எந்த ஸ்த்ரீகள் பர்த்தா நகரத்திலிருப்பினும் அரண்யத்திலிருப்பினும் தனித்தனியிலும் பாபிஷ்டனையினும் கைவிடாமல் அவனிடத்தில் ப்ரீதி உண்டாகப் பெற்றிருப்பரோ, அவர்க்குச் சிறந்த லோகங்கள் நேரிடும். துஷ்டஸ்வபாவனையினும் இஷ்டப்படி நடப்பவனையினும் பணமில்லாதவனையினும் சிறந்த ஸ்வபாவமுடைய மாதர்களுக்குப் பர்த்தாவே பரம தெய்வதம். விதேஹராஜன் புதல்வியே! நான் எவ்வளவு ஆலோசித்துப் பார்க்கிலும் பர்த்தாவைக்காட்டிலும் பெருந் தவம்போல் அழிவினறி யிருந்து ஸ்வாவஸ்தைகளிலும் காக்கும்படியான பந்து எவனும் எனக்குத் தோற்றவில்லை. மன்மதனுக்குட்பட்ட மனமுடையவர்களும் பர்த்தாக்களைத் தங்கீழடக்கி இஷ்டப்படி நடப்பவர்களும் பரபுருஷனை விரும்பித் திரிவோர்களுமாகிய துஷ்டஸ்த்ரீகளுக்கு இந்த குணதோஷம் தெரிகிறதில்லை. அங்ஙனம் காமபாதீனகளாகித் துஷ்டகார்யங்களுக்குட்பட்டு நடக்கும் ஸ்த்ரீகள் இவ்வுலகத்தில் அபகீர்த்தியைப் பெற்றுப் பரலோகத்தை இ

முதலவர்களாகி நரகத்தில் விழுவார்கள். உலகத்தில் கல்லனவ கெட்டனவகளை யறிந்த உனனைப்போனற குணம் பொருந்திய உத்தம ஸ்த்ரீகள் ஸ்வர்க்கஞ் சென்று விளையாடிகொண் டிருபபார்கள். ஆகையால் நீ இப்பொழுது போலவே என்றுமபர்த்தாவை யனுஸரித்திருக்கும் நியமத்தை யுடையவளாகிப் பதிவ்ரதைகளின் ஏற்பாட்டை யனுஸரித்துப் பர்த்தாவோடு தர்மத்தை ஆசரித்து வருவாயாக. அதனால கீர்த்தியையும் தர்மத்தையும் நீ பெறுவாய்' எனறனள். நூற்றுப்பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

வீதை, அனஸூயை உபதேசித்த பாதிவ்ரத்ய தர்மததைக் கேட்டு ஆநந்திததுத் தன் ஸ்வயம்வரதைத அவளுகக்குக கூறுதல.

அனஸூயை இங்ஙனஞ் சொன்னதக கேட்டு ஸீதை அனஸூயை யற்றவளாகையால் அவை யெல்லாவற்றையும் குணமாக மனத்திற் கொண்டு அவளை மேன்மைப்படுத்தி மெதுவான உரைகளுடன் அவளை நோக்கி 'பூஜிக்கத தகுந்த நீர் எனக்கு இங்ஙனஞ் சொல்லுவது ஆசசர்யமன்று. ஸ்த்ரீக்குப் பதியே குருவென்பது எனக்குத் தெரிந்த விஷயமே. பூஜிக்கத் தகுந்தவளே! முருக்கால் என் பர்த்தா நன்னடத்தை யற்றவனாயிருப்பினும், கான் கலலவனென றும் கெட்டவனென்றும் பேதம் பாராட்டாமல் அவனுகக உபசாரஞ் செய்யவேண்டியவளே. அப்படியிருக்க, குணங்களில் புகழ்பெற்று தயாளுவும் நிதேதகத்தியனுமாகி என்னிடத்தில் நிலகின்ற ப்ரீதியுடையவனும் தாமஸ்வபாவனும் தாயைப் போல் ப்ரியஞ் செய்பவனும் தகபபனபோல மேன்மேலென ஹிதஙகளை கடத்துப

வணும் ப்ரீதிக் கிடமுமாகிய பர்த்தாவைப் பணிவதற்குச் சொல்ல வேண்டுமோ? மஹாபலஞ்கிய ராமன் கௌஸல்யையிடத்தில் எப்படி யிருப்பானே, அப்படியே மஹாராஜருடைய மற்றை ஸ்த்ரீகளிடத்திலும் இருப்பான். தன் தாயிடத்தில் மிகுந்த ப்ரீதி யுடையவனும் தர்மங்களை யுணர்ந்தவனுமாகிய அவ்வீரன், தன் தந்தையாகிய மஹாராஜர் ஒருங்கால் கண்ணுற்கண்ட ஸ்த்ரீகளுக்குங் கூடத் தாய்க்குப் போல் சுச்ரூஷை செய்பவன். தான பயங்கரமாகி ஜனஸஞ்சாரமில்லாத வனத்திற்கு வரும்பொழுது எனக்கு என் மாமியாரான கௌஸல்யையும் பாதிவ்ரத்யத்தைக் குறித்து உபதேசித்தனள். அதை மனத்திலேயே விடாமல் நிறுத்திக்கொண்டிருக்கின்றனன். முன்பு என் விவாஹகாலத்தில் அக்னியின முன்னிலையில் என் தாய் பாதிவ்ரத்யோபதேசத்தால் என்னைத் திருத்தி யிருக்கின்றனள். அதையும் மறக்காமல் மனத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றனன். தர்மங்களை யாசரிக்குந் தன்மையரே! நீர் சொன்ன வாக்யங்களால் அவை யெல்லாம் புதிதாக என்னிலினவில் மெருகிட்டாற்போ லாயின. ஸ்த்ரீக்குப் பதிசுச்ரூஷையைக் காட்டிலும் வேறொரு தர்மஸித்தி யில்லை. ஸாவித்ரீதேவி பதிசுச்ரூஷைசெய்து ஸ்வர்க்கத்திலும் மேன்மைபுற்றிருக்கின்றனள். ரோஹிணியும் அப்படியே பதிசுச்ரூஷை செய்கையால் ஸ்வர்க்கத்தை அடையப்போகிறாளென்பது நிச்சயம். ஸமஸ்த ஸ்த்ரீகளிலும் உத்தமையான ரோஹிணீதேவி ஆகாயத்தில் நின்று பொழுதாயிலும் சந்த்ரனைப் பிரிந்து புலப்படுகிறதில்லை. மேலும் பல புண்ய ஸ்த்ரீகள் அங்ஙனந் திடமான பாதிவ்ரத்யத்தை எப்படிப்பட்ட ஸங்கடத்திலும் தவறாமல் அனுஷ்டித்துத் தமது புண்யகர்மங்களால் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்படுகின்றார்கள்' என்றனள். பிறகு அனஸூயையும் ஸீதை மஹா

ழிந்த வார்த்தையைக் கேட்டுப் பரமஸந்தோஷமடைந்து அவள் மனக்களிப்புறும்படி உச்சிமோந்து 'பரிசுத்தமான புன்னகையுடையவளே! பலவகை நியமங்களைச் செய்து கடத்தினதவம் மிகவும் எனக்கு இருக்கின்றது. அந்தத் தபோபலத்தைப் பற்றி நீ விரும்பியவற்றைக் கொடுக்கவல்லவளாயிருக்கின்றேன். உன்னை, எதாவது வரங்கேட்கும்படி வேண்டுகின்றனன் மைதிலீ! உன் வார்த்தை, பொருந்தியதும் அழகியதுமாயிருக்கின்றது. அதைக்கேட்டு எனக்கு மிகவும் ஸந்தோஷமாயிருக்கின்றது. உனக்குத் தகுந்தது எது? நான் எது செய்யவேண்டும்?" என்று விளவினள். ஸீதையும் அனஸூயையின் வார்த்தையைக் கேட்டு ஆச்சர்யப்பட்டுப் புன்னகை முகத்தில் விளங்கப் பெற்று அவளைப் பார்த்து 'இந்த வார்த்தையே போதுமானது. நான் விரும்பியதை யெல்லாம் செய்தாற் போலவே' என்றனள். தர்மங்களை யறிந்த அந்த அனஸூயை, ஸீதை அங்ஙனஞ் சொல்லுகையில் மேன்மேலும் ஸந்தோஷமுற்று 'ஸந்தோஷம். உன்னிடத்தில் எனக்குண்டான இந்த ஸந்தோஷத்தை ஸபலமாக்கவேண்டும். ஸீதை! இதோ திவ்யமான பூமாலைகளும் ஆடையாபரணங்களும் குங்குமம் சந்தனம் முதலிய அங்கராகங்களும் கஸ்தூரி முதலிய பரிமளங்கள் சேர்ந்த அனுலேபனங்களும் இருக்கின்றன. ஸீதை! நான் கொடுக்கிற இந்தப் பூமாலை முதலியவை உனது அவயவங்களை விளங்கச் செய்யும். இவை உனக்குத் தகுந்தவை. மேலும் இவை என்றும் அழகுமாறாமல் விளங்கும். ஜனகராஜன் குமாரத்தியே! நீ திவ்யமான இவ் வங்கராகத்தைப் பூசிக்கொண்டு லக்ஷ்மீதேவி அழிவில்லாத ஸ்ரீமஹாவிஷ்ணுவை ஆநந்தப்படுத்துவதுபோல் உன் பர்த்தாவுக்கு மிகவும் மனக்களிப்பை விளைப்பாயாக' என்றனள். ஸீதை அங்ஙனம் அனஸூயையால் ப்ரீதியுடன்

கொடுக்கப்பட்ட மேலான வஸ்த்ரங்களையும் அங்கராகத்தையும் ஆபரணங்களையும் பூமாலைகளையும் வாங்கிக்கொண்டனள். அனந்தரம் பெரும்புகழுடையளாகிய ஸீதையும், அனஸூயையை ப்ரீதியுடன் கொடுத்த வஸ்த்ராதிகளை அங்கீகரித்துக் கைகூப்பிக்கொண்டு அவளைப் பணிக்கிருந்தனள். வ்ரதங்களில் திடமான மனவுக்கமுடைய அனஸூயை அங்ஙனம் தன்னைப் பணிகின்ற ஸீதையைப் பார்த்து இனிய கதையைப் பேசத் தொடங்கி இங்ஙனம் விளவத் தொடங்கினள். 'ஸீதே! பெரும்புகழுகிய ராமன் உன்னை ஸ்வயம்வரத்தில் பெற்றானல்லவா. இத்தலைக்கு எனக்குக் கேள்வியுண்டு. மைதிலீ! அக்கதையெல்லாம் ஸவிஸ்தாரமாகக் கேட்க விரும்புகின்றனன். ஆகையால் கடந்தபடியே அதையெல்லாம் எனக்குச் சொல்லவேண்டும்' என்றனள். அனஸூயை இங்ஙனம் விளவுகையில் ஸீதை தர்மசாரிணியாகிய அவளைப் பார்த்து 'கேளீர்' என்றுரைத்து 'வீரரும் தர்மஜ்ஞருமாகிய மிதிலாதிபதி ஜனகனென்பவர் க்ஷத்ரியதர்மத்தின்படி ந்யாயந் தவறுமல் பூமியைப் பரிபாலித்து வந்தனர். அம்மன்னவர் கலப்பையைக் கொண்டு யாகத்தின் பொருட்டான க்ஷேத்ரத்தைச் சீர்திருத்துவதற்காக உழுதுகொண்டிருக்கையில் பூமியைப் பிளந்துகொண்டு நான் பிறந்து அம்மன்னவர்க்குப் புதல்வியாயினன். அப்பொழுது யாகமந்த்ரப்படி ஓஷதியின் விதைகளைப் பிடிப்பிடியாக எடுத்து விதைத்துக்கொண்டிருக்கிற அம் மன்னவர் புழுதிபடிந்த புன்மேனியளாகி மேல் தோன்றியிருக்கிற என்னைப் பார்த்து மிகவும் வியப்புற்றனர். அனந்தரம் அவ்வரசர் பிள்ளையில்லாதவராகையாலும் புத்ர ஸ்னேஹத்தினாலும் என்னை மடிமேலிட்டுத் தன் புதல்வியென்று சொல்லிக்கொண்டு என்னிடத்தில் மிகுந்த ஸ்னேஹத்தை வைத்தனர். அப்பொ

ழுது ஆகாயத்திலும் 'மன்னவனே! இது வாஸ்தவம். இச்சிறியவள் தர்மத்தின்படி உன் குமாரத்தியே ஆகின்றனள்' என்னும் அமானுஷ வாக்குச் செவிப்பட்டது. அனந்தரம் தர்மஸ்வபாவராகிய என் தந்தை மஹாராஜர் ஆகாசவாணியைக் கேட்டு ஸந்தோஷித்து என்னை எடுத்துக்கொண்டு பெரும் க்ஷேமத்தைப் பெற்றனர். புண்ய சீலராகிய அம்மன்னவர் தன் ஸுதத்தபார்யை பிள்ளை வேண்டுமென்றுசைப்பட்டுக் கொண்டிருந்தாளாகையால் என்னை கொண்டுபோய் அவளிடங் கொடுத்தனர். அவளும் தாயைப்போலவே ஸ்னேஹத்துடன் என்னைப் போஷித்து வந்தனள். பிறகு என்தந்தை எனக்குப் பர்த்தாவை வரிக்கவேண்டும் வயது வந்ததைக் கண்டு மனத்தில் சிந்தையுற்றுப் பணத்தை யிழந்த தரித்ரன்போல் வருத்தமுற்றனர். உலகத்தில் பெண்ணைப்பெற்ற தந்தை தேவேந்த்ரனைப் போன்றவனுயினும் தனக்குச் சரியானவரிடத்தினின்றும் தாழ்ந்தவரிடத்தினின்றும் திரஸ்காரம் பெறுவான். அம்மனனவர் அந்தத்திரஸ்காரம் தனக்கு இனிச் சீக்ரத்திலேயே உண்டாகுமென்று தெரிந்து கொண்டு துக்கஸமுத்ரத்தில் வீழ்ந்தது தெப்பமில்லாதவன் ஸமுத்ரத்தின்கரை சேரவல்லவனுகாததுபோல் அவவருத்தமென்னும் ஸமுத்ரத்தின் கரையைச் சேராதிருந்தனர். அம்மன்னவர், நான் அயோனிஜையாயிருப்பதை நினைத்து நினைத்து எவ்வளவு ஆலோசித்தும் எனக்குத் தகுந்த பர்த்தாவைத்தேட வல்லராகவில்லை. இங்ஙனம் ஓயாமல் ஆலோசித்துக் கொண்டிருக்கையில், புத்தியில் மிகுதனராகிய அவர்க்கு 'என் குமாரத்திக்கு ஸ்வயம்வரம் நடத்தலாம்' எனனும் புத்தி உண்டாயிற்று. முன்பு மஹாயஜ்ஞத்தில் தேவதைகள் ஸந்தோஷித்து வேண்டிகொள்கையில் வருணன் ஜனகருக்கு உத்தமமான தனுஸ்ஸையும்

அழியாத பாணங்களையுடைய அம்புராத்தூணிகளையும் கொடுத்திருந்தனன். அவவில்லு மிகுந்த பருவும் உறப் புழுடைய தாகையால ஸாதாரணமனுஷ்யர்களுக்கு எவ வளவு கஷ்டப்பட்டபோதிலும் அதை அசைக்கவும்கூடச் சக்யமல்லாதிருந்தது. ஆகையால் அரசர்கள ஸ்வப்னத் திலாயினும் அதை வளைத்து நாணேற்ற வல்லராகவில்லை. அனந்தரம் ஸத்யவாதியாகிய என்றதனை அரசர்களெல் லோரையும் வரவழைத்து அவர்கள் கூட்டத்திடையில அவவில்லைக் காட்டி 'எவன இவ்வில்லை மேலெடுத்து நா ணேற்றுவானோ அவனுக்கு என்புதல்வி பார்யையாவாள். இதற்கு ஸந்தேஹமில்லை' என்றனர். ராஜாகளெலலோ ரும் உருவத்தில பர்வதம்போன்ற அவவில்லைப்பார்த்து அதை மேலதூக்கவும் முடியாமல் நமஸ்காரஞ்செய்து போயினர். அனந்தரம் வெகுகாலம் கடந்தபின்பு மஹா காந்தியுடன விளங்கும் உண்மையான பராக்ரமமுடைய இந்த ராமன், தன் தம்பியாகிய லக்ஷ்மணனுடன் விச்வா மித்ரரை முனனிட்டுக்கொண்டு யாகம்பார்க்க வந்தனன். தர்மஸ்டாவராகிய விச்வாமித்ரரும் என்றதனையால பூஜி க்கப்பட்டு அனைப்பார்த்து 'அண்ணனுக் தம்பியுமாகிய இந்த ராமலக்ஷ்மணர்களிருவரும் தசரதசக்ரவர்த்தியின குமாரர்கள். உன்னிடமிருக்குந் தனுஸ்ஸைப்பார்க்க விரு ம்புகின்றனர். உனக்கு தேவதைகள் கொடுத்த அந்த வி ல்லை ராஜகுமாரனகிய இந்த ராமனுக்குக் காட்டுவாயாக' என்றனர். ஜனகரும் அந்த ப்ராஹ்மணரது வார்த்தை யைக் கேட்டு அவ்வில்லை வரவழைத்துக் காட்டினர். ரா மன் மிகுந்த வீர்யமுடையவ னகையால் ஒருநிமிஷப் பொ ழுதிலேயே மஹாஸாரம்பொருந்திய அவ்வில்லை வளைத்து நாண்கயிற்றை ஏற்றிப் பூரித்தனன். ராமன் அங்ஙனம் பூரி த்து நிற்கையில் அந்த தனுஸ்ஸு வேகம் பொறுக்காமல்

இரண்டாகப் பிளந்தது. அதனுல் இடிவீழ்ந்தாற்போல் பயங்கரமான ஓரொலி உண்டாயிற்று. அந்த ஸத்யப்ரதிஜ்ஞராகிய எனதந்தை எனனை ராமனுக்குக் கொடுப்பதாக நிச்சயித்து ஜலகலசத்தை எடுத்துக்கொண்டனர். அப்பொழுது ஜனகர் என்னை ராமனுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கப புகுகையில்' அயோத்யாதிபதியும் தனக்குப்ரபுவும் தந்தையுமாகிய தசரதனுடைய அபிப்ராயந் தெரியாமல் தான அங்கீகரிக்கமாட்டேன்' எனறு ராகவனமொழிந்தனன. அனந்தரம் என் தந்தை வ்ருத்தராகிய என் மாமனர் தசரதமஹாராஜனை வரவழைத்து ஆத்மஜ்ஞனகிய ராமனுக்குளனனைக் கொடுத்தனர். இதுவேயன்றி, பதிவ்ரதையும் இனிய காட்சியுடையவளரும் என் தங்கையுமாகிய ஊர்மிளையை லக்ஷ்மணனுக்குப் பார்யையாகக் கொடுத்தனர். அப்பொழுது அந்த ஸ்வயம்வரத்தில் இவ்விதமாக தான் ராமனுக்குக் கொடுக்கப்பட்டனன். தான் பராக்ரமசாலிகளில் தலைவனகிய என் பர்த்தாவிடத்தில் தர்மத்தின்படி அனுராகமுண்டாகப் பெற்றிருக்கின்றேன' என்றனள். நூற்றுப்பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ராமன் அன்றிரவு அம்முனிவரது ஆச்ரமத
திலிருந்து விடியற்காலத்தில அப்பொ
ழுது செய்யவேண்டிய சடங்குகளைத்
தீர்த்துககொணடு தண்டகாரணயத்
திறகு ப்ரயாணமாய்ப் போதல்.

தர்மங்களையறிந்த அனஸூயையை அந்தப் பெருங்கதை முழுவதையுங் கேட்டு ஸீதையை உச்சிமோகத்துக் கைகளால அணைத்துக் கட்டிக் கொண்டு அவளை நோக்கி அகூரங்களும் பதங்களும் ஸ்பஷ்டமாக வியப்புறுவிக்கவல்ல இனிய உரைகளைக் கூறினை. ஸ்வயம்வரத்தையும் நடந்தபடி

முழுவதும் கேட்டனன். மதுரமாகப் பேசுந்தன்மையளே! உன் கதையைக் கேட்டு நான் மிகவும் ஸந்தோஷிக்கின்றனன். பேரொளியணுகிய ஸூர்யன் இரவு கிட்டப்பெற்று அஸ்தமித்தனன். ஆஹாரத்திற்காகப் பக்ஷிகள் பகலெல்லாம் திரிந்து ஸந்த்யாகாலத்தில் நித்ரிக்கும்பொருட்டு வ்ருக்ஷங்களில் அடங்கிக் கலகலவென்று செய்யும் த்வனி செவிப்படுகின்றது. இதோ இம்முனிவர்கள் ஸாயங்காலஸ்நானஞ்செய்து நனைந்து ஜலகலசங்களை எடுத்துக்கொண்டு நீரில் நனைந்த மரவுரிகளுடன் குவியற்குவியலாக வருகின்றனர்! ரிஷிகள் அக்னியை வளர்த்தி விதிப்படி ஹோமங்களைச் செய்கையில் புகையின் கண்டம்போல் கொஞ்சம் சிவந்திருக்கின்ற தூமமானது காற்றால் கலைக்கப்பட்டுப் புலப்படுகின்றது. திசைகள் ஸ்பஷ்டமாகத் தெரியாதிருக்கின்றன. ஆகையால் இவ்விடத்திற்கு தூரத்திலிருக்கிற இலையுதிர்த்த வ்ருக்ஷங்களும் இலைகளடர்ந்தாற் போலவும் அருகிலிருப்பன போலவும் புலப்படுகின்றன. இரவில் திரியும் ஜந்துக்கள் காற்புறமும் திரியத் தொடங்குகின்றன. இந்தத் தபோவனத்திலுள்ள ம்ருகங்களும் அக்னிவேதிகளின் ஓரங்களில் படுக்கின்றனபார். ஸீதே! ராத்ரியும் நக்ஷத்ரங்கள் விளங்கப் பெற்று வளர்ந்து வந்தது. சந்த்ரனும் உதயமாகி நிலவென்னும் போர்வையைப் போர்த்துக்கொண்டு ஆகாயத்தில் புலப்படுகின்றனன். ஆகையால் நீ இனிப்போய் ராமனுடன் கூடி இருப்பாயாக. நான் அனுமதி கொடுக்கின்றேன். நீ இனிதாகக் கதைகள் சொல்லக்கேட்டு நான் மிகவும் ஸந்தோஷமுற்றனன். ஸீதே! நீ என் கண்முன்னமே அலங்காரஞ் செய்துகொள்வாயாக. திவ்யாலங்காரங்களால் அழகு விளங்கப் பெற்று எனக்கு மனக்களிப்பை விளைப்பாயாக' என்றனள். தேவகன்னிகைபோல் ஸீதையும் அப்படி

யே கன்கு அலங்காரஞ் செய்துகொண்டி அவ்வனஸ்திரியை க்கு ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து ராமனிடம் போயினள். பேசுபவர்களில் வல்லவனுகிய ராமனும் அங்ஙனம் அலங்கரித்துக்கொண்டுவந்த ஸீதையைப் பார்த்து அந்தத் தாபஸி செய்த ப்ரீதிதானத்திற்கு ரிகவும் ஸந்தோஷித்தனன். பிறகு ஸீதாதேவி, தபஸ்வினியாகிய அனஸ-யை தனக்கு ப்ரீதியுடன் ஆடையாபரணங்களையும் புஷ்பமாலைகளையுங் கொடுத்தது முதலான வருத்தாந்தத்தை யெல்லாம் ராமனுக்குத் தெரிவித்தனள். மனிதர்களில் எவர்க்கும் பெறக்கூடாத ஸத்காரம் ஸீதைக்குண்டானது கண்டு ராமனும் மஹாராதனுகிய லக்ஷ்மணனும் மிகவும் ஸந்தோஷித்தனர். அனந்தரம் சந்த்ரனைப் போன்ற முகமுடைய ராகவன் தபஸ்ஸித்தியுடைய ரிஷிகளால் பூஜிக்கப்பட்டுப் பெரும் ப்ரீதியுடன் பரிசுத்தமாகிய அன்றிரவெல்லாம் அங்கே யிருந்தனன். அன்றிரவு கீடந்தபின்பு விடியற்காலத்தில் ஸ்நானஞ் செய்து ஹோமாதிகளை நிறைவேற்றிக் கொள்கையில் புருஷச்ரேஷ்டர்களாகிய ராமலக்ஷ்மணர்கள் அவர்களிடஞ் சென்று 'போய் வருகிறோம்' என்றனர். தர்மாநுஷ்டானத்தில் கிலேசின்றவர்களும் வனசாரிகளுமாகிய அம் முனிவர்கள் புகுத ராமலக்ஷ்மணர்களைப் பார்த்து அவ்வனத்திலுண்டாகும் ராக்ஷஸபாதையைச் சொல்லத்தொடங்கி 'ராமா! இம் மஹாரண்யத்தில் புருஷர்களைத் தின்னுங் கன்மைபர்களும் பலவகை உருவங்கொள்ள வல்லவர்களுமாகிய ராக்ஷஸர்கள் இருக்கின்றனர். ரத்தத்தையே ஆஹாரமாகவுடைய க்ரூரம்ருகங்களும் பல இருக்கின்றன. ராமா! இம் மஹாரண்யத்தில் ராக்ஷஸர்கள் சேர்ந்து முனிவர்களை அஸ்திகளாயிருக்கும்பொழுதும் பாரக்கடித்திருக்கும்பொழுதும் பிடித்துப் பக்ஷிக்கின்றனர். ராமா! மநுஷ்யர்கள்

அரண்யத்தி லுள்ள பழம் முதலியவற்றைக் கொண்டு வரப் போய் வரும் மார்க்கம் இது. நீ இவ்வழியாகவே புகக்கூடாத வனத்தில் ப்ரவேசிப்பது யுக்தம்' என்றனர். சத்ருக்களை வெல்ல வல்லவனாகிய அந்த ராமன் இங்ஙனம் அம் முனிவர்கள் வணக்கத்துடன் ப்ரார்த்தித்துச் செய்யும் மங்களாசாரணங்களைக் கைப்பற்றி ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் கூட ஸூர்யன் மேகமண்டலத்தில் ப்ரவேசிக்குமாறு தண்டகாரண்யத்தில் ப்ரவேசித்தனன்.

நூற்றுப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அயோத்யாகாண்டமும்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீஸீதாஸமேத ஸ்ரீராமசந்த்ராய பரப்ரஹ்மணே நம:.